D
Y2ll,31 N73
N73.4C
61617

வெளியீடு—19—9—1973]
Issued—19—9—1973]

தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

பணித்துறை வெளியீடு

OFFICIAL REPORT

வியாழக்கிழமை 1973 ஆகஸ்ட் 2

Thursday 2nd August 1973

தொகுதி XL—எண் 1

Volume XL—No. 1

©
தமிழ் நாடு அரசு
1973

GOVERNMENT OF TAMIL NADU
1973

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9.

Legislative Assembly Department
Fort St. George, Madras-9

விலை 50 காசுகள்]
PRICE 50 PAISE]

Tamil Nadu Legislative Assembly Debates

EIGHTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

2nd, *3rd*, *4th and 6th August* 1973.

VOLUME XL (Nos. 1 to 4).

TABLE OF CONTENTS.

Thursday, 2nd August 1973.

	PAGES
Personnel of the Government of Tamil Nadu Assembly	i–vi
Principal Officers of the Tamil Nadu Legislative Assembly	vii
List of Members of the Tamil Nadu Legislative Assembly with their Constituencies	ix–xvi
1. Obituary references—	
Demise of Thiru R. N. Aranganathan, ex-M.L.A. and Thiru K. Balathandayutham, M.P.	1
2. Condolence Resolution—	
Demise of Thiru Mohan Kumaramangalam, Union Minister	1–27
3. Point of Order—	
Non-distribution of question list to Members ...	2
4. Papers laid on the Table	27–47

61617 VR11, 31 N73 31N73-4.0

	PAGES
Friday, 3rd August 1973.	
1. Government Motion—	
Postponement of Question hour	49
2. Point of Order—	
(*a*) Taking up of adjournment motions before election of Speaker	49–52
(*b*) Propriety of conducting Speaker's election pending judgment by Supreme Court on the case filed by the former Speaker ..	72–73
(*c*) Use of Officers' Gallery by a Member of the Legislative Council	72–73
3. Election of Speaker and felicitations	77–93
4. Government Bills—	
(*a*) The Tamil Nadu Payment of Salaries (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 15/73)	93–94
(*b*) The Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Amendment Bill, 1973 (L.A. Bill No. 17/73)	94
(*c*) The Tamil Nadu Sales of Motor Spirit Taxation and Entertainments Tax (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 18/73)	94
(*d*) The Indian Stamp (Tamil Nadu Amendment) Bill, 1973 (L.A. Bill No. 19/73) ...	95–96
(*e*) The Tamil Nadu Local Authorities Finance (Amendment) Bill, 1973	96
(*f*) The Tamil Nadu Motor Vehicles Taxation (Amendment) Bill, 1973	96–97
5. Announcements—	
(*a*) The Tamil Nadu Sales of Motor Spirit Taxation and Entertainments Tax (Amendment) Bill, 1973	94
(*b*) The Indian Stamp (Tamil Nadu Amendment) Bill, 1973	95
6. Papers laid on the Table	97–98

	PAGES
Saturday, 4th August 1973.	
1. Questions and Answers	99–139
2. Points of Order—	
(*a*) Non-inclusion of walk-out protesting the Speaker's Election in the Brief Record of Proceedings	140–142
(*b*) Precedence to the No-Confidence Motion against the Ministry	143–147
(*c*) Allotment of separate seats for M.L.Cs. in Assembly	240–241
3. Announcements—	
(*a*) Taking up of Adjournment Motion ..	142
(*b*) Taking up of No-Confidence Motion and motion disapproving policy of Ministry.	149
(*c*) Meeting of the Business Advisory Committee	245
4. Motions—	
(*a*) No-confidence Motion against the Ministry.	147–148
(*b*) Motion disapproving Policy of Ministry.	148–149
5. Point of information—	
Right of reply to all members who have given notice of No-Confidence Motion	149–150
6. Adjournment Motion—	
Agitation in Kanyakumari district on account of serious food shortage	150–197
7. Government Resolution—	
Ratification of amendments to be carried out through the Constitution (Thirty-first Amendment) Bill, 1973	197–243
8. Statement by Minister—	
Suspension of levy system in certain districts ..	243–245
9. Papers laid on the Table	245–246

	PAGES
Monday, 6th August 1973.	
1. Questions and Answers	249–289
2. Points of Order—	
(*a*) Taking up of Adjournment Motions before No-confidence Motion	289–298
(*b*) Placing Ministry's reply in the House on the Memorandum of charges presented to the President by the Leader of the Communist Party of India	298–307
(*c*) Speaker's appeal to Party leaders to teach their members to behave in a civilised manner	307–315
3. Announcement—	
The Tamil Nadu Payment of Salaries (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 16/1973) ..	315
4. Government Bills—	
(*a*) The Tamil Nadu Payment of Salaries (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 16 of 1973)	315–325
(*b*) The Tamil Nadu Slum Areas (Improvements and Clearance) Amendment Bill, 1973 (L.A. Bill No. 17/1973)	325–356
(*c*) The Tamil Nadu Sales of Motor Spirit Taxation and Entertainments Tax (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 18 of 1973)	356–373
(*d*) The Indian Stamp (Tamil Nadu Amendment) Bill, 1973 (L.A. Bill No. 19 of 1973)	373–383
(*e*) The Tamil Nadu Local Authorities Finance (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 20 of 1973)	383–388
5. **Papers laid on the Table**	388–389

தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

தமிழ் நாடு ஆளுநர்.

மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா

அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1\. **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், திரைப்படத் தொழிற் பயிற்சி.

2\. **மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (கல்வி—சுற்றுலாத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, சட்டமன்றம், சுற்றுலா, சுற்றுலா அபிவிருத்திக் கழகம்.

3\. **மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பொதுச் சுகாதாரம், மருத்துவம், தமிழ்நாடு கழிவு நீர்—குடிநீர் வாரியம், நகர்ப் புறத் திட்ட அமைப்பு.

4\. **மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** (பின் தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பின் தங்கிய வகுப்பினர் நலன், செய்தி—விளம்பரம், பத்திரப் பதிவு, முன்னாள் இராணுவ வீரர்கள், சீரணி, இளைஞர் அணி, பூதான—கிராமதான இயக்கங்கள்.

5\. **மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து :** (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : அரிசன நலம், மகளிர்—சிறுவர் நலம், மீனளம், இரவலர்கள் விடுதி, அநாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, பயண அனுமதிச் சீட்டுகள்.

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (பொதுப்பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுப் பணிகள், சிறு பாசன சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறு பாசனம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

7. மாண்புமிகு திரு. செ. மாதவன்: (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, கனிப் பொருள்கள், சுரங்கங்கள், இரும்பு—உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும் பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள் சிறைச்சாலைகள்.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், வணிக வரிகள், மதுவிலக்கு, கலால் வரிகள், முகம்மதியர் அறக் கட்டளைகள்.

9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வேளாண்மை, உணவு உற்பத்தி, வேளாண்மைப் பொறியியற் பிரிவு, கால்நடை வளர்ப்பு.

10. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: நகராட்சி நிர்வாகம், சமூதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள்.

11. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: உணவு, கூட்டுறவு, வேளாண்மை மறு நிதி உதவி.

12. மாண்புமிகு திரு. க. இராசாராம்: (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழிலாளர், வீட்டு வசதி-இட வசதிக் கட்டுப்பாடு, எடைகள்—அளவைகள் குறித்த சட்டம், புள்ளிவிவரம், குடிசை மாற்று வாரியம்.

13. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (மின்சாரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா, திரைப்படச் சட்டம்.

14. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி, எழுதுபொருள்—அச்சுத்துறை, அரசு அச்சகம்.

15. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அறக் கட்டளைகள், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில் திட்டம், பால், பால் பெருக்குத் திட்டம், தமிழ்நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம்.

PERSONNEL OF THE GOVERNMENT OF GOVERNOR OF TAMIL NADU.

THIRU KODARDAS KALIDAS SHAH.

Members of the Council of Ministers.

1. THE HON. DR. M. KARUNANIDHI (Chief Minister) in-charge of Public, Finance, Planning, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections and Film Technology.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Education and Tourism) in-charge of Education including Technical Education, Official Language, Legislature and Tourism and Tourist Development Corporation.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN (Minister for Health) in-charge of Public Health, Medicine, Tamil Nadu Drainage and Water Board and Town Planning.

4. THE HON. THIRU N. V. NATARAJAN (Minister for Backward Classes) in-charge of Backward Classes, Information and Publicity, Registration, Ex-Servicemen, Prosperity Brigade, Youth Service Corps, Bhoodan and Gramdan.

5. THE HON. THIRUMATHI SATHYAVANIMUTHU (Minister for Harijan Welfare) in-charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages, Approved Schools and Vigilance Services, Indians Overseas and Refugees and Evacuees, Newsprint Control and Passports.

6. THE HON. THIRU P. U. SHANMUGAM (Minister for Public Works) in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Ports.

7. THE HON. THIRU S. MADHAVAN (Minister for Industries) in-charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA: (Minister for Revenue), in-charge of Revenue, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Commercial Taxes, Prohibition and Excise Revenues and Waqfs.

9. THE HON. THIRU SI. PA. ADITANAR: (Minister for Agriculture) in-charge of Agriculture, Food Production, Agricultural Engineering Wing and Animal Husbandry.

10. THE HON. THIRU A. P. DHARMALINGAM: (Minister for Local Administration) in-charge of Municipal Administration, Community Development and Panchayats and Panchayat Unions.

11. THE HON. THIRU MANNAI P. NARAYANASWAMY: (Minister for Food and Co-operation), in-charge of Food, Co-operation and Agricultural Refinance.

12. THE HON. THIRU K. RAJARAM: (Minister for Labour in-charge of Labour, Housing and Accommodation Control, Legislation on Weights and Measures, Statistics and Slum Clearance Board.

13. THE HON. THIRU O. P. RAMAN: (Minister for Electricity)-in-charge of Electricity, Legislation on Money Lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests, Cinchona and Cinematograph Act.

14. THE HON. THIRU S. RAMACHANDRAN: (Minister for Transport) in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Tax, Stationery and Printing and Government Press.

15. THE HON. THIRU M. KANNAPPAN: (Minister for Religious Endowments) in-charge of Religious Endowments, Khadi and Village Industries and Rural Industries Project, Milk, Operation Flood Project and Tamil Nadu Dairy Development Corporation.

தமிழ் நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

பேரவைத் துணைத் தலைவர் :

மாண்புமிகு திரு. பெ. சீனிவாசன், எம். ஏ., பி.எல்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. திரு. நா. வீராசாமி.
2. திரு. எஸ். முருகையன்.
3. திரு. பி. முத்துசாமி.
4. திரு. என். டென்னிஸ்.
5. திரு. க. உரொ. எட்மண்ட்.
6. திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி.

சட்டப் பேரவைச் செயலாளர்.

திரு. மா. சன்முகசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.

துணைச் செயலாளர்.

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

உதவிச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி).
திரு. பெஞ்சமின் நெல்சன், பி.ஏ.
திரு. கே. பாலகுரு, பி.ஏ.
திரு. டி. ஜே. சைமன், பி.ஏ.

விவாதப் பதிப்பாளர்.

திரு. கே. சுந்தரராசன்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதி. (2)
1 அண்ணாமலை, திரு. சி.வி. எம்.	காஞ்சிபுரம்
2 அபுசாலி, திரு. எம். ஏ.	புவனகிரி.
3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை	அரவக்குறிச்சி.
4 அரங்கண்ணல், திரு. இராம.	எழும்பூர்.
5 அழகமுத்து, திரு. து. ப. (அரசாங்க தலைமைக் கொறடா).	உப்பிலியப்புரம்.
6 அழகர்சாமி, திரு. சோ.	கோவில்பட்டி.
7 அழகுத் தேவர், திரு. எஸ்.	சாத்தூர்.
8 அனந்தநாயகி, திருமதி த. ந.	மயிலாப்பூர்.
9 அன்பழகன், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்).	புரசைவாக்கம்.
10 அன்புச்செழியன், திரு. நீ.	பெரியகுளம்.
11 ஆண்டி அம்பலம், திரு. எம்.	மேலூர் வடக்கு.
12 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. ..	ஸ்ரீவில்லிபுத்தூர் (செ. வ.)
13 ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்).	ஸ்ரீவைகுண்டம்.
14 ஆலடி அருணா, திரு. வி.	ஆலங்குளம்.
15 ஆல்டா எம். பௌலர், திருமதி ..	நியமன உறுப்பினர்
16 ஆறுமுகம், திரு. அ.	எடப்பாடி.
17 ஆறுமுகம், திரு. எஸ்.	வீரபாண்டி.
18 ஆறுமுகம், திரு. சி.	மதுராந்தகம்.
19 இரத்தினசபாபதி, திரு. மு.	விளாத்திக்குளம்.
20 இராசகோபால், திரு. க. மு.	உத்திரமேரூர்.
21 இராசகோபால், திரு. வீ.	வந்தவாசி.
22 இராசமாணிக்கம், திரு. அ.	நாகப்பட்டினம்.
23 இராசமாணிக்கம், திரு. கு.	ஆடுதுறை.
24 இராசரத்தினம், திரு. டி.	ஸ்ரீபெரும்புதூர்.
25 இராசாராம், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்).	சேலம்-2.
26 இராசு, திரு. ஜே. எஸ்.	பெரம்பலூர் (செ. வ.)
27 இராதாகிருட்டிணன், திரு. எம். ..	தண்டராம்பட்டு.
28 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. ..	பரங்கிமலை.
29 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்).	பண்ருட்டி.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதி.
(1)	(2)
30 இராமநாதன், திரு. சி.	அறந்தாங்கி.
31 இராமலிங்கம், திரு. இரா.	தூத்துக்குடி.
32 இராமலிங்கம், திரு. செ.	கடலாடி (செ.வ.).
33 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்).	மேலூர் தெற்கு (செ.வ.).
34 இராமன், திரு. மூ.	கண்டமங்கலம் (செ.வ.).
35 இராஜாங்கம், திரு. என்.	குறிஞ்சிப்பாடி (செ.வ.).
36 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே.	கன்னியாகுமரி.
37 இளங்கோவன், திரு. கோ.	திருவையாறு.
38 இளஞ்செழியன், திரு. வீ. சா.	விராலிமலை.
39 எட்டியப்பன், திரு. பூ.	பெரணமல்லூர்.
40 எட்மண்ட், திரு. க. உரொ.	திருச்செந்தூர்.
41 கணபதி, திரு. என்.	பாபநாசம்.
42 கணபதி, திரு. டி.	நாங்குனேரி.
43 கணேசன், திரு. எல்.	ஒரத்தநாடு
44 கணேசன், திரு. சி.	குற்றாலம்.
45 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்).	கிணத்துக்கடவு.
46 கண்ணன், திரு. எம். ஆர்.	பேஸின் பிரிட்ஜ்.
47 கதிரவன், திரு. கா. மு.	தென்காசி.
48 கந்தசாமி, திரு. கே.	உசிலம்பட்டி.
49 கந்தசாமி, திரு. கே. பி.	சாத்தான்குளம்
50 கந்தசாமி, திரு. எம்.	குளித்தலை.
51 கந்தப்பன், திரு. செ.	திருச்செங்கோடு.
52 கரிவேங்கடம், திரு. மா. வெ.	பாலக்கோடு.
53 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்).	சைதாப்பேட்டை.
54 கருணாநிதி, திரு. தாழை மு.	திருவாரூர் (செ.வ.)
55 கருணைநாதன், திரு. சோ.	கூனூர்.
56 கருப்பையா, திரு. ஆ.	கங்கைகொண்டான் (செ.வ.)
57 காசிராமன், திரு. நா.	கும்பகோணம்.
58 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி ..	முதுகளத்தூர்.
59 காமாட்சி, திரு. கு.	திருவரம்பூர்.
60 கார்த்திசன், திரு. வீ.	இராதாபுரம்.
61 காவேரிமணியம், திரு. சொ.	திருப்பரங்குன்றம்.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதி.
(1)	(2)
62 காளிமுத்து, திரு. கா.	சிவகாசி.
63 கிட்டப்பா, திரு. என்.	மாயூரம்.
64 கிருட்டிணன், திரு. நா.	பேரணம்பட்டு (செ. வ.).
65 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி.	நெல்லிக்குப்பம்.
66 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ.	திருச்சிராப்பள்ளி-1.
67 கிருஷ்ணன், திரு. கே. ஆர்.	ஊத்தங்கரை.
68 குப்பல் ராமகிருஷ்ணன், திரு. கே. எஸ்.	மதுரை (கிழக்கு).
69 குமாரசாமி, திரு. அ. சே.	திருக்கோயிலூர்.
70 குமாரசாமி, திரு. கே. என்.	பல்லடம்.
71 குருசாமி, திரு. நா. வெ.	ஆண்டிப்பட்டி.
72 கேசவலு, திரு. தே.	கள்ளக்குறிச்சி.
73 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். ..	உதனப்பள்ளி.
74 கோபால், திரு. எம்.	குன்னத்தூர் (செ. வ.).
75 கோபால், திரு. கே. பி.	கம்பம்.
76 கோவிந்தசாமி, திரு. வி. செ.	காவேரிப்பட்டினம்.
77 கோவிந்தராசன், திரு. ஆர்.	கடலூர்.
78 கோவிந்தராசன் துரை, திரு.	கந்தர்வகோட்டை.
79 *கோவிந்தன், புலவர் கா. (மாண்புமிகு பேரவைத் தலைவர்).	செய்யாறு.
80 கோவை செழியன், திரு.	காங்கேயம்.
81 சகாதேவன், திரு. எஸ்.	செஞ்சி.
82 சங்குமுத்து தேவர், திரு. ச.	அம்பாசமுத்திரம்.
83 சதாசிவம், திரு. செ.	ஆண்டிமடம்.
84 சண்முகசுந்தரம், திரு. அ. ப.	பொள்ளாச்சி.
85 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்).	திருவண்ணாமலை.
86 சண்முகம், திரு. பெரி.	திருவாடானை.
87 சண்முகம், திரு. மு.	விழுப்புரம்.
88 சத்தியமூர்த்தி, திரு. மு.	புதுக்கோட்டை.
89 சத்தியவாணிமுத்து, மாண்புமிகு திருமதி (அமைச்சர்)	பெரம்பூர் (செ.வ.).
90 சத்தியேந்திரன், திரு. எம்.எஸ். கே. ..	இராமநாதபுரம்.
91 சம்பத், திரு. டி. வி.	செம்பனூர் கோவில்.

* 3–8–1973-ம் நாளன்று மாண்புமிகு பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதி.
(1)	(2)
92 சாதிக் பாட்சா, மாண்புமிகு திரு. எஸ்.ஜே. (அமைச்சர்)	உடுமலைப்பேட்டை.
93 சாரதி, திரு. மா. பா.	வேலூர்.
94 சிதம்பரம், திரு. சித.	காரைக்குடி.
95 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ.	சேரன்மகாதேவி.
96 சிவபெருமாள், திரு. கோ.	அரியலூர்.
97 சிறைமீட்டான், திரு. தொ. க.	பரமக்குடி (செ.வ.)
98 சீனிவாசன், மாண்புமிகு திரு. பெ. (துணைத் தலைவர்).	விருதுநகர்.
99 சீனிவாசன், திரு. தொ. ப.	போளூர்.
100 சின்னசாமி, திரு. அ.	செயங்கொண்டம் (செ.வ.)
101 சின்னசாமி, திரு. ஆர்.	தர்மபுரி.
102 சின்னசாமி திரு. மு.	மொடக்குறிச்சி.
103 சின்னசாமி, திரு. வ.	ஏற்காடு (ஆ. வா.)
104 சின்னராசு, டாக்டர் ச. அ.	ஹரூர் (செ. வ.)
105 சின்னவெள்ளையன், திரு. சி.	சேந்தமங்கலம் (ஆ. வா.)
106 சுந்தரம், திரு. ஒ. என்.	திண்டுக்கல்.
107 சுப்பிரமணியம், திரு. ஏ.	சிங்கநல்லூர்.
108 சுப்பிரமணியம், திரு. எஸ். கே.	சத்யமங்கலம்.
109 சுப்பிரமணியம், திரு. கே. எம்.	தியாகராயநகர்.
110 சுப்பிரமணியன், திரு. மா.	ஈரோடு.
111 சுப்பிரமணியன், திரு. வீ.	உளுந்தூர்பேட்டை.
112 சுப்பு, திரு. க.	ராஜபாளையம்.
113 சுப்பையா, திரு. ஆ. கு.	கோட்டூர் (செ. வ.)
114 சுப்பையா, திரு. கே. வி.	ஆலங்குடி.
115 சுப்பையா, திரு. ச.	சங்கரன்கோயில் (செ. வ.)
116 சுப்பையா, திரு. ஏ. ஆர்.	கடயநல்லூர்.
117 சுருளிவேல், திரு. மு.	போதிநாயக்கனூர்.
118 சுரேந்திரன், திரு. எம்.	மேட்டூர்.
119 சுவாமிதாஸ், திரு. எ.	பத்மநாபபுரம்.
120 செபமாலை, திரு. கோ.	மங்களூர் (செ. வ.)
121 ஜெயராமன், திரு. இ.	சேலம்–1.
122 செல்லத்துரை, திரு. வீ.	ஓமலூர். (செ. வ.)
123 செல்லையா, திரு. குழ.	பேராவூரணி.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதி.
(1)	(2)
124 செல்வராஜ், திரு. எம்.	விருத்தாசலம்.
125 சேதுராமன், திரு. சி.	சிவகங்கை.
126 சோனையா, திரு. த.	மானாமதுரை.
127 சோமசுந்தரம், திரு. ந.	வலங்கைமான் (செ. வ.)
128 சௌடி சுந்தரபாரதி, திரு. எஸ்.	அருப்புக்கோட்டை.
129 சௌந்தரபாண்டியன், திரு. பெ.	கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
130 டென்னிஸ், திரு. என்.	கிள்ளியூர்.
131 தங்கமணி, திரு. கே. டி. கே.	மதுரை–மேற்கு.
132 தர்மலிங்கம், மாண்புமிகு திரு. அ. பெ. (அமைச்சர்).	திருச்சிராப்பள்ளி-2.
133 தருமலிங்கம், திரு. ந.	ரிஷிவந்தியம் (செ.வ.)
134 தவமணித்தேவர், திரு. வி.	சேடப்பட்டி.
135 திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி.	நாட்ராம்பள்ளி
136 தியாகராசன், திரு. அ.	திருமயம்.
137 தியாகராசன், திரு. இ. எஸ்.	திருத்தணி.
138 திருப்பதி, திரு. கு.	மதுரை (சென்ட்ரல்).
139 துரைசாமி திரு. ஏ. க.	குடியாத்தம்.
140 துரைசாமி, திரு. சு.	திருப்பூர்.
141 துரைமுருகன், திரு.	காட்பாடி.
142 துரைராஜ், திரு. சு. ம.	திருவள்ளூர் (செ.வ.)
143 தூயமணி, திரு. மே. சி.	மேட்டுப்பாளையம்.
144 தேவராசன், திரு. எம்.	உதகமண்டலம்.
145 தேவேந்திரன், திரு. அ.	நன்னிலம் (செ. வ.)
146 தோப்பூர் திருவேங்கடம், திரு.	கணியம்பாடி.
147 நடராசன், திரு. ஈ. எம்.	அந்தியூர்.
148 நடராசன், திரு. எஸ்.	தஞ்சாவூர்.
149 நரசிம்மன், திரு. ஏ. சி.	ஆரணி.
150 நல்லசாமி, திரு. எஸ்.	கரூர்.
151 நாகராஜன், திரு. க.	வடமதுரை.
152 நாகலிங்கம், திரு. பா.	பொன்னேரி (செ.வ.)
153 நாச்சிமுத்து, திரு. நா.	ஒட்டஞ்சத்திரம்.
154 நாச்சியப்பன், திரு. ஏ. எம். டி.	ஆத்தூர்.
155 நாச்சியப்பன், திரு. ந.	சங்கராபுரம்.
156 நாராயணசாமி, திரு. மா. வே.	திருவொற்றியூர்.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதி. (2)
157 நெடுஞ்செழியன், மாண்புமிகு டாக்டர் இரா. (அமைச்சர்).	திருவல்லிக்கேணி.
158 நைனுமலை, திரு. இரா.	ராசிபுரம்.
159 பத்மநாபன், திரு. பொ.	திருநெல்வேலி.
160 பத்மாவதி, திருமதி. ஏ. கோ.	முகையூர்.
161 பரந்தாமன், திரு. ஆ.	கடம்பத்தூர்.
162 பரமசிவம், திரு. எம்.	தாரமங்கலம்.
163 பலராமன், திரு. என். எஸ்.	அரக்கோணம்.
164 பழனிசாமி, திரு. நா.	பொங்கலூர்.
165 பழனிசாமி, திரு. என். கே.	பெருந்துரை.
166 பழனிசாமி, திரு. மு.	வெள்ளக்கோயில்.
167 பழனிச்சாமி, புலவர் சி.	பழனி (செ.வ.)
168 பழனியப்பன், டாக்டர் ச. மு.	கோபிசெட்டிபாளையம்.
169 பழனியம்மாள், திருமதி வி. ப.	தாராபுரம்.
170 பழனிவேலன், திரு. க.	வரகூர்.
171 பழனிவேலன், திரு. மு.	நாமக்கல்.
172 பழனிவேலு, திரு. பி.	ஆத்தூர்.
173 பழனிவேல் ராஜன், திரு.	தேனி.
174 பன்னீர் செல்வம், திரு. எம்.	ஆம்பூர் (செ. வ.)
175 பாண்டுரங்கம், திரு. சி.	செங்கம் (செ. வ.)
176 பாலகிருட்டிணன், திரு. கு.	மன்னார்குடி.
177 பாலசுந்தரம், திரு. வை.	அச்சரபாக்கம் (செ.வ.).
178 பாலையா, திரு. ஏ.	கொளச்சல்.
179 பெரியசாமி, திரு. கு.	கொடவாசல்.
180 பெரியசாமி, திரு. தி. ஒ.	அவிநாசி.
181 பெருமாள், திரு. செ.	காட்டுமன்னார்கோயில்.
182 பெருமாள், திரு. ஏ. ஆர்.	காரியப்பட்டி.
183 பொம்மன், திரு. கு. அ.	கூடலூர் (செ. வ.)
184 பொன் சொக்கலிங்கம், திரு. பி.	சிதம்பரம்.
185 பொன்னப்ப நாடார், திரு. ஆர்.	விளவங்கோடு.
186 பொன்னுமலை, திரு. தி.	பனைமரத்துப்பட்டி.
187 பொன்னுரங்கம், திரு. ஏ. எம்.	சோளிங்கபுரம்.
188 மணலி கந்தசாமி, திரு. சி.	திருத்துறைப்பூண்டி.
189 மணியன், திரு. பி. எஸ்.	சோழவந்தான்.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதி. (2)
190 மதியழகன், திரு. கே.ஏ.	ஆயிரம் விளக்கு.
191 மருதாசலம், திரு. என்.	பேரூர் (செ. வ.).
192 மலைக்கண்ணன், திரு. வீ.	இளையாங்குடி.
193 மன்னியப்பன், திரு. சி.	கிருஷ்ணகிரி.
194 மாணிக்கம், திரு. என்.	பென்னகரம்.
195 மாணிக்கவாசகம், திரு. இரா.	தொண்டாமுத்தூர்.
196 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்).	திருப்பத்தூர். (இராமனாதபுரம் மாவட்டம்)
197 மாரிமுத்து, திரு. ஏ. ஆர்.	பட்டுக்கோட்டை.
198 மாரிமுத்து, திரு. மூ.	தலைவாசல் (செ.வ.)
199 மீனாட்சிசுந்தரம், திரு. மா.	வேதாரண்யம்.
200 முகமது கோதர் முகைதீன், திரு. எஸ்.	மேலப்பாளையம்.
201 முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந.	லால்குடி.
202 முத்து, திரு. வ.	சங்கரி (செ. வ.)
203 முத்துசாமி, திரு. ப.	வேடசந்தூர்.
204 முத்துச்செல்வன், திரு. பு. செ.	முசிறி.
205 முத்துவேல், திரு. ந.	வானூர் (செ. வ.)
206 முத்தையா, திரு. கே. கே.	கடலூர்.
207 முத்தையா, திரு. எம்.	ஒட்டப்பிடாரம் (செ. வ.)
208 முருகையன், திரு. எஸ்.	கலசப்பாக்கம்.
209 முனியாண்டி, திரு. ஆ.	நிலக்கோட்டை (செ. வ.)
210 முனு ஆதி, திரு. மு.	திருப்போரூர்.
211 முனுசாமி, திரு. ரா. ரா.	மேல்மலையனூர்.
212 மொய்தீன், திரு. திருப்பூர் ஏ. எம்.	துறைமுகம் (சென்னை நகரம்).
213 மோசஸ், திரு. ம.	நாகர்கோயில்.
214 ரங்கனாதன், திரு. கே.	கோயம்புத்தூர் (கிழக்கு).
215 ராமசாமி, திரு. இ.	வால்பாறை.
216 ராமசாமி, திரு. ஜி.	திருப்பத்தூர், (வட ஆர்க்காடு மாவட்டம்).
217 ராமராசன், திரு. வ. க.	பவானிசாகர் (செ. வ.)
218 ராஜா, திரு. ஏ. எம்.	பவானி.
219 ராஜாராம், திரு. ஜி.	திண்டிவனம்.
220 ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ.	திருமங்கலம்.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதி.
(1)	(2)
221 லத்தீப், திரு. எம். எ.	வாணியம்பாடி.
222 வகாப், திரு. கே. எ.	ராணிப்பேட்டை.
223 வடிவேலு, திரு. சீ. க.	தொட்டியம்.
224 வடிவேல், திரு. எஸ்.	சீர்காழி (செ. வ.)
225 விசுவநாதன், திரு. செ. கோ. ..	செங்கல்பட்டு.
226 வீராசாமி, திரு. நா.	ஆற்காடு.
227 வெங்கடசாமி, திரு. பி.	ஹோசூர்.
228 வெள்ளத்துரை, திரு. அ.	வாசுதேவநல்லூர்.
229 வேதாசலம், திரு. மு.	வண்ணாரப்பேட்டை (சென்னை நகரம்).
230 வேலப்பன், திரு. சி. வே.	கபிலமலை.
231 வேழவேந்தன், திரு. கா.	கும்மிடிபூண்டி.
232 ஜேம்ஸ், திரு. ஜே.	திருவட்டார்.
233 ஜோதி வெங்கடாசலம், திருமதி. ..	ஸ்ரீரங்கம் (செ. வ.)
234 ஹாண்டே, டாக்டர், எச். வி.	பார்க் டவுன் (சென்னை நகரம்).
235 வெற்றிடம்	கோயம்பத்தூர்-மேற்கு.

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன்—அமைச்சர்.

2 மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி—அமைச்சர்.

3 திரு. கோவிந்த சாமிநாதன்—தலைமை வழக்கறிஞர்.

தமிழ் நாடு சட்டப் பேரவை.

வியாழக்கிழமை, 1973 ஆகஸ்ட் 2.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் முற்பகல் 10.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்பு

திரு. ஆர். என். அரங்கநாதன், திரு. கே. பாலதண்டாயுதம் ஆகியோர் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சோளிங்கபுரம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு 1967-ம் ஆண்டு முதல் 1971-ம் ஆண்டு வரை தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினராக இருந்த திரு. ஆர். என். அரங்கநாதன் அவர்கள் 23—5—1973-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

கோயம்புத்தூர் பாராளுமன்றத் தொகுதியிலிருந்து 1971-ம் ஆண்டு மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. கே. பாலதண்டாயுதம் அவர்கள் 31—5—1973-ம் நாள் ஏற்பட்ட விமான விபத்தில் எதிர்பாராதவிதமாக மறைந்ததைக் குறித்தும்,

இப்பேரவையின் இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரின் இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு நான் இப்பேரவையின் சார்பில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

2. இரங்கல் தீர்மானம்.

மத்திய அமைச்சர் திரு. மோகன் குமாரமங்கலம் அவர்களின் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்திய அரசின் உருக்கு சுரங்கத் துறை அமைச்சராக இருந்த திரு. மோகன் குமாரமங்கலம் அவர்கள் 31—5—1973 அன்று புது தில்லி அருகே ஏற்பட்ட விமான விபத்தில் உயிரிழந்த துயரமான செய்தியை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதுகுறித்த இரங்கல் தீர்மானத்தைப் பேரவை முன்னவர் அவர்கள் முன்மொழிவார்கள்.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

3. நடைமுறைக் கேள்வி

வினா—விடைப் பட்டியல் உறுப்பினர்களுக்கு வழங்கப்படாதது குறித்து

THIRU K. T. K. THANGAMANI: Sir, I am raising a point of order. Before this resolution is adopted, I would like to refer to rule 22 of the Assembly Rules which says—

'The first hour of every sitting shall, unless the House unanimously resolves otherwise, be available for the asking and answering of questions ....'

Sir, we have not received the list of questions this morning. After the list of questions has been distributed, the Hon. the Leader of the House will be at perfect liberty to move a motion for the suspension of rule 22. But I find that no list of questions has been distributed to me.

MR. DEPUTY SPEAKER: It is our convention that when we move the condolence resolution, normally we do not take up questions. I think the hon. Member can understand that we are following our usual procedure and now I call upon the Leader of the House to move the resolution.

2. இரங்கல் தீர்மானம் (தொடர்ச்சி)

மத்திய அமைச்சர் திரு. மோகன் குமாரமங்கலம் அவர்களின் மறைவு குறித்து (தொடர்ச்சி).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"தமிழகத்தில் தலைசிறந்த வழக்குரைஞராகவும், தொழிற் சங்கத் தலைவராகவும், 1966-ம் ஆண்டு முதல் 1967-ம் ஆண்டு வரை தமிழ் நாட்டின் அட்வகேட் ஜெனரலாகவும், 1971-ம் ஆண்டு முதல் மத்திய உருக்கு, கனரக, பொறியியற்றுறை அமைச்சராகவும், பின்னர், உருக்கு, சுரங்கத் துறை அமைச்சராகவும் சிறப்பாகப் பணியாற்றி, நமது நாட்டு மக்களின், குறிப்பாகத் தமிழக மக்களின் அன்பையும் நன்மதிப்பையும் பெற்றிருந்த திரு. மோகன்

குமாரமங்கலம் அவர்கள் 31—5—1973-ம் நாளன்று புது தில்லியருகே ஏற்பட்ட விமான விபத்தில் இயற்கை எய்தியமை குறித்து இப்பேரவை தனது ஆறாத் துயரத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது. நமது நாட்டில் நிலவும் நெருக்கடியான நிலையில் அவரது மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

அவரது மறைவால் வருந்தி நிற்கும் அவரது குடும்பத்தினருக்குத் தனது ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்ளுகிறது."

என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன்.

31—5—1973-ம் நாளன்று புது தில்லி அருகே ஏற்பட்ட விமான விபத்தில், மத்திய அமைச்சராக விளங்கிய மாண்புமிகு திரு. மோகன் குமாரமங்கலம் அவர்களும், அவர்களோடு பயணம் செய்த பஞ்சாப் மாநிலத்தினுடைய முன்னாள் முதலமைச்சர் திரு. குர்னாம் சிங் அவர்களும், தமிழகத்தைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பாலதண்டாயுதம் அவர்களும், தமிழகத்தைச் சார்ந்த சிறந்த எழுத்தாளராக விளங்கிய திருமதி கௌசல்யா நாராயணன் அவர்களும், மற்றும் நாற்பது பேர்களும் அந்த விமான விபத்தில் சிக்கி இயற்கை எய்தியது எல்லோருக்கும் ஆறாத் துயரத்தையும் துக்கத்தையும் அளித்தது என்பதை நாம் நன்கு அறிவோம். அது எப்படிப்பட்ட விபத்து என்றால் அப்பொழுது நாட்டிலே உள்ளவர்கள் அத்தனை பேரும் கண்ணீர் விட்டுக் கலங்கத் தக்க அளவுக்கு அது அமைந்திருந்தது.

இப்பொழுது நம் தீர்மானத்தில் கூறியிருக்கிறபடி, மத்திய அமைச்சர் திரு. மோகன் குமாரமங்கலம் அவர்கள் தமிழகத்திலே தலைசிறந்த வழக்கறிஞராக விளங்கி வந்தார்கள் என்பதையும் அவர்களுடைய குடும்பமே அரசியலில் புகழும் பெருமையும் பெற்று விளங்கியது என்பதையும் நாம் உணர்வோம். அவர்களுடைய குடும்பம் நீண்ட பெருங்காலமாகத் தமிழக அரசியலில் மட்டுமல்லாமல், அகில இந்திய அரசியலிலும் ஒரு முக்கியமான இடத்தைப் பெற்று விளங்கியது. அவருடைய தந்தையார் டாக்டர் சுப்பராயன் அவர்களும் தமிழகத்தில் மட்டுமல்லாமல், அகில இந்தியாவிலும் பெயர் பெற்று விளங்கியது

மட்டுமல்லாமல், மத்திய அரைச்சரவையில் முக்கியமான அமைச்சராகவும் விளங்கினார்கள். அவரைப் போன்றே அவருடைய மகன் திரு. மோகன் குமாரமங்கலம் அவர்களும் அகில இந்தியப் புகழ் பெற்று, மத்திய அமைச்சரவையில் முக்கியமான ஒரு அமைச்சராக வீற்றிருந்தார்கள். மாணவப் பருவத்திலிருந்தே முற்போக்குக் கருத்துக்களுக்குத் தம்மை ஒப்படைத்துக் கொண்டு, சமதர்மத் தத்துவத்தை நாட்டிலே பரப்புகின்ற பணியிலே ஈடுபட்டு, அந்த சமதர்மத் தத்துவம் எல்லா வகையிலும் ஈடேற வேண்டும் என்பதற்காகத் தம்முடைய நேரம், நினைப்பு, உழைப்பு அத்தனையையும் அவர்கள் பயன்படுத்தி வந்தார்கள் என்பதை நாம் நன்றாக அறிவோம்.

அது மாத்திரமல்லாமல், தமிழகத்தைச் சார்ந்த அமைச்சராக மத்திய அமைச்சரவையில் வீற்றிருந்ததன் காரணத்தினாலும், தமிழகத்தை நன்கு அறிந்து புரிந்தவராக இருந்த காரணத்தினாலும், அவர்கள் மூலமாகத் தமிழகம் பல்வேறு நன்மைகளைப் பெறும் என்று நாமெல்லாம் எதிர்பார்த்திருந்தோம். ஆனால், எதிர்பாராத வகையில் ஏற்பட்ட அவருடைய மறைவு தமிழகத்திற்கு ஒரு பேரிழப்பாக அமைந்தது. சேலத்தில் இரும்பு உருக்குத் தொழிற்சாலை விரைவாகவும் சிறப்பாகவும் வளர அவர் பெருந்துணையாக விளங்கினார்கள். இப்படி, தமிழகத்தை நன்கு அறிந்து புரிந்த ஒருவர் மறைந்துவிட்டார் என்பது தமிழகத்திற்கு உள்ளபடியே ஈடு செய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும். அவர்கள் தமிழகத்தின் அட்வகேட்—ஜெனரலாக இருந்து பெயரும் புகழும் பெருமையும் பெற்று விளங்கினார்கள் என்பதையும் நாம் உணர்வோம். இப்படிப் பல்வேறு துறைகளில் சிறப்பாக இருந்தார்கள் என்பது மட்டுமல்லாமல், எல்லோருடனும் நெருங்கிப் பழகும் இனிய பண்புகள் நிறைந்தவராகவும், கருத்து வேறுபாடுகளுக்கு மதிப்பளிப்பவராகவும், மனிதனுக்கு மனிதன் தரவேண்டிய அன்பு, பண்பு ஆகியவற்றிற்கு உறைவிடமாகவும் விளங்கினார்கள். இப்படிப்பட்டவர் இயற்கை எய்தியது நமக்கு ஆற்றொணாத் துயரத்தையும் துக்கத்தையும் அளிப்பதாக இருக்கிறது. அவருடைய மறைவு குறித்து இந்தப் பேரவை தனது துக்கத்தையும் வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்வது மட்டுமல்லாமல், அவரை இழந்து வருந்தும் அவருடைய

குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளும் இந்தத் தீர்மானத்தை மீண்டும் வலியுறுத்தி முன்மொழிகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை ஆதரித்து ஓரிரு கருத்துக்கள் என்னுடைய கட்சியின் சார்பில் கூற முற்படுகிறேன். மறைந்த மாபெரும் தலைவரும், சிறந்த வழக்கறிஞரும், நல்ல அரசியல்வாதியுமான திரு. மோகன் குமாரமங்கலம் அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்திருக்கின்றார்கள். அன்னார் ஒரு சிறந்த வழக்கறிஞராக விளங்கி, தமிழகத்திற்குப் பெயரும் புகழும் வாங்கித் தந்தார்கள். அதுவுமன்றி, அவர்களைப் போன்ற வழக்கறிஞர் நாட்டுக்கு மிக மிகத் தேவையாக இருக்கின்ற ஒரு நேரம் இது. முற்போக்குக் கருத்துக்கள் இன்று இந்தியா முழுமைக்கும் தேவை என்று கருதுகிற இந்த நேரத்தில், இத்தகைய பெரியாரைப் போன்றவர்கள் எல்லாம் இறந்திருக்கிறார்கள். நம்மைவிட்டுப் பிரிந்திருக்கிறார்கள் என்று சொன்னால், அது முற்போக்குக் கருத்துக்களுக்கு ஒரு இடைஞ்சலாகவும், இடையூறாகவும் அமையும் என்று கருதுகிறேன். அன்னாரைப் பொறுத்த வரையில், வழக்கறிஞர் என்ற முறையில் அவருடன் பழகுவதற்குச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அவர் ஒரு 'க்ரிமினல் லாயர்' என்று சொன்னாலும், அத்துறையில் அவரைவிடச் சிறப்பாக வேறொருவர் இருக்க முடியாது என்று நினைக்கக்கூடிய அளவுக்கு அவ்வளவு நல்ல நுண்ணறிவு பெற்ற வழக்கறிஞராக இருந்தார். அவர்கள் பல பெரிய பெரிய வழக்குகளில் சீரும் சிறப்புமாக வாதாடி நல்ல புகழை ஈட்டித் தந்திருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், தமிழக அரசின் அட்வகேட்—ஜெனரலாக சீரிய முறையில் செயலாற்றிய பெருமையும் அன்னாரைச் சேரும் என்பதையும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அத்தகைய வழக்கறிஞர் பரம்பரையில் வந்த அன்னார் 1971-ம் ஆண்டில் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, மத்திய அமைச்சரவையில் 'காபினெட்' அமைச்சராக அங்கம் வகித்தார்கள். அந்த முறையில் அவர்கள் நாட்டுக்கு ஆற்றிய தொண்டினை இந்தத் தமிழகம்—ஏன்—இந்தியா முழுமையும் மறக்க முடியாது. அத்தகைய பெரியோர்கள் நமக்கு இன்னும்

தேவை என்று முன்பே கூறினேன். என் தேவை என்றால், இன்று ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டின் பொருளாதாரமே சீர்குலைந்திருக்கிறது. இந்தியாவில் எங்கு பார்த்தாலும் இன்று அமைதிக் குறைவு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒரு பெரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. முற்போக்கான கருத்துக்களைக் கொண்டவராகவும், நல்ல முறையில் எதையும் செயலாற்றுகிற திறமையும் ஆற்றலும் பெற்றவராகவும் இருந்த அவருடைய தலைமை இந்த நேரத்தில் நாட்டிற்கு மிகவும் தேவையாக இருக்கிற நிலையில் ஏற்பட்டுவிட்ட அன்னாருடைய இழப்பு பேரிழப்பாக இருக்கிறது.

31—5—1973 இல் நடந்த விமான விபத்துபற்றிப் பலவித கருத்துக்கள் பத்திரிகைகளில் வந்ததைப் பார்த்தோம். அது சம்பந்தமாக ஒரு விசாரணை நடந்து முடிந்திருக்கிறது. அந்த விசாரணையில் எந்தவிதமான சதியும் இல்லை என்று அதன் தலைவர் தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். என்றாலும் பலவகையில் இது சதியாகத்தான் இருக்குமோ என்கிற ஐயப்பாடு பத்திரிகைக் கூற்றாக வந்தது. அவற்றை எல்லாம் இப்போது நினைவுகூர்வது பொருத்தமில்லை என்றாலும் இதுபோன்ற விபத்துகள் ஏற்படுவது என்று சொன்னால் இது ஒரு பெரும் கண்டனத்திற்குரிய விஷயமாகும். நமக்குப் பெரும் வழிகாட்டியாக இருந்த அன்னாருடைய அடிச்சுவட்டில் செல்வதற்கு நாம் எல்லோரும் பிரதிக்ஞை எடுத்துக்கொள்வது பொருத்தமாக இருக்கும். அன்னாருடைய இழப்பினால் நாட்டிற்கு ஏற்பட்டிருக்கிற துக்கத்தில் நாம் எல்லோருமே பங்குகொள்கிறோம். அன்னாருடைய குடும்பத்தினருக்கு ஏற்பட்டிருக்கிற துயரத்திற்கு நாம் எல்லோரும் ஆழ்ந்த அனுதாபம் தெரிவிக்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். அவர்கள் இறைவனடி சேர்ந்திருக்கிறார்கள். அவர்களது ஆத்மா சாந்தி அடைய வேண்டுமென்று என் சார்பாகவும், எங்கள் கட்சியின் சார்பாகவும் கூறி முடிக்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. மோகன் குமாரமங்கலம் மறைவு குறித்து அவையின் முன்னவர் கொண்டுவந்திருக்கும் தீர்மானத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அனுதாபத்தையும், எங்களது ஆறாத் துயர்களையும் இணைத்துக்கொள்கிறோம். நமது

அவையின் முன்னவர் மாண்புமிகு நாவலர் எடுத்துச் சொன்னதைப்போல தமிழ்நாட்டின் அரசியல் வாழ்வைப் பொறுத்த வரையில் எனது நண்பர் மோகன் குமாரமங்கலமும், பாலதண்டாயுதமும் பலப்பல போராட்டங்களின் தலைவர்களாக இருந்தவர்கள். அப்படிப்பட்ட இரண்டு தலைவர்களையும், நாட்டில் சமதர்ம சமுதாயம் உருவாகி வருகிற நேரத்தில் நாம் இழந்துவிட்டிருப்பது ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

நண்பர் மோகன் குமாரமங்கலம் அவர்கள் சிறந்த வழக்கறிஞராகவும், சமதர்ம சமுதாய அமைப்புக்களின் தொழிற்சங்கத் தலைவராகவும், இந்திய அரசாங்க அமைச்சராகவும் ஆற்றியிருக்கும் பணிகளைத் தமிழ்நாடும், இந்திய பூபாகமும் நல்ல வகையில் உணர்ந்திருந்தது. அவரை அமைச்சராக மட்டுமல்லாமல், அட்வகேட் ஜெனரலாக மட்டுமல்லாமல், எனது நெடுநாளைய நண்பர் என்ற முறையில், எனது மிகப்பெரிய நண்பரை இழந்துவிட்டதாக நான் உணர்கிறேன். அவரிடம் பழகும்படியான பல்வேறு சந்தர்ப்பங்களில் அவரது அறிவாற்றலையும், இனிய சுபாவத்தையும் என்னால் பார்க்க முடிந்தது. அவையின் முன்னவர் குறிப்பிட்டதைப்போல, தமிழ்நாட்டில் இருக்கிற மிகப்பெரிய செல்வச் சீமான் குடும்பத்தில் அவர் பிறந்தவர் என்றாலும், முன்னாள் முதலமைச்சரின் மகனாவார் என்றாலும், மிகச் சாதாரண ஏழை எளிய மக்களது போராட்டங்களிலும் தன்னை ஒப்படைத்துக் கொண்ட தியாகிகளின் பட்டியலில் அவர் ஒரு பெரிய இடத்தைப் பெற்றுக்கொண்டவராவார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்தின் முதல்வராக வந்தபோது திரு. மோகன் குமாரமங்கலத்தை, தொடர்ந்து அட்வகேட் ஜெனரலாக இருந்து வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதற்கு அவர் விரும்பாத காரணத்தினால் அவரது பணிகளைப் பெற முடியாமல் போய்விட்டது என்றாலும், பேரறிஞர் அண்ணாவின் அரசு அமைந்த நேரத்தில் அதைப் பாராட்டி வாழ்த்துக் கூறியவர்கள் திரு. மோகன் குமாரமங்கலமும், பாலதண்டாயுதமும் ஆவார்கள். திரு. மோகன் குமாரமங்கலம் மறைவு குறித்த இரங்கல் தீர்மானத்தோடு பாலதண்டாயுதத்திற்கும் அனுதாபம் தெரிவிப்பதை இணைத்துக்கொள்ளலாம் என்ற கருத்தைச் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. பாலதண்டாயுதம் கோயம்புத்தூர் நாடாளுமன்ற உறுப்பினராக தமிழ்நாட்டின் பொதுவாழ்வில் மிக முக்கியமான தலைவராக இருந்தவராவார். இவரது தலைமையில் பல போராட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. சம்பிரதாயமாக இல்லாமல் இவரது மறைவுகுறித்தும் நம்முடைய அனுதாப உணர்வுகளை வெளிப்படுத்துகிற வகையில் நம்முடைய இரங்கலை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அவரோடு ஆயிரக் கணக்கான கருத்து வேறுபாடு நமக்கு இருக்கலாம். ஆயிரக் கணக்கான எண்ணங்கள், பார்க்கிற பார்வை வேறுமாதிரியாக இருக்கலாம். தம்முடைய வாழ்வை அவரும் சமுதாயத்திற்காகவே ஒப்படைத்தவர், எங்கெங்கு அநீதி இருக்கிறதோ, எங்கெங்கு அக்கிரமங்கள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் அநீதியை எதிர்த்து, அக்கிரமங்களை எதிர்த்துப் போர்க்கோலம் பூண்ட வீரர் பாலதண்டாயுதம். அவரைத் தமிழ்நாடு இழந்துவிட்டிருப்பது பெரிய இழப்பாகும். அதற்காகவும் அண்ணா தி.மு.க. சார்பில் எங்களது வருத்தத்தையும், அவரது குடும்பத்ினருக்கு அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேமாதிரியாக மறைந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அரங்கநாதன் அவர்கள் வடாற்காடு மாவட்டத்தில் அண்ணா தி.மு.க. அமைப்பாளராக அரும்பணியாற்றிக்கொண்டிருந்த நேரத்தில் உயிரிழக்க நேரிட்டது அவரது அரும் தியாகத்தைக் காட்டுகிறது. அவரது மறைவுக்கும் எங்கள் இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவர்கள் எல்லோருடைய குடும்பங்களுக்கும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இரங்கலையும், அனுதாபத்தையும் கூறி அமைகிறேன்.

* **திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவையின் முன்னவர் நாவலர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இரங்கல் தீர்மானத்தை பார்வர்ட் ப்ளாக் கட்சியின் சார்பில் ஆதரித்து, எங்களது அனுதாபத்தையும், இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த மோகன் குமாரமங்கலம் அவர்களோடு கூட நெருங்கிப் பழக எனக்குப் பல வாய்ப்புகள் ஏற்பட்டிருந்தன. அவர் வழக்குரைஞராக இருந்த நேரத்தில் நான் பலமுறை அவரிடம் சென்றிருக்கிறேன். அவர் வழக்குரைஞராக இருந்த நேரத்தில் சொன்ன

அறிவுரைகள் இன்னமும் பசுமையாக என் நினைவில் இருக்கின்றன. அதைப்போலவே தொழிற்சங்கத் தலைவராக இருந்த நேரத்தில் அவரிடம் பல காரியங்களுக்கு நான் சென்றிருக்கிறேன். அப்போதும் நெருங்கிப் பழக வாய்ப்புக் கிடைத்தது. அதைப் போல அமைச்சராகப் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு அவரை நான் சந்திக்க வேண்டி விரும்பியும் சந்திக்கக்கூடிய நிலை எனக்கு ஏற்படவில்லை. எப்படியும் நான் அவரை அமைச்சராகச் சந்திக்க முடியும் என்ற எண்ணத்தில் இருந்த காலத்தில் பெரிய இடி போன்று இந்தச் செய்தி வந்தது. அவரது மறைவுகுறித்து செய்தியைக் கேட்டுத் தமிழகத்து மக்கள் பெரும் துக்கத்தில் மூழ்கியிருந்த நேரத்தில் நானும் தனிப்பட்ட அளவிலும் ஆறாத் துயரத்தில் மூழ்கி இருந்தேன் என்ற நிலையை இந்த நேரத்தில் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். அவர் அரசியல் வாழ்வில் ஈடுபட்டிருந்த நேரத்தில் அவர்கள் என்னென்ன கொள்கைகளைக் கொண்டிருந்தார்கள் என்று சொல்வதைவிட, அரசியல் வாழ்வில் எப்படி நடந்துகொண்டார்கள் என்பதைத்தான் நாம் இந்த நேரத்தில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது அவசியமாகும். அவர் எளியவராக, நாட்டு மக்களுடன் பழகி வந்த நிலையை மறக்கவே முடியாது. அவர்கள் கொண்டிருந்த கொள்கைகளில், முற்போக்குக் கருத்துக்களில் உறுதிப்பாட்டுடன் இருந்தார்கள். செயல்படுவதிலும் தீவிரமாக இருந்தார்கள் என்பது நாட்டு மக்களுக்குத் தெரியும். குறிப்பாக, கடைசிக்காலத்தில் சுப்ரீம் கோர்ட் நீதிபதி நியமன விஷயத்தில் அவர் எடுத்துக்கொண்ட முடிவு இருக்கிறதே அது சாதாரணமாக எல்லோராலும் பேசப்பட்டதுதான். அவர் முக்கியமாகச் சொன்ன பதில் இந்த நாடு எடுத்தாக வேண்டிய முற்போக்கு நடவடிக்கைகளுக்கு—அதில் மற்றவர்களுக்கு உடன்பாடு இருந்தாலும் இல்லாவிட்டாலும், நாட்டுமக்கள் மீது அவர் கொண்டிருந்த அனுதாபம் காரணமாக, நாட்டு முன்னேற்றத்திற்கு எது தடையாக இருந்தாலும் அது அகற்றப்படுவதே நியாயம் என்ற முறையில் அவர் ஒளிவுமறைவு இன்றிச் செயல்பட்டு வந்தார். இப்படிப்பட்ட உறுதியான கொள்கை உடைய மோகன் குமாரமங்கலம் சுப்ரீம் கோர்ட் நீதிபதி நியமனத்திலும் முற்போக்குக் கொள்கைகளை அமல்படுத்த உதவியாக மாறுதல் இருப்பது அவசியம் என்றால் அந்த மாறுதலைச் செய்யத் தயங்கக்கூடாது என்றே கருதினார்கள். அவர் பொது வாழ்வில் காட்டிவந்த உறுதி, இனிய சுபாவம் ஆகியவை நம்மால்

[திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி] [1973 ஆகஸ்ட் 2

பின்பற்றப்பட வேண்டிய ஒன்றாகும். எவ்வளவோ கருத்துக்களில் வேறுபாடு இருந்தாலும் அவருடைய பிரிவினால் ஏற்பட்ட துன்பம் எளிதில் மறைந்துவிடக்கூடியதல்ல. தமிழ்நாட்டிற்கும், இந்தியாவில் இருக்கக்கூடிய முற்போக்குக் கருத்துக்கள் கொண்டவர்களுக்கும் அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாத ஒன்றாகும். அவரது மறைவுகுறித்து எங்களது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தார்களுக்கும் எங்களது அனுதாபத்தைத் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, மறைந்த மத்திய அமைச்சர் திரு. மோகன் குமாரமங்கலம், பாராளுமன்ற உறுப்பினர் மதிப்பிற்குரிய திரு. பாலதண்டாயுதம், இந்த மாமன்றத்தினுடைய முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்—என்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்த திரு. அரங்கநாதன், அண்மையில் நடந்த விமான விபத்தில் இறந்த மற்றவர்கள், இவர்களுக்காக இங்கே அவை முன்னவரால் முன்மொழியப்பட்டிருக்கிற இந்த இரங்கல் தீர்மானத்தை நான் ஆதரித்து, முஸ்லிம் லீக்கின் சார்பாக மறைந்த அவர்களுடைய குடும்பத்திற்கு எங்களுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய நம்முடைய மோகன் குமாரமங்கலம் அவர்களோடு அமைச்சர் என்ற முறையிலே எனக்கு அதிகமாகத் தொடர்பு இல்லாவிட்டாலும் வழக்கறிஞர் என்ற முறையிலே அவரிடத்திலே எனக்குத் தொடர்பு இருந்திருக்கிறது. நான் 'ஜூனியர்'ஆக இருந்தபொழுது நம்முடைய உயர்நீதி மன்றத்தில் மிகச் சிறந்த வழக்கறிஞர் என்ற முறையிலே அவரை நான் பார்த்திருக்கிறேன். 'அப்ரென்டிஸ்'ஆக இருந்தபொழுது வழக்குகள் எப்படி உயர்நீதிமன்றத்திலே நடத்தப்படுகின்றன, எப்படி வாதாடப்படுகின்றன, அவற்றை நாம் பார்க்கவேண்டுமென்று நம்முடைய 'சீனியர்'கள் சொல்லும்போது, திரு. மோகன் குமாரமங்கலம் அவர்களுடைய வாதம் திறமையான வாதம், ஆகையினால் அதைப் போய் நாம் கவனிக்கவேண்டுமென்று பலமுறை கவனித்து அதிலே இருந்து பல பாடங்களை நாம் கற்றுக் கொண்டிருக்கிறோம். அந்த வகையிலே என்னுடைய தொடக்க காலத்திலேயிருந்து திரு. மோகன் குமாரமங்கலம் திறமையான வக்கீல், நல்ல வாதாடும் திறமை உடையவர், ஜூனியரிடத்திலே

1973 ஆகஸ்ட் 2] [திரு. எம். ஏ. லத்தீப்]

நல்லமுறையிலே பழகக்கூடியவர், ஜூனியருக்கு அதிகமான சலுகைகள் கொடுக்கக்கூடியவர் என்று கேள்விப்பட்டு அவரைப் போற்றிப் பாராட்டி புகழ்ந்திருக்கிறோம்.

முதல் முறையாக அவருக்கும் எனக்கும் ஏற்பட்ட தொடர்பு 1965-ல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடந்தபொழுது நாங்கள் எல்லாம் ஜூனியர்களுடைய சங்கத்தின் சார்பாக 1965-ம் ஆண்டு பிப்ரவரி 12-ம் தேதி மாநிலத்திலே இருக்கிற அத்தனை வழக்கு மன்றங்களையும் வக்கீல்கள் பகிஷ்காரம் செய்து, நம்முடைய எதிர்ப்பினைத் தெரிவிக்கவேண்டுமென்று ஒரு தீர்மானம் போட்டோம். உயர்நீதிமன்றத்திலேகூட வக்கீல்கள் கோர்ட்டுகளுக்குப் போகாமல் பகிஷ்கரிக்க வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தைப் போட்டு, கோர்ட்டுகளில் நோட்டீஸ்களை ஒட்டி இருக்கும்பொழுது, அந்த ஜூனியர் வக்கீல்களுக்குத் தலைவனாக இருந்த காரணத்தினால் திரு. மோகன் குமாரமங்கலம் அவர்கள் என்னை அழைத்துப் பேசினார்கள். பேச்சில் அவருடைய கருத்து வேறுவிதமாக இருந்தாலும் மிக அன்பாகப் பேசினார், அன்றிலிருந்து அவருடன் எனக்குத் தொடர்பு ஏற்பட்டு, பிறகு தொடர்ந்து தொடர்பு இருந்து வந்தது. பிறகு எம்.எல்.ஏ. வான பிறகுகூட ஒரு முறை விமான நிலையத்தில் சந்தித்தபொழுது எம்.எல்.ஏ.க்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று எனக்கு அறிவுரை தந்தார்கள்.

அவர்கள் டெல்லியிலே இருந்தால், தமிழ் நாட்டிற்கு மிகச் சிறந்த முறையிலே பல நன்மைகள் செய்வார்கள், செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற ஒரு எண்ணம் நமக்கு இருந்தது, ஒரு தைரியமும் இருந்தது. டெல்லி அமைச்சரவையில் தமிழ் நாட்டிற்காகத் தைரியமாக வாதாடக் கூடியவர், தமிழ்நாட்டு நன்மைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்று வாதாடக் கூடிய ஒருவர் இருந்தார் என்ற தைரியமும் இருந்தது. அவர்கள் சென்றுவிட்டது, டெல்லி அமைச்சரவையிலே நம்முடைய வக்கீல் இல்லாமல் போய்விட்டார் என்ற குறையை இன்றைக்கு ஏற்படுத்திவிட்டது.

அதேபோல், நம்முடைய மதிப்பிற்குரிய திரு. பாலதண்டாயுதம் அவர்கள் பொதுவுடைமைத் தத்துவத்திலே மிக நீண்டகாலமாக இருந்து வந்தவர்கள். பாட்டாளி வர்க்கத்தினருக்காகவும், தொழிலாளி வர்க்கத்தினருக்காகவும் தன்னை

அர்ப்பணித்துக்கொண்டவர்கள். நல்ல வாதத் திறமையுடையவர்கள், மேடையிலே ஏறிவிட்டால் பலவிதமான கருத்துக்களை, எளிய மக்களும் புரிந்துகொள்ளக்கூடிய வகையிலே, எளிய வகையிலே சொல்லி, மக்களுக்குப் புரியவைப்பார்கள். பாட்டாளி மக்களுடைய நல்ல தோழர். அவர் விமான விபத்திலே இறந்தது நமக்கெல்லாம் சோகத்தைக் கொடுக்கிறது.

அதே போன்று என்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்த, நம்முடைய நண்பர் அரங்கநாதன் திடீரென்று கார் விபத்திலே காலமானது உண்மையிலே எங்களுக்கெல்லாம் பெருத்த நஷ்டத்தை ஏற்படுத்தி இருக்கிறது. பொது வாழ்க்கையிலே அவர்கள் இப்பொழுதுதான் முன்னேறிக்கொண்டு வந்தார்கள். இந்த நேரத்தில் அவர்கள் மறைந்தது எங்களுக்குப் பெருத்த இழப்பு என்றுதான் சொல்லிக்கொள்வேன்.

அதேபோல், இந்த விமான விபத்தில் என்னுடைய தொகுதியைச் சேர்ந்த மக்கள் இரண்டு பேர், பாலகிருஷ்ணன் என்பவரும், கணேஷ் என்பவரும் உயிரிழந்தார்கள். இதனால் என்னுடைய தொகுதிக்குச் சொந்தமுறையிலேகூட எனக்கு நஷ்டம் என்று சொல்லிக்கொள்வேன். ஆகவே, இறந்தவர்களைப் பற்றி இங்கே சொல்லப்பட்டவற்றை என்னுடைய கட்சியின் சார்பாக வரவேற்று மறைந்துவிட்ட அவர்களுடைய குடும்பத்தினருக்கு முஸ்லிம் லீக்கின் சார்பாக நான் என்னுடைய அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இங்கு கொண்டுவரப்பட்டிருக்கும் இரங்கல் தீர்மானத்தை இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே ஆதரிக்கிறேன். அன்றைக்கு விமான விபத்திலே மறைந்த மதிப்பிற்குரிய மத்திய அமைச்சர் மோகன் குமாரமங்கலம் அவர்கள் சிறந்த முற்போக்கான கருத்துடையவர்கள். இந்த நாட்டிலே ஒரு சமதர்ம சமுதாயத்தைக் காண வேண்டுமென்பதற்காக அல்லும் பகலும் சிந்தித்து அவர்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள், அவர்களுடைய தார்மீகக் கொள்கையை நமக்கு வெளிப்படுத்துகின்றது. அவர் மத்திய அமைச்சராக இருந்தாலும்கூட தன்னை ஒரு அமைச்சராகக் கருதாமல் இந்த நாட்டினுடைய சாதாரணக் குடிமகன் என்ற எண்ணத்திலேயே எல்லோருடனும் சகஜமாகப்

பழகிவந்த ஒரு பெரியவர் ஆவார். இந்த நாட்டிலே முற்போக்கான கொள்கையை அமலாக்குவதற்கு அடிப்படையாக அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கு அவர் முக்கிய காரண கர்த்தாவாக இருந்தார் என்று சொன்னால் அது இந்த சந்தர்ப்பத்திலே மிகையாகாது.

அது மட்டுமல்லாமல் இந்நாட்டிலே பொருளாதார வளர்ச்சிக்கு அடிகோலும்போது ஒரு தொழிலைத் தேசியமயமாக்குவது மட்டும் போதாது, அந்தத் தொழில் நல்லமுறையிலே இயங்கிப் பெரும் வளர்ச்சி பெற்று உற்பத்திப் பெருக்கம் காண வேண்டுமென்பதிலே அதிகக் கவனம் செலுத்தி வந்தார். அதற்கு உதாரணமாக; நிலக்கரிச் சுரங்கத்தை அவர்கள் தேசவுடைமையாக்கியதை நாம் கொள்ளலாம். எத்தனையோ தொழில்கள் இருக்கின்றபொழுது நிலக்கரித் தொழிலை ஏன் தேசியமயமாக்க வேண்டுமென்று நாம் கருதலாம். நமக்கு முன் அனுபவம் உண்டு. மின்சாரம் இல்லாமல் வாழ்வே கிடையாது நாட்டிலே. மின்சாரம் ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையிலும் புகுந்திருக்கிறது என்ற உணர்வைக் கொண்டு, நாட்டிலே ஒரு பெரும் தொழில் புரட்சிக்கு நிலக்கரி அபிவிருத்தி மிக அவசியம் என்ற கருத்தைக்கொண்டு, நிலக்கரிச் சுரங்கத்தை தேசிய உடைமையாக்கினார்கள். தேசிய உடைமையாக்கியதோடு சரியாகப் போய்விட்டது என்று கருதாமல் சிறுசிறு நிலக்கரிச் சுரங்கப் பகுதிகளுக்கும் சென்று அந்தத் தொழிலாளர்களைத் தம்மோடு சமமாக உட்காரவைத்து அவர்களுடைய சிரமங்களைப் போக்கி அவர்களுடைய ஒத்துழைப்பைப் பெற்று அதிகப்படியான நிலக்கரியை அதிக அளவிலே தோண்டி எடுக்கின்ற முயற்சியை மேற்கொண்டது நாம் கூர்ந்து கவனிக்க வேண்டிய ஒன்று. ஆகவே, அவருடைய எண்ணங்கள் சமதர்ம சமுதாயத்தை அமைப்பதற்கு ஒன்றாகப் பெரும் தொழில்களை தேசியமயமாக்க வேண்டுமென்பது மட்டுமல்லாமல் உற்பத்தியைப் பெருக்குவதிலும் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டுமென்பது, அப்படியே இருந்தார்கள். இம்மாதிரி இராப்பகலாகத் தூக்கம் இல்லாமல் உழைத்து நாட்டினுடைய வளர்ச்சிப் பெருக்கத்திற்கும் சாதாரண மக்களுடைய வளர்ச்சியிலேயும் பெரும் அக்கறை காட்டி வந்த ஒரு பெரிய தலைவரை, தமிழகத்தைச் சேர்ந்தவரை இழந்தது, தமிழகத்திற்கு மட்டுமல்ல, இந்த நாட்டிற்கே ஒரு பெரிய இழப்பாகும். அந்த இழப்பை ஈடு செய்வது என்பது இன்றைக்கு இயலாத ஒன்று என்றாலும்கூட

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1973 ஆகஸ்ட் 2

அவருடைய கருத்தை நிலைநாட்டுவதற்கு, அமலாக்குவதற்கு நாம் எல்லோரும் சேர்ந்து ஒத்துழைப்புக் கொடுத்து, இந்த நாட்டிலே சமதர்ம சமுதாயம் மலர நம்மை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அப்படி இறந்த அந்தத் தலைவருடைய குடும்பத்திற்கும்; அது மட்டுமல்லாமல் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த மதிப்பிற்குரிய தோழர் பாலதண்டாயுதம் அவர்கள் இந்நாட்டிலே சமுதாயத்தின் அடித்தட்டிலே இருக்கிற மக்களுக்காகப் பாடுபட்ட, அல்லும் பகலுமாகப் பாடுபட்டு வந்த முற்போக்கானவர், அவருடைய இழப்பும் பெரும் இழப்பாகும், அன்னாருடைய குடும்பத்திற்கும்; முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அரங்கநாதன் அவர்களுடைய குடும்பத்திற்கும்; சிறந்த நிர்வாகியாக இருந்த தமிழகத்தைச் சேர்ந்த பெண்மணி திருமதி கௌசல்யா நாராயணன் அவர்களை இழந்தது பெரும் நட்டம், அவருடைய குடும்பத்திற்கும்; விமான விபத்தில் இறந்த மற்ற அனைவருடைய குடும்பங்களுக்கும் இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியினுடைய சார்பிலே எங்களுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*** திரு. கே. டி. கே. தங்கமணி:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தச் சபைக்கு முன்னால் சபை முன்னவர் அவர்கள் முன்மொழிந்திருக்கக்கூடிய இரங்கல் தீர்மானத்தை ஆதரித்து, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

இந்தத் தீர்மானத்தின் பேரிலே அவர்கள் பேசுகின்றபொழுது, இது மோகன் குமாரமங்கலம் அவர்களைப்பற்றிய தீர்மானமாக இருந்தாலும்கூட, மே மாதம் 31 ஆம் தேதி நடந்த விமான விபத்தில் காலமானவர்களைப்பற்றியெல்லாம் குறிப்பிட்டார்கள். அந்த விபத்தைப்பற்றிப் பொதுவாகத் தமிழ்நாட்டிலே பலவிதமான கருத்தோட்டங்கள் இருந்தன. அந்த விபத்து நடந்த அன்றைக்கு தமிழ்நாட்டு மக்கள் எவ்வளவு கவலையுடன் இருந்தார்கள் என்பது எல்லாம் நாம் அறிந்ததுதான். அந்த விபத்து ஏற்பட்ட தன்மையையொட்டி நான் சார்ந்திருக்கின்ற கட்சி, அது ஒரு சாதாரண விபத்து அல்ல, ஏதோ சூது இருக்கிறது என்று சொல்லி, அதற்காகப் போடப்பட்ட

1973 ஆகஸ்ட் 2] [திரு. கே. டி. கே. தங்கமணி]

விசாரணையின்போது விசேஷமாக மோகன் குமாரமங்கலம் அவர்களின் குடும்பத்தின் சார்பிலே ஒரு லாயரையும், அந்த விபத்திலே மறைந்த பாலதண்டாயுதம் அவர்களின் குடும்பத்தின் சார்பிலே இன்னொரு லாயரையும் வைத்து வாதாடினோம். அதன் மூலமாகப் பல விஷயங்கள் வெளிவந்தன. இன்றைக்கு என்ன முடிவுகள் எடுக்கப்பட்டு இருக்கின்றனவோ அவற்றை நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய நிலைமையிலே இருந்தாலும்—முக்கியமான தலைவர்கள் சென்ற விமானம் விபத்துக்குள்ளாகியிருக்கிறது, விமானிகள் சரியாக நடக்கவில்லை என்று தெரிகிறது—இந்த நேரத்திலே அதைப்பற்றியெல்லாம் விரிவாகப் பேசுவதற்கு இல்லையென்றாலுங்கூட, தமிழ்நாட்டு மக்களிடத்திலே என்ன கருத்து இருக்கிறது என்பதைத் தெரிவிப்பதற்காகத்தான் நான் இதையெல்லாம் எடுத்துக் கூறுகிறேன்.

மோகன் குமாரமங்கலத்தோடு எங்கள் கட்சித் தோழர் பாலதண்டாயுதம் அவர்களும், அகில இந்திய தொழிற்சங்கத் தலைவர்களில் ஒருவரான சதீஷ் லூம்பா அவர்களும், கஸ்டம்ஸ் துறையிலே கலெக்டராக இருந்த கௌசல்யா அவர்களும்—அவர்களும் மிக முக்கியமான தஸ்தாவேஜுகளைத் தன்னோடு கொண்டு சென்றார் என்றும் சொல்லப்படுகிறது—மறைந்தது, பொதுவாகத் தமிழ்நாட்டிலே முற்போக்கு இயக்கத்திற்குப் பெரிய நஷ்டம் என்று கொண்டாலும், தமிழ்நாட்டைப் பொறுத்த வரையிலே மிகப் பெரிய இழப்பாக இருக்கிறது.

மோகன் குமாரமங்கலம்பற்றி எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். என்னைப் பொறுத்த வரையிலும், நான் சார்ந்திருக்கின்ற கட்சியைப் பொறுத்த வரையிலும், இதிலே சொல்வதற்குப் பல விஷயங்கள் இருக்கின்றன. மோகன் குமாரமங்கலம் அவர்களும் நானும் 1936 லிருந்து 1939 வரையிலும் ஒரே பள்ளியிலே படித்துக்கொண்டு வந்தோம். அந்த மூன்றாண்டுக் காலம் நாங்கள் இங்கிலாந்திலே படித்தபொழுது, இங்கிலாந்திலே உள்ள இந்திய மாணவர்கள் சங்கத்தினுடைய பொதுச் செயலாளராக, அது மாத்திரமல்ல, கேம்பிரிட்ஜ் யூனியன் சேர்மனாகவும் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்பொழுதெல்லாம் ஆக்ஸ்போர்ட் கேம்பிரிட்ஜ் யூனியன்கள் சேர்மனைத் தேர்ந்தெடுக்கப்படுவது என்றால் லேசான விஷயமல்ல. ஏனென்றால், ஆக்ஸ்போர்ட் யூனியன்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 ஆகஸ்ட் 2

சேர்மனாக அல்லது கேம்பிரிட்ஜ் யூனியன் சேர்மனாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள்தான் பெரும்பாலும் பின்னாலே இங்கிலாந்து நாட்டிலே அமைச்சர்களாக வருவார்கள் என்று சொல்வதுண்டு.

&& 73. Notification issued with G.O. Ms. No. 400, Rural Development and Local Administration, dated the 28th February 1973 in regard to empowering the Commissioner, Corporation of Madras to exercise the powers conferred and duties imposed on the State Government by sections 71-A to 71-F of the Madras City Municipal Corporation Act, 1919. [Laid on the Table of the House under section 348 (*d*) of the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919).]

&& 74. Notification issued with G.O. Ms. No. 1376, Revenue, dated the 23rd March 1973 in regard to amendments to the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Rules, 1965, the Tamil Nadu Leaseholds (Abolition and Conversion into Ryotwari) Rules, 1965, the Tamil Nadu

Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Rules, 1965 and the Tamil Nadu Inams (Supplementary) Rules, 1965. [Laid on the Table of the House under sections 73 (5), 50 (5), 48 (5), 13 (4) of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 26 of 1963), the Tamil Nadu Leaseholds (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 27 of 1963), the Tamil Nadu Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 30 of 1963) and the Tamil Nadu Inams (Supplementary) Act, 1963 (Tamil Nadu Act 31 of 1963) respectively).]

&& 75. Notification issued with G.O. Ms. No. 17, Co-operation, dated the 24th January 1973 in regard to Rule 93 of the Tamil Nadu Co-operative Societies Rules, 1963. [Laid on the Table of the House under section 119 (4) of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961).]

&& 76. Notification issued with G.O. Ms. No. 780, Agriculture, dated the 24th March 1973, in regard to establishment of a market at Avinashi in Coimbatore district to provide facilities for the purchase and sale of cotton, groundnut, tobacco, turmeric, maize and sugarcane jaggery. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

&& 77. Notification issued with G.O. Ms. No. 897, Agriculture, dated the 9th April 1973, in regard to establishment of markets of Erode and Perundurai in Coimbatore district to provide facilities for the purchase and sale of sugarcane, jaggery, jaggery powder, maize, etc. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

&& 78. Notification issued with G.O. Ms. No. 786, Agriculture, dated the 26th March 1973, in regard to an amendment to the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

&& 79. Notification issued with G.O. Ms. No. 944, Revenue, dated the 2nd March 1973 making a rule under the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961. [Laid

on the Table of the House under section 112 (2) of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Tamil Nadu Act 58 of 1961).]

&& 80. Notification issued with G.O. Ms. No. 105, Agriculture, dated the 18th January 1973 in regard to declaration of notified market area of the Thottium market for the purposes of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 in respect of groundnut, paddy and gingelly. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

81. The Tamil Nadu Government's Review and the Sixth Annual Report and Statement of Accounts of the Tamil Nadu Agro Industries Corporation Limited for the year ended 31st March 1972. [Laid on the Table of the House under section 619-A of the Companies Act, 1956 (Central Act 1 of 1956).]

82. The Annual Financial Statement for 1973–74 and Supplementary Financial Statement for 1972–73 of the Tamil Nadu Electricity Board. [Laid on the Table of the House under sub-section (i) of section 61 of the Electricity (Supply) Act, 1948 (Central Act 54 of 1948).]

83. The Audit Report on the Annual Accounts of the Tamil Nadu Electricity Board for the year 1971–72. [Laid on the Table of the House under section 69 (4) of the Electricity (Supply) Act, 1948 (Central Act 54 of 1948).]

B. *Reports, Notifications and Other Papers.*

@ 1. Notification issued with G.O. P. No. 740, Revenue, dated the 22nd February 1973 in regard to reduction in the rate of tax payable by any dealer under the Central Sales Tax Act, 1956 in respect of the sale of polyster staple fibre manufactured by the Indian Organic Chemicals Limited, Madras.

@ 2. Notification issued with G.O. Ms. No. 3217, Home, dated the 18th December 1972 in regard to cancellation of Home Department Notification II-1 No. A-3730 of 1958, published at page 1029 of Part II—Section 1 of the *Tamil Nadu Government Gazette*, dated the 11th June 1958.

@ 3. Notification issued with G.O. Ms. No. 556, Revenue, dated the 17th February 1973 in regard to reduction in the rate of Stamp Duty, chargeable under the Indian Stamp Act, 1899 in respect of the sale deed in favour of the Muslim Women Aid Society, Madras.

@ 4. Notification issued with G.O. Ms. No. 218, Revenue, dated the 31st January 1973, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of mortgage deeds executed in connection with the loans granted under the Tamil Nadu State Aid to Industries Act, 1922 (Tamil Nadu Act V of 1922).

@ 5. Notification issued with G.O. Ms. No. 2942, Revenue, dated the 14th November 1972 in regard to remission of Stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of the instrument of exchange to be executed by the Mayuram Municipal Council and Thiru R. R. Srinivasa Ayya.

@ 6. Notification issued with G.O. Ms. No. 1393, Labour and Employment, dated the 9th December 1972 in regard to certain amendments to the Tamil Nadu Factories Rules, 1950.

@ 7. An Economic-*cum*-Functional classification of the Tamil Nadu Government Budgetary transactions, 1973–74.

% 8. Notification issued with G.O. Ms. No. 466, Industries, dated the 19th March 1973 in regard to fixation of maximum retail selling price of Portland Cement under the Tamil Nadu Non-Food Staffs (Prevention of Profiteering) Orders, 1973.

% 9. Notification issued with G.O. Ms. No. 899, Revenue, dated the 1st March 1973 in regard to remission of Stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 relating to agreements executed by the Harijans in respect of the Housing Scheme for Scheduled Castes and Scheduled Tribes implemented by the Harijan Welfare Department.

% 10. Notification issued with G.O. Ms. No. 1350, Revenue, dated the 22nd March 1973, in regard to an amendment to the Revenue Department Notification II-1 No. 326 of 1973 published at page 46 of Part II—Section 1 of the *Tamil Nadu Government Gazette*, dated the 31st January 1973.

% 11. Notification issued with G.O. Ms. No. 1379, Revenue, dated the 23rd March 1973 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of the mortgage deeds to be executed by the loanees in favour of the Tamil Nadu Theatre Corporation Limited, Madras.

% 12. Notification issued with G.O. Ms. No. 70, Labour and Employment, dated the 27th January 1973, in regard to an amendment to the Tamil Nadu Plantations Labour Rules, 1955.

% 13. Notification issued with G.O. Ms. No. 9, Labour and Employment, dated the 5th January 1973, in regard to an amendment to the Tamil Nadu Plantations Labour Rules, 1955.

£ 14. Notification issued with G.O. Ms. No. 1199, Revenue, dated the 16th March 1973, in regard to an amendment to the Revenue Department Notification II-1 No. 5563 of 1970, published at page 1724 of Part II—Section 1 of the *Tamil Nadu Government Gazette*, dated the 18th November 1970.

£ 15. Notification issued with G.O. Ms. No. 1197, Revenue, dated the 16th March 1973 in regard to an amendment to the table of fees and exemption from payment of Registration fees in respect of the gift deed to be executed in favour of the Animal Husbandry department.

£ 16. Notification issued with G.O. Ms. No. 1217, Revenue, dated the 19th March 1973 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of the sale dede to be executed by the Executive Authority, Municipal Council, Mayuram in favour of the President of the College Committee of Dharmapuram Sri Gnanambigai Government Arts College for Women, Mayuram, Thanjavur district.

£ 17. Statement in respect of a supplementary question put by Thiru A. Subramaniam, M.L.A., on 1st March 1973 in regard to implementation of Pilot Intensive Rural Employment Project in the Mangalur Block of South Arcot District.

£ 18. Resume of work transacted by the Tamil Nadu Legislative Council for the period from 2nd to 29th December 1972 during its forty-third Session.

& 19. Notification issued with G.O. Ms. No. 1316, Labour and Employment, dated the 26th October 1972 in regard to certain amendments to the Tamil Nadu Factories Rules, 1950.

+ 20. The Tamil Nadu Sales of Motor Spirit Taxation and Entertainments Tax (Amendment) Ordinance 1973 (Tamil Nadu Ordinance No. 2 of 1973).

$ 21. The Indian Stamp (Tamil Nadu Amendment) Ordinance 1973 (Tamil Nadu Ordinance No. 3 of 1973).

&& 22. Notification issued with G.O. Ms. No. 1443, Revenue, dated the 28th March 1973 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 relating to transfer of lands acquired on behalf of the companies licensed under the Industries (Development and Regulations) Act, 1951 (Central Act LXV of 1951).

&& 23. Notification issued with G.O. Ms. No. 609, Industries, dated the 17th April 1973 in regard to an amendment to the Tamil Nadu Cement Distribution (Licensing and Regulation) Orders, 1973.

&& 24. Notification issued with G.O. Ms. No. 743, Industries, dated the 15th May 1973 in regard to an amendment to the Tamil Nadu Cement Distribution (Licensing and Regulation) orders, 1973.

&& 25. Notification issued with G.O. Ms. No. 1497, Revenue, dated the 30th March 1973 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of the sale deeds executed in favour of the Hospital Improvement Committee, Singampuneri, Ramanathapuram district.

kg 26. The Constitution (Thirty First Amendment) Bill, 1973 as introduced in the Lok Sabha.

kg 27. The Constitution (Thirty-first Amendment) Bill, 1973 as passed by the Houses of Parliament.

kg 28. Lok Sabha Debate on the Constitution (Thirty First Amendment) Bill, 1973.

kg 29. Rajya Sabha Debate on the Constitution (Thirty-First) Amendment Bill, 1973.

30. Report on the recommendations of the Committee on Rules of the Tamil Nadu Legislative Assembly constituted in 1973.

@ Despatched to Members on 25th April 1973.
@@ Laid on the Table of the Legislature Library with reference to the proviso to rule 21 (5) of the Tamil Nadu Legislative Assembly Rules.
% Despatched to Members on 11th May 1973.
£ Despatched to Members on 5th June 1973.
& Despatched to Members on 27th June 1973.
&& Despatched to Members on 20th July 1973.
+ Despatched to Members on 28th June 1973.
$ Despatched to Members on 30th June 1973.
kg Despatched to Members on 24th July 1973.

தமிழ் நாடு சட்டப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1973 ஆகஸ்ட் 3.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் முற்பகல் 10.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) அரசினர் தீர்மானம்

வினா நேரத்தை ஒத்திவைத்தல் குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்றைய முதல் அலுவல் "வினாக்கள்—விடைகள்" ஆகும். நேற்றையதினம் நடந்த அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில், இன்றைய கேள்வி நேரத்தை ஒத்திவைக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டபடியால், அதற்கான தீர்மானத்தை மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் இப்பொழுது கொண்டுவருவார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டப் பேரவையின் 23-வது விதியின்கீழ், இன்றைய நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள "வினாக்கள்—விடைகள்" நிகழ்ச்சியினைத் தள்ளிவைத்து அடுத்த அலுவலான "பேரவைத் தலைவர் தேர்தலை" எடுத்துக்கொள்ளலாம்".

என்கிற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.

(2) நடைமுறைக் கேள்விகள்.

(அ) பேரவைத் தலைவர் தேர்தலுக்குமுன் ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக் கொள்வது குறித்து.

DR. H. V. HANDE : Mr. Deputy Speaker, Sir, I am rising on a point of order. Before you put the motion moved by the Hon. the Leader of the House to vote, I would like to get clarification from the Hon. Deputy Speaker whether the motion is for the

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1973 ஆகஸ்ட் 3

entire removal of the question hour or suspension of question hour. I want to know whether after the question hour, a number of adjournment motions which we have given notice of would be taken up for consideration. We have given a number of adjournment motions on a number of important problems like labour problem, farmers' agitation and non-supply of rice to Kanyakumari, etc. There are so many burning problems affecting the people. May I know from the Hon. Deputy Speaker whether we will be given an opportunity to raise such adjournment motions after the question hour is over. These are very important problems about which the public are concerned very much. Before we . . . .

MR. DEPUTY SPEAKER : It was decided yesterday at the meeting of the Business Advisory Committee by all the Party leaders that the question hour might be suspended. My responsibility is only up to the election of the Speaker. Therefore, the Hon. Member's question will be answered by the Hon. Speaker.

DR. H. V. HANDE : As far as the suspension of question hour is concerned, I concede. I would like to know . . . . .

MR. DEPUTY SPEAKER : Dr. Hande, please resume your seat. I will explain. All the items that were included in the Agenda for 4 or 5 days were decided and accepted by the Business Advisory Committee. In that Committee, the hon. Member 's party leader was also present.

DR. H. V. HANDE : It was not discussed in the Business Advisory Committee whether the Adjournment Motions would be discussed or not. It was not discussed whether they would be considered or not.

திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் கோருவது என்னவென்றால், வினா-விடை நேரத்தை ரத்து செய்துவிட்டால் கூட, ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொண்ட பிறகு தான் தேர்தலோ மற்ற நிகழ்ச்சிகளோ நடைபெறலாம் என்ற வகையில்தான். அதற்குத்தான் தாங்கள் ஒரு தீர்ப்பு வழங்க வேண்டும்.

1973 ஆகஸ்ட் 3]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நம்முடைய அலுவல்களில் "பேரவைத் தலைவர் தேர்தல்" என்பதற்கு முன்னால் இருக்கும் ஒரே ஒரு நிகழ்ச்சி—வழக்கமான நிகழ்ச்சி—"வினாக்கள்—விடைகள்" ஆகும். அந்த வினா—விடைகளைப் பேரவையின் அனுமதியோடு ஒத்திவைக்கலாம் என்று நம்முடைய விதிகள் கூறுகின்றன. வினா—விடை நேரத்தை ஒத்திவைக்கலாமா என்பதைப்பற்றி நேற்று நடந்த அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் எல்லாக் கட்சிகளின் தலைவர்களையும் கலந்து ஆலோசித்தபோது, எல்லோரும் அதற்கு ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பின்னால் வருகிற நிகழ்ச்சிகளைப் பொறுத்து, ஒத்திவைப்புத் தீர்மானங்கள் வருமா, வராதா என்பதைப் பொறுத்தெல்லாம் நான் சொல்வதற்கில்லை. இன்று பேரவைத் தலைவர் தேர்தலோடு நம்முடைய அலுவல்களை முடித்துக்கொள்வது இந்தப் பேரவையின் மரபாக இருந்து வந்திருக்கிறது. ஆகையால்தான், நேற்றையதினம் நடந்த அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் இதுபற்றி விரிவாக விவாதித்து, கேள்வி நேரத்தை ஒத்தி வைப்போம் என்று சொன்னோம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : கேள்வி நேரத்தைப்பற்றிப் பிரச்சினையே இல்லை. அதுகுறித்த தங்கள் தீர்ப்பை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன். ஏனென்றால், அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் அதுபற்றி முடிவாகிவிட்டது. ஒத்திவைப்புத் தீர்மானம் என்பது அவசர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளைப்பற்றியதாகும். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம், ஒத்திவைப்புத் தீர்மானங்களை, அடுத்த நிகழ்ச்சிக்குப் போவதற்கு முன்பு எடுத்துக்கொள்ளலாம் என்பதுதான். ஏனென்றால், ஒத்திவைப்புத் தீர்மானங்களை நிகழ்ச்சி நிரலில் போடுவதில்லை. அதை எடுத்துக் கொள்வது 'கம்ப்ளீட் டிஸ்க்ரிஷன் ஆஃப் தி ஆனரபிள் டெபுடி ஸ்பீக்கர்.' ஆகவே, உங்களுடைய டிஸ்க்ரிஷனிலேயே ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே அவர்கள் கோருகிறபடி இப்பொழுது நாம் ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள முடியாது. இதை அவரும்

ஒத்துக்கொள்ளுகிறார். இதற்குப் பின்னால் ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்படுமா என்பது குறித்து நான் தீர்ப்புச் சொல்ல முடியாது. டாக்டர் ஹாண்டே அவர்கள் சொல்வதுபோல், வழக்கமாக நிகழ்ச்சி நிரலில் 'ஒத்திவைப்புத் தீர்மானங்'களைச் சேர்ப்பதில்லை. இப்பொழுது முதலில் எடுத்துக் கொள்ள வேண்டிய அலுவல் "பேரவைத் தலைவர் தேர்தல்" ஆகும். அந்தத் தேர்தலுக்கு முன்னாலிருக்கும் கேள்வி நேரத்தை ஒத்திவைப்பதைப் பொறுத்து பேரவை முன்னவர் அவர்கள் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆக, . . .

(ஆ) முன்னாள் பேரவைத் தலைவர் தமது பதவி நீக்கம் குறித்து தொடர்ந்துள்ள வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் இருக்கும்போது, பேரவைத் தலைவர் தேர்தலை நடத்துவது முறைதானா என்பது குறித்து.

THIRU B. VENKATASWAMY: Sir, I rise on a point of order. According to rule 67, which reads as follows:

"A member, while speaking must not—(i) give his opinion about or refer to any matter on which a judicial decision is pending".

I want to know from the Hon. Deputy Speaker, whether the calling of nomination for the Speaker is proper or not. Now the matter is pending before the Supreme Court which is the highest authority on the land. In view of that, I want to know whether the conduct of election of Speaker is advisable. Is it advisable to conduct the election in such a situation? The matter is *sub judice*. The matter has already been delayed for 7 months. What is the necessity for us to take up this matter now? Why not we delay it till the receipt of the Supreme Court's decision on the matter? I want a ruling from the Chair on this point.

MR. DEPUTY SPEAKER: First of all, I am taking for granted that the House has given permission to postpone or drop the question hour. Now I come to the point of order raised by hon. Member Thiru Venkatasami. I would like to know the view points of the leaders on the Treasury Benches.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றி ஏற்கெனவே இந்த மன்றத்தில் பிரச்சினை எழுப்பப்பட்டு, தாங்களே இதற்கு விரிவான தீர்ப்பைக்

கொடுத்திருக்கிறீர்கள். இந்த மன்றத்தைப் பொறுத்தவரையில், இந்த மன்றம் தான் 'சுப்ரீம் பாடி'. ஆகவே, வெளியேயிருந்து யாரும் இந்த மன்றம் எடுத்த முடிவைப் பற்றியோ, அதை மறு பரிசீலனை செய்யவேண்டுமென்று சொல்லவோ, சட்டப் பேரவை விதிகளுக்கு விளக்கம் கொடுக்கவோ முடியாது என்று முடிவு எடுத்திருக்கிறோம். இது சுப்ரிம் கோர்ட்டினுடைய—உயர்நீதி மன்றத்தினுடைய—ஜூரிஸ்டிக்ஷனைப் பாதிக்காது. நாம் அவர்களுடைய அதிகாரத்தை மீறவில்லை. நம்முடைய அதிகாரத்தில் யாரும் குறுக்கிட முடியாது என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். இப்போதைக்கு சுப்ரிம் கோர்ட்டில் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், அது வந்தாலும், அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் யார் யாரை அதில் பார்ட்டியாகச் சேர்க்கிறார்களோ, அவர்களைப் பொறுத்ததாகும். தங்களைப் பொறுத்தவரையில், தாங்கள் எந்த மன்றத்தின் முன்னாலும் சென்று பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்று முடிவு எடுத்து அது அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதை உயர்நீதி மன்றம் மறுத்ததாகவோ, தவறு என்று சொன்னதாகவோ தெரியவில்லை. ஆகவே, அரசுத் தரப்பைப் பொறுத்தவரையில், இப்பொழுது நடைபெறுகிற தேர்தல் சட்டப்படி நடைபெறுகிற தேர்தல்; நம்முடைய விதிகளுக்கு உட்பட்டு நடைபெறுகிற தேர்தல்; அரசியலமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டு நடைபெறுகிற தேர்தல்; ஆகவே இதிலே எந்தவிதமான தவறும் இல்லை என்பதுதான் அரசுத் தரப்பின் வாதம் ஆகும்.

THIRU R. PONNAPPA NADAR: I would like to offer my remarks on the important matter that has been raised, that is, the removal of the former Speaker Thiru K. A. Mathialagan. That is the subject matter which is before the House. That matter has been elaborately discussed in this House and a decision has been rendered by this House. When the matter was taken before the High Court, the High Court gave its decision holding certain things which may not be acceptable to many of us. Now when the decision has been rendered by the High Court and even when the matter is pending before the Supreme Court there is no legal impediment inasmuch as the Supreme Court has not given injenction or intimation prohibiting the conduct of the election of Speaker.

Since the Supreme Court has not said that the election shall not be held, there is no legal impediment in the conduct of the election.

Before the election is held and an announcement is made, we may be permitted to make our statements. The Deputy Speaker should give us time to make our statement regarding the proposed election, before the declaration is made because the election is not acceptable to us. That point may also be borne in mind. So far as the election of the Speaker is concerned whether it is proper or improper is for the House to decide.

DR. H. V. HANDE : I want clarification from the Hon. Minister.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கட்சித் தலைவர்கள் பேசட்டும்.

THIRU K. T. K. THANGAMANI : Mr. Deputy Speaker, Sir, before I offer my views on the point raised by you, I would like to know your ruling on the point of order raised by Dr. Hande.

டாக்டர் ஹாண்டே அவர்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் என்னவென்றால், 22-வது பிரிவின்படி இந்தக் கேள்வி நேரத்தை ஒத்திவைக்க வேண்டுமென்பது தீர்மானம். அது சம்பந்தமாக ஏற்கனவே நேற்றையதினம் நடைபெற்ற பிசினஸ் அட்வைசரி கமிட்டிக் கூட்டத்தில் கேள்வி நேரத்தை ஒத்திவைப்பது என்பதை ஏற்றுக்கொள்வது என்று முடிவு எடுத்து இருக்கிறோம். அந்தத் தீர்மானம் கொண்டுவந்தால் நிச்சயமாக அதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். கேள்வி நேரத்தை ஒத்திப் போடுவது என்று தீர்மானம் கொண்டுவந்த பிறகு, அதை ஒட்டி அடுத்து சபாநாயகர் தேர்தல் தான் இருக்கவேண்டுமென்று கூறக் கூடாது. அப்படி இருக்கும் என்று சொன்னால், இந்தத் தீர்மானத்தின் பேரிலே உங்களுடைய முடிவைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி நேரம் என்பது தவிர்க்க முடியாத ஒன்று. ஆகவேதான் அதை ஒத்திவைக்க வேண்டுமென்று தீர்மானம் கொண்டு வருகிறோம்.

எதற்காக அதை ஒத்திவைத்திருக்கிறோம் என்பதற்கான காரணத்தைத் தெரிவிக்க வேண்டுமென்பதால், சபாநாயகர் தேர்தல் நடைபெற வேண்டுமென்பதற்காக என்று காரணம் சொன்னோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : கேள்வி நேரத்தை ஒத்திப் போட்டால், அதற்கு அடுத்ததாக அட்ஜார்ன்மென்ட் மோஷன் எடுத்துக்கொள்ள வேண்டும். அதை அஜெண்டாவில் போடுவது கிடையாது. அப்படியிருந்தும் அவசரப் பிரச்சினைகளைக் கேள்வி நேரத்திற்குப் பிறகு விவாதிப்பது என்ற நியதி இருக்கிறது. இப்போது கேள்வி நேரம் ஒத்திவைக்கப் பட்டிருப்பதால், சபாநாயகர் தேர்தலுக்கு முன்பாக அட்ஜார்ன்மென்ட் மோஷன் எடுத்துக்கொள்ளப்படுமா என்பது பற்றி தங்கள் கருத்து என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நாம் முதலில் கேள்வி நேரத்தை ஒத்திவைப்போம். பிறகு அட்ஜார்ன்மென்ட் மோஷன் போன்ற முக்கியமான விவகாரங்களைப் பார்த்துக் கொள்ளலாம். முதலில் பேரவைத் தலைவர் தேர்தல் நடத்தலாம். மற்ற முக்கியமான விவகாரங்களைக் குறித்து பேரவைத் தலைவர் முடிவு தெரிவிப்பார். அதுதான் நம்முடைய பேரவையின் சம்பிரதாயம். பேரவைத் தலைவர் பதவி மிகவும் முக்கியமான பதவி. இந்தப் பேரவையின் ஒட்டுமொத்தமான கருவின் மையமான பதவி பேரவைத் தலைவர் **பதவி.**

பேரவையின் முன் உள்ள கேள்வி :

"சட்டப் பேரவையின் 22-வது விதியின்கீழ், இன்றைய நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள "வினாக்கள்-விடைகள்" நிகழ்ச்சியினைத் தள்ளிவைத்து அடுத்த அலுவலான "பேரவைத் தலைவர் தேர்தலை" எடுத்துக் கொள்ளலாம்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடசாமி அவர்கள், சுப்ரீம் கோர்ட்டிலே பேரவைத் தலைவர் பதவி குறித்து கேஸ் 'பெண்டிங்'காக

இருக்கிறபோது, இந்தத் தேர்தலை நடத்தலாமா என்று கேள்வி கேட்டார்கள். இதே மன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள்—அனைத்துக் கட்சி சார்பிலும்—ஏன் பேரவைத் தலைவர் தேர்தலை நடத்தவில்லை, ஏன் துணைத் தலைவரை வைத்துக் கொண்டு சமாளித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று பிரச்னையைக் கிளப்பினார்கள். இன்றைக்கு இதே மன்றத்தில் ஏன் பேரவைத் தலைவர் தேர்தலை நடத்துகிறீர்கள் என்று கேள்வி கேட்கப்படுகிறது. (கரவொலி) என்னைப் பொறுத்தவரையில் அது எனக்கு முரண்பாடாகத் தெரிகிறது. இங்கே திரு. பி. வெங்கடசாமி அவர்கள் எழுப்பிய பிரச்னை பற்றி நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்தார்கள்.

(டாக்டர் ஹாண்டே எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்கள் கட்சித் தலைவர் பேசட்டும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நீங்கள் தீர்ப்புக் கொடுத்த பிறகு நான் பேச முடியாது. இப்போது மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் சொன்னார்கள். சுப்ரீம் கோர்ட்டிலிருந்து எந்த விதமான தகவலும் வரவில்லை என்று சொன்னார்கள். ஏற்றுக்கொள்கிறோம். சட்ட அமைச்சர் சொன்னதை ஏற்றுக்கொள்கிறோம். இதே சட்ட அமைச்சர் அவர்கள் முன்பு, ஏன் சபாநாயகர் தேர்தல் நடத்துவதற்குக் காலதாமதம் ஆகிறது என்று கேட்டதற்குச் சொன்னார்கள்—இதே மன்றத்தில் சொன்னார்கள்—ஹைக்கோர்ட்டில் வழக்கு இருக்கிறது. அதன் தீர்ப்பிற்காகக் காத்திருக்கிறோம். அதனால் தாமதம் ஆகிறது என்று சொன்னார்கள். இன்றைக்கு இப்படிப் பதில் சொல்கிறார்கள்.

திரு. துரைமுருகன் : சார், பாயின்ட் ஆப் ஆர்டர். . .

டாக்டர் எச். வி. ஹாண்டே : சார், நான் கூடியவரையில் ரொம்ப அமைதியாக என்னுடைய கருத்தைச் சொல்வதற்கு விரும்புகிறேன். என்னுடைய கருத்தை எடுத்துச் சொல்வதற்கு சபாநாயகர் அவர்கள் எனக்குப் பாதுகாப்புத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முன்பு அந்தக் காரணத்தைக் காட்டி

தாமதமாகிறது என்று சொன்னார்கள். அதே காரணத்தைக் காட்டி நாங்கள் மீண்டும் சொல்கிறோம். இப்போது மட்டும் அது சரியா என்று கேட்கிறோம். (குறுக்கீடு) அதோடு, இப்போது மதிப்பிற்குரிய புலவர் கோவிந்தன் அவர்கள் ஒருவர் தான் சபாநாயகர் பதவிக்கான ஒரே 'கேன்டிடேட்' என்று சொன்னார்கள். அவரைப்பற்றி ஏற்கனவே இந்த மன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் கூறியிருக்கிறார். புலவர் கோவிந்தன் அவர்கள் சில பட்டாக்களை வாங்கிக்கொண்டிருக்கிறார்கள் . . . .

(கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே, நீங்கள் உட்காருங்கள். உங்கள் கட்சித் தலைவர் பேசினால் நன்றாக இருக்கும்.

(பல உறுப்பினர்கள் எழுந்து நின்றுகொண்டிருந்தனர்)

THIRU R. PONNAPPA NADAR : All these things are out of order...............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். டாக்டர் ஹாண்டே, உட்காருங்கள்.

THIRU R. PONNAPPA NADAR : Sir, now that the House is seized of the matter and the whole thing is being explained, we shall not get infuriated and we shall be very careful. I think all these points need not be considered at this moment. Let us proceed with the business of the House and we must maintain the dignity and decorum of the House.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. பொன்னப்ப நாடார் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய பொறுப்பை அவர்கள் ஏற்றுக் கொண்டு, சரியான பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். திரு. வெங்கடசாமி அவர்கள் ஒன்றைக் கூறினார்கள். நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 211, 212 ஆகிய இரு பகுதிகளின்படி நீதித் துறை, பேரவைத் துறை ஒன்றுக்கொன்று சுதந்திரம் உடையது. ஒன்றின் சுதந்திரத்தில் இன்னொன்று தலையிடக் கூடாது. இந்த நாட்டின் தலைசிறந்த நீதி மன்றமாக சுப்ரீம் கோர்ட் இருந்தாலும், இந்த மன்றத்தின் சுதந்திரத்தில்

தலையிட முடியாது. உயர்நீதி மன்றத்தில் என்ன தீர்ப்பு அளிக்கப் பட்டிருந்தாலும், நான் ஏற்கனவே எடுத்துக்காட்டியது போல், அதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. இந்தப் பேரவையில் நடைபெறும் நடவடிக்கைகளுக்கு இந்தப் பேரவைதான் பொறுப்பு. இதிலே வெளியே இருக்கும் யாருக்கும் தலையிட உரிமை இல்லை என்பதை நான் பலமுறை தெரிவித்து இருக்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : திரு. வெங்கடசாமி அவர்கள் எழுப்பிய கேள்வி, இந்தச் சட்ட மன்றத்தின் அதிகாரத்தைப் பற்றி அல்ல. இந்தச் சட்ட மன்றம் முழு அதிகாரம் படைத்தது தான். முழு 'சாவர்ன்டி' உடையது தான். அதிலே ஆட்சேபணை இல்லை. அதேமாதிரி சுப்ரீம் கோர்ட் 'சாவர்ன்டி', உடையது தான். ஆனால் இதே சட்ட மன்றத்தில் 'அன்-கான்ஸ்டிட்யூஷனலாக' 'இல்-லீகலாக' காரியங்கள் நடப்பதற்கு உரிமை இருக்கிறதா, அதிகாரம் இருக்கிறதா, அதற்குத்தான் பதில் வேண்டும். இங்கே 'அன்-கான்ஸ்டிட்யூஷனலாக' 'இல்-லீகலாக' செய்யலாமா என்பது அவரது பாயின்ட்.

(திரு. சௌடி எஸ். சுந்த்ரபாரதி எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் பதில் சொல்கிறேன். ஒரு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு மற்றொரு உறுப்பினர் பதில் சொல்வது முறையல்ல.

THIRU SOWDI S. SUNDARA BHARATHI : Sir, I want to raise a point of order. I want to know whether the hon. Member is entitled to ask, whether that is constitutional or not, when the matter is *sub judice*. I do not think all those remarks could be uttered in this House.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்தச் சட்ட மன்றத்திற்கு அதிகாரம் இருக்கிறது என்பதைப்பற்றி யாரும் சந்தேகிக்கவில்லை. அந்தக் கருத்தில் தலையிட விரும்பவில்லை. அதிலே இரண்டு விதமான அபிப்பிராயத்திற்கு இடம் இல்லை. இந்த மன்றம் மிகவும் முக்கியமான அதிகாரங்களை உடையதுதான். ஆனால் எல்லாக் காரியங்களையும் 'அன்-கான்ஸ்டிட்யூஷனலாக'ச் செய்வதற்கு அதிகாரம் படைத்திருக்கிறதா என்பதுதான்

அவருடைய கேள்வி. இங்கே ஒரு 'அன்-கான்ஸ்டிட்யூஷனல்' நிகழ்ச்சி நடைபெற்று இருக்கிறது, சட்ட விரோதமான நிகழ்ச்சி நடைபெற்று இருக்கிறது . . .

(கூச்சல், குழப்பம்)

தாங்கள் இதற்கு ஒரு தீர்ப்பு தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இங்கே சட்ட விரோதமான நிகழ்ச்சியை நடத்தியவர் ஏற்கனவே இருந்த சபாநாயகரே தவிர, இந்த சபை அல்ல.

திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நகைச்சுவைப் பேச்சு சாயங்கால வேளைக்கு வைத்துக்கொள்ளலாம். இங்கே ஒரு முக்கியமான பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சாயங்கால வேளையில் நகைச்சுவையைக் கேட்பதற்கு நீங்கள் அவ்வளவு நிதானத்தில் இருக்க மாட்டீர்கள். (கரவொலி)

திரு. கே. ஏ. மதியழகன் : நீங்கள் நிதானம் தவறி நெடுநாள் ஆகிவிட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்தப் பேரவையில் நடைபெறும் நிகழ்ச்சிகள் 'கான்ஸ்டிட்யூஷனலா', 'அன்-கான்ஸ்டிட்யூஷனலா' என்பதைப்பற்றி முடிவு செய்யும் அதிகாரம் இந்த சட்ட மன்றத்திற்குத்தான் உண்டு. இந்த மன்றத்தில் தவறு நடந்தால், அதைத் திருத்துவதற்கும் இந்த மன்றத்திற்குத்தான் அதிகாரம் உண்டு. வேறு யாருக்கும் அதிகாரம் கிடையாது. இந்தப் பேரவையில் எவ்வளவு பெரிய தவறு நடந்தாலும், அதை இந்தப் பேரவைதான் திருத்த முடியும். நாம் ஏற்றுக்கொண்டிருக்கும் ஜனநாயக முறைப்படி, இங்கே கூடியிருக்கும் பிரதிநிதிகள் எடுக்கும் முடிவின்படிதான் இந்த நாட்டின் நிர்வாகம் நடைபெறுகிறது. இந்த நாட்டின் ஒவ்வொரு அசைவிற்கும் இந்தப் பேரவைதான் காரணமாக இருக்கிறது. ஆகவே, நான் வலியுறுத்த விரும்புவது . . . . .

[1973 ஆகஸ்ட் 3

திரு. கே. ஏ. மதியழகன் : 'அன்-கான்ஸ்டிட்யூஷனலாக' செய்வதற்கு இந்த மன்றத்திற்கு அதிகாரம் உண்டா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 'அன்-கான்ஸ்டிட்யூஷனலா' அல்லது 'கான்ஸ்டிட்யூஷனலா' என்பதைத் தீர்மானிப்பதற்கு இந்த அவைக்குத்தான் உரிமை இருக்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : 'அன்-கான்ஸ்டிட்யூஷனலாக' செய்வதற்கு உரிமை இருக்கிறதா இல்லையா என்று கேட்டால், கதைவசனம் பேசிக்கொண்டு இருக்கிறீர்கள். அதைக் கேட்க இந்த சபை கூடவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதைத் தான் திரும்பவும் சொல்கிறேன். உங்களுக்கு எது கான்ஸ்டிட்யூஷனல் என்று தோன்றுகிறதோ, அது மற்றவர்களுக்கு அன்கான்ஸ்டிட்யூஷனலாகத் தோன்றலாம். மற்றவர்களுக்கு எது அன்கான்ஸ்டிட்யூஷனலாகத் தோன்றுகிறதோ, அது உங்களுக்கு கான்ஸ்டிட்யூஷனலாகத் தெரியலாம். இந்தப் பேரவையிலே மெஜாரிடி எந்த முடிவை எடுக்கிறதோ, அந்த முடிவை ஏற்றுக்கொள்வது தான் ஜனநாயக மரபாக வைத்திருக்கிறோம். அது சரியா தவறா என்பதைத் தீர்மானிப்பது ஒரு வேளை தேர்தலாக இருக்கலாம் அல்லது ஒரு மக்கள் பேரவையாக இருக்கலாம். இந்தப் பேரவைக்குள் இந்தப் பேரவையினுடைய பெரும்பாலானவர்கள் என்ன முடிவு எடுக்கிறார்களோ, அதுதான் கான்ஸ்டிட்யூஷனல். காரணம், இந்தப் பேரவையே கான்ஸ்டிட்யூஷனின் கீழே இயங்குகிறது. நாம் எந்த ஒரு அரசியல் அமைப்பின் கீழே இயங்குகிறோமோ, அந்த அரசியல் அமைப்பே நமக்குத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது. இந்தப் பேரவையினுடைய பெரும்பாலானவர்கள் என்ன முடிவு எடுக்கிறார்களோ, அதுதான் ஜனநாயகம், அதுதான் கான்ஸ்டிட்யூனல் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : ஜனநாயகத்தைப்பற்றி நான் கேட்கவில்லை. அன்கான்ஸ்டிட்யூஷனலாக இந்தச் சட்டசபை இயங்கலாமா என்பதற்குத் தாங்கள் தீர்ப்பு சொல்லவேண்டும்.

1973 ஆகஸ்ட் 3]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதற்குத் தீர்ப்புச் சொல்வதற்குப் பேரவைத் தலைவருக்கு உரிமை கிடையாது. இந்தப் பேரவைக்குத்தான் உரிமை இருக்கிறது. எனவே இந்தப் பேரவையிலுள்ள பெரும்பாலானவர்களுடைய கருத்தின்படிதான் இந்தப் பேரவையின் முடிவு அமையும் என்பதில் எந்தவிதமான கருத்து வேறுபாடும் வருவதற்கு இடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்தச் சபைக்கு முழு அதிகாரம் இருக்கிறது என்ற ஒரு நிலையை ஏற்றுக்கொள்ளக்கூடியவன் நான். அதை ஏற்றுக்கொள்கிற நிலையில் நான் சொல்லிக்கொள்ள விரும்புவது என்னவென்றால், இப்பொழுது கான்ஸ்டிட்யூன்படிதான் இந்தச் சபையே உருவாக்கப்பட்டிருக்கிறது. கான்ஸ்டிட்யூஷனுக்குக் கட்டுப்பட்டுத்தான் நாம் இங்கே செயல்படுகிறோம். இந்தச் சபையிலே யாராவது ஒருவர் பேசும்பொழுது தமிழ் நாடு பிரிந்து போகவேண்டும் என்று பேசுகிறார்கள் என்று சொன்னால் அது அன்-கான்ஸ்டிட்யூஷனல். வெளியே யாராவது அப்படிப் பேசினால் உடனே பிராஸிகியூட் செய்யப்படுவார்கள். இங்கே அப்படிப் பேசினால் அந்தப் பேச்சை எடுத்துவிடவேண்டும் என்று சொல்லி விடுவோம். காரணம், இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் நாட்டினுடைய ஒற்றுமையைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.

அதே மாதிரி ஸ்பீக்கர் என்று சொல்லப்படுபவர், குறிப்பிட்ட ஒரு விஷயத்தைப் பொறுத்தவரையில், அவரை எப்படி ரிமூவ் பண்ணுவது என்பதைப்பற்றி கான்ஸ்டிட்யூஷனில் சில ப்ரொவிஷன்கள் இருக்கின்றன. அந்தப் ப்ரொவிஷன்ஸ் சரியாக அமல் நடத்தப்படவில்லை. என்பதுதான் என்னுடைய நிலை. அது உண்மையாக இருக்கலாம், இல்லாமல் இருக்கலாம். மற்றபடி இந்தச் சபைக்கு சபாநாயகரைத் தேர்ந்தெடுப்பதற்கோ அல்லது நீக்குவதற்கோ அதிகாரம் உண்டு. சபாநாயகரை நீக்குகிற பொழுது அவரை நீக்குவதற்கான சில கோட்பாடுகளை அரசியல் அமைப்புச் சட்டம் வகுத்திருக்கிறது. மற்ற விஷயங்களுக்கெல்லாம் நமக்கு முழு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்காக சபையின் விதிமுறைகளை வைத்திருக்கிறோம். என்னுடைய நிலைமை என்னவென்றால், அன்றைக்கு டிசம்பர் இரண்டாம் தேதி சபாநாயகர் நீக்கப்பட்டது அன்-கான்ஸ்டிட்யூஷனல் என்பதுதான்.

இந்தச் சபையில் தங்களுக்கு மெஜாரிட்டி இருக்கிறது என்ற காரணத்தினால், சூரியன் மேற்கே உதிக்கிறான் என்று தீர்மானம் நிறைவேற்றிவிட்டால், அப்படியே சூரியன் மேற்கே உதிக்க மாட்டான். பார்லிமெண்டு சுப்ரீம் என்று சொல்லக்கூடிய காலத்தில் பேசினார்கள். They can make a man out of woman. அது கூட சாத்தியமாகலாம். ஆனால், மெஜாரிட்டி இருக்கிறது என்ற காரணத்தினால் சூரியன் மேற்கே உதிக்கிறான் என்று தீர்மானம் நிறைவேற்றிவிட்டால், அந்தத் தீர்மானம் நடைமுறைக்கு வந்துவிட முடியாது. ஆகவே, அன்-கான்ஸ்டிட்யூஷனல் என்று சொல்லக்கூடிய விஷயம் ஹைகோர்ட்டிற்கு முன்னால் வாதாடப்பட்டது. ஹைகோர்ட்டு முடிவு நம்மைக் கட்டுப்படுத்தாது என்ற உங்களுடைய நிலைமையை நான் ஏற்றுக்கொள்கிறேன். இப்பொழுது அந்த விஷயம் சுப்ரீம் கோர்ட்டிற்கு முன்னால் இருக்கிறது. அங்குதான், அன்று நடந்தது கான்ஸ்டிட்யூஷனலா, இல்லையா என்ற இறுதி முடிவு ஏற்படலாம். நான் உண்மையாகவே சொல்கிறேன். இந்த விஷயத்தை ஸ்பீக்கர்ஸ் கான்பெரன்ஸ்-க்கு முன்னால் வைத்து இப்படி ஸ்பீக்கரை ரிமூவ் பண்ணக்கூடிய முறை சம்பந்தமாக ஒரு கோட்பாடு வகுப்பது அனுகூலமாக இருக்கும். தாங்களே இதைப்பற்றி லோக் சபா ஸ்பீக்கருக்கு எழுதுவது உதவிகரமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: (திரு. என். கணபதி, திரு. சௌடி சுந்தரபாரதி இருக்கைகளில் எழுந்து நின்றார்கள்) கொஞ்சம் உட்காருங்கள். நான் பதில் சொல்லிவிடுகிறேன். என்னுடைய சார்பில் நீங்கள் யாரும் பதில் சொல்லக் கூடாது. திரு. கே. டி. கே. தங்கமணி ஒன்றை ஒப்புக்கொண்டார்கள். அரசியல் அமைப்புச் சட்டத்தில் சில முறைகள் இருக்கின்றன, பேரவையின் நடவடிக்கைகளைப்பற்றி அரசியல் அமைப்புச் சட்டத்தில் சில முறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. பேரவை விதிகளில் சில முறைகள் இருக்கின்றன. இரண்டையும் கலந்து, இரண்டுக்கும் ஏற்ப, அந்த முறையில்தான் ஒரு முடிவு கொடுக்கப்பட்டிருக்கிறது. பேரவைத் தலைவர் பதவி நீக்கம் குறித்து, பேரவைத் தலைவர் தேர்தல் குறித்து, பேரவை எடுக்கிற ஒரு நடவடிக்கை குறித்து இந்தப் பேரவை தீர்மானிக்கிறது இந்தப் பேரவை முடிவு எடுக்கிறது என்று சொல்

கிறோம். அந்த 'டேர்ம்' 'வேக்'காக இருக்கிறது. பேரவை முடிவெடுக்கிறது என்றால், அது 'அப்ஸ்ட்ராக்ட் டேர்ம்'. பேரவையினுடைய எல்லா உறுப்பினர்களுடைய ஏகோபித்த கருத்து, ஏகோபித்த கருத்துக்குச் சமமாக மெஜாரிடியினருடைய கருத்து, பேரவையினுடைய பெரும்பாலான உறுப்பினர்களுடைய கருத்து என்ற முறையிலேதான் முடிவு எடுக்கப்படுகிறது. அந்த முறைகளிலே கொஞ்சம் வேகமாக இருக்கலாம். அந்த முறைகளில் சிறிது வேறுபாடு, மாறுபாடு இருக்கலாம். பேரவையினுடைய ஏகோபித்த முடிவு, அதற்குச் சமமான பெரும்பாலானவர்களுடைய முடிவு என்பதைத்தான் நம்முடைய அரசியல் அமைப்புச்சட்டம் வற்புறுத்தியிருக்கிறது என்பதைத்தான் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள் என்று கருதுகிறேன். இங்கே அவர் சொன்னார். சூரியன் மேற்கே உதிக்கிறான் என்று பெரும்பாலானவர்கள் சொன்னால், சூரியன் மேற்கே உதித்துவிடமாட்டான் என்றார். ஒரு காலத்தில் சூரியன் உதிக்கும் திசையைப் பெரும்பாலான மக்கள் பார்த்து கிழக்கு என்று அதற்குப் பெயர் வைத்தார்கள். பெரும்பாலானவர்கள் பார்த்து அதற்கு மேற்கு என்று பெயர் வைத்துவிட்டால் அது தான் ஜனநாயகம் (கரவொலி) அது தான் முடிவு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நேரத்தில் இந்த அவைக்கு 1973-ம் ஆண்டு மார்ச்சு திங்கள் 19-ம் தேதியன்று நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி நிரலை ஞாபகமூட்ட விரும்புகிறேன். நம்முடைய நண்பர் திரு. ஜேம்ஸ் அவர்கள், ஏன் இன்னும் சபாநாயகர் தேர்தல் நடத்தவில்லை என்று ஒரு உருக்கமான கேள்வியைக் கேட்டு, உடனே சபாநாயகர் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தி, அவர் ஒரு வாதத்தை எழுப்பிய பிறகு, தொடர்ந்து நடைபெற்ற வாதத்தின் தொடர்பாகத் தாங்கள் ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டீர்கள். தாங்கள் பேசியது—

"மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: என்னுடைய வேண்டுகோள் தயவு செய்து நீதிமன்றத்தை இதிலே சம்பந்தப்படுத்திப் பேச வேண்டாம். நீதிமன்றத்தின் முடிவு இந்தப் பேரவையை எந்த வகையிலும் கட்டுப்படுத்தாது. ஆகவே, தலைவர்

தேர்தலில் நீதிமன்றத்தைச் சுட்டிக்காட்டி அதை ஒரு பாயின்ட் ஆக 'கோட்' செய்வது சரியல்ல." என்று சொன்னீர்கள். உடனே திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் எழுந்து,

"தாங்கள் இந்தத் தீர்ப்பைக் கொடுத்த பிறகு எங்களுடைய வாதம் மேலும் கொஞ்சம் வலுவாகிறது" என்று சொன்னார்கள். நீதிமன்றத்தின் முடிவு இந்த அவையைக் கட்டுப்படுத்தாது என்ற தீர்ப்பைத் தாங்கள் கொடுத்தபிறகு, 'எங்களுடைய வாதம் மேலும் கொஞ்சம் வலுவாகிறது' என்று திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கூறினார்கள். மேலும் தங்கமணி அவர்கள் கூறினார்கள் :

"டிசம்பர் மாதம் 2-ம் தேதி ஸ்பீக்கர் என்ற பதவி இல்லாமல் போய்விட்டது" என்று ஒப்புக்கொண்டார்கள். மேலும் தொடர்ந்து கூறினார்கள் :

"இந்த விதியிலே இருப்பது போல் கவர்னரைக் கேட்டு ஒரு தேதியை நிச்சயம் செய்து ஸ்பீக்கரைத் தேர்ந்தெடுத்திருக்க வேண்டும். டிசம்பர் மாதம் முடிந்து சனவரி, பிப்ரவரி, மார்ச் மாதம் வந்து விட்டது. அதிலும் பட்ஜெட் விவாதம் நடக்கக் கூடிய நேரத்தில் ஸ்பீக்கர் இல்லாத அளவுக்கு நடத்தக்கூடிய சபை என்ற பெயர் இருக்கக்கூடாது என்ற முறையில் இப்போதாவது இந்தச் சபையின் தலைவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?" என்று கேட்டுவிட்டு, மேலும் சொன்னார்கள் :

"கோர்ட்டில் என்ன நடக்கிறது என்பதைப் பற்றி நான் குறிப்பிட விரும்பவில்லை. பொதுவாக கோர்ட்டை விட சட்ட மன்றந்தான் வலுவுள்ளது என்ற நிலையில் இருக்கக்கூடியவர்கள் நாங்கள். சாதாரணமாக பல விஷயங்களை இங்கே முடித்துக் கொள்ளவேண்டுமென்று கருதுபவர்கள் நாங்கள். நான்கு மாத காலமாக ஸ்பீக்கர் இல்லாத நிலை இருக்கிறது. அரசு சார்பாக உடனடியாகக் கவர்னர் அவர்களுக்குச் சொல்லி ஸ்பீக்கர் தேர்தலை நடத்த ஏற்பாடு செய்யவேண்டும். இல்லாவிட்டால் இந்த விதியானது மீறப்பட்டதாகும் என்ற முறையில் இது பாயிண்டு ஆப் ஆர்டருக்கு உரியதாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்."

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்பொழுது அவர்கள் பேசியது அதற்கு முற்றிலும் மாறாக இருக்கிறது என்பதைப்பற்றித்தான் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தச் சபை அன்கான்ஸ்டிட்யூஷனலாக நடந்துகொள்வதற்கு உரிமை இருக்கிறதா, இல்லையா என்பதைப்பற்றி தங்களிடம் ஒரு 'ஒபினியன்' கருத்து கேட்டார்கள். தீர்ப்பு அவர்கள் கேட்கவில்லை. இதை ஏன் நான் சொல்கிறேன் என்று கேட்டால், இந்த அவையிலே ஏதாவது ஒரு நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கும்பொழுது அந்த நிகழ்ச்சி கான்ஸ்டிட்யூஷனுக்கு விரோதமாக இருக்கிறதென்று அவர்கள் சுட்டிக்காட்டி, எனவே அப்படி கான்ஸ்டிட்யூஷனுக்கு விரோதமாக நடந்துகொள்வதற்கு இந்தச் சபைக்கு உரிமை இருக்கிறதா, இல்லையா என்று கேட்டிருந்தால் அது பொருத்தமாக இருக்கும். ஏற்கனவே நடந்துவிட்ட நிகழ்ச்சி அந்த நிகழ்ச்சி. அது தற்பொழுது கோர்ட்டில் சரியா, இல்லையா என்ற விவாதம் எழுப்பப்பட்டு, 'ஸப்ஜூடிஸ்' என்ற நிலையிலே இருக்கிறது. அதைப்பற்றிய தீர்ப்பை இங்கே கேட்க முடியாது. அதைப்பற்றி ஒரு 'ஒபினியனையும்' இங்கே கேட்கவும் முடியாது. அந்த உறுப்பினர் தங்களிடம் 'ஒபினியனைக்' கேட்டிருக்கிறார்கள். ஏற்கனவே தங்கமணி அவர்கள் இந்தச் சபை கான்ஸ்டிட்யூஷன்படி நடந்துகொள்வது பற்றி கருத்துக் களைச் சொல்லியிருக்கிறார்கள். எனவே அவை முன்பு எந்தவிதமான தீர்ப்பும் கேட்கக்கூடிய எந்த விதமான பிரச்னையும் இல்லை. தங்களுடைய கருத்தைமட்டும் கேட்பதற்கு இந்த விஷயத்தை எழுப்பியிருக்கிறார்கள் என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : என்னுடைய கருத்தைத் தெரிவிக்கக்கூடிய அளவுக்கு இந்த இடம் பெரிய இடமாக இருந்தாலும், திரு. மதியழகன் அவர்கள், ஒரு ஸீனியர் பாலிடிஷியன் எழுப்பியிருக்கிற பிரச்னைக்கு நான் கருத்துத் தெரிவிப்பது அவ்வளவு நன்றாக இருக்காது.

THIRU K. T. K. THANGAMANI : The Hon'ble Speaker can always give directions.

MR. DEPUTY SPEAKER : But he should not give criticisms or comments.

திரு. பாரதி அவர்கள், திரு. தங்கமணி அவர்கள் அரசியல் அமைப்புச் சட்டத்தைப் பற்றிக் கூறினார்கள் என்று சொன்னார்கள் இந்தப் பேரவை கான்ஸ்டிட்யூஷன்படி நடக்கிறதா, அன்கான்ஸ்டிட்

ஷனலாக நடக்கிறதா என்பதை யார் தீர்மானிப்பது என்பதைப் பற்றி நமது முன்னாள் பேரவைத் தலைவர் மாண்புமிகு மதியழகன் அவர்கள் கேட்டார்கள். அந்தக் கேள்விக்கு அரசியல் அமைப்புச் சட்டத்திலேயே பதில் இருக்கிறது. அதைப்பற்றித் தீர்மானிப்பதற்கு நம்முடைய குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் இருக்கிறது. இந்தப் பேரவை அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு விரோதமாக செயல்படுகிறது என்றால் இந்தப் பேரவையைக் கலைப்பதற்கு நம்முடைய மத்திய அரசின் சார்பில் நம்முடைய குடியரசுத் தலைவருக்கு முழு அதிகாரம் இருக்கிறது. அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் அவருக்கு அப்படிப்பட்ட அதிகாரம் இருக்கிறது. இந்தப் பேரவையில் உட்கார்ந்து நாம் கான்ஸ்டிட்யூஷனலாக இயங்குகிறோமா அல்லது அன்கான்ஸ்டிட்யூஷனலாக இயங்குகிறோமா என்று சொல்வதற்கு ஒரு 'அவுட்சைடு போர்ஸுக்கும்' அதிகாரம் இல்லை. அதைத்தான் இப்பொழுது நான் சொல்ல வந்தேன்.

(திருமதி த. ந. அனந்தநாயகி எழுந்திருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இவ்வளவு பெரிய பாயிண்டு ஆப் ஆர்டர்கள் போதாதா? இன்னும் எத்தனை விதமான பாயிண்டு ஆப் ஆர்டர்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: முன்னால் சபாநாயகர் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டுமென்று சொன்னவர்கள் இப்போது தள்ளிப்போட வேண்டுமென்று சொல்வது முற்றிலும் முரண்பாடாக இருக்கிறது என்று கனம் முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். முன்னால் நடைபெற்ற சபை நடவடிக்கைக் குறிப்பையும் அதற்கு ஆதாரம் காட்டினார்கள். அப்போது அந்த நிலை இருந்தது. இப்போது மாறுபடுகிறது. கருத்துக்கள் சூழ்நிலைக்கு ஏற்ப மாறுபடலாம். அதை யாரும் மறுக்க முடியாது. அப்படி மறுத்தால் அதை யாரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். இந்தச் சபைக்கு எல்லா அதிகாரமும் இருக்கிறது. அதை நாங்கள் மறுக்கவில்லை. ஆனால் சபை புரொசீஜரில் இர்ரெகுலாரிட்டீஸ் இருந்தால் அதை யாரும் கேட்க முடியாது. சபை நடவடிக்கையே சட்டத்திற்கு முரணாக நடைபெற்றால் அதைக் கேட்க நீதிமன்றத்திற்கு அதிகாரம் இருக்கிறது.

If there is irregularity in procedure, it cannot be called in question in a Court of Law. It is under some Article of the Constitution. I do not remember that Article.

MR. DEPUTY SPEAKER: It is Article 212.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: But here when you indulge in illegality, Courts can certainly come in.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அம்மையார் அவர்கள் கருத்து மாறுபடும் என்று சொன்னார்கள். அதை முதலமைச்சர் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் சொன்னார்கள். போன சட்டசபைக் கூட்டத்தில் அதாவது மார்ச் மாதக் கூட்டத்தில் அம்மையார் அவர்கள்தான் பேசினார்கள். "டிசம்பர் மாதத்திலிருந்து ஸ்பீக்கர் இல்லாத நிலை இருக்கிறது. நான்கு மாதங்களாக அப்படியே இருக்கிறது. அக்கவுண்ட்ஸ் கமிட்டி, எஸ்டிமேட்ஸ் கமிட்டிக்கு எல்லாம் தேர்தலை நடத்துவது முக்கியமாகத் தோன்றும்போது சபாநாயகர் தேர்தலுக்கு முக்கியம் அளிக்காமல் இருப்பது எப்படி என்று தெரியவில்லை. அது சரியானதல்ல என்று எதிர்க்கட்சியின் சார்பில் சொல்ல விரும்புகிறேன். சுப்ரீம் கோர்ட்டுக்கு இந்தப் பிரச்சனையை எடுத்துக் கொண்டு போகிறானா என்று பார்க்க வேண்டிய அவசியம் கிடையாது" என்று அம்மையார் அவர்கள் இந்தச் சட்டமன்றத்திலேயே பேசியிருக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: எப்படி சூழ்நிலை மாறுகிறதோ அதன்படி கருத்துக்களும் மாறும் என்று இப்போதுதான் கொஞ்ச நேரத்திற்கு முன்னால் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர்கள் அதற்காகத் தான் ஒரு முன்னுரை கொடுத்தார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: இந்த வழக்கு சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகிறதா இல்லையா என்று நாம் சொல்ல முடியாது . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சபாநாயகர் வழக்கு சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகலாம், போகாமலும் இருக்கலாம் என்று ஒரு அவுட்சைடர் பேசுவதுபோல் நீங்கள் பேசுவது சரியல்ல. நீங்கள் ஒரு அட்வகேட். அதனால் அதைப்பற்றி நீங்கள் சரியாகத் தெரிந்திருப்பீர்கள்.

As an advocate you must know that. The appellate right is there. Chances of going to the Supreme Court are there.

அரசியலமைப்பு சட்ட விதிகளில் என்ன சொல்லியிருக்கிறதென்றால்,

Article 211 says :—

" No discussion shall take place in the Legislature of a State with respect to the conduct of any Judge of the Supreme Court or of a High Court in the discharge of his duties.

இது முதலாவது அவர்களுக்குள்ள உரிமை. இரண்டாவது,

Article 212 (1) says:—

Courts not to inquire into proceedings of the Legislature.

" (1) The validity of any proceedings in the Legislature of a State shall not be called in question on the ground of any alleged irregularity of procedure. "

So the Court has got no right to question whether it is regular or irregular.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: That is what I also said.

MR. DEPUTY SPEAKER : அதிலே இன்னொன்று இருக்கிறது.

" (2) No officer or member of the Legislature of a State in whom powers are vested by or under the Constitution for regulating procedure or the conduct of business, or for maintaining order, in the Legislature shall be subject to the jurisdiction of any court in respect of the exercise by him of those powers. "

So, even officers of the Assembly cannot be called upon to answer in Court. Therefore it is clear that Courts have got no right. According to our Constitutional provisions, either the High Court or Supreme Court or any other Court have no right to interfere in the business of the House.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: That is only with reference to proceedings of the Legislative Assembly as to whether there is irregularity or not. That cannot be questioned in any Court of

Law. But when you do something illegal, there is an ocean of difference between irregularity and illegality. Courts can question . . . .

THIRU N. GANAPATHY : That depends on the opinion of each party.

MR. DEPUTY SPEAKER : My request to all hon. Members is this. Is this the proper time to raise such things when we are going to elect the Hon. Speaker?

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I say it is illegal. Unless and until we get the opinion from the Supreme Court, you cannot fill up the vacancy.

THIRU N. GANAPATHY : That is the opinion of the hon. Member. In the judgment of the High Court, there is no bar. It is fully constitutional and valid. The judgment of the High Court is in force. It has not been set aside.

MR. DEPUTY SPEAKER : As it is, the Chair will not accept the opinion of Thiru N. Ganapathy, always.

THIRU V. KRISHNAMOORTHI : Neither two women nor two lawyers agree.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I do not accept the first part of the statement.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உயர்நீதி மன்றத்திலே தீர்ப்பு சொல்லிவிட்டதாக திரு. கணபதி அவர்கள் சொன்னார்கள். அவர்கள் என்ன தீர்ப்பைச் சொல்லியிருந்தாலும் அதைப்பற்றி நமக்குக் கவலை இல்லை. இத்துடன் இந்த விவகாரம் முடிகிறது. அடுத்தது பேரவைத் தலைவர் தேர்தல்.

THIRU B. VENKATASWAMY : Sir, since my reasonable request has failed to receive your consideration, myself and members of our Party regretfully abstain from the Speaker's election.

(Then Thiru B. Venkataswamy followed by members of his party staged a walk-out).

THIRU R. PONNAPPA NADAR : Sir, I would like to make the following statement :—

1969-ம் ஆண்டு புலவர் கா. கோவிந்தன் அவர்கள் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு தொடர்ந்து 1971-ம் ஆண்டு வரை அப்பதவிப் பொறுப்பில் அவர் நீடித்து வந்தார். 1971-ம் ஆண்டு பொதுத் தேர்தலின்போதும் மீண்டும் புலவர் கா. கோவிந்தன் சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டும் கூட அவருக்குச் சபாநாயகர் பதவியோ அல்லது வேறு எந்தவிதமான முக்கிய பொறுப்புக்களோ அளிக்கப்படவில்லை. சபாநாயகராக இருந்த காலத்தில் புலவர் கோவிந்தன் தமது பதவியைப் பயன்படுத்தி ஏழை மக்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த புறம்போக்கு நிலங்களைத் தம்முடைய பெயருக்கும், தமது குடும்பத்தினர் பெயருக்கும் பட்டா செய்து கொண்டார்.

(மாண்புமிகு முதலமைச்சரவர்கள் எழுந்தார்கள்.)

சொந்த லாபங்களுக்காகப் பதவியைப் பயன்படுத்தி புறம்போக்கு நிலங்களைத் தமது குடும்பத்தின் பெயரில் பட்டா போட்டுக்கொண்ட அதே புலவர் கா. கோவிந்தன் மீண்டும் சபாநாயகர் பதவி வகிப்பதற்குத் தகுதியற்றவர் என்று சட்டமன்ற காங்கிரஸ் கட்சி கருதுவதால் அவர் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்படுவதை வன்மையாகக் கண்டிக்கும் வகையில், இந்தத் தேர்தலை நாங்கள் பகிஷ்கரிக்கிறோம் என்று சொல்லி, வெளிநடப்பு செய்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : *இந்தத் தேர்தலை விரும்பவில்லை என்றால் நீங்கள் வேறு ஒருவரை நிறுத்தியிருக்கலாம் அல்லவா ; இதை என்னுடைய வேண்டுகோளாகத்தான் சொல்கிறேன் நீங்கள் போட்டியிட்டிருக்காலமே என்று.*

THIRU R. PONNAPPA NADAR : It is our look-out and responsibility. It is not for you to dictate to us.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : *முதலமைச்சரவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதையாவது கேட்டுவிட்டுப் போகலாமே.*

THIRU R. PONNAPPA NADAR : I am not here to take lessons from the Hon'ble Chief Minister. We cannot be bullied like this.

(ஒரே நேரத்தில் பல குரல்கள்)

MR. DEPUTY SPEAKER : I have only made a request.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : *தலைவரவர்களே, திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் மற்றவர்களும் வெளிநடப்பு செய்வதைப்பற்றி நான் எதுவும் சொல்ல விரும்பவில்லை. அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். புலவர் கோவிந்தன் அவர்கள், அவர்களுடைய பெயரில் எந்தப் பட்டா நிலத்தையும் பெற்றுக்கொள்ளவில்லை. அவர்களுடைய குடும்பத்தில் உள்ள சிலர் பட்டா நிலம் பெற்றிருந்தார்கள். அதைப்போல் வேறு சில எம்.எல்.ஏ.க்களும் பட்டா நிலம் பெற்றிருந்தார்கள். முதலமைச்சர் என்ற முறையிலும் கட்சித் தலைவர் என்ற முறையிலும் அப்படிப் பட்டா நிலம் பெற்றவர்கள்—அரசாங்க நிலத்தைப் பெற்றவர்கள் உடனடியாகத் திருப்பிக்கொடுத்துவிடவேண்டுமென்று நான் ஒரு அறிக்கை வெளியிட்டேன். அதன்படி அரசாங்க நிலத்தைப் பெற்றவர்கள் திருப்பிக் கொடுத்துவிட்டார்கள். இதிலே வேடிக்கை என்னவென்றால் பட்டா பெற்று பல ஆண்டுகளாகியும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள்—காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்களும் எம்.எல்.சி.க்களும் கூட பெற்றிருக்கிறார்கள்—இன்னும் திருப்பித் தரவில்லை.*

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : *முதலமைச்சரவர்களுடைய விளக்கத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. எனக்குக் கிடைத்த தகவல் எல்லாம் புலவர் கோவிந்தன் அவர்கள் இன்னும் அந்த நிலத்தை அரசாங்கத்திற்குத் திருப்பிக்கொடுக்கவில்லை என்பதுதான். காங்கிரஸ்காரர்கள்தான் இன்னும் திருப்பிக்கொடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டைப் பட்டவர்த்தனமாகக் கூறினார்கள். அப்படி யாராவது கொடுக்காமல் இருந்தால் அவர்கள் மீது வேண்டிய நடவடிக்கை எடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று (மாண்புமிகு முதலமைச்சரவர்கள் எழுந்தார்கள்) தெரிவித்து, நாங்கள் மேலும் இந்த சபாநாயகர் தேர்தலில் கலந்துகொள்ள விரும்பாததால் வெளிநடப்பு செய்கிறோம். (அமைப்புக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளியேறினார்கள்).*

[1973 ஆகஸ்ட் 3

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இராமன் நாயர் முதல் கக்கன் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வரை யாரும் பட்டா பெற்ற நிலத்தைத் திருப்பித் தரவில்லை. புலவர் கோவிந்தன் திருப்பித் தந்து விட்டார், திருப்பித் தந்துவிட்டார் என்று சொல்லிக்கொள் கிறேன்.

(டாக்டர் எச். வி. ஹாண்டே எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். உங்கள் கட்சித் தலைவர் இருக்கிறார். தலைவர் பேசட்டும்.

(இ) அதிகாரிகள் உட்காரக்கூடிய இடத்தில் சட்டமேலவை உறுப்பினர் உட்காரலாமா என்பது குறித்து

திரு. எம். சுரேந்திரன்: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். இங்கே சட்டசபையில் 'அஃபிஷியல்ஸ்' இருக்கக்கூடிய இடத்தில் ஒரு எம்.எல்.சி. இருக்கலாமா? அப்படி இருப்பது சரியா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் ஒரு கருத்தைச் சொல்லும்போது தயவுசெய்து கொஞ்சம் யோசித்துச் சொல்லுங்கள். அவர்கள் மேலவைத் துணைத் தலைவர். அப்படிச் சொல்வது "Not in good taste".

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்தச் சபையைப் பொறுத்த வரையில் யார் எங்கே உட்கார வேண்டும் என்பதைப் பற்றி சபைத் தலைவர்தான் முடிவு செய்ய வேண்டும். சமீபத்தில் போலீஸ் அதிகாரிகள்கூட வருகிறார்கள். அதிகாரிகள் உட்கார வேண்டிய இடத்தில் அதிகாரிகள் இல்லாதவர்கள்கூட உட்காரு கிறார்கள். எம்.எல்.சி. உட்கார வேண்டிய இடத்தில் இன்றைக்கு உட்காரவில்லை. நாளைக்கு எம்.எல்.ஏ. உட்காரவேண்டிய இடத்தில் வேறு யார் வேண்டுமானாலும் வந்து உட்காரலாம். அதற்குத்தான் யார் எங்கே உட்காருவது என்கிற பிரச்சினையே இங்கே எழுப்பப் பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்றைக்கு இட நெருக்கடியின் காரணமாகத்தான் இந்த நிலை ஏற்பட்டது.

1973 ஆகஸ்ட் 3]

திரு. க. உரொ. எட்மண்ட்: மேலே பாக்ஸ் காலியாகத்தான் இருக்கிறது. மேலே போய் உட்காருவதில் என்ன ஆட்சேபனை இருக்கிறது?

திரு. நா. வீராசாமி: மாண்புமிகு உறுப்பினர் பேரவைத் துணைத் தலைவராக இருந்தவர். மேலே காலியாக இருப்பது கவர்னர்ஸ் பாக்ஸ்.

திரு. முனு ஆதி: கண்ணெதிரே இடம் காலியாக இருக்கிற போது இட நெருக்கடி என்கிற சமாதானத்தை மட்டும் சொல்ல வேண்டாம்.

THIRU G. R. EDMUND: The balcony is still vacant and how is it said that there is no space?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நமக்குத் தெரிகிற அளவு எதிராளிக்கும் தெரியலாம் என்பதை மனதில் வைத்து முனு ஆதி அவர்கள் பேசவேண்டும். அது யாருக்காவது ரிசர்வ் ஆகியிருக்கலாம்.

THIRU G. R. EDMUND: For the Deputy Chairman of the Legislative Council, anybody can be evicted.

திரு. எம். சுரேந்திரன்: யார் யார் எங்கே உட்காரவேண்டும் என்கிற நியதி உண்டா இல்லையா? நாங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். அதற்காகத்தான் கேட்கிறோம்.

(திரு. எட்மண்ட் எழுந்திருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்போது பேரவைத் தலைவர் தேர்தல். வேறு எதையும் நான் இப்போது அனுமதிக்கப் போவதில்லை.

2. (ஆ) முன்னாள் பேரவைத் தலைவர் தமது பதவி நீக்கம் குறித்து தொடர்ந்துள்ள வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் இருக்கும்போது பேரவைத் தலைவர் தேர்தலை நடத்துவது முறைதானா என்பது குறித்து.

திரு. கே. ஏ. மதியழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் என்ற பெயரில் இப்போது நடைபெற இருக்கிற நிகழ்ச்சியையொட்டி நான் கருத்துக்களைச் சொல்ல தாங்கள் என்னை அனுமதிக்க வேண்டுகிறேன். கடந்த

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1973 ஆகஸ்ட் 3

ஆண்டு டிசம்பர் மாதம் 2 ஆம் தேதி பேரவைத் தலைவர் பதவி நீக்கம் என்ற பெயரால் இந்த மாமன்றத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் அரசியல் சட்டத்திற்கு முரணானவை, சட்ட விரோதமானவை, நமது சட்டமன்ற விதிகளுக்குப் புறம்பானவை. அது பற்றி சென்னை உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பு பிழையுடையது. அரசியல் சட்டத்திற்கு விரோதமான, சட்ட விரோதமான, சட்டமன்ற விதிகளுக்குப் புறம்பான தீர்ப்பை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் அரசியல் சட்டத்திற்கு முரணான, சட்ட விரோதமான, சட்டமன்ற விதிகளுக்குப் புறம்பான நிகழ்ச்சியில் நாங்கள் பங்கு கொள்ள மறுக்கிறோம் என்று கூறி, இந்த நிகழ்ச்சியை நாங்கள் பகிஷ்கரிக்கிறோம் என்று சொல்லி வெளிநடப்புச் செய்கிறோம்.

(அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெறுவதாக உள்ள பேரவைத் தலைவர் தேர்தலை இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நாங்கள் புறக்கணிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்களது இந்த முடிவுக்குத் தகுந்த, போதுமான காரணங்களும் இருக்கின்றன.

முறைப்படி முன்னர் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த பேரவைத் தலைவர் திரு. மதியழகன் அவர்களை முறைகேடாகவும், சட்டப் பேரவை விதிகளுக்குப் புறம்பாகவும் 1972 டிசம்பர் 2 ஆம் தேதி ஆளுங்கட்சியினர் தங்களின் துணையோடு நீக்கிவிட்டனர். இதனைக் கண்டித்து பேரவையின் அப்போதைய கூட்டத்தொடர் முழுவதையும் நாங்கள் புறக்கணித்தோம்.

காலியாகிவிட்டதாக, சட்டவிரோதமாக அறிவிக்கப்பட்டிருக்கின்ற ஒரு பதவிக்கு, காலியாகிவிட்டதாக நாங்கள் ஏற்றுக் கொள்ளாத ஒரு பதவிக்கு, இப்போது தேர்தல் நடக்கப்போவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது சட்டவிரோதமானதும், முறைகேடானதுமாகும் என்று நாங்கள் கருதுகிறோம். எனவே, இத் தேர்தலில் நாங்கள் கலந்துகொள்ளாமல் அதனைப் புறக்கணித்து வெளிநடப்புச் செய்கிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

1973 ஆகஸ்ட் 3]

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

திரு. கே. டி. கே. தங்கமணி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப்பேரவை விதிகளின் கீழ்—நான்காவது விதியின் 2 வது துணைவிதியின் கீழ் நடைபெறுகின்ற இந்தத் தேர்தலை இந்திய கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பில் நாங்கள் பகிஷ்கரிக்கிறோம். அதற்கான காரணங்களை உங்கள் மத்தியில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் 2-ம் தேதி அரசியல் சட்டத்திற்கு விரோதமாக அன்றைக்கிருந்த சபாநாயகர் நீக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அவர் அன்றைக்கு நீக்கப்பட்டதில் இருந்து இந்தச் சபை சபாநாயகர் இல்லாமலேயே தொடர்ந்து நடந்து வந்திருக்கிறது. ஆகவே, சபாநாயகர் வேண்டுமென்ற விஷயத்தை நாங்கள் இடையிலே வற்புறுத்தியிருக்கிறோம். அவரையே சபாநாயகராகத் தேர்ந்தெடுத்து அவரையே ராஜிநாமாச் செய்யச்சொன்னாலும், அல்லது அவரை முறையாகப் பதவியில் இருந்து நீக்கியும் இருக்கலாம். அப்படி அல்ல டிசம்பர் 2 ஆம் தேதி தமிழக சட்டமன்றத்தில் நடந்த நிகழ்ச்சி பற்றி இந்தியா பூராவிலும் உள்ளவர்கள் அறிவார்கள். சட்ட விரோதமான முறையில் அன்றைக்கு எப்படி இரு சபைகள் இங்கே நடந்திருக்கின்றன என்பதைப் பற்றி பி.பி.சி.யில் கூடத் தெரிவித்தார்கள். (குறுக்கீடு.)

பி.பி.சி. என்பது ருஷ்யாவில் இல்லை. லண்டனில் உள்ளது—பிரிட்டிஷ் ப்ராட்காஸ்டிங் கார்ப்பரேஷன். இங்கே 2 ஆம் தேதி நடந்த நிகழ்ச்சிகளைப்பற்றி பி.பி.சி.-யின் ஒலிபரப்பைக் காலையில் கேட்டவர்கள் தெரிந்து இருக்கலாம். இந்தியாவின் தென்கோடியில் உள்ள ஒரு மாநிலம்—அதற்குப் பெயர் தமிழ்நாடு—அந்தத் தமிழ்நாட்டில் 2 சட்டமன்றம் நடந்திருக்கிறது—அவர்களும் நமது பார்லிமெண்டரி முறைப்படிதான் அரசியல் சட்டத்தை வகுத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படி இருக்கக் கூடிய ஒரு மன்றத்தில் இப்படி நடந்திருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். முதலமைச்சர் தெரிந்துகொள்ள வேண்டும் என்று குறுக்கிட்ட காரணத்தினால் இதை விளக்கிச் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதுவும் இப்போது சபாநாயகராக யாரைத் தேர்ந்தெடுக்க இருக்கிறார்கள் என்பதையும்

நாம் கவனித்தாக வேண்டியிருக்கிறது. இன்றைய காலையில் பஞ்சாப் மாநில சபாநாயகர் பேரில் கமிஷன் குற்றச்சாட்டு சொல்லியிருக்கிறது. அவரையே ராஜிநாமாச் செய்யச் சொல்வது என்று இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினர் முடிவு செய்திருப்பதாகப் பத்திரிகையில் வந்திருக்கிறது. அதுபோல, இன்றைக்கு சபாநாயகரைத் தேர்ந்தெடுத்து நாளைக்கே இவரை ராஜிநாமாச் செய்யச் சொல்ல வேண்டிய நிலை உருவாகாதிருக்க வேண்டும் என்பதையும் நாம் கவனித்தாகவேண்டும்.

இன்றைக்கு இதைவிட பல முக்கியமான சம்பவங்கள் நடந்திருக்கின்றன. குறிப்பாக நேற்று 11 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி விவாதம் இன்றைக்கு மிக முக்கியமாக இங்கே வந்திருக்கவேண்டும்.

திரு. துரைமுருகன் : சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். சபாநாயகர் தேர்தலை இன்று பகிஷ்கரிப்பவர்கள், நாளை அவர் சபாநாயகராக இருக்கும்போது இங்கே வருவார்களா ?

MR. DEPUTY SPEAKER : I am not allowing any point of order.

THIRU K. T. K. THANGAMANI : Well, we will move for the removal of the Speaker at the opportune moment, and I will make it clear to the hon. Member. When we protest against the election of a particular person, we as a party will act in a constitutional manner for his removal. (Interruption). Because he wants to know, I had to say it.

திரு. துரைமுருகன் : என்ன செய்யப்போகிறார்கள் என்றுதான் கேட்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : அரசியல் சட்டப்படிக்குச் செய்வோம்.

(Interruption). Sir, why this running commentary? I want some protection, Sir.

Sir, on these three grounds, we as a party are not participating in this election of Speaker and as a mark of protest we are walking out.

(The members of the Communist Party of India then walked out.)

3. பேரவைத் தலைவர் தேர்தலும் அவருக்குப் பாராட்டுரைகளும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்பொழுது பேரவைத் தலைவர் தேர்தல். அரசியல் அமைப்பின் 178-வது பிரிவின் கீழ் பேரவைத் தலைவரின் தேர்தல் நடக்கவிருக்கிறது. அப்பதவிக்கு, வேட்பாளரின் நியமனத் தாள் சட்டப் பேரவை 4 (2) விதியின்படி செயலாளரிடம் சேர்க்கப்பட்டுள்ளது. சட்டப் பேரவையின் 4 (4) விதியின்கீழ் பேரவைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப்பெற்றவர், முன்மொழிந்தவர், வழிமொழிந்தவர் ஆகியவர்களின் பெயரை நான் முதலாவதாக இந்தப் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

நியமனம் செய்யப்பெற்றவர்—1. புலவர் கா. கோவிந்தன் அவர்கள். **முன்மொழிந்தவர்**—மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் மு. கருணாநிதி அவர்கள். **வழிமொழிந்தவர்**—மாண்புமிகு கல்வி-சுற்றுலா அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள்.

பேரவைத் தலைவர் பதவிக்கு புலவர் கா. கோவிந்தன் அவர்கள் மட்டும் நியமனம் செய்யப் பெற்றிருப்பதால், அவர் போட்டியின்றி ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் (பலத்த ஆரவாரம்) என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன்.

இப்பொழுது பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள புலவர் கோவிந்தன் அவர்களைப் பற்றிக் குறிப்பிடுகையில், அவர் இந்தப் பதவிக்குத் திரும்ப வருவது குறித்து நான் என்னுடைய மகிழ்ச்சியையும் பாராட்டையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர் தமிழிலே சிறந்த புலமை பெற்றவர். ஏறத்தாழ 50 நூல்களுக்கு மேல் எழுதியிருப்பவர். மிக இயலாத காரியம் என்று பல்லாண்டு காலமாகக் கருதப்பட்ட கால்டுவெல் ஒப்பிலக்கணத்தைத் தமிழிலே மொழி பெயர்த்துக் காட்டியவர். எளிய இனிய நடையில், கால்டுவெல் எழுதிய

'Comparative Grammar of Dravidian Languages'

என்ற அந்த நூலை, மிக அருமையாக அவர்கள் மொழி பெயர்த்திருக்கிறார்கள். அதை எம்.ஏ. வகுப்பில் படிக்கின்ற போதுகூட எனக்குக் கிடைத்தது. மிக எளிமையோடு, இனிமையோடு,

எல்லோரோடும் உரையாடுகின்ற பண்பு படைத்தவர் நம்முடைய மதிப்பிற்குரிய புலவர் அவர்கள். அவர் இந்தப் பேரவையின் தலைவராக வருவது நம்முடைய தமிழகத்திற்கு மிகப் பெரிய பெருமை என்று கருதுகிறேன்.

சங்ககாலத்தில் தமிழகத்தில் புலவர்களுக்கு இருந்த சிறப்பு மீண்டும் கொஞ்சம் கொஞ்சமாக வருகிறது என்பதை நாம் பல் வேறு நிகழ்ச்சிகளின் வாயிலாக அறிகின்றோம். மிக முக்கியத் துவம் வாய்ந்த, இந்த நாட்டை ஆளுகின்ற நிர்வாகப் பொறுப்பைக் கண்காணிக்கின்ற இந்தப் பேரவைக்கு, தமிழ் கற்ற ஒரு மூதறிஞர், தமிழ்ப் பேரறிவாளர் தலைவராக வருவது குறித்து நான் என்னுடைய மகிழ்ச்சியையும் வாழ்த்துக்களையும் பாராட்டுக் களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த டிசம்பர் 2 . . . டிசம்பர் 2 . . (சிரிப்பு) . . . அப்படி பிரச்சினைக்குரிய டிசம்பர் 2-ம் நாளிலிருந்து இந்த மாதம் 3 ஆம் நாள்வரை இந்தப் பேரவையின் மிகச் சோதனையான காலம் என்றுகூடப் பத்திரிகைகள் எல்லாம் வர்ணித்திருக்கின்ற அப்படிப்பட்ட காலத்தில், பேரவையின் துணைத் தலைவரான எனக்கு இப்பேரவையை நடத்தும் பொறுப்பு தரப்பட்டது. அந்தப் பொறுப்பை, மிகப் பெரிய பொறுப்பை, நான் என்னால் இயன்ற அளவுக்கு நிறைவேற்றியிருக்கிறேன் என்ற மன நிம்மதி யுடன் இந்தப் பொறுப்பிலிருந்து, இந்த 'ஸ்பீக்கர் இன்-சார்ஜ்' என்ற பொறுப்பிலிருந்து நான் விலகிக்கொள்ளக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. இந்த இளம் வயதில் தாங்க முடியாத ஒரு பெரிய சுமையை என் மேல் சுமத்தி, 'காண்ட்ரவர் சீஸ்' மிக அதிகமாக இருந்த நேரத்தில் நான் என்னுடைய கடமையைச் செய்திருக்கிறேன். நான் கடமையாற்ற உதவியாக இருந்த ஆளும் கட்சித் தலைவர்களுக்கும் எதிர்க்கட்சியிலே இருக்கும் எல்லாத் தலைவர்களுக்கும் போட்டி விவாதங்கள் வந்த நேரத்தில், அப்படிப்பட்ட நேரங்களில் ஜனநாயக அரசியலைக் கற்றுக்கொள்ளுகின்ற மாணவன் என்ற முறையில் கற்றுக்கொள்ள வாய்ப்பளித்தமைக்கு அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் நம்முடைய அசெம்பிளியினுடைய முன்னாள் செயலாளர் திரு. கா. து. நடராசன் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவிக்காமல் இருப்பது பொருத்தமில்லையென்று

கருதுகிறேன். அவருடைய அயராத உழைப்பாலும், அறிவாற்ற லாலும் பேரவை மிகச் சிறந்த முறையில் பணியாற்றியது. அவரைப் போல் புதிய செயலாளரும் மிக நல்ல முறையில் பணி யாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல், பேரவை அலுவலாளர்கள் அத்தனைபேரும் பேரவையினுடைய நடவடிக்கைகளுக்காக, திறமைக்கும் மீறிய அளவில், அவர்களுடைய சக்திக்கும் மீறிய அளவில் இந்தப் பேரவையினுடைய பணிகளுக்கு நல்ல ஒத்துழைப்பும் ஊக்கமும் தந்தார்கள்.

இந்த இடைக்காலத்தில் ஒத்துழைத்த அத்தனை பேர்களுக்கும் —எதிர்க்கட்சித் தலைவர்கள், அல்லது ஆளும் கட்சியிலே உள்ள சில பேர்களுக்கு ஏதாவது சில நேரங்களில், நான் தீர்ப்பளிக் கின்ற நேரத்தில், மன வருத்தம் ஏற்பட்டிருக்கக் கூடும். அவற்றிற்கு அனுபவமற்ற இளமைதான் காரணமாக இருக்கும் என்ற அளவில் அவர்கள் அவைகளை மறந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். இந்த வாய்ப்பினைத் தந்து உதவிய அனைவருக்கும்— என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு இந்தப் பேரவை புதிய ஒரு தலைவர், ஏற்கனவே இருந்த தலைவர், அவருடைய பொறுப்பில் பத்திரமாக, பாதுகாப்பாக இருக்கும் என்ற முறை யில் நான் புதிய தலைவருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பொழுது புதிய பேரவைத் தலைவர் அவர்களை, பேரவை முன்னவரும், பார்வார்ட் பிளாக் தலைவர் திரு. ஏ. ஆர். பெருமாள் அவர்களும் அழைத்துவந்து அவர் இருக்கையில் அமரச் செய் வார்கள். பேரவைத் தலைவர் இருக்கையில் அமருவதற்கு வரும் நேரத்தில் எல்லா உறுப்பினர்களும் எழுந்து நின்று அவர் அமர்ந்தபின் எல்லோரும் தங்கள் தங்கள் இடத்தில் அமர வேண்டு மாறு கேட்டுக்கொள்கிறேன்.

(பேரவை முன்னவர் மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ் செழியன் அவர்களும் திரு. ஏ. ஆர். பெருமாள் அவர்களும் மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களை அழைத்துவந்து, அவர் இருக்கையில் அமரச் செய்தார்கள்—உறுப்பினர்கள் பலத்த ஆரவாரம் செய்தனர்).

[1973 ஆகஸ்ட் 3

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் ஒருமனதாக மீண்டும் இப் பேரவையினுடைய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது கண்டு இந்தப் பேரவை தன்னுடைய பெரு மகிழ்ச்சியையும் பெருமிதத்தையும் தெரிவித்துக்கொள்கிறது. தாங்கள் ஏற்கனவே இந்தப் பேரவையினுடைய உறுப்பினராக எதிர்க்கட்சி வரிசையிலே இருந்து பேரவையினுடைய நடவடிக்கைகளில் எல்லாம் நன்கு கலந்துகொண்டு, பேரவையினுடைய முறைகளையெல்லாம் செவ்வனே அறிந்திருக்கிறீர்கள். அதற்குப் பிறகு இந்தப் பேரவையினுடைய துணைத் தலைவர் பொறுப்பையும் ஏற்று இரண்டு ஆண்டு காலம் இருந்து, பிறகு பேரவையினுடைய தலைவர் பொறுப்பை ஏற்றுத் திறம்பட நடத்தி வந்திருக்கிறீர்கள். தாங்கள் மீண்டும் இப்பேரவையினுடைய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இப்பேரவையினை நடத்திச்செல்கின்ற பொறுப்பினை ஏற்றுக் கொண்டிருப்பது எங்களுக்கெல்லாம் மட்டற்ற மகிழ்ச்சி அளிக்கிறது என்பதைப் பேரவையின் முன்னவர் என்ற முறையில் தெரிவித்து, எங்களுடைய வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் போற்றுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தாங்கள் பேரவையினுடைய நடவடிக்கைகளை எல்லாம் நன்கு அறிந்திருக்கிற காரணத்தினாலும் ஏற்கனவே பேரவையினுடைய தலைவராக இருந்து, திறம்பட, அமைதியாக, அடக்கமாக, சிறப்புற இங்கே நடத்தி வந்திருக்கிறீர்கள். எனவே, தொடர்ந்து மரபு காப்பாற்றப்படுகிற வகையில் இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு தமிழகத்தினுடைய சிறப்பான மரபுகளைக் காப்பாற்றி, நல்ல பண்பாடுகளை வகுத்து, வளர்த்து, பிற மாநிலங்கள் எடுத்துக் காட்டுகிற அளவுக்கு வளர்ந்து வந்திருப்பதை நாம் அறிவோம். அதற்கு இங்கே வீற்றிருந்தவர்கள் தலைமை உதவி புரிந்து வந்தது. தாங்கள் வீற்றிருக்கிற இடத்திலே வீற்றிருந்த பல்வேறு தலைவர்கள் அப்படிப்பட்ட சிறந்த மரபுகளைக் காப்பாற்றி வந்திருக்கிறார்கள் என்பதை அகில இந்தியாவிலே பல்வேறு நிகழ்ச்சிகளை உற்று நோக்கும்போது நாம் தெளிவாக அறியலாம்.

துணைத் தலைவர் அவர்கள் தம்முடைய பாராட்டில் தெரிவித்த மாதிரி, தாங்கள் தமிழில் நல்ல புலமை கொண்டு, சிறந்த நூல்கள் எழுதி, தமிழுக்காக சிறப்புறப் பணியாற்றி வந்திருக்கிறீர்கள்.

1973 ஆகஸ்ட் 3] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இந்த அவையைத் தமிழில் சிறப்புற நடத்த வேண்டுமென்ற தணியா அவா இருந்துவருகிற நேரத்தில், தமிழில் முழுப் புலமை பெற்றிருக்கிற தாங்கள் இந்தப் பேரவையினுடைய • தலைவராக ஆகியிருப்பது இந்தப் பேரவையை மேன்மேலும் முழுக்க முழுக்க தமிழிலே நடத்திச் செல்லவும் இந்தப் பேரவையினுடைய நடவடிக்கை எதிலும், எதுவும் தமிழிலே நடைபெறவேண்டுமென்ற ஆவலைப் பூர்த்தி செய்யப் பெரிதும் உதவி புரியும் என்பது திண்ணம்.

இந்தப் பேரவையினுடைய மரபுகள் எல்லாம் கெடாத வகையிலேயும் இந்தப் பேரவையினுடைய விதிகள் எல்லாம், இது வரையில் நடந்த நிகழ்ச்சிகள் எல்லாம், அத்தனையும் மிகச் சிறப்பாக நடந்து வந்திருக்கின்றன என்பதையும் இந்த வாய்ப்பிலே நாம் எடுத்துச் சொல்லலாம். ஆகவே, நல்ல முடிவுகளை எடுக்கவேண்டுமென்ற எண்ணம் உடையவர்களாக, எடுக்க வேண்டியவைகளை முறைப்படி, சட்டப்படி, விதிகளுக்குக் குந்தகம் ஏற்படாத வகையில் எடுத்து அவை நடைபெற வேண்டுமென்று விரும்புகிற நேரத்தில், அதற்குத் தங்களுடைய பணியும் பெரிதும் துணை புரிந்திருக்கிறது என்பதையும் இந்த வாய்ப்பிலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தாங்கள் மேலை நாடுகளுக்கும் கீழை நாடுகளுக்கும் சென்று அந்தந்த நாட்டினுடைய பாராளுமன்ற சட்டமன்ற நடவடிக்கைகளை எல்லாம் கூர்ந்து கவனித்து வந்திருக்கிறீர்கள். அந்த அனுபவமும் சிறப்பும் இப்பேரவையை நடத்திச் செல்ல உறு துணையாக இருக்கும் என்ற நம்பிக்கை எங்களுக்கெல்லாம் உண்டு. அப்படிப் பல்வேறு அனுபவமும் பெற்ற தாங்கள் இந்தப் பேரவையை நடத்துவதிலே இந்தப் பேரவை தனது ஆதரவைத் தரும் என்பது திண்ணம்.

இந்தப் பேரவையினுடைய தலைவராகத் தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டபொழுது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகத் தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வெற்றிபெற்று வந்திருந்தாலும், பேரவைத் தலைவராக வந்தபிறகு கட்சிக்கு அப்பாற்பட்டவராக இருந்து எல்லாக் கட்சிகளுக்கும் அப்பாற்பட்டு, தலைவருக்குரிய இலக்கணத்தோடு நடந்து வந்திருக்கிறீர்கள். இனியும் நடந்து வருவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1973 ஆகஸ்ட் 3

ஆகவே எங்கள் கட்சியைச் சேர்ந்த ஒருவர் என்று நீங்கள் கருதாமல் இந்த அவையிலே எல்லாக் கட்சியினரையும் அரவணைத்துச்சென்று இந்த அவையினுடைய மரபுகளையும் விதிமுறைகளையும் காப்பாற்றுகின்ற பெரும் பொறுப்பைத் தாங்கள் தாங்கிக் கொண்டிருக்கிறீர்கள். தங்களை வாழ்த்திப் பாராட்டிப் போற்ற நாங்கள் எல்லாம் கடமைப்பட்டு இருக்கிறோம். சங்க காலத்திலே கரிகால் சோழன் தீர்ப்பளிக்க வரும்பொழுது, குழுமியிருக்கின்றவர்கள்—அவன் இளைஞனாக இருந்த காரணத்தினால்—தீர்ப்பைப்பற்றி என்ன கருதுவார்களோ என்ற காரணத்தினால், நரைமுடி தரித்து வந்து அமர்ந்தான் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். தாங்கள் அப்படிப்பட்ட முயற்சி செய்யவேண்டிய அவசியமே இல்லாமல், தாங்கள் இயற்கையாகவே முடிநரைத்து விளங்க, தங்களுடைய தீர்ப்புக்களை இந்த மன்றம் மனமுவந்து ஏற்றுக்கொண்டு மரபு முறைகளைக் காப்பாற்றும் என்ற முறையிலே நாங்கள் எல்லாம் எங்களுடைய முழு ஒத்துழைப்பையும் தருவோம் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்ற டிசம்பர் மாதம் 2 ஆம் தேதியிலிருந்து மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் திரு. சீனிவாசன் அவர்களும் இந்தச் சபையின் பொறுப்புக்களை ஏற்று மிகத் திறம்பட இந்த அவையை நடத்தி வந்திருக்கிறார்கள்; அவர்களையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அவை முன்னவர் என்ற முறையிலே, இந்த அவையிலே சிலபல காலங்களிலே ஏற்பட்ட நெருக்கடியான கட்டங்களிலே அவர்கள் இந்த அவையினுடைய விதிமுறைகளையும் மரபுகளையும் காப்பாற்றி, மரபுகளின் வழி கெடாத அளவிலும் இந்த அவையின் மதிப்பையும் பெருமையையும் நிலை நாட்டுகின்ற முறையிலும் இந்த அவையை ஒழுங்குற நடத்திச் சென்று ஒரு சிறிதுகூட விதிமுறைகளிலோ மரபுகளிலோ மாறுபாடு இல்லாத அளவிலே தாற்காலிகத் தலைவராக இருந்து சிறப்புற நடத்தி வந்திருக்கிறார்கள். அவரையும் பாராட்டுவதற்கு நாம் எல்லாம் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்கள் ஒழுங்குற இந்த அவையை நடத்திவந்து தங்களிடம் ஒப்படைத்து இருக்கிறார்கள். இந்த இடைக்காலத்திலே இந்தப் பேரவையை சிறப்புற நடத்திப் பெருமை சேர்த்த துணைத் தலைவர் திரு. சீனிவாசன் அவர்களுக்கு நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

1973 ஆகஸ்ட் 3] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

மீண்டும் தங்களுக்கு நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொண்டு, தாங்கள் இந்த அவை மீண்டும் சிறப்புற நடைபெறவும், மற்ற மாநிலங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக, ஜனநாயகத்திற்கு நல்ல முன்னோடியாக, ஜனநாயக முறைகளையும், ஜனநாயகப் பண்புகளையும் காப்பாற்றிடவும் தங்கள் தலைமை சிறப்புற அமையும் என்ற நம்பிக்கையோடு தங்களுக்கு என்னுடைய உளங்கனிந்த நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ஏ. ஆர். பெருமாள் :** இந்த அவையினால் ஒருமனதாகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுத் தாங்கள் அமர்ந்திருக்கிறீர்கள். ஏற்கனவே இரண்டாண்டுக் காலம் இந்தப் பேரவையின் தலைமைப் பொறுப்பையேற்று இந்த மாமன்றத்தினுடைய தலைவர், சட்டப் பேரவையின் தலைவர் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கு இலக்கணமாகத் தாங்கள் திகழ்கிறீர்கள். இந்த அவையிலே சில நேரங்களிலே கருத்து மாறுபாடுகள் ஏற்பட்டாலும், ஒரு சட்டப் பேரவையின் தலைவர் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்ற முறைப்படி தாங்கள் நடந்து அதன்மூலம் இந்த மாமன்றம் பெரும் பயனைப் பெற்றிருக்கிறது. அப்படிப்பட்ட தாங்கள் மீண்டும் இந்தப் பேரவையின் தலைவராக இன்று தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது சாலப் பொருத்தமாகும். அறிவு மிக்கவர், அனுபவம் மிக்கவர், ஆற்றல் மிக்கவர், தமிழிலே பல நூல்களைக் கண்டவர், பல நூல்களைக் கணித்தவர், அது மாத்திரமல்ல, தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது தமிழ் மக்களுக்கு, தமிழ் அரசுக்கு மட்டுமல்ல, தமிழுக்கே பெருமையாகக் கருதுகிறோம். தாங்கள் ஏகமனதாகச் சட்டப் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதை இதயப்பூர்வமாகப் பாராட்டி, ஏற்கெனவே கல்வி அமைச்சர் அவர்கள் எடுத்துக்காட்டியதைப் போல தாங்கள் நடுநிலைமை தவறாமல், கட்சி சார்பு இல்லாமல். சட்ட மன்ற மரபுகள் சீர்குலைந்து விடாமல் பாதுகாத்து, நேர்மையாகவும் நீதியாகவும் தலைமைப் பொறுப்பை ஏற்று நடத்துவீர்கள் என்ற நம்பிக்கையோடு தங்களைப் பாராட்டி அமர்கிறேன். வணக்கம்.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் : பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் இந்தப் பெரும் பொறுப்புக்குத் தகுதியானவர்கள் என்பதை நான் மாத்திரம் அல்ல, இந்த

நாடே நன்கு அறியும். தங்களுடைய பெருமையையும் புகழையும் நான் குறிப்பிடுவது மிகப் பொருத்தம் என்றாலும், அதைவிட இன்னொன்றைக் குறிப்பிடுவதில்தான் எனக்கு மகிழ்ச்சி அதிகமாக இருக்கிறது. ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு என்ற ஒரு பழமொழி தமிழிலே உண்டு. அம்மாதிரி வாடியிருந்த கொக்குக்கு வாய்ப்பளிக்காமல் ஒருமனதாக திராவிட முன்னேற்றக் கழகம் பேரவைக்குத் தலைவரைத் தேர்ந்தெடுத்திருப்பது, தலைவருக்கு மட்டுமல்ல, கட்சியிலே ஒருமனதாகத் தங்களைத் தேர்ந்தெடுத்தவர்களின் பெருமையையும் வெளிப்படுத்துகிறது. திராவிட முன்னேற்றக் கழகம் பலவித சோதனைகளிலும் தன்னுடைய கட்டுப்பாட்டை அசைக்கமுடியாதபடி காப்பாற்றிக் கொண்டு வந்திருக்கிறது. இன்று அந்தக் கட்டுப்பாட்டை மேலும் வெளிப்படுத்தக் கூடிய முறையிலே தங்களைத் தலைவராக இந்தப் பேரவைக்குத் தேர்ந்தெடுத்து அறிவித்திருப்பதிலும் திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய அசைக்கமுடியாத கட்டுப்பாட்டை மீண்டும் நிலைநாட்டியிருக்கிறது. எனவே தங்களுக்கும் அந்தக் கட்சிக்கும், இந்தப் பேரவைக்கும் நன்றி கூறி நான் விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. மணலி சி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் இந்த மாமன்றத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதற்காகத் தமிழ் நாடு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் தங்களுக்கு என் நல்வாழ்த்துக்களைக் கூறி சில சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு சபையிலே நடைபெற்றிருக்கக் கூடிய விஷயங்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு பார்க்கக்கூடிய காலத்திலே ஓட்டுரிமை ஜனநாயகத்திலே இன்னும் சிறப்பாக விளங்க வேண்டுமானால், ஆளுங்கட்சிதான் பிரதானமாக இருந்தாலும், அரசாங்கம் அதாவது ஆளுங்கட்சி செய்யக்கூடிய காரியங்களிலே கூடுமான வரையிலே எதிர்க்கட்சிகளைக் கலந்து ஆலோசித்துக்கொண்டு காரியங்களைச் செய்வதுதான் ஜனநாயகத்திற்கு நல்லது என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம் ஆகும். நீங்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பு நடந்த விஷயங்கள் எல்லாம் விரும்பத்தக்கதல்ல என்றாலும் அவையெல்லாம் சிந்திக்கக்கூடிய விஷயங்கள் என்பதைத்

தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் சபாநாயகர் பதவி மிகப் பொறுப்பு, கௌரவம் வாய்ந்த ஒரு பதவியாகும். அந்தப் பதவியிலே ஒருவரை அமர்த்தும்பொழுது எந்த அளவிற்கு பொறுப்பும், மரியாதையும் ஆளுங்கட்சிக்கு உண்டு என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தாங்கள் இன்றைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள். வரக்கூடிய காலத்திலே தாங்கள் பெருமையோடு ஜனநாயகத்திற்கு இழுக்கு வராதபடி நடத்துகின்ற பாங்கினைப் பொறுத்துத்தான் இந்த சர்க்காருடைய நடவடிக்கைகளும், அதற்கு எதிராக எதிர்க்கட்சிக் காரர்களுடைய நடவடிக்கைகளும் பயன்பட்டு எதிர்காலத்திலே மிகச் சிறப்பான ஆட்சி தமிழகத்திலே உருவாவதற்கு வழியேற்படும் என்ற முறையிலே சொல்லக்கூடிய அப்படிப்பட்ட ஒரு பொறுப்பான பதவியிலே தாங்கள் இருக்கிறீர்கள். மந்திரி சபைதான் பொறுப்பாக இருந்தாலும், சபாநாயகர் எவ்வளவு தூரம், அரசாங்கத்தினுடைய நடவடிக்கைகள், அதன் தொடர்பாக எதிர்க் கட்சிகள் சொல்கிற குற்றங்குறைகள், தவறுகளைத் திருத்திக்கொள்ளக்கூடிய முறையிலே தெரிவிக்கப் படுகின்ற மாற்றங்கள் இவையெல்லாம் சிறப்பாக அமையக்கூடிய முறையில் நடத்திச் செல்கிறாரோ அந்த அளவிற்கு ஜனநாயகம் சிறப்பாக, செழிப்பாகச் செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக ஜனநாயகத்திலே எதிர்க் கட்சிகள் சிறிதாக இருந்தாலும், ஆளுங்கட்சி பெரிதாக இருந்தாலும் இரண்டும் இரண்டு கண்களைப் போன்று—ஏனென்றால் கண்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை, ஒன்று பாதிக்கப்பட்டால் இன்னொன்றும் பாதிக்கப்படும்—செயல்படுகின்ற நிலையை உருவாக்க வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாமன்றத்திலே இருக்கிற எதிர்க் கட்சியினரின் குரல்கள் எந்த அளவிற்குப் பாதிக்கப்படுகின்றனவோ அந்த அளவிற்கு ஆளுங் கட்சிக்கும் ஊனம் ஏற்படும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தாங்கள் நியாயமான கோரிக்கைகள், குரல்கள் இவற்றை எதிரொலிப்பதற்கு எதிர்க் கட்சிக்காரர்களுக்கு தாராளமாக—சபையின் கௌரவத்தைக் கருதி, நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டு—எங்களுக்குச் சந்தர்ப்பம் கொடுத்து நல்ல முறையிலே செயல்படுவீர்கள் என்று நம்புகிறேன். அதேபோன்று, இன்றைக்கு சர்க்கார் தரப்பில் நியாயமான காரியங்கள்

[திரு. மணலி சி. கந்தசாமி] [1973 ஆகஸ்ட் 3

நடந்திருந்தாலும்கூட அல்லது நியாயமாக நடத்தக்கூடிய நல்ல திட்டங்களாகயிருந்தாலும் அத்தனையையும் ஏதாவது குறை சொல்ல வேண்டுமென்பது எதிர்க் கட்சிகளின் கடமை என்று திரித்துப் பார்க்கும் கண்ணோட்டத்தைக் கட்டுப்படுத்தியாக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அடிப்படையிலே மிகச் சிறப்பாகப் புதிய தீர்ப்புகள், புதிய வழிமுறைகள், சம்பிரதாயங்கள் ஏற்பட்டன என்று சொல்லத்தக்க விதத்திலே தமிழக சட்டசபை ஒரு புதிய சகாப்தத்தை நல்லமுறையில் உருவாக்கியிருக்கிறது என்று சொல்லும் வகையிலே உங்கள் பதவிக் காலம் இருக்க வேண்டும் என்று தமிழ் நாடு கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தெரிவித்து, என்னுடைய பாராட்டைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இ. எஸ். தியாகராசன் : மாண்புமிகு தலைவரவர்களே, தாங்கள் இன்றைக்குப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப் பட்டதற்காகத் தமிழரசுக் கழகத்தின் சார்பிலேயும், அதன் தலைவர் திரு. ம. பொ. சி. அவர்களின் சார்பிலேயும், தமிழக மக்களின் சார்பிலேயும் என்னுடைய பாராட்டைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். உங்களைப் பாராட்டிக் கூறிய துணைத் தலைவரவர்கள் புலவர் திரு. கோவிந்தன் அவர்கள் இன்றைக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். இன்றைக்கு ஒரு புலவர் சட்டப் பேரவையின் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்றால் அது தமிழுக்கும், தமிழகத்திற்கும் ஒப்பற்ற பெருமை தருவதாகும். அதுமட்டுமல்ல, புலவர் கோவிந்தன் அவர்கள் தமிழ் மொழியில் சுமார் 50 நூல்களை எழுதியிருக்கிறார்கள். இதிலிருந்து அவர்களுக்குத் தமிழ் மீது இருக்கும் பற்றும், தமிழினத்திற்கு அவர்கள் செய்திருக்கும் தொண்டும் விளங்குகிறது. அந்த நல்ல நூல்கள் தமிழுக்கும், தமிழினத்தின் வளர்ச்சிக்கும் எவ்வளவு தூரம் வளர்ச்சி தந்துகொண்டிருக்கிறது என்பதற்காக உங்களை உண்மையிலேயே பாராட்டுவதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

தாங்கள் இன்றைக்குப் பெரும்பொறுப்பை ஏற்றிருக்கின்றீர்கள். இது உங்களுக்குப் புதிதல்ல. நீங்கள் முன்பே இரண்டாண்டுக் காலம் துணைத் தலைவராகவும், இரண்டாண்டுக் காலம்

1973 ஆகஸ்ட் 3] [திரு. இ. எஸ். தியாகராசன்]

தலைவராகவும் பணியாற்றியிருக்கின்றீர்கள். அந்த நேரத்திலே தமிழகம் போற்றும் வகையிலே, இந்தியாவிலே இருக்கின்ற எல்லா சட்ட மன்றங்களிலும் நடைபெறும் நிகழ்ச்சிகளை யெல்லாம் போற்றும் முறையிலே நல்ல நல்ல தீர்ப்புகளை வழங்கி யிருக்கிறீர்கள். அவைகள் இன்றைக்கு நாடு போற்றும் நல்ல முறையிலே சட்டமன்ற நூல்களில் இருக்கின்றன என்பதைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். தாங்கள் ஏற்றிருக்கும் இந்தப் பெரும் பொறுப்பின் விளைவாகத் தமிழகம் மேலும் வளர்ச்சி பெறும். எங்கள் தலைவர் திரு. ம. பொ. சி. அவர்கள் அடிக்கடி கூறுவதைப் போன்று, தமிழினம் தமிழ் மொழிக்காகப் பாடுபடும் என்று கூறுவதைப்போன்று, தாங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நிறுத்தப்பட்டுப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றீர்கள். இதன்மூலம் தமிழ் மணம் மேலும் மேலும் இந்த மன்றத்தில் கமழும் என்று கூறி உங்களை வருக வருக என்று வரவேற்று அமர்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த அவையின் நல்ல உள்ளங்களின் வாழ்த்தோடு, வரவேற்போடு தாங்கள் மீண்டும் இந்தப் பதவியிலே அமர்த்தப்பட்டிருக்கின்றீர்கள். தங்களுடைய குண நலன், தமிழாற்றல், அறிவு இவைகளைப்பற்றி அவையின் முன்னவர் நாவலர் அவர்களும், கட்சிகளினுடைய தலைவர்களும், பேரவையின் துணைத் தலைவரவர்களும் மிகச் சிறப்பாக எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். நேரமில்லாத காரணத்தினால் அவர்கள் எடுத்துக் கூறியது குறைவுதான் எனினும், தங்களைத் தமிழ்கூறும் நல்லுலகம் வெகு நன்றாக அறியும். தாங்கள் இன்றைக்குப் பதவியேற்ற சூழ்நிலை எப்படிப்பட்ட வகையிலே அமைந்தது என்பதைத் தமிழ் நாடு கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் பெரியவர் மணலி அவர்கள் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய பேரவைக்கென்று தமிழ் நாடு தொன்றுதொட்டு கடைப்பிடித்து வந்த பொது அரசியல் பாரம்பரியம், பண்பாடு மிகுந்த இலக்கணம் ஒன்று உண்டு. எதிர்க்கட்சி—ஆளுங்கட்சி, அல்லது எதிர்க்கட்சிகள்—ஆளுங்கட்சி என்ற வகையிலே இதே மன்றத்திலே அண்ணா அவர்களின் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க் கட்சியாக அமர்ந்திருந்த நேரத்திலேயும், நாவலர் அவர்களுடைய தலைமையிலே திராவிட

முன்னேற்றக் கழகம் எதிர்க் கட்சியாக அமர்ந்திருந்த நேரத்திலேயும், இன்றைக்குள்ள நிலைமைகளைவிட எவ்வளவோ சூடான நிலைமைகளையெல்லாம் எவ்வளவு நாகரிகமாக அரசியல் பண்பாட்டோடு சமாளித்து, எதிர்க் கட்சிகள் எப்படி இயங்க வேண்டுமென்பதற்கான முன்னோடியாக அண்ணா தலைமையிலும், நாவலர் தலைமையிலும் திராவிட முன்னேற்றக் கழகம் இங்கே வழிகாட்டியிருக்கிறது என்பதைத் தமிழகத்தின் கடந்த 10 அல்லது 15 ஆண்டுக்கால அரசியல் வரலாற்றை ஒரு முறை திரும்பப் படிப்பவர்கள் வெகு எளிதாக உணர இயலும் என்றே நான் கருதுகிறேன்.

தங்களைத் தலைவராக இன்றைக்குத் தேர்ந்தெடுத்து, நாங்களும், தோழமைக் கட்சிகளும், தமிழ் நாடு கம்யூனிஸ்ட் கட்சியும் வரவேற்பு தெரிவித்திருக்கிறோம். எப்பொழுது சபாநாயகர் தேர்தல் நடைபெறும், ஏன் இன்னும் ஒத்திப்போட்டுக் கொண்டே போகின்றீர்கள், சபாநாயகரைத் தேர்ந்தெடுப்பதிலே உங்களுக்கு ஏதாவது கஷ்டம் இருக்கிறதா என்றெல்லாம் ஆயிரமாயிரம் கேள்விகளைக் கேட்டு, சபாநாயகர் தேர்தலை விரைவிலே நடத்த வேண்டுமென்று ஆளுங்கட்சியை முடுக்கி விட்டுக்கொண்டே இருந்தவர்கள், சபாநாயகர் தேர்தலை வைத்ததும் இந்தத் தேர்தலிலே நாங்கள் கலந்துகொள்ள மாட்டோம், அதைப் புறக்கணிக்கிறோம் என்று கூறியிருக்கிறார்கள். இன்றைக்கு நடைபெற்றது தேர்தல்கூட அல்ல, நேற்றைக்குத் தங்களுக்கு எந்தப் போட்டியும் இல்லாத காரணத்தால் தாங்கள் பதவியேற்கும் நாள் இந்த நாள் என்ற வகையிலே, ஒரு சபாநாயகர் பதவியேற்கிற நேரத்தில் எதிர்க் கட்சிகள் எவ்வளவு பொறுப்போடு நடந்து கொள்ள வேண்டுமென்றெல்லாம் இலக்கணம் இருந்தாலும் சில விரும்பத் தகாத சூழ்நிலை இந்த அவையிலே ஏற்பட்டு விட்டதற்காக நாம் அனைவரும் சேர்ந்து ஒருவருக்கொருவர் வருத்தம் தெரிவித்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்று கருதுகிறேன்.

தங்களுடைய அருங்குணங்களை நன்கறிந்த நாங்கள் இன்றைக்கு ஏற்பட்ட ஒருசில சம்பவங்களை மனத்திலே வைத்துக் கொள்ள மாட்டீர்கள் என்றும், அவைகளையெல்லாம் மறந்துவிட்டு, நாளை தொடங்கி நடைபெறும் சட்டப் பேரவைக் கூட்டங்களில்,

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண நன்னயம் செய்து விடல்" என்கின்ற குறளுக்குப் பதவுரையோ, பொழிப்புரையோ தங்களுக்கு நான் சொல்ல வேண்டியதில்லை. அதன் ஆழமான உண்மைகளை அறிந்திருக்கிற தாங்கள் அவ்வாறு நடந்து கொள்வீர்கள் என்று நாங்கள் திடமாக நம்புகிறோம்.

இன்றைய சபாநாயகர் தேர்தலைப் புறக்கணித்ததற்காக சில கட்சிகள் சில காரணங்களைச் சொன்னாலும், நான் மனமுடைந்து போகின்ற ஒரு காரணம், மிகப் பெரும் அரசியல் அனுபவம் பெற்றதும். முதுபெருந்தலைவர் காமராஜரின் தலைமையிலே இயங்குவதுமான பழைய காங்கிரஸ் கட்சி தீர்மான வடிவிலே இந்த அவையில் தாங்கள் தலைவர் பதவியேற்கும் நிகழ்ச்சிகளைப் புறக்கணிக்க வேண்டுமென்பதற்காக விடுத்த அந்த அறிக்கை உள்ளபடியே வேதனை அளிக்கத் தக்கதாக இருந்தது. பட்டா நிலங்களைத் தாங்கள் பெற்றதாகவும், அவைகளை இன்னும் தாங்கள் திருப்பிக் கொடுக்காததாகவும், ஆகவே, தாங்கள் இந்தப் பதவிக்குத் தகுதியற்றவர்கள் என்ற முறையிலே ஒரு பெரும்பழியைத் தீர்மான வடிவிலே காமராஜர் தலைமையிலே உள்ள காங்கிரஸ் கட்சி நிறைவேற்றியிருப்பதுதான் உள்ளபடியே வேதனைக்குரிய ஒன்றாகும். நிலமில்லாதவர்களுக்கு, வசதியற்றவர்களுக்கு புறம்போக்கு நிலங்களைப் பட்டா செய்து கொடுப்பதில் தவறில்லை. அந்த வகையிலே பலருக்குப் பட்டா செய்து கொடுக்கப்பட்டதென்றாலும், தாங்கள் தங்களுடைய பெயரில் எந்த நிலத்தையும் பட்டா பெறவில்லை என்றே நான் நன்கறிவேன். யாரும் தாங்கள் பட்டா பெற்றதாக இதுவரையிலும் நிரூபித்ததும் கிடையாது. அப்படி நடைபெறவுமில்லை. முறையான ஒன்றை, தாங்கள் தங்கள் பெயரால் பட்டா செய்து கொள்ளாவிட்டாலும் தங்கள் குடும்பத்திலேயுள்ள சிலர் சில அரசு நிலங்களைப் பட்டா செய்து கொண்டார்கள் என்று கேள்வியுற்ற நானும், நாவலர் அவர்களும் தங்களுக்கு எடுத்துச் சொன்ன மாத்திரத்தில் உடனடியாகத் தங்கள் குடும்பத்தாரையெல்லாம் அழைத்து அவைகளையெல்லாம் மீண்டும் சர்க்காருக்குத் திருப்பித் தந்துவிடுங்கள் என்று சொன்ன தங்கள் பெருந்தன்மையை நான் பாராட்டுகின்றேன். ஆளும் கட்சியின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

தாங்கள் அதைக் கொடுத்து விட்டீர்களா, இல்லையா—அதுவும் இப்போது இல்லை, 1971-ம் ஆண்டுக்கு முன்பே தாங்கள் அதைத் திருப்பிக் கொடுத்து விட்டீர்களா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ளாமல் ஒரு பெரிய கட்சி—புதிய கட்சிகள் பற்றி நான் கவலைப்படவில்லை. அவர்கள் எதையும் சொல்வார்கள்—அதை ஆராய்ந்து பாராமல் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி இன்றைய நிகழ்ச்சிக்கு ஒரு களங்கம் கற்பித்தது உள்ளபடியே வருந்தத் தக்க செயலாகும்.

ஆனால் அந்தப் பெரிய கட்சியிலுள்ள பலர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் எம்.எல்.சி. க்கள் பெயரால், சில அமைச்சர்கள், உறுப்பினர்கள் பெயரால் தியாகி மானியம் என்றும், தியாகி மானியம் அல்லாத அளவிலும் தங்களுடைய மனைவி மக்கள் மீது பல நூற்றுக்கணக்கான ஏக்கராக்களை எழுதி வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்தச் சட்ட மன்றத்தில் நான் புள்ளி விவரத்தோடு படித்துக் காட்டியிருக்கிறேன்.

காங்கிரஸ் கட்சித் தலைவர் பொன்னப்ப நாடார் அவர்கள் விவரம் சொல்ல வேண்டுமென்று சொன்னார்கள். சொன்ன விவரத்திற்கே இவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. அந்த அளவுக்குப் பழைய காங்கிரஸ் கட்சியில் உள்ளவர்கள் அந்தக் காலத்தில் ஆட்சியைப் பயன்படுத்திக் கொண்டு நிலங்களைப் பட்டா செய்து கொண்டிருக்கிறார்கள். அது பெரிய கதை. ஆனால் அதனை மறந்துவிட்டு மயிலை ஏதோ பழிப்பது போல், குயிலை ஏதோ குறை கூறுவது போல் தங்களை இன்றைக்குக் குறை கூறி இந்த நிகழ்ச்சிக்கு மாசு கற்பிக்க முன்வந்தது வேடிக்கையானது. வினோதமானது, விசித்திரமானது, நாமெல்லாம் சேர்ந்து விலா நோகச் சிரிக்க வேண்டிய ஒன்றாகும்.

அது மாத்திரமல்ல; இன்றைக்கு நம்முடைய காங்கிரஸ் கட்சியின் தலைவர் பொன்னப்ப நாடார் அவர்கள் திடீரென்று எழுந்து இந்த அவையில் இவைகளை எல்லாம் பற்றிப் பேசக் கூடாது என்று நண்பர் ஹாண்டே அவர்களைத் தடுத்தார்கள். ஹாண்டே அவர்களும் இதே குறையைத்தான் சொன்னார்கள். இங்கு எழுந்து தங்களுடைய பதவி ஏற்புக்கு முன்பு 'பட்டாக்களைப் பெற்றுத் திருப்பித் தராத புலவர் கோவிந்தன் சபாநாயகர் ஆகலாமா?' என்று ஹாண்டே கேட்டபோது பொன்னப்ப நாடார் அவர்கள் 'அதையெல்லாம் இங்கே பேசக் கூடாது' என்று சொன்னார்கள். பிறகுதான் இதுவும் புரிந்தது.

நாங்கள் தீர்மானம் போட்டிருக்கும்போது அதை நாங்கள் பிறகு சொல்ல வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருக்கும்போது முந்திக்கொண்டு ஹாண்டே சொல்லிவிட்டாரே என்ற காரணத்தால்தான் சீறிப் பாய்ந்தது. இந்தச் சபையின் மரபைக் காப்பாற்ற வேண்டிய அக்கறையோடு அல்ல என்பது பிறகுதான் புரிந்தது. எதை ஹாண்டே சொல்லக்கூடாது என்று பொன்னப்ப நாடார் சொன்னாரோ அதையே பொன்னப்ப நாடார் சொல்லிவிட்டு வெளியேறி இருக்கிறார். தீர்மானம் பத்திரிகையோடு நிற்கவில்லை, இந்த அவையிலும் சொல்லி விட்டார்கள். ஆகவேதான் விளக்கம் தேவைப்படுகிறது.

ஆகவே, இன்றைக்கு உள்ள எதிர்ப்பு எதிர்க்கட்சிக்கும் ஆளும் கட்சிக்கும் இடையே உள்ள எதிர்ப்பல்ல. எல்லா எதிர்க்கட்சிக்களுக்குள்ளேயே போட்டி. யார் வேகமாக ஆளும் கட்சியை எதிர்க்கிறார்கள், யார் கடுமையாக எதிர்க்கிறார்கள் என்ற போட்டி பலமாக ஏற்பட்டிருக்கிறது. அதைத்தான் நிதர்சனமாகக் காண்கிறோம். யார் கடுமையாக எதிர்க்கிறார்கள் என்ற அளவுக்கு அவரவர்கள் போட்டி போட்டுக்கொள்வதற்கு இளித்தவாயர்கள் நாங்கள்தான் அகப்பட்டோம். யார் பெரிய கல்லை எறிவது, 'நீ சின்னக் கல்லை எறிந்தால், நான் அதை விடப் பெரிய கல்லை எறிகிறேன்' என்ற போட்டாப் போட்டி அவர்களிடையே இருக்கிறது என்பதைத் தமிழக மக்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட போட்டிகளிடையே இந்தியாவிலேயே தமிழ்நாடு ஒன்றுதான் அமைதியான மாநிலமாக இருக்கிறது என்று போற்றிப் புகழத்தக்க அளவுக்கு இருக்கிறோம். இந்தியாவிலேயே தமிழ்நாடு ஒன்றுதான் உணவுப் பிரச்சினையில் தன்னிறைவு பெற்றதாக இருக்கிறது என்ற அற்புதமான சூழ்நிலை இருக்கிறது. தமிழ்நாட்டுப் பேரவைதான் இந்தியாவிலேயே தலை சிறந்ததாக விளங்குகிறது. அந்த வகையில் தாங்கள் இந்த அவையை நடத்திச் செல்வீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 ஆகஸ்ட் 3

மாண்புமிகு உறுப்பினர்கள் சாதாரண விஷயங்களுக்கெல்லாம் சில பிரச்சினைகளைக் கிளப்புகிறார்கள், தமிழரசுக் கழகத் தலைவர் என்ற முறையில் அல்ல, மேலவைத் துணைத் தலைவர் என்ற முறையில் திரு. ம. பொ. சி. அவர்கள் அந்த இடத்தில் அமர்ந்திருக்கிறார்கள். அவர்கள் அமர்ந்திருக்கும் இடத்தில் எவ்வளவோ வெளிநாட்டுத் தூதுவர்கள், வெள்ளைக்காரர்கள் அமர்ந்திருக்கிறார்கள். வெள்ளைக்காரன் அமர்ந்தாலும் ஒரு தமிழன் அங்கு அமரக்கூடாது என்பது தான் தமிழனின் பண்பாகத் தலைசிறந்து விளங்கும் என்றால்—'ஏ! தமிழ்ச் சமுதாயமே; என்றைக்குத்தான் உருப்படப் போகிறாயோ' என்று நமக்கு நாமே இன்றைக்கு வேதனைப்பட வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் மிகப் பெரிய பொறுப்பைத் தாங்கள் ஏற்கிறீர்கள்.

தாங்கள் ஏற்கின்ற இந்தப் பொறுப்பை வயதிலும், அறிவிலும் முதிர்ந்தவர்களுக்கு உள்ள ஆற்றலோடு கடந்த ஆறு, ஏழு, எட்டு மாத காலமாக ஏற்று நடத்திய இளவல்--இந்த மன்றத்தின் துணைத் தலைவர் திரு. சீனிவாசன் அவர்கள் அனைவருடைய பாராட்டுகளுக்கும், நன்றிக்கும் உரியவராவார்கள். எத்தனை சபலங்கள், சஞ்சலங்கள், வலைகள்—இவைகள் எல்லாம் வீசப்பட்ட நேரத்திலும் அன்றைக்குத் தமிழ்க்கொடி உயரவேண்டுமென்று தூக்கிப்பிடித்த சீனிவாசனின் கைகள் கடைசிவரை கீழே இறங்காது தூக்கிப் பிடித்த கையாகவே இருந்த அந்தக் காட்சியைக் காண்கிறோம். அந்த இளவலுக்கும் இந்த மன்றத்தின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். தங்களை வருக! வருக! எங்களை இந்த அவையில் வழி நடத்திச் செல்க! என்று கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு கட்சித் தலைவரவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவை மாண்புமிகு உறுப்பினர்களே, 'உங்கள் எல்லோருக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பேரவையில் தலைவராக இருந்து மீண்டும் பணி புரியக்கூடிய வாய்ப்பு அளித்ததற்காக உங்கள் எல்லோருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1973 ஆகஸ்ட் 3] [மாண்புமிகு பேரவைத் தலைவர்]

இந்தப் பேரவையில் கடந்த ஒன்பது திங்களாகப் பேரவையை நடத்தி வந்த மதிப்பிற்குரிய சீனிவாசன் அவர்கள் சட்டத் துறையில் பயின்று, சட்டமன்றத்தில் பயிற்சி பெற்றிருக்கும் நிலையைப் பார்க்கின்ற நேரத்தில் அவரைப் பேரவைத் துணைத் தலைவராகப் பெற்றதில் நான் பெரும் பேறு பெற்றிருக்கிறேன் என்று மனதார நினைக்கிறேன்.

இந்த மன்றத்தில் மன்ற உறுப்பினர்கள் சட்டமன்ற விதி முறைகளுக்கு உட்பட்டுப் பணியாற்றுகின்ற நிலையில் விருப்பு, வெறுப்பு இல்லாமல் ஆளும் கட்சி உறுப்பினர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என்று வேற்றுமை பாராட்டாமல் அவர்கள் உரிமைகளைக் காப்பாற்றக் கடமைப்பட்டிருக்கிறேன்; காப்பாற்றுவேன் என்ற உறுதியையும் அளிக்கிறேன்.

அதே நேரத்தில், உறுப்பினர்கள் உரிமையைக் காட்டிலும் இந்த மன்றத்தின் பெருமை, மரபு பெரிது என்பதை எல்லோரும் உணரவேண்டும். இந்த மன்றத்தின் பெருமை மன்றத்தில் வீற்றிருக்கும் மாண்புமிகு உறுப்பினர்களாகிய நீங்கள் காட்டுகின்ற முறையிலேதான் இருக்கிறது. ஆகவே, உங்களுடைய உரிமையைக் காக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன் என்று கூறுகின்ற அதே நேரத்தில், இந்த மன்றத்தின் பெருமையைக் காக்க நீங்கள் கடமைப்பட்டிருக்கிறீர்கள் என்பதை உணர்வீர்கள். அந்தக் கடமையுணர்வுடன் நீங்கள் காரியமாற்ற வேண்டுமென்று உங்களை எல்லாம் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, சம்பளம் வழங்குதல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/73.)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, சம்பளம் வழங்குதல் (திருத்த) சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/73) அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, குடிசைப் பகுதிகள் (மேம்பாடு-மாற்று) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/73.)

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1973-ம் ஆண்டு, குடிசைப் பகுதிகள் (மேம்பாடு-மாற்று) திருத்த சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/73) அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(5) அறிவிப்புகள்.

(அ) தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு மோட்டார் எரியெண்ணெய் விற்பனைகளுக்கு வரி விதித்தல்-கேளிக்கைகளுக்கு வரி விதித்தல் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு 1973-ம் ஆண்டு மோட்டார் எரியெண்ணெய் விற்பனைகளுக்கு வரி விதித்தல்—கேளிக்கைகளுக்கு வரி விதித்தல் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள்—(தொடர்ச்சி)

(இ) தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு மோட்டார் எரியெண்ணெய் விற்பனைகளுக்கு வரி விதித்தல்—கேளிக்கைகளுக்கு வரி விதித்தல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/73.)

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1973-ம் ஆண்டு மோட்டார் எரியெண்ணெய் விற்பனைகளுக்கு வரி விதித்தல்—கேளிக்கைகளுக்கு வரி விதித்தல் (திருத்த) சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/73) அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இச்சட்ட முன் வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(5) அறிவிப்புகள்—(தொடர்ச்சி)

(ஆ) 1973-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1973-ம் ஆண்டு இந்திய முத்திரைத் தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள்—(தொடர்ச்சி)

(ஈ) 1973-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/73.)

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, 1973-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/73) அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(உ) தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 20/73.)

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/73) அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(ஊ) தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/73.)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/73) அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை முற்பகல் 11.31-க்கு ஒத்திவைக்கப்பட்டது.

(6) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

84. Notification issued with Roc. No. 123673/72-F1, dated the 21st February 1973, in regard to exclusion of certain areas from the jurisdiction of Anaikaranpatti Panchayat and inclusion in the Singampuneri Town Panchayat. [Laid on the Table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

85. Notification issued with G.O. Ms. No. 1461, Home, dated the 31st May 1973 in regard to an amendment to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

86. Notification issued with G.O. Ms. No. 1317, Home, dated the 15th May 1973, in regard to collection of tax at reduced rate in respect of the jeep stage carriages introduced on village roads in rural areas. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

87. Notification issued with G.O.P. No. 2493, Revenue, dated the 9th May 1973, in regard to exemption from liability to sales tax on all sales by the Schieffelin Leprosy Research Sanatorium, Karigiri of North Arcot district. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

88. Notification issued with G.O.P. No. 2280, Revenue, dated the 30th April 1973 in regard to exemption from sales tax on the sales of medicine, linen, furniture, hospital goods and tools and implements by certain voluntary leprosy institutions. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

B. Reports, Notifications and Other Papers.

' Nil '.

தமிழ் நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

பேரவைத் தலைவர் :

மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன், பி.ஓ.எல்., எம்.ஏ.

பேரவைத் துணைத் தலைவர் :

மாண்புமிகு திரு. பெ. சீனிவாசன், எம்.ஏ.,பி.எல்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. திரு. நா. வீராசாமி.
2. திரு. எஸ். முருகையன்.
3. திரு. பி. முத்துசாமி.
4. திரு. என். டென்னிஸ்.
5. திரு. க. உரோ. எட்மண்ட்
6. திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி.

சட்டப் பேரவைச் செயலாளர்.

திரு. மா. சண்முகசுப்பிரமணியம், பி.ஏ.,பி.எல்.

துணைச் செயலாளர்.

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ.,பி.எல்;

உதவிச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி)
திரு. பெஞ்சமின் நெல்சன், பி.ஏ.
திரு. கே. பாலகுரு, பி.ஏ.
திரு. டி. ஜே. சைமன், பி.ஏ.

விவாதப் பதிப்பாளர்.

திரு. கே. சுந்தரராசன்.

தமிழ்நாடு சட்டப் பேரவை.

சனிக்கிழமை, 1973 ஆகஸ்ட் 4.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

Who's Who of Freedom Fighters

*1. *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Committee constituted to prepare Who's Who of Freedom Fighters have completed the work; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) விடுதலை வீரர்கள் குறித்த விவரங்களைத் தயாரிப்பதற்காக அமைக்கப்பட்ட குழு 15,000 விடுதலை வீரர்களின் பெயர்களடங்கிய விவாக் குறிப்புப் புத்தகம் ஒன்றைத் தொகுத்தது. மூன்று தொகுதிகளில் மாவட்ட வாரியாக இவர்களது பெயர்கள் கொடுக்கப்பட்டன. ஒவ்வொரு தொகுதியிலும் சுமார் 5,000 பெயர்கள் அடங்கியுள்ளன. முதல் தொகுதியில் செங்கற்பட்டு, கோயம்புத்தூர், தருமபுரி, கன்னியாகுமரி, சென்னை, மதுரை ஆகிய மாவட்டங்களிலுள்ள விடுதலை வீரர்களின் பெயர்கள் அடங்கியுள்ளன. இரண்டாவது தொகுதியில் நீலகிரி, வட ஆர்க்காடு, இராமநாதபுரம், சேலம், தென் ஆர்க்காடு, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விடுதலை வீரர்களின் பெயர்கள் அடங்கியுள்ளன. மூன்றாவது தொகுதியில் திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விடுதலை வீரர்களின் பெயர்களும், இந்திய தேசிய இராணுவத்தைச் சேர்ந்தவர்களின் பெயர்களும் கண்டுள்ளன. விவரக் குறிப்புப் புத்தகத்தை அச்சிடும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

[1973 ஆகஸ்ட் 4

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, பொது மக்களும் இளம் தலைமுறையினரும் அதிக அளவில் பயன்படுத்தத் தக்க வகையில் குறைந்த விலையில் அதைக் கொடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்பொழுதுதான் அது அச்சிடப்பட்டு வருகிறது. முதலிலே ஒரு குழுவினர் இந்த வேலையை மேற்கொண்டிருந்தபோது, ஸ்ரீ சேவா மந்திர் என்ற அச்சகம் முதல் தொகுதியை அச்சிட்டுக் கொடுத்தார்கள். இப்பொழுது அரசு அச்சகத்தில் இரண்டாவது, மூன்றாவது தொகுதிகள் அச்சுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த வேலைகள் நடைபெறும்போதுதான் அதன் செலவு விவரங்களையெல்லாம் கணக்கிட்டு, எந்த அளவுக்குக் குறைந்த விலையில் தர முடியும் என்பதை அரசு பரிசீலித்து முடிவெடுக்க முடியும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, இந்த சுதந்திர வெள்ளி விழா ஆண்டில் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் சுதந்திரப் போராட்ட வீரர்களுடைய பெயர்களைப் பொறித்த கற்கள் பதிப்பிக்கப்பட வேண்டுமென்று மத்திய அரசு ஆலோசனை கூறியிருப்பதாகத் தெரிகிறதே, அந்தக் கற்களில் இவர்களுடைய பெயர்களெல்லாம் பொறிக்கப்படுமா? அதனுடைய விவரத்தை அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சுதந்திரப் போராட்டத்தில் மறைந்துவிட்டவர்கள் பெயரைப் பொறிக்கச் சொன்னதாகத்தான் எனக்கு நினைவு. இந்தப் பதினையாயிரம் பெயர்களையும் அந்தந்த யூனியனில் உள்ளவர்கள் பொறிப்பது என்பது இயலாத காரியம் என்று கருதுகிறேன். ஆனால், அந்தக் கற்களை அங்கங்கே நடுவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொண்டிருக்கிறது. வருகிற ஆகஸ்டு 15 ஆம் தேதியில் கிட்டத்தட்ட ஒரு 100 இடங்களில் கற்கள் பதிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. யார் யார் பெயர்கள் பொறிக்கப்படும் என்று அந்தந்த யூனியன் தலைவர்களும் மற்றவர்களும் பார்த்து முடிவு செய்ய வேண்டுமென்று அவர்களுக்கு அரசு எழுதுவதாக இருக்கிறது.

6617

1973 ஆகஸ்ட் 4]

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்த விடுதலை வீரர்களுடைய பெயர்களைத் தொகுக்கும்போது, செம்புப் பட்டயம் (தாமிரப் பத்திரம்) பெற்றவர்களுடைய பெயர்களைத் தனியாகத் தொகுத்துக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ? அப்படியானால், அதன் விவரங்களை முதலமைச்சர் அவர்கள் தருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஏற்கெனவே அமைக்கப்பட்ட இந்தக் குழுவினுடைய பணிகளில் அது இடம் பெறவில்லை. இந்தக் குழுவின் பணி முடிந்த பிறகு, 1972 ஆம் ஆண்டு இந்தக் குழு கலைக்கப்பட்டுவிட்டது. தாமிரப் பத்திரம் கொடுப்பது என்ற முடிவு இப்பொழுது எடுக்கப்பட்ட முடிவாகும். ஆகவே, அதிலே தனியாக இணைப்பதுபற்றி அரசு இனிமேல்தான் யோசிக்க முடியும்.

V211,31 N73

திரு. சொ. காவேரிமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குழு எந்த ஆண்டு அமைக்கப்பட்டது? இந்தக் குழுவில் அடங்கிய உறுப்பினர்கள் யார் யார் என்பதை அறிய விரும்புகிறேன்.

31N73-40

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்ட வீரர்களின் பட்டியலொன்றைத் தொகுக்க வேண்டும் என்று 1962, 1963, 1964 ஆகிய ஆண்டுகளில் மத்திய அரசு மாநில அரசைக் கேட்டுக் கொண்டது. அதற்கேற்ப, 1964 ஆம் ஆண்டில் மாநிலக்குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழுவில் உறுப்பினர்களாகச் செல்வி விஜயலட்சுமி (கன்வீனர்), திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு (தலைவர், தமிழ்நாடு காங்கிரஸ்), திரு. ஆர். வெங்கடராஜுலு (ஆசிரியர், 'நவசக்தி') ஆகியோர் இருந்தார்கள். திரு. வெங்கடராஜுலு அவர்கள் காலமான பிறகு, 11—10—1966 இல் குழு திருத்தியமைக்கப்பட்டது. திரு. வி. ஆர். இராதாகிருஷ்ணன், திரு. எஸ். எஸ். வாசன், திரு. இராமகிருஷ்ண ஐயர், திரு. குழந்தைவேலு (விளம்பர—செய்தித் துறை இயக்குநர்) ஆகியோர் இந்தக் குழுவில் இடம் பெற்றார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்தத் தியாகிகள் பட்டியலில் 15,000 பேர்கள் இருப்பதாகவும், அதை மூன்று தொகுதிகளாக வெளியிடுவதாகவும் தெரிவித்தார்கள். இதற்கு மேல் அதிகமாகத் தியாகிகள் பட்டியலில் இடம் பெற வேண்டுமென்றால், அதற்கு

ஏற்பாடு உண்டா? மேலும், இது தமிழில் மட்டும்தான் வெளியிடப்படுமா? அல்லது, ஆங்கிலத்திலும் வெளியிடப் படுகிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்பொழுது ஆங்கிலத்தில் வெளியிடுவதற்கான முயற்சிகள்தாம் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. தமிழிலும் வெளியிடுவதற்கு அரசு ஏற்கெனவே முடிவெடுத்துள்ளது. ஆனால், இந்தக் குழுவே 1964 ஆம் ஆண்டு முதல் பணியாற்றி, கடந்த எட்டு ஆண்டுக் காலத்தில் 15,000 பேர்கள் தியாகிகள் என்பதைக் கணக்கிட்டுத் தயாரித்துக் கொடுத்திருக்கிறது. இதற்கு மேலும் தியாகிகள் இருப்பார்களா என்பதைப்பற்றி என்னால் சொல்ல இயலாது.

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Chief Minister whether the photos of freedom fighters have been inserted in the 'Who is Who'?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர்களுடைய பெயர்கள் கிடைப்பதே மிகக் கஷ்டமாகிவிட்டது. ஆங்காங்குள்ள சிறைச்சாலைகளிலிருந்தும் மற்றும் வேறு பல ஆதாரங்களையும் திரட்டித்தான் அந்தப் பெயர்களையே தொகுக்க வேண்டிய சூழ்நிலை அந்தக் குழுவிற்கு ஏற்பட்டது. எல்லாருடைய புகைப் படங்களும் கிடைப்பதென்பது அரிது. மிக முக்கியமானவர் களுடைய புகைப்படங்களை வேண்டுமானால் போடலாம். அப்படிப் போடும்போது, சில பேர்களுடைய படங்களைமட்டும் போட்டு விட்டார்கள், மற்றவர்களுடைய படங்களைப் போடவில்லை என்ற குறைபாடு ஏற்பட ஏதுவாகும்.

திரு. எம். சுரேந்திரன் : வெளியிடப்படுகின்ற இந்தத் தியாகிகள் பட்டியல் வருகிற ஆகஸ்ட் 15 ஆம் தேதிக்குள்ளாக வெளியிடப்படுமா? இன்னும் காலதாமதம் ஆகுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அந்தக் குழுவின் பணிகள் முடிவுறவே மிகவும் காலதாமதமாகிவிட்டது. வருகிற ஆகஸ்ட் 15 ஆம் தேதிக்குள் வெளியிடுவது என்பது இயலாத காரியம். இப்பொழுதுதான் முதல் தொகுதியே அச்சாகிக் கொண்டிருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : There were some freedom fighters in Dharmapuri district who courted imprisonment during freedom struggle. The details of their activities have not been collected so far. May I know from the Hon. Chief Minister whether such details may be sent now for inclusion in "Who is Who"?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : முதல் தொகுதியில் மூன்றாவதாக தருமபுரியும் இடம் பெறுகிறது.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, விடுதலைப் போராட்ட வீரர்களுடைய பெயர்களைத் தமிழ்நாட்டில் மிகச் சிறப்பாகத் தொகுத்திருப்பதைப்போல் அகில இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலாவது தொகுத்திருக்கிறார்களா? அப்படி யென்றால், அதைப்பற்றி முதல் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இது அகில இந்திய ரீதியில் எல்லா மாநிலங்களிலும் தொகுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் முதலில் மத்திய சர்க்கார் 1962 ஆம் ஆண்டு இதுபற்றிய அறிக்கையை எல்லா மாநிலங்களுக்கும் அனுப்பியதாகத் தெரிகிறது. 1962 ஆம் ஆண்டில் அறிக்கை கிடைத்து, 1964 ஆம் ஆண்டில் குழு அமைக்கப்பட்டது. இதைப் போலவே மற்ற மாநிலங்களிலும் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கக் கூடும்.

Escape of under-trials from police escorts

*2 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether a number of under-trials have escaped from the hands of police escorts about 30th November 1972 near Madras City; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) & (இ) சட்டப் பேரவைமுன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

@ 3—8—1973 அன்று மேசை மீது வைக்கப்பட்ட தமிழ் அறிக்கை முதலமைச்சரவர்களால் பேரவையில் படிக்கப்பட்டது.

இவ்வறிக்கையின் ஆங்கில மொழிபெயர்ப்பு 247-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[1973 ஆகஸ்ட் 4

திரு. என். டென்னிஸ் : பொலிடிகல் பிரிசினர்ஸுக்கான செக்யூரிடி மெஷர்ஸைத் தளர்த்தி, க்ரிமினல் பிரிசினர்ஸுக்கான செக்யூரிடி மெஷர்ஸை அதிகப்படுத்த அரசு முன்வருமா? இந்தக் கைதிகளைப் பறி கொடுத்த காவலர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கிரிமினல் குற்றவாளி களுக்கான இதுபோன்ற பாதுகாப்புகள்—அவர்கள் ஓடிவிடாமல் இருப்பது போன்ற தடுப்பு முயற்சிகளில் ஈடுபடுவதற்குக் காவல் துறையினர் மிகக் கவனமாக இருக்க வேண்டுமென்று சொல்லாமலேயே விதிகள் இருக்கின்றன. ஆயினும், எதிர்பாராத முறையில் அந்தச் சம்பவம் நடைபெற்றிருக்கிறது. இதிலே சம்பந்தப்பட்டிருக்கிற காவல் துறையினர்மீது என்ன நடவடிக்கை எடுப்பது என்பதைப்பற்றி விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, விவர அறிக்கை கொடுத்திருப்பதாக முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மேசைமீது விவர அறிக்கை இருப்பதாகத் தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்விக்குரிய விவர அறிக்கை நேற்றே மேசைமீது வைக்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : விவர அறிக்கை சிறியது தான். படித்து விடுகிறேன். இ.பி.கோ. 393, 397, 414 ஆவது பிரிவுகளின்கீழ் அரக்கோணம் இரயில்வே காவல் நிலையம் தொடர்ந்த வழக்கு சம்பந்தப்பட்ட 5 விசாரணைக் கைதிகள் திருவள்ளூர் சப்-மாஜிஸ்டிரேட் நீதி மன்றத்திலிருந்து சென்னை மத்திய சிறைச்சாலைக்குப் பேருந்துமூலமாக அழைத்து வரப்பட்டனர். வழியில் வில்லிவாக்கம் அருகில் பேருந்து வரும்போது, கைதிகளில் ஒருவன் மலம் கழிக்க விரும்புவதாகக் கூறினன். பாதுகாப்புக் காவலர்கள் இருவரும் அவர்களைத் திறந்த வெளிக்கு அழைத்துச் சென்றனர். அப்போது, அவர்கள் காவலர்கள் முகத்தில் மிளகாய்ப் பொடியைத் தூவிவிட்டு, துப்பாக்கி முனையிலுள்ள கத்தியைப் பிடுங்கி, ஒரு காவலரை பலமாகத் தாக்கினர். மற்றொரு கைதி இன்னொரு காவலரின்

1973 ஆகஸ்ட் 4]

துப்பாக்கியைப் பிடுங்கிக் கொண்டான். கத்தியுடனும், துப்பாக்கியுடனும் அவர்கள் அனைவரும் தப்பிவிட்டனர். காவலர் ஒருவர் அம்பத்தூர் காவல் நிலையத்தை அடைந்து தகவல் தெரிவித்தார். குற்றம் சாட்டப்பட்ட கைதிகள் அனைவரும் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். ஐந்து கைதிகளில் ராமாராவ் என்ற கைதி 11—2—1973 அன்று கைது செய்யப்பட்டு, அவனிடமிருந்து துப்பாக்கி கைப்பற்றப்பட்டது. மற்ற கைதிகளைக் கண்டுபிடித்துக் கைது செய்வதற்காக சென்னை மாநகரக் காவலர், இரயில்வே காவலர், குற்றப் புலனாய்வுத் துறைக் காவலர் ஆகியோர் முனைந்து முயற்சி செய்து வருகின்றனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வி நேற்று வர வேண்டிய கேள்வி. ஆகவே, நேற்றே ஸ்டேட்மென்ட் வைத்திருக்கிறார்கள். இன்றல்ல—நேற்றே மேஜைமீது வைக்கப் பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இப்படி ஓடிப்போன கைதிகளில் யாராவது நக்சலைட் இயக்கத்தில் சேர்ந்தவர்கள் இருக்கிறார்களா, அது சம்பந்தமாக ஏதேனும் விவரம் இருக்கிறதா, அவர்களைத் திரும்பவும் காவலர் கைது செய்து விட்டனரா என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர்கள் நக்சலைட்டா என்ற விவரம் கிடையாது. அவர்கள் கொள்ளையடித்ததாக அரக்கோணம் இரயில்வே காவல் நிலையத்தாரால் குற்றம் சாட்டப்பட்டவர்கள் என்று ஏற்கெனவே தெரிவித்தேன். தப்பிச் சென்றவர்களில் ராமாராவ் என்பவர் 11—2—1973 அன்று கைது செய்யப்பட்டு அவனிடமிருந்த துப்பாக்கியும் கைப்பற்றப் பட்டது என்றும் ஏற்கெனவே படித்த விவர அறிக்கையில் சொல்லியிருக்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : சார், கைதிகள் காவலர் பாதுகாப்பில் இருக்கிறபோது, அவர்களுக்கு மிளகாய்ப் பொடி எப்படிக் கிடைத்தது என்ற விவரத்தைக் கூற முடியுமா? (சிரிப்பு)

[1973 ஆகஸ்ட் 4

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி: பழமொழி சொல்லுவார்கள், "கண்ணில் மிளகாய்ப் பொடியைத் தூவிவிட்டு ஓடிவிட்டார்கள்" என்று அவர்களுக்கு எப்படி மிளகாய்ப் பொடி கிடைத்தது என்பதுபற்றி இப்போது விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. க. உரோ. எட்மண்ட்: தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த அறிக்கையிலிருந்து அந்த 5 குற்றவாளிகளும் கொள்ளையடித்த பயங்கரமான குற்றத்தைச் செய்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. அந்த 5 பேர்களை எத்தனை காவலர்கள் கொண்டுபோனார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி: நான் ஆரம்பத்திலேயே சொல்லி இருக்கிறேன். எத்தனை காவலர்கள் அழைத்துச் சென்றார்கள் என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. ஐந்து கைதிகளை அழைத்துச் செல்லப் போதுமான காவலர்கள் இருந்தாலும், அவர்களிடமிருந்து துப்பாக்கியைத் திடீரென்று பிடுங்கிக்கொண்டதால், அவர்களால் ஒன்றும் செய்ய முடியாமல் போய்விட்டது.

Building for International Institute of Tamil Studies

* 3. Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether it is a fact that the Government have allotted any plot of land for raising the construction of the International Institute of Tamil Studies; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) பன்னாட்டுத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அலுவலகக் கட்டடம் கட்ட உரிய இடத்தில் நிலத்தை ஒதுக்கும் கருத்தரு அரசின் ஆய்வில் உள்ளது.

Thiru N DENNIS: May I know whether experts in the language from other countries also would be invited to make their contributions?

1973 ஆகஸ்ட் 4]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அந்த நிறுவனத்தின் கௌரவத் தலைவராக மதுரைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் இருந்து வருகிறார்கள். மற்றைய நாட்டு மொழி நூல் வல்லுநர்களோடு அது தொடர்புகொண்டு வருகிறது. இப்போது அவர்கள் ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறார்களா என்று தெளிவு இல்லை. யுனஸ்கோ நிறுவனத்தின் உதவி பெற்று இங்கேயிருந்து சிலர் வெளி நாட்டுக்குச் சென்று தனிப் பயிற்சி பெற்று வருகிறார்கள். ஆனால் உலக நாடுகள் மொழி வல்லுநர்களோடு தொடர்பு கொள்ளும் நோக்கத்தை இந்த நிறுவனம் கொண்டிருக்கிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவரவர்களே, இதற்காக ஒதுக்கப்படும் நிலம் எந்த இடத்தில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, பாலிடெக்னிக் காம்பஸ்—தொழில் நுட்பக் கல்லூரி சுற்றுடைப்பில், 6 ஏக்கர் நிலம் ஒதுக்கப்படவேண்டுமென்று தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். அங்கேயுள்ள கட்டடத்தில் தற்காலிகமாக இப்போது வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கட்டடத்தையும் அதைச் சுற்றியுள்ள இடத்தையும் அந்த நிறுவனத்திற்கு ஒதுக்கித் தந்தால் சரியாக இருக்கும் என்ற கருத்தில் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். அந்த இடத்தில் ரூ. 5,25,000 மதிப்பீட்டுச் செலவில் கட்டடம் எழுப்புவதற்கான செயற் குறிப்பையும். அந்த நிறுவனத்தின் தலைமை நிர்வாகி தயாரித்து வைத்திருக்கிறார்.

புலவர் சி. பழனிச்சாமி: தலைவரவர்களே, தமிழ் ஆராய்ச்சி நிலையம் இதுவரை ஆற்றியுள்ள பணிகள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றி விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போடவும்.

Thiru K. S. KOTHANDARAMIAH: May I know from the Hon. Minister for Education whether this Government is giving financial aid to this International Institute of Tamil Studies and if so, whether it is annual grant or lump-sum grant?

[1973 ஆகஸ்ட் 4

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஆண்டுதோறும் இந்த நிறுவனத்திற்காக மாநில அரசு மானியம் அளித்து வருகிறது. இதைத்தவிர வெளிநாட்டில் சென்று இரண்டு பேராசிரியர்கள் ஒரு 6 மாத காலம், ஓராண்டுக் காலம் பயிற்சி பெறுவதற்கும் யுனஸ்கோ உதவி அளித்து வருகிறது. அந்த நிறுவனத்திற்கு உதவி அளிக்க வேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது. கட்டடம் கட்டுவதற்காக ரூ. 2,40,000-ஐ இந்திய அரசு மொழி வளர்ச்சிக்காக ஒதுக்கித் தரும் ரூ. 1 கோடியில் ஒதுக்கித் தர வேண்டுமென்றும் மத்திய அரசை இந்த மாநில அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : தலைவரவர்களே, இந்த இடத்தைத் தேர்ந்தெடுப்பதில் தமிழ் வல்லுநர்கள் யாரேனும் இது சம்பந்தமாக கலந்து ஆலோசிக்கப்பட்டார்களா? சங்கம் வளர்த்த தமிழ் மதுரையம்பதியிலே இதை நிறுவ ஆலோசனை செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இதிலே பல்கலைக் கழகத் துணை வேந்தர்கள் இடம் பெற்று இருக்கிறார்கள். டாக்டர் மு. வரதராசனார் அதனுடைய கௌரவத் தலைவர். இதிலே பேராசிரியர் டி. பி. மீனாட்சிசுந்தரம் போன்றவர்கள் இருந்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இது பன்னாட்டுத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனமாக இருப்பதாலும், வெளி நாட்டு வல்லுநர்கள் வந்து ஆராய்ச்சிகள் செய்வதற்கும், பல்கலைக் கழகங்களோடு தொடர்புகொள்வதற்கு சென்னைதான் ஏற்ற இடம் என்று கருதப்படுகிற காரணத்தாலும், பாலிடெக்னிக் காம்பஸ்ஸில் இடம் ஒதுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

National Cadet Corps

* 4. *Q.*—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to intensify the National Cadet Corps training in this State; and

(*b*) if so, the details thereof?

1973 ஆகஸ்ட் 4]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தேசிய மாணவர் படைத் தலைமை இயக்குநர் அவ்வப்போது வெளியிடும் (பாடப் பயிற்சி) பாடத் திட்டத்தையொட்டித் தமிழ் நாட்டில் உள்ள மாணவர்களுக்குத் தேசிய மாணவர் படைப் பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றது. இப் பயிற்சி முழு அளவில் அளிக்கப்படுகிறது.

Thiru N. DENNIS : Sir, may I know whether this will be made compulsory to all college students?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இது கட்டாயமாக வைக்கப்படவில்லை. விருப்பமாகத்தான் வைக்கப்பட்டிருக்கிறது. சிலர் நேஷனல் சர்வீஸ் கோரில் சேர்ந் திருக்கிறார்கள். சிலர் என்.சி.சி.யில் சேர்ந்து இருக்கிறார்கள். மற்றும் பலர் கேம்ஸ், ஸ்போர்ட்ஸ் ஆகியவற்றில் சேர்ந்திருக் கிறார்கள். தேசிய மாணவர் பாட (இளைஞர்) படையில் 63,736 பேர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். தேசிய மாணவர் பாட (முதியோர்) படையில் 27,045 பேர்கள் சேர்த்துக் கொள்ளப் பட்டிருக்கிறார்கள்.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, இந்த தேசிய மாணவர் படையில் மார்ச் பாஸ்டின் போது லெப்ட் ரைட் என்பதற்குப் பதிலாக இந்தியிலே ‘தாயே’ ‘பாயே’ என்று சொல்லி உத்தரவு கொடுக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அதை மாற்றி, ஒன்று ஆங்கிலத்தில் லெப்ட், ரைட் என்று சொல்லலாம், இல்லாவிட்டால் தமிழில் “இடக்கால், வடக்கால்” என்று சொல்வதற்கு தமிழக அரசு உத்தரவு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படி அகில இந்திய ரீதியில் அதனுடைய ஆணை இருக்கவேண்டுமென்று சொல்லிய காரணத்தால்தான், தமிழ் நாட்டில் அந்த என்.சி.சி. பயிற்சி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. பிறகு மத்திய அரசோடு தொடர்புகொண்டு, ஆங்கிலத்தில் ஆணைச் சொற்கள் சொல்லலாம் என்ற நிலைமையேற்பட்டதால், 3 ஆண்டுக் காலமாக அது இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஆங்கிலத்தில் ஆணைச் சொற்கள் இருக்கலாம் என்று இருக்கிறது. அது வழக்கில் செயல்படுத்தப்பட்டும் வருகிறது.

[1973 ஆகஸ்ட் 4

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, இந்த மாணவர் படையில் பயிற்சி பெற்றவர்களுக்குக் கல்லூரி பாடத்தில், பரீட்சையில், 3-வது பிரிவில் ஒரு பாடத்தை விடுவது என்ற உரிமை இருந்தது. அந்த நிலைமை தொடர்ந்து இருக்கிறதா? மேலும் மிலிடரி சயன்ஸ் பகுதியிலே அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு, சோதனை நடத்தப்படுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இதுபற்றி விவரக் குறிப்பு இல்லை. தனிக்கேள்வி போட்டால் அதைக் கேட்டறிந்து சொல்லலாம். இதில் பயிற்சி பெற்றவர்கள் மேல் படிப்புக்குச் செல்கிறபோது, அது கருத்தில் கொள்ளப்பட்டு அதற்காகத் தனிச் சலுகை அளிக்கப்பட்டு வருகிறது. பாடமோ, அல்லது மற்றவைகளைப் பொறுத்தோ தனிக்கேள்வி போட்டால் விவரம் அறிந்து சொல்லலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, ஆணை ஆங்கிலத்தில் இருக்கவேண்டுமென்று அரசு உத்தரவு போட்டு இருக்கிறது. அதையும் மீறி எங்காவது இந்தியில் ஆணைச் சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன என்று அரசுக்குப் புகார் கொண்டுவரப்பட்டிருக்கிறதா? அப்படிப் புகார் வந்திருந்தால் அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தமிழகத்தைப் பொறுத்தவரையில் அப்படிப்பட்ட புகார் வரவில்லை. ஆங்கிலம், இந்தி ஆகிய இரண்டு மொழிகளிலும் ஆணைச்சொற்கள் சொல்லலாம் என்று இருந்தது. பிறகு இந்தியில்தான் இருக்க வேண்டுமென்று சொல்லியதால் அதை நிறுத்திவைத்திருந்தோம். பிறகு தமிழக அரசு கேட்டுக்கொண்டதற்கிணங்க, தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஆணைச் சொற்கள் ஆங்கிலத்தில் இருக்கலாம் என்று கூறிவிட்டார்கள். இப்போது ஆங்கிலத்தில்தான் ஆணைச் சொற்கள் கூறப்படுகின்றன. இதுகுறித்துப் புகார் எதும் வரவில்லை.

THIRU K. M. SUBRAMANIAM : Is the Government giving any preference to the N.C.C. candidates in the matter of recruitment to jobs, particularly for the jobs in Police Department?

1973 ஆகஸ்ட் 4]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, என்.ஸி.ஸி-யில் சேர்ந்து பயிற்சி பெற்றவர்களுக்கு ஓரளவுக்குச் சலுகை இருக்கிறது என்று நான் கருதுகிறேன். காவல் துறையில் எடுக்கும்பொழுது எந்த அளவிலே சலுகை இருக்கிறது என்று கூறுவதற்கு இயலாது. ஆனால், தொழிற்கல்வி நிலையங்களில் சேர்த்துக்கொள்ளப்படும்பொழுது, மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி மற்றையக் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளப்படும்பொழுது என்.ஸி.ஸி-யில் எடுக்கப்பட்டுள்ள மதிப்பெண்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டுத்தான் சலுகை அளிக்கப்படுகிறது.

திரு. வை. பாலசுந்தரம் : இந்த தேசீய மாணவர் படையை பல சமுதாயப் பணிகளில் பயன்படுத்திக்கொள்வதற்கு அரசாங்கத்திற்கு ஏதாவது உத்தேசம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சமுதாயப் பணிக்கு என்று ஒவ்வொரு கல்லூரியிலும் என்.எஸ்.எஸ்.சி. நாஷனல் சோஷியல் சர்வீஸ் கோர் என்ற அளவுக்கு வைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் பல்வேறு வகைகளில் சிற்றூர்கள் மற்ற இடங்களுக்குச் சென்று சமுதாயப் பணிகளை ஆற்றிக்கொண்டிருக்கிறார்கள். தேசீய மாணவர் படை மற்றையச் சமுதாயப் பணிகளிலே ஈடுபடுகின்ற தன்மைகள் இல்லை. ஆனால் ஆங்காங்கு சில சமயங்களில் பாதுகாப்பு மற்றும் ஒழுங்குபடுத்துகிற முறை ஏற்படுகிறபொழுது இந்தப் படையினர் உதவி செய்கின்றார்கள்.

முதுநிலை ஆசிரியர் பதவிகள்

*5 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1967 மார்ச்சு முதல் 1972 ஜூலை 31-ம் தேதி வரை எவ்வளவு Higher Grade ஆசிரியர் பதவிகள் Secondary Grade-க்கு உயர்த்தப்பட்டுள்ளன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 24,500 பதவிகள் உயர்த்தப்பட்டுள்ளன.

[1973 ஆகஸ்ட் 4

*6 வினு—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென் பகுதிக் கல்விப் பிரிவில் தற்போது முதுநிலை பயிற்சி பெற்று இளநிலைப் பதவியிலுள்ள ஆசிரியர்கள் எத்தனை பேர் ?

(இ) இவர்களுக்கு எப்பொழுது முதுநிலைப் பதவிகள் கொடுக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 160 பேர்.

(இ) 1973-74-ல் கொடுக்கப்படும்.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : தலைவர் அவர்களே, எந்த அடிப்படையில் இவர்களுக்கு முதுநிலைப் பதவிகள் அளிக்கப்படுகின்றன ? இந்த ஆண்டு எத்தனை பேர்களுக்கு இந்தப் பதவிகள் கிடைக்கும் என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, முந்திய கேள்விக்கு விடையிறுக்கும்பொழுது இது வரையில் 1967-லிருந்து சென்ற ஆண்டு வரையில் 24,500 பேர்களுக்கு இந்தப் பதவி உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கூறினேன். அதே மாதிரி இந்த ஆண்டு 5,000 பேர்கள் வரையில் நிதிநிலை அறிக்கையில் 5,000 செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு உரிய சம்பளம் தரப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. அந்த வகையில் 160 பேர்களுக்கு திருநெல்வேலி தென் பகுதியில் 160 இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களுக்கு அளிக்கப்படும். உதவி பெறும் பள்ளிகளில் 130 பேர்களும், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் 30 பேர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கும் 1973-74-ல் பதவி உயர்வு தரப்படும்.

திரு. கோ. இளங்கோவன் : இளநிலை ஆசிரியர்கள் பயிற்சி பள்ளிக்குத் தமிழக அரசு முற்றுப்புள்ளி வைத்ததுபோல் இளநிலை ஆசிரியர்கள் பதவிக்கும் முற்றுப்புள்ளி வைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட பயிற்சிக்குத்தான் முற்றுப்புள்ளி வைக்க முடியும். ஏற்கெனவே பயிற்சிபெற்று வெளியே இருப்பவர்கள் அனைவருக்கும் வேலை

any preference ... for the jobs ...
ment to jobs, particularly for the ...

1973 ஆகஸ்ட் 4]

கொடுத்துத் தீர்க்கும் வரையில் அந்தப் பதவிக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியாது. இளநிலைப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வெளியே இருக்கிறார்கள். அவர்களுக்கு முதல் இடம் கொடுக்க வேண்டும். அப்படிப்பட்ட பயிற்சி பெற்றவர்கள் வெளியே இல்லை என்ற நிலை ஏற்பட வேண்டும். எம்ப்ளாய்மெண்டு எக்ஸ்சேஞ்ச் மூலம் அப்படிப்பட்ட பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லை என்று தெரிந்துகொண்ட பிறகுதான் செகண்டரி கிரேடு ஆசிரியர்களை அனுமதி பெற்று வைக்கலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. அவர்கள் அத்தனை பேர்களுக்கும் வேலை வாய்ப்புத் தேடிக் கொடுக்கும் வரையில் அவர்கள் பதவிக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு இயலாது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, செகண்டரி கிரேடு பயிற்சி பெற்றவர்கள் ஹையர் கிரேடு போஸ்டுகளில் வேலை பார்க்கிறவர்கள் இருக்கிறார்களா ? அப்படியானால் எத்தனை பேர்கள் ? அவர்களுக்கு செகண்டரி கிரேடு ஆசிரியர்களின் சம்பளம் கொடுப்பதற்கு அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஹையர் கிரேடு பதவிகளில் செகண்டரி கிரேடு பயிற்சி பெற்றவர்கள் பல பேர்கள் இருந்து வருகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு சென்ற 6 ஆண்டுக் காலத்தில் 24,500 பேர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு 5,000 பேர்களுக்கு அந்தப் பதவி கொடுக்கப்படும். மேற்கொண்டு அப்படிப்பட்டவர்கள் 3,000 பேர்கள் இருக்கக்கூடும் என்ற கணக்கு இருக்கிறது. அடுத்த ஆண்டு பயிற்சி பெற்று மேற்கொண்டு வருபவர்கள் மேலும் பணி புரிகிற அளவுக்கு அவ்வப்பொழுது தருகிற சூழ்நிலை ஏற்படும். இப்பொழுது இளநிலைப் பயிற்சி பெற்றவர்கள் தங்களுடைய படிப்பின் தரத்தை உயர்த்திக் கொண்டு செகண்டரி கிரேடு தரத்திற்கு வந்து சேருகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கும் பதவி உயர்வு தர வேண்டிவரும். ஆக, இன்னொரு 3,000 பேர்கள் இருக்கக் கூடும் என்று உத்தேசமாகக் கூறலாம்.

THIRU B. VENKATASWAMY : Sir, according to the answer given by the Hon. Minister for Education 24,000 teachers have been promoted as Secondary Grade Teachers, Last year only,

they have promoted the apprentices and for those who have been appointed no new vacancies have been created. This year also no new vacancies have been created in any Panchayats in Tamil Nadu. As Chairman of the Panchayat Union, I want to know from the Government, while appointing these apprentices whether this Government will come forward to create new posts separately so as to absorb them in such posts?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, புதிய பதவிகள் வருகிறபொழுது ஏற்கெனவே பழகு பயிற்சி பெற்றவர்களுக்குத் தான் அந்த இடத்தை தரவேண்டும். அப்ரெண்டிஸ்களாக இருப்பவர்களுக்கு அந்த இடங்களைத் தர வேண்டும். ஏற்கெனவே வேலை பார்த்துக்கொண்டிருக்கிற இளநிலை ஆசிரியர் பதவிகளில் செகண்டரி கிரேடு பயிற்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு செகண்டரி கிரேடு சம்பளம் தருகிறோம். அப்படித் தருவது புதிய பதவி ஆகாது, புதிய பதவிகள் என்று வருகிறபொழுது அப்ரென்டிஸ்களாக இருப்பவர்களுக்கு முதல் இடம் தந்துவிட்டு, அதற்கு மேல் காலியாக இருக்கும் இடங்களுக்கு புதியதாக வருபவர்களை நாம் சேர்த்துக் கொள்கிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: செகண்டரி கிரேடு பயிற்சி பெற்றவர்களில் பலர் 30 வயது தாண்டியவர்கள் இருக்கிறார்கள். பலர் 30 வயதை எட்டிக்கொண்டிருக்கிற நிலைமையில் இருக்கிறார்கள். அவர்கள் வேலை இழக்காமல், அவர்கள் அவதிப்படாமல் இருப்பதற்கு அவர்களை முதலில் வேலையில் அமர்த்துவதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தற்பொழுது கல்வி அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிற கருத்தின்படி இப்படி வயது ஆகி, பிறகு வேறு வேலை பெறமுடியாமல் போகின்ற சூழ்நிலையில் இருப்பவர்களுக்கு முதல் சலுகை தந்து, அவர்களுக்கு வேலை வாய்ப்புத் தரவேண்டும். எங்கேயாவது இதுமாதிரி இடர்ப்பாடு இருக்குமேயானல், அது தனியாகக் கவனிக்கப்பட வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

தென் நெல்லை மாவட்டக் கல்வி அலுவலகக் கணக்குகள்

*7 வினா—**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி முதன்மைக் கல்வி அதிகாரியால் தென் நெல்லை மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகக் கணக்குகள் 28-7-1972 முதல் 29-7-1972 வரை ஆய்வு செய்யப்பட்டதா?

(இ) ஆம் எனில், அந்த ஆய்வு அறிக்கையின் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) 31-7-1972 அன்று தென் நெல்லை மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகக் கணக்குகள் திருநெல்வேலி முதன்மைக் கல்வி அலுவலரால் ஆண்டு ஆய்வு செய்யப்பட்டன.

(இ) இந்த ஆய்வு வழக்கமாக நடைபெறும் ஆண்டு ஆய்வே ஆகும். ஆய்வு அறிக்கையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள குறைகளை சரிசெய்யுமாறு மாவட்டக் கல்வி அலுவலர் கோரப்பட்டுள்ளார்.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: தலைவர் அவர்களே, கல்வி அதிகாரிகள் அலுவலகத்தில் ஒவ்வொரு பிரிவிலும் எத்தனை கடிதங்கள் முடிவு எடுக்கப்படாமல் அனாவசியமாக காலம் கடத்தப்பட்டன என்ற கணக்கு எடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அவற்றினுடைய விவரக் குறிப்புகள் முழுவதும் தற்பொழுது என்னிடம் இல்லை. ஆனால், அப்படி ஆய்வு செய்யப்பட்டதில் சில குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. அந்தக் குறை பாடுகளுக்குதான காரணங்களைத் கேட்டு, குறைபாடுகளை நீக்குவதற்கு வழி வகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. மாவட்ட கல்வி அதிகாரிகள் இதற்கான நடவடிக்கைகள் எடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றனர். அதிலே சில இடங்களில் எம்ப்ளாய்மெண்டு எக்ஸ்சேஞ்சை கேட்காமலேயே வேலைக்கு வைக்கப்பட்டது அல்லது வயது குறித்து எக்செம்ப்ஷன் வாங்காமல் வேலைக்கு வைப்பது இப்படிப்பட்ட பல குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. அதற்கெல்லாம் சமாதானம் கேட்கப்பட்டிருக்கிறது.

[1973 ஆகஸ்ட் 4

திரு. கே. டி. கே. தங்கமணி : இம்மாதிரியான குறைபாடுகள் இருக்கின்றன என்று சொல்லித் தான் பொது மக்கள் ஆடிட் செய்ய வேண்டும் என்று கோரிக்கை வந்துள்ளதா? அப்படி வந்த காரணத்தினால் இந்தக் குறைபாடுகளை நீக்குவதற்கு என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று பொதுவாக மக்களுக்கு அறிவிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மேல் கல்வி அதிகாரிகள் சென்று அந்த அலுவலகக் கணக்குகளைத் தணிக்கை செய்திருக்கிறார்கள். அதிலே சில குறைபாடுகள் சொல்லப் பட்டிருக்கின்றன. அந்தக் குறைபாடுகளை இயக்குநருக்கு எழுதி அனுப்பியிருக்கிறார்கள். இயக்குநர் அவர்கள் உரியவர்களிடம் சமாதானமும் விளக்கமும் கேட்டிருக்கிறார்கள். அதற்கு சமா தானம் சரியாக இல்லாவிட்டால் மேற்கொண்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும். நான் முதலிலே சொன்னமாதிரி ஆடிட் வகையில் கணக்குப் பார்க்கிறபொழுது சில குறைபாடுகள் சுட்டிக்காட்டப் பட்டன. அவர்கள் நடந்துகொண்ட விதத்தில் ஏதாவது முறை கேடாக செயல்பட்டிருப்பார்களானால், ஒழுங்குப்படுத்துகிற முறையில் அதைப்பற்றி தனியாக அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

ஓமியோபதி மருந்தகங்கள்

*8 வினா—**திரு. எம். சுரேந்திரன் :** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமியோபதி மருந்தகங்கள் நமது மாநிலத்தில் தற்போது எங்கெங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளன?

(இ) வியாதியஸ்தர்கள் தங்கி மருத்துவம் பெற படுக்கைகள் உள்ள ஆஸ்பத்திரிகளை நிறுவ அரசு மேற்கொண்ட நடவடிக்கை கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இம்மாநிலத்தில் ஓமியோபதி மருந்தகங்கள் அரசினரால் இன்னும் ஏற்படுத்தப்பட வில்லை.

(இ) ஓமியோபதி மருத்துவக் கல்லூரியையும் மருத்துவ மனையையும் அரசே தொடங்குவதா அல்லது தமிழ்நாடு ஓமியோ பதி குழுவின் நிபந்தனைகளுக்குட்பட்டு அதனால் அங்கீகரிக்கப்பட

1973 ஆகஸ்டு 4]

வேண்டிய ஓமியோபதி மருத்துவ முறை கற்பிக்கும் தனியார் நிறுவனங்களே தொடங்குவதா என்பது பற்றி இன்னும் எல்லா வகையாலும் பரிசீலிக்க வேண்டியுள்ளது. மு.ப. 9-30

திரு. எம். சுரேந்திரன் : சார், ஓமியோபதி வைத்திய முறை எளிதாகவும் சீராகவும் ஏற்படுத்தப்பட்டால் அதன்மூலம் சாதாரண மக்களுக்கும் சிறந்தமுறையில் வைத்தியம் செய்ய பயன்படும் என்ற காரணத்தால், அரசாங்கம் இந்த ஓமியோபதி வைத்திய முறையை ஆங்காங்கே கிராமங்களிலும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஓமியோபதி கவுன்சில் உருவாக்கப்பட்டு ஓராண்டு காலம் ஆகிறது. அதனுடைய சட்டத்திட்டங்களின் அடிப்படையில் விதிமுறைகள் உருவாக்கப்பட ஏறத்தாழ 8, 10 திங்கள் ஆகிவிட்டன. அதன்பிறகு அந்த நிபந்தனைகள் அச்சேற்றப்பெற்று, சரிபார்க்கப்பட்டு, வெளி யிடப்பட்டிருக்கின்றன. அதன்படி சிகிச்சை அளிக்க விரும்பு பவர்கள் தங்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டும். பதிவு செய்து கொள்வதற்கு 10 ஆண்டு காலம் ஏற்கெனவே ஓமியோபதி துறையில் அனுபவம் பெற்றவர்கள் அல்லது முறைப்படி பயிற்சி பெற்றவர்கள் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து சான்றிதழ் பெற்றவர்கள்—இவர்கள் தகுதி படைத்தவர்களாகின் றார்கள். அப்படி பதிவு செய்து கொண்டவர்கள் யார் யார் கிராமப்புறங்களுக்கு அல்லது ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சென்று பணிபுரிய விரும்புகிறார்கள் என்று பார்த்து, அவர்களுக்கு அனுமதி வழங்க வேண்டும். அதையெல்லாம் நன்றாக பரிசீலித்து செய்ய வேண்டியிருப்பதால் இந்த ஏற்பாட்டை கிராமப்புறங் களுக்கு விரிவுபடுத்த இன்னும் சிறிது காலம் ஆகும்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவரவர்களே, ஓமியோபதி வைத்திய முறையின் மூலமாக சிகிச்சைப்பெற்றால் நோய் குணமாக நீண்ட காலமாகிறது. அதனால் மக்கள் அதை அதிகமாக விரும்பவில்லை. மக்கள் விரும்பாத காரணத்தால் ஓமியோபதி மருத்துவ மனையை மூடிவிட வேண்டுமென்று எங்கள் பகுதியிலுள்ள நகராட்சி ஒரு தீர்மானத்தைப்போட்டு அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறது. அதை மூடிவிடுவதற்கு அரசாங்கம் அனுமதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[1973 ஆகஸ்ட் 4

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, "நோய் நாடி நோய்முதனுடி அதுதணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்" என்று வள்ளுவர் கூறியிருப்பதை எண்ணிப்பார்த்தால் சில நோய்கள் உடனடியாகத் தணிந்துவிட்டால் அது உடலுக்குக் கெடுதல் என்று தெரியும். அந்த நோய் நீண்டகாலம் இருந்து, முற்றிலும் குணமடைவதுதான் உடலுக்குப் பாதுகாப்பு. எல்லா நோய்களும் உடனடியாக தீர்ந்துவிடுவது நல்லது என்று சொல்ல முடியாது. தலைவலிக்கு மாத்திரை சாப்பிட போய் வேறு நோய்க்கு ஆட்பட வேண்டிவந்துவிட்டது என்று சிலர் சொல்வார்கள். அலோபதி முறையில் அப்படிப்பட்ட நிலை இல்லாமல் நீண்ட சிகிச்சைக்குப் பின்னுல் குணம் கிடைக்கிறது. ஆகவே இந்த முறை தவருனது என்று சொல்லிவிடக் கூடாது. அதைப் பயன் படுத்துகிறவர்கள் அதிலே நம்பிக்கை வைக்கவேண்டும். அப்போது தான் இந்த மருத்துவமுறை மேலும் விரிவுபெற முடியும்; நாளடைவில் அதிகமான வரவேற்பு இருக்கும். ஆகவே, மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தபடி நகராட்சி ஓமியோபதி மருத்துவ மனையை மூடிவிட அரசு உத்தேசிக்காது.

Mental Hospital at Madras

* 9. Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Health be pleased to state the details of the improvement proposed for the extension of the Kilpauk Government Mental Hospital?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கடுமையான மனநோய் உள்ள மனநோயாளிக்கென ரூ. 2.20 லட்சம் செலவில் 20 படுக்கைகள் கொண்ட பகுதி ஒன்றை 1973-74-ல் கட்ட அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இம்மாநிலத்திலே வேறு பகுதிகளில் இருக்கிற மக்களுக்கும் வசதியாக இருக்கும்படியாக இந்த மனநோய் மருத்துவப் பிரிவு விரிவுபடுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்த மனநோய் மருத்துவப் பிரிவு பெரிய அளவில் அமைந்திருப்பது சென்னையில் கீழ்ப்பாக்கத்தில்தான். அதைப்போல் பெரிய அளவிலான ஒரு மருத்துவ மனையை ஏற்படுத்த வேண்டுமென்று திட்டமிட்டாலும் அது முடிவுபெற 8 அல்லது 10 ஆண்டுகள் ஆகும். இப்போது மனநோய் சிகிச்சை பிரிவு ஒன்றை மாவட்ட மருந்தகங்களில் தொடங்க உத்தேசிக்கப்பட்டு, சில இடங்களில் தொடங்கப்பட்டிருக்கிறது. மேலும் மனநோய் சிகிச்சையில் 'டிப்ளமோ' தகுதி பெற்றவர்கள் இருந்தால் மாவட்ட மருந்தகங் களில் எல்லாம் இந்தப் பிரிவை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப் படும்.

1973 ஆகஸ்டு 4]

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, மனநோய் மருத்துவ மனைகளில் செவிலியர்கள் என்று சொல்லக்கூடிய பெண் நர்சுகளைப் போடுகின்ற காரணத்தினுல் சில நேரங்களில் அசம்பாவிதங்கள் ஏற்பட்டு விடுகின்றன. சென்ற ஆண்டுகூட அப்படி ஒரு அசம்பாவிதம் ஏற்பட்டுவிட்டது. ஒரு நோயாளி ஒரு நர்சை கட்டிப்பிடித்து, கடித்து விட்டான். ஆகவே அம்மாதிரியான இடங்களில் ஆண் நர்சுகளைப் போட அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, தனிப்பட்ட ஒரு நிகழ்ச்சியை வைத்துக்கொண்டு முடிவு செய்வது தவறு. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னமாதிரி மனநோய் பிடித்த நோயாளிதான் இந்தமாதிரி தவறு செய்தான் என்றல்ல; மனநோய் இல்லாத மற்றவர்களும் இந்தமாதிரி செய்தார்கள் என்று நாம் கேள்விப்படுகிறோம்; பத்திரிகையில் பார்க்கிறோம். மனநோயாளிகளுக்கு ஒரு ஆறுதல் கிடைக்கவேண்டும். அவர் களுக்கு அன்போடும் பண்போடும் மருந்துகள், உணவுகள் வழங்கப்படவேண்டும். அதைத் தாய்மை உள்ளம் படைத்த செவிலியர்களால்தான் செய்ய முடியும். செவிலியர்கள் அவர் களுக்கு அன்போடு உணவும் மருந்தும் கொடுக்கும்போது அவர் களுக்கு ஆறுதல் ஏற்படுகிறது. அதேமாதிரி ஆண் செவிலியர்களால் செய்ய முடியாது.

Buildings for Government Hospital at Komarapalayam

* 10. Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Health be pltased to state—

(a) whether the Marichettiar Trust in Komarapalayam have donated buildings for housing the Government Hospital; and

(b) if so, the details thereof?

[1973 ஆகஸ்ட் 4

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்த மாரிச்செட்டியார் பொறுப்புக்கழகம் தற்போது குமாரபாளை யத்தில் உள்ள அரசினர் மருத்துவ மனைக்கு, மேல்நிலை நீர்த் தொட்டி அடங்கிய 18 படுக்கைகள் கொண்ட வார்டு ஒன்று, பொது அறை ஒன்று, சுகாதார அறை ஒன்று ஆகியவை அடங்கிய ஒரு மாடிக்கட்டடத்தை நன்கொடையாக வழங்கியிருக்கிறது. அதன் மொத்த மதிப்பீடு 2.50 லட்சம் ரூபாய்.

Sale of Drugs

* 11. Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether a number of Drug Stores owners were prosecuted for selling Drugs at inflated prices in Chintadripet in Madras in January 1973; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) 1973 ஜனவரி மாதத்தில் சிந்தாதிரிப்பேட்டையைச் சேர்ந்த இரு மருந்து வியாபாரிகள் மீது வழக்கு தொடரப்பட்டது.

(இ) (1) சாந்தி மெடிக்கல் ஸ்டோர்ஸ், சென்னை-2.

(2) மாடர்ன் டிரக் ஸ்டோர்ஸ், சென்னை-2.

THIRU N. DENNIS : Sir, whether the Government would consider the cancellation of licences of such black-marketeers?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, மருந்து விற்பனையில் பலவேறு வகைகளில் தவறுகள் ஏற்படுகின்றன. நிர்ணயித்த விலைக்கு அதிகமாக விற்பனை செய்வது ஒரு தவறு. அதற்கு நீதிமன்றங்கள் மூலமாகத்தான் தண்டனை வழங்குகிற முறை இருக்கிறது. இன்னொரு முறை மருந்தின் தன்மையை பாதிக்கும் அளவில் அதன் தரத்தைக் குறைத்தல், கலப்படம் செய்தல், அதனால் உயிருக்கே சில நேரங்களில் தீங்கு ஏற்படுதல் ஆகும். அப்படிப்பட்டத் தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுடைய லைசென்சை நிறுத்திவிடலாம் என்ற முடிவு எடுக்கப்படுகிறது. சம்பந்தப்பட்ட இந்தப் பிரச்சினையில் அவர்கள் அதிக விலைக்கு மருந்தை விற்றார்கள் என்பதற்காக வழக்குத் தொடரப்பட்டு, அது முடிவு பெறக்கூடிய நாளில் அந்த நாள்

1973 ஆகஸ்ட் 4]

முழுவதும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டு, 300 ரூபாய் அபராதமும் போடப்பட்டிருக்கிறது. 'ப்ரொபேஷன் ஆஃப் அஃபன்டர்ஸ் ஆக்ட்'படி அவர்கள் தண்டனை பெற்று விடுதலை பெற்றிருக்கிறார்கள். இப்படி கோர்ட்டிலே அவர்களுக்கு தீர்ப்பு வழங்கியிருப்பதால், இனிமேல் அவர்களுடைய தவறான போக்கு மாறும் என்று நம்பப்படுகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, அதிக விலைக்கு மருந்துகளை விற்பனை செய்வதையும், கலப்படம் செய் வதையும் கண்காணித்து துரித நடவடிக்கை எடுக்க அரசு என்ன நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அவ்வப் போது 'டிரக் இன்ஸ்பெக்டர்கள்' மருந்து விற்பனை செய்யும் கடைகளைத் திடீரென்று சோதனை செய்து, அம்மாதிரியான தவறுகள் நடைபெற்றிருக்கின்றனவா என்பதை அவர்கள் விற்பனை செய்திருக்கின்ற மருந்துப் பட்டியல்களைப் பார்த்துக் கண்டுபிடிக்கிறார்கள். தினந்தோறும் இம்மாதிரியான சோதனைகள் நடைபெற்றால் அதிலிருந்து தப்பிவிடுவார்கள் என்பதால் அவர்களுக்குத் தெரியாமல் திடீரென்று போய் 'செக்' பண்ணும் முறை இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், டிரக் இன்ஸ்பெக்டர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருப்பதால், அவர்கள் எல்லா இடங்களுக்கும் காலாகாலங்களில் சென்று செக் பண்ண முடியாத தால பல இடங்களில் இப்படிப்பட்ட தவறுகள் நடைபெறு கின்றன. ஆகவே அவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அகில இந்தியாவிலே கூட— மத்திய அரசு கூட இந்தப் பிரச்சினையில் நீண்டகாலமாகச் சிக்கிக் கொண்டிருக்கிறது. அதிலே ஒரு தெளிவு ஏற்பட்ட பிறகு தமிழக அரசு அதைப்பற்றி பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அங்கத்தினர் அவர்கள் பேசும் போது அவரவர் இருக்கையில் இருந்து பேச வேண்டும். திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் இப்போது அவர்களுடைய இருக்கையில் இல்லை. இடம் மாறியிருக்கிறார்கள்,

[1973 ஆகஸ்ட் 4

திருமதி த. ந. அனந்தநாயகி : நான் என்னுடைய இடத்தில் தான் இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது உங்கள் இடம் இல்லை. உங்கள் இடம் உறுப்பினர்கள் திரு. அழகர்சாமி, சௌடி சுந்தர பாரதி இவர்களுக்கு மத்தியில் இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : நான் இங்கே இருப்பது வசதியாக இருக்கிறது. நான் ஒரு பெண் உறுப்பினர் என்ற முறையில் இந்த இடத்தை எனக்கு ஒதுக்கித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

Sir may I make a request to the Chair? Because I happen to be a Lady Member, kindly transfer my seat to the corner so that it may be convenient to other hon. Members also.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, சில மருந்துகள் அதிக விலைக்கு விற்று வருகின்ற காரணத்தினால் இந்த மருந்துகளின் விலைப் பட்டியலை அந்தந்த மருந்துக் கடைகளில் போட்டுவைப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா? அப்படிச் செய்தால் அதைப் பார்த்து மக்கள் வாங்கிக்கொள்வதற்கு வசதி ஏற்படும்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அதைப் பற்றிய விவரம் என்னிடம் இல்லை. அதைப் பரிசீலித்து, நல்ல முறையாக இருந்தால் அதைச் செயல்படுத்த இலாகாவினரைக் கேட்டுக்கொள்ளலாம்.

Prevention of students from becoming drug addicts

* 12. *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there is any proposal to prevent the students becoming drug addicts in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

1973 ஆகஸ்ட் 4]

திரு. என். கே. பழனிசாமி : இங்கு வருகிற ஹிப்பிகள் மாணவர்களோடு தொடர்பு கொண்டு, அவர்களுக்குப் போதைப் பொருள்களைத் தருவதும், மாணவர்கள் அந்தப் போதைப் பொருள்களை உபயோகப்படுத்துவதையும் சர்க்கார் பரிசீலனை செய்து தடுக்க நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, 'Whether there is any proposal to prevent students from becoming drug addicts in the State என்பது மூலக் கேள்வி. மாணவர்கள் அதிகமாக போதைப் பொருள்களை உண்டுவருகிறார்கள் என்று ஒப்புக்கொள்ளக் கூடிய அளவுக்கு ஆதாரம் எதுவும் இல்லை. முதல் கேள்வியையே ஒப்புக்கொண்டால்தான் இரண்டாவது கேள்வியே எழுகிறது. எங்காவது சில இடத்தில் குறை இருக்கக்கூடும். இந்தக் கேள்விக்கு மருத்துவத் துறையினர் தந்திருக்கக்கூடிய பதில்

The Director of Medical Education has reported that according to the Deans and Principals of the State Medical Colleges, there has been no instance of drug addiction among students of medical colleges and so the question of preventing medical students from becoming drug addicts in this State, does not arise.என்பதாகும். ஆனால், இன்னொரு பக்கம் போதை தரக்கூடிய சில மருந்துகள் அதிகமாக விற்பனையாகிறது என்பது ஒரு கருத்தாக இருக்கிறது. அது பரிசீலிக்கப்பட்டும் வருகிறது. போதை தரும் மருந்துப் பொருள்களை டாக்டர் ப்ரிஸ்க்ருப்ஷன் இல்லாமல் யாருக்கும் விற்பனை செய்யக்கூடாது என்கிற கருத்தும் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. அதைத்தவிர வேறு சில மாணவர்கள் பரவலாக, நிரம்ப போதை தரும் மருந்துப் பொருள்களைச் சாப்பிடுகிற சூழ்நிலை இருப்பதாக எந்தவிதமான குறிப்பும் அரசுக்கு இல்லை.

திரு. ஆ. பரந்தாமன் : சில மருத்துவக் கல்லூரிகளோடு இணைந்திருக்கின்ற மருத்துவ மனைகளில் பெத்தடீன் ஊசிகளை சிலர் போட்டுக்கொள்கிறார்கள் என்று தெரிகிறதே, அதனைத் தடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அதுவும் ஆயிரத்தில் ஒன்றாகத்தான் இருக்கும். உடல் கோளாறு காரணமாக மிகவும் பரிதாபத்திற்குரிய நிலை ஏற்படுகிறபோதுதான் சிலர் அந்தப்

[1973 ஆகஸ்ட் 4

பழக்கத்திற்கு ஆளாகிறார்கள். பெத்தடீன் போட்டுக்கொள்வதால் அவர்கள் சீராகச் செயல்பட முடியாத நிலைமைதான் ஏற்படும் என்பதால் அந்தந்த இலாக்காவில் உள்ள மேலதிகாரிகள் அவர்களுக்கு அறிவுரை கூறி நடவடிக்கை எடுத்துக்கொள்ள முன் வருவார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : ஹிப்பீஸ் போன்றவர்கள் போதைதரும் மருந்துகளை விற்பனை செய்கிறார்கள். அவர்களும் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த மாதிரியான நிலைமை அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா ? அப்படி வந்திருந்தால் அதைத் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஹிப்பீஸ் பற்றி தெரிவித்திருக்கும் கருத்தை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அறிவார்கள் என்று நினைக்கிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ ஹிப்பீஸ் செல்வாக்கு வேரூன்றவில்லை. அவர்களுடைய செல்வாக்கு இங்கே ஏற்படாத அளவுக்கு நம்முடைய தமிழகத்தின் பண்பாடு நம்மைக் காப்பாற்றும் என்று நம்புகிறேன். எனவே, அதன் தொடர் விளைவுகளும் தமிழகத்தில் குறைவாகத் தான் இருக்கும் என்று நம்புகிறேன்.

கடற்பகுதிகளில் மீன் பிடித்தல் குறித்த ஆய்வு.

*13. **வினா—திருமதி த. ந. அனந்தநாயகி :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நமது கடலில் எந்தெந்த இடத்தில் எந்தெந்த ரகமான மீன்கள் இருக்கின்றன என்பது பற்றி சர்வே செய்யப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஆம். நமது கடற்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட மீன்பிடி சுற்றாய் வினால் கிடைத்த விவரங்கள் பின்வருமாறு—

பொதுவாக கிழக்குக் கடற்கரையையொட்டி கீழ்க்கண்ட வாணிக முக்கியத்துவம் வாய்ந்த மீன்கள் பிடிக்கப்படுகின்றன,

1973 ஆகஸ்ட் 4]

(1) காறல், (2) பன்னா, கூரல், (3) சாவாளை, (4) நகரை, சென்னைடல், (5) துமிளி, (6) உளுவை, (7) திருக்கை, (8) சுறா, (9) நாக்கு, (10) வாவல், (11) வஞ்சிரம், (12) நண்டு, (13) இறால். மற்றும் தமிழ்நாட்டின் சில குறிப்பிட்ட பகுதிகளில் முக்கியமாகக் கிடைக்கும் மீன் இனங்கள் பற்றிய விவரம் பின்வருமாறு :—

இடத்தின் பெயர்.	பிடிபடும் மீன் இனங்கள்.
(1) மன்னார் வளைகுடா	ஆழ்கடல் இறால். ஆழ்கடல் சிங்கி இறால்.
(2) மண்டபம், இராமேஸ்வரம்	காரல், கெளித்தி, சுதும்பு, இறால்.
(3) கன்னியாகுமரி	சிங்கி இறால்.
(4) வாட்ஜ்பேங்க்	பார்மீன்கள் எனப்படும் குருவிலி, செப்பிலி.
(5) எண்ணூர், பழவேற்காடு	இறால்.

புதுரக மீன்பிடி வலைகள்

*14. **வினா—திருமதி த. ந. அனந்தநாயகி :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாள் ஒன்றுக்கு 50 டன் வீதம் மீன் பிடிக்க வல்ல பர்சீன் வலைகளை அண்மையில் மண்டபத்தில் பரிசோதித்துப் பார்க்கப் பட்டதா ?

(இ) ஆமெனில், அந்த வலையை உபயோகிக்க அரசு திட்டமிட்டுள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம் .

(இ) மண்டபம் மீன்துறை படகு கட்டும் நிலையத்தில் இவ் வலையை உபயோகிக்கப்படுவதற்கான வசதிகள் கொண்ட 50 அடி நீளமுடைய விசைப்படகொன்று (Combination Type) கட்டப்பட்டு வருகிறது. இப் படகு கட்டி பூர்த்தியானவுடன் "பர்சீன்" வலை உபயோகிப்பது பற்றிய பரிசோதனைகள் தொடர்ந்து நடத்தப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : நம்முடைய தமிழகத்தில் நீண்ட கடற்கரை இருந்தும் மீன்பிடித் தொழில் வளர்ச்சிபெற வில்லை. காரணம் பலயிடங்களில் இந்தத் தொழில் அபிவிருத்தி

செய்யப்படுவதற்கான நடவடிக்கைகளுக்கு மாருக நார்வேஜியன் ஷிப் கொண்டு அவர்களே போய் மீன்பிடித்து வந்துவிடுகிருர்கள் என்று சொல்லப்படுகிறது. அந்நிய நாட்டுடன் தொடர்பு கொண்டாவது—இந்தத் தொழில் அபிவிருத்தி அடைவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: மீன் பிடித் தொழில் வளர்ச்சி அடைய வேண்டும் என்பதற்காக பல்வேறு கருத்தரங்குகளைத் தமிழக அரசு நடத்தி வருகிறது. நம்மிடத்திலுள்ள ஒரு முக்கியமான குறை பெரிய படகுகள் இல்லை, பெரிய படகுகளைக் கட்டுகிற துறை இல்லை என்பதாகும். 43-50-க்கு பெரிய படகுகளைக் கட்டுகிற திட்டத்தை மேற்கொண்டு, போலந்து நாட்டுடன் ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிற காரணத்தினுல் படகு அமைக்கும் துறை அமையவும் வாய்ப்பு இருக்கிறது. அதன் பிறகு தொடர்ந்து இத்தொழிலில் நல்ல வளர்ச்சியைக் காண முடியும் என்று நம்புகிறேன்.

திரு. வை. பாலசுந்தரம்: சில மீன்கள் என்ன சிறப்பான வலையைப் போட்டாலும் சிக்குவது இல்லை என்று தெரிகிறது. வலையில் சிக்காத மீன்களைப் பிடிக்க திட்டம் இருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன். (சிரிப்பு.)

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அதைத் தனிப் பட்டவர்கள் தான் தூண்டில் போட்டு ஒவ்வொன்ருகப் பிடிக்க வேண்டும். (சிரிப்பு.)

திருமதி த. ந. அனந்தநாயகி: பெரிய படகுகள் இல்லாத காரணத்தினுல் இந்தத் தொழில் வளர்ச்சி அடையவில்லை என்பது போலச் சொல்கிருர்கள். இன்றைக்கு 32 அடி படகுகளை வாங்கின வர்கள்தான் சுமாராக இருக்கிருர்கள். 36 அடி படகுகளை வாங்கியவர்கள் மூழ்கியே போய்விட்டார்கள். இதுபற்றி அரசு ஒரு நிபுணர் கமிட்டியைப் போட்டாவது எந்த எந்த வகையில் இந்தத் தொழில் வளர்ச்சி அடைய நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம் என்பதைப் பரிசீலிப்பார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: 36 அடி படகு வாங்கியவர்கள் மூழ்கியே போய்விட்டார்கள் என்று சொல்வது தவறு. எந்தக் காரணத்தினுல் அப்படிச் சொல்கிருர்கள்

என்பதைத் தெரிவிக்க வேண்டும். 36 அடி படகு விலை அதிகமாக இருக்கிறது என்பதனுல் சிலர்தான் வாங்கியிருக்கிருர்கள். பெரும்பாலானவர்கள் 32 அடி படகைத்தான் வைத்திருக்கிருர்கள். 36 அடி படகை வைத்திருப்பவர்கள் நஷ்டம் அடைகிருர்கள் என்று கூறுவதற்கில்லை. அப்படி ஏதாவது குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட நிகழ்ச்சி இருந்தால் அதை எடுத்துச் சொன்னுல் நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

கும்மிடிப்பூண்டித் துணைவட்டத்தில் மீன்பிடித் துறைகள்

*15. **வின—திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடை பளிப்பாரா—

(அ) கும்மிடிப்பூண்டித் துணை வட்டத்தில் உள்ள சுண்ணும்புக்குளம், ஆரம்பாக்கம் பகுதி மீனவர்கள் தம் படகுகளை தாம் வசிக்கும் பகுதிகளுக்கே எளிதில் கொண்டு வர "சிறு துறைகள்" அமைக்கும் திட்டம் நிறைவேற்றப்படுவதில் ஏற்படும் கால தாமதத்திற்கான காரணங்கள் யாவை ?

(இ) இது எப்போது நிறைவேறும் ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) & (இ) 650 லட்சம் ரூபாய் செலவில் சென்னையில் ஒரு பெரிய மீன்பிடி துறைமுகம் அண்மையில் கட்டப்படவிருப்பதால், சுண்ணும்புக் குளம், ஆரம்பாக்கம் பகுதிகளைக்கொண்ட பழவேற்காட்டில் பெரிய துறைகளைக் கட்டுவதற்கு இந்திய அரசு விரும்பவில்லை.

இருப்பினும், தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டுள்ள துறைமுக ஆய்வுக்குழு கடலோரப் பகுதிகளை ஆய்வு செய்யும் போது, பழவேற்காடு போன்ற இடங்களும் ஆய்வு செய்யப்பட்டு, அதன் முடிவு தெரிந்த பின்னர், மேல் நடவடிக்கை எடுக்கப் படும்.

திரு. கா. வேழவேந்தன்: மேற்சொன்ன திட்டங்கள் பரவலாக மீனவர்களுக்குப் பயன்படும் என்ருலும் சுண்ணும்புக் குளம், ஆரம்பாக்கம் கிராமப்புறத்திலுள்ள மக்கள் கட்டுமரங்களைத் தாம் வாழும் பகுதிகளுக்கு எடுத்துப்போக சிறு துறைகள்

வேண்டுமென்று சொல்கிறார்கள். அரசாங்கம் இதைக் கவனித்து அங்கங்கே சிறு துறைகள் ஏற்படவும் நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: பழவேற்காடு பகுதியில் துறைமுக ஆய்வுக்குழு பரிசீலனை செய்திருக்கிறார்கள். அவர்களது ஆய்வு முடிந்த பிறகு என்ன என்ன வசதிகளைச் செய்துகொடுக்க முடியும் என்பதுபற்றி முடிவு செய்யலாம். சுண்ணாம்புக்குளம், ஆரம்பாக்கம் பகுதியில் நிறைய மணல் திட்டுகள் இருக்கின்றன. படகுகள் செல்ல முடியவில்லை, மணல் வாரி இயந்திரம் வைத்து மணல் திட்டை அகற்றுவதை விட மனித உழைப்பால் ஆட்களையே வைத்து மணலை அகற்றலாம், இதற்காகக் கிராம மக்களுக்கு நிதி உதவி அளிக்கலாம் என்ற செயற்குறிப்பு மீன்வளத் துறையின் பரிசீலனையிலிருக்கிறது.

நாட்டுப் படகுகளுக்கு இயந்திரங்கள் பொருத்துதல்

*16. வினா—**திருமதி த. ந. அனந்தநாயகி:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்திய-பெல்ஜிய திட்டத்தின் கீழ், செயல்படுத்தப்பட்டு வரும் நாட்டுப் படகுகளுக்கு இயந்திரத்தைப் பொருத்தும் திட்டத்தை மற்ற மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: ஆம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அப்படி எத்தனை போட்டுகள் கட்டப்பட்டிருக்கின்றன என்பதை அரசு தெரிவிக்குமா? 36 அடி போட்டுகளைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த போட்டுகளில் கட்டிடம் சரியில்லை. கிரேக்ஸ் வந்திருக்கிறது. ஏர் கூலர் என்ற மெஷின்களை வைத்திருக்கிறார்கள். ஏரே போவதில்லை. ஏர் போனால்தானே. கூல் ஆக்க முடியும்? இதுமாதிரி பல டிபெக்ட்டுகள் இருப்பதால் 36 அடி போட்டுகள் வாங்கியவர்கள் அப்படியே வைத்திருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது,

கன்ட்ரிபோட்டை மெக்கனைஸ் பண்ணுவது நன்றாக இருக்குமா? மற்ற மாவட்டங்களுக்கு இதை விஸ்தரிக்குமா என்பதை அரசு தெரிவிக்குமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இந்தப் படகுகள், கட்டுமரத்திலே அவுட்போர்டு வைத்து ஏறத்தாழ 100 படகுகள் முட்டத்திலே இருக்கின்றன. அது. இந்திய அரசாங்கத்தின் Indian Freedom from Hunger Campaign Society மூலமாக Food and Agriculture Department மூலமாகக் கிடைக்கிறது. வெளிநாடுகளிலிருந்து பல நிறுவனங்கள், இவைகளையெல்லாம், இதுபோன்ற இன்ஜின்களையெல்லாம் இலவசமாகத் தருகிறார்கள், பரிசாகத் தருகிறார்கள். அதன் விலை ரூ. 4,000 வெளி நாட்டிலிருந்து இந்திய நாட்டிற்கு அதைக் கொண்டு வர ரூ. 2,000 வரி கட்ட வேண்டியிருக்கிறது. மீனவர்கள் ரூ. 2,000 மாத்திரம் கொடுத்துவிட்டு படகுகளை வாங்குவதற்கு முட்டத்திலே வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அதை ஏற்பாடு செய்து, முட்டத்திலே இருக்கிற மீனவர்கள் 100 பேர்களுக்கு இந்த சொஸைட்டியின் மூலமாக, இந்தப் படகுகள் வாங்கித் தரப்பட்டிருக்கின்றன. அவைகளின் மூலமாக, சாதாரணக்கட்டுமரத்திலே மீன் பிடிப்பதைவிட அதிகமாக, இந்த அவுட்போர்டு வைத்த படகிலே அதிக அளவிலே மீன்பிடிக்க முடியும் என்ற முடிவுக்கு வந்திருக்கிற காரணத்தினால் மற்ற இடங்களுக்கும் இதை விஸ்தரிக்கலாம் என்று இந்தத் துறை மத்திய அரசுக்கு எழுதி இருக்கிறது. மத்திய அரசு இந்த Indian Freedom from Hunger Campaign Society யோடு தொடர்பு கொண்டு மேன் மேலும் அவைகளைப் பெற்றுத் தருவார்களானால், மற்ற இடங்களுக்கும் இந்த அவுட்போர்டு இன்ஜின்களைக் கொடுக்க அரசு முன்வரும்.

உறுப்பினர் அவர்கள் பேசும்போது இடையிலே 36 அடி போட்டுகள் கட்டியது தவறு என்று கூறுகிறார்கள். கேட்ட கேள்வி வேறு, அவர்கள் இடையிலே இணைத்துக் கேட்கின்ற கேள்வி வேறு. உறுப்பினர் அவர்களே குறைபாடுகளைச் சுட்டிக் காட்டலாம். குறைபாடுகள் இருந்தால், சுட்டிக்காட்டப்பட்டால், அவற்றைத் தீர்க்க அரசு என்றைக்குமே முன்வரும்.

சென்னைத் துறைமுகத்திற்குப் புதிய கலங்கரை விளக்கு

** 17. வினா—திரு. அ. தேவேந்திரன் :*
திரு. என். டென்னிஸ் :
திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னைத் துறைமுகத்திற்குப் புதிய கலங்கரை விளக்கு அமைக்கும் திட்டத்தை நிறைவேற்றுமாறு மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்தியுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : திட்டம் தொடங்கப்பட்டு விட்டது.

திரு. அ. தேவேந்திரன் : தலைவர் அவர்களே, இதற்காகும் செலவை மாநில அரசு ஏற்கிறதா அல்லது மத்திய அரசு ஏற்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மத்திய அரசுதான் ஏற்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்தப் புதிய கலங்கரை விளக்கு அமைப்பதற்கு அவசியம் என்ன? இது எத்தனை கோடி செலவிலே கட்டப்படுகிறது என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஏற்கனவே இருந்த பழைய கலங்கரை விளக்கத்தில் சில சேதாரங்கள் ஏற்பட்டுள்ளதுடன், கொடி இயல் சாதனமும் மிகப் பழமையானதாக உள்ளது. காலத்திற்கேற்றவாறு புதுமையான மாறுதல் செய்ய வேண்டுமென்று புதிய கலங்கரை விளக்கு ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். இதற்கு செலவு கோடிக்கணக்கில் அல்ல. இலட்சக்கணக்கில், ரூ. 29 இலட்சம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : ஹைகோர்ட்டிலே ஒரு லைட் ஹவுஸ் ஏற்கனவே இருக்கிறது. அதைப் பொதுமக்கள் பார்க்க வருகிறார்கள். இதனால் வருமானம் வேறு வருகிறது கோர்ட்டுக்கு. இப்பொழுது புதிதாக லைட் ஹவுஸ் கட்டினால் ஹைகோர்ட்டுக்கு வருகிற வருமானம் கெட்டுப் போய்விடுமே, ஆகவே, பழையது

இருக்கும்போது புதிதாக அமைப்பதற்கு வேண்டிய அவசியம் என்ன ? இப்பொழுதுள்ளது இதுவரை பழையதாகவில்லையென்று கருதுகிறேன். காரணம், மக்கள் எல்லோரும் போய்க்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, திடீரென்று புதியதை அமைப்பதற்கான அவசியம் என்னவென்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU P. U. SHANMUGAM : The dome has developed some cracks and the optical defect was noticed in this old Light-house. This is a very old Light-house which needs modernisation. We are fitting electric lift in this new Light House.

திரு. இராம. அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, இந்தக் கலங்கரை விளக்கு கட்ட வேண்டுமென்கிற எண்ணம் இந்த அரசுக்கு ஏற்பட்டு செயல்படுத்துகின்றதா, அல்லது மத்திய அரசு விரும்பி இந்தக் காரியத்தைச் செய்கின்றதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மத்திய அரசு விரும்பித்தான் இந்தக் காரியம் நடைபெறுகிறது.

Boat service in Cooum.

* 18. *Q.*—THIRU N. DENNIS
THIRU K. A. WAHAB Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the right to operate boat services at the Cooum has been leased out tó private parties; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) ஆம். கூவம் ஆற்றில் உல்லாசப் படகுகள் விடும் உரிமை, ஈராண்டுக் காலத்திற்குப் பூனா, திருவாளர்கள் தெர்மோரோர்ஸ் லிமிடெட் நிறுவனத்தாருக்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. குத்தகை எடுத்த நிறுவனம் அரசுக்கு ஆண்டுதோறும் இருக்கை ஒன்றுக்கு ரூ. 60 வீதம் தொகை செலுத்தும்.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, அரசு நேரடியாக நடத்துவதன்மூலம் அதிக வருமானம் கிடைக்கும் அல்லவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இதற்காகத் தனி ஒரு குழு அமைத்து, அரசு நடத்துவதைவிட, இப்படி டெண்டர் கேட்டு தனியாருக்குக் கொடுப்பது நல்லது என்று அந்தக் குழுவால் ஆலோசனை தெரிவிக்கப்பட்டு, அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. வேறு அரசாங்கம், கேரள அரசாங்கம் நடத்தி, நஷ்டம் ஏற்பட்டது என்ற அந்த அனுபவத்தைக் கொண்டு நாம் நடத்துவதைவிட, தனியாருக்குக் கொடுக்கலாம் என்று யோசனை கூறப்பட்ட பிறகு, முடிவெடுக்கப்பட்டு, டெண்டர் கோரப்பட்டு பிறகு கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. எ. வகாப்: இந்த உல்லாசப் படகிலே வசூலிக்கப்படுகின்ற தொகை அதிகப்படியாக இருப்பதால் சாதாரணப் பொதுமக்கள் இப்படகுகளில் செல்ல முடியவில்லையென்று கூறப்படுகிறது. அது தனியாருக்கு விடப்பட்டதால்தான் அப்படி இருக்கிறது என்று கூறப்படுகிறது. அதை அரசு எடுத்து நடத்த முடியவில்லையென்றால், கட்டணத்தைக் குறைத்து, சாதாரண மக்களும் உல்லாசப் பயணம் செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இவர்கள்தான் குறைந்த கட்டணத்தில் ஓட்டுவதாகச் சொன்னார்கள். எனவே அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனக்குத் தரப்பட்டிருக்கிற குறிப்பிலிருந்து இந்தக் கட்டணம் அதிகமாகக் கருதப்படவில்லை. மற்ற இடங்களைவிடக் குறைவாகத் தான் இருக்கிறது.

திரு. அ. தேவேந்திரன்: தனியார்கள் நடத்துகிற படகுகள் போதவில்லை என்பதாலும், அங்கு கூட்டம் அதிகமாக இருக்கிறது என்பதாலும் அங்கு நிறையப் படகுகளை விடுவதற்கும் அங்கே விசைப்படகுகளையும்விட தனியார் நிறுவனத்தை அரசு கேட்டுக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அவர்கள் இரண்டு ஆண்டுக் கால குத்தகை போதாது, 5 ஆண்டுக்காலம் குத்தகை வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதைப் பற்றி அரசாங்கம் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

Assistance to Zari Industry

* 19. *Q.*—THIRU N. DENNIS: Wil the Hon. the Minister for Industries bt pleased to state the details of the assistance offered by the Government to the Zari Industry in this State?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாநிலத்திலுள்ள சரிகைத் தொழிலுக்கு வேண்டிய சரிகைப்பட்டினை நியாய விலையில் தொடர்ந்து விநியோகம் செய்வதற்காக அரசு "தமிழ்நாடு சரிகைப்பட்டு நிறுவனம்" என்ற வரையறுக்கப்பட்ட பொது நிறுவனப் பிரிவு ஒன்றை அமைத்துள்ளது. இப்பிரிவு கூடிய விரைவிலேயே உற்பத்தியினைத் தொடங்கும்.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, what has happened to the proposal to start a Zari industry in Kancheepuram, for, the proposal was made some five or six years ago are that is my recollection. What is the present position of it?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: 'Zari' என்றுதான் கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதைப்பற்றிதான் கேள்வி. அதுபற்றிதான் பதில்:

சிறு தொழில்களுக்குத் தேவைப்படும் உருக்கு

* 20 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள சிறுதொழில்களுக்கு 1972-73 ஆண்டுக்குத் தேவைப்படும் உருக்கின் அளவு எவ்வளவு?

(இ) அந்த அளவுக்கு உருக்கு கிடைக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) தமிழ்நாட்டில் உள்ள சிறுதொழில்களுக்கு 1972-73 ஆண்டுக்கு தேவைப்படும் உருக்கின் அளவு 2,50,000 மெட்ரிக் டன்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

(இ) இம்மாநிலத்திலுள்ள சிறுதொழில்களின் தேவையைப் பூர்த்தி செய்ய, அதிக அளவில் பங்கீடுகள் வழங்கவேண்டுமென, இந்திய அரசை இவ்வரசு வலியுறுத்தி வருகிறது.

காவிரிப் படுகையில் எண்ணெய் வளம்.

***21. வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவிரி நதி தீரத்தில் எண்ணெய் வளம் இருப்பதைக் கண்டுபிடிக்க ஆராய்ச்சி ஏதேனும் மேற்கொள்ளப்பட்டதா ?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) ஆம். எண்ணெய் இயற்கைவாயு குழு காவிரிப் படுகையில் எண்ணெய் வளத்தைக் கண்டறிய ஆராய்ச்சி மேற்கொண்டுள்ளது. வணிக முறையில் எடுக்கக்கூடிய அளவிற்கு எண்ணெயோ அல்லது இயற்கை வாயுவோ மண்டியிருப்பதாக இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் இதுபற்றிய பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, எந்த எந்த ஊர்ப் படுகைகளில் ஆராய்ச்சிப் பணி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஊர்கள் விவரம் இல்லை. பாண்டிச்சேரிப் பகுதியிலும் நம்முடைய மாநிலத்திலே காவிரிப் படுகையிலும் இந்த ஆராய்ச்சி நடைபெற்றிருக்கிறது.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, காவிரி நதிப் படுகையிலே இந்த எண்ணெய் ஆராய்ச்சி செய்யப்படுகிறது. அதற்காகத் தோண்டுகிறார்கள். அதிலே எண்ணெய் கிடைக்காத நிலையிலே அதை முழுவதும் மூடிவிடச் சொல்லி விடுகிறார்கள். அதற்குப் பதிலாக, தண்ணீர் கிடைக்கின்ற அளவுக்கு அதை மூடி, அந்நீரை அந்தப் பகுதியிலே பாசனத்திற்குப் பயன்படுத்த அரசு முயற்சி மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நல்ல யோசனை. அவர்களுக்கு எழுதலாம்.

திரு. என். கே. பழனிசாமி : எண்ணெய் வளம்பற்றி ஏற்கனவே 'செஸ்மிக் சர்வே' நடத்தப்பட்டிருக்கிறதா ? அப்படியானால் அதன் முடிவு என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பொதுவாகச் சொன்னேன். இதிலே 'கமர்ஷியல் எக்ஸ்பிளாய்ட்டேஷன்' என்ற அளவிலே கிடைக்கவில்லையென்றுதான் மத்திய அரசாங்கம் கண்டுபிடித்திருக்கிறது.

திரு. இராம அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பே மத்திய அரசின் சார்பில் காரைக்காலிலிருந்து காரைக்குடி வரையில் இந்தச் சோதனையை நடத்த ஆரம்பிப்பதாகச் சொன்னார்கள். 10 ஆண்டுகளாகியும் இன்னும் இந்தச் சோதனை முற்றுப் பெறாததற்குக் காரணம் யார் ? நம்முடைய அரசா, மத்திய அரசா ? அறியலாமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மத்திய அரசுதான் இந்தச் சோதனையை நடத்தி வருகிறது. அவர்களுடைய முடிவு இந்தப் பகுதியிலே அதிக அளவிலே, பயன்படுத்துகிற அளவுக்கு எண்ணெயோ, வாயுவோ கிடைக்காது என்பது. இத்துடன், இன்னும் அதிக அளவில் கிடைக்கின்ற மாநிலங்களுக்கு 'பிரிஃபெரென்ஸ்', முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்றும் சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

Employees in Mint Street Branch of Government Press.

* 22 *Q.*—THIRUMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. the Minister for Transport be pleased to state :

(*a*) the number of workers employed in the Government Press at Mint Street, Madras; and

(*b*) the number of workers for whom Government accommodation has been provided?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) 4,311.

(ஆ) 300.

திருமதி த. ந. அனந்தநாயகி : தொழிலாளர்களுக்கு வசதி செய்து தரவேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிற அரசு, அதனிடம் வேலை செய்கிற 4,311 பேர்களுக்கு வசதிசெய்துகொடுக்காமல் இருக்கிறார்களே, எப்பொழுது அதைச் செய்யப்

தொழிலாளர்கள் அனைவருக்கும் அந்த வசதிகளைச் செய்து கொடுத்து வழிகாட்டியாக இருக்கக்கூடிய முறையில் அரசாங்கம் முயற்சிசெய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, படிப்படியாக அவர்களுக்கு வசதிகள் செய்துதரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 23.

THIRU K. T. K. THANGAMANI : I am trying to catch your eye. This is an important question, சார், இந்த பிரஸ்ஸைப் பொறுத்தவரையிலும் புதிதாக விரிவுப்படுத்தப்பட்டிருக்கிறதே அதனால் எத்தனை பேர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டார்கள்? அவர்கள் எந்த முறையிலே வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்கள்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அந்த விவரம் இல்லை. வீடு கட்டிக்கொடுப்பதைப் பொறுத்த வரையில்தான் விவரங்கள் என்னிடத்திலே இருக்கின்றன. அரசாங்கமே தொழிலாளர்களுக்கு 300 பேர்களுக்கு வீட்டு வசதிகளை ஏற்படுத்தித் தருகின்ற முறையிலே ஃபோர்ஷோர் எஸ்டேட், டாட்ஹண்டர் நகர், (சைதாப்பேட்டை), பி.டபிள்யு. டி. குவார்ட்டர்ஸ் ஆகிய அரசாங்க இடங்களிலே குடியமர்த்தப் பட்டிருக்கிறார்கள் என்ற செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU K. T. K. THANGAMANI : Sir, my question has not been answered in full. My original question is this. I wanted to know the number of workers in the Press and how many new workers have been recruited and how they have been recruited That is the first part of my question. The second part of my question is how many of them have been provided with quarters. The spirit of the question has not been answered in full.

THE HON. THIRU S. RAMACHANDRAN : The spirit of the question is this. Out of the total number of workers employed in the Press, how many of them have been provided with the quarters. My answer is this. Out of a total number of 4,311 workers, 300 persons have been provided wih quarters. That was the spirit and form of the question. The spirit and form of the quesion have been fully answered by the Government.

Travelling on foot-boards in buses.

* 23. *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. Minister for Transport be pleased to state the steps taken by the Government to prevent the passengers travelling on foot-boards of the Transport buses in Madras City?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சென்னை மாநகரில் பல்லவன் போக்குவரத்துப் பேருந்துகளின் படிகளில் நின்று பயணம் செய்வதைத் தவிர்க்குமாறு பொது மக்களை வேண்டிக் கொள்ளும் பத்திரிகை அறிக்கையொன்று காவல் துறைக் கமிஷனராலும் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் மக்கள் தொடர்பு அதிகாரியாலும் வெளியிடப்பட்டது. பேருந்துகளின் படிகளில் நின்று பயணம் செய்வதினின்றும் பயணிகளைத் தடுக்குமாறு பயணித் துணைகளும் மேற்பார்வைப் பணியாளரும் கட்டளையிடப் பட்டுள்ளனர்.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, இவ்வாறு பயணம் செய்வதால் பல ஆக்ஸிடெண்டுகள் ஏற்படுகின்றன. ஆகவே பயணிகள் நெருக்கடியாக உள்ள இடங்களில, அதிகமாக உள்ள வழித் தடங்களிலே அதிகமாக பஸ்களை விட அரசாங்கம் முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : எங்கெங்கு பயணிகள் அதிகமாக ஏறிச் செல்கின்றார்களோ அங்கேயெல்லாம் அதிகமான பஸ்களை விடுவதைப்பற்றி பல்லவன் போக்குவரத்துக் கழகம் யோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, கண்டக்டர்கள், டிரைவர்கள் ஆகியோருக்கு ஊக்க போனஸ் கொடுக்கப்பட்டபிறகு தான் பல நேரங்களிலே அதிகமான நெரிசல் ஏற்பட்டு பயணிகள் படிகளிலே நின்றுகொண்டு பயணம் செய்யக் கூடிய நிலைமை ஏற்படுகிறது, அதனால் பயணம் செய்யும் நேரமும் அதிகரிக்கிறது. போக்குவரத்து கார்ப்பரேஷன் டைரக்டரும் இதனை ஒப்புக் கொண்டு பத்திரிகையிலே அறிக்கையும் விட்டிருக்கிறார். எனவே, அதைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : வசூல் அடிப்படையிலே போனஸ் திட்டம் அமல்படுத்தப்பட்ட காரணத்தினாலேதான் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என்ற காரணத்தை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. அதுவும் வேண்டுமானால் ஒரு காரணமாக இருக்கலாம். மாநகரங்களிலே ஆபிஸ் நேரங்களிலே அதிகமாகப் பயணிகள் ஏறிச்செல்வது இங்கு மட்டுமல்ல, உலகத்திலே உள்ள பல பெரிய நகரங்களிலேகூட அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறது. சென்னை மாநகரத்திலே எங்கெங்கு பயணிகள் அதிகமாகச் செல்கிறார்களோ அந்த அந்த வழித்தடங்களிலே கூடுதல் பஸ் விடுவதன்மூலம் நெருக்கடியைக் குறைக்கலாம் என்பதைப்பற்றிய யோசனையை ஆராய்ந்து பார்க்கலாம்.

திரு. கோவை செழியன் : இந்த நாட்டிலே பெண்களே முன்னேறுங்கள் முன்னேறுங்கள் என்று சிலர் சொல்கிறார்கள். ஆனால் அதைச் சட்டப்பூர்வமாக்கிய பெருமை நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களையே சாரும். பஸ்களிலே பெண்கள் முன்னாலே ஏறக்கூடிய நிலைமையைச் சட்டப்பூர்வமாக ஆக்கியிருக்கிறார்களே, அது வசதியாக இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பெண்களுடைய வேண்டுகோளின்படிதான் அந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே பெண்கள் முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒத்துக்கொண்டதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். வடிவேல் : அதிகமாகக் கூட்டம் ஏற்பட்டு பஸ்களிலே நெரிசல் ஏற்படுவதற்கு டிரைவர், கண்டக்டர் பொறுப்பு அல்ல. ஆபீஸ் போயாக வேண்டுமென்ற நிலையில் நெரிசல் ஏற்பட்டு விடுகிறது, காலை நேரங்களிலும் மாலை நேரங்களிலும் அதிகமான பஸ்கள் விடவேண்டுமென்ற முறையிலே அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினருடைய கருத்துத்தான் அரசாங்கத்தினுடைய கருத்தும் ஆகும்.

Madras-Arungulam bus service

* 24 *Q.*—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Pallavan Corporation to extend bus No. 105-A from K. Chatram to Arungulam in Tiruttani taluk; and

(*b*) if so, when it will be extended?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இவ்வழித்தடம் 17—4—1973 முதற்கொண்டு கனகம்மா சத்திரத்திற்கப்பால் அருங்குளம் வரையில் நீட்டிக்கப்பட்டுள்ளது.

Madras-Perambakkam bus service.

* 25 *Q.*—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Transport be pleased to state whether there is any proposal under consideration to ply buses between Madras and Perambakkam in Tiruvellore taluk by the Pallavan Transport Corporation?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சென்னைக்கும் பேரம்பாக்கத்திற்கும் இடையில் 138-பி-ஆம் எண் வழித்தடத்தில் ஏற்கனவே ஒரு பேருந்து ஓடிக்கொண்டிருக்கிறது.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, இப்பொழுது ஒரு பஸ்தான் அங்கே சென்றுகொண்டிருக்கிறது. மேலும் இரண்டு பஸ்களை விட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஓடுகிற அந்த ஒரு பஸ்ஸும் ஓடவேண்டிய வருவாயோடு ஓடவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. நடைமுறைக் கேள்விகள்

(அ) பேரவைத் தலைவர் தேர்தலை ஆட்சேபித்து, சிலர் வெளி நடப்பு செய்தது பற்றி சுருக்க வெளியீட்டில் எதுவும் குறிப்பிடாதது குறித்து

திரு. ஏ. சுப்பிரமணியம் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், நேற்றைய கூட்ட நடவடிக்கைகளைப்பற்றி எங்களுக்குத் தரப்பட்டிருக்கிற சுருக்க வெளியீட்டில் பேரவைத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டதும், பேரவைத் தலைவரைப் பாராட்டிப் பேசியதும் ஆன விவரங்கள்தான் இருக்கின்றன. பேரவைத் தலைவர் தேர்தலை ஆட்சேபித்துச் சொல்லப்பட்ட கருத்துக்களும் எதிர்க்கட்சிகள் அதனையொட்டி செய்த வெளிநடப்பு பற்றியும் இதிலே செய்திகள் இடம் பெறவில்லை. ஏன் இடம்பெறவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வழக்கமாக 'ப்ரீஃப் ரிக்கார்டி'லே 'வாக் அவுட்' பற்றி வருவதில்லை. அச்சடித்துக் கொடுக்கப்படுகிற புத்தகத்திலே தான் அதுபற்றியெல்லாம் வரும். அன்றாடம் தரப்படுகின்ற 'ப்ரீஃப் ரிக்கார்டி'லே அது வருவது வழக்கமில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : சாதாரணமாக 'வாக் அவுட்' நிகழ்ச்சியை இதில் குறிப்பிடுவதில்லை என்பது எனக்குத் தெரியும். வாக் அவுட் செய்ததைப்பற்றிக் கட்சித் தலைவரின் பல அறிக்கைகளை நேற்றையதினம் சமர்ப்பித்தார்கள், அதைப்பற்றியெல்லாம் இதிலே சேர்க்காதது வருந்தத்தக்கது. இனிமேலாவது அப்படிப்பட்ட அறிக்கைகளையும் இதிலே பிரசுரிப்பதற்கு முன்வருவார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அன்றாடம் உறுப்பினர்களுக்குத் தரப்படுவது ப்ரீஃப் ரிக்கார்டு தான். அதிலே அவையெல்லாம் வராது. விரிவாக, அச்சடித்துக் கொடுக்கப்படுகின்ற புத்தகத்திலேதான் வரும். வாக் அவுட் வருவதில்லை என்று சொல்லும்பொழுது அதனையொட்டிய கருத்துக்களும் ஸ்டேட் ... வருவதில்லை. அப்படிப்பட்ட வழக்கமும் நம்முடைய

THIRU R. PONNAPPA NADAR : May I ask one question? The 'walk-out' is the most important thing which preceded the election of the Speaker. I think that a mention can be made even if it is a brief record of proceedings. It can be stated that a 'walk-out' has been made by so many parties. It has been purposely omitted. We have been aggrieved by the circular that has been sent by the Department. I think there is nothing wrong in making such an entry in the resume sent by the Department.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சி ஆளுங் கட்சியாக இருந்தபொழுது பல எதிர்க்கட்சிகள் வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள். அப்பொழுதெல்லாம் அதைப்பற்றிய செய்தியும் கருத்துக்களும் அன்றாடம் தரப்படுகின்ற குறிப்பில் சேர்க்கப்பட்டிருக்கிறது என்று அந்தக் கட்சியின் தலைவர் எடுத்துக்காட்டினால் நாமும் அதைப் பின்பற்ற வேண்டுமென்று அவர்கள் சொல்லலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற ப்ரீஃப் ரிக்கார்டிலே 'Government Motion'—

The Hon. Leader of the House moved that the Question Hour be suspended for the day. The motion was passed unanimously.

என்று போட்டுவிட்டு, உடனே எலக்ஷன் ஆப் ஸ்பீக்கர் என்று போட்டு

'The Deputy Speaker announced that Pulavar K. Govindan was the only member duly nominated as candidate for the election of Speaker of the Tamil Nadu Legislative Assembly and declared that Pulavar K. Govindan has been elected as Speaker.'

என்று போடப்பட்டிருக்கிறது. இங்கு இருக்கிற கட்சிகள் சிலவற்றைப் பேசினார்கள் என்பதையாவது போட்டிருக்க வேண்டும். ஸ்பீக்கர் எலக்ஷனுக்கு முன்னால் அதைப்பற்றிப் பல கட்சிகள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்குப் பிறகுதான் எலக்ஷன் நடந்தது. ஆனால் ப்ரீஃப் ரிக்கார்டிலே—பாதி நேரம் எதிர்க்கட்சிக்காரர்கள் தெரிவித்த கருத்துக்கள் தான் நடந்துகொண்டிருந்தது—பாதி நேரம் நடந்ததைப்பற்றிக் குறிப்பிடாமல் ப்ரீஃப் ரிக்கார்டு இதுதான் என்று சொல்லிக் கொடுத்

பேரவைத் தலைவர் தேர்தலை ஆட்சேபித்து சிலர் வெளி நடப்பு செய்தது பற்றி சுருக்க வெளியீட்டில் எதுவும் குறிப்பிடாதது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர் ஒரு மணி நேரம் நடக்கிறது. அதுவும் நிகழ்ச்சிதான். ஆனால், ப்ரீஃப் ரிக்கார்டிலே அது பற்றி வருவதில்லை. பாயின்ட் ஆப் ஆர்டர் ஒரு நிமிடத்திலும் முடிகிறது, சில பாயின்ட் ஆப் ஆர்டர்கள் முடிய ஒரு நாள்கூட ஆகிவிடுகிறது. பாயின்ட் ஆப் ஆர்டர் பற்றிய குறிப்பு அதிலே வருவதில்லை. அப்படி ஒரு முன்மாதிரி இல்லை. ஆகவே, அதிலே ஒன்றும் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

(3) அறிவிப்புகள்.

(அ) ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொள்வது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர்கள் 42-வது விதியின்கீழ் ஒத்திவைப்புத் தீர்மானம் என்ற முறையிலே 13-க்கும் மேற்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் சிறிது நேரத்திற்கெல்லாம் தலைவர்களைக் கொண்ட அலுவல் ஆய்வுக் குழுவில் இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களை எப்படி எந்த முறையிலே எடுத்துக்கொண்டு இந்த அவையை ஒழுங்காக நடத்துவது என்று கட்சித் தலைவர்களைக் கலந்து முடிவெடுப்பதற்காக அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டியிருக்கிறேன். ஆகவே எப்பொழுது மற்றவற்றை எடுத்துக்கொள்வதாய் இருந்தாலும், மிக முக்கியமான பிரச்னை என்ற காரணத்தினால் கன்னியாகுமரி மாவட்டத்தைப்பற்றிக் கொடுத்துள்ள ஒத்திவைப்புத் தீர்மானத்தை மட்டும் இப்பொழுது இங்கே எடுத்துக்கொள்ளலாம் என்று கருதுகிறேன். திரு. டென்னிஸ் அவர்கள், திரு. மோசஸ் அவர்கள், டாக்டர் ஹாண்டே அவர்கள் திரு. அழகர்சாமி அவர்கள், திருமதி அனந்தநாயகி அவர்கள், திரு. என். கே. பழனிசாமி அவர்கள் . . .

(2) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி

(ஆ) அமைச்சரவையின் மீது கொண்டுவரப்பட்டிருக்கும் நம்பிக்கையின்மைத் தீர்மானத்தை முதலில் எடுத்துக் கொள்வது குறித்து.

திரு. கே. ஏ. மதியழகன் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார், 55-வது விதியின்கீழ் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாங்கள் ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறோம் மற்றவர்களும் கொடுத்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

That has precedence over any adjournment motion.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அட்ஜர்ன்மென்ட் மோஷனுக்குப் பிறகு அதை எடுத்துக் கொள்ளலாம்.

திரு. கே. ஏ. மதியழகன் : அவசரப்படுகிறார்கள் முதலமைச்சரவர்கள். 55-வது விதியின்கீழ் என் பெயரிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நோட்டீஸ் கொடுத்திருக்கிறேன். அதைப்போலவே மற்றக் கட்சிக்காரர்களும் கொடுத்திருக்கிறார்கள். அதற்கான நோட்டீசைப் படித்து முடித்துவிட்டு அதற்கு 'லீவ்' இருக்கிறதா என்று கேட்பதுதான் சரியாக இருக்கும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, பேரவைத் துணைத் தலைவரின் தலைமையிலே நடைபெற்ற அலுவல் ஆய்வுக்குழுவில் திரு. மதி உள்ளிட்ட எல்லாத் தலைவர்களும் கலந்துகொண்டு, அன்றைக்கு எடுத்த முடிவின்படி இன்றைக்கு இந்த அமைச்சரவையின்மீது தரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்மொழிவது என்றும், பிறகு 7-ஆம் தேதி என்று கருதுகிறேன், அன்றைக்கு அதை விவாதத்திற்கு எடுத்துக் கொள்வது என்றும் அன்றைக்கே முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆகவே, இன்றைக்கு நம்பிக்கையில்லாத் தீர்மானப் பிரேரணையை வழிமொழிவதைப்பற்றி எந்த ஆட்சேபணையும் இருக்கவில்லை. அன்றைக்கு, பிசினஸ் அட்வைசரி கமிட்டியிலே முடிவு செய்யப்

பட்டிருக்கிறது. இப்பொழுது அதை ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன்னால் எடுத்துக்கொள்வதா பிறகு எடுத்துக்கொள்வதா என்பதுதான் பிரச்சினை.

திரு. கே. ஏ. மதியழகன் : நான் அதையேதான் சொல்கிறேன். நோட்டீசைப் பற்றிக் கூறி அனுமதி இருக்கிறதா என்று கேட்டுவிடலாம்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, on a point of order. The Hon. Chief Minister has just now stated that they have decided to take up the No-Confidence Motion on the 7th instant. Rule 55 (2) says—If not less than 24 members rise accordingly, the Speaker shall intimate that leave is granted and that the motion will be taken on such day, not being more than ten days from the date on which leave is asked for as he may appoint...... So the highest limit is ten days. But now it is stated that it would be taken up on the 7th instant which is too early. They must give us some more time. Let them fix it.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதெல்லாம் அலுவல் ஆய்வுக் குழுவிலே பேசி முடிவெடுக்கப்பட வேண்டிய விஷயம். திரு. மதியழகன் அவர்கள் இப்பொழுது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்கிறார்கள். நம்முடைய விதிமுறைகளிலே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எப்பொழுது எடுக்க வேண்டும். உரிமைப் பிரச்னைக்கானத் எப்பொழுது எடுக்க வேண்டும். உரிமைப் பிரச்னைக்கான தீர்மானத்தை எப்பொழுது எடுக்க வேண்டுமென்று சொல்லும் நேரத்தில், கேள்வி நேரம் முடிந்து, மற்ற அலுவலை எடுத்துக் கொள்வதற்குமுன் என்று இருக்கிறது; மூன்று இடத்திலேயும் அப்படித்தான் இருக்கிறது. முதலமைச்சரவர்கள் சொன்னதைப் போல், அலுவல் ஆய்வுக்குழுவிலே 7 ஆம் தேதி என்று முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, "ஃபார்மாலிடி" க்காக எத்தனை பேர் என்று பார்க்கவேண்டும். அது அவ்வளவு முக்கியத்துவம் உள்ளதாக இல்லாததால் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்கிறோம்.

திரு. கே. ஏ. மதியழகன் : நாங்கள் நோட்டீஸ் கொடுத்திருக்கிறோம். அதற்கு அனுமதி கிடைக்கிறதா என்று பார்க்கலாம். அனுமதி இல்லாமல்கூடப் போய்விடலாம்.

Motion under rule 55 will always have precedence. The Hon. Speaker is an experienced Speaker. அதை முடித்துவிட்டு நீங்கள் இதை எடுத்துக்கொள்ள வேண்டும். யார் யார் கொடுத்திருக்கிறார்கள் என்று படித்து அதற்கு அனுமதி கேளுங்கள். அனுமதி இருந்தால் 7 ஆம் தேதி எடுத்துக் கொள்வதைப்பற்றி ஆட்சேபனை ஒன்றும் இல்லை. அலுவல் ஆய்வுக்குழுவின் கருத்துப்படிதான் நான் சொல்கிறேன். எனவே, யார் யார் கொடுத்திருக்கிறார்கள் என்று கூறி அனுமதி கேட்டு முடிவெடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது உறுப்பினர்களுக்கு நிலைமையைத் தெளிவாக்க வேண்டுமென்று கருதுகிறேன். பொதுவாக, நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு அனுமதி கிடைத்தவுடனே ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி கொடுக்கும் வழக்கமில்லை. அது ஒரு மரபாக இருந்து வருகிறது. நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ள விஷயங்களைப்பற்றியும் பேசுவதற்கு வாய்ப்பிருப்பதால் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது என்று கூறும் நிலையிருக்கிறது. அதைப்பற்றிக் கட்சித் தலைவர்கள் என்ன சொல்கிறார்கள் என அறிய விரும்புகிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். தாங்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஒத்திவைப்புத் தீர்மானத்தை இந்த அவையிலே அனுமதிக்க வேண்டுமென்றால் அந்த நிலையே தவிர அதைப் படித்துவிட்டு, மந்திரி சொல்லிய விளக்கத்திற்குப் பிறகு இதை நிராகரிக்கிறேன் என்ற நிலையில் இது அந்த வகையில் அமையாது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனுமதி கிடைக்கவில்லை என்றால் ஒத்திவைப்புத் தீர்மானம் வருகிறது. அனுமதி கிடைத்து தேதியும் குறிப்பிட்ட பிறகு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு வாய்ப்பிருக்காது என்று கருதுகிறேன்,

டாக்டர் எச். வி. ஹாண்டே: தலைவரவர்களே, இதே நேரத்திலே ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பிறகு எடுக்கலாம் என்று மதிப்பிற்குரிய திரு. மதியழகன் அவர்கள் சொல்வதை நீங்கள் ஏற்றுக்கொள்வதற்கு வாய்ப்பிருக்கிறது. அதற்குக் காரணம் என்னவென்றால், முதலிலே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப் படித்து, அதற்கு எத்தனை பேர் ஆதரவு இருக்கிறது என்று பார்த்து, பிறகு ஏழாம் தேதி எடுத்துக் கொள்ளலாம். ஆகவே, இடையிலே மூன்று நாட்கள் வருகின்றன. உடனடியாக இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எடுத்துக் கொள்வதற்கு வாய்ப்பிருந்தால் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு இடமில்லாமல் போகலாம். ஆனால் 2, 3 நாட்கள் கழித்து வருவதால் ஒத்தி வைப்புத் தீர்மானத்தை இடையிலே எடுத்துக் கொள்வதற்கு வாய்ப்பு தருவது மரபிற்கு அப்பாற்பட்டது அல்ல என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, தாங்களே சொன்னீர்கள், கேள்வி நேரம் முடிந்தபிறகு பிரிவிலெஜ் மோஷன், அல்லது அட்ஜர்ன்மெண்ட் மோஷன், அல்லது நோ-கான்ஃபிடன்ஸ் மோஷன், அல்லது 'டிஸ்அப்ரூவல் ஆஃப் பாலிசி மோஷன்' கொண்டு வரலாம் என்று சொன்னீர்கள். ஆனால் இந்த நான்கும் ஒரே நேரத்திலே வந்தால் எதை முதலிலே எடுப்பது என்பதற்கு தங்கள் ரூலிங்கில் எதுவுமில்லை. அந்த மாதிரி முடிவெடுத்தால் எங்களுக்கு 'கைடன்ஸாக' இருக்கும். அதே நேரத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு 'லீவ்' கிடைத்தால் அன்றைக்கே விவாதத்தைத் தொடங்கி வந்திருக்கிறோம். ஆனால், பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் கட்சிகள் ஏற்றுக்கொண்டால் இரண்டு மூன்று நாட்கள் கழித்து நடத்தலாம். அப்படி வரும்பொழுது இடையிலே பல சம்பவங்கள் ஏற்படலாம், நேற்றோ இன்றோ சில சம்பவங்கள் ஏற்படலாம். அதன் பேரிலே உடனடியாக சபையின் கருத்தை அறிய வேண்டிய அவசியம் ஏற்படலாம். அப்படிப்பட்ட நேரத்திலே இன்றைக்கு இதற்கு நாம் அனுமதி கொடுத்தாலும் கூட தொடர்ந்து அட்ஜர்ன்மெண்ட் மோஷனைப் பற்றிப் பேசுவதில் தடையில்லை என்ற என்னுடைய கருத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது விவாதம் 7 ஆம் தேதி எடுத்துக் கொள்ளப்படவிருப்பதாலும், அனைத்துக் கட்சியிலே உள்ளவர்களும் அவ்வப்பொழுது ஏற்படும் பிரச்சினைகளைக் குறித்து ஒத்திவைப்புத் தீர்மானங்களை இங்கே வைப்பதற்கு வழிவகை செய்யப்பட வேண்டுமென்று கூறுகின்ற அந்த யோசனையை மாண்புமிகு பேரவைத் தலைவரவர்கள் ஏற்றுக் கொள்ளலாம் என்றுதான் நான் கருதுகிறேன். உடனடியாக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளப் போவதில்லை, 7 ஆம் தேதிதான் எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது. ஆகவே, இடைப்பட்ட காலத்தில் இவைகளை எடுத்துக்கொள்வதற்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இருக்க முடியாது என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. (அ) அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த நிகழ்ச்சி, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையும், அரசின் ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானத்தையும் எடுத்துக்கொள்வதற்குப் பேரவை அனுமதி அளிக்கிறதா என்று அறிய வேண்டியிருக்கிறது. இப்பொழுது திரு பி. வெங்கடசாமி அவர்கள் "This House expresses its want of confidence in the Council of Ministers headed by Hon. Dr. M. Karunanidhi." என்ற ஒரு தீர்மானத்தின் மூலம் அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவித்து ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இதைப்போலவே மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜேம்ஸ் அவர்கள், திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள், திரு. சுப்பு அவர்கள், திருமதி அனந்தநாயகி அவர்கள் ஆகியோரும் கொடுத்திருக்கிறார்கள். முதலிலே திரு. வெங்கடசாமி அவர்கள் கொடுத்திருக்கும் தீர்மானத்திற்கு, இந்த அவையிலே அதை முன்மொழிய அனுமதி இருக்கிறதா என்று பார்த்து, அனுமதி கிடைத்தால் அடுத்து வரும் தீர்மானங்களுக்கு அனுமதி கொடுக்காமல் அந்த ஒரு தீர்மானத்தை எடுப்பது என்ற முறை

[பேரவைத் தலைவர்] [1973 ஆகஸ்டு 4

பின்பற்றப்படுகிறது. முதலில் திரு. பி. வெங்கடசாமி அவர்களின் தீர்மானத்திற்குப் பேரவை அனுமதி அளிக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். அனுமதி அளிக்க விரும்பும் உறுப்பினர்கள் எழுந்து நிற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

[காங்கிரஸ் (அமைப்பு), அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ், கம்யூனிஸ்ட், சுதந்திரா ஆகிய கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் எழுந்து நின்றார்கள்.]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 55 (2)-வது விதியின்படி தேவையான 24 உறுப்பினர்களுக்கு மேல் எழுந்து நிற்பதால் இந்தத் தீர்மானத்திற்கு அனுமதி அளிக்கப்படுகிறது என்று அறிவிக்கின்றேன். மற்ற தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

4. (ஆ) அமைச்சரவையின் தனி ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, அரசின் ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம், மூன்று உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதாவது, திருவாளர்கள் கே. டி. கே. தங்கமணி, ஆர். பொன்னப்ப நாடார், எ. ஆர். மாரிமுத்து கொடுத்திருக்கிறார்கள். அதாவது, திருவாளர்கள் கே.டி.கே. மணி அவர்கள் கீழ்க்கண்ட தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்—

"This House disapproves the policy of the Ministry which led to high prices of essential articles of life and to food crisis invoking widespread agitation."

முதலில் அறிவிப்பு கொடுத்திருக்கும் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களுடைய தீர்மானத்திற்கு அனுமதி இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். அதற்கு ஆதரவாக உள்ள உறுப்பினர்கள் எழுந்து நிற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

[காங்கிரஸ் (அமைப்பு), அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ், கம்யூனிஸ்ட், சுதந்திராக் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.]

1973 ஆகஸ்ட் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 55 (2)-வது விதியின்படி தேவையான 24 உறுப்பினர்களுக்கு மேல் எழுந்து நிற்பதால் இத் தீர்மானத்திற்குப் பேரவை அனுமதி அளிக்கிறது என்று அறிவிக்கின்றேன்.

(3) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) அமைச்சரவைமீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானத்தையும்

(இ) அமைச்சரவையின் தனி ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானத்தையும் எடுத்துக்கொள்வது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த இரண்டு தீர்மானங்களும் அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவின்படி 7—8—1973 செவ்வாய்க்கிழமை முதல் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

(5) விளக்கம் கோரல்.

அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம் அறிவிப்பு கொடுத்தவர்களுக்கெல்லாம் பதிலளிக்கும் உரிமை வழங்கப்படுமா என்பது குறித்து.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: On a point of clarification, Sir. As per Rule 55 (1) a motion expressing want of confidence in the Ministry or a motion disapproving the policy of Government in a particular respect may be made with the consent of the Hon. Speaker and subject to the following restrictions therein, etc.

Now there is the "No-Confidence Motion" and "Disapproval Motion". Persons who have given "disapproval Motion" disapproving the policy of Government in a particular respect, have the right of reply. But I would like to make a request to the Hon. Speaker. "No-Confidence Motion" is greater in scope than disapproving the policy of Government in a particular respect. So, persons who have given notice of "No-confidence Motion", which is greater in scope than "Disapproval Motion" should have also the chance of replying to the debate. That is my humble submission. They should be given the right of reply. The Hon. Speaker may pay his attention to this request of mine and see that justice is done.

திரு. நா. வீராசாமி : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்சினை எழுப்பினார்கள். ஆனால் அந்த அம்மையாரே இரண்டுக்கும் எழுந்து நின்றார்கள். நோ கான்ஃபிடன்ஸ் மோஷனுக்கும் எழுந்து நின்றார்கள், இரண்டாவது மோஷனுக்கும் எழுந்து நின்றார்கள். அந்த நிலையில் இப்படி ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புவது முறை தானா?

திருமதி த. ந. அனந்தநாயகி : நான் இரண்டையும் ஆதரிக்கிறேன். எங்களுக்கும் ரைட் ஆப் ரிப்ளை கொடுங்கள் என்று தான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரே தீர்மானத்தைப் பல பேர் கொடுத்தாலும் ஒருவருடைய தீர்மானம் மட்டுந்தான் எடுத்துக் கொள்ளப்படுகிறது. அந்தத் தீர்மானத்தை யார் முன்மொழிகிறார்களோ அவர்களுக்குத்தான் விடையளிக்க உரிமை உண்டு. தீர்மானத்தைக் கொடுத்த எல்லோருக்கும் விடையளிக்க உரிமை கொடுப்பதில்லை.

(6) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெறும் உணவுப் போராட்டமும், அதன் விளைவுகளும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள உணவுப் பிரச்சினை குறித்து திரு. என். டென்னிஸ், திரு. மோஸஸ், டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. சோ. அழகர்சாமி, திருமதி த. ந. அனந்தநாயகி, திரு. என். கே. பழனிசாமி, திரு. எ. சுவாமிதாஸ், திரு. ஜே. ஜேம்ஸ், திரு. மணலி கந்தசாமி, திரு. ஆ. கு. சுப்பையா, திரு. ஆர். பொன்னப்ப நாடார் ஆகியோர் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். இதிலே எல்லோரும் பேச வேண்டிய அவசியம் இல்லை. கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் எடுத்துக் கொள்ளலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான பிரச்சினையாக இருக்கும் காரணத்தால் இதிலே கொஞ்சம் விவரங்களை சொல்லத் தாங்கள் அனுமதிக்க வேண்டுமென்று முதலில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். முதலாவதாக என்னுடைய தீர்மானத்தைப் படித்து அது எப்படி சட்ட வரம்புக்கு உட்பட்டது என்பதைத் தங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

" Under Rule 42 of the Legislative Assembly Rules I move the following adjournment motion to discuss a matter of urgent public importance, namely, the arrest of leaders such as Municipal Chairman, Panchayat Union Chairman, lawyers of Kanyakumari district on 28th July 1973 consequent on the food agitation in view of the acute scarcity conditions prevailing there and the demand for an adequate supply of rice at reasonable price. Starvation death was also reported and a serious situation exists there ".

இந்த அடிப்படையிலே மிக முக்கியமான இந்த விஷயத்தைப் பற்றி விவாதிக்க இந்த அவையின் அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கோரி இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன்.

இந்தக் கிளர்ச்சி எப்படி ஆரம்பமாயிற்று என்பதைப் பற்றி நான் ஓரிரு விவரங்களைக் கூறுவது கடமை என்றே கருதுகிறேன். கன்னியாகுமரி ஜில்லாவானது கேரள எல்லைகளோடு ஒட்டிக் கிடக்கும் பகுதியாக இருப்பதால் அந்தப் பகுதியில் உணவுப் பற்றாக்குறை அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கம் தருகிற புள்ளிவிவரப்படி பார்த்தால் அது ஒரு மிச்சப் பகுதி என்று தந்திருக்கிறார்கள். அது முற்றிலும் தவறு என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அதுமட்டுமல்லாமல் அந்தக் பகுதியில் இன்று பெல்ட் ஏரியா என்று சொல்லக்கூடிய ஐந்து மைல் ஏரியாவில் மட்டும் கார்டு வழங்கப்பட்டிருக்கிறது. ஏனைய பகுதிகளுக்கு எந்த முறையிலும் கார்டுகள் விநியோகம் செய்ய வேண்டுமென்பதற்கு உறுதியோ, சட்ட பூர்வமான விதிமுறைகளோ இல்லாத காரணத்தால் அந்தப் பகுதிகளில் வாழ்கின்ற பெரும்பான்மையான மக்களுக்கு உணவு தானியம் விநியோகம் செய்யப்படவில்லை.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1973 ஆகஸ்ட் 4

யாரிடமிருந்து பெற்றுக் கொள்வது, எந்த டெப்போவில் இருந்து வாங்குவது என்ற நியதி இல்லாத காரணத்தால் பட்டினிச் சாவு அங்கு ஏற்பட்டிருக்கிறது. அங்கெல்லாம் கார்டு வழங்க வேண்டுமென்று நாங்கள் எங்களுடைய வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் ஏகமனதாக அனைத்துக் கட்சியினரும் தீர்மானம் நிறைவேற்றினோம். அதை அரசாங்கத்திற்குத் தெரிவித்து, எல்லாப் பகுதிகளுக்கும் கார்டு வழங்க இயலாது என்று அரசாங்கத் தரப்பிலிருந்து தெரிவித்துவிட்ட காரணத்தால் மறுபடியும் இந்தப் பிரச்சினை கடுமையாக இருக்கிறது. படியரிசி ஐந்து ரூபாய்க்கு விற்கப்படுகிறது என்பதை அரசாங்கத்திற்குத் தீர்மானம் மூலமாக எடுத்துச் சொன்னோம். போராட்டம் என்ற முறையில் தீர்மானத்தை நிறைவேற்றி இந்த அரசாங்கத்திற்கு அனுப்பினோம்.

அப்போது உணவு அமைச்சர் திரு. மன்னை நாராயணசாமி அவர்கள் எங்கள் பகுதிக்கு வந்து கலெக்டர் அலுவலகத்தில் எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களையும் அழைத்து ஒரு மாநாடு நடத்தினார்கள். எல்லோருக்கும் போதிய அளவில் நியாயமான விலையில் அரிசி வழங்குவதாக ஒப்புக்கொண்டார்கள். கார்டு வழங்க ஏற்பாடு செய்வதாக ஒத்துக்கொண்டார்கள். ஜுன் மாதத்தில் இந்த முடிவு ஏற்பட்டது. ஆனால் இதுகாறும் கார்டு கொடுக்க ஏற்பாடாகவில்லை. அரிசியும் கிடைக்கவில்லை. எவ்வளவு அரிசி தேவையோ அதைப் பிற மாவட்டங்களிலிருந்து அனுப்ப ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். 51 சோதனைச் சாவடிகளை இப்போது பெல்ட் ஏரியாவில் நிறுவி இருக்கிறார்கள். இந்தச் சோதனைச் சாவடிகளை எத்தனை வேண்டுமானாலும் கேரள எல்லையில் நிறுவுவதைப்பற்றி எங்களுக்கு ஆட்சேபணை இல்லை.

கேரளத்திற்கு அரிசி கடத்திக் கொண்டு போவதற்கு நாங்கள் எல்லாம் கூட்டாக நிற்கிறோம் என்று அரசாங்கத் தரப்பிலிருந்து கூறினார்கள். இது உண்மைக்குப் புறம்பாகக் கூறுவதாகும். இதை நான் மறுக்கிறேன். அந்த மாதிரி நாங்கள் எல்லாம் வியாபாரிகளுக்குக் கூட்டாக, கள்ள மார்க்கட் செய்பவர்களுக்குக் கூட்டாகச் செல்லவில்லை. அப்படி இருந்தால் அரசாங்கம் எங்களைக் கைது செய்து சிறைச்சாலையில் அடைப்பதைப் பற்றி எங்களுக்கு ஆட்சேபணை இல்லை.

1973 ஆகஸ்ட் 4] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

இதை எதிர்த்து கடந்த 19-ம் தேதி நாங்கள் மறியல் செய்தோம். முதல் நாள் என்னுடைய தலைமையில் மறியல் போராட்டத்தைக் கலெக்டர் அலுவலகத்தின் முன்னால் நடத்தினோம். என்னைக் கைது செய்தார்கள். அடுத்த நாள் விடுதலை செய்தார்கள். ஆளும் கட்சி நீங்கலாக அனைத்துக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களும் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று சொன்னால் இந்தப் பிரச்சினை எவ்வளவு கடுமையான பிரச்சினை என்பதை இந்த அவை உணரும் என்று கருதுகிறேன். அந்தப் பகுதியில் பட்டினிச் சாவு ஏற்பட்டிருக்கிறது. படியரிசி ஆறு ரூபாய் விற்கும்போது அந்தப் பகுதி ஏழை எளிய மக்கள் எப்படி வாங்கிச் சாப்பிடுவார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஏனைய மாவட்டங்களில் படியரிசி 1½ ரூபாய்க்குக் கிடைக்கிறபோது எங்களை வேண்டுமென்றே இரண்டாந்தரக் குடிமக்களாக நினைத்து பட்டினி போட்டுக் கொல்லும் தன்மையைப் பார்க்கும்போது இந்த அரசாங்கத்திற்குப் பழி வாங்கும் திட்டம் இருக்கிறது என்ற குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன்.

இங்கு நடப்பது அரசியல் போராட்டமல்ல. எந்தவிதமான இடைத் தேர்தலோ, பஞ்சாயத்துத் தேர்தலோ, முனிசிபல் தேர்தலோ இல்லை. அரசியல் காழ்ப்புணர்ச்சி எதுவும் கிடையாது. நாங்கள் அரிசி கேட்கிறோம். நியாயமான விலையில் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறோம். கார்டு கொடுத்து ஒரு வாரத்திற்கு இவ்வளவு அரிசி என்ற கணக்கு இருக்க வேண்டும். நியாயமான விலையில் கிடைக்க வேண்டும்.

இன்னொரு விஷயத்தையும் நான் கூற விரும்புகிறேன். எங்களுக்கு விநியோகம் செய்யப்படுகிற அரிசி மாநில ஃபுட் கார்ப்பரேஷன் மூலமாகத் தருகிறார்கள். அந்த அரிசி கொள் முதல் விலை 80 ரூபாய். சில்லறை ஆனால் அந்த அரிசியை எங்கள் மாவட்டத்தில் 125 ரூபாய் என்ற அளவில் ஃபுட் கார்ப்பரேஷன், அதாவது அரசாங்க இலாகாவானது விற்று வருகிறார்கள். முதன் முதலாக அதிக விலைக்கு விற்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டைக் கார்ப்பரேஷன் மேல் சுமத்த விரும்பு

கிறேன். 40 ரூபாய்க்கு மேல் இடைவெளி இருக்கிறது. ஒரு வியாபாரி 4 ரூபாய் லாபம் வைத்தால் அவனைக் கொள்ளை லாபம் அடிக்கிறான் என்று சொல்லுவார்கள்.

மு.ப. 10-30 ஆனால் அரசாங்க நிறுவனத்தில் இருந்து எல்லாச் செலவுகளையும் அதில் செய்திருக்கிறார்கள் என்றால் இது நியாயமல்ல, தர்மமல்ல, அறமல்ல என்று கூறிக்கொள்கிறேன். ஒரு மூட்டைக்கு, 75 குவிண்டாலுக்கு 40 ரூபாய் வித்தியாசம் இருக்கிறது என்று சொன்னால் யாரிடம் இதைச் சொல்வது? அரசாங்கம்தான் ப்ளாக் மார்க்கெட்டுக்கு உடந்தையாக இருக்கிறது என்ற குற்றச்சாட்டைக் கூற நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இத்தகையதொரு வித்தியாசம் இனியும் நீடித்திருக்கக் கூடாது. இதுபற்றி அதிகாரிகளிடமும் கூறினேன். அமைச்சர் அவர்களிடமும் எடுத்துக் கூறினேன். ஏதோ பழிவாங்கும் திட்டமாகப் பல காரியங்களைச் செய்திருக்கிறார்கள்.

இன்று நூற்றுக்கணக்கான நபர்கள் சிறைச்சாலையில் வாடி வதங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சிறைச்சாலையை ஏதோ மாமியார் வீடு என்று கருதி அங்கு செல்லவில்லை. அந்தப் பகுதியில் வாழ்கிற 13½ லட்சம் மக்களுக்கு உணவு கிடைக்க வேண்டுமென்ற நியாயமான உணர்வின் அடிப்படையில் அங்கு போராட்டத்தை நடத்தினோம்.

கழிந்த மாதம் 25-ம் தேதி அன்று ஒரு பொது வேலை நிறுத்தம் செய்யவேண்டுமென்று நாங்கள் அழைப்பு கொடுத்தோம். எல்லாக் கட்சிகளும், எல்லா நிறுவனங்களும் சேர்ந்து பரிபூரணமாக, எந்தவிதமான அசம்பாவிதமும் ஏற்படாத வகையில் ஹர்த்தால் பரிபூர்ணமாக வெற்றி பெற்றிருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த மன்றத்திற்குத் தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

என் இதைப்பற்றி நான் கூறுகிறேன் என்றால், இது முக்கியமானதொரு பிரச்னையாக இருக்கிறது, எங்கள் வாழ்வுப் பிரச்னையாக இருக்கிறது, எங்கள் ஜீவாதாரப் பிரச்னையாக இருக்கிறது, உணவுப் பிரச்னையாக இருக்கிறது என்பதால்தான் கூறுகிறேன். நாங்கள் எந்தவிதமான சலுகைகளுக்காகவும்

போராடவில்லை, அரிசி வேண்டுமென்று கேட்கிறோம். அரிசி தர இந்த அரசாங்கம் கடமைப்பட்டிருக்கிறது. தமிழகத்தின் ஒரு பகுதியாக இருக்கிற அந்த ஜில்லாவில் மட்டும், எங்களுக்கு இந்தக் கேடுகெட்ட நிலைமையை உருவாக்கியது அரசாங்க அதிகாரிகளின் கவனக் குறைவுதான் என்ற குற்றச்சாட்டினைக் கூறக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். தனிப்பட்ட முறையில் எனக்கு எந்தவிதமான காழ்ப்புணர்ச்சியும் இல்லை. அரிசி கிடைக்க வேண்டும், நியாயமான விலையில் கிடைக்க வேண்டும், கார்ட் வழங்க வேண்டும், பட்டினிச் சாவை அகற்ற வேண்டும். இது மிக முக்கியமானதொரு பிரச்சினையாகும். இது ஒரு ஜீவாதாரப் பிரச்னையாக இருக்கிறது. திரு. எம். சி. பாலன் அவர்கள் இன்று சிறைச்சாலையில் வாடி வதங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு வேளை இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணவில்லை என்று சொன்னால், நாங்களும் இந்த மன்றத்தைப் பகிஷ்கரித்துவிட்டு சிறைச்சாலையில் இருப்பதுதான் பொருத்தமாகும் என்ற என் கருத்தை முதல் அமைச்சர் அவர்களுக்குத் தாழ்மையாகத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், எங்கள் பகுதியில் வாழும் மக்கள் இனியும் பட்டினிச் சாவால் சாவதை நாங்கள் அனுமதிக்கப் போவதில்லை. எங்களை எல்லாம் இந்த மன்றத்திற்கு அனுப்பிய பெருமை அவர்களுக்கு இருக்கிறது. ஒரு வேளை இன்று ஆளும் கட்சியில் இருக்கிறவர்களுக்கு அங்கு அதிகச் செல்வாக்கு இல்லை என்று நீங்கள் நினைத்து எங்களை இந்த மாதிரியாகப் பட்டினி போட்டு இரண்டாம் தர குடிமக்களாக ஆக்க வேண்டாம் என்று பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இது மிகவும் முக்கியப் பிரச்சினை. அதிலும் குறிப்பாக வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் இருக்கிறார்கள், முனிசிபல் சேர்மன்கள் இருக்கிறார்கள். ஏன், எங்கள் ஸ்தாபனத்தில் உள்ள பெரும் தலைவர்கள் அத்தனை பேர்களும் இன்று சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆதலால், இந்தப் பிரச்சினை குறித்து சபையை ஒத்திவைத்து விவாதிக்கவேண்டும். அதற்காக நீங்கள் இந்த அவையின் காலத்தை ஒத்திவைக்கவேண்டுமென்று கேட்டு என் வார்த்தைகளை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE: Hon. Speaker, Sir, I shall now read the adjournment motion given by me, on behalf of the A.D.M.K., namely,

'that the business of the House stands adjourned to discuss a matter of urgent public importance, namely, the exorbitant rise in the prices of rice in the open market in the district of Kanyakumari, and the consequent agitation by the public leading to a number of arrests including that of Mr. M. C. Balan, M.P.'.

பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை நான் இங்கே பிரேரேபிப்பதற்குக் காரணம் இன்று குமரி மாவட்டத்தில் ஒரு பயங்கரச் சூழ்நிலை ஏற்பட்டிருப்பதை, அங்குள்ள 13 லட்சம் குடிமக்களிடம் பரவலாக அப்படிப்பட்ட தொரு சூழ்நிலை ஏற்பட்டிருப்பதை இந்த அவையில் சரியான வகையில் உணர்த்த வேண்டுமென்பதற்காகத்தான் இதை முன் மொழிந்து கொண்டு வந்திருக்கிறேன். இதை அரசியல் ரீதியாக அணுகக் கூடாது என்று முதல் அமைச்சர் அவர்களும், அமைச் சரவையில் உள்ள சில அமைச்சர்களும் குமரி மாவட்டத்தில் சொல்லியிருக்கிறார்கள். மூன்று வாரங்களுக்கு முன்பாக அம் மாவட்டத்தில் உள்ள பல்வேறு பகுதிகளில், நாகர்கோவில், தக்கலை, விளவங்கோடு, குளச்சல் போன்ற பகுதிகளில் நானும், என் அன்புக்குரிய தோழர் திரு. மாயத் தேவர் அவர்களும்; திரு. முத்துசாமி அவர்களும் சுற்றுப் பயணம் செய்த நேரத்தில் அங்குள்ள மக்கள் தங்கள் குறைகளை எடுத்துச் சொன்னார்கள். நாங்கள் பலர் மேடைகளில் பேசுகிற நேரத்தில், அவை அரசியல் மேடைகளாக இருந்த நேரத்திலும் கூட, அங்கு உட்கார்ந்திருந்த மக்கள் ஒரு படி அரிசி 4½ ரூபாய்க்கு விற்றுக்கொண்டிருக்கிறது, ரூ. 5-க்கு விற்றுக்கொண்டிருக்கிறது, கடிதம் மூலம் இந்தப் பிரச்சினையை நீங்கள் வலியுறுத்திச் சொல்ல வேண்டுமென்று சொன்னார்கள். எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், அந்த அளவிற்கு அங்குள்ள பொதுமக்கள் வேதனையடைந்திருக் கிறார்கள்.

இது அரசியல் பிரச்னை அல்ல, இது அரிசிப் பிரச்னை என்பதை முதல் அமைச்சர் அவர்கள் நன்கு புரிந்துகொள்ளவேண்டும். முதல் அமைச்சர் என்றால் யார் பொறுப்பில் இருக்கிறார்களோ

அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். சில திட்டங்கள் அல்லது சில உத்தரவுகள் போட்டால் மட்டும் நிச்சயமாக அவை போதாது, அங்குள்ள மக்களைத் திருப்திபடுத்த முடியாது. அங்குள்ள தாய்மார்களையும் சந்தித்தோம் அவர்களும் இதைத் தான் கேட்கிறார்கள். அமைச்சர்களிடம் இதைப் பற்றிச் சொல்லுங்களேன் என்று வேதனையோடு சொல்லிக்கொண்டிருக் கிறார்கள். இதுபற்றி நீங்கள் என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறீர்கள் ? இந்தத் தீர்மானத்தைக் கூட நாங்கள் வலியுறுத்தாமல் இருந்திருக்கலாம், ஆனால் அரசாங்கமும், இந்த அமைச்சரவையும் இந்த விஷயத்தில் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்று சொல்லுங்கள். இன்று எடுத்துக்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் இப்போது இருக்கக் கூடிய நிலையை ஆட்சேபித்து விலையைக் கட்டுப்படுத்தவேண்டும் என்று சொல்லக்கூடிய அரசியல்வாதிகளை, அவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைச் சிறையில் வைப்பதை விட முதல் அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக் கிறார்கள் ? திரு. பாலன் அவர்களைச் சிறையில் வைத்தி ருக்கிறார்கள். மாண்புமிகு திரு. மதியழகன் அவர்கள் தலைமையில் 25-ம் தேதி அன்று ஒரு பேரணி நடத்தினார்கள். அடுத்த நாள் மறியல் செய்தார்கள். மறியல் செய்தவர்கள் மீது நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்களே தவிர விலைவாசியைக் கட்டுப்படுத்த என்ன கடுமையான நடவடிக்கைகள், ட்ராஸ்டிக் ஸ்டெப்ஸ், எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்றால், அப்படி எந்தவிதமான கடுமையான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

அன்புக்குரிய டாக்டர் மு. கருணாநிதி அவர்களின் தலைமையில் இயங்கும் இந்த அமைச்சரவை ஏறத்தாழ 13 லட்சம் குடிமக்களை முழுக்க முழுக்கப் புறக்கணித்திருக்கிறது என்ற குற்றச்சாட்டைக் கூறும் ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை வேதனையோடு குறிப்பிட விரும்புகிறேன். அவர்கள் சிரித்துக்கொண்டிருக்கலாம், என்னவோ காட்டமாகப் பேசிக்கொண்டிருக்கிறார்களே என்று சொல்லி. இன்றைய பிரச்னைகள் ரெவல்யூஷன் வரக்கூடிய அளவிற்கு, புரட்சி வரக்கூடிய அளவிற்கு, போராட்டம் வரக் கூடிய அளவிற்கு—ஒருவன் பசியோடு இருந்தால் நிச்சயமாகப் போராட்டம் வரத்தான் வரும். அப்படிப்பட்ட ஒரு பிரச்னையைக்

குறித்து அலட்சியமாக முதல் அமைச்சர் அவர்கள் சிரிக்கலாம். அது சரியல்ல. இது உடனடியாகக் கவனிக்கவேண்டிய ஒரு பிரச்னை.

அவர்கள் ஒரு விளக்கம் சொன்னார்கள். கேரள மாநிலத்திற்குக் கடத்தல் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று எடுத்துச் சொன்னார்கள். யார் அந்தக் கடத்தலைச் செய்கிறார்கள், ஏன் அந்தக் கள்ளக் கடத்தலை ஒழிக்க முடியவில்லை, ஏன் அப்படி கடத்தல் செய்கிறவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்க அஞ்சுகிறீர்கள், ஏன் பயப்படுகிறீர்கள் என்று கேட்கிறேன். கேரளாவிற்குக் கொடுக்க வேண்டியதை அதிகார பூர்வமாகக் கொடுங்கள். அப்படிக் கொடுத்துவிட்டு தவறான வகையில் கள்ளக்கடத்தல் செய்வதைக் கண்டுபிடித்து நடவடிக்கைகள் எடுக்க ஏன் அஞ்சுகிறீர்கள் என்று கேட்கிறேன். இதற்கு நான் முதல் அமைச்சர் அவர்களிடமிருந்து சரியான ஒரு பதிலை எதிர்பார்க்கிறேன். பதில் கொடுத்தால் மட்டும் போதாது. இந்த அவையில் ஏதோ ஒரு பதிலைக் கொடுத்துவிட்டு பின்னர் சபாநாயகர் அவர்கள் சொல்லப்போகிற தீர்ப்பு, அவர்களின் விளக்கத்தைக் கேட்டுவிட்டு அனுமதி மறுக்கிறேன் என்று சொல்வார்கள் என்பது எனக்குத் தெரியும்.

24 மணி நேரத்திற்குள் இந்தப் பிரச்னையைத் தீர்க்கவில்லை என்றால் ஒரு பயங்கரமான நிலைமை தமிழகத்தில் பரவக்கூடிய ஒரு பிரச்னையாகும் இது. குமரி மாவட்டம் ஒதுங்கி இருக்கிறது, அங்குள்ள 13 லட்சம் மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்றால், தமிழகத்தில் உள்ள மற்றப் பகுதி மக்கள் சும்மா இருக்க முடியாது. இந்தப் போராட்டத்தில் அவர்களும் குதித்து, குமரி மாவட்டம் மட்டுமல்ல, தமிழகமே எதிர்த்து வெடிக்கும். திரு. பக்தவத்சலம் அவர்கள் ஆட்சியை அரிசிப் பிரச்னைதான் வீழ்த்தியிருக்கிறது. மதிப்பிற்குரிய இன்றைய முதல் அமைச்சர் திரு. கருணாநிதி அவர்களும் பேசினார்கள், மதிப்பிற்குரிய எஜுகேஷன் மினிஸ்டர் அவர்களும் பேசினார்கள் 65ல், 66ல், 67 பிப்ரவரியில். அது அவர்களுக்கு நினைவிருக்கும். What is sauce for the goose is sauce for the gander இந்தப் பழமொழியை அவர்கள் நினைவில் கொள்ளவேண்டும். பதில்

மட்டும் போதாது, திட்டவட்டமாக என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள் என்று ஆணித்தரமாகச் சொல்ல வேண்டும்.

அதுமட்டுமல்ல. அவை அங்கு அமல்படுத்தப்படவேண்டும். அப்பேர்ப்பட்ட நிலைமை இல்லையென்றால் 24 மணி நேரத்தில், 48 மணி நேரத்தில் நான் நிச்சயமாகச் சொல்கிறேன் (சிரிப்பு)— நான் சொல்கிற நேரத்தில் நீங்கள் சிரிக்கிறீர்கள். எவ்வளவு பெரிய சிரிப்பு! அங்கே அவர்கள் பசியால் வாடிக் கொண்டிருக்கிறார்கள், இங்கே, நீங்கள் சிரித்துக்கொண்டிருக்கிறீர்கள். மற்றவர்களுடைய பிரச்னையில் உங்களுக்குள்ள உணர்ச்சி இது. நான் சொல்லிக் கொண்டிருக்கும்போது . . . (குறுக்கீடு) நீங்கள் சிரிப்பதா, இது என்ன விளையாட்டா, சிரிக்கிறது என்றால் என்ன அர்த்தம்?

திரு. நா. வீராசாமி: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சிரிக்கிறார்கள் என்று சொல்லி வேண்டுமென்றே ஹாண்டே அவர்கள் திசை திருப்பப் பார்க்கிறார்கள், ஆளும் கட்சி மீது குற்றம் சாட்டுவதற்கு. 24 மணி நேரத்தில் தமிழகம் வெடிக்கும் என்றார், பிறகு 48 மணி நேரம் என்றார்கள். ஒரு கொள்கை இல்லாமல் பேசுகிறார்களே என்பதற்காகச் சிரிப்பு வந்ததே தவிர குமரி மக்கள் படுகிற வேதனையைப் பார்த்து எந்த ஆளும் கட்சி உறுப்பினரும் சிரிக்கவில்லை. வேண்டுமென்றே முதல் அமைச்சர் அவர்களை இழுத்து; ஆளும் கட்சியினர் சிரிக்கிறார்கள் என்று மேடைப் பேச்சில் வேண்டுமானால் சேர்த்துக்கொள்ளலாமே தவிர, இங்குள்ள ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு தாங்கள் பாதுகாப்பு அளிக்கவேண்டும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: நீங்கள் சிரிக்கவில்லையா? (ஒரே நேரத்தில் பல குரல்கள்)

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, ஹாண்டே அவர்கள் பேசிக்கொண்டு இருக்கும்போது மிகவும் உன்னிப்பாக நான் கேட்டுக் கொண்டு இருந்தேன். அவரேதான் வலுவில், முதலமைச்சர் அவர்கள் சிரித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர் சொன்ன பிறகுதான் நான்

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 ஆகஸ்ட் 4

சிரித்தேனே தவிர அதுவரையில் சிரிக்கவில்லை. உன்னிப்பாக அவருடைய பேச்சைத்தான் கேட்டுக்கொண்டிருந்தேன். முதலமைச்சர் சிரித்துக்கொண்டிருக்கிறார் என்று சொல்வது தவறு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேசவேண்டியவை அனைத்தையும் ஏற்கனவே பேசியாகிவிட்டது. இது எப்படி ஒத்திவைப்புத் தீர்மானத்தின் கீழ் வரும் என்பதை மாத்திரம் சுருக்கமாகச் சொல்லுங்கள். இப்படிப் பேசிக்கொண்டிருந்தால் இதுவே ஒரு மணி நேர விவாதம் போல் ஆகிவிடும். நீங்கள் அந்த விவகாரத்தின் உள்ளே போகாமல், எப்படி இது ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு உள்ளே வருகிறது என்பதை மாத்திரம் சொல்லுங்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : 60 இலட்சம் மக்கள் அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் நேரத்தில் இந்த விஷயம் குறித்து இங்கே ஒத்திவைப்புத் தீர்மானமாக இதை கொண்டு வரமுடியாவிட்டால் இந்த நாட்டிலே வேறு எந்த விஷயம் குறித்துத்தான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வரமுடியும் என்று கேட்டு, இந்த விஷயம் குறித்து விவாதிக்க இந்த மன்றத்தின் பிற அலுவல்களை நிறுத்தி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, என்னுடைய பெயரால் கொடுக்கப்பட்டிருக்கும் ஒத்திவைப்புத் தீர்மானம் மிகவும் முக்கியமானது. கன்னியாகுமரி மாவட்டத்தில் சாதாரண தொழிலாளர்கள் மிகவும் அல்லல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஒரு படி அரிசியின் விலை ரூ. 5 விற்கிறது. தொழிலாளிக்குக் கிடைக்கக்கூடிய ஒரு நாள் ஊதியம் ரூ. 2-3 என்று இருக்கிறபோது, அவனால் எப்படி இந்த விலை கொடுத்து அரிசி வாங்கிச் சாப்பிட முடியும்? ஆகவே, அவர்கள் அன்றாடம் சாப்பிடக்கூட முடியாத நிலையில் இருந்து வருகிறார்கள். அதற்குப் பிரதானமான காரணம் இந்த அரசாங்கத்தின் உணவுக்கொள்கைதான் என்ற குற்றச்சாட்டை நான் சாட்டுகிறேன்.

1973 ஆகஸ்ட் 4] [திரு. சோ. அழகர்சாமி]

அதோடு மட்டுமல்ல, எல்லையோரப் பகுதியில் இருக்கும் மக்கள் தலைச்சுமையாக 1 படி, 2 படி அரிசி எடுத்துக்கொண்டு போனால் கூட அதை காவல் துறையினர் பிடித்து வைத்துக்கொண்டு விடுகிறார்கள். இப்படிக் கண்காணிப்பாக இருக்கும் காவல் துறையினர் லாரி, லாரியாகப் போகும் அரிசிக்கடத்தலை தடுக்க முடியாமல் இருக்கிறார்கள். சர்வ கட்சிக் குழு ஏதேனும் கள்ளத்தனமாக கடத்தப்படுவதை கண்டு பிடித்துக்கொடுத்தால், அந்த லாரிகளை பிடித்துக்கொடுத்தால், அந்த நேரத்தில் போலீஸ் அதிகாரிகள் தலையிட்டு அவர்களுக்கு விரோதமாக இருக்கும் சர்வ கட்சித் தலைவர்கள், ஊழியர்கள் ஆகியோரை அடக்குமுறைக்கு ஆட்படுத்துகிறார்கள்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : கனம் உறுப்பினர் அவர்கள் சர்வ கட்சித் தலைவர்கள் எங்கே பிடித்தார்கள், எங்கே போலீஸ் அதிகாரிகள் இடையூறாக இருந்தார்கள் என்பதைத் தெரிவித்தால் நல்லது. அதைச் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : கம்பத்தில் 4-5 லாரிகளைப் பிடித்து இருக்கிறார்கள். பர்மிட் இல்லாது சென்ற லாரிகள் அவைகள். அதைத் தொடர்ந்து அங்கே தடியடி கூட நடந்து இருக்கிறது என்று அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இன்றைக்கு கன்னியாகுமரி மாவட்டத்தின் எல்லையில் அரிசி போக விடாமல் தடுத்து இருப்பதால், அங்கேயுள்ள மக்கள் பட்டினியால் அவதிப்படும் நிலையேற்பட்டு இருக்கிறது. அரசின் கெடுபிடி இருக்கிறதே தவிர மக்களுக்கு வாரத்திற்கு குறைந்த பட்சம் 2,100 கிராம் அரிசி கொடுக்க ஏற்பாடு செய்ய முடியவில்லை. அரிசி கடத்திக்கொண்டு போவதைத் தடுப்பதை விட்டு விட்டு, அவர்களுக்கு அரிசியும் கொடுக்காமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்கது.

இன்றைக்கு இந்த அரசாங்கம் வைத்துக்கொண்டிருக்கும் கொள்கை உணவு சம்பந்தப்பட்ட மட்டில், கொள்முதல் வினியோகத்தை, மொத்த வியாபாரத்தை அரசு எடுத்துக் கொள்ளும் கொள்கையை திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்றுக்

கொள்ளாததால் தான் இந்த விளைவு ஏறபட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் உற்பத்தி அதிகமாகியிருக்கிறது. சென்ற ஆண்டைவிட 20 லட்சம் டன் அதிகரித்து இருப்பதாகச் சொன்னார்கள். அரிசி இருக்கிறது. அப்படி இருந்தும் படியரிசி ரூ. 5 என்று சொன்னால் அந்த அதிகப்பணம் யாருக்குப் போய்ச் சேருகிறது? சாதாரண மக்கள் அதிலும் குறிப்பாக விவசாயத்தில் ஈடுபட்டு இருக்கும் விவசாயப்பெருங்குடி மக்கள், ஏழை, எளிய பாட்டாளி மக்கள் ரூ. 5 கொடுத்து படியரிசி வாங்குவது என்றால் எப்படி முடியும்? 2 ரூபாய் சம்பளம், ஐந்து ரூபாய் படியரிசி என்று சொன்னால் எப்படி பட்டினி இல்லாமல் அவர்கள் வாழ முடியும்? இதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இப்படியிருக்கிற நேரத்தில் பார்டர் கிராமங்களில் ஒரு பொது ஜன சர்வ கட்சி குழு அமைத்து, நியாயமான முறையில் அரிசி விநியோகம் செய்ய, வாரத்திற்கு ரேஷன் 2,200 கிராம் அவர்களுக்குக் கிடைக்கச் செய்ய இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்படிப்பட்ட கள்ளத்தனமாக அரிசி கடத்துவதைத் தடுப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த சர்வ கட்சிக் கமிட்டி போடுவதற்கும், கடத்தலை எப்படித் தடுப்பது என்பதைக் குறித்து விவாதிப்பதற்கும் இந்த அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த விஷயம் உணவு சம்பந்தமாக இருப்பதால், இதைப்பற்றி விவாதிக்க வேண்டும், இது முக்கியமான விஷயம் என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, I read the adjournment motion given notice of by me, namely,

'to discuss a definite matter of urgent public importance, viz., the hardship caused to the people of Kanyakumari district due to the wrong policy of the Government in connection with the transport of rice into the district from the adjacent districts'

சபாநாயகர் அவர்களே, இன்றைக்கு தி.மு. கழக ஆட்சியிலே கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கும் மக்கள் மிகவும் அத்தியாவசியமான அரிசி கிடைக்காமல் அவதிப்பட்டுக்கொண்டிருக்

கிறார்கள் என்பதை எல்லாக் கட்சியைச் சார்ந்தவர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்தக் கட்சி ஆட்சியைப் பிடித்ததே இந்த அரிசியால் தான். ஒரு ரூபாய்க்கு மூன்று படி அரிசி போடுகிறேன் என்று சொன்னவர்கள் ஆட்சியில், ஒரு படியரிசி ரூ. 5 என்று விற்கிறது என்பதைப் பார்க்கிறோம். இப்படிப்பட்ட நிலையிருக்கிறபோது, எதிர்க்கட்சிகள் இதை விட ஒரு அவசரத் தீர்மானத்தைக் கொண்டு வர முடியாது. குறிப்பாக, எல்லையில் இருக்கும் மாவட்டங்களிலிருந்து அடுத்த மாநிலங்களுக்கு அரிசி போகாமல் தடுப்பதற்கு வேண்டிய கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்று அரசுத் தரப்பிலிருந்து இதற்கு பதில் வருகிறது. ஆனால், அங்கே என்ன நடைபெறுகிறது என்றால், கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்தைச் சேர்ந்த மாநிலம் என்று கருதுவதே கிடையாது. அதைக் கேரளத்தைச் சேர்ந்த மாவட்டமாகக் கருதி, அந்த மாவட்டத்திற்கே அரிசி போவதைத் தடுத்துக்கொண்டிருக்கிறார்கள். யோசித்துப் பாருங்கள், கன்னியாகுமரி தமிழ்நாட்டில் சேர்ந்து பல்லாண்டு காலமாகிவிட்டது. மதுரையிலிருந்து திருநெல்வேலிக்கு அரிசி எடுத்துக்கொண்டு போக எப்படி கெடுபிடியில்லையோ, அது போல், திருநெல்வேலியிலிருந்து கன்னியாகுமரிக்கும் அரிசி எடுத்துக்கொண்டு போக கெடுபிடி இருக்கக் கூடாது. ஆனால் சமீபத்தில் திருநெல்வேலியிலிருந்து கன்னியாகுமரிக்கு தலைச்சுமையாக 1 படி, 2 படி அரிசி எடுத்துக்கொண்டு போனவர்களை பிடித்து, அதைப் பிடுங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஏன் இந்த நிலைமை? அந்த கன்னியாகுமரி மக்கள் இந்த தமிழக ஆட்சியின் கீழ் வரவில்லையா? கன்னியாகுமரி மாவட்டம் தமிழ் நாட்டின் ஆளுகைக்குள் வரவில்லையா? அந்த மக்களை இந்த அரசு ஆளவில்லையா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

சுங்கச் சாவடிகளை எல்லையோரப் பகுதிகளில் வையுங்கள். 9 சுங்கச் சாவடிகளை வைத்து இருக்கிறீர்கள். அப்படியிருந்தும் கடத்தல் நடைபெறுகிறது. அரிசி உற்பத்தி தமிழ்நாட்டில் நன்றாக இருக்கிறது என்பதற்காக பதக்கம் வேறு வாங்கியிருக்கிறீர்கள். இங்கே பதக்கம் வாங்கியிருக்கிறீர்கள், அங்கே மக்கள் பதறிக்கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறபோது இந்த விநியோகத்தில் தான் கோளாறு இருக்கிறது என்று தெரிகிறது. 70-80 லட்சம் டன் உணவு உற்பத்தி என்று சொல்கிறோம். கன்னியா

குமரி மக்களுக்கு 1,400 கிராம் அரிசி தான் கொடுக்கப்படுகிறது. (குறுக்கீடு) 2,100 கிராம் கூட கொடுக்க முடியவில்லையென்றால் எப்படி? அங்கே இருக்கிற மக்களுக்கு 2,100 கிராம் அரிசி கூட கொடுக்க வில்லையென்றால் வேறு என்ன பிரச்சினையைத்தான் நீங்கள் தீர்க்கப்போகிறீர்கள்? அங்கே மக்கள் மிகவும் கஷ்டப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அத்தியாவசியமான பொருள்கள் கூட கிடைக்காத அளவுக்கு அங்கே நிலைமை இருக்கிறது.

கேரளாவிற்கு எத்தனை லட்சம் டன் அரிசி தான் போகும்? கேரளத்தில் இருக்கும் மக்கள் என்ன ஆளுக்கு 5 படியா ஒரு நாளைக்குச் சாப்பிடுகிறார்கள்? அரசாங்கம் அதை எப்படிக் கொடுக்கப்போகிறது? திடீரென்று செய்தி பார்க்கிறோம். இங்கே தமிழ்நாட்டில் மக்கள் அரிசிக்காக தவிக்கிறார்கள், ஆனால் மத்திய அரசு 10 லட்சம் டன் அரிசி கேரளாவிற்கு அனுப்புங்கள் என்றால் உடனே அனுப்பி வைக்கிறேன் என்கிறார்கள். அவர்களுக்கு தேவை எவ்வளவு, அவற்றைக்கொடுப்பதற்கு நம்மால் முடியுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டாமா? எவ்வளவு உணவு உற்பத்தி ஏற்பட்டாலும், எவ்வளவு லட்சம் டன் உணவு உற்பத்தி அதிகரித்தாலும், அதை அவர்கள் எடுத்துக்கொண்டு போகிறார்கள் என்றால் எப்படி? எல்லையில் இருக்கும் சுங்கச் சாவடிகள் சரியான முறையில் பணியாற்ற வேண்டும். தமிழ்நாட்டு அரசாங்கமும் கேரளாவிற்கு இவ்வளவு அரிசி தேவை என்று சொன்னால் அதில் தன்னால் இவ்வளவு டன் தான் கொடுக்க முடியும், மீதியுள்ளதை மத்திய அரசு எங்கிருந்தாவது அனுப்பி வைக்கவேண்டுமென்று சொல்லவேண்டும்.

இந்தப் பிரச்சினையை உடனடியாக தீர்ப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றால், எல்லைப்புறத்தில் இருக்கும் மாவட்டங்களில் இருக்கும் அத்தனை மக்களுக்கும் ரேஷன் கார்டு கொடுக்க வேண்டும். வாரத்திற்கு 6 அவுன்சு அரிசி கொடுக்கவேண்டும். அதற்கு இந்த அரசு கடமைப் பட்டிருக்கிறது. 1 ரூபாய்க்கு 3 படி அரிசி போடுகிறேன் என்று சொன்னவர்கள் 6 அவுன்சு அரிசியாவது தாவில்லையென்றால் என்ன அர்த்தம்? திருநெல்வேலியிலிருந்து கன்னியாகுமரிக்கு அரிசி எடுத்துச் சொல்வதில் தடை இருக்கக்கூடாது. இப்போது அப்படி எடுத்துச் செல்பவர்களை பிடித்து விடுகிறார்கள். அங்கே கூட ஒரு

கட்சிக்கு ஒரு நியதி, இன்னொரு கட்சிக்கு இன்னொரு நியதி என்று வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஒரு கட்சியில் இருப்பவனாக இருந்தால் உடனே விட்டு விடுகிறார்கள், வேறு கட்சியில் இருப்பவனாக இருந்தால் ஒரு வாரம், ஒரு மாதம் என்று அடைத்து வைத்து விடுகிறார்கள். இந்த நிலைமையும் மாறவேண்டும்.

இந்த அரசு அரிசிப் பிரச்னையைத் தீர்க்கத் தவறிவிட்டது, அரசாங்கம் உள்ளபடியே மக்களுக்கு அரிசி வழங்கத் தவறி விட்டது, அரிசிப் பற்றாக்குறை காரணமாக அரசியலைப் பிடித்து இருக்கும் நீங்கள் ஒரு மாவட்டத்தில் அரிசிப் பிரச்னையைத் தீர்க்க முடியவில்லை, இதை விட ஒரு அத்தியாவசியான பொருள் குறித்து எதிர்க்கட்சிகள் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வர முடியாது என்று கூறி, இதற்காக ஒரு அரை மணி நேரம் விவாதம் தேவை என்று கேட்டு, அதை மிகவும் வலியுறுத்திக் கூறி, இது குறித்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டு, முடித்துக் கொள்கிறேன்.

திரு. மணலி சி. கந்தசாமி : எனது ஒத்திவைப்புத் தீர்மானம் கீழே கண்டவாறு இருக்கிறது :—

'failure of the Government to supply rice in sufficient quantity at reasonable price to the people of Kanyakumari district and the repressive measures adopted by the Government to suppress and stifle the agitation by the opposition parties.'

நான் குறிப்பிட்ட வகையிலே இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் அவசியத்தைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நமது ராஜ்யத்தில் ஒரு ஜில்லா கன்யாகுமரி. எல்லா ஜில்லாக்களிலுள்ள மக்களுக்கும் எவ்வளவு அரிசி எந்த விலையில் கிடைக்கிறதோ அந்த அளவுக்கு அந்த விலையிலே தங்களுக்கும் கிடைக்க வேண்டும் என்று அவர்கள் கோருவது அவர்களின் அடிப்படையான நியாயமான கோரிக்கை என்பதை யாரும் மறுக்க முடியாது. அதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கலாம். எந்தக் காரணமாக இருந்தாலும், அவர்கள் அடிப்படை உரிமையை நாம் மறுப்பதற் கில்லை. அதை ஏற்றுக்கொண்டு, அதற்கேற்ற ஏற்பாடுகள் செய்ய வேண்டியது மிகவும் அவசியம் என்பதை யாரும் மறுப்பதற் கில்லை. ஒன்று சொல்லப்படுகிறது. கள்ளக் கடத்தல், கள்ளக்

கடத்தல் என்று சொல்லப்படுகிறது. கள்ளக்கடத்தலை தடுப்பது சர்க்காரின் பொறுப்பு. அதில் ஊனம் இருக்கிறது என்றால் அதை அகற்ற வேண்டும். கள்ளக்கடத்தல் செய்பவர்கள் சமூக விரோதிகள். நாட்டின் பொருளாதாரத்தைக் குலைக்கக்கூடிய வர்கள். அவர்களுக்கு எந்த அளவுக்கு கடுமையான தண்டனை கொடுக்கவேண்டுமோ அந்த அளவுக்கு கடுமையாக தண்டித்து அவர்களைக் கட்டுப்படுத்தவேண்டியது சர்க்காரின் பொறுப்பு. அதற்கு இங்கு இருக்கக்கூடிய எல்லா எதிர்க்கட்சிகளும் ஒத்துழைப்பதற்கு தயார் என்று நான் இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கிறேன். கள்ளக் கடத்தல் நடக்கிறது என்பதற்காக, சமூக விரோதிகள் நாட்டின் பொருளாதாரத்தைக் குலைக்கிறார்கள் என்பதற்காக நியாயமான அடிப்படையில் உள்ள அந்த ஜில்லா மக்களின் கோரிக்கையை மறுப்பதற்கு எந்தவிதமான முகாந்தரமும் கிடையாது. அதன் அடிப்படையில் அவர்கள் அதை எதிர்த்து கிளர்ச்சி செய்தால் போலீஸ் தங்களது ரெப்ரஷன், அடக்கு முறையை அவிழ்த்துவிடுகிறார்கள். அம் மாதிரி சூழ்நிலை இருந்துகொண்டு வருகிறது. நியாயமான கோரிக்கைக்கு கிளர்ச்சி செய்யும்பொழுது, அவர்கள் மீது போலீஸ் அடக்குமுறையை ஏவிவிடுவது கண்டிக்கத் தகுந்தது. கன்னியா குமரி ஜில்லாவில் இப்படிப்பட்ட நிலை மாறுவதற்கு தகுந்த நடவடிக்கை எடுத்து, அங்கே மக்களுக்கு வேண்டிய உணவு கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று வலியுறுத்து வதற்குத்தான் இது பற்றி விவாதிக்கவேண்டுமென்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மோசஸ் அவர்கள் இருக்கையில் இல்லை.

*மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவர் அவர்களே, கன்யாகுமரிப் பிரச்னையைப் பற்றி இதற்கு முன்னாலே பல முறை கடந்த சட்டமன்ற நடவடிக்கைகளின் போது பேசப் பட்டிருக்கிறது. சர்க்கார் எடுத்துக்கொண்ட புதிய கட்டுப்பாடு முயற்சிகளிலுள்ள கஷ்டங்களையெல்லாம் பற்றி நாம் இங்கே பேசினோம். ஆகவே நான் எல்லா விளக்கங்களையும் இங்கே சொல்லத் தேவையில்லை என்று கருதி, நாகர்கோவில் பிரச்னையைப்

பற்றி மட்டும் சொல்லிக் கொள்கிறேன். பொன்னப்ப நாடார் அவர்கள் மற்றைய சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர்களைக் கலந்துகொண்டு தான், நாங்கள் ஏற்படுத்தியிருக்கிற ஏற்பாடுகளைப் பற்றி நாங்கள் கலந்து பேசிய பிறகு தான் 1,400 கிராம் அரிசி என்று இருந்ததை 1,600 கிராமாகக் கொடுக்கவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டது. அங்கு இருக்கிற பெல்ட் ஏரியாவைத் தவிர மற்ற இரண்டு வட்டங்களும் சர்ப்ளஸ் வட்டங்கள் என்று தான் எப்பொழுதும் கூறப்படுகிறது. அங்கே 1½ லட்சம் டன் உற்பத்தி ஆவதாக கணக்கு இருக்கிறது. பொன்னப்ப நாடார் அவர்கள் அது குறைவாக இருக்கிறது என்று சொன்னார். அப்படி கணக்கு இருக்கலாம். இந்த ஆண்டு கொஞ்சம் விளைச்சல் குறைவு என்று அவர்கள் என்னிடம் பேசினார்கள். பொதுவாக அது சர்ப்ளஸ் மாவட்டம் என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். பலர் கூட பல அறிக்கைகள் கொடுத்திருக்கிறார்கள். உபரி மாவட்டமாக இருந்தும் அங்கு ஏன் பஞ்சம் என்ற ஒரு கேள்வியைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தக் கடத்தலைப் பிடிக்க தீவிரமாக தடுக்கவேண்டுமென்று சென்ற ஆண்டுபோட்ட திட்டங்களை விட இந்த ஆண்டு இந்தக் கடத்தல் மிகத் தீவிரமாக தடுத்து நிறுத்தவேண்டும் என்று கருதப்பட்டது. பக்கத்தில் இருக்கிற மாநிலத்தில் அதிகமாக பஞ்சம் ஏற்பட்டு மிகுதியாக இந்த வியாபாரத்தில் பலர் ஈடுபடுகிறார்கள் என்ற காரணத்தினால் எல்லை ஓரப் பகுதிகளில், எல்லா எல்லை ஓரப் பகுதிகளிலும் நாங்கள் சட்டம் போட்டிருக்கிறோம். அந்த எல்லை ஓரப் பகுதிகளில் அரிசிப் போக்குவரத்தை கண்காணித்துத்தான் அனுப்பவேண்டும் என்று நடவடிக்கைகள் எடுத்தோம். திருமதி அனந்தநாயகி அவர்கள் கன்யாகுமரியில் அவர்கள் பங்கு கொண்ட மாதிரி நாங்கள் இந்த சந்தர்ப்பத்தில் ஆள் பிடிக்கிற மாதிரி செய்யக்கூடாது என்றெல்லாம் சொன்னார்கள். நாங்கள் அப்படிச் செய்யவில்லை. பொன்னப்ப நாடார் அவர்களும் இங்கு இருக்கிற எம்.எல்.ஏக்களும் சொல்வார்கள். அவர்கள் போட்ட தீர்மானத்தில் சொல்லியிருக்கிறார்கள். காமராஜ் அவர்கள் அங்கே ஜெயித்த காரணத்தினால், கடந்த தேர்தலில் மக்கள் அங்கே எங்களுக்கு அதிக அளவில் வாக்கு அளிக்கவில்லை என்ற காரணத் தினால் கன்யாகுமரி மாவட்டம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்று பழைய கதையையே பேசிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி அல்ல.

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1973 ஆகஸ்ட் 4

மதுரை மாவட்டத்தில் கம்பம் பகுதியில் அதே நடவடிக்கை எடுத்திருக்கிறோம். கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சிப் பகுதியில் அதே நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அவர்கள் சொல்வது போல் கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் அப்படிச் செய்யவில்லை. எங்கு பெல்ட் ஏரியா இருக்கிறதோ அங்கே 5 மைல் அளவுக்கு தடை விதித்து, உள்ளே செல்கிறபொழுது ஒரே அளவாக விடமுடியவில்லை என்ற காரணத்தினால், ஒவ்வொரு இடத்திலும் சோதனைச் சாவடிகள் வைத்திருக்கிறோம். எல்லா கட்சிகளும் சேர்ந்து தீர்மானம் போட்டார்கள். சோதனைச் சாவடிகளை எடுக்கவேண்டும் என்று தீர்மானம் போட்டார்கள். அப்படி தீர்மானம் போட்டார்களே தவிர, அங்கு ஏற்பட்டிருக்கிற கஷ்டங்களை விவரிக்கக்கூடிய தீர்மானங்கள் அதிகமாக கிடையாது. (திருமதி த. ந. அனந்தநாயகி குறுக்கீடு). நான் பேசி முடித்து விடுகிறேன். நீங்கள் கேள்விப்பட்டு பேசுகிறீர்கள். நான் நேராகப் போய் பார்த்துவிட்டுப் பேசுகிறேன். ஆகையால் நாகர்கோவிலை மட்டும் தனியாக பழிவாங்குகிறோம் என்ற பிரச்னை வந்திருக்க முடியாது. ஆனால் அந்தப் பகுதிகளில் அவர்கள் போட்ட தீர்மானம் என்னவென்றால் சோதனைச் சாவடிகளை நீக்கவேண்டும் என்பது தான். நான் கன்னியாகுமரிக்குப் போயிருந்தபொழுது எல்லாக் கட்சியினருடன் கலந்து பேசினேன். அத்தனை எம்.எல்.ஏ.க்கள், யூனியன் சேர்மன் எல்லோரையும் கலந்து பேசினேன். திருநெல்வேலியில் உள்ள சோதனைச் சாவடிகளை எடுக்கவேண்டும் என்று ஒரு சிலர் கருத்து தெரிவித்தார்கள். சுதந்திரா எம்.எல்.ஏ. திரு. மோஸஸ் அவர்கள் சோதனைச் சாவடிகள் நிச்சயம் திருநெல்வேலியில் இருக்கத் தான் வேண்டும் என்று சொன்னார்கள், எடுக்கக்கூடாது என்று சொன்னார்கள். தோவாளை, அகஸ்தீசுவரம் சர்ப்ளஸ் தாலூகாக்கள். எந்த அளவுக்கு அதிகமாக கடைகளை வைத்து ஓபன் மார்க்கெட்டில் கொடுக்க முடியுமோ அதைக் கொடுத்தோம்.

அது மட்டுமல்ல, அங்கு வந்து கொண்டிருந்த அரிசியின் அளவை அதிகப்படுத்தவேண்டும் என்று பேசினார்கள். 1973 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 11-ஆம் தேதியிலிருந்து 1973-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 3-ஆம் தேதி வரையில் 6,110 டன் அங்கு அரிசி வெளி மார்க்கெட்டிலிருந்து கொண்டு வந்து விற்பனைக்காக அனுமதித்திருக்கிறோம். அதைப் போல சர்க்கார் கொள்

1973 ஆகஸ்ட் 4] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

முதலிலிருந்து கடலோரப் பகுதிகளில் அங்கு ஒரு மாதத்திற்கு எந்த அளவுக்கு கார்டுகள் இருக்கிறதோ அந்த அளவுக்கு 1,800 கிராம் வரையில்—முதல் அமைச்சர் அவர்களின் அறிக்கைக்கு முன்னாலே சொல்கிறேன்—1,800 கிராம் வரையில் அரிசி கொடுக்கப் பட்டிருக்கிறது. ஜேம்ஸ் அவர்களும், ராஜாராம் நாயுடு அவர்களும் அதைப்பற்றி என்னிடம் பேசினார்கள். 1,800 கிராம் கடலோரப் பகுதிகளில் கொடுப்பதற்கு நான் கலெக்டரிடம் சொல்லிவிட்டு வந்தேன். மற்ற இடங்களில்—உங்களுக்குத் தெரியும்—கள்ளக் கடத்தலை எந்த அளவுக்குத் தடுத்திருக்கிறோம் என்பது தெரியும். இப்பொழுது மூன்று எல்லை ஓரப்பகுதிகளில் கூட நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் 3 ஸ்பெஷல் ஆர்ம்டு போலீஸ் கம்பெனிகளைக் கொடுத்து சோதனையை இன்னும் தீவிரப்படுத்த ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம். ஒரு சில இடங்களில் அப்படி விலை ஏறினாலும், எந்த அளவுக்குத் தடுக்க முடியுமோ அந்த அளவுக்குத் தடுத்துக்கொண்டிருக்கிறோம். கல்குளம், விளவங்கோடு தாலுகாக்களில் 1,500 ரீடயில் ஷாப்ஸ் ஏற்கனவே இருக்கின்றன. அந்த ஷாப்களுக்கு 5 மூட்டைகள் என்ற அளவில் அரிசி கொடுக்கப்பட்டிருக்கிறது. அதையும் அன்னியில் கூட்டுறவு மற்றும் சாவடிகளில் வைத்து இன்னும் விநியோகத்தை எவ்வளவு துரிதப்படுத்த முடியுமோ அந்த அளவுக்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறோம். சென்ற ஆண்டை விட கிட்டத்தட்ட 10,000 டன் அளவில் அதிகமாக செல்கின்ற அளவில் அதிகமாக அரிசி தந்திருக்கிறோம்.

இப்பொழுது 15 நாட்களில் எடுக்கப்பட்ட நடவடிக்கையின்படி 6 மொபைல் பஸ்களின் மூலம் அரிசி வழங்கப்பட்டிருக்கிறது. கடைகள் வைக்கப்படாத இடங்களில், கிராமங்களில், அரிசனங்கள் வாழ்கின்ற பகுதிகளில் 6 மொபைல் பஸ்களை வைத்து அரிசி வியாபாரம் செய்யச் சொல்லியிருக்கிறோம். அந்தப் பொறுப்பை சர்க்காரே எடுத்துக்கொண்டிருக்கிறது. 26 இடங்களில் சர்க்கார் ஷாப்ஸ் ஓபன் பண்ணியிருக்கிறோம். 500 கூட்டுறவுக் கடைகள் மூலம் விநியோகம் செய்வதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். அங்கே 13 லட்சம் சொச்சம் கார்டுகள் இருக்கின்றன.

தகாத முறையில் வாங்கியிருக்கக்கூடிய கார்டுகளை வெரிபை செய்து கண்டுபிடிப்பதற்கு சென்னையிலிருந்து பல அதிகாரிகள்

அங்கே சென்றிருக்கிறார்கள். 10,000 கார்டுகளுக்கு அதிகமாக சோதனை செய்து போலிக் கார்டுகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

ஆகவே, நடவடிக்கை ஒன்றுமே எடுக்கவில்லை என்று சொல்வதற்கு என்ன காரணம் என்று எனக்குத் தெரியவில்லை, எதற்காக சொல்கிறார்கள் என்றும் தெரியவில்லை. தமிழகம் சிறப்பாக இருக்கிறது என்பதற்காக, ஏதாகிலும் சொல்லவேண்டும் என்பதற்காக, ஏதோ நாகர்கோவிலில் அவர்கள் மட்டும் தான் அக்கறை காட்டுவது போலவும், அவர்கள் ராஜ்யத்தில்தான் அக்கறை காட்டியது போலவும், எங்கள் ராஜ்யத்தில் அக்கரை காட்டவில்லை போலவும் இதை ஒரு அரசியல் பிரச்னையாக பயன்படுத்திக்கொண்டு பேசுகிறார்கள். அது சரியல்ல என்று சொல்லிக்கொள்கிறேன். பொன்னப்ப நாடார் அவர்களோடும், மற்றவர்களோடும், அவர்கள் போராட்டம் தொடங்குகின்ற வரையில் அவர்களைக் கலந்து கொள்ளாமல் ஒன்றும் முடிவு செய்யவில்லை. அடிக்கடி அவர்களோடு கலந்து பேசியிருக்கிறேன். தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொண்டு வந்திருக்கிறோம்.

மு.ப. 11-00 யார் கள்ளக் கடத்தல் செய்கிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். கள்ளக் கடத்தலை பிடிக்கவில்லை, பிடிக்கவில்லை என்று சொல்லிக்கொண்டிருப்பது சரியல்ல. அரசாங்கத்தோடு மக்களும் இந்த விஷயத்தில் ஒத்துழைக்க வேண்டும். எங்கெங்கே கள்ளக் கடத்தல்காரர்கள் இருக்கிறார்கள் என்பதும் அரசுக்குத் தெரியும்; யார் யார் அதற்கு உடந்தையாக இருக்கிறார்கள் என்பதும் அரசுக்குத் தெரியும். அவர்களை எல்லாம் கண்டுபிடித்து நடவடிக்கை எடுப்பதில் அரசாங்கம் தயக்கம் காட்டாது. ஆனால் கள்ளக்கடத்தலைப் பிடிக்கிறோம் என்று சொல்லி, கம்பத்திலே என்ன நடைபெற்றது என்பது பலருக்கும் தெரியும். அதற்கு யார் யார் உடந்தையாக இருந்தார்கள் என்பதும் தெரியும். (திரு. தங்கமணி எழுந்தார்) நான் உட்கார்ந்த பின்னால் நீங்கள் பேசுங்கள். நான் சொல்லி முடித்துவிடுகின்றேன். (திரு. தங்கமணி நின்றுகொண்டிருந்தார்) தலைவரவர்களே, நான் முடித்துவிட்ட பிறகு அவர் பேசவேண்டும். நான் சொல்லி முடித்துவிடுகிறேன். அதற்குப் பின்னால் அவர் பேசட்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: அதைப்பற்றி சபாநாயகர் சொல்லட்டும். கம்பத்திலே நடைபெற்ற சம்பவத்தைப்பற்றி குறிப்பிட்டதால்தான் நான் குறுக்கிடுகிறேன். (மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி அவர்கள் உட்கார்ந்தார்கள்) கம்பத்தைப் பற்றிச் சொன்னார்கள். ஒரு விஷயத்தைப்பற்றிச் சொல்வதாக இருந்தால், அதைப்பற்றி முழுவதும் தெரிந்து கொண்டு பேசவேண்டும். ஜனங்கள் 5 லாரிகளை நிறுத்தி, அரிசியைக் கீழே இறக்கி, அங்கே உள்ள எம்.எல்.ஏ.க்குத் தகவல் கொடுத்து விட்டு, மறுநாள்தான் அரிசியை விநியோகம் செய்தார்கள்.

***மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, தாங்கள் புதிதாக இந்தப் பொறுப்பை ஏற்றிருக்கிறீர்கள். தலைவருடைய அனுமதியைப் பெற்ற பின்னால்தான் ஒருவர் குறுக்கிடலாம். பேசிக்கொண்டிருப்பவர் உட்கார்ந்தால்தான் குறுக்கிடுபவர் பேசலாம். அதற்கு விதிகளும் இருக்கின்றன. கனம் உறுப்பினர்கள் அந்த நாகரிகத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: கனம் சபாநாயகர் அவர்களே, 'நாகரிகத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும்' என்று சொன்ன அந்த வார்த்தைகளைத் திரும்பப் பெறவேண்டும்.

a word is 'parliamentary' or 'unparliamentary' has to be taken along with the context. The Hon. Minister need not teach us.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இப்போதுதான் சொல்ல வருகிறேன். சொல்வதை முழுவதும் கேட்டுவிட்டு சொன்னால் நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சரவர்கள் ஒரு கருத்தைச் சொல்கிறார்கள். அவர்கள் என்ன சொல்ல விரும்புகிறார்கள் என்பதைக் கேட்டுவிட்டு குறுக்கிட்டால் நல்லது. நமது சட்டசபை மரபுகளின்படி உறுப்பினர்கள் எப்படி நடந்து கொள்ளவேண்டுமென்ற நாகரிகத்தைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்கிறார்கள். மரபுகளைக் கடைப்பிடிப்பது எல்லா உறுப்பினர்களுக்கும் நாகரிகமாக இருக்கும். அவர்கள் எந்த நோக்கத்தில் சொன்னார்கள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். கள்ளக் கடத்தலைக் கண்டுபிடிக்கவில்லை; கம்பத்திலே

என்ன நடைபெற்றது என்று அமைச்சரவர்கள் தவறான தகவலைத் தந்தால் 'பிரிவிலேஜ் மோஷன்' இருக்கிறது; அதைக் கொண்டுவரலாம். ஒருவர் பேசும்போது பொதுவாக மற்றவர்கள் குறுக்கிடக் கூடாது என்பதும் ஒரு நாகரிகம்தான்.

***மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** இந்தக் கள்ளக் கடத்தலுக்குச் சர்க்காரே சாதகமாக இருக்கிறது என்று சிலர் சொன்னார்கள். கள்ளக் கடத்தலிலே பல பரம்பரையினர் இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். அவர்கள் எந்த எந்த இடங்களிலே இருக்கிறார்கள், எந்த எந்த இடங்களிலே கள்ளக் கடத்தலில் ஈடுபடுகிறார்கள், அவர்களுக்கு யார் யார் உடந்தையாக இருக்கிறார்கள் என்பது எல்லாம் தெரியும்.

இப்போது நாகர்கோயில், கம்பம், பொள்ளாச்சி ஆகிய இடங்களில் பலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். கள்ளக் கடத்தல் நடைபெறுகிறது என்று பலரும் பேசுவதை விட, எந்தெந்த இடங்களிலே யார் யார் கள்ளக் கடத்தல் செய்கிறார்கள் என்று சொன்னால் அரசாங்கத்திற்கு நடவடிக்கை எடுக்க உதவியாக இருக்கும். அதனால் அரசாங்கம் ஒன்றும் செய்யாமல் சும்மா இருக்கிறது என்று சொல்லவில்லை. கள்ளக் கடத்தலைத் தடுப்பதற்கு போலீஸ் அதிகாரிகளையும் மற்றும் நிர்வாக அதிகாரிகளையும் பணியாளர்களையும் பெருமளவுக்கு நியமித்திருக்கிறோம். அந்தக் கணக்கு விபரம் இப்போது இல்லை; இருந்தால் அதையும் சபையில் வைத்திருப்பேன். கடந்த நான்கு மாதங்களுக்குள்ளாக நாங்கள் எந்த அளவுக்கு அரிசி கடத்திச்சென்ற லாரிகளைப் பிடித்திருக்கிறோம் என்பது உறுப்பினர்களுக்குத் தெரியும். இப்போது லாரி அதிகமாகப் போகவில்லை என்று சொல்கிறார்கள்.

அண்மையிலே தலைச்சுமையாக அரிசி கடத்திச் சென்ற 60 பேர்களை போலீசார் துரத்திச் சென்றார்கள். அவர்கள் மலைமேல் ஏறி தப்பி ஓடினார்கள். அவர்களை போலீஸ் அதிகாரிகள் துரத்திச் சென்றபோது, மலைமேலிருந்து கற்களை உருட்டித் தள்ளியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட உயிருக்கு ஆபத்தான நேரங்களில்கூட அதிகாரிகள் பின்வாங்கவில்லை. எப்படியாவது கள்ளக் கடத்தலை தடைசெய்ய வேண்டுமென்பதில் முடிந்த அளவுக்கு வேகமாக நடவடிக்கை எடுத்துவருகிறோம்.

கம்பத்திலே என்ன நடந்தது என்பதைப்பற்றி முழுவதும் தெரிந்துகொண்டு பேசவேண்டுமென்று திரு. தங்கமணி அவர்கள் சொன்னார்கள். அங்கே என்ன நடந்தது என்பதுபற்றி சர்வ கட்சிக் கூட்டத்தினர் ஒரு தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். 23—6—73 மாலையில் பொதுமக்கள் சட்டத்தைக் கையில் எடுத்துக்கொண்டு பெர்மிட்டுடன் அரிசி எடுத்துக்கொண்டு சென்ற லாரிகளை நிறுத்தி, அரிசியை எடுத்து பொதுமக்களுக்கு விநியோகம் செய்தது வருந்தத்தக்கது: கண்டிக்கத்தக்கது என்று தீர்மானம் போட்டிருக்கிறார்கள். அந்த சர்வ கட்சிக் கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகம், பழைய காங்கிரஸ், புதிய காங்கிரஸ், எல்லா கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களும் பங்குகொண்டிருக்கிறார்கள். தங்கமணி அவர்கள் வேண்டுமானால் இந்தத் தகவலைப் புதிதாகத் தெரிந்துகொள்ளட்டும். ஆகவே, கள்ளக் கடத்தலைப் பிடிக்கவில்லை, சர்க்கார் அதற்கு உடந்தையாக இருக்கிறது என்று சொல்வது தவறான கருத்தை மக்களிடையே பரப்புவதாகும்.

நாகர்கோயிலை பொறுத்தவரையில் துரிதமான நடவடிக்கை எடுத்து, அதன் விளைவாக இப்போது இரண்டு ரூபாய் ஐம்பது பைசாவுக்கு அரிசி கிடைக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். மற்ற விஷயங்களைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பேச இருப்பதால், நான் இதோடு முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: சார், ஐ . . . (திரு. சுவாமிதாஸ் டாக்டர் ஹாண்டே ஆகியோர் எழுந்து நின்றார்கள்)

On a point of clarification, I rise, Sir. The Hon. Minister referred to my name and said something wrong. I am entitled to clarify that point. When the Hon. Minister was speaking, I was not interfering.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பர்சனல் எக்ஸ்பிளனேஷனா?

திரு. ஜே. ஜேம்ஸ்: ஆம். That is why I am standing. மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறும்போது நாங்கள் இதுவரையிலும் செக் போஸ்டுகளை அகற்ற வேண்டுமென்ற கோரிக்கையைத்தான் வைத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். எங்கள் கோரிக்கையை நான் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நோ, நோ.

திரு. ஜே. ஜேம்ஸ் : எங்கள் கோரிக்கை திருநெல்வேலிக்கும் கன்னியாகுமரிக்கும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேட்பது பர்சனல் எக்ஸ்பிளனேஷன். உங்களைப்பற்றிச் சொல்லியிருந்தால் மட்டும் நீங்கள் அதற்கு விளக்கம் கொடுக்கவேண்டும். உங்கள் கட்சியைப் பற்றிச் சொன்னால் அதைப்பற்றி நீங்கள் பேசக்கூடாது.

THIRU J. JAMES : Sir, I represent a party. The Hon. Minister referred to my party and talked something about my party.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பர்சனல் எக்ஸ்பிளனேஷனில் பார்ட்டி வராது.

THIRU R. PONNAPPA NADAR : I may be given an opportunity to put questions and explain my stand. The Hon. Minister was saying that whatever has been done was done in consultation with the Leaders of my party. That is the way in which he has been telling the House. I refute that statement. I must have an opportunity to state the suggestions and remarks made by my party.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கட்சித் தலைவர். நீங்களாவது ஒரு மரபைக் கடைப்பிடியுங்கள். நான் பேசிக் கொண்டிருக்கிறேன். திரு. ஜேம்ஸ் அவர்கள் எழுப்பிய பிரச்சனைக்கு தீர்ப்பளித்துக்கொண்டிருக்கிறேன். இடையிலே நீங்கள் எழுந்து பேசிக்கொண்டிருக்கிறீர்கள். நான் உட்கார்ந்த பின்னால் விளக்கம் கேளுங்கள்.

பர்சனல் எக்ஸ்பிளனேஷன் என்றால், தனிப்பட்ட முறையில் ஒருவரைப் பற்றிக் குறிப்பிட்டால்தான் அந்த நபர் பர்சனல் எக்ஸ்பிளனேஷன் கொடுக்கலாம். ஆனால் ஒரு கட்சியைப் பற்றி வரும்போது, அந்தக் கட்சி உறுப்பினர் குறுக்கிடக்கூடாது. இப்படியே ஒருவர் கருத்திற்கு எதிர் கருத்து என்ற முறையில் திரு. பொன்னப்ப நாடாரும், திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்களும், மற்றவர்களும் சொல்லிக்கொண்டிருந்தால் சபை ஒழுங்காக நடக்காது ; சபை இருக்காது. திரு. ஜேம்ஸைப்

பற்றியோ அல்லது திரு. பொன்னப்ப நாடாரைப் பற்றியோ சொன்னால் குறிப்பிட்ட அந்த ஒருவர் மட்டும்தான் பர்சனல் எக்ஸ்பிளனேஷன் கொடுக்க வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன முறையில் ?

திரு. ஜே. ஜேம்ஸ் : நான் சொல்லக்கூடிய பாயின்ட் ஆஃப் ஆர்டரைக் கேளுங்கள். தப்பு என்றால் நீங்கள் அனுமதிக்க வேண்டாம். ஆனால் என்னுடைய பாயின்ட் ஆஃப் ஆர்டரை கூற நீங்கள் அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆஃப் ஆர்டர் கேட்பதற்கும் சில விதிமுறைகள் உண்டு. இப்போது தங்கமணி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அமைச்சரவர்கள் கள்ளக்கடத்தலிலே யார் யார் ஈடுபடுகிறார்கள் ; கம்பத்திலே என்ன நடைபெற்றது ; யார் யார் அதற்கு உடந்தை என்பதெல்லாம் தெரியும் என்று சொன்னார்கள். உடனே அதிலே குறுக்கிடுவது அவ்வளவு பொருத்தமாக இருக்காது. அமைச்சர் சொல்வது தவறான தகவல் என்றால், அவர்மீது பிரிவிலேஜ் மோஷன் கொண்டு வரலாம். அதற்கு உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறது.

சட்டசபையில் சில விதிமுறைகள், மரபுகள் கடைப்பிடிக்கப் படுகின்றன. அவற்றை மீறினால், அதைப்பற்றிச் சொல்வதற்குத் தான் பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்கவேண்டும். அதை விட்டு விட்டு ஒருவர் கருத்துக்கு எதிர் கருத்து என்ற முறையில் சொல்வதானால், அதை அனுமதிக்க முடியாது. விதிமுறைகளிலும் அதற்கு இடமில்லை. ஆகவே, விதிமுறைகள், மரபுகள் மீறப் பட்டிருந்தால் அதைச் சுட்டிக்காட்ட மட்டும் பாயின்ட் ஆஃப் ஆர்டர் கேட்க வேண்டுமென்று உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, நானும் கழிந்த ஐந்தாண்டுகளாக இந்தச் சட்டமன்றத்தில் உறுப்பினராக இருந்திருக்கிறேன். எந்த முறையில் செயல்படவேண்டும், என்ன என்ன முறைகளைக் கையாள வேண்டும் என்பதைக் கண்டுகொண்டு

தான் காரியங்கள் செய்து வந்திருக்கிறேன். விதிமுறைகளுக்கு உட்பட்டே இன்று ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே தாங்கள் அதை அனுமதிக்க வேண்டியது அவசியம் என்று கருதுகிறேன். நான் இங்கே கூறுவது அமைச்சர் அவர்கள் சில காரியங்களைக் கூறினார்கள். அவை நான் சம்பந்தப்பட்ட காரியங்கள். ஆகையால் அதற்கு விளக்கம் கொடுக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். அதோடு நானே இந்த மன்றத்திற்கு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். இதற்கு முன்பாக நாம் இதுவரை கடைப்பிடித்து வந்துகொண்டிருக்கிற மரபுப்படி இதுபோன்ற பல சந்தர்ப்பங்களில் அனுமதி அளிக்கப் பட்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலில் நான் சொல்வதைக் கேளுங்கள். கொஞ்சம் உட்காருங்கள்.

(திரு. ஜே. ஜேம்ஸ் நின்றுகொண்டிருந்தார்)

திரு. துரை முருகன் : சார், பாயின்ட் ஆப் ஆர்டர். ஒரே நேரத்தில் இரண்டுபேர்கள் எழுந்து பேசிக்கொண்டிருக்கலாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். இந்த அவையில் பாயின்ட் ஆப் ஆர்டர் எப்போது எழுப்பலாம், எப்போது எழுப்பக்கூடாது என்பதற்கு இந்த மன்றத்தின் தலைவர்களாக இருந்தவர்கள் கொடுத்த தீர்ப்புக்களே இருக்கின்றன.

" Members should not raise a point of order to express their opinion on a certain matter "
என்று கூறியிருப்பவர் திரு. கிருஷ்ண ராவ் அவர்கள்.

' A point of order must relate to procedure. It is not proper to make comments on a matter under discussion under the pretext of raising a point of order. '
இது யார் கூறியது? திரு. கோபால் மேனன் அவர்கள் கூறியது.

' Members might be in order in raising points of order when *prima facie* there was a point of order. But, under the pretext of ' point of order ' if they rose to give vent to their views, it was

out of order and would be construed as contempt of the House as well as violation of its conventions '.

இது கூறியது யார்? நம்முடைய முன்னாள் பேரவைத் தலைவர் திரு. மதியழகன் அவர்கள் கூறியிருப்பது. ஆக, பாயின்ட் ஆப் ஆர்டர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு விதிமுறை இருக்கிறது. நான் சட்டமன்றத்தில் இருந்தேன், பேசினேன் என்றெல்லாம் சொல்வதனால் அனுமதிக்க முடியாது.

THIRU J. JAMES : Sir, on a point of clarification.

MR. SPEAKER : No clarification.

THIRU J. JAMES : Sir, I am entitled to clarification.

MR. SPEAKER : No, you are not entitled to clarification.

THIRU J. JAMES : Sir, a wrong representation has been made in this House . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றிக் குறிப்பிடு வதற்கு உறுப்பினருக்கு வேறு வாய்ப்பு இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : என்னுடைய கருத்துக்கள் எதையும் கூற முடியாது, அமைச்சர் அவர்கள் தவறான கருத்துக்களைச் சொல்லி யிருந்தாலும், உண்மையான கருத்துக்களை எடுத்துச் சொல்ல இங்கே எனக்கு வாய்ப்பு அளிக்க முடியாது என்று சொன்னால் நான் வெளி நடப்புச் செய்யத் தயாராய் இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது உறுப்பினருக்குள்ள உரிமை.

திரு. ஜே. ஜேம்ஸ் : அமைச்சரவர்கள் கூறினது உண்மைக்குப் புறம்பானவை. நான் க்ளாரிபிகேஷன் கொடுக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் முதலிலே உட்காருங்கள். திரு. ஜேம்ஸ் பேசுவதற்கு நான் வாய்ப்புத் தரவில்லை என்கிற குற்றச்சாட்டுக்கு இடம் இல்லை. அமைச்சர் தவறான கருத்தை அளித்திருக்கிறார்கள் என்றால் அதற்கு எந்த

வகையில் செயல்படவேண்டும் என்பதற்கு விதிமுறைகளில் இடம் இருக்கிறது. க்ளாரிபிகேஷன் என்று விளக்கம் கொடுக்க இது நேரம் இல்லை. பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லிக் கொண்டு விளக்கம் கொடுப்பதைத்தான் நான் அனுமதிக்க முடியாது என்று சொன்னேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பல விவரங்களை எடுத்துக் கூறினார்கள். ஓரிரு காரியங்களில் என்னைச் சம்பந்தப்படுத்தியிருப்பதால் அதற்கு நான் மறுப்புத் தெரிவிக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். கன்னியாகுமரி பிரச்சினையில் என்னைக் கலந்துகொண்டே முடிவு எடுக்கப்பட்டதாகச் சொல்வது சரியல்ல. நாங்கள் சொன்ன ஆலோசனைகளை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. கார்டு இதுகாறும் கொடுக்கப்படவில்லை என்று அமைச்சர் அவர்களிடம் பலமுறை எடுத்துச் சொன்னேன். இப்போதாவது, "கார்டு கொடுக்கப்பட்டிருக்கிறது, எல்லாப் பகுதிகளுக்கும்" என்று கூறுவார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி அங்கு அரிசி ரூ. 2-க்குக் கிடைப்பதாக, விலை குறைந்திருப்பதாகக் கூறினார்கள். இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது என்பதை தங்கள் மூலமாக, இந்த மன்றத்தின் மூலமாக நான் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போதும் ரூ. 5-க்குக் குறையவில்லை. எல்லாப் பகுதிகளிலும் கிடைக்கவில்லை. அந்தப் பகுதியில் உள்ள ஜனங்களுக்கு நியாயவிலையில் அரிசி கிடைக்கவேண்டும் என்றுதான் நாங்கள் சொல்கிறோம். எங்கள் தீர்மானத்தைப் படித்தார்கள். எங்கள் தீர்மானத்தின் முற்பகுதியில் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். 17—5—73 அன்று நிறைவேற்றப்பட்ட அந்தத் தீர்மானத்தின் ஒரு பகுதியை தங்கள் அனுமதியோடு படிக்க விரும்புகிறேன். 'வெளிமாவட்டத்தில் இருந்து கன்னியாகுமரி மாவட்டத்திற்கு அரிசி கொண்டு வருவதற்கு உள்ள தடையையும், மாவட்டத்திற்குள்ளேயே அரிசி நடமாட்டத்திற்குள்ள தடையையும் அகற்றி நியாய விலையில் அங்கு அரிசி கிடைக்க நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ளவேண்டும் என்று அரசை இந்தக் கமிட்டி வற்புறுத்துகிறது. அதோடு கேரள எல்லையை அடுத்து இருக்கக்கூடிய

விளவங்கோடு, கல்குளம் தாலூக்காவில் வார ரேஷன் அளவு அரிசியை நபர் ஒன்றுக்கு 2,800 கிராமாகப் போட வேண்டும் என்று வற்புறுத்துகிறது' என்பதாகும்.

1,400 கிராமாக கொடுத்ததை 1,500 ஆக்கினோம். இப்போது 2,000 ஆகக் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். அதிலும் குறிப்பாக சில பகுதிகளில் இல்லை. சில பகுதிகளில் 6 லிட்டர் தான் கொடுக்கிறார்கள், எவ்வளவு நபர் இருந்தாலும். இதைப் பார்க்கும்போதெல்லாம் மிகவும் வேதனையாக இருக்கிறது. மலையோரப் பகுதியில் 500 கிராம்தான் கிடைக்கிறது என்பதையும் வலியுறுத்துகிறேன். இதை கவுரவப் பிரச்சினையாகக் கவனிக்காமல் மனிதாபிமானப் பிரச்சினையாகக் கவனித்து உடனடியாக நடவடிக்கை எடுத்தாகவேண்டும். இதில் எந்தவிதமான அரசியலும் இல்லை. அந்தப் பகுதி மக்களை அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு பசியாகப் போடவேண்டாம், பட்டினியாகப் போடவேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. பி. கோபால் : அமைச்சர் அவர்கள் கம்பம் சம்பந்தமாகச் சொன்னதால் ஒரு தன்னிலை விளக்கம் அளிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : உங்களைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை.

DR. H. V. HANDE : I am raising a point of order. I am trying to catch the distinguished eye of the Hon. Speaker for the past ten minutes. The point is that the Hon. Speaker gave a ruling that whenever statements are made contrary to facts, we can seek remedy through a privilege motion. My submission to the Hon. Speaker is that that is not always the case. Members are given an opportunity to bring to the attention of the Hon. Minister that these are the facts which they know and the Hon. Minister can refute or confirm it. For instance we have raised some points during the adjournment motion and the Hon. Minister has replied. In this House the practice for the past two or three years has been that some indulgence is given to the Members to seek clarification. So, I am not only seeking your indulgence for one or two minutes to refer to one or two points, which the Hon. Minister has referred to in his speech. He has stated that we

[Dr. H. V. Hande] [1973 ஆகஸ்ட் 4

have not gone there and that we are making only hearsay statements. The fact is that we have gone there. The other point that he made is that the price is only Rs. 2-50 and not Rs. 5. We say that even now it is Rs. 5 or Rs. 4-50. So, he says things which are contrary to facts.

அவர் பேசும்போது 'கடத்தல்காரர்களைப் பிடிக்கவில்லை, லாரிகளைத்தான் பிடித்தோம்' என்று சொன்னார்கள். அடுத்தாற்போலவே கடந்த பல வருஷங்களாக கள்ளக்கடத்தல் காரர்களைப் பிடித்ததைவிட அதிகமாக இந்த 4 மாதங்களில் பிடித்திருக்கிறோம் என்கிறார். இப்படி அவர் முன்னுக்குப் பின் முரண்பட்ட தகவல்களைத்தான் கொடுத்திருக்கிறார். அவர் சொன்னவைகளை எங்கள் கட்சியின் சார்பாக ஏற்றுக் கொள்ள முடியவே முடியாது. (மாண்புமிகு அமைச்சர் பக்கம் பார்த்து) உங்கள் கருத்துக்களைப் புறக்கணிக்கிறோம். நாங்கள் உங்கள் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளத் தயாராய் இல்லை.

***மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி :** இங்கே பார்க்காதே, அங்கே பார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யார் பேசினாலும் பேரவைத் தலைவரைப் பார்த்துப் பேசவேண்டும். டாக்டர் ஹாண்டே அவர்கள் எவ்வளவுதான் மேலவையில் உறுப்பினராக இருந்தவர், என்றாலும், பல ஆண்டுகளாக தொடர்ந்து இந்த அவையில் உறுப்பினராக இருந்து வருபவர் என்றாலும் அவர் என் மூலமாக எந்தக் கருத்தையும் தெரிவிக்க வேண்டுமே தவிர நேரிடையாக அமைச்சரைப் பார்த்துப் பேசுகிற முறை ஒரு நாகரிகமாக ஆகாது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : சபாநாயகரிடத்திலிருந்து நாகரிகத்தைப்பற்றி நான் ஒன்றும் கற்றுக்கொள்ள வேண்டியதில்லை.

(பல பேரவை உறுப்பினர்கள் எழுந்திருந்து பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பினார்கள்.)

திரு. துரை முருகன் : பேரவைத் தலைவர் அவர்களே, உங்களிடத்தில் நாகரிகத்தைக் கற்கத் தேவையில்லை என்று சொல்கிறாரே, இது முறைதானா? (கூச்சல், குழப்பம்)

1973 ஆகஸ்ட் 4]

(திரு. என். கணபதி, திரு. கே. டி. கே. தங்கமணி, திரு. ஆர். பொன்னப்ப நாடார், திரு. முனுஆதி, டாக்டர் எச். வி. ஹாண்டே, மற்றும் சில உறுப்பினர்கள் நின்று கொண்டிருந்தார்கள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அனைவரும் உட்காருங்கள். ஒத்திவைப்புத் தீர்மானம் எப்படி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது என்ற முறையை இதற்கு முன்னே நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். இது எப்படி அவையை ஒத்தி வைத்து விவாதிக்கின்ற அளவுக்கு வரும் என்றுதான் கூற வேண்டும். (திரு. கே. டி. கே. தங்கமணி தொடர்ந்து நின்று கொண்டிருந்தார்—திரு. துரைமுருகன் குறுக்கீடு.)

THIRU K. T. K. THANGAMANI : I want to make one submission to the Chair. I have been trying to catch your eye for the past ten minutes.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் உட்கார்ந்த பிறகு சொல்லுங்கள்.

THIRU K. T. K. THANGAMANI : If you give me an assurance that I will be given a chance to speak, I will sit down.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த அஷ்யூரன்ஸ் எல்லாம் வாங்காதீர்கள்.

THIRU K. T. K. THANGAMANI : I request that I may be given an opportunity to explain.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனுமதி கொடுக்கிறேன் என்று சொல்கிறேன். எப்படி அவையை ஒத்திவைக்கலாம் என்றும், ஒத்திவைப்புத் தீர்மானத்தின்கீழ் எப்படி வரும் என்ற முறையிலேயும் பேசுவதற்கு அனுமதி உண்டு என்பது உண்மை நிலை. ஸ்பீக்கர் விரும்பினால் தீர்மானம் கொடுத்திருக்கிறவர்களை விளக்கம் கேட்கலாம். 'விரும்பினால்' என்றுதான் விதியில் இருக்கிறது. அந்த விதிமுறைகளைப் பாருங்கள்.

'Before he so decides, he may if he things necessary' *'விரும்பினால்தான்'—*

'call upon the Member to explain how the matter is in order and he may also ask the Leader of the House or the Minister concerned to state the Government's point of view' *விரும்பினால்தான் கொடுக்கலாம் என்றிருக்கிறது. நான் வாய்ப்பு கொடுக்காமலேகூட இதில் என்ன இருக்கிறது என்று பார்த்து முடிவு எடுக்கலாம். நீங்கள், எப்படி ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு உகந்ததாகும் என்று அந்த அளவோடு நின்றிருக்க வேண்டும். அதற்கு மேலும் ஏதாவது கருத்தைச் சொல்ல வேண்டுமென்று சொன்னதனால், அது பெரிய விவாதத்திற்கே போனதனால், இந்த விவாதத்தை 10.25-க்கு ஆரம்பித்திருக்கிறோம், இப்பொழுது 11.25 ஆகிறது. ஏறத்தாழ 'ஒன் அவர்' இதன் மீது டிஸ்கஷன் ஆகிவிட்டது. (திரு. கே. டி. கே. தங்கமணி எழுந்தார்) அதற்குள்ளே எழுந்திருக்கிறீர்களே. சட்டம் எல்லாம் படித்தவர், நீங்கள். நான் உட்கார மாட்டேனா?*

(திரு. ஜே. ஜேம்ஸ்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார்). விதிகளிலே பாயின்ட் ஆப் ஆர்டர் என்பதற்குத் தெளிவாக குறிப்பு இருக்கிறது. பாயின்ட் ஆப் ஆர்டர் என்பது, பெர்சனல் எக்ஸ்பிளனேஷன் என்பது, இவற்றை எழுப்புவது, இதற்கான நடவடிக்கை எல்லாம் எடுப்பதற்கு உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறது. இந்த விதிகளையொட்டி என்ன என்ன நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று உறுப்பினர்கள் விரும்பினாலும், அதற்குப் பேரவைத் தலைவர் அவர்களுடைய ஒத்துழைப்பு நிச்சயமாக இருக்கிறது. விதிகளுக்குப் புறம்பாக நடவடிக்கை எடுக்க விரும்பினால் அதற்கு பேரவைத் தலைவர் ஒத்துழைப்பு இல்லாமலிருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

THIRU K. T. K. THANGAMANI: If the Hon. Speaker converts himself into a Speaker, if then becomes difficult for us. I may be allowed to make my submission.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி.*

THIRU K. T. K. THANGAMANI: Sir, I want to make one submission. It is not a point of order. You gave us a ruling that we must behave in the civilised manner. I was told that I

must behave in a civilised manner. When Dr. Hande was speaking, the Hon. Food Minister was saying *"அங்கே பார்த்து பேசய்யா, அங்கே பார்த்து பேசய்யா."* Is this the way he should teach us civilisation? I request that some of the Ministers must be pulled up for making this kind of uncivilised remarks.

THIRU R. PONNAPPA NADAR: Sir, I also want to make a submission. When the hon. Member Thiru Munu Adhi was on his legs, some Members of the Ruling Party used expressions which I do not want to repeat on the floor of the House. It is not becoming on the part of Members to use such discordant expressions on the floor of the House. Let us at least see that we keep up the decency and decorum of the House. There is no use of introducing heat inside the House. I think no Member has got any right to ask another Member to sit down. That is the duty of the Hon. Speaker, which has been given to him by the House. I think that rule should also be strictly observed by Members of the Ruling Party as well as the Opposition.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் கட்சித் தலைவர்களை அத்தனை பேர்களையும் பணிவோடு கேட்டுக்கொள்வது இதுதான். அந்த அந்த கட்சித் தலைவர்கள். எதிர்க்கட்சித் தலைவர் பொன்னப்ப நாடார் அவர்கள் கூறியதை, அந்த அந்தக் கட்சி உறுப்பினர்கள் கடைப்பிடிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டால், அப்படி நடந்தால், பேரவை நல்ல முறையில் நடைபெறும். அந்த அளவிலே கட்சித் தலைவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

THIRU K. A. MATHIALAGAN: Including the Ruling Party.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எல்லோருக்கும்தான். கட்சித் தலைவர்கள் என்று சொன்னதிலே எல்லோருக்கும்தான் சொல்கிறேன்.*

THIRUMATHI T. N. ANANDANAYAKI: On a point of personal explanation, Sir. Under Rule 42 when an adjournment motion is moved, the Minister gives reply. The person who has moved the adjournment motion is given a chance to get clarification from the Hon. Minister. That has been the practice here in the House.

[Thiru T. K. Thangamani] [1973 ஆகஸ்ட் 4

I would like to know from the Hon. Speaker whether he would permit such a thing here or what his policy is so that we might be careful in future and not fooled by other persons.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நம்முடைய அனந்தநாயகி அம்மையார் அவர்கள் 'பெர்சனல் எக்ஸ்பிளனேஷன்' என்று சொன்னார்கள். விதி 81-ஐப் பாருங்கள்.

'A member, may, with the permission of the Speaker make a personal explanation, although there is no question before the House, but in this case no debatable matter may be brought forward and no debate shall arise' என்று இருக்கிறது. 'பெர்சனல் எக்ஸ்பிளனேஷன்' என்றால் உங்களைப்பற்றி ஏதாவது சொல்லியிருக்க வேண்டும்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: I am not on personal explanation but on a point of order, Sir. Those who had moved motions under Rule 41 or 42 are given chance to get clarification from the Hon. Minister after his reply, since some of the points might not have been covered in the reply.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதி 42-ன்கீழ் அந்த வாய்ப்பு இல்லை. 41-க்கு, அதுகூட, விளக்கம் என்ற முறையிலே, 'கிளாரிஃபிகேஷன்' கேட்பதல்ல. 41-க்கு மட்டிலும் தான்....

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Even under Rule 42, it is allowed.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது விதி 41-லே 'அலவ்' பண்ணி, இங்கே விவாதத்திற்கு எடுத்துக்கொண்டு உறுப்பினர்கள் எல்லாம் பேசி, உரிய அமைச்சரோ, முதலமைச்சரோ விடை கொடுத்த பிறகு, ஏதாவது ஒன்றிரண்டிற்கு, பேரவைத் தலைவர் விரும்பினால் விளக்கம் கேட்கலாமே தவிர, இது அந்த நிலைமைக்கே வரவில்லை. ஆகவே, விதி 42-லே விவாதம் ஆன பிறகு கேட்கமுடியாது.

விதி 41-லே ஸ்டேட்மென்ட் கொடுத்தபிறகு, உறுப்பினர்களுக்கு இரண்டொரு பாயின்ட்டுக்கு விளக்கம் கோர உரிமை கொடுக்கலாம்.

1973 ஆகஸ்ட் 4]

திரு. ஜே. ஜேம்ஸ்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். தாங்கள் கூறும்போது, இந்த விதிமுறைகள் இருக்கின்றன, அவற்றை 'ஸ்டிரிக்டாக' நாம் கடைப்பிடிக்க வேண்டும், அதன் அடிப்படையில் தான் நான் அனுமதிப்பேன் என்று கூறினீர்கள். இந்த விதிமுறைகளைத் தவிர, நமது சட்டமன்றத்தில் சில 'கன்வென்ஷன்', நடைமுறைகள், சம்பிரதாயங்கள் இருக்கின்றன என்பதையும் தாங்கள் அறிவீர்கள். ஆக, சட்டமன்றத்தில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று இருக்கும்போது, நாம் எதிர்பாராத நிகழ்ச்சிகளைப்பற்றி பேச வேண்டிய அவசியம் ஏற்படும். ஆகவே, கண்டிப்பாக விதிகளுக்கு உட்பட்டுத்தான் நடந்துகொள்ள வேண்டுமென்று நிபந்தனை விதிப்பது நடைமுறைகளுக்கு மாறுபாடானது. அம்மாதிரி சமயங்களில் வாய்ப்புகளை சில காரியங்களுக்கு, குறிப்பாக, எதிர்க்கட்சிக்காரர்களுக்குத் தந்திருக்கிறார்கள் தங்களுக்கு முன்பு இருந்த துணைத் தலைவர் அவர்களும் அவருக்கு முன்னதாக இருந்த தலைவர்களும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜேம்ஸ் கருத்தை நம்முடைய பொன்னப்ப நாடார் அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறாரா என்பதைத்தான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: எங்களைப் பொறுத்த அளவில் பிடித்து விடுகிறார்கள், மற்ற ஆட்களையெல்லாம் ஜெயிலிலே வைத்து விட்டு விடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு வந்தது. அதிலே ஏதாவது உண்மை இருக்கிறதா என்பதை முதலமைச்சர் அவர்கள் சொல்வார்கள். எங்களுடைய ஆட்களை ரிமாண்டில் 10 நாள், 15 நாள் காவலில் வைத்திருக்கிறார்கள். அப்படியானால், பாரபட்சமாக அரசாங்கம் நடந்து கொள்கிறதா என்பதையும் கூறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஆன் எ பாயின்ட் ஆப் பெர்சனல் எக்ஸ்பிளனேஷன். அவரைச் சொல்லவில்லை. நான் பேப்பரைப் பார்க்கும்போது சில பேரை ஒரு நாள் வைத்து அனுப்பியிருக்கிறார்கள். எம். சி. பாலன் அவர்களை ஒரு வாரம்

வைத்திருந்தார்கள் என்று தெரிகிறது. இது ஏன் என்றுதான் கேட்டேன். ஆகவே, எங்கள் குல்லாவை எடுத்து அவர்கள் மாட்டிக் கொள்ள வேண்டாமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், உறுப்பினர்களும் கொண்டு வந்த இந்த ஒத்திவைப்புப் பிரேரணையில் உணவு அமைச்சர் அவர்கள் பல விளக்கங்களைக் கொடுத்திருக்கிறார்கள். . . .

திரு. க. உரொ எட்மண்ட்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, சட்டமன்றத்தினுடைய விதிப் பிரகாரம் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் சாப்டர் 8-ல் அதில் 42-வது விதியிலிருந்து 51-வது விதி வரைக்கும் ஒத்திவைப்புத் தீர்மானங்களை சட்டமன்றத்தில் எப்படிக் கொண்டுவரவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது.

Sir, Rule 47 says,

'if the Speaker is of opinion that the matters proposed to be discussed is in order, he shall ask whether the member has the leave of the House. If objection is taken by any member. the Speaker shall request those members who support the motion to rise in their places . . . . . .'.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த இடத்திற்கே நாம் போகவில்லை.

திரு. க. உரொ. எட்மண்ட்: ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு, அதைப்பற்றிய விவாதத்திற்கு சபாநாயகர் அனுமதி கொடுக்க வேண்டுமென்று சொல்லப்படவில்லை. இந்த மன்றத்திலே 24 உறுப்பினர்கள் அதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஆதரவு தருவார்களானால் அதை இந்த அவையிலே எடுத்துக்கொள்வதற்கு அனுமதி கொடுக்கவேண்டுமென்றுதான் இருக்கிறது. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கு முன்னாலே பாருங்கள் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று.

'If the Speaker holds that the motion is not in order, he may, in his discretion state the reasons for his opinion.'

என்று இருக்கிறது. . . . ,

THIRU K. A. MATHIALAGAN: What is meant by 'the motion is not in order?'

எழுத்து சரியாக இருக்கிறதா என்பதைப்பற்றி நீங்கள். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எழுத்து சரியாக இருக்கிறதா என்பதைப்பற்றியல்ல.

THIRU K. A. MATHIALAGAN: He is on an important point. Let him explain it.

திரு. க. உரொ. எட்மண்ட்: நீங்கள் சொல்வது விதி 44-இல் இருக்கிறது.

"If the Speaker gives consent under Rule 43, the member may, after questions and before the further business set down in the list of business for the day is entered upon, ask the leave of the House to make the motion".

The Speaker may withhold consent to the matter being raised before the House and in that case, it shall be communicated to the member together with the reasons therefor and the member shall not raise the matter as such in the House.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பழைய புத்தகம் வைத்திருக்கிறீர்கள். புதுப் புத்தகம் தருகிறேன். வைத்துக் கொள்ளுங்கள்.

THIRU G. R. EDMUND: If the Speaker gives consent under Rule 47 which I have read just now, he shall after questions and before the further business set down is entered upon read the statement referred to in rule 43 and decide whether the matter proposed to be discussed is or is not in order. Before he so decides, there is no automatic power to decide. Before he so decides he may if he thinks necessary ask how the matter is in order. Therefore, any member who has given an adjournment motion on the floor of the House, having obtained the consent of the Speaker, not in his Chamber, but in the House, and has moved the motion has got the right to demand and the Speaker should see if he has the leave of the House as per the rules. Therefore I raise the point that the member has full right to ask for the leave of the House. for the adjournment motion which has been moved on the floor of the House.

அப்படியென்றால் உங்களுடைய அறையிலேயே நீங்கள் அதைத் தள்ளியிருக்க வேண்டும். ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்த உறுப்பினர் மன்றத்திலே முன்மொழிந்ததற்குப் பிறகு என்ன அர்த்தம்?

'If the speaker holds that the motion is not in order, he may, in his discretion state the reasons for his opinion.'
என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்திவைப்புத் தீர்மானத்தை அனுமதிப்பதா இல்லையா என்பதைப் பற்றி முடிவெடுப்பதில் இரண்டு நிலைமைகள் இருக்கின்றன. சில ஒத்திவைப்புத் தீர்மானங்களைப் பொறுத்தவரையில் அனுமதிக்க முடியாது என்று காரணம் காட்டி அறையிலேயே தள்ளிவிடுகிறோம். சில ஒத்திவைப்புத் தீர்மானங்களைப் பொறுத்தவரையில், இந்த அவையிலே கொண்டுவந்து இது எப்படி ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குள்ளே வரும் என்று அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குரிய உறுப்பினரையும், கட்சித் தலைவர்களையும், ஆளுங்கட்சியினரையும் பேச அனுமதித்து—பேரவைத் தலைவருக்கு உதவக்கூடிய முறையிலே உதவியாக—கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்புக் கொடுக்கப்படுகிறது. அப்படிப்பட்ட கருத்துக்களைக் கேட்ட பிறகு தலைவர் அனுமதி கொடுக்கலாம், கொடுக்காமலும் போகலாம். 24 பேர்கள் எழுந்து நின்றாலும்கூட அதற்கு இந்த அவைதான் அனுமதியளித்தாக வேண்டும். உறுப்பினர் திரு. எட்மண்ட் சொன்னதுபோல் அவர்கள் கொடுத்த உடனே முடிவு செய்துவிட முடியாது. அதற்கு இந்த அவை அனுமதிக்க வேண்டும். ஆகவே இதிலே எந்தவிதமான ஒழுங்கு மீறலும் கிடையாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE: Sir, on a point of order. I invite reference to the last sentence of rule 45—he may ask the Leader of the House or the Minister concerned to state the Government's point of view. Now, the Government's point of view has been stated by the Hon. Food Minister. We welcome the Hon. Chief Minister's statement also, because this is an important problem. But, that, I hope does not mean that the Chief Minister is not satisfied with the answer given by his own member of the Cabinet. It is said 'or' and not 'and'.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லிக்கொண்டு எது வேண்டுமானாலும் பேசுகிறார்கள்,

அப்படிப் பேசக்கூடாது என்று உங்கள் கட்சித் தலைவராலேயே, அவர் பேரவைத் தலைவராக இருந்தபொழுது, தீர்ப்பு அளிக்கப் பட்டிருக்கிறது. நீங்கள் விதி 45-ன் கீழே பேசுகிறேன் என்று எழுந்துவிட்டு இப்பொழுது முதலமைச்சர் இதைப்பற்றி பேசலாமா என்று கேட்பதுதான் பாயின்ட் ஆப் ஆர்டரா? அது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. அவர் பேசலாம்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: The whole thing is absolutely in your discretion, Sir. I am only coming to your rescue, Sir.

* **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சிகளினுடைய தலைவர்களும், உறுப்பினர்களும் கொடுத்துள்ள இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீது உணவு அமைச்சர் அவர்கள் பல விளக்கங்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். முதலிலே கன்னியாகுமரி மாவட்டத்திலே ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய ஒன்றரை லட்சம் டன் அரிசி உற்பத்தி செய்யப்படுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. அங்குள்ள மக்கள் அனைவருமே அரிசியை உண்பவர்கள் என்று கணக்கு எடுத்துக் கொண்டாலும் தேவை ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய ஒரு லட்சத்துப் பதினைந்தாயிரம் டன்களுக்கு மேற்படாது என்ற விவரம் நம்மிடத்திலே இருக்கின்றது. தேவை ஒரு இலட்சத்துப் பதினைந்தாயிரம் டன்களுக்கு மேற்படாது என்ற நிலையிலே ஒன்றரை இலட்சம் டன்கள் ஆண்டொன்றுக்கு உற்பத்தி செய்யப் படுகிறது என்பதை நாம் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். இந்த அடிப்படையிலே இன்றைக்குக் கன்னியாகுமரி மாவட்டத்திலே எழுந்துள்ள பிரச்சினையை அணுகுவது சரியானதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

இன்றைக்கு அங்கே அரிசி குறித்து, விலையேறி விட்டது என்றும், கிடைக்கவில்லை என்றும் கூறப்பட்டு, சில அரசியல் கட்சிகள் அங்கே போராட்டங்களிலே ஈடுபட்டிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு பழைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டம் பழிவாங்கப்படுகிறது என்ற பழிச்சொல்லை இந்த அரசின்மீது தொடர்ந்து சுமத்தி வருகிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இந்த அரசு உருவானதற்குப்

பிறகு எந்தெந்த வகையிலே மிக ஆர்வத்தோடு அங்கேயுள்ள பிரச்னைகள் கவனிக்கப்பட்டு வருகின்றன என்பதைப் புள்ளி விவரங்களோடு எடுத்துச் சொல்லமுடியும். அண்மையிலே இரண்டு, மூன்று திங்களுக்கு முன்பு மீனவப் பெருமக்கள் உணவு நிலைமையிலே—வழக்கமாக அவர்கள் புசிக்கின்ற கிழங்குகள் அவர்களுக்குக் கிடைக்காமல் போனபோது—நான்கு வாரங்களுக்கு கிட்டத்தட்ட 18 ஆயிரம் மீனவர்களுக்கு இலவசமாக அரிசி வழங்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், கன்னியாகுமரி மாவட்டத்தினுடைய நிலத்தீர்வை தமிழ்நாட்டோடு நீண்ட நெடுங்காலமாக இணைக்கப்பட்டு ஒருமித்த ஒருநிலை ஏற்படவில்லை என்ற அந்த மாவட்டத்தினருடைய குறைபாட்டை அண்மையில் போக்கும் முறையிலே சில திருத்தங்களைச் செய்து, தமிழ்நாட்டோடு இணைக்கும் வகையில் அந்த நிலத் தீர்வையை எடுத்த முயற்சியில் ஏற்கெனவே ஐந்தாறு ஆண்டுக்காலமாக விவசாயிகள் கட்ட வேண்டிய பாக்கி ஏறத்தாழ 23 இலட்சம் ரூபாய் இருந்தது. அதைக் கன்னியாகுமரி மாவட்டத்திலேயுள்ள விவசாய மக்களுக்குத் தள்ளிக் கொடுத்துவிட வேண்டும், அதை அரசு வற்புறுத்தக் கூடாது என்று சொன்ன அந்த மாவட்ட மக்களின் யோசனையையும் அரசு ஏற்றுக்கொண்டு அதையும் தள்ளிக் கொடுத்திருக்கிறது.

நான் கன்னியாகுமரி மாவட்டத்திற்குச் சென்றபொழுது அங்குள்ள சட்டப்பேரவை உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள், எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் என்னைச் சந்தித்தார்கள். நண்பர் ஜேம்ஸ் அவர்களும் சந்தித்தார்கள். சந்தித்து, அங்குள்ள சில இடங்களிலே உணவு பகிர்ந்தளிக்கப்படுவதில்லை என்று சில குறைபாடுகளைச் சொன்னார்கள். நான் அவர்களுக்கு நேராகவே மாவட்ட ஆட்சித் தலைவரை அழைத்து உடனடியாக அனைத்துக் கட்சிச் சட்டமன்ற உறுப்பினர்கள், மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள், அங்குள்ள ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் அனைவரையும் கூட்டிவைத்து நீங்கள் ஒரு முடிவு செய்து எந்த வகையிலே அரசு இங்கே இந்த அரிசி நிலைமையிலே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எங்களுக்கு எழுதியனுப்புங்கள், நாங்கள் உடனடியாகத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம் என்று அவர்களிடத்தில் சொல்லிவிட்டு வந்தேன். அதற்குப் பிறகு

மாவட்ட ஆட்சித் தலைவரின் முன்னிலையில் எல்லாக் கட்சித் தலைவர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் ஒருங்குகூடிச் சில முடிவுகளை எடுத்து அரசுக்கு அனுப்பினார்கள். அவைகளைப் பற்றி இங்குள்ள நிலைமைக்கேற்றவாறு அரசாங்கம் நடைமுறைப்படுத்தியது என்பதையும் யாரும் மறுக்க இயலாது. பல்வேறு கோரிக்கைகள் அவ்வப்பொழுது நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. நான் வரிசையாகச் சொல்ல வேண்டுமென்றால், முதலிலே, முறைப்படுத்தப்பட்ட பங்கீட்டு முறை உள்ள இடங்களில் அரிசியின் அளவை வயது வந்தவர்களுக்கு வாரம் ஒன்றுக்கு 1,600 கிராம் ஆகவும், சிறுவர்களுக்கு 800 கிராம் ஆகவும் உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கை தரப்பட்டது. இக்கோரிக்கையை 1973 மார்ச் திங்களில் இந்த விகிதப்படி முறைப்படுத்தப்பட்ட பங்கீட்டு முறையுள்ள இடங்களில் அரிசி வழங்க வேண்டுமென்று அரசு ஏற்று நடவடிக்கை எடுத்தது. ஆகவே புறக்கணிக்கப்படவில்லை, கோரிக்கைகள் அலட்சியப்படுத்தப்படவில்லை என்பதற்கு இது முதல் உதாரணம்.

பிறகு, அடுத்த கோரிக்கை, நாகர்கோயிலிலிருந்து கல்குளம் வட்டத்திற்குக், கொண்டு வரப்படும் அரிசியின் விலையைச் சீர்படுத்த வேண்டும் என்பது. இந்தக் கோரிக்கையையும் ஏற்றுக் கொண்டு, கோட்டாறுச் சந்தையிலிருந்து கல்குளம் வட்டத்திற்கு எடுத்துச் செல்லப்படும் அரிசி, விற்பனை விலை இவற்றினை நிர்ணயித்தும் அவற்றினைக் குடும்ப அட்டைகள் மூலம் வழங்க ஏற்பாடு செய்யவும் மாவட்ட ஆட்சியாளருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, அதுவும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

மூன்றாவது கோரிக்கையாக, முறைப்படுத்தப்பட்ட விநியோக முறையைக் கல்குளம் வட்டம் முழுவதுக்கும் அல்லது பற்றாக் குறையுள்ள கிராமங்களிலாவது விஸ்தரிக்க வேண்டும் என்ற கோரிக்கை இருந்தது. அதற்கும், கல்குளம் வட்டத்தில் நெல் உற்பத்தி செய்கிறவர்கள் தவிர மற்றவர்களுக்குக் குடும்ப அட்டைகள் மூலம் அரிசி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

நான்காவது கோரிக்கை, சுய தேவைக்கு எடுத்துச் செல்லும் சிறு அளவு அரிசி, நெல் ஆகியவற்றிற்கு கட்டுப்பாடு தளர்த்தப்பட வேண்டுமென்பது. அதையும் அரசு ஏற்றுக்கொண்டு, சுய தேவைக்கு எடுத்துச் செல்லும் சிறு அளவு அரிசி, நெல் இவை

களுக்குக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டது. ஆனால் இவ்விதம் கொண்டு செல்லும் அரிசி, நெல் அளவினைக் குடும்பக் கார்டுகளில் பதியும்படியும் ஆணையிடப்பட்டது.

இப்படி வரிசையாக ஏற்றுக்கொண்டது மட்டுமல்லாமல், இடையிலே உணவு அமைச்சரவர்களை ஜூன் மாதத்தில் கன்னியாகுமரி மாவட்டத்திற்குச் சென்று அவைகளை உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அவர்கள் அதிகாரிகளோடு கன்னியாகுமரி மாவட்டத்திற்குச் சென்றார்கள். அங்கேயுள்ள எல்லாக் கட்சிக் சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் ஆகியவர்களோடு கலந்து உணவு அமைச்சரவர்கள் பேசி மிக முக்கியமாக, எல்லையிலும், உள்பகுதியிலும் அமல் செய்யப்படும் போக்குவரத்துக் கட்டுப்பாடுகள், கேரள மாநிலத்திற்கு அரிசி கள்ளக் கடத்தல் மூலம் கொண்டு செல்வதைத் தடுப்பதற்காக மிக அவசியம் என்றும், அவற்றை நீக்கினால் இம் மாவட்டத்தில் உணவு நிலைமை சீர் அழியும் என்றும் சுட்டிக்காட்டினார். அமைச்சர் வெளியிட்ட கருத்தினை அப்பொழுது சட்ட மன்ற உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டார்கள். இப்பொழுதும் கூட பழைய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினராக உள்ளவர்கள் எல்லையிலே இருக்கும் செக் போஸ்டை எடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கவில்லை. ஆகவே, அமைச்சரின் கருத்து அப்பொழுது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மேலவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராஜாராம் நாயுடு அவர்களும், திரு. ஜேம்ஸ் அவர்களும் உணவு அமைச்சரைச் சந்தித்து, தற்பொழுது வழங்கப்படும் 1,500 கிராம் அரிசி போதவில்லை என்றும், அதை அதிகரிக்க வேண்டுமென்றும் கூறினார்கள். அதை அரசு உடனடியாக ஏற்று, வயது வந்தவர்களுக்கு 1,800 கிராமும், சிறுவர்களுக்கு 900 கிராமும் வழங்க அதற்கான ஆணையைப் பிறப்பித்தது. ஆகவே, எடுத்து ச்சொல்லும் விஷயம் எதுவும் புறக்கணிக்கப்படவில்லை என்பதற்காகத்தான் இவைகளைக் கோடிட்டுக் காட்டினேன்.

அடுத்து, கார்டுகள் வழங்கப்படுவதில் சீர்திருத்தம் தேவை, கார்டுகள் வழங்கப்படவில்லை என்ற கருத்து சொல்லப்பட்டது. உங்களுக்கு ஒரு விவரத்தைத் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அங்கு ஜனக்கணக்கெடுப்புப்படி மக்கள் தொகை

12½ இலட்சம் பேர் ஆனால் வழங்கப்பட்ட அட்டைகள்படி மக்கள் தொகை 13¾ இலட்சம் பேர். 12½ இலட்சம் பேர் 13¾ இலட்சம் கார்டுகளைப் பெற்றிருக்கிறார்கள். ஆகவே, அவைகளில் என்னென்ன தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டு இப்பொழுது அந்தக் கார்டுகளில் கிட்டத்தட்ட 10,000 முதல் 12,000 கார்டுகள் வரையில் நீக்கப்பட்டிருக்கின்றன. தொடர்ந்து முயற்சி செய்யப்படுகிறது. 2,000 கிராம் அரிசி கொடுக்கப்பட்டிருக்கிறது என்றாலும், சில இடங்களில் தரப்படவில்லை, அதற்கு அதிகாரிகளே காரணம் என்றாலும் அவைகளெல்லாம் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டிய விஷயமே அல்லாமல் போராட்டத்தின்மூலம் தீர்த்துக்கொள்ளப்பட வேண்டிய விஷயம் என்று நான் கருதவில்லை. ஏனென்றால் பல முறை பேசிப்பேசி, நான் பழைய காங்கிரசை மட்டும் சொல்லவில்லை, அ.தி.மு.க., கம்யூனிஸ்ட் கட்சி, எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் என்னிடத்திலேயும், உணவு அமைச்சரிடத்திலேயும், அதிகாரிகளிடத்திலேயும் பேசியிருக்கிறார்கள். அந்த வகையில் பேசித் தீர்க்கும் ஒரு பிரச்னையாக நான் இதைக் கருதுகிறேன்.

திடீரென்று போராட்டம் தொடங்கியது. அம்மையார் அவர்கள் சொன்னார்கள், சிலரைப் பிடித்து விட்டு விடுகிறார்கள், சிலர் உள்ளேயே வைக்கப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் அப்படியெல்லாம் இல்லை என்று சொன்னார்கள். இப்படி இது இங்கே மட்டும் நடைபெறுவதில்லை, கன்னியாகுமரி மாவட்டத்திலேயும் எதிர்க் கட்சிகளுக்கிடையே இப்படிப்பட்ட ஒரு போட்டியிருக்கிறது. அந்தக் கட்சி சோடையான கட்சி, இந்தக் கட்சி வீரம் நிறைந்த கட்சி என்று நான் குறிப்பிடவில்லை, அப்படிப்பட்ட பிரச்சாரம் அங்கே நடக்கிறது. நேற்று நான் குறிப்பிட்டதைப்போன்று அந்தப் போட்டி அரசாங்கத்தோடு போராடுவதில் யார் தீவிரமாக இருக்கிறார்கள் என்ற நிலைமையை உருவாக்கிவிடுமோ என்று நான் ஐயுறுகின்றேன். முதலிலே 19-ஆம் தேதி போராட்டம், மறியல் போராட்டம் நடை பெற்றது. 19-ஆம் தேதி முதல் 27-ஆம் தேதி வரையில் 117 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் 27-ஆம் தேதி வரையில் சிறையில் வைக்கப்பட்டார்களா என்றால் இல்லை. மறியல் செய்யும் காரணத்தினால் போக்குவரத்திற்கு இடைஞ்சலாகவும், அலுவலகத்திற்கு வருகின்றவர்களுக்கு இடைஞ்

சலாகவும் இருக்கும் என்ற முறையில் உடனடியாக அவர்கள் அகற்றப்பட்டுக் கைது செய்யப்பட்டு, மாலையிலேயோ அல்லது மறுநாள் காலையிலேயோ விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அதைப்போலவே திரு. பொன்னப்ப நாடார் போன்ற பழைய காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களும், அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்களும், சுதந்திராக் கட்சியைச் சேர்ந்தவர்களும், சி.பி.எம். கட்சியைச் சேர்ந்தவர்களும். . .

திரு. கே. ஏ. மதியழகன்: அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்றுதான் கட்சியிருக்கிறது. திரும்பத்திரும்ப அ.தி.மு.க. என்று சொல்கிறார்களே.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஹாண்டே அவர்களும் ஏ.டி.எம்.கே. என்றுதான் சொன்னார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன்: நானும் திருவாரூர் முன்னேற்றக் கழகம் என்று சொல்லுவேன். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று இருக்கிறது. அ.தி.மு.க. என்று சொல்வது, அதுவும் பெரிய இடத்தில் உள்ள முதலமைச்சர் கூறுவது முறை யல்ல. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு சோறு தான் போடவில்லை என்றாலும் பெயரைச் சாப்பிட்டு விடுகிறீர்களே.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அண்ணாவை நான் சாப்பிடமாட்டேன்.

திரு. கே. ஏ. மதியழகன்: சாப்பிட்டுக்கொண்டு இருக் கிறீர்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நான் பேசிக்கொண்டிருக்கும்பொழுது இவர் பேசுவது என்ன முறை?

திரு. கே. ஏ. மதியழகன்: அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று இருக்கும் ஒரு கட்சியை, அ.தி.மு.க. என்றால் எப்படி?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, திரு. ஹாண்டே அவர்கள் பேசும்பொழுதுகூட ஏ.டி.எம்.கே. என்று குறிப்பிட்டார்கள். அப்பொழுது மதிக்குக் கோபம் வரவில்லை.

திரு. கே. ஏ. மதியழகன்: அதையும் திருத்திக்கொள்ள வேண்டியதுதான். என்றாலும் நீங்கள், முதலமைச்சராக இருப்ப வர்கள், வெளியிலே எப்படி வேண்டுமானாலும் சொல்லலாம், இங்கே அப்படிச் சொல்லலாமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் திராவிட முன்னேற்றக் கழகம் என்று சொல்லிவிட்டு உங்களுடைய கட்சியை அப்படிச் சொன்னால் சரி. ஆனால் நான் தி.மு.க. என்றுதான் சொல்கிறேன், அதைப்போல சி.பி.ஐ., சி.பி.எம். என்று சொல்கிறேன், அப்பொழுது யாரும் கோபித்துக் கொள்வது கிடையாது.

காங்கிரஸ் (ஓ) 40, ஏ.டி.எம்.கே. 55, சுதந்திரா 5, சி.பி.எம். 5, சி.பி.ஐ. 6, ஃப்ரீடம் ஃபைட்டர்ஸ் 6 ஆக, 117 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள். ஆனால் அவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட்டார்கள்.

அதற்குப் பிறகு, பத்து நாளைக்குப் பிறகு மறுபடியும் போராட்டம் எந்த வகையில் திரும்பியது என்றால் திருநெல்வேலியிலிருந்து சட்ட விரோதமாக அரிசியை எடுத்துச் சென்று கன்னியாகுமரிக்குள்ளே நுழைவது என்ற போராட்டத்தில் ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஈடுபட்டதுதான் வேதனைக்குரியது. அதிலே ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் 19 பேரும், அ.தி.மு.க. வைச் சேர்ந்த 9 பேரும் ஆக 28 பேர் கைது செய்யப்பட்டுத் தொடர்ந்து காவலில் வைக்கப் பட்டிருக்கிறார்கள்.

பயங்கரமான நிலைமையிலிருந்து கன்னியாகுமரி மாவட்டத்தைக் காப்பாற்ற வேண்டும், அதே நேரத்தில் தமிழகத்திலுள்ள எல்லா மாவட்டங்களையும் காப்பாற்ற வேண்டுமென்பதற்காகத்தான் உணவு அமைச்சர் கூறியது போல் திருநெல்வேலி மாவட்ட எல்லையில் செக் போஸ்ட் போடப் பட்டிருக்கிறது. அதே போல் மதுரை மாவட்டத்திலும், கோவை மாவட்டத்திலும் செக் போஸ்ட்கள் போடப்பட்டிருக்கின்றன.

அப்படி செக் போஸ்ட்கள் போடப்பட்டிருக்கின்ற நிலையில் திருநெல்வேலியிலிருந்து நாங்கள் அரிசியைக் கடத்திச் செல்வோம், அதை யாரும் தடுக்கக்கூடாது, செக் போஸ்ட்டை மீறி

நாங்கள் எடுத்துச் செல்வோம் என்ற முறையில் ஆளும் காங்கிரஸ் கட்சி வழி காட்டினார்கள். அதை அங்கிருக்கும் பழைய காங்கிரஸ் கட்சியோ மற்றக் கட்சிகளோ ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை—எனக்குத் தெரிந்த வரையில் இல்லை. ஏற்றுக் கொண்டார்களோ என்னவோ தெரியாது. இதன் காரணமாக ஆளும் காங்கிரஸ் கட்சி 19 பேரும், அ.தி.மு.க. 9 பேரும் ஆக 28 பேர் கைது செய்யப்பட்டார்கள். கடந்த மாதம் 27 ஆம் தேதிக்குப் பிறகு 3–8–73 வரை மறியலில் ஈடுபட்டவர்களைக் கைது செய்து யாரையும் விடவில்லை என்று சட்ட அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பத்து நாள் வரை அவர்களைக் கைது செய்து விட்டு வந்தோம். அவர்கள் மறுபடியும் தொடர்ந்து அதையே நடத்திக் கொண்டிருந்த காரணத்தால் விடுதலை செய்யவில்லை. காங்கிரஸ் (ஓ) 58 பேர்; அ.தி.மு.க. 17 பேர். சுதந்திரா 9 பேர், கட்சிச் சார்பற்றவர்கள் என்ற பெயரில் 85 பேர் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இதற்கு ஒரு போராட்டம் தேவையா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தொடர்ந்து பேச்சு வார்த்தை மூலமாக முடிவெடுத்து 1,400 கிராம் அரிசி இன்றைக்கு 2,000 கிராம் என்ற அளவுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆகவே, மீண்டும் பேச்சு வார்த்தைகள் மூலமாகப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியாதா என்பதையும் யோசித்துப் பார்க்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கள்ளக் கடத்தல்காரர்களைப் பிடிக்க வேண்டுமென்று தமிழ்நாடு கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் மணலி அவர்கள் கூறினார்கள். அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வேன்—மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டிலேயே நான் திட்டவட்டமாக அறிவித்தேன். உணவுப்பொருள் கடத்தல்காரர்கள் மீது பாதுகாப்புச் சட்டம் பிரயோகிக்கப்பட வேண்டும், அதற்கான வழிவகைகளை ஆராய வேண்டுமென்று சொன்னேன். அதற்கேற்ப கோவை மாவட்டத்தில் 13 பதுக்கல்காரார்கள் இன்றைக்குச் சிறை வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த அவைக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அது மாத்திரமல்ல. நேற்றையதினம் கன்னியாகுமரி மாவட்டத்தில் மூன்று பேர் கடத்தல்காரர்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ்ச்

சிறைப் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்வேன். இது பதினாறோடு நின்று விடாது. இன்னும் யார் யார் கடத்தல்காரர்களோ அவர்களையெல்லாம் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் பிடிக்க எல்லா முயற்சிகளையும் காவல் துறையினர் நிச்சயமாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் அறிவித்து அங்கிருக்கும் குறைபாட்டை எடுத்துச் சொல்லி நிவர்த்திக்கச் சட்ட மன்றம் கூடியிருக்கும் இந்த நேரத்தில் இந்த அரசோடு கலந்து பேச வாய்ப்பு இருக்கும் காரணத்தால் நிவர்த்தித்துக் கொள்ள முடியும் என்று கூறி, இதிலே ஆற அமர உட்கார்ந்து பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டிய காரியமாக இருக்கின்ற நிலையில் இந்த அவையின் நடவடிக்கைகளை ஒத்தி வைத்து இதை விவாதிக்க வேண்டிய தேவையில்லை, இதை அனுமதிக்கத் தேவை இல்லை என்று கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உணவு அமைச்சர் அவர்களும் முதலமைச்சர் அவர்களும் கூறிய விளக்கங்களுக்குப் பிறகு இது ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு உரிய முறையில் இல்லாத காரணத்தால் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

(7) அரசினர் தனித் தீர்மானம்

பாராளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்ட 1973 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (31-வது திருத்த) சட்டமுன்வடிவினால் செய்யக் கருதப்பட்டுள்ள திருத்தங்களை உறுதிப்படுத்துதல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே,

> "பாராளுமன்ற அவைகள் இரண்டிலும் நிறைவேற்றப் பட்டு 1973 ஆம் ஆண்டு அரசியல் அமைப்பு (31-வது திருத்த) சட்ட முன்வடிவினால் செய்யக் கருதப் பட்டுள்ளவையும், இந்திய அரசியல் அமைப்பின் 368-வது பிரிவின் (2) பகுதியின் வரம்பு நிபந்தனையின் நோக்கத்தின் கீழ் வருபவையுமான திருத்தங்களை இப்பேரவை இசைவுடன் உறுதிப்படுத்துகிறது"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1973 ஆகஸ்ட் 4

(திரு. நா. வீராசாமி தலைமை)

நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேறியுள்ள 1973 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (முப்பத்தொன்றாவது திருத்த) சட்ட வரைவு, அரசியலமைப்பின் 81, 330, 332-வது பிரிவுகளைத் திருத்த விழைகிறது. அரசியலமைப்புச் சட்டத்தின் 368-வது பிரிவைச் சேர்ந்த (2) பகுதிக்கான வரம்பு நிபந்தனையின் (d) பகுதியின்படி, மாநிலச் சட்ட மன்றத்தின் ஏற்புக்காக இந்தத் திருத்தச் சட்ட வரைவு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

இந்தச் சட்ட வரைவின் 2-வது பகுதியில் செய்யக் கோரியுள்ள முதலாவது திருத்தம், அரசியலமைப்பின் 81-வது பிரிவுக்குச் சம்பந்தப்பட்டதாகும். அரசியலமைப்பின் மேற்சொன்ன 81-வது பிரிவு, மக்கள் சபை அமைவதற்கு வகை செய்கிறது. மேற்சொன்ன பிரிவில் தற்போதுள்ள (1) பகுதியில் சொல்லியுள்ளவாறு, (a) மாநிலங்களில் ஆட்சித் தொகுதிகளிலிருந்து நேரடித் தேர்தல் மூலம் தெரிந்தெடுக்கப்படுகிற ஐந்நூறுக்கு மேற்படாத உறுப் பினர்களையும் (b) நாடாளுமன்றம் சட்டம் இயற்றி வகை செய்துள்ள முறையில் தெரிந்தெடுக்கப்படுகிற, யூனியன் நேரடி ஆட்சிப் பகுதிகளுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கிற இருபத்தைந்துக்கு மேற்படாத உறுப்பினர்களையும் மக்கள் சபை கொண்டிருக்க வேண்டும். அரசியலமைப்பின் மேற்சொன்ன 81-வது பிரிவில் தற்போது செய்யக் கருதியுள்ள திருத்தம், மக்களவையில் மாநிலங்களின் பிரதிநிதித்துவத்தின் மேல் வரம்பை ஐந்நூறிலிருந்து, ஐந்நூற்று இருபத்தைந்துக்கு உயர்த்தவும் மக்களவையில் யூனியன் நேரடி ஆட்சிப் பகுதிகளிலிருந்து வரும் பிரதிநிதிகளின் உயர் அளவை இருபத்தைந்திலிருந்து இருபதாகக் குறைக்கவும் விழைகிறது.

81-வது பிரிவின் (2) பகுதியில் (b) உட்பகுதிக்குப் பிறகு புதிய வரம்பு நிபந்தனை ஒன்றும் சேர்க்கப்படக் கருதியுள்ளது. இந்த வரம்பு நிபந்தனையின்படி, மக்கள் சபையில் எந்த ஒரு மாநிலத்திற்காவது இடங்கள் ஒதுக்கும் காரியமாக, அந்த மாநிலத்தின் மக்கள் தொகை அறுபது லட்சத்திற்கு மேற்படாத வரையில் அந்தப் பகுதியின் ( ) உட்பகுதியின் விதித் துறைகள் பொருந்தத்தக்கவையாகா.

1973 ஆகஸ்ட் 4] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இந்தத் திருத்தங்களைச் செய்வதற்கான நோக்கங்களும் காரணங்களும் இந்திய அரசு முகவுரைத்த சட்ட வரைவிலும், 26—4—73-ல் மக்கள் அவையிலும் 15—5—73-ல் நாடாளுமன்ற மேலவையிலும் இந்த சட்ட வரைவை முன்மொழிந்த சட்டம், நீதி, கம்பெனி அலுவல்கள் அமைச்சகத்தைச் சேர்ந்த ராஜ்ய அமைச்சர் ஆற்றிய உரையிலும் கொடுக்கப்பட்டுள்ளன.

82-வது பிரிவின்படி, நாடாளுமன்றம் 1972 ஆம் ஆண்டு தேர்தல் தொகுதி எல்லை வரையறைச் சட்டத்தை நிறைவேற்றி யுள்ளது. 1971 மக்கட்தொகை புள்ளிவிவரக் கணக்கின் அடிப்படையில், உறுப்பினர் எண்ணிக்கையை மாற்றியமைக்கும் பணியை மேற்கொள்ளும்போது, தேர்தல் தொகுதி எல்லை வரையறை ஆணைக்குழு, 81-வது பிரிவின் (2) பகுதியில் விதித்துள்ள கொள்கைகளைக் கண்டிப்பாக கடைப்பிடித்தால் மக்கள் அவை மாநிலங்களுக்கு ஒதுக்கப்படும் இடங்களின் எண்ணிக்கை பாதிக்கப்படலாம். மக்கள் அவையில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் தற்போது ஒதுக்கப்பட்டுள்ள இடங்களின் எண்ணிக்கை, இவ்வாறு மாற்றியமைப்பதாலும் அதைத் தொடர்ந்து இடங்கள் ஒதுக்கீடு செய்வதாலும் பிரதிகூலமான வகையில் பாதிக்கப்படாதவாறு பார்த்துக் கொள்வது நல்லது என்று இந்திய அரசு கருதியுள்ளது. இந்த நோக்கத்தை அடையப் பெறுவதற்காக, மக்கள் அவையின் எண்ணிக்கையைத் தகுந்தவாறு உயர்த்துவது அவசியமாகும்.

எந்த ஒரு மாநிலம் குறித்தும் மக்கள் அவையில் தற்போதுள்ள பிரதிநிதிகளின் எண்ணிக்கை குறையாதவாறு பார்த்துக் கொள்ளும் பொருட்டு, மாநிலங்களின் பிரதிநிதித்துவ மேல் வரம்பை 500-லிருந்து 525 ஆக உயர்த்தும் வகையில் 81-வது பிரிவைத் திருத்த இந்தச் சட்ட வரைவின் (2) பகுதி விழைகிறது. யூனியன் நேரடி ஆட்சிப் பகுதிகளின் பிரதிநிதிகள் இப்போது 16 பேர்கள் மட்டுமே உள்ளதால் இந்தப் பகுதிகளின் பிரதிநிதித்துவ எண்ணிக்கை அளவை 25-லிருந்து 20 ஆகக் குறைக்கவும் இந்த வாய்ப்பு பயன்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது. ஒரு மாநிலத்தின் மக்கள் தொகை அறுபது லட்சத்திற்கு மேற்படாத வரையில், அந்த மாநிலத்திற்கு 81-வது பிரிவின்

(2) பகுதியைச் சேர்ந்த (a) உட்பகுதியின் விதித்துறைகள் பொருந்தத்தக்கவையாகா என்று வகைசெய்து, 81-வது பிரிவின் (2) பகுதியில் திருத்தம் ஒன்றைச் செய்வது அவசியம் என்றும் கருதப்பட்டது. இமாசலப் பிரதேசம், ஜம்மு—காஷ்மீர், மணிப்புரி, மேகாலயா, நாகாலாந்து, திரிபுரா ஆகிய சிறு மாநிலங்கள் ஒவ்வொன்றிலும் அறுபது லட்சத்திற்குக் குறைவாக மக்கட்தொகை இருப்பதால் இந்த மாநிலங்களுக்கு மக்கட் சபையில் தற்போது உள்ள பிரதிநிதித்துவத்தை நீடிக்க உறுதி செய்வதற்கே இவ்வாறு திருத்தப்படுகிறது.

நாடாளுமன்றத்தில் மாநிலப் பிரதிநிதிகளுக்கான உயர் வரம்பை 500-லிருந்து 545 ஆக உயர்த்துவதற்கும் யூனியன் நேரடி ஆட்சிப் பகுதிகளுக்கான பிரதிநிதிகளின் உயர்வரம்பை 25-லிருந்து 20 ஆகக் குறைப்பதற்கும் ஏற்றவகையில் அரசியலமைப்புச் சட்டத்தின் 82-வது பிரிவைச் சேர்ந்த (1) பகுதியைத் திருத்த விழைய விரும்புவது குறித்து நமது கருத்துக்களை இந்திய அரசு சிறிது காலத்திற்கு முன்னர் கேட்டது என்பதை இது தொடர்பாக நான் ஈண்டு குறிப்பிடலாம்.

அதற்கு இந்த அரசு பதிலளிக்கையில், 1962 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் நடைபெற்ற சமயத்தில் மக்கள் சபையில் தமிழ் நாட்டிற்கு 41 இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன என்றும், 1961 ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்புப் புள்ளிவிவரங்களின் அடிப்படையில் தொகுதிகளின் எல்லை வரையறுக்கப்பட்ட பின்னர், மக்கள் அவையில் இம்மாநிலத்திற்கு 39 இடங்கள் ஒதுக்கப்பட்டன என்றும் குறிப்பிட்டது. 1967, 1971 ஆம் ஆண்டுகளில் நடந்த பொதுத் தேர்தல்களின்போது மக்கள் அவையில் இம்மாநிலத்திற்கு 39 இடங்கள் மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்தன. எனவே, மக்கள் அவையின் உறுப்பினர்கள் எண்ணிக்கையை 545-க்குப் பதிலாக 550 ஆக உயர்த்த இந்திய அரசு தேவையான நடவடிக்கையை எடுக்கலாமென்று இந்த அரசு கருத்துத் தெரிவித்தது. அவ்வாறு உயர்த்தப்பட்டால் 1971 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் தமிழ் நாட்டிற்கு மக்கள்

அவையில் 42 இடங்கள் கிடைக்கலாம். தற்போதுள்ள இந்தச் சட்ட வரைவின்படி மக்கள் அவை உறுப்பினர்கள் எண்ணிக்கையை 525 ஆக மட்டுமே உயர்த்தக் கருதியுள்ளது. இதன்படி தொகுதிகளின் எல்லை மீண்டும் வரையறுக்கப்படும் போது தமிழ் நாட்டிற்கு மக்கள் அவையில் 40 இடங்கள் கிடைக்கலாமென . தெரிகிறது. ஆயினும், சில காரணங்களுக்காகவோ வேறு எதற்காகவோ இந்த இடங்கள் கிடைக்காவிடின், தமிழ் நாட்டிற்குத் தற்போதுள்ள 39 இடங்கள் பாதிக்கப்படமாட்டா. இதுபற்றி, தொகுதி எல்லைவரையறை ஆணைக்குழு இறுதியாக முடிவு செய்யும்.

சட்ட வரைவின் 3-வது பகுதியில் செய்ய விழையும் இரண்டாவது திருத்தம் அரசியலமைப்புச் சட்டத்தின் 330-வது பிரிவிற்குத் தொடர்புடையதாகும். மக்கள் அவையில் அரிசனங்களுக்கும் பழங்குடி மக்களுக்கும் இடங்கள் ஒதுக்க அரசியலமைப்புச் சட்டத்தின் மேற்சொன்ன 330-வது பிரிவு வகை செய்கிறது. நாகாலாந்து மாநிலம் பெரும்பாலும் பழங்குடி மக்களே நிரம்பிய மாநிலமாக இருப்பதால் அந்த மாநிலத்தில் உள்ள பழங்குடி மக்களுக்கு மேற்சொன்ன 330-வது பிரிவின் விதித்துறைகள் பொருந்துமாறு செய்யப்படவில்லை. அரசியலமைப்புச் சட்டத்தின் மேற்சொன்ன 330-வது பிரிவின் தற்போது செய்யக் கருதியுள்ள திருத்தமானது, அஸ்ஸாம், நாகாலாந்து பகுதிகளிலுள்ள பழங்குடி மக்கள் தவிர (தற்போது மேற்சொன்ன பிரிவின் விதித்துறைகள் இவர்களுக்குப் பொருந்தா) மேகாலயா, அருணாசலப்பிரதேசம், மிஜோரம் ஆகிய இடங்களில், பழங்குடியினருக்கும் மேற்சொன்ன பிரிவின் விதித்துறைகள் பொருந்தாதவாறு செய்ய விழைகிறது. மேற்கண்ட புதிய பகுதிகளில் பெரும்பாலும் பழங்குடி மக்களே இருப்பதாக கருதப்பட்டதால், அரசியலமைப்புச் சட்டத்தின் மேற்சொன்ன 330-வது பிரிவைச் சேர்ந்த (1) பகுதியின் ( ) உட்பகுதியின் செயல் வரம்பிலிருந்து இப்பகுதிகளை நீக்கிவிட இத்திருத்தம் விழைகிறது.

சட்ட வரைவின் 4-வது பகுதியில் உத்தேசித்துள்ள மூன்றாவது திருத்தமானது, அரசியலமைப்புச் சட்டத்தின் 332-வது பிரிவிற்குத் தொடர்புடையதாகும், ஒவ்வொரு மாநிலத்திலும்

உள்ள சட்டமன்றப் பேரவையில் அரிசனங்களுக்கும் பழங்குடியினருக்கும் இடங்கள் ஒதுக்க மேற்சொன்ன 332-வது பிரிவு வகை செய்கிறது. 330-வது பிரிவில் குறிப்பிட்டுள்ளது போலவே, மேற்சொன்ன 332-வது பிரிவும் அஸ்ஸாம், நாகாலாந்து முதலிய மலைப் பகுதிகளிலுள்ள பழங்குடி மக்களுக்கு பொருந்தாது. மேகாலயா மாநிலத்திலுள்ள பழங்குடியினரையும், அரசியலமைப்புச் சட்டத்தின் மேற்சொன்ன 332-வது பிரிவின் செயல் வரம்பிலிருந்து நீக்கிவிட இத்திருத்தம் விழைகிறது.

தற்போதுள்ள நாடாளுமன்ற மக்கள் அவையும் மேகாலயா மாநிலத்தின் சட்ட மன்றப் பேரவையும் கலைக்கப்படும்வரை முறையே நாடாளுமன்ற மக்கள் அவையிலும் மேகாலயா மாநிலத்தின் சட்ட மன்றப் பேரவையிலும் பழங்குடியினருக்கு ஏற்கனவேயுள்ள பிரதிநிதித்துவம் நீடித்து வருவதற்காக சில விதித்துறைகளையும் இச்சட்ட வரைவு செய்கிறது. அரசியலமைப்புச் சட்டத்தின் 330, 332-வது பிரிவுகளில் செய்யப் பட்டுள்ள திருத்தங்களும் யூனியன் நேரடி ஆட்சிப் பகுதிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கான திருத்தமும் தமிழ் நாட்டினைப் பாதிக்கவில்லை.

இத்தீர்மானத்திற்கு இம்மாமன்றம் ஒப்புதல் அளிக்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, அரசியலமைப்புச் சட்ட விதி 368-ன் படி சமீபத்தில் நாடாளு மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 31-வது அரசியலமைப்புச் சட்டத்தின் திருத்தத்தை அங்கீகரிக்க வேண்டும் என்ற முறையில் தான் இத்தீர்மானம் வந்திருக்கிறது. பொதுவாக இப்படிப்பட்ட தீர்மானங்கள் வருகிறபோது அவற்றை நாம் ஏற்றுக்கொள்கிறோம் என்று சொன்னாலும் கூட இந்தத் தீர்மானத்தின் பேரில், உள்ளே இருக்கக்கூடிய அரசியலமைப்புச் சட்ட திருத்தங்களின் அம்சங்கள் பற்றி சில கருத்துக்களைச் சொல்வது நாடாளுமன்றத்தில் இருப்பவர்களுக்கும், மத்திய அரசுக்கும் உதவிகரமாக இருக்கும் என்று தான் நாம் இந்த மன்றத்தில் பல கருத்துக்களைச் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறோம். அம்மாதிரி அளிக்கிறபோது

நான் முதன்முதலாக ஒரு விஷயத்தை இங்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆர்டிகிள் 31-ன்படி ஏற்கனவே நாடாளு மன்றத்திற்கு 500 இடங்கள்தான் இருந்தன. அப்படி 500 இடங்கள் இருக்க வேண்டிய ஒரு நாடாளுமன்றத்தில் சட்ட விரோதமாகவே 506 பேர்களை அவர்கள் தேர்ந்தெடுத்தார்கள் என்ற உண்மையை அங்கேயே சுட்டிக் காட்டினார்கள். மத்திய அரசாக இருக்கட்டும் அல்லது மாநில அரசாக இருக்கட்டும், சட்ட விரோதமாக காரியங்களைச் செய்துவிட்டு அதற்குப் பின்னால் அதற்கு ஒரு அங்கீகாரம் தேடுகிறது என்ற ஒரு முறை இருக்கிறதே அதை அவர்கள் செய்தாலும், நாம் செய்தாலும், அது தவறு என்பதை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 500 ஆக இருந்ததை 525 ஆக உயர்த்தியிருக்கிறார்கள். பின்தங்கிய பகுதிகளுக்கு, திரிபுரா போன்ற இடங்களுக்கெல்லாம் 25 ஆக இருந்ததை 20 ஆகக் குறைத்திருக்கிறார்கள். அதுதான் திருத்தத்தின் நோக்கம் என்று சொன்னார்கள். 500 என்பது 506 ஆக ஆனபோது 36 பேர்கள்தான் தமிழகத்திற்கு இருந்தார்கள். இப்போது 525 ஆக ஆகும்போது 40-க்கு வரலாம் என்று தெரிகிறது. அப்படி நாடாளுமன்றத்தில் 40 கிடைக்குமானால் சட்ட மன்றத்தின் எண்ணிக்கையும் உயரும். 240 பேர்களாக உயருவார்கள். 525 என்றிருப்பதை விட இன்னும் அதிகமாக இருக்கலாம். இந்தியா போன்ற பெரிய நாடுகளில் அது அதிகம் இல்லை என்பது என் கருத்து. இங்கிலாந்து போன்ற சிறிய நாடுகளில் தொகுதிகளை சிறியதாக வைத்து எண்ணிக்கையை அதிகப்படுத்துகிறார்கள். 600 பேர்கள் வரை இருக்கிறார்கள். ப்ரான்ஸில் கூட 590 பேர்கள் வரையில் இருக்கிறார்கள். நம் நாடு பரந்த நாடு. 55 கோடி மக்கள் தொகை உள்ள நாட்டில் 600 பேர்கள் வரை வந்திருக்கலாம். அப்படியானால் தமிழகத்தில் கூட இன்னும் ஒரு ஐந்தாறு ஸீட்கள் கிடைக்கக்கூடிய வாய்ப்பு கிடைத்திருக்கும்.

சமீபத்தில் நடந்த திண்டுக்கல் தேர்தலை வைத்துப் பார்த்தாலும் கூட அங்குள்ள ஓட்டர் மகா ஜனங்களின் எண்ணிக்கை 6 இலட்சம். ஆறு லட்சம் என்றால் அந்தத் தொகுதியில் உள்ள மக்கள் 10 அல்லது 11 லட்சம் பேர்களாவது

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 ஆகஸ்ட் 4

இருப்பார்கள். இப்படி 11 லட்சம் பேர்களுக்கு ஒரு பிரதிநிதி இருந்து ஐந்தாண்டுகள் அவர்களது அபிலாஷைகளைப் பூர்த்திச் செய்யக்கூடியது என்பது மனித சாத்தியத்திற்கு அப்பாற்பட்டது. ஆகவேதான் பொதுவாக எல்லா ஜனநாயக நாடுகளிலும் தொகுதிகளைப் பொறுத்தவரையில் எந்த அளவிற்கு சிறிய தொகுதிகளாக இருக்க முடியுமோ அந்த அளவிற்கு சிறிய தொகுதிகளாக இருக்க வேண்டுமென்று இருக்கிறது.

வயதைப் பொறுத்தவரையில் இப்போது 21 என்பது 18 ஆக ஆகிவிட்டது. 18 வயது உள்ளவர்களுக்குக்கூட ஓட்டு உரிமை கொடுக்கக்கூடிய முறையில் செய்ய வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறோம். அதையேதான் இந்த இடத்தில் எடுத்துச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

ஒரு முக்கியமான விஷயம். 1971-ஆம் ஆண்டு சென்சஸ்படி இருக்கிற ஜனத்தொகையை வைத்து ஒவ்வொரு மாநிலத்திற்கும் எத்தனை சட்டமன்ற உறுப்பினர்கள், எத்தனை நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்று பிரிக்கப் போகிருர்கள். அதற்காக வந்திருக்கக்கூடிய டி-லிமிட்டேஷன் கமிஷனைப் பொறுத்தவரையில் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். டி-லிமிட்டேஷன் கமிஷனைப் பொறுத்தவரையில் அந்தக் கமிஷனை ஏற்கெனவே அமைத்திருக்கிருர்கள். அமைத்ததற்குப் பின்னுல் இந்தத் திருத்தமும் வந்திருக்கிறது. இந்தத் திருத்தம் வருவதற்கு முன்னுல் அந்த டி-லிமிட்டேஷன் கமிஷன் அமைத்தவுடனேயே ஒவ்வொரு மாநிலத்திலும் அந்த மாநிலத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்று நினைக்கிறேன், சட்ட மன்ற உறுப்பினர்கள் ஐந்து பேர்கள் இவர்கள் தொகுதிகள் பூராவும் சுற்றுப்பயணம் செய்து தொகுதிகள் பிரிக்கப்படுகின்ற போது முறையாகப் பிரிக்க வேண்டும்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் யார் யார் அந்த ஐந்து எம்.எல்.ஏ.க்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருர்கள் என்று அறிய விரும்புகிறேன். பொதுவாக அதைச் சபாநாயகர் அவர்களே செய்வார்கள். அப்படிச் சபாநாயகர் அவர்கள் செய்ததாக

1973 ஆகஸ்ட் 4] [திரு. கே. டி. கே. தங்கமணி]

இருந்தால் எல்லா எதிர்க் கட்சிகளையும் கலந்துகொண்டு உண்மையிலே அந்தப் பகுதிகள் பூராவிற்கும் நியாயம் வழங்கக் கூடிய முறையில் தேர்ந்தெடுக்க வேண்டும். ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருர்கள். எந்த அளவிற்கு அவர்கள் கலந்து கொள்ளப்பட்டார்கள் என்று தெரியவில்லை.

நம்மைப் பொறுத்தவரையில் அரசியலமைப்புச் சட்டம் 31-வது திருத்தத்தை நாம் ஏற்றுக்கொள்கிறோம். 31-வது திருத்தத்தை ஏற்றுக்கொண்டு 500 ஆக இருந்ததை 525 ஆக ஆக்கி, சிறு சிறு மாநிலங்களுக்கு, தனியாக இருக்கக்கூடிய மாநிலங்களுக்கு 20 என்ற முறையில் 545 பேர்கள் நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருக்கலாம் என்பதற்கு வகை செய்திருக்கிருர்கள். அந்த வகையில் நமக்கு 40 நாடாளுமன்றத் தொகுதிகள், 240 சட்டமன்றத் தொகுதிகள் என்று வந்தால் தொகுதிகளைப் பிரிப்பதற்காக ஏற்பாடுகள் செய்வதில் சரியான கண்காணிப்பு இருக்க வேண்டும். அதுவும் இப்போது ஓட்டர் மகா ஜனங்களும் ரொம்பவும் விஜிலன்டாக இருக்கிருர்கள், கட்சிகளும் ரொம்பவும் விஜிலன்டாக இருக்கின்றன. இந்நிலையில் யாரோ ஒரு சிலர் மட்டும் தங்கள் தொகுதிகளைச் சரியாகப் பிரிக்க வேண்டும், தாங்கள் விரும்பக்கூடியவர்கள் எப்போதும் ஜெயிக்கக்கூடிய முறையில் அல்லது குறிப்பிட்ட ஜாதியைச் சேர்ந்தவர்கள் இருப்பது என்றெல்லாம் இருப்பதை மாற்றக்கூடிய முறையில் தமிழ்நாட்டில் நாளை சட்டசபை தேர்தல் வந்தாலும் அந்தத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படக்கூடியவர்கள் உண்மையாகவே அந்த மக்களின் எண்ணங்களை பிரதிபலிக்கக்கூடியவர்களாக இருக்க வேண்டும் என்ற முறையில் இருக்க வேண்டும்.

இன்றுள்ள தேர்தல் முறையில் சில ஊனங்கள் உள்ளன. அவை பற்றி இந்தச் சட்ட மன்றத்தில் நான் சார்ந்திருக்கக் கூடிய கட்சியும், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களும் குறிப்பிட்டிருக்கிருர்கள். பத்து பேர்கள் போட்டி போடுகிருர்கள் என்ருல் மற்ற ஒன்பது ஆள்களை விட ஒரு வோட்டு கூடுதல் வாங்கியவர் ஜெயித்து விடுகிருர். நான் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது யு.பி.-ல் இருந்து ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தார். ஜெயித்த அவருக்கு டெப்பாஸிட்

போய்விட்டது. 10,000 வோட்டுகள் வாங்கி ஜெயித்தார். 70,000 வோட்டர்கள். பத்து பேர்கள் போட்டியிட்டார்கள். ஜெயித்தவர் என்ற காரணத்தால் டெப்பாஸிட் போகவில்லை. அப்படி டெப்பாஸிட் போனவர் கூட சட்டசபைக்கு வரலாம் என்கிற அளவிற்கு இன்று தேர்தல் முறை இருக்கிறது.

பிரான்ஸ் போன்ற தேசங்களில் முதல் ரௌண்ட் தேர்தல் நடக்கும். ஜெயிக்கக்கூடியவர் மற்ற எல்லோரையும் விட அதிக வோட்டுகள் வாங்கியிருக்க வேண்டும், 51 சதவிகிதம் வோட்ஸ் வாங்கியிருப்பவர்கள்தான் முதல் ரௌண்டில் ஜெயிக்கிறார்கள். 7, 8 மாதங்களுக்கு முன்பு நடந்த ப்ரெஞ்ச் தேர்தலை தாங்கள் கவனித்திருப்பீர்கள். 480 வரை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியதில் 250 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். மறுபடியும் இரண்டாம் ரௌண்ட் தேர்தல் நடந்தது. இரண்டு சாரராகப் பிரித்து இந்தக் கட்சிக்கு ஒருவர், அந்தக் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் வந்து கடைசியில் தேர்தல் நடந்து முடிந்தது. அந்த முறையிலாவது இருக்கலாம். அப்படியில்லாமல், இந்தியா போன்ற நாடுகளில் 'ப்ரபோர்ஷனல் ரெப்ரசன்டேஷன்' என்பது ஒரு பிராந்திய ரீதியாகவும் இருக்கலாம், அல்லது வேறு முறையிலும் இருக்கலாம். அப்படியிருந்தால்தான் உண்மையிலே தங்கள் ஓட்டுச் செல்வாக்குக்குத் தக்கபடி பிரதிநிதித்துவம் கிடைக்கும். சில எதிர்க் கட்சிகள் எவ்வளவுதான் ஓட்டு வாங்கினாலும் அவர்களுக்கு பிரதிநிதித்துவம் இல்லாமல் போய்விடுகிறது. சில கட்சிகள் குறைந்த ஓட்டுக்களை வாங்கி அதிக பிரதிநிதித்துவம் பெற்று விடுகின்றன. இந்த 'ப்ரபோர்ஷனல் ரெப்ரசன்டேஷனை' வலியுறுத்துவதற்கு நமக்கு இன்றைக்கு இருக்கும் வழி 'டி-லிமிட்டேஷன் குழு' தமிழ்நாட்டிற்கு வரும்போது, அவர்களிடத்தில் தமிழ்நாட்டு சட்டமன்ற உறுப்பினர்கள் நல்ல வகையில் எடுத்துச் சொல்வதற்கும், அடுத்தாற்போல் வரும் தேர்தலுக்கு அவர்கள் 'டி-லிமிடேஷன்' செய்கிறபோது முறையாக கருத்துக்களைச் சொல்வதற்கும், பார்ப்பதற்கும் உதவியாக இருக்குமென்ற எண்ணத்தில்தான் இவற்றையெல்லாம் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

இதே பில்மீது நாடாளுமன்றத்தில் இருக்கும்போது பல விஷயங்களைப் பேசியிருக்கலாம். நம்மைப் பொறுத்தவரையில் சில அரசியல் திருத்தங்கள் வரும்போது, அவற்றிற்கு மாநில அரசுகளின் ஒப்புதல் வேண்டுமென்ற காரணத்திற்காக, அவைகளின் அங்கீகாரம் வேண்டுமென்பதற்காக இங்கே கொண்டு வரப்படுகிறது. நம்முடைய கருத்து எப்படியிருந்தபோதிலும், இது இந்தியா முழுமையையும் பாதிக்கக்கூடிய விஷயம் ஆதலால், இந்தத் திருத்தத்திற்கு, இந்தத் தீர்மானத்திற்கு என்னுடைய ஆதரவைத் தெரிவித்து, அதே நேரத்தில் என்னுடைய கருத்துக்களையும் தெரிவித்து இருக்கிறேன். நான் கூறிய கருத்துக்கள் பின்னாலே மேல் நடவடிக்கைகளுக்கு வசதியாக இருக்கும் என்று சொல்லி என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: மதிப்பிற்குரிய அவைத் தலைவரவர்களே, மதிப்பிற்குரிய தங்கமணி அவர்கள் சொன்னது போல் இந்தத் திருத்தத் தீர்மானம் முன்பே இந்த மன்றத்தில் வந்து இருந்தால் நன்றாக இருந்து இருக்கும். இந்த விஷயத்தைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டுச் சர்க்கார் எந்த அளவுக்கு இந்த மசோதாவின் மீது முன்கூட்டியே தங்களுடைய கருத்துக்களை வழங்கியிருக்கிறது என்பதை நம்முடைய அமைச்சர் அவர்கள் பதில் கூறுகிற நேரத்தில் கூறுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். காரணம், சாதாரணமாக இப்படிப்பட்ட அரசியல் சட்ட திருத்தங்கள் வருகிற நேரத்தில் மாநில அரசாங்கத்தைக் கலந்து கொண்டு, அவர்களுடைய கருத்துக்களைத் தெரிந்து கொண்டு தான் கொண்டுவருவார்கள் என்று கருதுகிறேன். என்னுடைய கருத்து தவறாக இருக்கலாம்.

ஒவ்வொரு மாநிலத்திலும் பாராளுமன்றத் தொகுதிகள் எத்தனை இருக்க வேண்டுமென்று பிரிக்கக்கூடிய நேரத்தில், இந்த தமிழ்நாடு சர்க்கார் தன்னுடைய கருத்தைச் சொல்லியிருப்பதால், தமிழ்நாடு அரசு இது சம்பந்தமாக அபிப்பிராயம் தெரிவித்து இருப்பதால், இந்த விஷயத்திலும் முன்கூட்டியே தன்னுடைய கருத்துக்களை இந்த அரசு தெரிவித்து இருக்கும் என்று கருதுகிறேன்.

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1973 ஆகஸ்ட் 4

இந்த மசோதாவிலே பாராளுமன்றத்தில் 525 உறுப்பினர்கள் வருவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தும் வகையில் இந்தத் திருத்தத் தீர்மானம் கொண்டு வருகிறார்கள். ஆனால். . .

In sub-clause 2 (*b*) of Article 81 of the Constitution, it is stated—

'each State shall be divided into territorial constituencies in such manner that the ratio between the population of each Constituency and the number of seats allotted to it is, so far as practicable, the same throughout the State.'

சராசரியாக ஒரு பாராளுமன்றத் தொகுதிக்கு இத்தனை எம்.எல்.ஏக்கள் இருக்க வேண்டுமென்று இருக்கிறது. அதே நேரத்தில் ஒரு சட்டசபை தொகுதிக்கு இத்தனை வாக்காளர்கள் சராசரியாக இருக்க வேண்டுமென்று ஒவ்வொரு மாநிலத்திலும் குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழகத்தில் எடுத்துக்கொண்டால் ஒரு சட்டமன்ற தொகுதிக்கு ஏறத்தாழ 1 லட்சம் வாக்காளர்கள் இருப்பார்கள். மைசூரில் ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு 80,000 வாக்காளர்கள் இருப்பார்கள். இப்படி ஒரு சட்டமன்றத் தொகுதிக்கும் இன்னொரு சட்டமன்றத் தொகுதிக்கும் வித்தியாசம் இருக்கலாம். ஆனால் பாராளுமன்றத் தொகுதியைப் பொறுத்தவரையில் 6 லட்சம் வாக்காளர்கள் சராசரியாக இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். சில மாநிலங்களில் 5 லட்சம் என்று இருக்கிறது. 'இக்குவிடபிள் ரேஷியோவில்' தருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இந்த நிலைமையில் 525 உறுப்பினர்கள் என்று வருகிறபோது, ஒவ்வொரு பாராளுமன்றத் தொகுதிக்கும் சராசரியாக இவ்வளவு என்று பிரித்துக் கொடுப்பதற்கு இந்தத் திருத்தத்தில் வாய்ப்புக் கிடையாது. அந்த ஒரு நிலைமையில்லாமல். வேறு நிலைமை வந்துவிட்டால், ஒரு மாநிலத்தில் 6 லட்சம் வாக்காளர்கள் ஒரு பாராளுமன்ற சீட்டிற்கும், இன்னொரு மாநிலத்தில் 5 லட்சம் வாக்காளர்கள் ஒரு பாராளுமன்ற சீட்டிற்கும், இன்னொரு மாநிலத்தில் 4½ லட்சம் வாக்காளர்கள் ஒரு பாராளுமன்ற சீட்டிற்கும் என்று வரும் நிலைமையைத் தவிர்ப்பதற்கு என்ன நடவடிக்கையை எடுத்து இருக்கிறோம் என்று அறிய விரும்புகிறேன்.

1973 ஆகஸ்ட் 4] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

தமிழ்நாட்டில் 6 சட்டமன்றத் தொகுதிகளுக்கு ஒரு பாராளுமன்ற உறுப்பினர். மைசூரில் 8 சட்டமன்றத் தொகுதிகளுக்கு ஒரு பாராளுமன்ற உறுப்பினர், ஆந்திராவில்—என்னுடைய ஞாபகம் சரியாக இருந்தால்—7 சட்டமன்றத் தொகுதிகளுக்கு ஒரு பாராளுமன்ற உறுப்பினர். இந்த வகையில் வைத்து இருக்கிறார்கள். இங்கே 6 சட்டமன்ற உறுப்பினர்கள் என்று இருப்பதை ஏழு என்று ஆக்கப் போகிறீர்களா ? இப்போது 234 சட்டமன்றத் தொகுதிகள் இருக்கின்றன, இதை உயர்த்துவதற்கு திட்டம் இருக்கிறதா ? நம்முடைய மதிப்பிற்குரிய நண்பர் கே. டி. கே. தங்கமணி அவர்கள் இங்கே ஒரு கமிஷன் இருக்கிறது என்று சொன்னார்கள். ஏற்கனவே அந்தக் கமிஷன் It is seized of the problem of sub-dividing Tamil Nadu into more constituencies. 234 தொகுதிகளை உயர்த்துவதற்கு அந்தக். கமிஷன் ஏதாவது திட்டம் போட்டு இருக்கிறதா? அது என்ன பரிந்துரை கொடுத்து இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

இன்னொரு கருத்தையும் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் கூற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேற்குக் கோவை தொகுதியில் தேர்தல் நடைபெற வேண்டும். 9 மாத காலமாக அந்த இடம் காலியாக இருந்தும் இன்னும் இடைத் தேர்தல் நடத்தப்படவில்லை. இன்னும் 3 வருடம் ஆகுமோ, அல்லது எவ்வளவு நாட்கள் ஆகுமோ தெரியவில்லை. இந்தத் தேர்தலை நடத்துவதற்குக் காலதாமதம் ஆவதற்குக் காரணம் மத்திய அரசு தான் என்று சொல்லி இருக்கிறார்கள். ஒரு தொகுதியில் இடைத் தேர்தல் நடத்த வேண்டுமென்று சொன்னால், அதற்கு என்ன ஏற்பாட்டை தாங்கள் வைத்து இருக்கிறீர்கள், அதற்கு என்ன உத்தரவுகளைப் போட்டு இருக்கிறீர்கள் என்று அமைச்சரிடத்திலிருந்து அறிய விரும்புகிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சில நாட்களுக்கு முன்பாக ஒரு கருத்தைச் சொன்னார்கள். தேர்தலைத் தள்ளிவைப்பதற்கு தமிழக சர்க்காருக்கு பொறுப்பு இல்லை என்று சொன்னார்கள். 2 மாதத்திற்கு முன்பாகச் சொல்லியிருக்கிறார்கள். அகில இந்திய ரீதியில் தேர்தல் கமிஷன் என்று ஒன்று இருக்கிறது. அந்தத் தேர்தல் கமிஷன் அலுவலகம் ஒன்று தமிழகத்தில் இருக்கிறது. அந்தத் தேர்தல் கமிஷன் தான் இந்தத்

தேர்தலை நடத்துகிறது இந்தத் தேர்தலை தள்ளிவைப்பதற்கு நம்முடைய சர்க்காருக்கு பொறுப்பு இல்லை என்று சொன்னார்கள்.

* **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தவறான கருத்தை டாக்டர் ஹாண்டே அவர்கள் சொல்கிறார்கள். நான் சொன்னது அப்படி அல்ல. அங்கேயிருக்கும் தேர்தல் கமிஷன்தான் அதற்கு அதிகாரம் படைத்தது. இங்கே அதனுடைய கிளை தேர்தல் கமிஷன் அலுவலகம் அதை நடத்தி வைக்க இருக்கிறது என்று சொன்னேன். ஆனால் அதே நேரத்தில் தேர்தலை எப்படி வைத்துக் கொள்ளலாம் என்று அபிப்பிராயம் கூற நம்முடைய அரசுக்கு உரிமை உண்டு. அந்த முறையில் அபிப்பிராயம் கூறியிருக்கிறோம். அதை ஏற்றுக்கொள்வதும், ஏற்றுக்கொள்ளாததும் அவர்கள் விருப்பம் என்று சொன்னேன். மேற்குக் கோவைத் தேர்தலைப் பொறுத்தவரையில், கோவை நாடாளுமன்ற தொகுதிக்கும் ஒரு இடைத் தேர்தல் நடத்த வேண்டிய சூழ்நிலை வந்து விட்டதால், மேற்குக் கோவைத் தொகுதியும் அதனுள் இருப்பதால், ஒரே தொகுதியில் இரண்டு தேர்தல் தேவையில்லை, இரண்டையும் ஒன்றாக வைத்துக்கொள்ளலாம் என்று கூறி, நாடாளுமன்றத்திற்கு எப்போது தேர்தல் வருகிறதோ, அப்போதே சட்டமன்றத் தொகுதிக்கும் தேர்தல் இணைத்து வைத்துக்கொள்ளலாம் என்று தமிழக அரசின் சார்பில் சொல்லியிருக்கிறோம் என்று சொன்னேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : முதலமைச்சர் அவர்கள் அந்தத் தேர்தல் தள்ளிவைப்பதற்கான காரணங்களைக் கூறி ஆலோசனை கூறியிருப்பதாகச் சொன்னார்கள். அதை ஏற்றுக்கொள்வதும் ஏற்றுக்கொள்ளாததும் அவர்கள் விருப்பம் என்றாலும். இவர்கள் கூறுகிற ஆலோசனைகளை அவர்கள் ஏற்றுக்கொண்டு தள்ளி வைத்திருப்பதால், இந்த அரசு தான் இந்தத் தேர்தல் தள்ளி வைப்பதற்குக் காரணம் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். அதாவது தேர்தல் சம்பந்தமாக தேர்தல் கமிஷனுக்கு அதிகாரம் இருந்தாலும், மாநில அரசு தரும் பரிந்துரைகளை அது ஏற்றுக் கொள்கிற காரணத்தால், தமிழக அரசு தான் பொறுப்பு என்று சொல்லிக்கொள்கிறேன். இதிலே ஒரு கருத்து முரண்பாடு

இருக்கிறது என்று சொல்வதற்காகச் சொல்லவில்லை. இப்படிப் பட்ட தேர்தல் நடைபெறுகிற நேரத்தில் தேர்தல் கமிஷன் தான் அதை நடத்த வேண்டுமென்றாலும், அது மாநில அரசின் ஆலோசனையின் படியே நடத்துகிறது என்பதால், பாராளுமன்றத்திற்கு சராசரியாக எவ்வளவு வாக்காளர்கள் இருக்க வேண்டுமென்பதற்கும் இந்த அரசு ஆலோசனை தந்து இருக்க வேண்டும். அப்படித் தந்து இருந்தால் அது என்ன என்பதை அமைச்சர் அவர்கள் பதில் கூறுகிறபோது சொல்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். இதையெல்லாம் அமைச்சர் அவர்கள் தெளிவாக தன்னுடைய பதிலில் சொல்ல வேண்டும். காரணம் இவற்றிற்கெல்லாம் நாங்கள் பொது மக்களிடத்தில் பதில் சொல்லியாக வேண்டியிருக்கிறது. என் இந்தத் தயக்கம், என் இந்த கன்ப்யூஷன் என்று கேட்கிறார்கள். அதற்குள் இந்த சமாசாரம் உட்பட்டிருக்கிறதா என்று கேட்கலாம். பொதுவாக பார்க்கிறபொழுது எல்லாம் தேர்தல் விஷயம் தான். பாராளுமன்றத் தொகுதிக்கு ஏறத்தாழ 6 லட்சம் பேர்கள் என்று சொன்னார்கள். தேர்தல் நடக்கிறது என்று சொன்னால், தேர்தலில் ஏற்படக்கூடிய சிரமங்கள், தொல்லைகள், அசௌகரியங்கள், 'குவெஸ்சின் ஆஃப் மொபிலிடி' அதாவது ஊர் ஊராக சுற்றிச் செல்லக்கூடிய நிலைமை இதையெல்லாம் தவிர்ப்பதற்கு என்ன பரிந்துரை கொடுத்தார்கள் என்பதையும் நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். சில மாநிலங்களில் வேறு மாதிரியாக இருக்கிறது. நாடாளுமன்றத்திலே வேறு மாதிரியாக இருக்கிறது. தமிழக சர்க்கார் மற்றைய மாநிலங்களோடு கலந்து பேசி, அங்கு எப்படி நிலைமை இருக்கிறது. எவ்வளவு ஜனத்தொகை, எங்கே எவ்வளவு ஜனத்தொகை என்றெல்லாம் கேட்டறிந்து அதற்குத் தகுந்த ஏற்பாடு செய்து பரிந்துரைகளைச் செய்ய வேண்டும். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் எத்தனை சட்டசபை தொகுதிகள் இருக்க வேண்டும் என்று நாம் பரிந்துரை செய்யப் போகிறோம்? திடீரென்று பேப்பரில் வருகிறது. 234 தொகுதிகளாக உயர்த்திவிட்டார்கள் என்று பார்க்கிறோம். பொது மக்கள் கேட்கிறார்கள். நாங்கள் அதற்குப் பதில் சொல்ல முடியவில்லை. அதிகாரிகள் அறிக்கை கொடுத்து விடுகிறார்கள். இந்த மன்றத்தில் இந்த விஷயத்தை நாங்கள் பேசுகிறோம் என்றால், அதற்கு

விளக்கம் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான். Are we going to increase the number of Assembly seats என்பது பொது மக்களுக்கு இந்த மன்றத்தின் வாயிலாகத் தெரிந்தால் நன்றாக இருக்கும். 525 பாராளுமன்ற உறுப்பினர்கள் என்றால் தமிழகத்தில் எத்தனை உறுப்பினர்கள், 40 உறுப்பினர்களா, எவ்வளவு பேர், 40 ஆக இருந்தால் என்ன ரேஷியோ, 1 : 7 அல்லது 1 : 8 என்றெல்லாம் பார்க்க வேண்டும். அதைப் பொறுத்த வரையில் ஒரு சட்டசபைத் தொகுதிக்கு மினிமம் எவ்வளவு இருக்க வேண்டும் என்று பரிந்துரை அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை நமக்கு அமைச்சர் அவர்கள் விளக்கியே ஆக வேண்டும். ஒரு சட்டசபை தொகுதிக்கு 80,000-க்கு கீழோ அல்லது 75,000 என்று வைத்துக்கொள்ளலாம், அல்லது ஒரு சட்டசபை தொகுதிக்கு ஒரு லட்சத்துக்கு கீழே வைத்துக்கொள்ளக் கூடாது என்று ஏதாவது சட்டம் இருக்கிறதா என்ற உண்மைகளையெல்லாம், ரகசியங்களையெல்லாம் எங்களுக்குச் சொல்ல வேண்டும்.

கோவைத் தேர்தலை எடுத்துக்கொண்டால் அந்த ஒரு தொகுதியிலே முழுக்க முழுக்க ஒரு பிரதிநிதியும் இல்லாமல் செய்வது மிக வன்மையாகக் கண்டிக்கத் தக்கது. அதற்கு யார் பொறுப்பாக இருந்தாலும் சரி, ஏறத்தாழ 9 மாதங்களாக ஒரு தொகுதியை அப்படி பிரதிநிதி இல்லாமல் வைக்கலாமா? அது ஜனநாயகத்திற்கு அப்பாற்பட்ட செயல் என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறேன். அது மிகவும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. அந்த நிலை அந்தத் தொகுதியில் நீடிக்க விடக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

* **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அந்தத் தொகுதி காலியாக இருக்கக்கூடாது என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் விரும்புவதன் காரணம், அந்தத் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் அந்தத் தொகுதியின் குரலை இங்கே வந்து எழுப்ப வேண்டும் என்பதற்காகத்தான் என்று கருதுகிறேன். தொகுதியின் சார்பாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் சட்டசபைக்கு வாராமலே இருக்கிறார்களே, அதைப்பற்றி என்ன கருத்துத் தெரிவிக்கிறீர்கள்?

டாக்டர் எச். வி. ஹாண்டே: நீங்கள் யாரைக் குறிப்பிடுகிறீர்கள் என்று தெரியாது. பாராளுமன்றத்தில் அப்படி இருக்கலாம். சட்டசபையிலும் அப்படி இருக்கலாம். அதே நேரத்தில் இன்று காலையிலே நமது மதிப்பிற்குரிய உணவு அமைச்சர் பதில் சொல்லிய பிறகு, நமது முதல் அமைச்சர் அவர்கள் ஏன் பதில் கொடுக்க வேண்டும் என்று கேட்டதற்கு இப்பொழுது சேர்மனாக இருக்கும் திரு. வீராசாமி அவர்கள் எழுந்து ஒரு கருத்தைச் சொன்னார்கள். கூட்டு ரெஸ்பான்ஸிபிலிடி என்று சொன்னார்கள். நீங்கள் சொல்வது யாரை என்று நன்றாகத் தெரியும். நாகர்கோவிலை மதிப்பிற்குரிய பொன்னப்ப நாடார் அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அதே மாதிரி செண்ட் தாமஸ் மௌண்டை நாங்கள் இங்கே பார்த்துக்கொள்கிறோம். அதைப்பற்றி கவலைப்பட வேண்டியதில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதைப் போலத் தான் தற்காலிகமாக ரங்கநாதன் அவர்கள் அந்தத் தொகுதியை பார்த்துக்கொள்ளக் கூடியவர்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: அவர்கள் அந்தத் தொகுதியை பார்த்துக்கொள்வார்கள் என்பதற்காக அந்த இடத்திலே தேர்தலே வேண்டாம், அந்த இடம் காலியாகவே இருக்க வேண்டும் என்று பேசுகிறீர்களா?

* **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அப்படி அவர்கள் கற்பனை செய்துகொள்வதை நான் வன்மையாக மறுக்கிறேன். நான் அங்கே தேர்தலே வேண்டாம் என்று சொல்லவில்லை. முதலில் ஒரு தேர்தல் நடத்தி, அடுத்த இரண்டு மாதங்களுக்குள் மறுபடியும் அங்கே மற்றொரு தேர்தல் நடத்தத் தேவையில்லை. ஆகவே நாடாளுமன்றத் தேர்தலோடு இணைத்துச் சட்டமன்றத் தேர்தலையும் வைத்துக் கொள்ளலாம் என்று பரிந்துரை செய்திருக்கிறோம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: நான் சொல்வதற்கு நேரடியாக அணுகி பதில் சொல்லாமல் என்னை திசை திருப்பி விடுகிறார்கள்.

[1973 ஆகஸ்ட் 4

* **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தங்களுடைய வாதத்தை நான் நேரடியாக அணுக முடியாமல் அப்படிச் சொல்லவில்லை. தாங்கள்தான் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்டவர் சட்டமன்றத்திற்கு ஏன் வரவில்லை என்று கேட்டதற்கு, அதை நேரடியாக அணுகாமல் சுற்றிவளைத்துப் பேசினீர்களே அல்லாமல், நான் சுற்றிவளைத்துப் பேசவில்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே: மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் பாதியில் என்னை நிறுத்தி பதில் சொல்லிக்கொண்டிருந்தால் எனக்குத் தொடர்ந்து என் கருத்தை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. முதல் அமைச்சர் அவர்கள் பிறகு பதில் சொல்வதை நான் முழுமையாகக் கேட்டுக் கொள்கிறேன். முதல் அமைச்சர் அவர்கள் தான் நான் சொல்வதற்கு நேரடியாக அணுகாமல் வேறு சுற்றி வளைத்துப் பதில் சொன்னுர்கள். நான் அப்படிச் சொல்லவில்லை. அந்தத் தொகுதிகளை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம் என்று சொன்னேன். ஆங்காங்கு இருக்கக்கூடிய கிளைகள், ஆங்காங்கு இருக்கக்கூடிய அமைப்புக்கள் எங்களோடு நேரடியாக தொடர்பு கொண்டு, சட்டமன்ற உறுப்பினர்களிடத்தில் சொல்லிப் பார்த்துக் கொள்வதற்கு வாய்ப்பு உண்டு. சட்டமன்ற உறுப்பினர்களுடன் தொடர்பு கொண்டு பேசுவதற்கு இங்கே வாய்ப்பு உண்டு இதுதான் இருக்கக்கூடிய நிலைமை. அதே மாதிரி நாகர்கோவில் தொகுதியைப் பார்த்துக்கொள்வதற்கு ஏராளமான வாய்ப்பு உண்டு. அதைப் பெரிய பிரச்னையாக முதல் அமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்ல வேண்டியதில்லை. அந்த இடம் காலியாக இருக்கிறது என்ருல், அங்கே சட்டமன்ற உறுப்பினர் இல்லை. துரதிருஷ்டவசமாக அவரை இழந்துவிட்டோம். ஏறத்தாழ 9 மாதங்கள் ஆகின்றது. அங்கே சட்டமன்ற உறுப்பினர் இல்லை. மற்ற எம்.எல்.ஏ.க்களோடு தொடர்பு கொள்வதற்கு யார் இருக்கிருர்கள்? யார் டெலிகேஷன் செய்வது? 'நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள்' என்று சொல்வதற்கு யார் இருக்கிருர்கள். சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் தானே சொல்ல வேண்டும். சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் இல்லை. யார் டெலிகேட் பண்ணுவது? ஜனநாயக ரீதியிலே அந்தத்

1973 ஆகஸ்ட் 4] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

தொகுதியை பார்த்துக்கொள்வது யார்? மாவட்ட கலெக்டர் பார்த்துக் கொள்வாரா? கிளை அமைப்புகள் பார்த்துக் கொள்ள வேண்டுமா? செயலாளர்கள் பார்த்துக் கொள்வார்களா? நான் பூங்கா தொகுதி எம்.எல்.ஏ. என்ருல் நான் சொல்லலாம் '6 மாதம் பார்த்துக் கொள்ளுங்கள்' என்று டெலிகேட் செய்துவிட்டுப் போகலாம். (திரு. செ. கந்தப்பன்: அம்மாதிரி டெலிகேட் பண்ண முடியாது) அந்த வாதத்திற்கு நான் பதில் கொடுத்தாகி விட்டது.

நான் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது என்னவென்ருல், தமிழ் நாட்டைப் பொறுத்தவரையிலே 234 ஸீட்கள் இருக்கின்றன. அதைப் பொறுத்தவரையில் நமக்கு எந்த அளவில் நன்மையா, தீமையா என்று பார்க்க வேண்டும். உதாரணமாக ஜனதிபதி தேர்தலில் ஒரு வோட்டுக்கு இவ்வளவு பாயிண்டுகள் என்று எண்ணிக்கை இருக்கிறது. தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் சட்டமன்ற உறுப்பினருக்கு 146, 148 வோட்டுகள், பாயிண்டுகள் இருக்கின்றன. மைசூர் மாநிலத்தை எடுத்துக் கொண்டால் 126 பாயிண்டுகள், ஆந்திராவை எடுத்துக் கொண்டால் வேறு மாதிரியாக இருக்கிறது. ஜனத்தொகை அடிப்படையில் வைத்துக்கொண்டு ஒரு எம்.எல்.ஏ-க்கு மைசூர் மாநிலத்தில் தேர்தலுக்கு எவ்வளவு பாயிண்டு, தமிழ் நாட்டு எம்.எல்.ஏ-க்கு எவ்வளவு பாயிண்டு, யு. பி. எம்.எல்.ஏ-க்கு இத்தனை பாயிண்டுகள் என்றெல்லாம் இருக்கிறது. அவைகளையெல்லாம் பற்றி நன்மையா, தீமையா என்றெல்லாம் ஆராய்ந்து சரியான பரிந்துரையை தமிழக சர்க்கார் மத்திய அரசுக்குச் சமர்ப்பிக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. செ. கந்தப்பன்:** தலைவர் அவர்களே, நாடாளுமன்ற அனுமதி பெற்று நம்முடைய ஒப்புதலுக்காக வந்திருக்கிற இந்த மசோதாவின் மீது நான் ஒரு சில முக்கியமான கருத்துக்களை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இது ஏற்கனவே அங்கே நிறைவேற்றப்பட்டு வந்திருக்கிற காரணத்தினுல் நம்முடைய ஒப்புதலைத் தான் தரமுடியும் என்ற நிலை இருந்தாலும்,

ஒப்புதலை தருகின்ற நேரத்தில் ஏற்கனவே நம்முடைய தமிழக முதல் அமைச்சர் அவர்களும், வேறு சில கட்சித் தலைவர்களும் எடுத்துச் சொல்லியிருக்கிற கருத்துக்களையும், இந்த மாமன்றத்தில் ஏறத்தாழ ஒருமித்து உண்டாக்கக்கூடிய சில எண்ணங்களையும் பிரதிபலிக்கும் வகையில் இந்தக் கருத்துக்களை மத்திய அரசின் நிர்வாகத்திற்குத் தெரிவிக்க வேண்டும் என்று மெத்த பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். 39-லிருந்து 40 ஆக நம்முடைய எண்ணிக்கை உயர்த்தப்பட்டிருக்கிறது. அது கூட ஒரு வகையிலே தவறு. ஏற்கனவே, முன்பு இருந்தது 41. 41-ஐ 39 ஆக குறைத்து, இடையிலே நம்முடைய கண்டனத்தை நம்முடைய அரசின் சார்பில் அடிக்கடி வற்புறுத்திய காரணத்தினால், ஒரு இடம் சேர்க்கப்பட்டு, 39 என்பது இப்பொழுது 40 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. 500 உறுப்பினர்களுக்கு மேலே இருக்கப் போகும் நாடாளுமன்றத்தில், 41 தமிழகப் பிரதிநிதிகள் இருந்த இடத்தில் இன்றைக்கு 40 பேர்கள் தான் இருக்கப் போகிறோம். பல மாநிலங்களில் எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் எண்ணிக்கை குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது. இந்த அவை அதைப் பற்றி என்ன கருதுகிறது என்ற எண்ணத்தை வலியுறுத்த நாடாளுமன்றத்திற்கு நாம் இதைத் தெரிவிக்க வேண்டும், மாநில அரசு மத்திய அரசுக்கு இதைத் தெரிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் இந்த மசோதா நம்முடைய ஒப்புதலுக்கு வந்திருக்கிறது. ஆனால், பொதுவாக சமீப காலத்தில் மத்திய அரசினுடைய பல நடவடிக்கைகளை பார்க்கிறபொழுது, எதிர் காலத்தில் இது போல மசோதாக்கள் நமக்கு வந்து கொண்டிருக்குமா என்பது கூட சந்தேகப்படுகின்ற அளவுக்கு அதிகாரக் குவியல்கள் அங்கே ஏற்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய நிலைமை இருந்துகொண்டு வருகிறது. பல அரசியல் விற்பன்னர்கள் அரசியல் நிர்ணய சட்டத்தில் இருக்கிற பகுதிகளின்படி மாநிலங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற உரிமைகள் கூட பறிக்கப்படுகின்றன என்ற கருத்தினை எடுத்துச் சொல்லி

யிருக்கிறார்கள். நாட்டிலே இருக்கிற எல்லோராலும் ஒத்துக் கொள்ளக்கூடிய விற்பன்னர்கள் இப்படிப்பட்ட கருத்தினை வெளியிட்டிருக்கிறார்கள். அதற்குள் நான் விரிவாகப் போக விரும்பவில்லை. அப்படிப்பட்ட நிலையில் தமிழகத்தின் சார்பில் அங்கே எத்தனை பிரதிநிதிகள் இருக்கிறார்கள் என்பதைப் பற்றி நாம் அதிகம் கவலைப்பட வேண்டியவர்களாக இருக்கிறோம். 500 பேர்கள் இருக்கின்ற மன்றத்தில் 40, 45, 50 பேர்கள் இருந்தால் கூட பெரும்பான்மையை உண்டாக்கி விடுவதற்கு இல்லை. இருந்தாலும் கூட பல முடிவுகளை, மக்களுடைய வாழ்க்கையைத் தொடக்கூடிய முடிவுகளைக் கூட மாநிலத்தில் எடுக்காமல் மத்திய அரசு எடுக்கிற நிலைமை வளருகிறபோது நம்முடைய குரல் அங்கே ஒலிக்க முடியாமல் போய்விடுகிறது. அதனால் நிச்சயமாக மாநில மக்கள் நலன் பாதிக்கப்படும். ஆகவே, மாநில மக்கள் நலன் பாதிக்காத வகையில் இருக்க, நாம் இதிலே அதிகக் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாக இருக்கிறது.

இன்னொரு முக்கியமான கருத்து. இங்கே மேலவை இருப்பதைப் போல அங்கேயும் ஒரு மேலவை இருக்கிறது. நம்முடைய அரசியல் நிர்ணய சட்டத்தில் இந்த மேலவை 'கவுன்சில் ஆஃப் ஸ்டேட்' என்று சொல்லப்படுகிறது. ஆனால் கால கட்டத்தில் மரபு, பழக்கம் என்கிற வகையில் அங்கே ராஜ்ய சபை என்றாகிவிட்டது. அது எந்த நிலையில் உருவாக்கப்பட்டது என்பதைக் கூட பாராமல், அரசியல் நிர்ணய சட்டத்தில் நம்முடைய நிபுணர்கள், நம்முடைய அரசியல் தலைவர்கள் என்ன கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள் என்றுகூட பார்க்காமல், அந்தக் கருத்து மறுக்கப்பட்டு மாநில பிரதிநிதித்துவ தன்மை குறைந்து வருகிறது என்பதை நாம் காண்கிறோம். அதைப் பற்றி பல கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றில் ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்திய துணைக் கண்டத்தில் பல்வேறு மாநிலங்கள் இருக்கின்றன. மாநிலங்கள் என்ற ஒரு அளவுக்காவது, நமது அரசியல் நிர்ணய சட்டத்தில் வரையறையிலான தீர்மானத்தை மத்திய அரசின் தலையீடு இல்லாமல் நிறைவேற்றுவதற்கு

மாநிலங்களுக்கு உரிமை இருக்க வேண்டும். தேர்தல் நடைபெற்று, அதிலே தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக் கொண்ட ஒரு நிர்வாக அமைப்பில் மத்திய அரசின் தலையீடு இல்லாமல் இருக்க வேண்டும். மாநிலங்கள் அவைக்கு உறுப்பினர்களை அனுப்புவதில் எல்லா மாநிலங்களுக்கும் சம உரிமை இருக்க வேண்டும். மாநிலங்களுக்கு சம அளவில் பிரதிநிதித்துவம் கிடைக்க வேண்டும். 9 கோடி மக்களைக் கொண்ட ஒரு மாநிலமாக இருந்தாலும் சரி, அல்லது ஒரு கோடி மக்களைக் கொண்ட ஒரு மாநிலமாக இருந்தாலும் சரி, மாநிலங்கள் அவை என்ற அளவில் எல்லா மாநிலங்களுக்கும் சம எண்ணிக்கையிலான உறுப்பினர்களை அனுப்புவதற்கு வழிவகைகள் இருக்க வேண்டுமென்று நான் வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இல்லையென்றால் மக்கள் எண்ணிக்கையின் அடிப்படையில் தேர்ந்தெடுத்து அனுப்பப்படுகின்ற உறுப்பினர்களைக் கொண்ட லோக் சபையில், குறைந்த எண்ணிக்கைக் கொண்ட உறுப்பினர்களை அனுப்பி வைக்கின்ற மாநிலங்களின் மொழி உணர்ச்சிகள், இன பாதுகாப்பு உணர்ச்சிகள் இன்னும் சிறுபான்மையோர் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்று எழுப்பப்படுகின்ற குரல்கள் ஒலிக்க முடியாமல் போய்விடுவதைப் போல மாநிலங்கள் அவையிலும் அந்த குரல்கள் ஒலிக்க முடியாமல் போய்விடும். 'கவுன்சில் ஆஃப் ஸ்டேட்ஸ்' என்று சொல்லும்போது இந்தக் கருத்தை யாரும் ஒப்புக்கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன். அந்த வகையில் எல்லா மாநிலங்களுக்கும் சம உரிமை இருக்க வேண்டும் என்ற நம்முடைய கருத்தை நமது அரசு டில்லிக்கு எடுத்துச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த அளவுக்காவது நாம் பாதுகாப்பைத் தேடிக் கொள்வதில் தவறிவிடுவோமானால் எதிர்காலத்திலே நம்முடைய குரல் நிச்சயமாக அங்கே ஒலிக்க முடியாத நிலை ஏற்பட்டு விடும்; அப்போது நம்முடைய உணர்வுகளை அவர்களுக்கு தெரிவிக்க முடியாது. அதனால் மொழி, இனம், பண்பாடுகளுக்கு குந்தகம் ஏற்படாத முறையில் இந்த மசோதாவை நாம் திருத்த முடியாது என்றாலும், நம்முடைய கருத்தை இந்த மசோதாவில்

புகுத்த முடியாது என்றாலும், நம்முடைய உணர்ச்சிகளை, நம்முடைய கருத்துக்களை மத்திய அரசுக்கு தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

திரு. மணலி சி. கந்தசாமி: கனம் தலைவர் அவர்களே, இந்த அரசியல் சட்ட திருத்த மசோதாவின் மீது நம்முடைய கருத்துக்களைச் சொல்வதற்கான ஒரு உரிமைதான் இருக்கிறது. ஏற்கெனவே அது சட்டமாக்கப்பட்டுவிட்டது பாராளுமன்றத்தில். இந்தத் திருத்த மசோதாவில் நாடாளுமன்றத்திலே தமிழகத்திற்கு எந்த அளவுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமோ அந்த அளவுக்கு கொடுக்கவில்லை என்பதை வலியுறுத்திச் சொல்ல வேண்டியிருக்கிறது. ஜனநாயக அடிப்படையிலே வழங்கப்பட வேண்டிய உரிமைகள் வழங்கப்படாத வரையில் அந்த ஜனநாயகம் சிறப்பாக நடைபெறுவதாக நாம் ஒப்புக்கொள்ள முடியாது.

குறிப்பாக இன்றைக்கு தேர்தலை நடத்துகிறார்கள். எப்படி தேர்தல் நடைபெறுகிறது? பாராளுமன்றத்திற்கும் சட்ட மன்றத்திற்கும் சேர்த்து தேர்தல் நடைபெறுகிறது. இன்றைக்கு அகில இந்திய ரீதியில் பாராளுமன்றத்திற்கு இருக்கின்ற பிரச்சனைகள் வேறு; சட்ட மன்றங்களுக்கு உள்ள பிரச்சனைகள் வேறு. இந்த இரண்டையும் சேர்த்து ஒரே நேரத்தில் தேர்தலை நடத்துவதால், தேசிய ரீதியில் பல பிற்போக்கான கட்சிகள் ஒன்றாகச் சேர்ந்து கொண்டு தேர்தலிலே வெற்றி பெறுவதைப் பார்க்கும்போது சங்கடம் ஏற்படுகிறது. ஆகவே, இந்தத் தேர்தல்களை தனித்தனியாக நடத்தினால் மாநில அரசில் ஒரு தீர்ப்பு, மத்திய அரசில் ஒரு தீர்ப்பாக இருக்கும். அப்படியானால் தான் ஜனநாயகம் வலுப்படும், மக்கள் பலனடைவார்கள்.

அடுத்தபடியாக, இன்றைக்கு எல்லாக் கட்சிகளும் போட்டி போடுகின்றன. ஒரு கட்சிக்கு வழங்கப்படுகின்ற ஓட்டுகளின் அடிப்படையில் அந்தக் கட்சிக்கு ஸ்தானங்கள் கிடைக்கவில்லை என்பது ஒரு பெரிய குறைபாடு. இது இந்திய ஜனநாயகத்தில் ஒரு பெரிய குறையாக இருக்கிறது. இந்த நியாயமான ஸ்தானங்களைப் பெற முடியாததால் சில சமயங்களில் கிளர்ச்சி செய்து அதைப் பெறவேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டு,

ஒருமைப்பாட்டுக்கு குந்தகம் ஏற்படும் சூழ்நிலை ஏற்படுகிறது. இந்த முறையினால் பலனடையும் சில கட்சிகள் இதைப் பற்றிக் கேட்டால் மௌனம் சாதிக்கிறார்கள். இந்த நாட்டிலே அந்தந்த கட்சிகளுக்கு கிடைக்கின்ற ஓட்டுகளுக்குத் தக்கபடி ஒரு அமைப்பு ஏற்பட வேண்டும். அதுதான் ஜனநாயகம் வலுப் பெறுவதற்கு சரியான நடவடிக்கையாக இருக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ப்ரொப்போர்ஷனல் ரெப்பிரசென்டேஷன் என்பதில் கூட்டு சேருவது என்பது கூட இருக்காது; இருக்கக் கூடாது. இப்போது கூட்டு சேருவது என்பது அரசியல் அடிப்படையில் இல்லாமல் வியாபார அடிப்படையில் இருக்கிறது. இப்படி வியாபார அடிப்படையில் அரசியல் கட்சிகள் கூட்டு சேருவது வருந்தத்தக்கது; அந்த நிலை நீடிக்கக் கூடாது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

திரு. கந்தப்பன் அவர்கள் கூறியதைப்போல, இப்போது இந்தியாவில் லோக் சபா, ராஜ்ய சபா, என்று இரண்டு சபைகளை வைத்துக் கொண்டிருக்கிறோம். இந்த இரண்டு சபைகளுக்கும் சமமான பிரதிநிதித்துவம் கிடைக்க வேண்டும். பல்வேறு மாநிலங்களுக்கு பல்வேறு பிரச்சனைகள் இருக்கின்றன. அவைகளை எந்த எந்த வகைகளிலே தீர்க்க வேண்டும் என்பதை ஆலோசித்து இப்போது இருக்கக்கூடிய அமைப்பில் என்ன மாறுதலைச் செய்ய வேண்டுமென்று மத்திய அரசு ஆலோசிக்க வேண்டும். தகுந்த மாறுதலை கொண்டுவர வேண்டும். அதற்கு ஏற்ற தருணம் இப்போது வந்திருக்கிறது. இல்லை என்றால் மாநிலங்களில் ஏற்படுகின்ற தனித்தனிப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு தகாத வேறு வழிகளில் போகக்கூடிய சூழ்நிலை ஏற்படலாம் என்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்துக் கொண்டு, இந்த அளவில் என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: கனம் தலைவர் அவர்களே, இந்த அரசியல் சட்ட திருத்த மசோதாவின்மீது தமிழகத்து சட்ட

சபையில் இருந்து நல்ல பல கருத்துக்களை அனுப்பி வைக்க வேண்டுமென்று என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இப்போது பாராளுமன்றத்தில் 500 பேர்கள் என்ற எண்ணிக்கையை 525 ஆக உயர்த்தவேண்டுமென்று இந்தச் சட்ட திருத்தம் வந்திருக்கிறது. ஆனால் நம்முடைய மக்கள் தொகையின் அடிப்படையில் பார்த்தால் இதிலே நம்முடைய மாநிலத்திற்கு அளித்திருக்கின்ற எண்ணிக்கை போதாது. இன்னும் கொஞ்ச நாள் போனால், பெருகிவரும் மக்கள் தொகையைப் பார்த்தால் மேலும் இதைத் திருத்த வேண்டிய அவசியம் ஏற்படலாம். ஆகவே இப்போதே 525 என்று உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு ஒரு சீலிங் வைப்பது சரியாக இருக்குமா என்பதை மத்திய அரசு மட்டுமல்ல; மாநில அரசும் யோசித்துப் பார்க்க வேண்டும்.

முன்னால் தமிழ்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 41-ஆக இருந்தது. அது 39-ஆகி, இப்போது 40-ஆகியிருக்கிறது. 40 பேர் என்பதை தமிழக சர்க்கார் ஒப்புக் கொள்கிறது என்று நினைக்கிறேன். எதெதற்கு எல்லாமோ கொடு, கொடு என்று போராடுகிறார்கள். 40 பேர் என்பதை 41 ஆக்க ஏன் போராடக்கூடாது? அதை ஏன் ஒப்புக்கொள்ள வேண்டும்? நமது தேவையை நாம் கேட்கவேண்டாமா? 'துணிக்கு ஏற்ற சட்டையை தைத்துக்கொள்வதா அல்லது சட்டைக்கு ஏற்ற அளவு துணியை எடுத்துக்கொள்வதா'; நீங்கள் செய்வதைப் பார்த்தால் துணிக்கு ஏற்ற சட்டையைத் தான் தைத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்வதைப்போல் இருக்கிறது. இந்தப் பிரச்சினையில் நீங்கள் மற்றப் பிரச்சினைகளை விட அதிகக் கவனம் செலுத்த வேண்டும்.

'ஃபேமிலி பிளானிங்' என்று சொல்லி, மக்கள் தொகை பெருக்கத்தைக் குறைத்ததற்காக நீங்கள் எங்களுக்குத் தரும் பரிசா இது என்று சொல்லி போராட வேண்டும். முக்கியமான இந்தப் பிரச்சனையை விட்டுவிட்டு வேறு எதெதற்கோ போராட்டம் என்று சொல்வதில் பிரயோஜனம் இல்லை. மத்திய அரசாங்கத்தின் திட்டத்தை நாம் நடைமுறைப்படுத்தியதால் மக்கள் உற்பத்தித்

தொகை இங்கே குறைந்தது. அதற்கு பரிசளிக்கும் வகையில் நமக்கு ஏதாவது செய்திருக்க வேண்டுமே தவிர, நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைத்திருக்கக்கூடாது. ஏன் அப்படிக் குறைத்தீர்கள் என்று கேட்டு நீங்கள் போராடியிருக்க வேண்டும். ஆனால் அதற்காக நீங்கள் போராடவில்லை. காங்கிரஸ் ஆட்சி காலத்தில் 41 உறுப்பினர்கள் இருந்தார்கள். உங்கள் ஆட்சியில் அந்த எண்ணிக்கை 39—இப்போது 40-ஆகியிருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: காங்கிரஸ் ஆட்சியில் 41 ஆக இருந்தது, தி.மு.க. ஆட்சியில் 39 ஆகிவிட்டது என்றார்கள். எப்போது 39 ஆயிற்று என்பதை அறிவிக்க விரும்புகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: இதை 41-ஆக ஆக்கவேண்டும் என்றுதான் சொல்கிறேன். We are entitled to 41.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: உண்மை தெரியாமல் தான் கேட்டேன். 41 என்பது 39-ஆக ஆனது எப்போது? காங்கிரஸ் ஆட்சியிலா? தி.மு.க. ஆட்சியிலா?

திருமதி த. ந. அனந்தநாயகி: அந்தக் குறிப்பை எல்லாம் நீங்கள்தான் வைத்திருக்கிறீர்களே சொல்லுங்களேன். நான் 41 ஆக வேண்டும் என்கிறேன். Now 500 is increased by another 25. 25 சீட்டை எல்லா மாநிலங்களுக்கும் கொடுக்கப்போகிறார்கள். ஒரு சீட் கூட, 41-ஆக நாம் வாங்கவேண்டும். மக்களுடைய பிரதிநிதிகளாகத்தான் எம்.எல்.ஏ.க்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் இருக்கிறார்கள். கண்ணுக்குத் தெரியாத இடத்தைக் கொடுத்து பாராளுமன்றத்திற்கு நில் என்றால் தம்முடைய தொகுதி மக்களைக்கூட ஒரு முறை அவர்களால் பார்க்க முடிவதில்லை. அந்தப் பாராளுமன்றத் தொகுதியில் உள்ள 6 எம்.எல்.ஏ.க்களைத்தான் பார்த்துவிட்டு வருகிறார்கள். வீடுவீடாகச் சென்று மக்களைப் பார்க்கவேண்டும் என்றால் பாதி ஆயுசு ஆகிவிடும்போல இருக்கிறது. இன்றைக்கு சட்டசபைத் தொகுதியையே எடுத்துக் கொண்டால் ஒரு லட்சத்து முப்பதாயிரம், ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் என்பதாக வாக்காளர் பெருமக்கள் இருக்கிறார்கள்.

மக்களுடைய கருத்துக்கள் பாராளுமன்றத்தில் எதிரொலிக்க வேண்டுமென்றால் அதிகமான பிரதிநிதித்துவம் இருக்கவேண்டுமே தவிர 40-க்கு நீங்கள் ஒத்துக்கொண்டிருக்கக் கூடாது.

திரு. இராம அரங்கண்ணல்: அப்படியானால் இந்தத் தீர்மானத்தை எதிர்த்து நாம் போராடவேண்டுமென்பது அம்மையாரின் கருத்தா என்று கேட்கவிரும்புகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தீர்மானத்தை எதிர்த்தா போராடச் சொல்கிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரை 41 இடங்கள் கொடுத்தாகவேண்டும், அதைப் பெறுவதற்குப் போராடச் சொல்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மொத்தம் 525 இடங்கள் என்பதாகக் கொண்டால் நமக்கு 39½ இடங்கள் 40 இடங்கள்தான் கிடைக்கின்றன. இதை ஒப்புக்கொள்ள முடியாது என்றால் எதிர்த்துப் போராடுவதாகத்தான் அர்த்தம். அப்படி ஒரு தீர்மானம் கொண்டுவந்தால் இந்திய தேசியக் காங்கிரசைச் சேர்ந்த நீங்கள் எல்லோரும் ஆதரிக்கிறீர்களா?

திருமதி த. ந. அனந்தநாயகி: முதலில் உங்கள் கட்சியியைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் ஆதரிக்கிறார்களா என்று தெரிந்து கொள்ளுங்கள். நீங்கள் உங்கள் சுயபலத்தை வைத்துப் பாருங்கள். எங்கள் தைரியத்திலா நீங்கள் ஆட்சி நடத்துகிறீர்கள்? எதற்காக எங்கள் ஆலோசனையைக் கேட்பது? 41 என்ற எண்ணிக்கைக்குக் குறையக்கூடாது என்று நீங்கள் போராடுங்களேன். நம்முடைய நாடு மிகப் பெரிய நாடு--கோடிக்கணக்கான மக்கள் இருக்கிறார்கள். கோடிக்கணக்கான பிரச்சினைகள் இருக்கின்றன. எத்தனையோ பேர்களுடைய பிரச்சினை கவனத்திற்கு வராமலே போய்க்கொண்டிருக்கிறது. ஆக, பாராளுமன்றத் தொகுதிகளை அதிகப்படுத்த வேண்டிய நிலையில் இருக்கிறோமே தவிர குறைந்துவிட இடமளிக்கக் கூடாது. இன்னும் சட்டமன்றத் தொகுதியை எடுத்துக்கொண்டாலும் 50 ஆயிரம் வாக்காளர்களுக்கு ஒரு பிரதிநிதி என்கிற முறையில் சட்டமன்றத் தொகுதிகள் சீரமைக்கப்பட்டாகவேண்டும். இப்போது அபேட்ச

கருக்கு தொகுதியின் வடக்கு எது, தெற்கு எது என்றே தெரியாத நிலை இருக்கிறது. அதுவும் 30 நாளில் தேர்தலை நடத்தச் சொல்கிருர்கள். அதற்குள்ளாக தொகுதியில் உள்ள மக்களது குறைகள் என்ன என்றே தெரிந்துகொள்ள வாய்ப்பு இருக்காது. அந்த 30 நாட்களுக்குள்ளேயே உயிர் போய்விடுகிறது. அதை 60 நாளாக்கினுல் சவம்தான் இருக்கும். சில இடங்களில் தொகுதி அங்கங்கே பிரிந்திருக்கிறது. 2 ப்ளாக் ஒரு தொகுதி என்றுல் 2¼ ப்ளாக் உள்ள தொகுதி, 2½ ப்ளாக் உள்ள தொகுதிகள் இருக்கின்றன. 50 கிராமங்கள் உள்ள ப்ளாக்கும் இருக்கிறது. 5 கிராமங்கள் உள்ள ப்ளாக்கும் இருக்கிறது. இதிலே இந்த இடத்தை அதில் சேர், அந்த இடத்தை இதில் கொண்டுவந்து சேர் என்பதாக அரசியல்வாதிகள் வேறு தங்களுடைய வெற்றிவாய்ப்புகளுக்கேற்ப பிரித்துவிடுகிற செல்வாக்கு இருக்கிறது. இதன் காரணமாக பல குழப்பங்கள் ஏற்படுகின்றன. ஆக சட்டசபைத் தொகுதிகளையே நாம் முதலில் இன்னவாறுதான் பிரிப்பது என்கிற வரையறையை ஏற்படுத்தியாகவேண்டும். பாராளுமன்றத் தொகுதியை எடுத்துக் கொண்டால் 10 லட்சம் வாக்காளர்கள் வருகிருர்கள். 10 லட்சம் வாக்காளர்களுக்கு ஒரு பிரதிநிதி என்றுல் மக்களுடைய குறைகளை எப்படி அறிந்து எடுத்துச்சொல்ல முடியும்? என்னமோ நானும் பாராளுமன்ற உறுப்பினராகப் போகிறேன், சட்டமன்ற உறுப்பினராகப் போகிறேன் என்று போகலாமே தவிர நல்லமுறையில் செயலாற்ற முடியாது. என் தொகுதியையும், சிப் மினிஸ்டர் தொகுதியையும் எடுத்துக்கொண்டால் வாக்காளர்கள் 1½ லட்சத்திற்கும் மேல் போகிருர்கள். 75 ஆயிரத்திற்கு மேல் போகாது தொகுதிகளைச் சுருக்கவேண்டும். அப்படிச் சுருக்கி உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த முயற்சி எடுக்க வேண்டும்.

I say this because we are representing the dumb millions of the land. They should be more representation. Why should we shut the door?

அதேபோன்று ராஜ்யசபாவில்—கவுன்சில் ஆப் ஸ்டேட்ஸ்-இல்-எல்லா ஸ்டேட்டுக்கும் ஈக்வலாக 2 சீட் என்பதாகக் கொடுத்துவிடலாம் என்பதாக திரு. கந்தப்பன் சொன்னுர்கள். அது நியாயம்

இல்லை. மக்களுடைய எண்ணிக்கைக்கேற்பத்தான் பிரதிநிதிகள் இருக்க வேண்டும்.

According to size, it must have representation. Uttar Pradesh with 54 districts cannot have the same representation as Tamil Nadu. இல்லையென்றுல் அங்கே பிரச்னைகளை எப்படிச் சொல்வது? வேண்டுமென்றுல் உத்தரபிரதேசத்திற்கும் 2 சீட், தமிழகத்திற்கும் 2 சீட் தான் என்று சொல்லலாம். அது நியாயம் இல்லை. எவ்வளவுக்கெவ்வளவு அதிகமான உறுப்பினர்கள் இருக்கிருர்களோ அதை வரவேற்கவேண்டும்.

திரு. செ. கந்தப்பன் : The hon. Member is yielding. That is why I am raising this point. அரசியல் நிர்ணயசபையிலேயே இது விவாதிக்கப்பட்டு மக்களுடைய நேரிடைய பிரதிநிதிகள் அடங்கிய சபை லோக்சபா என்றும், மாநில உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்களால் மாநிலங்களை இணைத்து—மாநிலங்களை ஒருமித்து—சமமாக வைத்து நடக்கிற சபை கவுன்சில் ஆப் ஸ்டேட்ஸ் என்றும் வைத்திருக்கிருர்கள். மாநிலங்களது உரிமையை ஒருமித்து சமமாகக் கருதி செயல்படுகிற சபையில் மாநிலங்களுக்கான பிரதிநிதிகள் சமமாக இருக்க வேண்டும். மக்களுடைய எண்ணிக்கைக்கேற்ப இடங்கள் அமைந்தது லோக் சபா. ராஜ்ய சபா என்பது கவுன்சில் ஆப் ஸ்டேட்ஸ் தான். இங்கே எல்லா மாநிலங்களுக்கும் சமமான பிரதிநிதித்துவம் இருந்தால் என்ன? இது உங்களுக்கே நன்ருகத் தெரியும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : விளக்கத்திற்கு ரொம்ப நன்றி. மக்கள் பிரதிநிதிகள் லோக் சபாவில் இருக்கிருர்கள். ராஜ்ய சபாவிலும் மாநில மக்கள் தொகைக்கேற்ப பிரதிநிதிகள் ஏன் இருக்கக் கூடாது? தமிழகத்திற்கும் 2 பேர், உத்தரப் பிரதேசத்திற்கும் 2 பேர் என்பது நியாயமாகுமா? உத்தரப் பிரதேசத்தை எடுத்துக்கொண்டால் 54 மாவட்டங்கள் இருக்கின்றன. அவர்களுக்கும் 2 சீட் தான் என்றுல் It is sheer absurdity நம் நாட்டின் நிலை என்ன, இங்குள்ள மக்களின் நிலை என்ன என்று பார்த்துச் செய்யவேண்டும்.

[1973 ஆகஸ்ட் 4

திரு. என். கணபதி : ஐக்கியநாட்டுச் சபையில் சிலோனுக்கும் ஒரு சீட் தான், இந்தியாவுக்கும் ஒரு சீட் தான். மக்கள் தொகை, பரப்பளவு பார்த்து அங்கே இடம் ஒதுக்குவது இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : ஐக்கியநாட்டுச் சபையோடு ஒப்பிடுகிற அளவுக்கு நம் நாடு இல்லை. நம் நாட்டிலுள்ள நிலைமைகளைப் பார்த்துத்தான் செய்ய வேண்டும். இருப்பதைக் குறைக்கக்கூடிய அளவுக்கு மாநிலத்திற்கு இரண்டு என்று சொல்லக்கூடிய அளவிற்கு அது சிறந்த யோசனை அல்ல. காரணம், நம் நாட்டு சூழ்நிலை அப்படி. நம்நாட்டு சூழ்நிலைகளுக்கு அது சரியல்லவென்று சொல்கிறேனே தவிர . . .

திரு. என். கணபதி : ஐக்கிய நாடுகள் சபை அளவுக்கு இங்கே உயர்வோம் என்றுதான் நாங்கள் கேட்கிறோமே அல்லாமல் வேறொன்றும் அல்ல.

திருமதி த. ந. அனந்தநாயகி : உங்கள் கற்பனையில் வேண்டுமானால் அதை உயர்த்துங்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : ஒருவருக்கொருவர் கருத்துக்களை இப்படிச் சொல்லிக் கொண்டே போனால் எப்படி? அடுத்து, திரு. வெங்கடசாமி பேசுவார்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், நான் முடிக்கவே இல்லை. என் டைமை அவர்கள் எடுத்துக்கொண்டார்கள்.

THIRU B. VENKATASWAMY : Mr. Chairman, Sir, I thank you for giving me an opportunity to offer a few remarks on the 31st Constitution Amendment Bill, now before the House. The Hon. lady Member had just now said that because of our successful implementation of the national progamme, namely, family planning we are losing one seat. It is our right to see that we implement the national programme of family planning. But at the same time it is the duty of the Centre to see that we are given proper representation and not lose some representation because of successful implementation of family planning. I think the Hon.

1973 ஆகஸ்ட் 4] [Thiru B. Venkataswamy]

Chief Minister would fight with the Centre and get us one more seat. Instead of Tamil Nadu getting only 40 as per the present measure, we must get 41 seats.

Secondly, I do not know who are the Members of the Delimitation Committee. Last time, I met the Committee when I was representing Hosur. I mean ten years back. At that time unnecessary things and details were discussed. What I say is that the local people, the local M.L.As. have to be consulted if any deviation is made in Assembly or Parliamentary constituency. Sometimes, due to political reasons some constituency may be divided so that some political party may win. But that kind of thing should not take place without consultation of the local people. The final decision for allotting seats should be taken on an impartial basis.

Finally, I request the Hon. Chief Minister to fight with the Centre and get us one more seat for successfully implementing the family planning programme. Thank you.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த அரசியல் சட்ட 31-வது திருத்த மசோதாவின் மீது ஒரு சில கருத்துக்களை எங்கள் கட்சியின் சார்பாக கூற விரும்புகிறேன். இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டின் காரணமாகத் தான் நம்முடைய பாராளுமன்ற எண்ணிக்கைகள் குறைந்திருக்கின்றன என்று சொன்னால் மற்ற மாநிலங்கள் எந்த அளவுக்கு நிதானம் காட்டுகின்றனவோ அதே நிதானத்தை நம் மாநிலமும் காட்ட வேண்டும். இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டில் இத்தனை தீவிரத்தை நமது மாநிலம் மட்டுமே காட்ட வேண்டிய அவசியம் என்ன என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய மாண்புமிகு திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் பேசும்பொழுது தொகுதிகள் ஜாதிகளினுடைய அடிப்படையிலே பிரிக்கப்படக் கூடாது என்று கூறினார்கள். நானும் அதை வரவேற்கிறேன். அதே நோக்கிலே ஒரு தொகுதியிலே இருக்கிற குறிப்பிட்ட ஜாதியினருக்கு வெற்றி வாய்ப்பிருக்கிறது என்ற காரணத்தினாலே அதை பல ஆண்டுகளாக ஆக்கிய கொடுமைகளும் மாற்றப்பட வேண்டுமென்று நான் இங்கே கூற ஆசைப்படுகிறேன். உதாரணமாக, **கீழக்கரையும்,**

இராமநாதபுரமும் முஸ்லிம்கள் அதிகமாக வாழக்கூடிய பகுதிகள் முஸ்லிம் வேட்பாளர்கள் வெற்றிபெற வாய்ப்புள்ள தொகுதி. அப்பொழுது ஆட்சியிலிருந்த அரசாங்கத்தினர் அமைத்த கமிட்டியினர் அவற்றை இரண்டு பகுதிகளாகப் பிரித்து, எப்பகுதியிலும் முஸ்லிம்கள் வெற்றிபெற முடியாத நிலைமை ஏற்பட்டுவிட்டது என்று சொல்ல ஆசைப்படுகிறேன்

அதேபோல், சட்டமன்றத் தொகுதியாகிய ஆம்பூர் தொகுதியில் முஸ்லிம்கள் வெற்றி பெற வாய்ப்பிருந்தபோதிலும், அம்மாதிரி எந்தத் தொகுதியிலே முஸ்லிம் வகுப்பைச் சேர்ந்தவர் தேர்தலில் நின்றால் வெற்றிபெற வாய்ப்பிருக்கிறதோ, அத்தொகுதிகள் ரிசர்வ் தொகுதிகளாக ஆக்கப்பட்டிருக்கின்றன என்பதை நாம் காண்கின்றோம்.

சிறுபான்மையோர் ஜனநாயகத்தில் வெற்றி பெறவேண்டுமென்று சொன்னல், அவர்கள் தங்கள் சொந்த பலத்தை நம்பி, உண்மைப் பிரதிநிதிகளாக சட்டமன்றங்களிலும் நாடாளுமன்றங்களிலும் இடம்பெறுகின்ற வகையில், இந்நாட்டின் தொகுதி அமைப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்று நான் வற்புறுத்திக் கூற ஆசைப்படுகிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் கே. டி. கே. தங்கமணி அவர்கள் ப்ரப்போர்ஷனல் ரெப்ரசன்டேஷனைப் பற்றி பேசியதைக் குறித்து 'நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். காரணம், நாடு விடுதலை அடைந்த நாளிலிருந்து கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் அவர்கள், மக்களுடைய, சிறுபான்மையோருடைய உண்மையான பிரதிநிதிகள் நாடாளுமன்றங்களிலும் சட்டமன்றங்களிலும் இடம் பெற வேண்டுமென்றால், ப்ரப்போர்ஷனல் ரெப்ரசன்டேஷன் இருந்தால் மட்டுமே சாத்தியம் என்று கூறி வந்தார்கள்.

தனித் தொகுதிகள் ஒதுக்கப்பட்டுவிட்ட காரணத்திலும், இப்பொழுதுள்ள அரசினர் சிந்தனையின் அடிப்படையிலே மீண்டும் இம்மாதிரி தனித் தொகுதி கொடுக்க முடியாத நிலை இருப்பதாலும், இந்த ப்ரப்போர்ஷனல் ரெப்ரசன்டேஷன் மூலமாகத்தான் சிறுபான்மையோருக்கும் பிரதிநிதித்துவம்

அளிப்பது சாத்தியம் என்று வற்புறுத்தி இருக்கிறார்கள். ஆகவே, எங்கள் கொள்கையை ஒவ்வொரு கட்சியாக ஏற்றுக்கொள்வதைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறோம். அந்த நன்னாளை எதிர்பார்க்கிறோம். எல்லாக் கட்சிகளும், பெரிய வெற்றிபெற முடியாத சிறிய கட்சிகளும் வாய்ப்பு பெறுகின்ற வகையில், ப்ரப்போர்ஷனல் ரெப்ரசன்டேஷன் முறையில் தேர்தல் நடத்தப்படும் நன்னாளை நான் எதிர்பார்த்தவனாக இருக்கிறேன்.

ராஜ்ய சபா, மாநிலங்கள் கூட்டு அவையாக இருக்கவேண்டுமென்று சொன்னார்கள். என்னுடைய உள்ளத்தில் ஒரு எண்ணம் உதயம் ஆகிறது. சிறுபான்மையோரைக் காப்பாற்ற வேண்டுமென்ற முறையில், ராஜ்ய சபா, லோக் சபா இருப்பதைப்போல் 'மைனாரிட்டி சபா' என்றுகூட, மூன்றாவது சபையை ஏற்படுத்தி, அதை ஒவ்வொரு சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் மதத்தின் அடிப்படையிலே பிரதிநிதித்துவம் வகிக்கக்கூடிய வகையில், மத சம்பந்தப்பட்ட சட்டங்கள் அந்த சபையில் நிறைவேறினால் தான இந்த நாட்டில் சட்டமாக ஆகும் என்ற அடிப்படையிலே மூன்றாவது சபையை ஏற்படுத்தினால் நல்லது என்பது என்னுடைய கருத்தாகும். தற்பொழுது உணவுப் பஞ்சம் என்று கலாட்டா ஆரம்பித்தால்கூட சிறுபான்மையோர் கடைகள் கொள்ளை அடிக்கப்படக்கூடிய, நாசமான காட்சியை நாம் பார்க்கிறோம். அது ஏன் என்று கேட்கப்படக்கூட முடியாத நிலையை நாடாளுமன்றங்களிலே நாம் பார்க்கிறோம். ஆகவே, சிறுபான்மையோர் மன நிம்மதியையும், அவர்களுடைய பிரதிநிதிகள் சட்டமன்றங்களிலேயும் நாடாளுமன்றங்களிலேயும் இடம் பெறுகிறார்கள் என்ற அளவிலும் வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென்று கேட்டு நான் இத்துடன் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்த முக்கியமான திருத்தங்களிலே நான் என்னுடைய கட்சியின் சார்பாக ஓரிரு கருத்துக்களைக் கூறுவதற்காக முற்படுகிறேன். மிகப் பெரிய ஜனநாயக நாடாக இருக்கிற நம்முடைய நாட்டிலே இந்த அரசியல் அமைப்புச் சட்டமானது எப்படி திருத்தப்பட வேண்டும், பாராளுமன்ற உறுப்பினர்களது எண்ணிக்கையை எப்படி அதிகரிக்கவேண்டுமென்ற கருத்திற்கேற்ப இந்தச் சட்ட

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1973 ஆகஸ்ட் 4

மானது திருத்தி அமைக்கப்பட்டது. இங்கிலாந்து தேசத்திலே 600 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். பிரான்ஸ் தேசத்திலே 594 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இப்படி மேலைநாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிகப் பெரிய ஜனநாயக நாடாக இருக்கிற இங்கு எண்ணிக்கையின் அடிப்படையிலே, ஜனத்தொகையின் அடிப்படையிலே நாம் அதிகமாக இருக்கிற காரணத்தினாலே ஏறத்தாழ இப்பொழுது 525 ஆக இருப்பதை உயர்த்தவேண்டுமென்று சட்டங்கள் கொண்டுவரப் பட்டிருக்கின்றன. இப்பொழுது இருக்கிற அமைப்புப்படி 500 டெரிட்டோரியல் கான்ஸ்டிடுவன்சிஸ், 25 சீட்டுகள் யூனியன் டெரிட்டரிஸ், அதற்குப் பிறகு 1971-லே, North-Eastern Areas Reorganisation Act- -படி 6 என்றும் இப்படி பல மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. பொதுவாக, இந்திய பாராளுமன்றத்திலே இவ்வளவு எண்ணிக்கையை வைத்துக்கொண்டு அது ஒரு அரசியல் அரங்கமாக வேலை செய்ய முடியுமா என்று ஐயப்பாடுகூட இன்று மக்கள் மனதிலே ஏற்பட்டிருக்கிறது. நான் தனிப்பட்ட முறையிலே ஒரு கருத்தை கூற விரும்புகிறேன். அது என்னவென்றால் ராஜ்ய சபா தேவையில்லை, லோக் சபா மட்டும்தான் தேவை என்ற கருத்தை நான் வலியுறுத்த விரும்புகிறேன். ஏனென்றால் இந்த ராஜ்ய சபாவானது, மேலவையானது இந்த நாட்டுக்குத் தேவையில்லை. (குறுக்கீடு) இங்கும் அதுமாதிரியான மேலவை தேவையில்லையென்ற கருத்தினை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

ஒருவேளை, இங்கிலாந்து தேசத்தின் அமைப்பைக் காட்டி, அங்கு House of Lords இருப்பதுபோல், நமக்கும் ஒரு மேலவை வேண்டும் அல்லது அமெரிக்க நாட்டிலே இருப்பதை போல் 'செனட்' நமக்கும் வேண்டுமென்று பலரும் நினைக்கக் கூடும். அமெரிக்காவில் இருக்கிற செனட்டானது உலகத்திலேயே அதிக அதிகாரம் படைத்த அவையாக இருக்கிறது என்று நிபுணர்கள் கூறுகிறார்கள்.

'It is the most powerful upper House in the whole world'.

என்று ஆங்கிலத்தில் கூறியிருக்கிறார்கள். ஆனால், நமது மேலவையைப் பொறுத்த அளவிலே அவர்களுக்கு பிரதானமாகக் கொடுக்கப்பட்டிருப்பது ஒரு சில அதிகாரங்கள் தான். ஆதலால்

1973 ஆகஸ்ட் 4] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

லோக் சபா மாத்திரம் போதும் என்ற முறையிலே ஒரே ஒரு அவையை மட்டும் வைத்துக்கொண்டு அதன் எண்ணிக்கையை இன்னும் கூட்டுவது சாலச் சிறந்ததாக இருக்கும் என்ற யோசனையைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அது ஏன் பொருத்தமாக இருக்கும் என்று சொன்னால் மக்களோடு அதிகமாகத் தொடர்புடையவர்கள் இந்த அவையிலே அதிகமாக இருந்தால்தான் மக்களுடைய குரலை அதிகமாக அங்கே அவர்கள் பிரதிபலிக்க முடியும் என்ற கருத்தையும் நான் இங்கே வைக்க விரும்புகிறேன். இந்தத் திருத்தமானது எப்படி நடக்க வேண்டும், அதற்கு என்ன சட்டதிட்டங்கள் இருக்கின்றன என்பது எல்லாம் நமக்குத் தெரியும். தேர்தல் கமிஷன் இருக்கிறது. அவர்களுடைய சிபார்சு என்னவென்றால் பாராளுமன்றத்திலே 570 உறுப்பினர்கள் நியமனம் பெற வேண்டுமென்று கூறினார்கள். முன்பு தேர்தல் கமிஷனராக இருந்த திரு. எஸ். பி. சென்வர்மா அவர்கள் அந்தப் பரிந்துரையைத்தான் வழங்கி இருந்தார்கள். என்னுடைய கருத்து என்னவென்றால் ராஜ்ய சபாவை எடுத்துவிட்டால் லோக் சபாவிலே உள்ள எண்ணிக்கையை அதிகமாக ஆக்க முடியும் என்பதுதான்.

இப்பொழுது உத்திரப் பிரதேசம்தான் நம்மை ஆண்டு கொண்டிருக்கிறது என்ற முறையிலேதான் சொல்லவேண்டும். ஏனென்றால் உத்திரப்பிரதேசம், பீகார் போன்ற மாநிலங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள்தான் அங்கே பெரும்பான்மையாக இருக்கிறார்கள். முன்பு ஒரு தடவை பாராளுமன்றத்திலே எஸ். பி. முகர்ஜி அவர்கள் 'India that is Bharath, that is U.P.' என்று சொல்லக்கூடிய அளவிற்கு அவர்கள்தான் ஆட்சியைக் கைப்பற்றியிருக்கிறார்கள் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அது நாளடைவிலே உண்மையாக இருக்கிறது. நம்முடைய பிரதம அமைச்சரைப் பார்த்தால், உத்திர பிரதேச மாநிலத்தைச் சேர்ந்தவர்தான் பிரதம அமைச்சராக வரக்கூடிய நிலைமை இருக்கிறது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பிரிவினை மனப்பான்மை, குரோத மனப்பான்மை வர வேண்டுமென்று நான் சொல்லவில்லை. உத்திரப் பிரதேச மாநிலம் பெரிதாக இருப்பதால் அங்கேயுள்ளவர்கள்தான் பாராளு

மன்றத்திலே அதிகமான எண்ணிக்கையிலே இருப்பதால் அந்த மாநிலத்தைச் சேர்ந்தவர் பிரதம அமைச்சராக வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இந்தக் கருத்தை பல இடங்களிலே பலரும் கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

தேர்தல் முறையானது எப்படி இருக்கவேண்டும், ப்ரப்போர் ஷனல் ரெப்ரசன்டேஷன் வேண்டுமா என்பதைப் பற்றியெல்லாம் இங்கே கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள். இதைப்பற்றி நல்ல முறையிலே ஆய்வு செய்யவேண்டும். மேல் நாடுகளிலே ஒன்றிரண்டு கட்சிகள்தான் இருக்கின்றன. ஆனால் நம்முடைய நாட்டிலே பல கட்சிகள் இருக்கின்றன. ப்ரப்போர்ஷனல் ரெப்ரசன்டேஷன் வைத்தால் என்ன முறையிலே இருக்கும் என்பதைப் பார்த்து, அதைப்பற்றி பலரும் வலியுறுத்திக் கொண்டிருப்பதால், ஆர அமர சிந்தித்து ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆர்டிக்கிள் 81-ன்படி பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. மக்கள் தொகை அடிப்படையிலே பத்து வருடங்களுக்கொரு முறை திருத்தியமைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. Delimitation Act of 1972 வந்திருக்கிறது. ஆகவே டீலிமிட்டேஷன் செய்யவேண்டுமென்ற நிர்ப்பந்த நிலைமையிலே நாம் இருக்கிறோம். டீலிமிட்டேஷன் செய்யும்பொழுது பல கருத்துக்களை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். இன்னும் பல உறுப்பினர்களை மாநிலத்திலே சேர்த்துக்கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. டீலிமிட்டேஷன் செய்யும்பொழுது தாலுக்கா எல்லை அல்லது ரெவின்யூ எல்லை இவற்றை வரையறையாக வைத்துக்கொள்ளவேண்டும்.

It should be co-terminus with the revenue boundaries. அப்படியில்லாமல் ஏதோ ஒரு சில நபருக்காக வேண்டி தொகுதியை சின்னஞ்சிறியதாக ஆக்கவோ அல்லது பெரியதாக ஆக்கவோ கூடாது. பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்களோடு தொடர்பு வைத்துக்கொள்வதற்கு கஷ்டமாக இருக்கிறது. கிட்டத் தட்ட 11 லட்சம் மக்கள் இருக்கக்கூடிய தொகுதியாக ஒரு பாராளு மன்றத் தொகுதி இருக்கிறது. இந்த நிலைமையில் உறுப்பினர்கள்

மக்களோடு தொடர்புகொள்வது கடினமாக இருக்கும். இதை மாற்றியமைத்துக்கொள்ளக்கூடிய முறையிலே சிந்திக்கவேண்டும். பொதுவாக இந்தச் சட்டம் வரவேற்கத் தக்கதாக இருந்தாலும் நம் ராஜ்யங்களில் பெரிய அந்தஸ்து, சிறிய அந்தஸ்து என்று சொல்லக்கூடிய முறையிலே உணர்வு இருக்கிறது. இப்பொழுது நாம் பார்த்தால் உத்திரப் பிரதேசம் பெரிய ஸ்டேட் ஆக இருக் கிறது. ஆனால் கிழக்குப் பகுதியிலே சின்னஞ்சிறு ராஜ்யங்கள் இருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால் அஸ்ஸாமிற்குப் பக்கத்தில் சிறிய பகுதிகள் இருக்கின்றன. அவர்களுடைய பிரதிநிதித்துவம் பாதிக்காத வகையிலே 330-வது அரசியலமைப்பு. பிரிவு வழிசெய்தாலும் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்பொழுது மாநிலங்களுக்கு இடையே இருக்கின்ற மாச்சரியங்களைப் போக்குவதற்கு வழிவகைகள் செய்ய வேண்டும்.

இந்தச் சட்டத்தின்மூலம் இப்பொழுது இருக்கிற 39 உறுப்பினர்கள் என்ற நிலைமை நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் 41 ஆக உயரப்போகிறது என்று கூறப்படுகிறது. பாராளுமன்றத்திலே எத்தனை உறுப்பினர்கள் இருக்கவேண்டும் என்பதை மையமாக வைத்துக்கொண்டு இப்படிப்பட்ட சீரமைப்பு நடக்கவேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அரசியலமைப்புச் சட்டத்திற்குத் திருத்தமாகக் கொண்டுவரப்பட்டுள்ள 31-வது திருத்த மசோதாவிற்கு ஆதரவு தெரிவிக்கவேண்டுமென்ற முறையிலே கொண்டுவரப்பட்டுள்ள தீர்மானத்தையொட்டி மாண்புமிகு உறுப்பினர்கள், எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை வழங்கி இருக்கிறார்கள்.

இதிலே இருக்கின்ற ஒரு முக்கியமான நோக்கம் 31-வது திருத்த மசோதாவை இந்தமன்றம் ஏற்றுக்கொள்கிறதா இல்லையா என்பதுதான் முடிவு செய்யவேண்டிய ஒன்றாக இருக்கிறது. 31-வது திருத்த மசோதா நாடாளுமன்றத்தினுடைய மக்களவை மூலமாகவும் மாநிலங்களவை மூலமாகவும் நிறைவேற்றப்பட்டு இந்தியாவினுடைய பாதி மாநிலங்களின் சட்டப் பேரவை

களினால் ஒப்புதல் அளிக்கப்பட்டால்தான் அது நிறைவேற்றப் பட்டதாகக் கொள்ளமுடியும் என்ற அந்த முறையிலேதான் இது எல்லா மாநிலங்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. அதையொட்டி இந்த மாநிலத்தினுடைய ஒப்புதலைப் பெறுவதற்காகவும் இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. இங்கேயுள்ள உறுப்பினர்கள் எல்லாம் அதை ஏற்றுக்கொண்டாலும் அதனையொட்டி அவர்கள் பல்வேறு கருத்துக்களையெல்லாம் வழங்கியிருக்கிறார்கள். பாராளு மன்றத்தில் 500 இடங்களாக இருந்தது 525 இடங்களாக உயர்த்தப்பட வேண்டுமென்பதுதான் இந்த 31-வது திருத்தச் சட்டத்தினுடைய நோக்கமாகும்.

நான் என்னுடைய முன்னுரையிலேயே எடுத்துத் தெரிவித்த படி—அவர்கள் நம்முடைய மாநிலத்தினுடைய கருத்தை அறிவிக்க வேண்டுமென்று கேட்டபொழுது—550 ஆக உயர்த்தலாம் என்று தான் மாநில அரசு கருத்தைத் தெரிவித்தது. நாம் எடுத்துத் தெரிவித்தபடி 550 இடங்கள் என்ற அளவிற்கு இந்திய அரசும் தேர்தல் கமிஷனும் எடுத்துக்கொண்டிருக்குமானால் நம்முடைய மாநிலத்திற்கு 42 இடங்கள் வரும். ஆனால் இந்திய அரசினுடைய கருத்து மாநிலங்களுக்கு இதனால் எந்த அளவிற்கும் எண்ணிக்கை குறையக்கூடாது, எந்த மாநிலமும் ஒரு இடத்தையும் இழக்காமல் இருக்கவேண்டும் என்ற அடிப்படையில்—அதாவது 39 ஆக இருந்தால் அது 38 ஆகிவிடக்கூடாது, இன்னொரு மாநிலத்தில் 42 ஆக இருப்பது 41 ஆகக் குறைந்துவிடக் கூடாது என்ற முறையில்—ஆராய்ந்து 525 என்று உயர்த்தினால்தான் எந்த மாநிலமும் பாதிக்கப்படாமல் இருக்கும் என்ற அளவிற்கு நிர்ணயித்து மக்கள் அவை, மாநிலங்கள் அவை இரண்டிலும் நிறைவேற்றப்பட்டு சட்டப் பேரவைக்கு அனுப்பி வைத்திருக் கிறார்கள். நம்முடைய பரிந்துரையிலே நாம் 550 ஆக உயர்த்த வேண்டுமென்றுதான் கூறியிருந்தோம்.

இந்தத் தீர்மானத்தின் மீது பேசும்பொழுது பல்வேறு கருத்துக்களை உறுப்பினர்கள் வழங்கியிருக்கிறார்கள். அவற்றை யெல்லாம் நடைமுறைப்படுத்துவதற்கு இந்த மசோதா எந்த வகையிலும் உதவிசெய்யாது. ராஜ்ய சபாவை எடுத்துவிட வேண்டும் என்று சொன்னால் அதை இந்த மசோதாமூலம் செய்ய

முடியாது. லோக் சபா உறுப்பினர்களின் எண்ணிக்கையை 525 ஆக உயர்த்துவதுபற்றிமட்டும்தான் இந்த மசோதா, அந்த அளவிற்குச் சொல்லப்படுகிற கருத்துக்கள்தான் நிறைவேற்றப் படக்கூடிய நிலையில் இருக்கும். மற்றையக் கருத்துக்களை மனதிலே வைத்துக்கொண்டு அவ்வப்பொழுது நிறைவேற்று வதற்கு வேண்டுமானால் அவை உறுதுணைபுரியலாமே தவிர, இந்த மசோதாவிற்குள்ளே அவை வராது.

எண்ணிக்கை குறைந்துவிட்டது, அதை 41 ஆக உயர்த்த வேண்டுமென்றும் அதற்காக போராட வேண்டுமென்றும் அம்மையார் அவர்கள் பேசும்பொழுது தெரிவித்தார்கள். சட்ட மன்றம், பாராளுமன்றம் இவற்றிற்கான தேர்தல்கள், இடங்களின் எண்ணிக்கை போன்றவற்றை இந்தியப் பேரரசும், தேர்தல் கமிஷனும்தான் ஏற்றுக்கொண்டிருக்கின்றன. தேர்தல்கள் நடத்து வது, அதற்கான வழிவகைகளைச் செய்வது, அதிலே சீர்செய்வது, செம்மைப்படுத்துவது எல்லா உரிமைகளையும் மத்திய அரசுதான் வைத்துக்கொண்டிருக்கிறது.

நாம் அவர்களிடத்திலே பரிந்துரை செய்யலாம். அவர்கள் அதற்தான முறைகளை வகுத்து அதன்படி வகுக்கிறார்கள். ஆகவே, அம்மையார் அவர்கள் போராட வேண்டுமென்று சொல்கிறார்கள், அப்படிப் போராட் வேண்டுமென்ற முறையிலேதான் அதிகமான இடத்தைப் பெற வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த இடத்தைப் பெறத் தேவையான வகையில், தேர்தலைப்பொறுத்து முடிவு கட்டவும், நிறைவு கட்டவும்தான் மாநில சுயாட்சி வேண்டு மென்று நாங்கள் கேட்கிறோம். அதிகமான உரிமைகள் நமக்கு வந்தால் நாம் அவர்களைக் கேட்க வேண்டிய அவசியமில்லாமல் விரைவில் நாமே நிறைவேற்ற முடியும். இப்படிப்பட்டவைகளுக்கு மத்திய சர்க்காரைக் கேட்டு அவர்கள் எடுக்கும் முடிவுதான் முடிவே தவிர நாமாக முடிவெடுக்க முடியாது.

1951-ஆம் ஆண்டு மக்கள் தொகையின் அடிப்படையிலே வைக்க வேண்டுமென்று சொல்லியும், இரண்டு மூன்று முறை வற்புறுத் தியும் அதை மத்திய சர்க்கார் ஏற்கவில்லை. குடும்ப நலத் திட்டத் திற்கு ஊக்கம் தரும் முறையில் மத்திய அரசு முயன்று

கொண்டிருக்கிறது. 1950 ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. 1951 ஆம் ஆண்டு மக்கள் தொகையின் எண்ணிக்கையிலேயே, அந்த அடிப்படையிலேயே மாநிலங்கள் இடம் பெறும் என்று நிர்ணயிக்க வேண்டும். அப்படியிருந்தால் குடும்ப நலத்திட்டம் தைரியமாகவும், விரைவாகவும் உருப்படும். ஆனுல் அவ்வப்பொழுதுள்ள மக்கள் தொகையின் எண்ணிக்கைக் கேற்ப இடம் நிர்ணயிக்க வேண்டுமென்ருல் குடும்ப நலத் திட்டத்தை நல்லமுறையில் நிறைவேற்றும் மாநிலங்களுக்குக் குறைவான இடமும், நல்லமுறையில் நடத்தாமல் அலட்சியமாக இருக்கும் மாநிலங்களுக்கு அதிகமாகவும் கிடைக்கும் ஒரு அநீதி ஏற்படும். ஆகவே, அப்படி 1951 ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட இடங்கள் என்றிருந்தால் நமக்குக் குறையாது. ஆனுல் மக்கள் எண்ணிக்கையின் அடிப் படையில் என்று வந்ததால் 41 ஆக இருந்தது 39 ஆக மாறிற்று.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

1967-க்கு முன்னுலே அந்த முடிவு எடுத்து, 1967, 1971—தேர்தல் களிலே 39 இடங்கள் என்றுதான் வந்தது. இப்பொழுதுள்ள கணக்குப்படி, 1971 ஆம் ஆண்டு உள்ள மக்கள் தொகை 54,79,49,809 பேர் என்று கணக்கிட்டிருக்கிருர்கள். இதில் 8 யூனியன் டெரிட் டரீஸில் உள்ள 63,41,051 பேர்களைக் கழித்துவிட்டால் இந்தியாவின் மொத்த ஜனத் தொகை 54,16,08,758 ஆகும். 525 இடங்களாகப் பிரிப்பது என்ருல், ஒவ்வொரு தொகுதிக்கும், 'பாபுலேஷன் பர் சீட்' என்று வரும்பொழுது கிட்டத்தட்ட 10,31,635 என்று வருகிறது. அந்த அடிப்படையில் பார்க்கும்பொழுது, தமிழ் நாட்டில் மக்கள் எண்ணிக்கை 4,11,99,168 என்று 1971 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கணக்கின்படி பார்த் தால் தமிழ்நாட்டிற்கு 39.93 இடங்கள் என்று வரும்பொழுது, 39 இடங்களாக இருப்பது 40 ஆக உயரும். 550 என்று ஆக்கினுல் 42 இடங்கள்வரை வருவதற்கு வாய்ப்பிருக்கிறது. 550 தான் கேட்டோம், ஆனுல் 525 என்றுதான் இந்திய அரசு பாராளு மன்றத்தில் நிறைவேற்றி இந்தத் தீர்மானத்தை அனுப்பியிருக் கிறது. இதில் வேறு எந்தத் திருத்தத்தையும் கொடுக்க நமக்கு வழி யில்லை. ஆகவே, 525 என்பதை இப்பொழுது ஏற்றுக்கொள்வது

என்று இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேம். பலரும் ஏற்றுக்கொண்டிருக்கிருர்கள்.

விரைவில் 'ப்ரபோர்ஷனல் ரெப்ரசென்டேஷன்' வரவேண்டு மென்று சொன்னுர்கள். அந்தக் கருத்துக்கு முக்கியத்துவம் வரும் பொழுது அதை ஆராயலாம்.

மற்றும் ஒரு பாராளுமன்ற இடத்திற்கு எத்தனை சட்டமன்ற இடம் என்று பார்க்கும்பொழுது 5 இடங்கள் என்று இருந்தது, 1967 தேர்தலில் ஒரு பாராளுமன்ற இடத்திற்கு 6 சட்டமன்ற இடம் என்று வகுத்துக்கொண்டார்கள். சில மாநிலங்களில் 7 என்றே, 8 என்றே, 9 இடங்கள் என்றே ஒரு பாராளுமன்ற இடத்திற்கு வைத்திருக்கிருர்கள். அது அந்தந்த மாநிலத்தின் வசதி வாய்ப்புகள், நிலைமைகள், சூழ்நிலைகளைப் பொறுத்து அந்த இடம் நிர்ணயிக்கப்பட வேண்டியிருக்கிறது. எதையும் 'டீ-லிமிடேஷன்' என்று வரும்பொழுது, தொகுதி எல்லை வரையறை ஆணைக் குழு நிர்ணயிக்க வேண்டும். அந்தக் குழுவிற்கு பரிந்துரை செய்யலாம். அப்படி வரும்பொழுது இந்த மன்றத்தின் கருத்தை யறிந்து அதன் அடிப்படையிலே தொகுதி எல்லை வரையறை ஆணைக்குழுவிற்குப் பரிந்துரை செய்யலாம். ஆகவே, இப்பொழுதே ஒரு நாடாளுமன்ற இடத்திற்கு 6 சட்டமன்ற இடங்கள் என்று வைத்திருக்கிறேம். ஆகவே, 39 இடங்கள் என்பது 40 ஆக உயர்ந்தால் இன்னும் 6 சட்டமன்ற இடங்கள் அதிகமாகும். இந்த 6-ஐ 7 ஆக ஆக்கினுல் இந்த மன்றத்திலே நாம் நடத்த முடியாது. அதற்கென்று தனியாக . . .

திரு. கே. டி. கே. தங்கமணி : ஒரு நாடாளுமன்ற தொகுதிக்கு 6 சட்டமன்ற இடம் என்ற விதியை நாமே ஏற்படுத்த முடியும் அல்லவா? டீ-லிமிடேஷன் கமிட்டி 40 பார்லிமெண்ட் தொகுதி என்று பிரிக்கும்பொழுது ஒவ்வொரு பார்லிமெண்ட் தொகுதிக்கும் 7 சட்டமன்ற இடங்கள் என்று அமைக்க முடியுமா? இதுபற்றி அரசின் கருத்து என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : டீ-லிமிடேஷன் கமிட்டிக்கு நாம் பரிந்துரை செய்யலாம். அப்படிக் கருத்து தெரிவிக்க வேண்டிய அவசியம் வரும்பொழுது ஏழா, எட்டா, அல்லது ஆறு என்று முடிவு செய்யலாம்.

திரு. கே. ஏ. மதியழகன்: பொதுவாக மாநில அரசின் கருத்து தான் பெரிய கருத்தாகக் கருதப்படுகிறது. ஏனென்றால் மாநில அரசு 'அசோசியேட் மெம்பர்' என்று நினைக்கிறார்கள். ஏற்கெனவே அந்த வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய அரசு திட்டவட்டமாக ஆறு, ஏழா, அல்லது எட்டா என்று ஏற்கெனவே பரிந்துரை செய்திருக்கிறதா? அப்படிச் செய்ய வில்லையென்றால் அதைப்பற்றி யோசனை செய்து முடிவை வைத்திருக்கிறதா? ஏனென்றால், ஏற்கெனவே அந்த வேலைகள் துவங்கி விட்டன. டீ-லிமிடேஷன் கமிட்டிக்கு மெம்பர்கள் போட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். எங்களுக்கு ஒன்றும் தகவல் இல்லை. எந்தக் கட்சியின் மெம்பர்கள் இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. சபாநாயகர் மூலமாக 'அசோசியேட் மெம்பர்கள்' போடப்படுகிறது. யார் இந்த மன்றத்திலே அசோசியேட் மெம்பர்களாக இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. (குறுக்கீடு) நான் போடவில்லை.

THIRU R. PONNAPPA NADAR: The Speaker has the power to empanel the members. I do not know whether any such thing has been done. If the secretariat is aware of it, they can give the names of members.

திரு. கே. ஏ. மதியழகன்: அசோசியேட் மெம்பர்கள் என்று போடுவதே, சட்டமன்றத்தில் உள்ள பல்வேறு கட்சிக்காரர்கள் அவர்களுக்குத் துணை புரிவதற்காகப் போடுகிறார்கள். ஒவ்வொரு மாநிலத்திலேயிருந்தும் அதில் பணியாற்றியிருக்கிறார்கள். நான் எதிர்க்கட்சியிலே இருந்த நேரத்தில் அந்த மன்றத்திலே பணி புரிந்த அனுபவம் இருக்கிறது. 6 சட்டமன்றங்கள் இருக்கலாம் என்று திரு. பக்தவத்சலம் அவர்களின் அரசு அன்றைக்குச் சொல்லியது. அதுமாதிரி நம்முடைய அரசு ஏதாவது சொல்லி இருக்கிறதா? ஏதாவது முடிவெடுத்திருக்கிறதா? முடிவெடுக்கும் நேரத்தில் எங்கள் கருத்துக்களைச் சட்டமன்றத்திலே விவாதிக்க முடியாது மற்ற எதிர்க் கட்சிகளை கலந்துகொண்டு. சில மாநிலங்களில் உறுப்பினர்கள் அதிகமாகிக்கொண்டிருக்கிறார்கள். எனவே இந்த அரசுக்கு ஆறு அல்லது ஏழு, எட்டாக அதிகமாக்க வேண்டு மென்று ஏதாவது திட்டவட்டமான கருத்து இருக்கிறதா?

திருமதி த. ந. அனந்தநாயகி: தேர்தல் நெருங்கும்பொழுது யோசிப்பதைவிட இப்பொழுதே அவர்கள் முயற்சியெடுக்க வேண்டும். இனிமேல் எங்களைக் கலந்துகொண்டு முடிவெடுப்பது என்றால் காலதாமதமாகிவிடும். 76 பொதுத் தேர்தலுக்கு எத்தனை சட்டமன்றத் தொகுதிகள் என்பதற்குத் திட்டவட்டமான எண்ணம் ஏதாவது இந்த அரசு வைத்திருக்கிறதா? 50,000 வாக்காளர்களுக்கு அல்லது 75,000 வாக்காளர்களுக்கு ஒரு ரேப்ரசெண்டேட்டிவ் என்று செய்வதற்கு முடிவெடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இந்தத் திருத்த மசோதாவை நிறைவேற்றுவது 525 இடங்கள் என்றும் தமிழ்நாட்டிற்கு 40 என்றும் ஆவதற்கு நிறைவேற்ற வேண்டும். ஆனால் இந்தக் கருத்துக்களை தொகுதி எல்லை வரையறை ஆணைக்குழு முடிவு செய்யும். அதற்குப் பரிந்துரை செய்ய வேண்டும். அப்பொழுது இந்த மன்றத்தைக் கலந்துகொண்டு, உறுப்பினர்களைக் கலந்துகொண்டு ஆறை ஏழு அல்லது எட்டாக வைப்பதா என்று முயற்சிக்கலாம். ஆறை ஏழாக வைப்பதால் பல்வேறு பிரச்னைகள் வருகின்றன. ஏழு என்று ஆக்கினால் இந்த மண்டபத்தில் வைத்துக்கொள்ள முடியாது. அதற்கென்று தனி மண்டபம் கட்ட வேண்டி வரும். அதை ஆராய்ந்த பிறகு எல்லாக் கருத்துக்களையும் முடிவு செய்வதற்கு முன்னால் இவைகளைப்பற்றிய புள்ளிவிவரங்களை முன் வைக்க வேண்டும். அப்பொழுது முடிவெடுக்கலாம். அதற்குமுன் அரசு இந்த மன்றத்தின் கருத்தை அறிய முயலும். அதற்குப்பிறகு தொகுதி எல்லை வரையறை ஆணைக்குழுவிற்கு பரிந்துரை செய்யலாம். பரிந்துரையை அவர்கள் மறுக்கப்போவதில்லை. ஏழு என்றோ எட்டு என்றோ சொன்னால் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள். ஆறை ஏழாக்குவதினால் எழும் பல்வேறு சங்கடங்களை, சூழ்நிலைகளை ஆராய வேண்டும். அதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும் என்று இந்த வாய்ப்பிலே கூறிக்கொள்கிறேன்.

வேறு பல கருத்துக்களையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். தேர்தலை எந்தத் தேதியில் வைத்துக்கொள்ளலாம் என்று பரிந்துரை செய்யலாமே தவிர, அதை நிர்ணயிப்பது தேர்தல் கமிஷன்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1973 ஆகஸ்ட் 4

தான். அந்த வகையில் கோவை தேர்தலைப் பொறுத்து பரிந்துரை செய்திருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல் அதை முடிவு செய்ய வேண்டியது மத்திய அரசின் கையில்தான் இருக்கிறது.

இப்போது சொல்லப்பட்ட இந்தப் பிரச்சினைகளைப் பொறுத்த வரை தேர்தல் எல்லை வரையறை ஆணைக்குழு வருகின்றபோது என்ன பரிந்துரைகளைச் செய்யலாம் என்பதற்கு முன்னேற்பாடாகக் கருத்துக்களைத் திரட்டிவைத்துக் கொண்டு, மன்றத்தையோ, எதிர்க்கட்சித் தலைவர்களையோ கலந்து ஆலோசித்து முடிவு எடுக்கலாம் என்று இந்த வாய்ப்பில் தெரிவித்துக்கொண்டு இதனை நிறைவேற்றித் தரும்படி கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்த விவகாரத்தில் கொஞ்சம் விரைவாக முடிவெடுப்பது நல்லது. மற்ற மாநிலங்களைக் காட்டிலும் ஓராண்டுக்கு முன்னாலேயே இங்கு சட்டசபைத் தேர்தல் வருகிற நிலைமை இருக்கிறது. இங்கே இருக்கும் எலக்ஷன் கமிஷன் அந்த வேலைகளில் ஈடுபடலாம். ஆனால், ஏதோ எப்படிப் பிரிக்க வேண்டுமென்றாலும் விரைவாகப் பிரிக்காத காரணத்தால் சிரமங்கள் வந்தன என்ற நிலைமை ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் இதைக் கூறுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முன்பு என்ன முறைகள் கடைப்பிடிக்கப்பட்டன என்று பார்த்து நிலைமைகளைக் கண்டறிந்து விரைவில் இவற்றில் முடிவு எடுக்க அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

(2) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(இ) மேலவை உறுப்பினர்களுக்குப் பேரவையில் தனி இடம் ஒதுக்குவது பற்றி

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : நான் ஒரு ஒழுங்குப் பிரச்சினை மீது நிற்கிறேன். இந்தச் சபை நடக்கும்போது இதுவரை மேல்சபை உறுப்பினர்களின் வசதிக்காக பின்பகுதியில் இருப்பிடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இந்தக் கூட்டத்

1973 ஆகஸ்ட் 4] [திரு. வா. மை. அப்துல் ஜப்பார்]

தொடரில் அந்த இருப்பிடங்கள் அகற்றப்பட்டுள்ளன. அவை தங்கள் உத்தரவின் பேரில் அகற்றப்பட்டனவா? இப்போது மேல்சபை உறுப்பினர்கள் மிகுந்த சங்கடத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். மீண்டும் அவற்றைப் போட உத்தரவிடப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மேலே அவர்களுக்கு இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : அங்கு எம்.பி.க்கள் வந்து உட்கார்ந்து விடுகிறார்கள். மேலவை உறுப்பினர்களுக்கு இடம் கிடைப்பதில்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், மேலவை உறுப்பினர்களுக்கும் மேலே இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இங்கு கீழே போடப்பட்டிருந்த பெஞ்சுகளும், நாற்காலிகளும் சட்ட முறைப்படி போடப்பட்டவை அல்ல. உறுப்பினர்களின் வசதிக்காகப் போடப்பட்டவை. சட்ட முறைப்படி இல்லாததால் அந்த பெஞ்சுகளும், நாற்காலிகளும் எடுக்கப்பட்டு விட்டன. அவ்வளவுதான்.

(7) அரசினர் தனித் தீர்மானம்—தொடர்ச்சி.

பாராளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்ட 1973 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (31-வது திருத்த) சட்ட முன்வடிவினுல் செய்யக் கருதப்பட்டுள்ள திருத்தங்களை உறுதிப்படுத்தல்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டீ-லிமிடேஷன் கமிட்டிக்கு பேரவையிலிருந்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்—

1. திரு. செ. கந்தப்பன்.
2. திரு. எல். கணேசன்.
3. திரு. ஜே. எஸ். இராசு.
4. திரு. என். டென்னிஸ்.
5. திரு. எம். ஏ. லத்தீப்.

திருமதி த. ந. அனந்தநாயகி : பல கட்சிகள் இங்கு இருக்கும் நிலையில் பிரதானமாக ஆளும் கட்சியிலுள்ளவர்கள்தான் இடம் பெற்றிருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதற்கு உறுப்பினர்கள் போடப்பட்ட பிறகு பல கட்சிகள் இங்கு ஏற்பட்டிருக்கின்றன. அவைகளை எல்லாம் யோசித்து 1962-ல் என்ன முறைகள் பின் பற்றப்பட்டன என்பதை ஆராய்ந்து மறுபரிசீலனை செய்து அதிலே திருத்தம் செய்து கொள்ள வேண்டுமென்றால் திருத்திக் கொள்ளலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : அங்கத்தினர்கள் நியமனப் பட்டியலைப் படித்தார்கள். அவர்களை மற்றக் கட்சித் தலைவர் களையும் கலந்துகொண்டு போட்டார்களா? அதை சபாநாயகர் அவர்கள் போட்டார்களா? எந்தத் தேதியில் அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்பதை அறிவிப்பார்களா?

திரு. கே. ஏ. மதியழகன் : இது சமீபத்தில் போடப்பட்டது தான். எங்கள் கட்சிக்கு இடம் வேண்டுமென்பதற்காகச் சொல்ல வில்லை. பரவலாக எல்லாக் கருத்துக்களையும் அறிந்தால் கமிஷனுக்கு உதவிபுரியக் கூடியதாக, வசதியாக இருக்கும் என்ப தற்காகத்தான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முன்பும் ஐந்து பேர்தான் போட்டார்கள், இப்போதும் ஐந்து பேர்தான் போடப்பட்டிருக் கிறது. முன்பு 1963-ல்—

(1) திரு. பி. ராமச்சந்திரன்.
(2) திரு. கே. ஆர். சம்பந்தம்.
(3) திரு. கே. ஏ. மதியழகன்.
(4) திரு. பி. பரமேஸ்வரன்.
(5) திரு. ஆர். வி. சாமிநாதன்.

ஆகியவர்கள் உறுப்பினர்களாக இருந்திருக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அன்றைக்கு இருந்த நிலைமை வேறு. இன்றைக்கு இருக்கும் நிலைமை வேறு. இன்றைக்கு எட்டு கட்சிகள் இருக்கும்போது எட்டுப் பேரைப் போட்டால் தான் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

“பாராளுமன்ற அவைகள் இரண்டிலும் நிறைவேற்றப்பட்டு 1973-ம் ஆண்டு அரசியல் அமைப்பு (31-வது திருத்த) சட்ட முன்வடிவினுல் செய்யக் கருதப்பட்டுள்ளவையும், இந்திய அரசியல் அமைப்பின் 368-வது பிரிவின் (2) பகுதியின் வரம்பு நிபந்தனையின் நோக்கத்தின் கீழ் வருபவையுமான திருத்தங்களை இப்பேரவை இசைவுடன் உறுதிப்படுத்துகிறது”.

அரசினர் தனித் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

(8) அமைச்சரின் அறிக்கை.

‘லெவி’ கொள்முதல் தற்காலிகமாக சில மாவட்டங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது குறித்து உணவு அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 82-வது விதியின் கீழ் மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையைப் பேரவைக்கு அளிப்பார்கள்.

இந்த விஷயம் குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. என். குமாரசாமி அவர்கள் 42-வது விதியின் கீழ் ஒரு தீர்மானம் கொடுத்திருந்தார்கள். அவர்கள் தற்போது அவையில் இல்லை. பிரச்சினையின் முக்கியத்துவம் கருதி இப்போது அமைச்சர் அவர்கள் அறிக்கை அளிக்கிறார்கள்.

***மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம், தென் ஆற்காடு மாவட்டம், சைதாப்பேட்டை வட்டம் நீங்கலாக செங்கற்பட்டு மாவட்டம் ஆகியவை தமிழ்நாடு நெல், அரிசி (போக்குவரத்துக் கட்டுப்பாட்டு) ஆணையின் கீழ் அறிக்கையிட்ட பகுதியாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. 1973 ஆகஸ்ட் 1-ம் நாளிலிருந்து ரத்து செய்யப்பட்டுள்ளது. 25 சதவீத ‘லெவி’ தாற்காலிகமா*

நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. திருச்சி மாவட்டத்தில் காவிரியின் வடக்குப் புறத்திலுள்ள வட்டங்களான முசிரி, லால்குடி, உடையார்பாளையம், பெரம்பலூர், குளத்தூர் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் இதேபோன்ற நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. திருச்சி மாவட்டத்தின் எஞ்சிய பகுதி, தஞ்சாவூர் மாவட்டம், மதுரை மாவட்டத்தின் சில பகுதிகள், நீலகிரி மாவட்டம், கோயம்புத்தூர், கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்கள் ஆகியவை அறிக்கையிடப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டிருந்தது தொடர்ந்து செயலில் இருக்கும். ஆனால் கன்னியாகுமரி மாவட்டம், தஞ்சாவூர் மாவட்டம், திருச்சி மாவட்டத்தில் அறிக்கையிடப்பட்ட பகுதி ஆகியவை நீங்கலாக மேற்கூறிய எல்லாப் பகுதிகளிலும் 25 சதவீத லெவி தாற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. பற்றுக்குறைப் பகுதிகளுக்கு இங்குள்ள அரிசியைத் தேவையான அளவுக்கு அனுப்பவும், விலை ஏறுமுகமாகப் போவதைத் தடுக்கவும் இந்த நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டுள்ளன. அரசு நெல் கொள் முதல் விலைகளில் 'லெவி' நெல் கொடுப்பதால் ஏற்படும் விரயத்தை விற்பனை விலையை உயர்த்துவதன் மூலம் ஈடுசெய்ய வேண்டியிருந்தது. இந்த நடவடிக்கைகளின் பலனாக விலைவாசிகள் இறங்க வேண்டும். எல்லையோரப் பகுதிகளும் அந்த எல்லையோரப் பகுதிகளுக்கு அரிசி கடத்தப்படுவதற்கு ஏதுவாக அண்மையிலுள்ள பகுதிகளும் தமிழ்நாடு நெல், அரிசி (போக்குவரத்துக் கட்டுப்பாடு) ஆணையின்கீழ் அறிக்கையிடப்பட்ட பகுதியாகத் தொடர்ந்து செயலில் உள்ளது. கள்ளக் கடத்தலுக்காக அரிசி இங்கு குவிக்கப்படுவதைத் தடுப்பதும், இப்பகுதிகளில் நெல், அரிசி, அரிசி போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவதும் இதன் நோக்கமாகும். அறிக்கையிடப்படாத பகுதிகளிலிருந்து உள்ளூர்த் தேவைகளையொட்டி இப்பகுதிகளுக்கு அரிசி கொண்டு வர அனுமதி அளிக்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரமுண்டு. எல்லையோரப் பகுதிகளில் இவ்வாறு கொண்டு வரப்படும் அரிசியைத் தவிர, அரசு வசமுள்ள அரிசி இருப்புகளும் உறுதுணையாக அமைகின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆகஸ்ட் இறுதியிலும் பிறபகுதிகளில் செப்டம்பரிலும் அறுவடை

தொடங்கும்வரை போதுமான அரிசி கிடைப்பதற்கும் விலை அதிக அளவு ஏருமல் இருப்பதற்கும் இந்த நடவடிக்கைகள் உறுதுணையாக அமையுமென நம்பப்படுகிறது. இதுகுறித்த அறிவிப்புகள் 1—8—1973 அன்று வெளியிடப்பட்டுள்ளன.

(3) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) அலுவல் ஆய்வுக் குழு கூடுவது பற்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று கூட வேண்டிய அலுவல் ஆய்வுக் குழு திங்கட்கிழமை அன்று கேள்வி நேரத்திற்குப் பின் கூடும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் முடிவுற்று மீண்டும் பேரவை 6—8—1973 திங்கட்கிழமை அன்று காலை 9 மணி அளவில் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-28 மணி அளவில் ஒத்திவைக்கப் பட்டது.

(9) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

89. Notification issued with G.O. Ms. No. 666, Rural Development and Local Administration, dated the 3rd April 1973, in regard to certain amendments to the Tamil Nadu Municipal Services Pension Rules, 1970. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

9. Notification issued with G.O. Ms. No. 1389, Revenue, dated the 24th March 1973 in regard to an amendment to the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Rules, 1962. [Laid on the Table of the House under section 112 (2) of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Tamil Nadu Act 58 of 1961).]

91. Notification issued with G.O. Ms. No. 362, Home, dated the 8th February 1973 in regard to amendment to Rule 189-E of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

92. Notification issued with G.O. Ms. No. 667, Rural Development and Local Administration, dated the 3rd April 1973, in regard to certain amendments to the Tamil Nadu Municipal Service Rules, 1970. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

B. *Reports, Notifications and Other Papers.*

' Nil '.

இணைப்பு

103 பக்கத்தில் 2-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

(*a*) & (*b*) Yes.

Five under-trial prisoners concerned in Arkonam Railway Police Station Crime under sections 393, 397 and 414, Indian Penal Code, were taken by bus from the Sub-Magistrate's Court, Tiruvellore, to the Central Jail, Madras. On the way, near Villivakkam, when one of the prisoners wanted to answer calls of nature, the two Police constables escorting them took them to an open space. The prisoners overpowered them by throwing chilly powder on their face, snatched the bayonet and stabbed one constable, while another prisoner snatched the musket of the other constable and all of them escaped with the bayonet and musket. One Police constable reached Ambattur Police Station and reported the matter. All the accused belong to Andhra. One of the five accused, Rama Rao, was arrested on 11th February 1973 and the musket recovered. Co-ordinated efforts in conjunction with Madras City Police, Railway Police and the C.I.D. are being taken to apprehend the

தமிழ்நாடு சட்டப் பேரவை.

திங்கட்கிழமை, 1973 ஆகஸ்ட் 6.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 26-ம், 27-ம் ஒத்தி வைக்கப்படுகின்றன.

Teacher-pupil ratio

*28 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there is any proposal to reduce the teacher-pupil ratio into 1 : 35; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) 1-8-72 அன்று மாநிலம் முழுவதுமுள்ள அனைத்துப் பள்ளிகளுக்குமான மொத்த ஆசிரிய-மாணவ விகிதம் தொடக்கப் பள்ளிகளில் 1 : 35; உயர் தொடக்கப் பள்ளிகளில் 1 : 33; உயர்நிலைப் பள்ளிகளில் 1 : 25 ஆகும். இதனை மேலும் குறைத்திட நிதி நிலை இடந்தராது.

திரு. என். கே. பழனிசாமி : இந்த மாணவர்கள்—ஆசிரியர்களின் விகிதாசாரத்தைக் குறைப்பதன் மூலம் வேலை இல்லாமல் இருக்கக் கூடிய ஆசிரியர்களுக்கும் அதோடு தனிப்பட்ட முறையில் மாணவர்களை அந்த ஆசிரியர்கள் கவனிப்பதற்கும் சௌகரியம் ஏற்படுமாகையால் உத்தேசச் செலவு இதனால் எவ்வளவாகும் என்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நிதிநிலை இடம் தராததால்தான் அந்த அளவிற்குச் செய்ய முடியவில்லை. எந்தளவிற்கு மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கிறோமோ

அந்த அளவிற்கு நல்லதுதான். ஆனால் இப்போது பொதுக் கல்விக்கும் தொழில் நுட்பக் கல்விக்கும் 98 கோடி ரூபாய் செலவு செய்கிறோம் என்றால் அதற்குள்ளேதான் நடத்த வேண்டும். அல்லது ஆசிரியர்களின் எண்ணிக்கையை அதிகமாக்குவது என்றால் புதுப் பள்ளிகள் திறக்க வழியில்லாமல் போய்விடும். ஆகவே, கூடுமான வரையில் இப்போது 1 : 35 தொடக்கப் பள்ளிகளிலும், 1 : 33 உயர் தொடக்கப் பள்ளிகளிலும், 1 : 25 உயர்நிலைப் பள்ளிகளிலும் இருக்கின்றன. மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும் என்பதுதான் அரசின் நோக்கம். அதை நிதிநிலைமை இடம் தரத் தர ஓரளவிற்கு மாற்றிக் கொண்டு வருகிறோம். அதிக இடங்கள் ஏற்படுத்தினால் அதிக ஆசிரியர்களுக்கு வாய்ப்புத் தரலாம். ஆனால் அதற்கு நிதிநிலைமை இடம் தரவேண்டும். ஆகவே இந்த ஏண்ணிக்கையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

THIRU N. DENNIS : May I know, Sir, whether the Government is aware of the fact that even this ratio is not strictly followed in the matter of appointment of teachers in schools?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்த நிலைமை எங்கேயாவது இருந்தால் தனியாக கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதைப் பற்றி பரிசீலித்து தக்க நடவடிக்கைகள் எடுக்கலாம். சராசரி என்று வரும்போது சிலயிடங்களில் கூடுதலாகவும் சிலயிடங்களில் குறைவாகவும் இருக்கலாம். மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பது என்பது நிதிவசதி ஏற்படும்போது செய்யலாம். அப்படி எங்கேயாவது நிறைவேற்றப் படாத சூழ்நிலையிருந்தால் இத்துறை அதிகாரிகளின் தனிக் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதுபற்றிக் கவனிக்கலாம்.

திரு. எம். சுரேந்திரன் : இந்த விகிதாசார எண்ணிக்கை வெறும் காகிதத்தில் இருக்கிறதே தவிர செயலில் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா ? அப்படி அதை ஒழுங்காகச் செயல்படுத்த தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் முதலில் கூறியதுபோல் 1:35 என்று சொன்னால் சிலயிடங்களில் 1-ல் இருந்து 25 மாணவர்கள் இருப்பார்கள். சில இடங்களில்

40 என்றிருக்கலாம். இரண்டையும் சேர்த்தால்தான் ஆவரேஜ் 35 என்று வரும். நிதிவசதி ஏற்படும்போது மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வது என்ற முறையைத்தான் அரசு மேற்கொண்டிருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, the guidance and attention of teachers are required more in elementary schools than in high schools. May I know from the Hon. Minister for Education whether the Government would consider the question of reducing the pupil ratio first in elementary schools and afterwards in the high schools ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்தக் கருத்தை மனதில்கொண்டு நடைமுறையைக் கவனிக்கலாம். நான் முதலில் சொன்னபடி நிதிவசதி ஏற்படுவதைப் பொறுத்துத்தான் அந்த முறைகளை மேற்கொள்ள முடியும்.

திரு. த. சோணையா : சிறு கிராமங்களில் முதலில் ஆரம்பிக்கிற போது துவக்கப் பள்ளிகளிலாவது 30 என்றளவிற்காவது மாணவர்கள் சேரும்போது அதற்கு அனுமதி வழங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாணவர்கள் 30 பேர்கள் சேருவதில் தடை ஒன்றும் இருக்காது. ஏனெனில் இப்போது ஓராசிரியர் பள்ளிக்கூடங்கள், ஓராசிரியருக்கு மேற்பட்ட பள்ளிக்கூடங்கள் என்று விகிதாசார அடிப்படையில் கொடுத்துக் கொண்டு வருகிறோம். ஓராசிரியர் பள்ளிக்கூடங்கள் திறக்க இப்போதே வழிவகை இருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி : கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், விகிதாசாரத்தைக் குறைப்பதால் அதிகம் செலவாகும் என்று. இதுபற்றி எவ்வளவு செலவாகும் என்று பரிசீலிக்கப்பட்டதா ? அப்படியானால் உத்தேசமாக எவ்வளவு அதிகப்படியாகச் செலவாகும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரக் கணக்கு இல்லை. தனிக் கேள்வி போட்டால் எவ்வளவு ஆகக்கூடும் என்று கணக்கிட்டுச் சொல்லலாம்.

[1973 ஆகஸ்ட் 6

திரு. ஏ. சுப்பிரமணியம் : எலிமெண்டரிப் பள்ளிகூடங்களில் 1 : 35 என்று இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைவிட அதிகமாக இருக்கிற பள்ளிக்கூடங்களில் 1 : 35 என்ற அளவிற்காவது குறைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் முதலில் சொன்னபடி சராசரி என்று வரும்போது 1 : 35 என்று வரும். ஒரு பள்ளியில் 30, ஒரு பள்ளியில் 40 என்றிருந்தால் ஆவரேஜ் 35 என்று வரமுடியும். கூடுமான வரையில் 1 : 35-க்கு கீழே இருக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறோம்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, if this is the average for the State, what is the average for the City and also is the Hon. Minister for Education aware of the fact that in some of the schools in the City, there are about 5 to 60 students in some of the classes?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சென்னை நகரைப் பொறுத்தவரையில் பள்ளிக்கூடங்களில் எந்த அளவிற்கு எண்ணிக்கை இருக்கிறது என்று தெரியவில்லை. அவ்வளவிற்கு அதிகமாக இருந்தால் கட்டாயம் இரண்டு ஆசிரியர்கள் போட வேண்டிய நிலைமைதான் கொடுத்திருக்கிற குறிப்பிலிருந்து வரமுடியும். அப்படிக் கூடுதல் இருந்தால் தனிக் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

திரு. வை. பாலசுந்தரம் : கிராமப்புறங்களில் நடத்தப்படுகிற பள்ளிகளில் குறிப்பாக ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை நடத்தப்படுகிற பள்ளிகளில் ஒன்றாவது வகுப்பு எது, இரண்டாவது வகுப்பு எது என்று தெரியாத அளவிற்கு மொத்தமாகவே வைத்துப் பாடம் சொல்லிக் கொடுக்கிறார்கள். இது மாணவர்களுக்கும் இடைஞ்சலாக இருக்கிறது. ஆசிரியர்களுக்கும் இடைஞ்சலாக இருக்கிறது. ஆகவே அதற்காக அரசு ஏதாவது முயற்சிகள் எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாணவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து ஓரளவிற்கு ஆசிரியர்களை நியமிக்க வேண்டிய கட்டாயம் வருகிறது. மாணவர்களின் எண்ணிக்கை வளர வளர ஆசிரியர்களின் எண்ணிக்கையை வளர்த்து

1973 ஆகஸ்ட் 6]

வருகிறோம். 20 முதல் 29 மாணவர்கள் வரையில் ஒரு ஆசிரியர் தருகிறோம். 30-ம் அதற்கு மேற்பட்டும் வருமானால் இரண்டு என்று வைத்திருக்கிறோம். ஒன்றிலிருந்து ஐந்தாம் வகுப்பு முடிய 35-க்குக் குறைவாக சராசரி உடைய வகுப்புகள் அனைத்தையும் ஒன்றுசேர்த்து 1 முதல் 29 வரையில் ஒரு ஆசிரியர், 30 முதல் 55 வரையில் இரண்டு ஆசிரியர்கள், 56 முதல் 75 வரையில் 3 ஆசிரியர்கள், 76 முதல் 95 வரையில் 4 ஆசிரியர்கள் 96-ல் இருந்து 145 வரையில் 5 ஆசிரியர்கள் என்ற வகையில் தருகிறோம். இதை நிறைவேற்றுகிற வகையில்தான் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன. எங்கேயாவது இந்த முறை கையாளப்படாமல் இருந்தால் தனிக் கவனத்திற்குக் கொண்டுவரலாம்.

திரு. கே. என். குமாரசாமி : ஒரு ஆசிரியருக்கு சராசரி 35 மாணவர்களுக்கு மேல் இருந்தால் கல்வியின் தரம் குறைகிறது என்ற காரணத்தினால் பெற்றோர்கள் கான்வென்ட் போன்ற உயர்தரப் பள்ளிகளுக்கு குழந்தைகளை அனுப்புவது அரசுக்குத் தெரியுமா? அதனால் கல்வியில் பாதிக்கப்படுவது ஏழை மாணவர்கள்தான் என்பதும் அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஓரளவிற்கு மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து ஆசிரியர் முழுக் கவனமும் செலுத்துகிற நிலை ஏற்பட்டால் நல்லதுதான். அதை ஒப்புக் கொண்டு மெல்ல மெல்ல மாணவர்கள்—ஆசிரியர்கள் விகிதாசாரத்தை ஏற்கனவே 1 : 40 என்றிருந்ததை குறைத்துக் கொண்டு வருகிறோம். உயர்நிலைப் பள்ளிகளில் 1 : 25 என்று வந்திருக்கிறது. 1 : 33-ல் இருந்து, ஐந்தாறு ஆண்டுகளில் 1:25 என்று கொண்டு வந்திருக்கிறோம். இன்னும் கொஞ்சம் குறைக்க வேண்டியது தான். ஆனால் ஆசிரியர்கள் மாணவர்களிடத்தில் எவ்வளவு ஆழ்ந்த கவனம் செலுத்தி சொல்லிக் கொடுக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். கிட்டத்தட்ட 60 உயர்நிலைப் பள்ளிகளுக்கு மேல் எஸ்.எஸ்.எல்.சி. வகுப்பில் ஆறு ஏழு பேர்களை வைத்துச் சொல்லிக் கொடுக்கிற அளவிற்கு 60, 70 உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அங்கேயாவது சென்டம் ரிஸல்ட் வருகிறதா என்று பார்த்தால் ஏழு மாணவர்கள் உள்ள பள்ளிகளில் கூட அங்கு ஆறு பேர்கள் பெயிலாகிற அளவிற்கு இருக்கிறது. ஆக

[1973 ஆகஸ்ட் 6

இவை யெல்லாம் எதைப் பொறுத்தது என்றால் ஆசிரியர்கள் எடுத்துக் கொள்கிற அதிகப்படியான ஆழ்த் தன்மையை, பொறுப்புணர்ச்சியைப் பொறுத்துத்தான் தரம் அமைகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இன்று அதிகமான அளவிற்குப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வேலையில்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆசிரியர்களுக்கு இன்று ஒவ்வொரு மாணவரிடமும் போதிய கவனம் செலுத்த முடியவில்லை என்ற குறைபாடும் இருக்கிறது. ஆகவே இந்த விகிதாசாரத்தை அடுத்த கல்வி ஆண்டிலாவது பரிசீலித்துக் குறைப்பதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கல்வித் துறையைப் பொறுத்தவரையில் அதிகப்படியான ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்ற கோரிக்கைதான் முதல் அமைச்சர் அவர்களிடம் வற்புறுத்தப்பட்டு வருகிறது. நிதி வசதியைப் பொறுத்து எவ்வளவு ஆசிரியர்கள் தருகிறார்களோ அந்த ஆசிரியர்களை வைத்துத்தான் பயிற்சி அளிக்க வேண்டியிருக்கிறது. பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் அதிகமாகாத அளவிற்குச் சிலபல தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். வெளியே உள்ள பயிற்சி பெற்ற ஆசிரியர்களை எவ்வளவு விரைவில் ஏற்றுக் கொள்ள முடியுமோ அதற்கான திட்டங்களைத் தீட்டி அந்தத் திட்டங்களை ஏற்றுக்கொள்ளுமாறு வற்புறுத்தியும் வருகிறோம். அந்த முயற்சிகளை மெல்ல மெல்ல மேற்கொள்ளலாம்.

திரு. வெ. ந. முத்தமிழ்ச் செல்வன் : தலைவரவர்களே, பள்ளிகளில் நடைபெறும் மாணவர் கிளர்ச்சிகளுக்கு ஆசிரியர் மாணவர் விகிதாச்சாரம் ஒரு காரணமாக இருப்பதால், அதைக் குறைப்பதற்கு அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுவே ஒரு காரணம் என்று சொல்ல முடியாது. உயர் துவக்கப் பள்ளிகளில் அப்படிப்பட்ட கிளர்ச்சிகள் இல்லை. சில பல இடங்களில் கிளர்ச்சிகள் நடைபெற்றாலும், அது வேறு பல காரணங்களால் அமைந்து இருக்கின்றன. எண்ணிக்கை அதிகமாக இருப்பது முழுக் காரணமாக ஆகிவிடாது.

1973 ஆகஸ்ட் 6]

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இப்படி மாணவர்களைக் குறைத்து ஆசிரியர்களை அதிகப்படுத்த நிறையப் பொருளாதாரம் தேவைப்படுவதால், யூனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன் மூலம் கல்லூரிகளுக்கு உதவிப் பணம் தருவது போல், இதற்கும் மத்திய அரசு உதவிப் பணம் தருவதற்கு முன் வந்திருக்கிறதா ? அப்படியில்லை யென்றால், மாநில அரசு அதை வற்புறுத்திப் பெறுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அகில இந்திய கல்வியமைச்சர்கள் மாநாட்டில், எல்லா மாநிலத்தையும் சார்ந்த கல்வியமைச்சர்களும் அதைத்தான் அடிக்கடி வலியுறுத்தி வருகிறார்கள். கட்டாயக் கல்வியை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று அரசியல் அமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டிருந்தாலும், அதைக் குறிப்பிட்ட காலத்திற்குள் நடைமுறைப்படுத்துவதற்கு முடியாத காரணம் நிதிப் பற்றாக்குறைதான். ஆகவே, நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்கு மத்திய அரசு ஒரு திட்டம் தீட்டி, மாநில அரசுகளுக்கு உதவ வேண்டுமென்று கோரிக்கை விடப்பட்டிருக்கிறது. மத்திய அரசு அதைப் பரிசீலித்து அனுமதியளிக்குமேயானால், அது பற்றி நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

Population education in schools.

*29 Q.—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to introduce "Population Education" in the syllabus for Elementary School children ; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவது இன்றியமையாதது என்பதை விளக்கும் பாடங்கள் தொடக்கப் பள்ளிகளுக்கான புதிய பாடத் திட்டத்தில் தக்க வகையில் சேர்க்கப்பட்டுள்ளன.

[1973 ஆகஸ்ட் 6

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, பள்ளிகளிலே 'ஸெக்ஸ் எடுகேஷன்' கேரளத்தில் சில பள்ளிகளில் புகுத்தியிருக்கிறார்கள். பொதுவாக, ஸெக்ஸ் எடுகேஷன் தேவை என்ற கருத்து மேல் நாடுகளில் இப்போது பரவி வருகிறது. அந்த மாதிரி 'ஸெக்ஸ். எடுகேஷன்' இங்கேயுள்ள பள்ளிகளில் புகுத்துவதற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றி பல்வேறு கருத்துக்கள் கல்வி வல்லுநர்களிடையே நிலவி வருகிறது. கேட்கப்பட்டிருக்கிற கேள்வி, மக்கள் பெருக்கத்தைப் பற்றி. மாணவர் பருவ காலத்தில் (பாபுலேஷன் அவேர்னஸ்) மக்கள் தொகை பெருக்கத்தால் பொருளாதாரம் எந்த அளவுக்குக் குறையும் என்பதை அறிவுறுத்தும் பொருட்டு இப்போது பாடத் திட்டத்தில் அது புகுத்தப்பட்டு இருக்கிறது. குடும்பக் கட்டுப்பாடு திட்டம் என்பது வேறு. மக்கள் தொகை பெருக்கம் என்பது வேறு. குடும்ப நலத் திட்டத்தை வற்புறுத்துவது என்றால் அதற்கு வயது முதிர்ச்சி தேவைப்படுகிறது. நாம் இப்போது பள்ளி அளவில், மக்கள் தொகை பெருக்கத்தால் ஏற்படும் விளைவுகளைக் குறித்துத்தான் பாடம் புகுத்தியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல், (ஸெக்ஸ் எடுகேஷன் பாடல் பற்றிய கல்வி அளிக்க வேண்டுமென்ற உணர்வு அந்தக் கருத்து இப்போது மத்திய அரசாங்கத்தின் ஆலோசனையில் ஆராயப்பட்டு வருகிறது. மேலை நாடுகளில் அது பற்றிய கல்வி இருந்தால் தான், எதிர்காலத்து மாணவர்கள் அதன் தன்மைகளைத் தெரிந்து கொண்டு, அதனால் ஏற்படும் தீங்குகளைக் களைந்து நல்ல முறையில், நாகரீகமான வகையில் வாழலாம் என்று வைத்து இருக்கிறார்கள். அப்படி அந்தக் கல்வி வைக்கப் பட்டாலும், அது கல்லூரி மட்டத்தில் தான் வைக்கலாம் என்ற கருத்தும் கூறப்பட்டு வருகிறது. கேரளத்தில் புகுத்தப்பட்டு இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார்கள். அவர்களுடைய அனுபவத்தை வைத்துக் கொண்டு—ஓராண்டு காலம், இரண்டாண்டு காலம். அனுபவத்தைக் கருத்தில் கொண்டு —அது எப்படி ஓரளவிற்கு நல்லதொரு சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை ஆராய்ந்து, நல்லதொரு சூழ்நிலை ஏற்பட்டால் நாமும் வைக்கலாம்.

1973 ஆகஸ்ட் 6]

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, பள்ளிகளிலே, கல்லூரிகளிலே மாணவர்கள், மாணவியர்கள் மத்தியில் அதிகமாக நல்லதொரு தொடர்புகள் இப்போது கிடையாது, பெண்களைப் பார்த்தால் கண்ணடிப்பதும், கலாட்டா செய்வதுமாக இருக்கிறார்கள். நெருங்கிய தொடர்பு கிடையாது. ஆகவே, ஆரம்பப் பள்ளிகளிலிருந்தே மாணவர்களையும், மாணவியர்களையும் ஒன்றாகப் படிக்கவைக்க வழி செய்து விட்டால், ஸெக்ஸ் எடுகேஷன் சொல்லிக் கொடுத்து விட்டால், சரி இவ்வளவு தானா என்று நினைத்துக் கொண்டு, பேசாமல் விட்டு விடுவார்கள். அரசு அதற்கு வழி வகுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போதே துவக்கப்பள்ளி, உயர் துவக்கப்பள்ளி ஆகிய இடங்களில் ஆண்களும், பெண்களும் சேர்ந்து படிக்கிறார்கள். கல்லூரி மட்டத்தில் புகுமுக வகுப்பில் மட்டும் பெண்கள் சேர்ந்து படிக்கும் நிலை சென்னைப் பல்கலைக் கழகப் பகுதிகளில் இல்லை. மதுரைப் பல்கலைக் கழகப் பகுதிகளில் புகுமுக வகுப்பில் பெண்களைச் சேர்த்துக் கொள்ளலாம்—சில பல வசதிகளைச் செய்து கொடுத்தால்—என்று இருக்கிறது. நான் முதலிலே கூறியது மாதிரி, பக்கத்தில் கேரளத்தில் வைத்திருப்பதாக உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் அனுபவத்தைக் கருத்தில் கொண்டு, அது எந்த அளவுக்கு அங்கே வெற்றி பெற்று இருக்கிறது என்பதை ஆராய்ந்து அறிந்த பின், நாமும் அதைப் புகுத்துவது பற்றி ஆலோசிக்கலாம்.

மாதிரிப் பள்ளிகள்.

*30 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மத்திய அரசின், மாவட்டத்திற்கு ஒரு மாதிரிப் பள்ளி ஏற்படுத்தும் திட்டத்தின் கீழ், வரும் நிதி ஆண்டில் எத்தனை பள்ளிகள் துவங்கப்பட இருக்கின்றன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இத் திட்டம் மைய அரசினரால் இன்னும் ஏற்கப்படவில்லை.

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, மத்திய அரசால் அமைக்கப்படவில்லை என்று சொன்னால், அதற்கு மாநில அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்து இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மத்திய அரசிலே ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு மாதிரித் துவக்கப்பள்ளி—மாவட்ட அளவிலே ஒரு உயர்நிலை மாதிரிப் பள்ளி—அமைக்க வேண்டுமென்ற கருத்து கல்வியமைச்சர்கள் மாநாட்டில் மத்திய கல்வியமைச்சர் அவர்களால் எடுத்து தெரிவிக்கப்பட்டது. அது பற்றி ஆராய்ந்து ஒரு முடிவு சொல்வதாகக் கூறியிருக்கிறார்கள். இன்னும் மத்திய அரசின் பரிசீலனையில் அந்தக் கருத்து இருந்து வருகிறது. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், இரண்டு இடங்களில் மாதிரி உயர் துவக்கப் பள்ளிகள் வைக்கலாம் என்று மாநில அரசு முடிவு எடுத்து இருக்கிறது. புதுக்கோட்டையில் ஒரு மாதிரி உயர் துவக்கப் பள்ளி ஆண்களுக்காக சென்ற ஆண்டு துவக்கப்பட்டு, நடைமுறைக்கு வந்திருக்கிறது. சென்னையில் இப்படிப்பட்ட ஒரு மாதிரிப் பள்ளி பெண்களுக்காகத் துவக்கி நடத்துவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, அமைக்க இருக்கின்ற மாதிரிப் பள்ளிகளின் சிறப்பு அம்சம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாதிரிப் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் எம்.ஏ. பட்டதாரியாக இருக்க வேண்டும். அந்தப் பள்ளிகள் பயிற்சிக் கல்லூரிக்குப் பக்கத்திலேயே இருக்க வேண்டும். பயிற்சிக் கல்லூரிக்குப் பக்கத்திலேயே இருப்பதால், அங்கே பயிற்சித் தருவதற்குப் பயன்படுத்துவதற்காக என்று அல்ல—அந்தப் பயிற்சிப் பள்ளியில் இருக்கும் பேராசிரியர்கள் இந்தப் பள்ளிகளிலும் பணியாற்றுவதற்கான சூழ்நிலை ஏற்படுத்துவதற்குத்தான். இந்தப் பள்ளிகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்காக மாநில அளவில் ஒரு பரிட்சை நடத்தப்படும். அந்தத் தேர்வில் தேர்ச்சி பெறுபவர்கள் தான் இதில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இதிலே சேர்க்கப்படுபவர்களில் 50 சதவிகிதம் விடுதியில் தங்கிப்

படிக்க வசதி செய்யப்படும். அதே போல், சேர்க்கப்படுபவர்கள் மாநில அளவில் தேர்ந்தெடுக்கப்படுவதால், இங்கே வந்து படிப்பதற்குப் பயணப்படி, இலவச உணவு, உறையுள் ஆகியவையும் 25 சதவிகிதம் மாணவர்களுக்குத் தரும் அளவிலும், இலவச உணவு, உறையுள் இல்லாமல் மற்ற வசதிகள், சீருடை வழங்குதல் போன்ற வசதிகள் 25 சதவிகிதம் மாணவர்களுக்குத் தருகிற அளவிற்கும் திட்டம் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு பெண்களுக்கு என்று மாதிரிப் பள்ளி அமைக்க முயற்சி இங்கே விரைவில் எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, இந்த மாடல் ஸ்கூல் ஆரம்பிப்பதற்கு மத்திய அரசாங்கம் முழுச் செலவை ஏற்றுக் கொள்கிறார்களா, அல்லது தமிழ்நாடு அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கூறியிருக்கிறார்களா, அல்லது கிராண்ட் ஏதாவது தருவதாகக் கூறப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த மாதிரிப் பள்ளிகள் நடத்துவதற்கான முழுச் செலவையும் மத்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. அதை நிர்வகிப்பது, ஆசிரியர்கள் நியமனம் செய்வது, ஆகியவை மாநில அரசின் பொறுப்பில் இருக்க வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. வேண்டுமென்றால், மத்திய அரசின் ஓரிரண்டு பிரதிநிதிகள் அந்த நிர்வாகக் குழுவில் இருக்கலாம். ஆனால் முழுப் பொறுப்பையும் மாநில அரசின் கையில் விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது. அதைக் கருத்தளவில் மத்திய கல்வியமைச்சர் ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

Delegation from Bangla Desh.

*31 Q.—THIRU R. R. MUNUSAMI : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether any delegation from Bangla Desh had discussions with the officials of the State Government during January 1973; and

(*b*) if so, the details thereof?

[1973 ஆகஸ்ட் 6

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பங்களாதேஷ் கல்விக் குழு ஜனவரி மாதம் இங்கே வருகை தந்து இங்கேயுள்ள கல்வியாளர்கள், திட்டக்குழு உறுப்பினர்கள் ஆகியோரைச் சந்தித்து, இங்கேயுள்ள கல்வி நிலையங்களைப் பார்வையிட்டு, பல்வேறு கல்வி வல்லுநர்களோடு உரையாடிவிட்டுச் சென்று இருக்கிறார்கள்.

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை.

*32 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் A and B கிளாஸ் அறைகளை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) இதுபற்றிய செயற்குறிப்பு மருத்துவக் கல்வி இயக்குநருடைய பரிசீலனையில் உள்ளது.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, கடந்த மதிப்பீட்டுக் குழுவின் சார்பாக நாம் பல்வேறு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளைப் பார்வையிட்டோம். கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் ஏ வகுப்பில் ஒரே ஒரு அறையும், பி கிளாஸில் 10-க்குக் குறைவாகவும் அறைகள் இருக்கின்றன. மற்றைய மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளில் முதல் வகுப்பில் 7, 8 அறைகளும், அதைப் போலவே இரண்டாம் வகுப்பில் 40, 45 அறைகளும் இருக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் முதல் வகுப்பு இரண்டாம் வகுப்பு அறைகளை அதிகரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை கடந்த 4, 5 ஆண்டுகளுக்கு முன்பாக மாவட்ட மருத்துவ மனையாக இருந்தது. கல்லூரியை அங்கே உருவாக்கிய காரணத்தினாலே மருத்துவ மனையில்

1973 ஆகஸ்ட் 6]

கட்டடங்கள் விரிவாக்கப்பட்டு வருகின்றன. அதிலும் குறிப்பாக இந்தச் சிறப்பு வகுப்புகள் (Special class room) அறைக்குக் கட்டடம் கட்டுகின்ற திட்டங்கள் 1974-75 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் சேர்க்கப்படுவதற்கு ஆலோசனை கூறப்பட்டிருக்கிறது. அதனுடைய விரிவான பரிசீலனைக்குப் பின்னர் பொருளாதார நிலைமைக்கு ஏற்ப அது அரசாங்கத்தினால் நிறைவேற்றப்படும்.

சுண்ணாம்புக்குளம் கிராமத்திற்கு தாய்-சேய் நல விடுதி

*33 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்டம், சுண்ணாம்புக்குளம் கிராமத்தில் தாய்-சேய் நல விடுதி அமைப்பதில் ஏற்படும் கால தாமதத்திற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தின் ஆணையரிடமிருந்து 1-3-1973 நாளிட்ட மடல் மக்கள் நல்வாழ்வு குடும்ப நலத் துறை இயக்குநருக்குக் கிடைத்தது. அதில் 20-8-1972 நாளிட்ட செங்கை மாவட்ட குடும்பநலத் திட்டம் மற்றும் மகப்பேறு, குழந்தை நல விடுதி அதிகாரிக்கு ஆணையர் அனுப்பிய விண்ணப்பத்தின்படி நகல் ஒன்று இணைந்திருந்தது. அதன் பேரில் 10-வது மகப்பேறு குழந்தை நல விடுதி சுண்ணாம்புக்குளம் கிராமத்தில் ஏற்படுத்த மக்கள் நல்வாழ்வுத் துறை, குடும்பநலத் துறை இயக்குநர் 12-3-1973 அன்று அனுமதி வழங்கி உள்ளார்.

திரு. கா. வேழவேந்தன் : இப்படி சுண்ணாம்புக்குளம் கிராமத்தில் துவக்கப்படுகின்ற மகப்பேறு, தாய்-சேய் நல விடுதிக்காக நன்றி சொல்லுகின்ற நேரத்தில், அதற்குக் கட்டடம் கட்டித் தருவதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இதனுடைய முதல் பொறுப்பு ஒன்றியத்திற்கு உரியது. அதற்கு கட்டடம் கட்டுவதற்கு அவர்களால் கட்டப்பட வேண்டிய

[1973 ஆகஸ்ட் 6

3, 4 கட்டடங்கள் கட்டியதற்குப் பின்னர் மற்றவைகளுடைய செலவை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. அந்த முறையில் முறைப்படி செலவை அரசு ஏற்றுக்கொள்ளும்.

Tuberculosis Sanatorium in Thanjavur.

*** 34 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Health be pleased to state the details of improvements effected at the Mahatma Gandhi Tuberculosis Sanatorium at Thanjavur during the calendar years 1971 and 1972?**

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஒரு இரத்த சேமிப்பு நிலையம் 1971-ல் தொடங்கப்பட்டது. 20 படுக்கைகள் கொண்ட அறுவை சிகிச்சைக்குப் பின்னர் சிகிச்சை பெறுகிற ஒரு பகுதியும் கட்டப்பட்டுள்ளது.

Thiru N. DENNIS : May I know the steps taken in other districts in this regard ?

The Hon. Thiru K. ANBAZHAGAN : The question is mainly concerned with Mahatma Gandhi Tuberculosis Sanatorium at Thanjavur and the answer will be only relevant to that.

தாம்பரம் காச நோய் நலன்பேண் மருத்துவ மனை.

***35 வினா—திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் காச நோய் மருத்துவ மனையில், நோயாளிகளுக்குக் கொடுக்கப்படும் உணவு வகை என்னென்ன ?

(இ) அதன் அளவினை மேலும் அதிகப்படுத்தும் செயற் குறிப்பு உண்டா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) விடை@ ஒன்று அவையினுடைய மேஜையின் மீது வைக்கப்பட்டுள்ளது.

@ 390-391-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பட்டுள்ளது.

1973 ஆகஸ்ட் 6]

Special water works schemes for Madras.

* 36 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether the Tamil Nadu Water and Drainage Board is taking over for execution, the special water works schemes, surrendered by the Corporation of Madras; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.

Conference on Cauvery Waters.

* 37 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Hon. the Chief Minister attended the Conference on Cauvery Waters at New Delhi about 28th April 1973; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) 1973 ஏப்ரல் திங்கள் 29-ஆம் நாளன்று மூன்று மாநில முதலமைச்சர்களின் கூட்டம் புது டில்லியில் நடைபெற்றது. காவிரி நீர்ப்பெருக்கின் மொத்த அளவு குறித்து பொதுக் கருத்து உடன்பாடு ஏற்பட்டுள்ளது. காவிரி நீர் குறித்த மத்திய ஆய்வுக் குழு தாம் அவசியமெனக் கருதுபவற்றைச் சரிபார்த்த பின்னர் வேறு சில கருத்துக்கள் குறித்து விளக்கம் தரவேண்டுமென்று முதலமைச்சர்கள் விரும்பினர். அத்தகைய விளக்கத்தைப் பெற்ற பின்னர் மற்றொரு நாளில் மீண்டும் கூடி இப் பிரச்சினை குறித்து விவாதிப்பது எனவும் ஒப்புக்கொள்ளப்பட்டது. தற்போது இந்திய அரசு காவிரி ஆய்வுக் குழுவின் அலுவல் கால அளவை 15—5—1973-லிருந்து மேலும் மூன்று மாத காலத்திற்கு நீட்டித்துள்ளது.

Thiru N. DENNIS : May I know whether the Government have represented to the Union Government to set up a Tribunal ?

[1973 ஆகஸ்ட் 6

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : டிரிபியூனல் பற்றி இப்பொழுது இல்லை. பாக்ட் ஃபைண்டிங் கமிட்டியை மத்திய அரசு நியமித்தார்கள். அவர்கள் சில புள்ளிவிவரங்களைத் தயாரித்திருக்கிறார்கள். அந்தப் புள்ளிவிவரங்களைச் சரிபார்க்கும் படி முதல் அமைச்சர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். புள்ளிவிவரங்களைச் சரிபார்ப்பதற்காக குழு மூன்று மாதம் நீடிக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றி முதல் அமைச்சர்கள் மகாநாடு மீண்டும் கூடி முடிவெடுக்கும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த முக்கியமான மகாநாட்டிலே என்னென்ன முடிவுகள் எடுக்கப்பட்டன? இன்னும் குழுவின் பதவி காலத்தை நீடித்திருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்தக் காலத்திற்குள்ளாவது இறுதி முடிவு ஏற்படும் என்று நமது அரசாங்கம் கருதுகிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அந்தக் குழு தயாரித்த ரிப்போர்ட்டை மாநில முதல்வர்கள் ஆராய்ந்தார்கள். காவிரியில் மொத்தம் எவ்வளவு நீர் உருண்டு ஓடி வருகிறது என்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டார்கள். ஒவ்வொரு மாநிலத்திலும் எவ்வளவு ஏக்கர் பயிர் வைக்கப்படுகிறது என்ற புள்ளிவிவரங்கள் கொடுக்கப்பட்டன. அந்தப் புள்ளிவிவரம் சரிதானா என்று சரிபார்க்கும்படி பாக்ட் ஃபைண்டிங் கமிட்டியை முதல் அமைச்சர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதைச் சரிபார்த்துக் கொடுப்பதற்கு மூன்று மாத காலம் நீடித்திருக்கிறார்கள். 15–8–73-ல் அந்தக் காலம் முடிவடைகிறது. அநேகமாக கொடுத்துவிடுவார்கள் என்று நம்புகிறோம்.

திரு. என். கணபதி : இப்பொழுது காவிரி டெல்டாப் பகுதியில் அதிக உற்பத்தி செய்ய வேண்டும் என்ற அரசின் கொள்கைக்கு அதிகமாகத் தண்ணீர் தேவைப்படுகிறது. எனவே அதிக உற்பத்தியை கணக்கில் எடுத்துக்கொண்டால், அதிகமாகத் தண்ணீர் தேவை என்பதை தமிழக அரசு வற்புறுத்தியிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நாம் பெற்று வருகின்ற தண்ணீரின் அளவு குறையக் கூடாது என்பது தான் இந்த அரசாங்கத்தின் நோக்கம்.

1973 ஆகஸ்ட் 6]

THIRU B. VENKATASWAMY : May I know the names of members of this Fact Finding Committee and whether that Committee has given a favourable report and more water to Tamil Nadu?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இதிலே, யார் உறுப்பினர்களாக இருக்கிறார்கள் என்ற புள்ளிவிவரம் என்னிடம் இல்லை. முழுவதும் டெக்னிஷியன்ஸ் இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். தமிழக அரசுக்கு மாத்திரம் அல்ல எந்த அரசுக்கும் சிபார்சு செய்யக்கூடாது. உண்மை நிலையை விளக்கிச் சொல்ல வேண்டும் யாருக்கும் சிபார்சு, பரிந்துரை செய்யக் கூடாது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : ஹொகநகல் ஸ்கீம் பற்றி ஏதாவது பேசப்பட்டதா, அது சம்பந்தமாக அண்மையில் சில கருத்துக்களைப் பத்திரிகை வாயிலாகப் பார்த்தோம். அது சம்பந்தமாக ஏதாவது பேச்சுவார்த்தை நடந்ததா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதைப்பற்றி பிரச்சினை அங்கே எழவில்லை. பத்திரிகைகளிலே தான் நாம் பார்க்கிறோம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : இந்த பாக்ட் ஃபைண்டிங் கமிட்டி ரிப்போர்ட்டு கொடுப்பதற்கு முன்பாக மைசூர் அரசாங்கம் அங்கே அணை கட்டிக்கொண்டிருந்தால், ஹேமாவதி அருகில் அணை கட்டினால், இந்த பாக்ட் ஃபைண்டிங் கமிட்டியின் ரிபோர்ட்டு வருவதற்குள் முன்பாக அப்படி அங்கே அணை கட்டி முடித்து விட்டால், அந்த ரிபோர்ட்டு வந்தாலும் கூட பயன் இல்லாத வகையில் போய்விடுமே? ஆகவே, அந்த ரிபோர்ட்டு வரும் வரையில் அங்கே அணைகள் கட்டாமல் இருப்பதற்கு மத்திய அரசாங்கத்தினிடம் வற்புறுத்தி ஏதாவது உத்தரவாதம் பெறுவதற்கு இந்த அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறதா? அப்படி முயற்சி எடுத்துக் கொண்டிருந்தால், அந்த முயற்சி எந்த அளவுக்கு வெற்றி பெற்றிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூற முடியுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, பாக்ட் ஃபைண்டிங் கமிட்டி ரிபோர்ட்டு வெளியிடுகிற வரையில் எந்த மாநில அரசும் நீர் தேக்கங்களில் அதிகமாக நீரை தேக்கி

வைக்கக்கூடாது, இம்பௌண்டு பண்ணக்கூடாது என்று எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. சென்ற வாரம் பத்திரிகையில் வந்த ஒரு செய்தியின்படி மைசூர் அரசாங்கம் ஒரு அணையிலே 5 டி.எம்.ஸி. தேக்கி வைப்பதாகச் செய்தி வந்திருக்கிறது. அது குறித்து மத்திய அரசுக்குத் தமிழக அரசு தனது நிலையை விளக்கி எழுதுவதாக இருக்கிறோம்.

திரு. எம். சுரேந்திரன்: மேற்படி கமிட்டியினால் சேகரிக்கப் பட்டிருக்கிற புள்ளிவிவரங்களைப் பொறுத்தவரையில் உண்மை விளக்கங்கள் சம்பந்தமாக ஆராயப்பட்டதில் நாம் எந்தெந்த அம்சங்களை ஏற்றுக்கொள்வதாக இருக்கிறது, எந்தெந்த அம்சங்களை ஏற்றுக்கொள்ள முடியாமல் இருக்கிறது என்று கூற முடியுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன். அவர்கள் உண்மை நிலையைத் தான் சொல்ல வேண்டும். யாருக்கும் எந்த சிபார்சும் செய்யக்கூடாது. அந்த முழு விவரங்களையும் வெளியே சொல்வதற்கு இல்லை. முழு விவரங்களும் கொடுத்ததற்குப் பிறகு, முதல் அமைச்சர்கள் மகாநாட்டிற்குப் பிறகு வேண்டுமானால், இந்த அவைக்குச் சொல்லலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, காவிரி நீர் பிரச்சினை சம்பந்தமாக அனைத்துக் கட்சியினர் குழு ஒன்று இங்கே அமைக்கப்பட்டது. இந்தக் குழுவிலாவது இந்த பாக்ட் ஃபைண்டிங் கமிட்டி அறிக்கை வைக்கப்பட்டதா ? இல்லையென்று சொன்னால், அது வைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அனைத்துக் கட்சித் தலைவர்கள் குழுவில் இதுபற்றி குறிப்புகள் சொல்லப் பட்டிருக்கின்றன.

திரு. என். கே. பழனிசாமி: சர்க்காருடைய கருத்து ஏற்கனவே உபயோகிக்கப்பட்டு வரக்கூடிய தண்ணீரைக் குறைக் கக்கூடாது என்பது தான் என்று கனம் மந்திரி அவர்கள் கூறினார்கள். இதை மற்றவர்கள் ஏற்றுக் கொண்டார்களா ? நாம் அதிகப்படியாக ஏற்கனவே உபயோகிக்கிறோமே? கனம் மந்திரி அவர்கள் அதைப்பற்றி அறிவார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அதிகப்படியாக உபயோகிக்கிறோம் என்பது பிரச்சினை அல்ல. நமக்கு வருகிற தண்ணீர் எந்த அளவிலும் குறையக்கூடாது என்பது தான் கருத்து. அந்தக் கருத்தை அரசாங்கம் நழுவவிடப்போவதில்லை. கடைசி வரையில் வலியுறுத்தி பெற்றே தீருவோம்.

திரு. கே. என். குமாரசாமி: இப்படிப்பட்ட நதி நீர் தகராறுகள், பிரச்சினைகள் மாநிலத்திற்கும் மாநிலத்திற்கும் இல்லாமல் செய்வதற்கு மத்திய அரசாங்கம் நதிநீர் பிரச்சினையை தன்னுடைய அதிகாரத்தின் கீழ் கொண்டு வருவதற்கு முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்களே? அந்த முயற்சியில் காவிரிப் பிரச்னையும் உள் அடங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அந்தக் கருத்தை நாம் ஒத்துக்கொள்ளவில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH: At the time of construction of Mettur Dam, a Fact Finding Committee prepared an elaborate report and submitted it to Government. May I know whether this Fact Finding Committee went through that report and further whether they inspected the entire area where Cauvery flows and had given correct information ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இந்த 'பாக்ட் ஃபைன்டிங் கமிட்டியினர்' சமீபத்தில் தமிழ்நாட்டிற்கு வந்து மூன்று நாட்கள் இங்கே தங்கியிருந்து, ஒரு விவர அறிக்கை தயாரித்திருக்கிறார்கள்.

திரு. ஏ. எம். இராஜா: தலைவரவர்களே, இந்தக் கமிட்டியில் தமிழ்நாட்டிலுள்ளவர்கள் யாரேனும் இருக்கிறார்களா ? தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் இல்லை என்றால், இனிமேலாவது தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களும் இடம் பெற நமது அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களும் அந்தக் கமிட்டியில் இருக்க வேண்டுமென்று அவசியம் இல்லை. அரசாங்க தஸ்தாவேஜ்கள் இருக்கின்றன. அவைகள் போதுமான சாட்சியங்களாக இருக்கின்றன.

[1973 ஆகஸ்ட் 6

சென்னை துறைமுகத்தில் இயந்திரம் புகுத்தல் திட்டம்

*38 வினா—திரு. அ. தேவேந்திரன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை துறைமுகத்தில், இரும்புக் கனி ஏற்றுமதித் துறையில் இயந்திரம் புகுத்தல் திட்டம் நிறைவேற்றப்பட இருப்பதை இவ்வரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், அதனால் வேலை இழக்கும் இம்மாநிலத்தை சேர்ந்த தொழிலாளர்களுக்கு மாற்று வேலை தரும்படி மத்திய அரசை தமிழ்நாடு அரசு கோரியுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) சென்னைத் துறைமுகம் இரும்புக்கனியை இயந்திரங்கள் மூலம் எடுத்துக் கப்பலில் ஏற்றுவதற்கு அதன் வெளித்துறையில் (outer docks) வசதிகள் வைத்துள்ளது. ஆண்டொன்றுக்கு 5 மில்லியன் டன் இரும்புக் கனியை இயந்திரங்கள் மூலம் கப்பலில் ஏற்றி ஏற்றுமதி செய்வதற்கும், ஏற்றுமதி அளவை ஆண்டொன்றுக்கு 8 மில்லியன் டன்னாகப் படிப்படியாக உயர்த்தவும் தேவையான வசதிகளைப் பெற்றுள்ளது. கப்பல்களில் கனியை விரைவாக ஏற்றுவதற்கும், இரும்புக்கனி வாணிபத்தைப் பெருக்கவும் இந்த வசதிகள் இன்றியமையாதவை ஆகும். இந்த ஏற்பாடு 1975 தொடக்கத்தில் தயாராகிவிடும் என எதிர்பார்க்கப் படுகிறது. இத்திட்டம் நிறைவு பெற்றவுடன் பொறியியல் வல்லுநர்கள், தொழில் நுட்ப பணியாளர்கள் மற்றும் பயிற்சி பெற்ற தொழிலாளர் பலருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும். கனிப் பொருள்களை ஏற்றும் பணியில் தற்போது ஈடுபட்டுள்ள பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் அனைவரும் தொடங்கக் கருதப்பட்டுள்ள திட்டத்தில், பணியில் இருத்திக் கொள்ளப்படுவார்கள். தவிர தேர்ச்சி பெற்ற பணியாளர்கள், பொறியாளர்கள் சிலர் கூடுதலாகப் பணியில் சேர்த்துக்கொள்ளப்படுவர்/பதவி உயர்வு கொடுக்கப்படுவர். தற்போது இரும்புக்கனியை கப்பலில் ஏற்றும் பணியில் ஈடுபட்டுள்ள சில தொழிலாளர்கள் தேவைக்கு அதிகமாகிவிடலாம். இந்த அதிகப்படியான தொழிலாளரின் எண்ணிக்கை இந்தக் கனிப்பொருள்கள் ஏற்றும் பிரிவு தொடங்கப்

1973 ஆகஸ்ட் 6]

படும்போது இருக்கும் பிற வாணிப வளர்ச்சியைப் பொறுத்து அமையும். பணியாளர்களை வேறு வேலைக்கு மாற்றுதல், தன்னிச்சையாக ஓய்வு பெறும் திட்டங்களைக் கொண்டு வருதல் ஆகியவை குறித்துப் பொருத்தமான திட்டங்களை வகுப்பது குறித்து 1974 ஆம் ஆண்டில் துறைமுக அதிகாரிகளால் நிலைமை ஆய்வு செய்யப்படும்.

Tuticorin Harbour Project

* 39 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state the reasons for the delay in completing the Tuticorin Harbour Project?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தூத்துக்குடி துறைமுகத் திட்டம் மத்திய அரசு திட்டமாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஒப்பந்தக்காரர்களுக்கு ஏற்பட்ட சில இன்னல்கள்தான் இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் ஏற்படும் தாமதத்துக்கு முக்கிய காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தக்காரர்களின் பிரச்சினையை மத்திய அரசு கவனித்தது. தூத்துக்குடி துறைமுகத் துறை முழு அளவுக்கில்லாவிட்டாலும் ஓரளவு குறிப்பிட்ட அளவுக்காவது செயல்படும் விதத்தில் 1973 ஆம் ஆண்டு இறுதிக்குள் துறைமுகம் பயன்படும் என எதிர்பார்க்கப் படுகிறது.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டகாலத் தொடக்கத்தில் துறைமுகத் திட்டப்பணி முழுவதும் முடிக்கப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. என். கே. பழனிசாமி : சார், இந்தத் திட்டத்திற்கு ஏற்கெனவே மதிப்பிடப்பட்டத் தொகையிலிருந்து எவ்வளவு குறைக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்கு முதலில் போட்ட மதிப்பு 24.40 கோடி ரூபாய். இப்போது போடப்பட்டிருக்கும் மதிப்பு 21.76 கோடி ரூபாய் ஆகும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, ஒப்பந்தக் காரர்களுக்கு என்ன தகராறு ஏற்பட்டது ? அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஒப்பந்தக்காரர்களுக்கு பணக் கஷ்டம் ஏற்பட்டது என்று தகவல் தெரிகிறது. மத்திய அரசு அதைப்பற்றிப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

திரு. இரா. இராமலிங்கம்: தலைவரவர்களே, இந்தத் திட்டம் ஏற்கெனவே திட்டமிட்டபடி முடிவுபெறாமல் காலதாமதம் அடைவதால் 1974-ம் ஆண்டில் வேலை தொடங்கப்படவேண்டிய உரத்தொழிற்சாலையும் தாமதமாகத் தொடங்கப்பட வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஏனென்றால் அதற்குத் தேவையான நாப்தாவை இறக்குமதி செய்வதில் காலதாமதம் இருக்கும் என்று கருதப்படுகிறது. ஆகவே, மத்திய அரசுக்கு இதைப்பற்றித் தெரிவித்து, துரித நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இந்தச் சிரமத்தைப்பற்றி தொழில் துறையிலிருந்து மத்திய அரசுக்கு கடிதம் எழுதியிருக்கிறோம். மத்திய அரசும் அதைப்பற்றிப் பரிசீலித்து, விரைவிலேயே முடிவுபெற ஏற்பாடு செய்வதாக எழுதியிருக்கிறது.

திரு. வை. பாலசுந்தரம்: இந்தத் தூத்துக்குடி துறைமுகத் திட்டத்தை விரைவாக அமுல்படுத்துவதற்கான முயற்சிகளை மத்திய அரசு எடுத்துக்கொள்ளவில்லை; அக்கறை காட்டவில்லை என்று சொல்லப்படுவது உண்மையா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மத்திய அரசு அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை என்று சொல்லமுடியாது. அந்தத் திட்டத்தை நிறைவேற்றக்கூடிய ஒப்பந்தக்காரர்களுக்குப் பணக் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அதைப்பற்றி மத்திய அரசுக்கு எழுதி, காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அவர்களும் அதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்; துரித நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்புகிறோம்.

திரு. சு. துரைசாமி: தலைவரவர்களே, முதலிலே 24 கோடி ரூபாய் அளவுக்குத் தயாரிக்கப்பட்ட திட்டம் இப்போது 21 கோடி ரூபாய்க்குக் குறைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. துறைமுகமாக சரியாக அமையப்பெறாத வேறு பல மாநிலங்களுக்கு 40 கோடி ரூபாய்வரை மத்திய அரசு கொடுக்கும்போது தமிழ்நாட்டுக்கு ஒதுக்கியத் தொகையையும் குறைத்திருப்பதற்கு என்ன காரணம்? அதை வற்புறுத்திப் பெற நமது அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: முதலிலே இந்தத் திட்டம் ஆறு பர்த் போடவேண்டுமென்று ஆரம்பிக்கப்பட்டது. இப்போது நான்கு பர்த் தான் போட இருக்கிறார்கள். அதனால்தான் இந்தக் குறைவு ஏற்பட்டிருக்கிறது. திட்டம் முடிந்த பின்னால்தான் முழு செலவு விபரமும் தெரியும்.

Cyclone Warning Radar

* 40 Q.—THIRU R. R. MUNUSAMI:
THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether it is a fact that cyclone warning radar has been fixed in Madras City; and

(b) if so, that details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) சென்னையிலிருந்து 400 கிலோ மீட்டருக்குள் புயல் காற்று உருவாவதையும், அதன்போக்கினையும் கண்டறியும் திறன் வாய்ந்த, அதிக சக்தி வாய்ந்த புயல் எச்சரிக்கை ராடார் கருவி ஒன்று ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகக் கட்டிடத்தின்மேல் பொருத்தப் பட்டுள்ளது. அது தொடர்ச்சியாக இயங்க 9—1—1973 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இந்த ராடார் சாதனம், புயல் காற்றின் போக்கினை முன்னதாகவே கண்டறிவதற்காகவும், எச்சரிக்கை வழங்குவதற்காகவும் இந்திய வானிலை ஆராய்ச்சித் துறை வகுத்துள்ள மேம்பாட்டுத் திட்டத்தின் பகுதியாகும்.

Training courses for farmers

* 41 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether it is a fact that the farmers training courses are being imparted at the District Livestock Farm at Hosur in Dharmapurai district; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம்.

(இ) இப் பேரவையில் விவர அறிக்கை@ ஒன்று வைக்கப் பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இந்தப் பயிற்சி பெற்றவர்களுக்கு அரசாங்க வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறதா? வேறு சில மாவட்டங்களுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப் படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, அரசாங் கத்தில் வேலை கொடுக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு இந்தத் திட்டம் தொடங்கப்படவில்லை. இந்தப் பயிற்சியைப் பெற்றவர்கள் தாங்களாகவே தொழில் தொடங்கவேண்டுமென்ற நோக்கத்தில் தான் பயிற்சியளிக்கப்படுகிறது. இந்தப் பயிற்சியைப் பெறு பவர்கள் எல்லோரும் 5-வது வகுப்புவரையில்தான் படித்திருக் கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு அரசாங்கத்தில் வேலை அளிக்க இடமில்லை.

THIRU B. VENKATASWAMY : Sir, may I know from the Hon. Minister how many people have been selected so far and how many of them have been trained and whether any report has been received that the training is useful to the farmers?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையிலே வைக்கப்பட்டிருக்கிறது. அதிலே எத்தனைபேர் பயிற்சி பெற்றார்கள், அதன் நோக்கம் என்ன என்பதைப்பற்றி எல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : சபாநாயகர் அவர்களே, இப்படிப்பட்ட ஒரு நல்ல பயிற்சித் திட்டத்தை ஹோசூரில் மாத்திரம் நடத்துவதன் காரணம் என்ன? தமிழக அரசு செய்திச் சுருளில் இப்படிப்பட்ட நல்ல பயிற்சித் திட்டத்தைப்பற்றிய செய்தியையே எங்களால் பார்க்க முடியவில்லை. எதை எதையோ செய்திச் சுருளில் காட்டி பணத்தை வீணாக்குவதை விட இப்படிப் பட்ட திட்டத்தைப்பற்றி மக்கள் அறியும் வகையில் செய்திச் சுருள் தயாரிக்கப்படுமா?

@ 391–395-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப் பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, செய்திச் சுருளில் பணத்தை வீணாக்குவது என்று சொல்வதோ அல்லது செய்திச் சுருளை வீணாக்குவது என்று சொல்வதோ தவறு என்று நான் கருதுகிறேன். அதற்கும் இந்த கேள்விக்கும் சம்பந்தமே இல்லை. ஹோசூரில் ஒரு கால்நடைப் பண்ணை நீண்டகாலமாகவே நடைபெற்றுவருகிற காரணத்தால், இந்தத் திட்டம் அங்கே செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திரு ஏ. எம். இராஜா : ஹோசூரில் நடத்தப்படுகின்ற இந்தப் பயிற்சித் திட்டத்தில் பன்றி வளர்ப்பு, கோழி வளர்ப்பு ஆகியவை பற்றிய பயிற்சிதான் கொடுக்கப்படுவதாகத் தெரிகிறது. இப்போது நாம் விவசாயத்தை 'மெகனைஸ்' பண்ணுவது என்று சொல்லக் கூடிய இந்த நேரத்தில் டிராக்டர் ரிப்பேர், ஸ்பிரேயர் ரிப்பேர் போன்ற பயிற்சிகளும் கொடுக்கப்படுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அந்தப் பயிற்சிகள் விவசாயத் துறையில் கொடுக்கப்படுகின்றன. இது கால்நடை வளர்ப்புப் பயிற்சி. இதற்கு அந்தப் பயிற்சிகள் தேவையில்லை.

திரு. கோ. இளங்கோவன் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத் தில் ஒரத்தநாட்டில் நீண்டகாலமாக ஒரு கால்நடைப் பண்ணை இருந்துவருகிறது. அங்கும் இந்தப் பயிற்சி கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, அதற்குத் தனிக் கேள்வி தேவை.

Regulated Markets in Madurantakam and Uthiramerur

*42 *Q.*—THIRU R. R. MUNUSAMI : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to set up regulated markets at Madurantakam and Uthiramerur in Chingleput district; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) & (இ) ஏற்கனவே மதுராந்தகம், உத்திரமேரூர் ஆகிய இடங்களில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் 31—1—1973 அன்று திறக்கப்பட்டுவிட்டன.

Tiruchirappalli as Corporation.

*43 Q.—THIRU N. DENNIS THIRU P. SOUNDARAPANDIYAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Tiruchirappalli Municipal Council has requested the Government to upgrade the Municipality into a Corporation; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) திருச்சி நகர மக்கட்தொகையும் நகராட்சியின் வருவாயும், ஒரு மாநகராட்சியாவதற்கு வேண்டிய தகுதி பெற்று இருப்பதால், திருச்சி நகராட்சியை மாநகராட்சியாக உயர்த்தக் கோரி, திருச்சி நகர் மன்றம் 10—5—1973-ல் ஒரு தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியுள்ளது. இக்கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, முனிசிபாலிட்டிகளை அப்கிரேட் செய்யும் விதத்தில் அவ்வப்போது பரிசீலனை செய்யப்படுகின்றதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பரிசீலனை செய்யப்பட்டுத் தான் உத்தரவுகள் அனுப்பப்படுகின்றன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்தக் கோரிக்கைக்கு எப்பொழுது முடிவெடுக்கப்படும்? அதில் ஸ்ரீரங்கத்தையும் சேர்க்க உத்தேசம் உண்டா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, திருச்சி நகரத்தின் மக்கட்தொகையோடு பக்கத்திலே இருக்கிற திருவெறும்பூர் போன்ற பகுதிகளையும் சேர்க்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியிருக்கிறார்கள். மற்றவற்றையும், எதை எதை சேர்க்கலாம் என்பதைப் பற்றி இப்பொழுது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. பரிசீலனை செய்யப்பட்ட பிறகு முடிவு அறிவிக்கப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, திருச்சி முனிசிப்பல் நகரத்தை மாநகரமாக்குவதற்கு திருவெறும்பூர் போன்ற பகுதிகளையும் சேர்க்கவேண்டுமென்று திருச்சி நகர் மன்றம் தீர்மானம் நிறைவேற்றியிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அது சம்பந்தமாக ஏதாவது ஆட்சேபணைகளோ, புகார்களோ வந்திருக்கின்றனவா? அப்படி எதுவும் வரவில்லையென்றால், அதை அடுத்த ஆண்டாவது துவங்குவதற்கு ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, 10—5—1973-லே தான் தீர்மானமே நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்டிருக்கிறது. அவர்கள் திருவெறும்பூர் பகுதியை மாத்திரமல்ல, திருவரங்கம், பொன்மலை போன்ற பல பகுதிகளையும் சேர்க்க வேண்டுமென்று தீர்மானம் அனுப்பியிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் பரிசீலனை செய்து மற்றவர்களுடைய ஒப்புதல்களையும் பெற வேண்டியிருப்பதால், கொஞ்சம் காலதாமதம் இருக்கிறது.

திரு. ஆ. முனியாண்டி : வத்தலகுண்டை மாநகராட்சியாக்க வேண்டுமென்று செய்ற்குறிப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. அது எந்த நிலையிலே இருக்கிறது என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அதுபற்றிய தகவல் இல்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இதற்கிடையிலே திருச்சி நகரசபையைக் கலைப்பதற்கு அரசு முயல்கிறது என்ற குற்றச்சாட்டு வருகிறதே, அப்படியிருந்தால், அந்நகரசபை கலைக்கப்பட மாட்டாது என்ற ஒரு உத்தரவாதத்தை அமைச்சர் அவர்கள் வழங்குவார்களா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, காரணமில்லாமல் எதுவும் கலைக்கப்பட மாட்டாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, திருச்சி கார்ப்பரேஷன் ஆகும்போது திருவரங்கத்தை சேர்த்துக் கொள்வதில் என்ன கஷ்டம் இருக்கிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

[1973 ஆகஸ்ட் 6

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, திருவரங்கம் நகரசபையினுடைய ஒப்புதலைப் பெறவேண்டும். வருமானம், மற்றவற்றைப்பற்றி என்ன சொல்கிறார்கள் என்பவற்றையும் தெரிந்துகொண்ட பிறகு பரிசீலிக்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, திருச்சியை நகராட்சியாக்கும்போது, சென்னையிலே உள்ளது போல் ஒவ்வொரு ஆண்டும் புதுப்புது மேயர் தேர்ந்தெடுக்கப் படுவது போன்ற முறை பின்பற்றப்படுமா அல்லது மதுரையின் அடிச்சுவடு பின்பற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : குழந்தை பிறந்ததற்குப்பிறகு பெயர் வைக்கப்படும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : திருவரங்கம் நகராட்சியிலிருந்து ஏற்கனவே ஒரு கோரிக்கை அரசுக்கு அனுப்பப் பட்டிருக்கிறதா ? அது எந்த ஸ்டேஜில் இருக்கிறது என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : திருச்சி நகராட்சியோடு இணைப்பதற்கு வேண்டிய தீர்மானத்தினை நிறைவேற்றியிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அதை அறிந்த பிறகு தெரிவிக்கிறேன்.

மதுரை மாநகர எல்லைகள்.

*44 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாநகர எல்லைகளை விரிவுபடுத்தும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஆம். பரிசீலனையில் உள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இதில் எந்த எந்தப் பகுதியை சேர்ப்பதாக உத்தேசம் என்று அறிய விரும்புகிறேன்.

1973 ஆகஸ்ட் 6]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சியோடு சேர்ப்பதற்கு மதுரை மாநகராட்சி ஆணையர் பரிந்துரைத்துள்ளபகுதிகள், விளாங்குடி (பகுதி), தாத்தனேரி (பகுதி), செல்லூர் (முழுதும்), பீபிகுளம் (முழுதும்), தல்லாகுளம் (பகுதி), மானகிரி (முதல் பகுதி), சாத்தமங்கலம் (முழுதும்), வில்லாபுரம் (பகுதி), மாடக்குளம் (பகுதி), பொன்மேனி (பகுதி), ஆரப்பாளையம் (முழுதும்), சோக்கடை (பகுதி), ஆகியவை.

திருமதி த. ந. அனந்தநாயகி : இப்படிச் சேர்க்கப்படுகின்ற பகுதி மக்களுடைய எண்ணத்தைத் தெரிந்துகொள்வதற்கு வசதி இருக்கிறதா ? காரணம், கார்ப்பரேஷன், டவுன்ஷிப், முனிசிப் பாலிட்டி போன்று உயர்த்துவதால், வரிகள்தான் அதிகமாக வாங்கப்படுகின்றனவே தவிர, வசதிகள் பெருக வில்லையென்று மக்கள் கருதுகிறார்கள். ஆகவே, மக்களுடைய எண்ணத்தைத் தெரிந்துகொள்வதற்கு ஏதாவது வசதி இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பல இடங்களிலே, மாநகராட்சியோடு சேர்த்தால் வசதி வாய்ப்புகள் அதிகமாகக் கிடைக்கும் என்ற நோக்கத்தோடு தீர்மானங்கள் அனுப்பியிருக் கிறார்கள். இதுபற்றி, மாவட்ட ஆட்சித் தலைவர், நகராட்சி ஆணையர், மாநகராட்சி ஆணையர் ஆகியவர்கள் அடங்கிய குழு அமைக்கப்பட்டு, பரிசீலனை செய்யப்பட்டு, அதற்குப் பிறகு ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

திரு. எம். சுரேந்திரன் : நகரங்கள் ஒவ்வொரு நாளும் விரிவடைந்துகொண்டே வருகின்றன. ஆகவே, நகர எல்லைகளிலே இருக்கின்ற கிராமங்களையும் சேர்க்கவேண்டியது அவசியமாகின்றது. அப்படி எல்லைகளிலே இருக்கின்ற கிராமங்களையும் சேர்க்க நிரந்தரமான நடைமுறை நிலைமைகள் ஏதாவது இருக்கின்றனவா ? விரிவாக்குகின்ற நேரங்களில் அப்படி அந்தப் பகுதிகளையும் சேர்க்க நிரந்தரமான நடைமுறை, கொள்கை ஏதாவது வகுக்கப்பட்டிருக்கிறதா ? அப்படி இல்லையானால் வருங்காலத்திலே வகுக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

[1973 ஆகஸ்ட் 6

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: சிறுசிறு கிராமப் பஞ்சாயத்துக்கள் தங்களுடைய நிதிநிலை சரியில்லாத காரணத்தால் சிலபல இடங்களிலிருந்து நாங்கள் அவர்களோடு இணைந்து இருப்பது நல்லது என்றும், வேறு சில இடங்களிலிருந்து கஷ்டமாக இருக்கிறது. ஆகையினால் பிரிக்கப்பட வேண்டுமென்றும் கோரிக்கை அனுப்புகிறார்கள். இந்த இரண்டையும் பரிசீலனை செய்து அவ்வப்போது என்ன என்ன வகையிலே நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமோ அவைகளை எடுத்து, அதற்குப் பிறகுதான் அவைகளை சேர்ப்பதா அல்லது பிரிப்பதா என்று முடிவு செய்யப் படுகிறது.

திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம்.

*45 வினு—திரு. த. சோனையா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம் இரண்டாவது பி வகுப்பு ஒன்றியமாக எப்பொழுது மாற்றப் பட்டது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஊராட்சி கல்வி நிதி விசாரணைக்குழு செய்த பரிந்துரைகளின் அடிப்படையில் 1—4—1972-லிருந்து இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம் இரண்டாம் தர ஒன்றியமாக மீண்டும் மறுவகைப்படுத்தப்பட்டுள்ளது.

Procurement price of Paddy

* 46.Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state whether there is any proposal under the consideration of the Government to refix the procurement price of paddy in the state?

1973 ஆகஸ்ட் 6]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: 1973 ஆம் ஆண்டு மே திங்கள் 26 ஆம் நாள் முதல் நெல் கொள்முதல் விலையினைப் பின்வருமாறு அரசு மாற்றி அமைத்துள்ளது:—

26—5—1973 முதல் நெல் கொள்முதல் விலை.

உயர் நேர்த்தி ரகம் குவிண்டால் ஒன்றுக்கு	ரூ.	58
நேர்த்தி ரகம் குவிண்டால் ஒன்றுக்கு	ரூ.	56
நடுத்தர ரகம் குவிண்டால் ஒன்றுக்கு	ரூ.	53
மோட்டா ரகம் குவிண்டால் ஒன்றுக்கு	ரூ	49

திரு. என். கே. பழனிசாமி: இன்றைக்கு உரத்தினுடைய விலை, பூச்சி மருந்தினுடைய விலை எல்லாம் அதிகமாக இருக்கக் கூடிய சமயத்தில், இந்தமாதிரி விலை போதுமானதாக இல்லை என்று விவசாயிகள் சர்க்காரைக் கேட்டிருக்கிறார்களா? அப்படியானால் மத்திய சர்க்காருடைய அக்ரிகல்சுரல் பிரைஸ் பிக்சேஷன் கமிஷன் சிபாரிசுகள் அடிப்படையில், இதனைக் கூட்டிக் கொடுப்பதற்கு சர்க்கார் முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவர் அவர்களே, வருகின்ற சீசனுக்காக இந்தத் தொகையை அமுல் படுத்துவதா என்பதைப்பற்றி இப்பொழுது முடிவெடுக்கப்படும்.

திரு. எஸ். வடிவேல்: அவைத் தலைவர் அவர்களே, தை மாதத்திலே அறுவடை நடக்கும்போது 57 கிலோ கொண்ட மூட்டைக்கு விலை ரூ. 59. இன்றைக்கு பார்க்கும்போது ரூ. 40, 42-க்கு விற்கிறது. இதனால் உழுபவனுக்கும் நன்மை இல்லை, உண்பவனுக்கும்கூடப் பலன் இல்லை. இதனால், அரசே உழுபவனுடைய நலனையும், உண்பவனுடைய நலனையும் கவனிக்க, தானே எடுத்து நடத்த வேண்டும். அதுதான் சரியானதாக இருக்கும். முன்பெல்லாம் உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் என்று சொல்வார்கள். இப்பொழுது உழுதுண்டு வாழ்வாரே சாவார் என்கின்ற நிலைமை இருப்பதால், அதுபற்றி அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவர் அவர்களே, வாங்குவோரையும் உற்பத்தி பண்ணுவோரையும் பார்த்து சர்க்கார் விலை நிர்ணயித்திருக்கிறது. ஆகவே, விலை அதிகமாக வேண்டுமென்று நாங்கள் மத்திய சர்க்காரிடம் கூறினோம்.

அவர்கள் மொத்தத்திலே அதிகப்படுத்த வேண்டுமென்று கூறினார்கள். அதைத்தான் முதலிலேயே சொன்னேன். இப்பொழுது மத்திய விவசாய இயக்குநர் மூலம் அதை உயர்த்த வேண்டுமென்று யோசனை சொல்கிறார்கள். வருகின்ற சீசனிலே அதை அமுலாக்க அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்தச் சர்க்கார் உழுகின்றவன்பேரில் அக்கறை கொண்டிருக்கிறது என்பது உறுப்பினர் அவர்களுக்கு நிச்சயமாகத் தெரியும்.

திரு. கே. என். குமாரசாமி: ஏற்கெனவே மத்திய சர்க்கார் குவிண்டாலுக்கு ரூ. 6, ரூ. 8 என்று உயர்த்தி மற்ற மாநிலங்களுக்கும் நம்முடைய மாநிலத்திற்கும் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். இந்த ஆண்டு ரூ. 6 உயர்த்தியிருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. அது உண்மையா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: மத்திய சர்க்கார் ரூ. 10 அதிகமாக்க வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறது. அதைத்தான் முன்னேயே சொன்னேன், அடுத்த சீசனில் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, நமது உணவு கார்ப்பரேஷனால் ஒரு மூட்டை அரிசி என்ன விலைக்கு வாங்கப்படுகிறது, அது என்ன விலைக்கு விற்கப்படுகிறது என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் தருவார்களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இப்பொழுது முழு விவரம் என்னிடம் இல்லை. சென்னையிலே ஒரு கிலோ அரிசி ரூ. 1.10 காசு என்ற அளவிலே சர்க்காரால் விற்கப்படுகிறது. கன்னியாகுமரியிலே ஒரு கிலோ அரிசி ரூ. 1.40 என்னும் விலையில் விற்கப்படுகிறது. தஞ்சையிலே நாங்கள் ஓப்பன் மார்க்கெட்டிலே கொள்முதல் செய்கின்ற தொகை கூடுதலாக இருக்கின்ற காரணத்தாலேயும், திடீரென்று அரிசி தேவைப்பட்ட காரணத்தாலேயும் அங்கே விலை அதிகமாக இருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி: கோதுமை புரக்யூர்மென்ட் செய்கின்ற காலத்தில், டாஸ்க் போர்சஸ் மூலம், விவசாயிகளுக்கு உரம், பூச்சி மருந்துகள் போன்றவைகளை, நியாயமான விலையில்

கொடுப்பதுபோல், நம் மாநிலத்திலும் கொள்முதல் செய்வதற்கு, இம்மாதிரி உரம், பூச்சி மருந்துகள் எல்லாம் குறைந்த விலையிலே அவர்களுக்குக் கொடுப்பதற்கு, விலையை அதிகப்படுத்துவதுடன், இந்தச் சலுகைகளையும் கொடுக்க சர்க்கார் வழிவகை செய்யுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: நீண்ட நாட்களாக மத்திய சர்க்கார் கோதுமைக்குக் கொடுக்கின்ற இந்த சலுகையை அரிசிக்கும் கொடுக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கின்றோம். மத்திய சர்க்கார் அரிசிக்கு அந்தச் சலுகைகளைக் கொடுப்பதில்லை. நம்முடைய கனம் உறுப்பினருடைய கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களும் மற்றவர்களும் ஒன்றுசேர்ந்து கோதுமைக்குக் கொடுக்கின்ற சலுகைகளை அரிசிக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்க வேண்டும். உரம் போன்றவற்றிற்கு சப்சிடி கொடுத்தால் ஏதுவாக இருக்கும் என்று கேட்டிருக்கிறோம். அவர்களும் அதற்கு ஒத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, அரசு கொள்முதல் செய்கின்ற விலைக்கும், அது விற்கின்ற விலைக்கும் இடையிலே ஒரு மூட்டைக்கு 40 ரூபாய் வரையில் லாபம் இருக்கிறதே, அதைக் குறைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: உறுப்பினர் சொல்கின்ற மாதிரி 40 ரூபாய் அளவிலே அல்ல. என்னென்ன செலவுகள் ஆகின்றன என்பதையும் பார்க்க வேண்டும். அரைவைச் செலவு, கோடவுன் வாடகை, டிரான்ஸ்போர்ட் செலவுகள் இப்படிப்பட்ட செலவுகள் ஆகின்றன, அதற்கான புள்ளிவிவரங்களையெல்லாம் நான் வைத்திருக்கிறேன். நண்பர் அதை வேண்டுமானால் பார்த்துவிட்டு எதைக் குறைக்கலாம், அல்லது கூட்டலாம் என்று சொல்லலாம். நாம் மத்திய சர்க்கார் எப்.சி.யிலே நிர்ணயிக்கப்பட்டிருக்கின்ற ரேட்டிலேதான் போட்டிருக்கிறோம்.

THIRU B. VENKATASWAMY: Sir, the cost of cultivation, fertilisers and pesticides has been increasing day by day and at the same time the price of foodgrains cannot be increased because the interests of the consumers also have to be looked after. So, may I know from the Hon. Minister whether there is any proposal to introduce more mechanization so as to bring down the cost of cultivation?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவர் அவர்களே, மாநில சர்க்காரைப் பொறுத்தவரைக்கும் மத்திய சர்க்கார் நிர்ணயிக்கின்ற முறையிலே அதைப் பின்பற்றுகின்ற நிலைமைதான் இருக்கிறது. விவசாயத் துறையிலே விவசாயிகளுக்குத் தேவைப்படுகின்ற உரம், பூச்சி மருந்துகள் இவற்றினுடைய விலைகளை நிர்ணயிக்கும் அதிகாரமும் மத்திய சர்க்காரிடத்திலேதான் இருக்கிறது, நம்மிடத்திலே இல்லை. ஆகவே இங்கே இருக்கக்கூடிய விவசாயிகள் சிக்கனமாக விவசாயம் செய்யச் செய்யக்கூடிய சக்தி நம்முடைய மாநில அரசாங்கத்தினிடத்திலே இல்லை, மத்திய சர்க்கார்தான் செய்ய வேண்டும்.

திரு. கோவை செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, நாளுக்கு நாள் யூரியா, பாலிடால், என்ட்ரின் போன்ற மருந்துகளின் விலை ஏறிக்கொண்டே இருக்கிறது. இவற்றின் விலையைக் கட்டுப்படுத்தாவிட்டால்கூடப் பரவாயில்லை. நியாயமான விலையிலே அவை சொஸைடிகள் மூலம் கிடைக்க வேண்டும் என்று அரசாங்கம் உத்திரவு போட்டு இருந்தும்கூட அவை கிடைப்பது இல்லை. அவை கிடைக்குமாறு செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டுமென்று, பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாகக் கேட்டுக்கொண்டு, எதற்கெடுத்தாலும் மத்திய சர்க்கார் ஆர்டர், ஆர்டர் என்று சொல்லிக்கொண்டு இருக்காமல் அதை எடுத்துக் கிழித்துக் குப்பையிலே போட்டுவிட்டு நம்முடைய அரசாங்கம் நல்லமுறையிலே அதை ஏன் செய்யக்கூடாது என்பதை அறிய விரும்புகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: குப்பையிலே போடவேண்டுமென்று சொல்வது சரியல்ல. Let the hon. Member change the wording.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: மத்திய சர்க்கார் தலையிட்டு விலையைக் குறைப்பதற்குக்கூட மத்திய சர்க்கார் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஒத்துக்கொள்ளமாட்டார்கள் போல் தெரிகிறது. விவசாயிகளுக்குச் சங்கடங்கள் இருக்கின்றன என்பதை மத்திய சர்க்கார் உணரவேண்டும். எதாகிலும் ஒன்றிரண்டு கூடக்குறைய இருக்குமானால், சொசைடிகளில் வழங்கப்படுவதுபற்றி, கவனத்திற்குக் கொண்டுவந்தால் அரசாங்கம் கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: நீங்கள் கொள்முதல் செய்கிற விலைக்கும், நீங்கள் விற்கிற விலைக்கும் நிறைய இடைவெளி இருக்கிறது. கேட்டால் லாரி சார்ஜஸ், கோடவுன் வாடகை என்றெல்லாம் சொல்கிறார்களே, அது தனி நபர் போடுகின்ற செலவைவிட குறைவா அல்லது அதிகமா? அதிகமானால் அதைக் குறைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: நான் முன்பு சொன்ன மாதிரி, மத்திய சர்க்காரிலே எப்.ஸி.யால் கொடுக்கப்பட்டிருக்கின்ற ரேட்டைத்தான் நாம் வைத்துக்கொண்டிருக்கிறோம். கூடியவரையிலும் தனியார் போடுகின்ற விலையைவிடக் குறைவாகத்தான் இருக்கலாம் என்று நினைக்கிறேன்.

Ground water resources in Tiruttani taluk.

* 47. THIRU A. PARANDHAMAN: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether the ground water division has submitted its report with regard to the ground water resources in Tiruttani taluk; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) ஆம்.

(இ) இவ்வறிக்கை, திருத்தணி வட்டத்தில், 600 புதுக் கிணறுகள் தோண்டவும், 500 கிணறுகளை ஆழப்படுத்தவும், 1,000 விசையேற்றங்களைப் பொருத்தவும் வாய்ப்புகள் உள்ளன என்று பரிந்துரை செய்துள்ளது.

திருமதி த. ந. அனந்தநாயகி: இந்தப் பகுதிகளிலேயெல்லாம் ஒரு ஏக்கர் நிலம் வைத்திருக்கின்றவர்களுக்கு எல்லாம், கிணறுகள் தோண்டுவதற்கும், பம்புசெட்டுகள் போடுவதற்கும் வசதிகள் செய்து தருவதில்லை. அதை அரசு கவனிக்குமா? ஸ்மால் பார்மர்ஸ், ஒரு ஏக்கர் நிலம் வைத்திருக்கின்றவர்களுக்கு அப்படிப்பட்ட வசதிகளைச் செய்துதர அரசு முன்வருமா?

[1973 ஆகஸ்ட் 6

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : ஐ.டி.ஏ. ஸ்கீம், ஏ.ஆர்.சி. ஸ்கீம் படியும் சில விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகளின்படியும் மத்திய சர்க்கார் நிலநீர் ஆராய்ச்சித் துறையினர் சொல்கிறபடியும் விஸ்தீரணம் தகுந்தவாறு இருந்தால் கடன் கொடுக்கப்படுகிறது.

திரு. சி. ஆறுமுகம் : முன்பு இருந்த ஸ்கீம் நார்மல் ஸ்கீமாக இருந்தது. இப்பொழுது ஐ.டி.ஏ. ஸ்கீம், ஏ.ஆர்.சி. ஸ்கீம் என்று கொண்டுவந்திருக்கிறார்கள். இதனால் ஒன்றிரண்டு ஏக்கர் வைத்திருக்கின்றவர்களுக்கு வசதிகள் கிடைப்பதில்லை. அது மட்டுமல்ல, கடலோரப் பகுதிகளிலே 6 மைல்களுக்கு அப்பால் உள்ள கிணறுகளுக்குத்தான் கொடுப்போம் என்று சொல்கிறார்கள். எங்கள் பகுதியிலே கடலோரப் பகுதிகளிலேகூட நல்ல நஞ்சை நிலங்கள் இருக்கின்றன. எனவே அந்த விதிமுறையைத் தளர்த்த அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : ஐ.டி.ஏ. ஸ்கீம், ஏ.ஆர்.சி. ஸ்கீம் வந்த பிறகு சில இடங்களில் பாதிக்கப்படுகின்றது என்று பேசப்படுகிறது. பாதிக்கப்படாத அளவில் இப்பொழுது நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

Milk Powder Plant.

* 48 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether the Tamil Nadu Dairy Development Corporation have proposals under consideration to start a skimmed Milk Powder Plant in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம், மதுரையில் பால் மாவுத் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளது. நாளொன்றுக்கு 10 டன் பால் மாவு உற்பத்தி செய்யும் திறனுடையதாய் இத் தொழிற்சாலை அமையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இது நாளொன்றுக்கு 1,00,000 லிட்டர் பால் தயாரிக்க இயலும். வட மாவட்டமொன்றில் இதைப்

1973 ஆகஸ்ட் 6]

போன்றதொரு பால் மாவுத் தொழிற்சாலை அமைக்கவும் தமிழ்நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகத்திடம் செயற்குறிப்புகள் உள்ளன. இந்தத் தொழிற்சாலை பற்றிய விவரங்கள் இன்னும் தயாரிக்கப்படவில்லை.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, எப்பொழுது அது ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இந்த பால் பவுடர் தொழிற்சாலை மதுரையிலே உள்ள பால்பண்ணையிலே இப்பொழுது அமைக்கப்படுகிறது. சுமார் ஓர் ஆண்டுக் காலத்திற்குள் அதனுடைய வேலை முடியும் என்று எதிர்பார்க்கலாம்.

திரு. சொ. காவேரிமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலே ஆரம்பிக்கப்படக்கூடிய அந்தத் தொழிற்சாலைக்கு எவ்வளவு மூலதனம் போடப் போகிறார்கள்? அது இப்பொழுது இருக்கிற மில்க் புராஜக்ட்க்குப் பக்கத்தில் துவக்கப்படுமா அல்லது வேறு இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தற்போதுள்ள பால் பண்ணைக்கு அருகிலே அந்தத் தொழிற்சாலை அமைக்கப்பட இருக்கிறது. தமிழ்நாடு பால் பண்ணை வளர்ச்சிக்கழகத்தின் மூலம் 21 லட்சம் ரூபாய் செலவில் இந்தத் திட்டம் அமைக்கப்பட இருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, இன்றைக்கு மதுரையிலே உள்ள பால்பண்ணையிலே அதனுடைய கெப்பாசிடி அளவுக்கு உற்பத்தியாகாமல் இருக்கிறதே, அந்த அளவிற்கு உற்பத்திசெய்ய ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தற்போதுள்ள உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், இந்தத் தொழிற்சாலை ஏற்படும் நிலையில் அன்றாடத் தேவையான 1 லட்சம் லிட்டர் பால் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய முறையிலேயும் திட்டம் தயாரிக்கப்பட்டு இருக்கிறது. ஆப்பரேஷன் ப்ளட் ஸ்கீம் என்ற அடிப்படையிலே மாடுகளை நல்ல முறையிலே வளர்ப்பதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

[1973 ஆகஸ்ட் 6

கோயில்களைப் புதுப்பிக்க மானியம்.

*49 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1972-73-ம் ஆண்டில், இந்து அறநிலையப் பாதுகாப்புத்துறை மூலம் தமிழகத்திலுள்ள கோயில்களைப் புதுப்பிக்க மானியமாக வழங்கப்பட்ட தொகை எவ்வளவு, மாவட்டவாரியாக ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : 1972-73-ம் ஆண்டில் மாவட்டவாரியாக கோயில்களுக்கு அரசு அளித்த நிதி உதவியின் விபரம் :—

வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும். (1)	மானியத் தொகை. (2)
1 சென்னை	5,000
2 செங்கல்பட்டு	75,000
3 வட ஆற்காடு	65,000
4 தென்னாற்காடு	70,000
5 சேலம்	30,000
6 கோயம்புத்தூர்	60,000
7 தஞ்சாவூர்	90,000
8 திருச்சிராப்பள்ளி	30,000
9 ராமநாதபுரம்	30,000
10 திருநெல்வேலி	20,000
11 கன்னியாகுமரி	15,000
ஆக மொத்தம்	4,90,000

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்த மானியத் தொகை எந்த அடிப்படையிலே வழங்கப்படுகிறது என்பதையும், இதற்கு மத்திய அரசு மானியம் ஏதேனும் கொடுக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, மத்திய அரசு எந்தவிதமான நிதியுதவியும் அளிப்பது இல்லை. கோயில்களின் நிதிவசதிகளைப் பொறுத்தும், திருப்பணிக் குழுவினர் வசூல் செய்கிற நிலைமையைப் பொறுத்தும், திருப்பணிக்குத் தேவையான நிதியின் அளவைப் பொறுத்தும் நிதிவசதிகளைப் பகிர்ந்தளிக்கிறோம்.

1973 ஆகஸ்ட் 6]

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொடுத்த புள்ளிவிவரங்களில், வட ஆற்காடு மாவட்டத்திற்காக இதற்கு என்று குறைவான தொகைதான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. மொத்தத் தொகையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சரிசமமாகப் பங்கிட்டு அளிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, எல்லா மாவட்டங்களிலும் சமமான அளவிற்குக் கோயில்களின் எண்ணிக்கை இல்லை என்பதை உறுப்பினர் அவர்கள் அறிவார்கள்.

திரு. அ. தேவேந்திரன் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திற்கு 90 ஆயிரம் ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறார்கள். அதிலே ராஜராஜேசுவரத்திற்கு ஏதாவது நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தனிக் கேள்வி போடவும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : இதிலே சுமார் 4 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தாலும்கூட, பாடல்பெற்ற பல கோயில்கள் பாழடைந்த நிலையிலே இருக்கின்றனவே, அதற்காக சட்டசபை அங்கத்தினர்கள் கொண்ட ஒரு உயர் மட்டக் குழுவை நியமித்து எந்த எந்தக் கோயில்களை உடனடியாகச் செப்பனிட வேண்டும், நிவாரணம் கொடுக்க வேண்டுமென்ற முடிவுகளை எடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அப்படி கோயில்களெல்லாம் அதிகமாகப் பழுதடைந்திருந்தால் 1967-க்கு முன்னால் 2 இலட்சம் ரூபாய் மட்டும் கொடுத்த உதவியை இன்றைய தினம் 6 இலட்சம் ரூபாயாக அதிகப்படுத்தியிருக்கிறோம்.

மலைக்கோட்டைக் கோயிலுக்கு மின்சார இழுவை ரயில்.

*50 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :**
திரு. என். கிட்டப்பா :
திரு. என். கே. பழனிசாமி : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மலைக்கோட்டை கோயிலுக்கு மின்சார இழுவை ரயில் துவக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ஆம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இதை எவ்வளவு ரூபாய் செலவில் போடுவதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ளது ? இந்த நிதியை யார் ஏற்றுக் கொள்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, சுமார் 5 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்தக் கோயிலின் நிதியும் அதற்கு உபயோகப்படுத்தப்பட விருக்கிறது. போதுமான நிதியில்லாமல் இருந்தால் பக்கத்துக் கோயில்களிலிருந்து உதவி செய்யப்படும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர்வர்களே, இதற்கான பணி எப்பொழுது துவங்கப்படவிருக்கிறது என்பதை அறிய இயலுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, மின்சார இழுவை இரயில் ஏற்கனவே பழனி கோயிலில் அமைக்கப் பட்டுள்ளது. அந்த இரயிலைத் தயார் செய்த மின்சார வாரியத் திடம் இதுபற்றித் தொடர்பு கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கான விவரங்களை அவர்கள் சேகரித்து வருகிறார்கள். அவர்கள்மூலம் தான் இந்தப்பணி தொடங்கப்படவிருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி : தலைவரவர்களே, எப்பொழுது இந்தத் திட்டம் பூர்த்தியாகும் என்று உத்தேசிக்கப்பட்டிருக் கிறது ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, இதற்கான இயந்திரங்களையெல்லாம் அளிக்கும் பொறுப்பை மின்சாரத் துறை ஏற்றுக்கொண்டுள்ளது. அப்படி அளிக்கும் அந்தப் பொறுப்பை அவர்கள் பூர்த்தி செய்து கொடுத்தவுடன் வெகு சீக்கிரத்தில் முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, சுமார் 1½ ஆண்டுக் காலத்தில் முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. இரா. மாணிக்கவாசகம் : தலைவரவர்களே, திருச்சி மலைக் கோட்டைக்கு இரயில் அமைப்பதைப்போன்று வேறு மலைக் கோயில்கள் எதற்காவது அமைக்கத் திட்டமிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, சேலம் மாவட்டம் திருச்செங்கோடு கோயிலிலும், இங்கே பக்கத்திலிருக் கின்ற திருக்கழுக்குன்றம் வேதபுரீஸ்வரர் கோயிலிலும் இதுபோல இரயிலைத் துவக்கும் எண்ணம் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. நடைமுறைக் கேள்விகள்.

(அ) அமைச்சரவை மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானத்திற்கு முன் ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொள்வது குறித்து.

Dr. H. V. HANDE : On a point of Order, Sir. A couple of days ago as per the decisions in the Business Advisory Committee, after the No-confidence motion was moved the Hon. Speaker after listening to the views of the Hon. Chief Minister, gave an assurance that adjournment motions would be taken up and then he was good enough to take up the adjournment motion relating to Kanyakumari district last time. We were given to understand like that at that time ; in fact the Hon. Speaker announced " இப்பொழுது இன்றைக்கு இதை எடுத்துக்கொள்கிறேன்." (if you go through proceedings you would find the wording); we were given such an impression. The serious situation arising out of the farmers' agitation, the attack on Thiru V. P. Chintan and the situation arising out of burning of a generator in Ennore Thermal Scheme —

[Dr. H. V. Hande] [1973 ஆகஸ்ட் 6

about all these we have given notice of adjournment motions. If the 'No-Confidence Motion' is to be taken up tomorrow, there would not be any opportunity for us to raise the adjournment motions tomorrow. So, before proceeding with other items in the agenda today, in accordance with the assurance already given, is it not the duty of the Hon. Speaker to allow us to raise the adjournment motions like farmers' agitation, labour situation arising out of the attack on Thiru V. P. Chintan. The Hon. Chief Minister may not reply to it since he is not here today. Because he is not here today, probably that is why, the adjournment motions are not taken up now. Anyhow as per the assurance given already by the Hon. Speaker, I request that before proceeding with the other items, we may be allowed to raise the adjournment motions we have given notice of. Let us be given an opportunity to raise those adjournment motions now.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அன்றைக்குக் கூறியது, இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக் கொள்வதற்கு நாம் ஒரு முறையை வகுத்துக் கொள்ள வேண்டும், அதற்காக அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டி முடிவெடுத்துக் கொள்ளலாம் என்ற கருத்தைத் தெரிவித்தேன். அதிலே முக்கியமான பிரச்னையாக உள்ள கன்னியாகுமரி மாவட்டத்தின் நிலையைப் பற்றி விவாதித்து விட்டு, மற்றவற்றை அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்யலாம் என்று தெரிவித்தேன். ஆனால் அன்றைக்கு அலுவல் ஆய்வுக் குழு கூடவில்லை. கடைசியிலே இன்றைக்குக் கூடும் என்று கூறியிருக்கிறேன். அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திற்கான அழைப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. அது முடிந்ததற்குப் பிறகு எடுத்துக் கொள்ளலாம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: அப்படிக் கூடினாலும் ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கான வாய்ப்பை இழந்து விடுவோம். நாளைக்கு நம்பிக்கையில்லாத் தீர்மானம் வரவிருப்பதால் ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொண்டு வருவதற்கு வாய்ப்பில்லை. எனவே, சபாநாயகர் அவர்களே முடிவெடுத்து, எதிர்க்கட்சித் தலைவர்கள் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் இருக்கிறார்கள், திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் இருக்கிறார்கள், மதிப்பிற்குரிய மதியழகன் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். எனவே அவர்களுடைய

1973 ஆகஸ்ட் 6] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டு இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக் கொள்வதற்கு முடிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை மட்டும் எடுத்துக் கொண்டால் மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்கள் அது மட்டும்தான் முக்கியம் என்று எடுத்துக் கொண்டார்களா? வி. பி. சிந்தனைத் தாக்கியது முக்கியமில்லையா? ஃபார்மர்ஸ் பிரச்னை, அவர்கள் உடைமைகளை ஜப்தி செய்யக்கூடிய நிலைமையெல்லாம் முக்கியமில்லையா? ஆகவே, இங்கேயிருக்கும் எதிர்க்கட்சிகளின் தலைவர்களின் கருத்துக்களையறிந்து, அவைகளை இப்பொழுதே எடுத்துக்கொள்ள வேண்டும். மீண்டும் பிசினஸ் அட்வைசரி கமிட்டி கூடி முடிவெடுப்பது என்றால் அதற்கு வாய்ப்பு இருக்காது. இப்பொழுதே முடிவெடுக்க வேண்டுமென்று மிகத் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், சனிக்கிழமையன்று பி.ஏ.சி. கூடுவதாகயிருந்தது. ஆனால் விவாதங்கள் நீடித்ததால் அது கூட முடியாமற் போய்விட்டது. எனவே, இன்றைக்கு பி. ஏ. சி. கூடி முடிவெடுப்பதென்றால், டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னதுமாதிரி எந்தவிதமான அட்ஜெர்ன்மெண்ட் மோஷனுக்கும் இடமில்லாமல் போகக் கூடும். நான் கூட இரயில்வே தொழிலாளர்கள் மீது நடந்த தாக்குதலைப் பற்றித் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். பல கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் இருக்கின்றன. அட்ஜெர்ன்மெண்ட் மோஷன் களுக்கு இடமில்லாமல் போனாலும்கூட கவன ஈர்ப்புத் தீர்மானங்களையாவது அடுத்த நிகழ்ச்சியாக எடுத்துக் கொண்டால் உதவியாக இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன், தாங்கள் சொன்ன வாக்குறுதியின் அடிப்படையில் இதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: நம்பிக்கையில்லாத் தீர்மானம் 7 ஆம் தேதி எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது. அதில் எல்லோரும் பேசுவதற்கு நேரமும், வாய்ப்பும் இருக்காது. எங்களுக்குக் கொடுக்கும் நேரத்தை முடிவு செய்து விட்டு இதற்குள்ளே பேசுங்கள் என்று சொன்னால் முழுதும் பேச

நேரமிருக்காது. அதன் காரணமாக எதற்காக, எந்தெந்த முக்கியமான பிரச்னைகளை விவாதிக்க ஒத்திவைப்புத் தீர்மானங்களையும், கால் அட்டென்ஷன் நோட்டீஸ்களையும் கொடுத்திருக்கிறோமோ அவைகளைப் பற்றி பேச முடியாமற் போய்விடும். பிறகு நீங்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதிக்கப்பட்டதன் அடிப்படையில் இவைகள் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது என்று சொல்லிவிட்டால் இருக்கின்ற உண்மையான பிரச்னைகளை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர, சட்டசபையில் கொண்டுவரத் தவறியவர்களாவோம். எனவே, நம்பிக்கையில்லாத் தீர்மான விவாதத்திற்குப் பிறகு ஓரளவு கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு அனுமதி தருவீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, முக்கியமான அட்ஜர்ன்மெண்ட் மோஷன்களைப் பற்றி எடுத்துக்கொள்வதில் எங்கள் கட்சியின் சார்பில் ஆட்சேபணையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாளைக்கு நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதத்திற்கு வருகிறது. தொடர்ந்து 10 ஆம் தேதி வரையில் இந்த விவாதம் நடைபெறும் என்று ஏற்கனவே முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த நம்பிக்கையில்லாத் தீர்மான விவாதம் நடக்கும்பொழுது மற்ற தீர்மானங்கள் சம்பந்தமாக விவாதிக்க காலமில்லாமல் போய்விடலாம். எனவே, இன்றைக்கு ஒன்று அல்லது இரண்டு அட்ஜர்ன்மெண்ட் மோஷன்களை எடுத்துக் கொள்வதைப் பற்றி ஆட்சேபணையில்லை என்று தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எதிர்க்கட்சித் தலைவர்கள் சொன்ன கருத்தை யொட்டி நான் இந்தக் கட்சியின் துணைத் தலைவர் என்று மட்டுமல்லாமல், பேரவைத் தலைவராக இருந்த முறையிலே என்னுடைய அனுபவத்தையும் கொண்டு—உங்களுக்கு என்னைவிட அதிகமாக அனுபவம் இருக்கிறது—உங்களுக்குத் துணை புரிவதற்காக ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். பொதுவாக இப்பொழுது நம்முடைய மரபுகளிலே இருக்கிற நிலைமை, ஒத்திவைப்புத் தீர்மானங்களைப்

பற்றி ஏதாவது காரணங்களைச் சொல்லி, அரசாங்கம் சமாதானம் சொல்வதற்கு வாய்ப்பாக இருக்கிறது. தினந்தோறும் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் வரும் நிலைமை கடந்த ஒன்றிரண்டு ஆண்டுகளாக இருக்கிறது. ஏனென்றால், தொழிலாளர் பிரச்னைகள், துப்பாக்கிப் பிரயோகங்கள், அன்றாடப் பிரச்னை களாக வருவதை வைத்து கொண்டுவரப்படுகின்றன. கடைசியிலே அமைச்சரின் விளக்கம் தங்களுக்குத் திருப்தி அளித்துவிடுகிறது, எனவே தாங்கள் நிராகரித்து விடுகிறீர்கள். எனவே அதை ஒரு வாய்ப்பாகக் கருதி, அதை அனுமதித்தால் பல பிரச்னைகள் பற்றி விவாதிக்க, இந்த மன்றத்தில் பரந்த அளவில் விவாதிக்க ஒரு வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU B. VENKATASWAMY : On behalf of the Swathantra Party we have also given notice of some adjournment motions regarding the attack on Thiru V. P. Chintan and the situation arising out of soaring prices. We request that those adjournment motions also may be taken up.

திரு. செ. கந்தப்பன் : தலைவரவர்களே, இங்கே கொடுக்கப் பட்டிருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் அல்லது கொள்கை மறுப்புத் தீர்மானம் எதையும் சுட்டிக்காட்டித் தரப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுதிருப்பது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப் பற்றிய பிரச்னை இல்லை, ஒத்திவைப்புத் தீர்மானங்கள் பற்றிய பிரச்னை.

திரு. செ. கந்தப்பன் : நம்பிக்கையில்லாத் தீர்மானம் பொதுப்படையாகத்தான் தரப்பட்டிருக்கிறது. என்னென்ன பிரச்னைகளைப் பற்றி ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலம் எதிர்க் கட்சியினர் இன்றைக்கு எழுப்ப விரும்புகிறார்களோ அல்லது எழுப்பப் போகிறார்களோ அவைகளைப் பற்றி நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது பேச முடியும். எனவே நான் சுட்டிக்காட்ட விரும்புவதெல்லாம் இதுபோன்று ஒவ்வொரு நாளும் ஒரு பிரச்னையைச் சொல்லி, ஏற்கனவே குறிப்பிட்ட இன்றைக்கு விவாதிக்கப்படும் பிரச்னைகள் தள்ளிப்போடப்பட்டால் என்ன நிலைமை ஏற்படுகிறது என்று பார்க்க வேண்டும். ஏற்கனவே

13 ஆம் தேதி வரையில் கூட்டம் நடக்கும் என்று தெரிகிறது. ஆனால், இப்பொழுது பார்த்தால் என்னைப் போன்ற மாண்புமிகு உறுப்பினர்களுக்கெல்லாம் எது வரையிலே சட்டமன்றம் நடக்கும், என்றைக்கு சட்டமன்றம் முடியப் போகிறது என்ற உத்தரவாதமில்லாமல் போகிறது. அதுமட்டுமல்லாமல் ஏற்கனவே விவாதிக்கப்படும் பிரச்னைகளே திரும்பத் திரும்ப விவாதிக்கப் படுகிறது. அது எதிர்க்கட்சிகள் சொன்னதையே திரும்பச் சொல்வதற்கு வாய்ப்பாகப் பயன்படுகிறது. எனவே, இதையெல்லாம் கருதி எங்களுடைய உணர்வுகளை மனதில் வைத்துக்கொண்டு முடிவெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: ஆன் எ பாயின்ட் ஆப் பர்சனல் எக்ஸ்பிளனேஷன், சார். (மணி அடிக்கப்பட்டது) என்னைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஹாண்டேயைக் குறிப்பிட்டு ஒன்றும் சொல்லவில்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே: திரு. கந்தப்பன் சொன்னதைப் பற்றி நான் சொல்லுவதைக் கொஞ்சம் கேளுங்கள். பர்சனல் எக்ஸ்பிளனேஷன் சொல்ல விரும்புகிறேன். ஒரு நிமிஷம் நான் சொல்லுவதைக் கேளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முறையாக எழுந்து பேசினால் ஒரு மணி நேரம் கூடக் கேட்கத் தயாராக இருக்கிறேன். முறை இல்லாமல் ஒரு நிமிஷம் பேசுவதைக் கூட அனுமதிக்க இயலாது.

டாக்டர் எச். வி. ஹாண்டே: திரு. கந்தப்பன் சொன்னது என்னவென்றால் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி கொடுத்தால் அவையின் நேரம் போகும், நாளைக்கு நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருகின்ற காரணத்தால் அதிலே பேசிக் கொள்ளலாம் என்றார்கள். அவசரமாக இன்றைக்கே எடுத்துக் கொள்ள வேண்டிய பிரச்சினைகளாக இருப்பதால் நாளை வரை காத்திருக்க முடியாது. அவர் சொன்னதை நான் முழுக்க முழுக்க மறுக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பல்வேறு ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. அவற்றை ஒழுங்குமுறைப்படுத்தி, சீர்படுத்தி அவையைச் செம்மையாக நடத்திச் செல்ல வேண்டுமென்பதற்காக சனிக்கிழமையன்று அலுவல் ஆய்வுக் குழு கூட்டுவதாக முடிவு செய்யப்பட்டது. அன்றைக்கு விவாதத்தின் காலம் நீடிக்கப் பட்டதன் காரணமாக அன்று அலுவல் ஆய்வுக் குழு கூடவில்லை. ஆகவே, அதுபற்றி முடிவு எடுக்க இன்றைக்கு அலுவல் ஆய்வுக் குழு கூட இருக்கிறது. நாளைக்கு நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதத்திற்கு வருவதாக இருப்பினும், ஏற்கனவே பேரவைத் தலைவர்களின் தீர்ப்பின்படி நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் எல்லாவற்றையும் பற்றிப் பேச வாய்ப்பு இருக்கும் காரணத்தால் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி அளிப்பதில்லை என்ற தீர்ப்புகளும், மரபுகளும் இருந்தாலும் இப்போது கூட இருக்கிற அலுவல் ஆய்வுக் குழுவில் மிக முக்கியமான ஒத்திவைப்புத் தீர்மானங்கள் என்று கருதப்படுகிற ஒன்றிரண்டு ஒத்திவைப்புத் தீர்மானங்களை நாளைக்கு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது விவாதத்தைத் தொடங்குவதற்கு முன்னால் எடுத்துக்கொள்ளலாம் என்று கூற விரும்புகிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: (உரத்த குரலில்) நாளை வரை காத்திருக்க முடியாது. இப்போதே எடுத்துக்கொள்ள வேண்டும். Who are you to say that ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொள்ள வேண்டுமா, வேண்டாமா என்பதைப் பற்றி முடிவு செய்ய வேண்டியவர் தலைவர் அவர்களே ஆகும். இதிலே எல்லோரும் யோசனை கூறியிருக்கிறார்கள். நானும் ஒரு யோசனை சொன்னேன். நீங்களும் ஒரு யோசனையைச் சொல்லியிருக்கிறீர்கள். ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தீர்ப்பு அளிக்க வேண்டுமென்று தலைவரை வற்புறுத்த முடியாது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: டாக்டர் ஹாண்டே அவர்கள் ரொம்ப அனுபவம் உள்ள உறுப்பினர். கல்வியமைச்சரைப் பார்த்து "Who are you ?" என்று

கேட்டார். அதைக் கூடத் தெரியாமல் இருப்பதற்காக வருந்துகிறேன். அவர்கள் சட்டப் பேரவையின் முன்னவர். இது கூடவா தெரியவில்லை.

(பல உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்—கூச்சல் குழப்பம்)

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : எல்லோரும் அமைதியைக் கட்டிக் காக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி : Who are you ? என்று திரு. ஹாண்டே அவர்கள் கேட்கிறார்கள். . .

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : எங்களுக்கு பாதுகாப்பு வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பாதுகாப்பு வேண்டுமென்று சொல்லுகிறார்கள். பாதுகாப்பு எப்போது வரும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். டாக்டர் ஹாண்டே அவர்கள் சட்ட மன்றத்தில் நல்ல பயிற்சி பெற்றவர்கள். எந்த நேரத்தில் வேண்டுமென்றாலும் எழுந்து எதை வேண்டுமானாலும் பேசிக் கொண்டிருக்கலாம் என்றால் அதற்கு பேரவைத் தலைவர் அனுமதி தேவையில்லை. ஏதாவது பேசினால் உடனே அவர் எழுந்து நின்று வாயில் வரும் கருத்துக்களைச் சொன்னால் அவருக்கு யார் பாதுகாப்புக் கொடுப்பது? உறுப்பினர்கள் பொறுப்புடன் நடந்து கொண்டால் தான் பாதுகாப்பு கொடுக்க முடியும். நேற்றே சொன்னேன். அந்தந்தக் கட்சித் தலைவர்கள் அந்தந்தக் கட்சியில் இருக்கிற உறுப்பினர்களுக்கு அவையில் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்ற நாகரிகத்தை கற்றுக் கொடுக்க வேண்டுமென்று சொன்னேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கள் தங்களுடைய உறுப்பினர்களுக்கும், ஆளும் கட்சித் தலைவர்கள் கூட தங்களுடைய உறுப்பினர்களுக்கும் அந்த நாகரிகத்தை முதலில் கற்றுக் கொடுக்குமாறு பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : நாகரிகமற்ற முறையில் இங்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் யாரும் இயங்கவில்லை. நாகரிகத்தை நல்ல முறையில் கற்றுத்தான் பண்பாடான

முறையில்தான் இயங்கி வருகிறோம். அதே நாகரிகத்தை ஆளும் கட்சிக்குத் தாங்கள் கற்றுக் கொடுக்க வேண்டுமென்று பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு பேருக்குந்தான் சொன்னேன்.

இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களைப் பொறுத்து அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்யலாம் என்று நான் சொன்னேன். . .

திரு. கே. ஏ. மதியழகன் : அலுவல் ஆய்வுக் குழுவுக்கு இதிலே என்ன இருக்கிறது? லட்சக்கணக்கான மக்கள் பிரச்சினைகளைப் பற்றி ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானங்கள் அனுமதிப்பது பற்றி முடிவு செய்ய வேண்டியது பேரவைத் தலைவர். இந்த மன்றத்தில் எனக்கு முன்பு பேரவையை நடத்தி வந்த தலைவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானங்களை அனுமதிப்பதில் எந்தெந்த முறைகளை மேற்கொண்டார்கள் என்பதற்குச் சான்றுகள் இருக்கின்றன. அந்த முறைகளைப் பின்பற்றினால் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கூட இந்த அவைக்கு முன்னால் வாராமல் போய்விடும்.

Unsatisfactory distribution of yarn was ruled out of order as 'it is not a matter of recent occurrence'.

Hunger-strike of Sami Oil Mills workers came under day-to-day administration and hunger-strike itself was an action of the workers and not of the Government and Government is not responsible for it—Thiru Sivashanmugham Pillai, Speaker.

Police firing—could be discussed during the debate on the No-Confidence motion against the Ministry which had been admitted—Dr. U. Krishna Rau, Speaker.

Lathi charge and arrest of students did not involve more than the ordinary administration of law—Dr. U. Krishna Rau, Speaker.

Arrest of some members—Ordinary administration of law—Thiru Chellapandian, Speaker.

While consent was withheld to raise a subject as an adjournment motion, the Speaker observed that the right to give notice of an adjournment motion was often misused for discussion of even individual matters and matters which were not of public importance and that such notice deserved to be rejected in his chamber itself without being brought to the notice of the House—Thiru Chellapandian, Speaker என்று இப்படியெல்லாம் தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள் அவ்வளவு கடுமையாக நடந்துகொள்ள வேண்டாமென்ற எண்ணத்தில்தான் தலைவர்களிடம் கலந்து எப்படி ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொண்டுவருவதை அனுமதிக்கலாம், எதை எதை அறையிலேயே தள்ளலாம், எதை எதை அனுமதிக்கலாம் என்பதைப்பற்றி அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவு செய்யலாம் என்று முடிவு செய்யப்பட்டது. பேரவைத் தலைவரைப் பொறுத்தவரை இதைப் பற்றி அலுவல் ஆய்வுக் குழுவைக் கேட்க வேண்டிய நிலைமை இல்லை. இப்படி அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவு செய்யலாம் என்று முடிவு எடுத்ததே எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்திலேதானே தவிர வேறு அல்ல. ஆகவே, அலுவல் ஆய்வுக் குழுவிலே கூட எப்படிப் பட்ட முறையைப் பின்பற்ற வேண்டுமென்பதைப் பற்றி முடிவு செய்து கொள்ளலாம். இந்த அளவோடு இதை நிறுத்திக் கொள்ளலாம்.

(ஆ) கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஜனாதிபதியிடம் அளித்த இரண்டாவது குற்றச்சாட்டுப் பட்டியலுக்கான அமைச்சரவையின் பதிலைப் பேரவையில் வைக்க வேண்டும் என்பது குறித்து.

திரு. கே. ஏ. மதியழகன் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சியின் தலைவர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களும், கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் திரு. கல்யாணசுந்தரம் அவர்களும் இந்த அமைச்சரவை மீது ஊழல் குற்றச்சாட்டுகள் அடங்கிய ஒரு பட்டியலை அனுப்பியதையும் . .

(மணி அடிக்கப்பட்டது.)

தப்பிதமாக ஒன்றும் இருக்காது. கொஞ்சம் அனுபவம் இருக்கிறது.

அப்படி ஒரு ஊழல் பட்டியலை நம்முடைய ஜனாதிபதி அவர்களுக்கு அனுப்பியதையும் அந்த ஊழல் புகார் பட்டியலுக்கு நம்முடைய அமைச்சரவை பதில் அனுப்பியதையும் இந்த மாமன்றமும், தமிழ்நாடும் அறியும். அந்த ஊழல் புகார் பற்றிய விளக்கங்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தப் பேரவையிலே வைத்தார்கள். முதல் பட்டியலுக்கான விளக்கங்கள் இந்தப் பேரவையிலே வைக்கப்பட்டது. அதற்குப் பிறகு கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் இரண்டாவது பட்டியலை அங்கு அனுப்பினார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர் என்றால் எப்படி வரும் என்று பார்க்க வேண்டும். இந்தப் பேரவையின் நடைமுறைகளுக்கு மாறாக, விதிமுறைகளுக்கு மாறாக நிகழ்ச்சிகள் நடைபெறுமாயின் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப வேண்டும். யார் எங்கு அனுப்பினாலும் அதற்கு இந்த மன்றம் பொறுப்பில்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : நாளையதினம் நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதிப்பதற்கு இருக்கிறது. முதலில் கொடுக்கப் பட்ட ஊழல் பட்டியலும் அதற்கான விளக்கங்களும் இந்த மன்றத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இரண்டாவது ஊழல் பட்டியலையும் அதற்கான விளக்கங்களையும் கூடுமானவரையில் நாளைக் காலையிலாவது இங்கு வைத்தால்தான் இந்த மன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப் பற்றி விவாதிப்பதற்கு வசதியாக இருக்கும். இதுதான் என் பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த மன்றத்தினைத்தான் நம்புகிறேன் என்று முதல் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முதலில் ஊழல் பட்டியல் கொடுக்கப்பட்டு அதற்கு வைத்த பதிலைப் பற்றி ஊழல் பட்டியல் சொன்னவர்களே ஒன்றும் சொல்ல முடியாத துர்பாக்கிய நிலை

[திரு. செ. மாதவன்] [1973 ஆகஸ்ட் 6

ஏற்பட்டது தெரியும். இரண்டாவது ஊழல் பட்டியல் கொடுத்திருப்பதாக அவர்கள் சொன்னார்கள். அவர் தலைவரே கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். அப்படித் தெரியவில்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : நான் அப்படிச் சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இன்னொரு கட்சித் தலைவர் கொடுத்திருப்பதாகவும் சொன்னார்கள். ஊழல் பட்டியல் என்று அங்கே கொடுத்துவிட்டு அதைப் பற்றி வெளியே சொல்ல மாட்டேன் என்று சொல்கிற அரசியல் நாகரிகம் நம் நாட்டில் வளர்ந்து வருகிறது.

THIRU K. A. MATHIALAGAN : Are you going to pull him up or not?

நாகரிகத்தைப் பற்றிப் பேசுகிறார்கள். அவர்கள் இப்படிப் பேசுவது நாகரிகமா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முதல் பட்டியல் வைக்கப் பட்டு அதற்குப் பதிலும் வைக்கப்பட்டது. இரண்டாவது பட்டியல் பற்றி, நாளையிலிருந்து நான்கு நாட்கள் வரை அவர்கள் என்னென்ன கொடுத்திருக்கிறீர்கள் என்று இரண்டாவது பட்டியலை அடுக்கு அடுக்காக இந்த மன்றத்தில் சொல்வதற்கு அவர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. ஊழல் பட்டியலுக்கு, ஒவ்வொன்றுக்கும் பதில் சொல்வதற்கு நாங்கள் தயாரா யிருக்கிறோம். (கரவொலி)

திரு. கே. ஏ. மதியழகன் : முதல் பட்டியலும் அதற்கான விளக்கங்களும் இங்கு வைக்கப்பட்டிருக்கின்றன. இரண்டாவது பட்டியல் பற்றியும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அவையில் அதைக் கொடுத்து அதற்குப் பதில் அளிக்கவில்லை என்றால் குற்றச்சாட்டு சொல்லலாம் ஆனால் நீங்கள் கொடுத்தது வேறு இடத்தில் இந்த மன்றத்தில் வைக்கப்படவில்லை. இந்த மன்றத்தில் வராத ஒன்றை, இங்கு வைக்காத ஒன்றுக்கு, யாரிடமோ கொடுத்துவிட்டு, விளக்கம் இங்கு வைக்கவில்லை என்று சொல்வது எப்படி ஒரு பாயின்ட் ஆப் ஆர்டராகும்?

1973 ஆகஸ்ட் 6]

திரு. கே. ஏ. மதியழகன் : யாரிடமோ அல்ல. பிரதமரிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிரதம அமைச்சர் அவர்கள் அல்ல, அதைவிடப் பெரிய அமைச்சர்களாக இருந்தாலும் அவர்கள் இந்த மன்றத்தைக் கட்டுப்படுத்த முடியாது.

திரு. கே. ஏ. மதியழகன் : அவர்கள் ஏற்கனவே இந்த மன்றத்தில் ஒரு மரபை சிருஷ்டித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அவையில் கொடுக்காததைப் பற்றி அதற்கு விளக்கம் கொடுக்க வேண்டுமென்று நாம் வற்புறுத்த முடியாது. ஆனால் அப்படிக் கொடுத்தால் அதை மறுக்க முடியாது. ஆனால் ஏன் அப்படிக் கொடுக்கவில்லை என்று சொல்வது ஒரு பாயின்ட் ஆப் ஆர்டராகாது. அனுபவம் பெற்ற ஒரு முன்னாள் பேரவைத் தலைவருக்கு அது தெரியாமல் போய் விட்டதே.

திரு. கே. ஏ. மதியழகன் : என்னைப் பேச அனுமதிக்க மாட்டேன் என்கிறீர்களே. இந்த மன்றத்தினை நம்புகிறேன் என்று முதல் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பிரதமரைப் பற்றிக் கவலையில்லை என்று. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி பேச வேண்டிய இடத்தில் பேசுங்கள். இந்த மன்றத்தில் அதற்கு இடம் இல்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : இங்கு உங்கள் அனுபவத்தை நம்பி கொண்டுவருகிறேன்.

திரு. நா. வீராசாமி : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். எங்களுக்கு கொஞ்சம் பாதுகாப்பு கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர்களுக்கு அறிக்கைகள் அளிப்பதற்கு உரிமை இருக்கிறது. எந்த நேரத்திலும் இந்த அவையில் அறிக்கைகள், செய்திகள் அளிக்க

உரிமை இருக்கிறது. இந்த அவையில் கொடுக்காத ஒன்றைக் குறித்து அதற்கான விளக்கங்களைக் கொடுங்கள் என்று கேட்பதற்கு விதிகளில் இடமில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். சபாநாயகர் அவர்களே, சட்டசபையில் அடிக்கடி சட்டசபை உறுப்பினர்களுக்கு நாகரிகம் தெரியவில்லை என்றும், கட்சித் தலைவர்கள் அதைச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்றும் நீங்கள் பேசுவது எங்களை மிகவும் புண்படுத்தக் கூடியதாக இருக்கிறது. நாங்கள் என்ன பள்ளிக்கூடத்தில் படிக்கவா வந்திருக்கிறோம்? பள்ளிக்கூடத்தில் படித்து முடித்துவிட்டுத் தான் இங்கு வந்திருக்கிறோம். ஏதோ அநாகரிகக் கூட்டம் சபையில் இருக்கிறமாதிரி ஒரு பிரச்னையை மக்கள் முன் ஏற்படுத்துவதா என்பது இதைவிட இழுக்கு வேறு ஒன்றும் இருக்காது. தயவுசெய்து அப்படிப்பட்ட வார்த்தைகளைப் பயன்படுத்தாமல் இருக்கக்கூடிய ஒரு வாய்ப்பை நீங்களே ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : திரு. மதியழகன் அவர்கள் எழுப்பிய பாயின்ட் ஆப் ஆர்டர் பற்றி நான் என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அது எப்படி ஒரு பாயின்ட் ஆப் ஆர்டராகும் என்பதைப் பற்றி விளக்குவது பொருத்தமே தவிர மற்றொரு பிரச்னையை எழுப்புவது என்பது அதை எழுப்பும் நிலை வரும்பொழுது எழுப்பலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : நான் எப்படிச் சொல்வது என்பது என் முறையில்தான் சொல்ல முடியுமே தவிர திரு. அன்பழகன் அவர்கள் நினைக்கிறமாதிரி சொல்ல முடியாது என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். முதலில் விஷயம் என்னவென்றால் ஏற்கனவே ஒரு பட்டியல் கொடுக்கப்பட்டு அதற்குப் பதிலும் வந்தது. அது இந்தச் சபையில் சமர்பிக்கப் பட்டது. அது இந்த சபையில் சமர்பிக்கப்பட்டபோது மத்திய அரசின் பிரதமர் அவர்கள் அப்படி சமர்பித்தது தவறு என்று

சொன்னார்கள். ஆகவே நான் அறிய விரும்புவது அன்று சமர்பித்தது சரியா அல்லது இப்போது சமர்பிக்காமல் இருப்பது சரியா என்பதைப் பற்றி தாங்கள் தெளிவான ஒரு ரூலிங் கொடுத்தால் சௌகரியமாக இருக்கும். நான் இரண்டு தினங்களாகப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். இங்கே எனக்கு சில அமைச்சர்கள் நாகரிகத்தைப் பற்றிச் சொல்லிக் கொடுத்தார்கள். தாங்களும், நாகரிகத்தோடு நடந்துகொள்ள வேண்டுமென்று சொன்னீர்கள். இங்கு மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டு வந்திருக்கிற நாங்கள், அதுவும் ஒரு கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தங்களிடமிருந்தோ அல்லது அமைச்சர்களிடமிருந்தோ அல்லது மற்ற உறுப்பினர்களிட மிருந்தோ நாகரிகத்தைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்னால் அதற்காக நாங்கள் இங்கு வரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னொரு விஷயம். அந்த மாதிரியாக எங்களைப் புண்படுத்தக்கூடாது என்று தாங்கள் சொன்னாலொழிய இந்த சபையில் தொடர்ந்து நாங்கள் பணியாற்றுவது உதவிகரமாக இருக்காது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : I may also be permitted to say my views so far as this matter is concerned. முன்பு இந்த மன்றத்தில், அச்சிட்டு அனுப்பிய எல்லாப் புத்தகங்களும் எங்களுக்கும் கொடுக்கப்பட்டிருந்தது. அதற்குப் பிற்பாடு ஒரு ஃபேர்தர் சார்ஜஸ் என்ற முறையில் கொடுத்ததாக பத்திரிகைகள் வாயிலாக நாங்கள் கேள்விப்படுகிறோம். அதைக் கொடுத்தால் எங்களுக்கு உபகாரமாக இருக்கும். எங்களைப் போன்றவர்களுக்கு என்னென்ன குற்றச்சாட்டுகள் கூறியிருக்கிறார்கள், அவற்றிற்கு என்னென்ன பதில்கள் சொல்லி யிருக்கிறார்கள் என்பது எங்களுக்கு ஆதாரபூர்வமாகத் தெரியாது. ஆதலால் இந்த மன்றத்தில் முன்பு நடந்தது மாதிரி விளக்கம் தருவதில் எந்தவிதமான கஷ்டமும் இருக்காது என்று கருதுகிறேன். அவை கான்பிடென்ஷியலும் அல்ல என்று நினைக்கிறேன். ஆகவே முன்பு தந்ததுமாதிரி இந்தக் குற்றச்சாட்டுகளையும் அவற்றிற்கு கொடுத்துள்ள மறுப்புகளையும் தரவேண்டுமென்று தங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மதியழகன் எழுப்பிய பாயின்ட் ஆப் ஆர்டருக்கு பதிலளிக்கிறேன். நான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வது, இந்த விஷயம் எதுவும் இங்கு எழுப்பப்படாமல் வெளியில், அவர்கள் எவ்வளவு பெரிய தலைவராக இருக்கட்டும், அவர்களிடம் ஒரு காகிதத்தைக் கொடுத்துவிட்டு அதற்கு இந்தப் பேரவையில் இருப்பவர்கள் பதில் அளிக்க வேண்டும் என்று சொல்வது முறைதானா? நமது சட்டமன்ற விதிகளில் அதற்கு இடம் இருக்கிறதா? அதுபற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் விளக்கம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : சட்டமன்றத்தின் மீது ரொம்பவும் மதிப்பு முதல் அமைச்சர் அவர்களுக்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இருங்கள். நான் சொல்கிறேன். இரண்டாவது பட்டியல் கொடுத்தார்கள் என்றார்கள். நம் மன்ற விதிகளின் 82-வது விதியின்கீழ் அமைச்சர்கள் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் எழுந்து நின்று தகவல்கள் கொடுக்கலாம். அந்த முறையில் விளக்கங்கள் கொடுத்திருக்கலாம். ஆனால் கொடுத்தேயாக வேண்டும் என்று வற்புறுத்த சட்டமன்ற விதிகளில் இடமிருக்கிறதா? வெளியே கொடுத்த ஒன்றுக்கு இங்கு பதில் அளிக்கவில்லை என்றால் அது எப்படி பாயின்ட் ஆப் ஆர்டராகும்?

திரு. கே. ஏ. மதியழகன் : தங்கள் அனுமதியோடு நான் விளக்குகிறேன். நீங்களாக ஒரு முடிவு செய்துகொண்டு பேசினால் எங்களுக்கு ஒன்றுமில்லை. பாயின்ட் ஆப் ஆர்டர் பற்றி சொல்ல அனுமதித்தால் சொல்கிறேன். நீங்களே ஒரு முடிவு செய்து கொண்டு தீர்ப்பு வழங்குவதாக இருந்தால் எங்களுக்கு ப்ரொடெக்ஷன் கிடையாது. முதல் பட்டியல் இங்கு வைக்கப்பட்டு அதற்கான விளக்கங்களும் வைக்கப்பட்டன. இரண்டாவது பட்டியல், அதற்கான விளக்கங்களை இங்கு வைக்க உத்தரவிடுங்கள்.

திரு. நா. வீராசாமி : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த மன்றத்தில் எந்தவிதமான பட்டியலையும் வைப்பதற்கு தைரியம் இல்லாதவர்கள் எங்கேயோ போய் பட்டியல் கொடுத்துவிட்டு

இந்த மன்றத்தில் அதற்கு விடைகள் கேட்பதும், பெரிய அறிக்கைகள் கொடுப்பதும் இந்த மன்றத்தில் முறைதானா என்பதற்கு மட்டும் தீர்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : ஜனாதிபதி எங்கேயோ இருப்பவர்களா, பிரதம மந்திரி எங்கேயோ இருப்பவர்களா?

(திரு. முனு ஆதி எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. முனு ஆதி, நீங்கள் உட்காருங்கள். உங்கள் துணைத் தலைவர் எழுப்பிய பிரச்னைக்கு நான் முதலில் பதில் சொல்கிறேன். திரு. மதியழகன் அவர்கள் எங்களுக்குப் பாதுகாப்புக் கொடுங்கள் என்று கேட்டார்கள். நிச்சயமாகப் பாதுகாப்புத் தருகிறேன். பேரவைத் தலைவரிடத்தில் வந்து ஒரு காகிதத்தைக் கொடுத்து விட்டு. . .

திரு. கே. ஏ. மதியழகன் : நீங்கள் சொல்வதற்கு பதில் சொல்கிறேன். இங்கேயிருக்கும் கட்சித் தலைவர் கொடுத்திருக்கிறார். எங்கேயோ, யாரிடத்திலேயோ அல்ல, இந்த நாட்டின் ஜனாதிபதியிடத்தில் கொடுத்திருக்கிறார், பிரதம மந்திரியிடத்தில் கொடுத்து இருக்கிறார். அது உங்களுக்குச் சாதாரணமாகத் தெரிகிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அந்தக் குற்றச்சாட்டை எந்த எதிர்க்கட்சித் தலைவரும் சபாநாயகரிடத்திலே கொடுத்து, பதில் சொல்லுங்கள் என்று கேட்கவில்லை. வெளியே கொடுக்கப் பட்ட குற்றச்சாட்டுப் பட்டியலுக்கே இங்கே வந்து பதில் சொல்லுங்கள் என்றால் எப்படி பதில் சொல்ல முடியும்? மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கள் சபாநாயகரிடத்தில் கொடுத்து, பதில் கூறுங்கள் என்று கேட்டு இருந்தால், சபாநாயகர் அமைச்சர்களைக் கட்டுப்படுத்தி இங்கே பதில் கூறியிருக்க முடியும். அந்த முறையைக் கையாள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : அப்போது எங்கே போயிற்று அந்த விவேகம்?

[1973 ஆகஸ்ட் 6

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : விவேகம் இருந்த காரணத்தால்தான் நாங்கள் பதில் சொல்ல வேண்டுமென்று எண்ணியதால்தான் பதில் சொன்னேம். தேவைப்படுகிறபோது இதற்கும் பதில் சொல்வோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கிட்டத்தட்ட 2½ ஆண்டுகாலம் இந்தப் பதவியில் இருந்து இருக்கிறீர்கள். ஒரு முறை தெரிந்து சொல்லவேண்டும். பேரவைத் தலைவரிடத்தில் கொடுத்து இருந்தால், பேரவைத் தலைவர் அமைச்சர்களைக் கட்டுப்படுத்தி பதில் தந்திருக்க முடியும். ஜனாதிபதியல்ல, பிரதமரல்ல, வேறு எவ்வளவு பெரிய தலைவரிடத்தில் கொடுத்திருந்தாலும் அது இந்த மன்றத்தைக் கட்டுப்படுத்த முடியாது. கொடுங்கள் என்று ஆணையிட முடியாது. பேரவை தான் சுப்ரீம் பாடி. (குறுக்கீடு) நீங்கள் எங்கோ கொடுத்த ஒன்றுக்கு இங்கேயிருக்கும் அமைச்சரவையை அறிக்கை கொடுங்கள் என்றால் அவர்கள் எப்படி அறிக்கை கொடுக்க முடியும்? இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப என்ன முறையிருக்கிறது? இது முறையற்ற பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லிக்கொள்கிறேன்.

(திரு. கே. ஏ. மதியழகனும், திரு. முனு ஆதியும் ஒரே நேரத்தில் நின்றுகொண்டு பேசிக்கொண்டிருந்தனர்)

(கூச்சல், குழப்பம்)

திரு. முனு ஆதி : வெளியே வந்து பேசுங்கள், பார்த்துக் கொள்கிறோம்.

திரு. கே. ஏ. மதியழகன் : ஊழல் குற்றச்சாட்டுக்களின் இரண்டாவது பட்டியலுக்குப் பதில் வைக்காததால், எங்களுடைய அதிருப்தியைத் தெரிவிக்கும் வகையில் நாங்கள் வெளியேறுகிறோம். உங்களுடைய தீர்ப்பை எதிர்த்து அல்ல. ஊழல் குற்றச்சாட்டுப் பட்டியலின் பேரில் அறிக்கை வைக்காததால்தான் நாங்கள் வெளியேறுகிறோம்.

1973 ஆகஸ்ட் 6]

(அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)

(திரு. முனு ஆதி பேசிக்கொண்டே வெளியேறினர். அதைத் தொடர்ந்து பல உறுப்பினர்கள் குரல் எழுப்பினர்)

(கூச்சல், குழப்பம்)

(இ) உறுப்பினர்கள் நாகரிகமாக நடந்துகொள்ள கட்சித் தலைவர்கள் கற்றுக் கொடுக்க வேண்டும் என பேரவைத் தலைவர் கேட்டுக்கொண்டது குறித்து.

திரு. கே. டி. கே. தங்கமணி : மிஸ்டர் ஸ்பீக்கர் சார், உங்களிடத்திலே வெளிநடப்புச் செய்கிறோம் என்று சாதாரணமாகச் சொல்லி, வெளிநடப்புச் செய்வதற்கு உரிமை இருக்கிறது. முறை இருக்கிறது. அந்த முறையில் வெளிநடப்புச் செய்தால், அந்த நேரத்தில் இங்கே நடந்த முறைகள் நாகரிகமான முறைகளா? எங்களைப் பார்த்து நாகரிகத்தோடு நடந்துகொள்ளுங்கள் என்று சொல்கிறீர்கள். இன்று நடந்த முறைகள் நாகரிகம் இல்லை என்று சொல்லுங்கள். அப்படித் தீர்ப்புக் கொடுக்காமல் போனல், நாகரிகம் அற்ற முறைகளை அநாகரிகம் என்ற முறையிலும், சபையில் எங்களைப் போன்றவர்கள் எழுந்து பேசினல் பலர் எங்களைப் பார்த்து நாகரிகமாக நடந்துகொள்ளுங்கள் என்று சொல்லும் நிலையேற்படும். அது 'டபிள் ஸ்டான்டர்டு' என்று சொல்லக்கூடிய அளவிற்கு ஆகும். ஆகவே, உங்களுடைய முடிவிற்குப் பிறகுதான் தொடர்ந்து நாங்கள் இங்கே பங்கெடுப்பதா இல்லையா என்பதைப் பற்றி முடிவு எடுக்க முடியும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்த சட்டமன்றத்தின் மதிப்பைக் காப்பாற்றுவதற்கான மிகப் பெரிய பொறுப்பை நீங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள். இந்த சட்ட மன்றத்தில் நாகரிகமாக நடப்பது என்று சொல்வது பொதுவான வார்த்தை. எல்லோரும் கட்டுப்பாடாக நடக்க வேண்டும்

[திரு. க. அன்பழகன்] *[1973 ஆகஸ்ட் 6*

என்பதற்காகக் கூறுவதே தவிர வேறு எந்த இழிவையும் அது குறிக்காது. யாராவது தவறு செய்கிறபோது சட்டமன்றத்தில் இருக்கும் எல்லா அங்கத்தினர்களும் நாகரிகமாக நடந்து கொள்ளுங்கள் என்று கேட்டுக்கொள்வது, அவர்கள் அநாகரிகமாக நடந்து கொள்கிறார்கள் என்று சுட்டிக்காட்டுவது ஆகாது. பொறுப்போடு நடக்கவேண்டுமென்று கேட்டு கொள்வதுதான் அது. அந்த நாகரிகம் என்ற சொல் நல்ல சொல், பண்பான சொல். அதற்கு எதிர்க்கட்சித் தலைவர் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்பி—பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப முடியாத பிரச்னைமீது பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பி, அதைக்கூற வேறு வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லியும் கூட தொடர்ந்து வெளிநடப்பு செய்தபோது நடந்தவைகளை வைத்துப் பின்னர் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் இங்கே பேசுகிற போது "டபிள் ஸ்டாண்டர்ட்" என்று கூறியதுதான் அவைத் தலைவர் கூறிய முடிவை குறைபடுத்துவதாகும், இந்த அவையில் நடந்த வேறு எதுவும் இழிவுபடுத்துவதாக இல்லை என்பதைத் தங்கள்மூலம் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : சபாநாயகர் அவர்களே, எங்களைப் போன்று கொஞ்சம் நிதானமாகப் பேசுபவர்களுக்கும் இடம் கொடுங்கள். பல பேர் வேகமாக எழுந்து பேசிவிட்டார்கள். நான் இந்த சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்பும் விஷயம், ஒத்திவைப்புத் தீர்மானம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது முடிந்து போய்விட்ட விஷயம்.

திரு. எம். சுரேந்திரன் : நீங்கள் தீர்ப்புக் கொடுக்கவில்லை.

(பல குரல்கள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்ப்புக் கொடுத்தாகி விட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி : முடிவு சொன்னதாகப் பல அமைச்சர்கள் சொன்னதால், முடிவாகி விடாது. தங்களுடைய முடிவு என்ன ?

1973 ஆகஸ்ட் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானும் சொன்னேன்.

திரு. எம். சுரேந்திரன் : தீர்ப்புக் கொடுத்தாகிவிட்டது என்று சொன்னதால்தான் நான் உட்கார்ந்தேன். தங்கள் தீர்ப்புக்கு முன்னால் என்னுடைய கருத்தையும் கூற விரும்புகிறேன் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளவில்லை என்று கடுமையாக நான் நடந்துகொள்ள விரும்பவில்லை, கட்சித் தலைவர்களோடு கலந்துகொண்டு, அலுவல் ஆய்வுக் குழுவில் கூடி முடிவு சொல்ல ஆசைப்படுகிறேன் என்று சொன்னேன்.

திரு. எம். சுரேந்திரன் : நாளை பிசினஸ் அட்வைசரி கமிட்டி கூடி, அதற்குப் பிறகு எடுத்துக்கொள்வது என்றால், நாளைக்கு 'நம்பிக்கையில்லாத் தீர்மானம்' எடுத்துக்கொள்ளப் போகிறோம், அதனால் இன்றைக்கு இருக்கும் முக்கியத்துவம் நாளைக்கு இருக்காது என்ற நிலைமை இருப்பதால், இன்றைக்கு எடுத்துக் கொள்ளுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேசி முடிவாகிவிட்ட விஷயத்தைப்பற்றிப் பேசக்கூடாது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவரவர்களே, இதே சட்ட மன்றத்தில் தங்களுடன் எதிர்க் கட்சியில் இருக்கக்கூடிய ஒரு நிலை எனக்கு ஏற்கெனவே இருந்து இருக்கிறது. அந்தச் சமயத்தில் எதிர்க் கட்சியில் இருந்த நாம் ஆளும் கட்சிமீது பல குற்றச்சாட்டுக்களைக் கூறியிருக்கிறோம். ஆனால் அந்த நேரத்தில் நாம் எந்த மாதிரியான 'மஸ்ரூம் கேம்பயினும்' நடத்தியது இல்லை. ஆனால் இன்றையதினம் நம்முடைய எதிர்க் கட்சியிலே இருக்கக்கூடிய சில தலைவர்கள் வெளியிலே, மேடையிலே பேசுவது போல், இந்த சட்டமன்றத்திற்குள்ளே வந்து மந்திரிகள் மேல் ஊழல், ஆளும் கட்சியின்மீது ஊழல் குற்றச்சாட்டுகள் என்று கூறிவிட்டு, விவகாரங்கள் என்ன என்பதைக் கூறாமலேயே இப்படிப் புழுதி வாரிவிட்டு வெளியே செல்கிறார்கள். எங்களுக்குப் பாதுகாப்பு இங்கே தலைமை வகிக்கும் நீங்கள்தான் தரவேண்டும். மற்றக் கட்சிகளுக்குப் பாதுகாப்புக் கொடுப்பது

போல், ஆளும் கட்சிக்கும் பாதுகாப்புக் கொடுக்கும் பொறுப்பு உங்களிடத்தில் இருக்கிறது. இப்படிப்பட்ட முறைகள் மேலும் நடக்க அனுமதிக்கப் போகிறீர்களா? இப்படியாக 'மட்-சிலிங்கிங் கேம்பயின்' செய்வதற்கு என்கரேஜ் செய்ய உதவி செய்யப் போகிறீர்களா? இதற்கு ஒரு முடிவு கண்டால் நன்றாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: இரண்டு நாட்களாக நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவ்வப்போது எழுந்து நாகரிகமாகப் பேசக் கற்றுக்கொள்ளுங்கள் என்று சொல்லிக் கொண்டேயிருக்கிறீர்கள். கனம் அமைச்சர் அவர்கள் முன்னால் பேராசிரியராக இருந்தபோது பள்ளிப் பிள்ளைகளுக்கு, நாகரிகம் போதித்து இருப்பார். நாகரிகம் என்ற வார்த்தை தவறு இல்லை என்று சொன்னால் அது எங்களுக்கு வருத்தமாக இருக்கிறது. நீங்கள் என்ன நாகரிகமாக நடந்துகொண்டீர்கள்? இன்றைக்கு வெளிநடப்புச் செய்கிறபோது, யார் நாகரிகமாக நடந்து கொண்டார்கள் என்பது தெரியும். நீங்கள் பெரிய பலத்தில் இருக்கிறீர்கள். ஆளும் கட்சி எவ்வளவு பண்போடு இருந்தால் இப்படி குஸ்தி சண்டைக்குப் போகிற மாதிரிப் பேசிக் கொண்டிருந்திருப்பார்கள்? அப்படி நாகரிகம் அவர்கள் கற்றுக் கொண்டிருக்கிறபோது, எதிர்க் கட்சிகளைப் பார்த்து நாகரிகமாக இல்லையென்றால் எதிர்க் கட்சியில் இருப்பவர்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது என்பதைக் கடுமையாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* **திருமதி ஜோதி வெங்கடாசலம்:** I want to make a submission, Sir. இந்த நாகரிகம் என்ற வார்த்தையைப்பற்றிய சர்ச்சை நேற்றைக்கும் இன்றைக்கும் தொடர்ந்து நடந்து வந்திருக்கிற காரணத்தினால் எதிர்க் கட்சியிலுள்ளவர்களுடைய மனது புண்பட்டிருக்கிறது என்பதைத் தாங்கள் அறிவீர்கள். சாதாரணமாக எதிர்க்கட்சியினர் பேசுகிறபொழுது—பல முறை நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன்—ஆளும் கட்சியில் இருப்பவர்கள் மொத்தமாக எழுந்து எதிர்க் கட்சியிலிருந்து பேசுகிறவர்களைத் தாக்கும்படியான, தகாத விதத்தில் பேசுகிறார்கள், தங்களுடைய கவனத்திற்குக்கூட கொண்டுவர முடியா-

மல் இருக்கின்றன அவ்வார்த்தைகள். ஆகையினால், இந்த மன்றத்தினுடைய மரியாதையைக் காப்பாற்றுவதற்கு எல்லோருக்கும் பொறுப்பு உண்டு. ஆகவே, அந்த நாகரிகம் என்ற வார்த்தையை ரிகார்டிலிருந்து எக்ஸ்பஞ்ச் செய்துவிட்டால் நலமாக இருக்கும் என்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி: இந்த மன்றத்தில் எதிர்க் கட்சியினர்கள் வெளிநடப்புச் செய்வதற்கு உரிமை பெற்றிருக்கிறார்கள். அப்படி வெளிநடப்புச் செய்யும்பொழுது தலைவர் எழுந்து வெளிநடப்புச் செய்வதற்கான காரணத்தை அமைதியாக எடுத்துச் சொல்லி விட்டுப்போவது மரபாகும். அப்படியில்லாமல் வெளியே போகும் பொழுது திரு. முனு ஆதி அவர்கள் 'வெளியே வாருங்கடா, உதைக்கச் சொல்கிறோம்' வெளியே வாருங்கடா, பார்த்துக் கொள்கிறோம்' என்று சொல்லிவிட்டுப் போகிறார். இப்படி ஆளும் கட்சியினரைப் பார்த்து ஒரு சட்டமன்ற உறுப்பினர் வெளியே செல்லும்பொழுது கூச்சல் போட்டுக்கொண்டு போகலாமா? இப்படிப்பட்ட வார்த்தைகளை கூறிக்கொண்டு வெளியே போவது முறை தானா, பண்பு தானா, மரபு தானா என்று தாங்கள் தயவுசெய்து தீர்ப்பு அளிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாகரிகம் என்ற சொல் இன்றைக்கு உபயோகப்படுத்துவது அல்ல. நாகரிகம் என்ற சொல் இந்தப் பக்கத்திலிருந்து வந்து அவையில் எழுந்தது. நாகரிகமாக நடந்துகொள்ள வேண்டுமென்பது ஒரு பக்கத்துக்கு மட்டுமல்ல, எல்லோரும் நாகரிகமாக நடந்துகொள்ள வேண்டுமென்று சொன்னேனதவிர, யாரையும் அநாகரிகமாக நடந்துகொண்டார் என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை. எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பாதுகாப்பு வேண்டும் என்று சொன்னார்கள். சபையில் பேசுவதற்கு என்று ஒரு முறை இருக்கிறது. டாக்டர் ஹாண்டே அவர்கள் இந்தப் பிரச்னையைக் கிளப்பிய முறை, திரு. மதியழகன் அவர்கள் எழுப்பிய முறை சட்டமன்ற விதிமுறைகளுக்கு ஒத்து வந்தது தானா, நாகரிகமான முறையில் இருக்கிறதா என்ற அளவுக்குச் சொல்லப்பட்டதே

தவிர வேறு ஒன்றுமில்லை. திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் பாதுகாப்பு வேண்டும் என்று கேட்டார்கள். பாதுகாப்பு நிச்சயம் இருக்கிறது . . .

திரு. கே. டி. கே. தங்கமணி : பாதுகாப்புத் தருவதோடு அல்லாமல், நாகரிகத்தைப்பற்றி இரண்டு, மூன்று நாட்களின் நடவடிக்கைகளைப் புரட்டிப் பார்த்தால் முதன் முதலில் எனக்கு நாகரிகம்பற்றிச் சொல்வதற்கு உணவு அமைச்சர் அவர்கள்தான் எழுந்திருந்தார்கள். அவர் எழுந்ததற்குப் பின்னால் நாகரிகம் என்றால் என்ன, என்ன அநாகரிகமாக நடந்துகொண்டோம் என்றெல்லாம் பிரச்சினை எழுந்தது. நாகரிகம் என்பதை அமைச்சர் அவர்கள்தான் முதன் முதலில் கிளப்பினார். அப்படி யானால் அதற்கு எங்களுக்குப் பாதுகாப்புக்கொடுக்க வேண்டும். நாகரிகம்பற்றி அவர்கள் சொல்லி நாங்கள் கேட்கக்கூடிய நிலை மையில் இல்லை. நாகரிகம், அநாகரிகம் என்பதுபற்றியோ, அரசியல் நாகரிகத்தைப்பற்றியோ அவர்கள் எங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. சட்டமன்றத்தில் ஏதாவது பேசினால் whether what I have raised is relevant or not is material fact 'நீங்கள் பேசியது நாகரிகம் இல்லை' என்று அவர் எனக்கு நாகரிகம் கற்றுக்கொடுக்க வேண்டியதில்லை. அது முதல் எனக்கு வேதனையாகத்தான் இருக்கிறது. உணவு அமைச்சர் அவர்கள் என்னை நாகரிகமாக நடந்து கொள்ள வேண்டுமென்று சொன்னதற்கு, தாங்கள் அவர்களை 'புல் அப்' பண்ணவேண்டும் என்று சொல்லியும் இதுவரையில் தாங்கள் அவரை 'புல் அப்' பண்ணவில்லை. ஆகவேதான் டபிள் ஸ்டாண்டர்டு என்ற வாசகத்தைச் சொன்னேன். எந்த ஸ்பீக்கரும் பொதுவாகத்தான் இருக்க வேண்டும். இருப்பார் என்ற நம்பிக்கையோடு இன்றைக்கு நான் சொல்கிறேன். பழைய நடவடிக்கைகளை எடுத்துப் பார்க்கும்பொழுது தெரியும். நானும் நாடாளுமன்றத்தில் உறுப்பினராக இருந்திருக்கிறேன். யாரும் என்னைப் பார்த்து நாகரிகமாக நடக்கவில்லை என்று சொன்னதில்லை. தனிப்பட்ட முறையில் எப்படி நாகரிகமாக நடந்துகொள்வது, அரசியலில் எப்படி நாகரிகமாக நடந்துகொள்வது என்பது எனக்குத் தெரியும். எங்களுக்கு நாகரிகம் போதிப்பதை அவர்கள் நிறுத்தும்படி தாங்கள் ரூலிங் கொடுக்க வேண்டும். நான்

பாதுகாப்புக் கேட்கிறேன் என்றால் அவர்கள் அடித்துவிடுவார்கள் என்று பாதுகாப்புக் கேட்கவில்லை. அல்லது அவர்கள் பேச்சுக்குப் பேச்சுப் பதில் சொல்ல முடியாமல் பாதுகாப்புக் கேட்பது என்பது அல்ல. அந்த முறையில் அவர்கள் அநாகரிகமாக நடந்து கொள்கிறீர்கள் என்று சொல்வதைக்கூட ஏற்றுக்கொண்டு நாங்கள் நாகரிகமாக நடந்து கொள்ள வேண்டும் என்று அந்த அளவுக்குத் தலைவர் அவர்கள் உபதேசம் செய்வது எங்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது. அவர்கள் வெளியே செல்லும்பொழுது ஆளும் கட்சியைச் சேர்ந்த நிலக்கோட்டை எம்.எல்.ஏ. அவர்கள் என்ன சொன்னார் என்று அவரே சொல்லட்டும். அவர் எழுந்திருந்து மிரட்டி அவர்களைப் பார்த்துக் கூச்சல் போட்டார். . .

திரு. ஆ. முனியாண்டி : திரு. முனு ஆதி அவர்கள் வெளியே செல்லும்பொழுது, திரு. வீராசாமியைப் பார்த்து "வெளியே வாருங்கள், பார்த்துக் கொள்வோம்' என்று சொன்னார். அதற்கு என்ன அர்த்தம். ஆதலால் 'எங்கேய்யா வருவது, பார்த்துக் கொள்ளலாம்' என்று நான் சொன்னேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இப்பொழுது தாங்களே கேட்டுக் கொண்டிருந்தீர்கள், அவர்கள் என்ன சொன்னார் என்பதை இப்படிச் சொல்வது நாகரிகமா ?

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த நாகரிகம் என்ற வார்த்தையைப்பற்றி அதிலே ஒரு 'இன்ஸின்யுவேஷன்' இருக்கிறது என்று பொருள்பட இங்கு பலரும் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். சாதாரணமாக நாகரிகம் என்று சொன்னால் அதிலே எந்தவிதமான 'ஸ்டிங்கும்' இருக்காது. ஆனால், நமது சபையில் விவாதங்களை உற்றுக் கவனிக்கின்ற நேரத்தில் நாகரிகத்தைக் கற்றுக் கொள்வதிலும், கற்பிப்பதிலும் அபிப்பிராய பேதம் இருக்கிறது என்று நான் எண்ணுகிறேன். ஆதலால், இதுமாதிரி எதிர்க் கட்சியினராக இருந்தாலும்சரி, ஆளுங் கட்சியினராக இருந்தாலும்சரி, இம்மாதிரி வார்த்தைகளை பிறர் மனது புண்படக்கூடிய அளவில் உபயோகிக்காமல் இருப்பது

சாலச் சிறந்ததாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். பொதுவாக நாங்களெல்லாம் சட்டமன்றத்தில் ஒரு சில காலம் அனுபவம் பெற்றவர்களாக இருக்கிறோம். இம்மாதிரியான முறை இப்பொழுதுதான் புதியதாக ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக 1973-வது ஆண்டு அக்டோபர் 10 ஆம் தேதிக்குப் பிறகு இம்மாதிரியான பூசல் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. மிகவும் வருத்தப்படுகிறோம்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அக்டோபர் 10 ஆம் தேதி என்ன என்பதை சற்று விளக்க வேண்டும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்த மன்றத்தில் இம்மாதிரியான சர்ச்சைக்குரிய வார்த்தைகளைப் பேசாமல் இருப்பது நலமாக இருக்கும் என்று கருதுகிறேன். நாங்களெல்லாம் பொறுப்புள்ள எதிர்க்கட்சிகளாக இருக்கிறோம். யாரையும் புண்படுத்த வேண்டும் என்று நினைத்து நாங்கள் ஒரு வார்த்தையையும் கூறவில்லை. ஆனால், எங்களுக்கு நாகரிகம் இல்லை, எதிர்க்கட்சியினருக்கு நாகரிகம் இல்லை என்று சொல்வது நியாயம் அல்ல, தர்மம் அல்ல என்று தங்கள்மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். ஆதலால், டபிள் ஸ்டாண்டர்டு என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கூறினார்கள். டபிள் ஸ்டாண்டர்டு என்றால், எதிர்க்கட்சிகளுக்கும் இருக்கக் கூடாது, ஆளும் கட்சியினருக்கும் இருக்கக்கூடாது. எல்லோரையும் ஒரேமுகமாகத் தாங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த மன்றத்தின் உரிமையைப் பாதுகாத்துக் கொடுக்க வேண்டும், எங்களுடைய உரிமையையும் பாதுகாக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் அக்டோபர் 10, 1973 என்று கூறியது, 1972 என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் ஆளும் கட்சியினர், மாற்றுக் கட்சியினர்கள் ஆக இரண்டு பேர்களையும் ஒன்றாக மதிக்க வேண்டும் என்று சொன்னார்கள். நான் சொன்னதுபோல அந்தந்தத் தலைவர்கள் அந்தந்த

உறுப்பினர்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும், நல்ல முறையில் நடந்துகொள்ளக் கற்றுக்கொடுக்க வேண்டும் என்று சொன்ன நேரத்தில், எல்லாத் தலைவர்களுக்கும்தான் சொன்னேன். இந்தப் பக்கம் இருப்பவர்களை நீக்கிவிட்டு, அந்தப் பக்கம் இருப்பவர்களை மட்டும் சொல்லவில்லை. எல்லாப் பகுதியினருக்கும்தான் கூறினேன். இந்த மன்றத்தின் பெருமையையும் புகழையும் காப்பாற்றக் கூடிய வகையில் உறுப்பினர்கள் நடந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்பொழுது அடுத்த அலுவலுக்குச் செல்கிறேன்.

(3) அறிவிப்பு.

தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/73).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு, 1973 ஆம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/73) பேரவை ஆய்வு செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/73).

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/73) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

* 3—8—1973 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. செ. மாதவன்] [1973 ஆகஸ்ட் 6

இம்மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்கள், தாங்கள் சட்டமன்ற உறுப்பினர்களாகப் பதவி வகித்துவருகிற வரையில், அரசுப் போக்குவரத்துத் துறையையும் இவ்வரசால் அமைக்கப்பட்ட மற்றப் போக்குவரத்துக் கழகங்களையும் சேர்ந்த பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்படலாமென்று அரசு முடிவு செய்துள்ளது. அதற்கிணங்க 1971 ஜூன் 3 ஆம் நாளிலிருந்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இவ்வசதியை அரசு வழங்கியது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் இலவச ரயில் பயண அனுமதிச் சீட்டுகளுக்காக 1958 ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஊதியங்கள், படிகள் (திருத்த) சட்டத்தில் விதித் துறைகள் இயற்றப்பட்டுள்ளதைப் போலவே, இங்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள மேற்சொன்ன சலுகைகள்குறித்து, தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்கல் சட்டத்தில் தக்கதொரு விதித்துறை சேர்க்கப்பட்டால் அது மிகப் பொருத்தமாகவிருக்கும் எனவும் கருதப்பட்டது.

(திரு. நா. வீராசாமி தலைமை)

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இலவசப் பயண அனுமதிச் சீட்டுகள் வழங்குவதற்குரிய முறையும், அதிகாரமன்றமும் இவையென வரையறுக்கும்பொருட்டு, விதிகள் இயற்றும் அதிகாரம் அரசிடம் ஒப்படைக்கப்படலாம் எனவும் கருதப் படுகிறது.

சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் பயணப்படி பெறுவதற்கு மற்றப்படி அவருக்குள்ள உரிமை இச்சலுகை அளிக்கப் படுவதனாலேயே நீங்கிவிடுமெனக் கருதப்படக்கூடாதெனப் பார்த்துக் கொள்ளவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, இப்பேரவையின் முன்னர் வைக்கப்பட்டுள்ள இச்சட்ட வரைவில் இவை தொடர்பான விதித்துறைகள் அடங்கியுள்ளன. பேரவை இதனை நிறைவேற்றித் தருமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

1973 ஆகஸ்ட் 6]

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த மசோதாவின் பேரில் இதை ஆட்சேபணை சொல்வதற்கு இல்லை என்றாலும்கூட, இந்த மசோதா எந்தக் காரணத்தினால் கொண்டுவரப்பட்டது என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் ஓரளவுக்கு எடுத்துச் சொன்னார்கள். ஜூன் மாதத்திலிருந்து சட்டமன்ற, மேலவை உறுப்பினர்களுக்கு இலவச பாஸ் நம்முடைய ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டில் ஓடக்கூடிய பஸ்களுக்குக் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதற்குப் பின்னால் எங்களுக்கு பாஸ்கள் கொடுக்கப்பட்டு, ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டோடு இப்பொழுது வந்திருக்கக்கூடிய சில கார்ப்பரேஷன்கள் இருக்கிறதே, பல்லவன் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன், பாண்டியன் ரோட்வேஸ் கார்ப்பரேஷன், சோழன் ரோட்வேஸ் கார்ப்பரேஷன், சேரன் ரோட்வேஸ் கார்ப்பரேஷன், அறிஞர் அண்ணா போக்குவரத்துக் கழகம் போன்ற கார்ப்பரேஷன் பஸ்களிலும் பிரயாணம் செய்யலாம் என்று வசதி இருக்கிறது. இதிலே இருக்கக்கூடிய முதல் ஊனம் என்னவென்றால், இந்த மசோதாவைப் பார்த்தால், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் களுக்கும், மேலவை உறுப்பினர்களுக்கும் மட்டும்தான் இந்த வசதி இருக்கிறதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இந்த வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அது இந்த மசோதாவில் எந்த இடத்திலும் கவர் செய்யப்படாமல் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்த மசோதாவில் தரப்பட்டிருப்பது 'travel at any time in any part of the State of Tamil Nadu by any bus run and operated by the State Transport Department or by any Transport Corporation' என்று இருக்கிறது. அதனுடைய அர்த்தம் தெளிவாக இருக்கிறது. தமிழ்நாட்டிற்கு உள்ளே நம்முடைய ஸ்டேட் பஸ்களானாலும்சரி, அரசாங்கத்தால் நடத்தப்படுகின்ற கார்ப்பரேஷன் பஸ்களானாலும்சரி, அவைகளில் பிரயாணம் செய்யலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது, இப்போது நமது மாநிலத்திற்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய மாநிலங்களுக்கு நீண்ட தூரம் இல்லாவிட்டால் கொஞ்ச தூரம் போய் வருவதற்கு

சில ஏற்பாடுகள் இருக்கின்றன. மதுரையிலிருந்து கோட்டயத்திற்கு பஸ் போகிறது தூத்துக்குடியிலிருந்து கொல்லத்திற்கு பஸ் போகிறது. மதுரையிலிருந்து பெங்களூருக்குப் போகிறது. இந்த மசோதாவின்படி பார்த்தால் இனிமேல் இந்த பஸ்களிலே சென்றால் நமது மாநில எல்லையில் போனவுடன் இறக்கிவிட்டு விடுவார்கள். இல்லை என்றால் எல்லைக்கு அப்பால் உள்ள தூரத்தைக் கணக்குப் பார்த்து உரிய கட்டணத்தை வசூலித்து விடுவார்கள். அதோடு நமது மாநிலத்திற்குள் பக்கத்து மாநிலங்களிலுள்ள பஸ்களும் வருகின்றன. மைசூர் பஸ் வருகிறது. கேரளா பஸ் வருகிறது. இனிமேல் அந்த பஸ்களில் கட்டணம் இல்லாமல் பிரயாணம் செய்ய முடியாது.

சாதாரணமாக மதுரையிலிருந்து கோட்டயத்திற்கு பஸ் போகிறது என்றால் ஒரு நாள் நமது பஸ் போகும்; மறுநாள் அவர்கள் பஸ் போகும். அவசரமாக ஒரு சட்டமன்ற உறுப்பினர் கோட்டயத்திற்குப் போக வேண்டுமென்று சொன்னால், அன்றைக்கு அவர்களுடைய பஸ்தான் போவதாக இருந்தால் அந்த சட்டமன்ற உறுப்பினர் போக முடியாது. அதைப்போல்தான் மற்ற இடங்களுக்கும். நாமெல்லாம் என்றைக்கு எந்த பஸ் போகிறது என்று அட்டவணையைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இந்த மசோதாவில் இப்படிப்பட்ட ஒரு ஊனம் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜூன் மாதத்திலிருந்து நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பஸ்களில் செல்வதற்கு "ஃபிரி பாஸ்" கொடுத்திருக்கிறார்கள். அதை எத்தனைபேர் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. ஆனால் எல்லோரையும்விட அதிகமாக நான் பயன்படுத்துக் கொண்டிருக்கிறேன். இன்னும் சொல்லப்போனால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இந்த பாஸ் கொடுக்கவேண்டுமென்று அடிக்கடி வலியுறுத்திச் சொல்லிக் கொண்டிருந்தவனே நான்தான். ஒவ்வொரு வருஷமும் அதை நான் சொல்லி வந்திருக்கிறேன்.

இதிலே இன்னொரு விஷயத்தையும் குறிப்பிட வேண்டும். 1971 ஜூன் மாதத்திற்குப் பின்னால்தான் 'நைட் சர்வீஸ் பஸ்கள்' ஓடுகின்றன. அதிலே அதிகமாக விபத்துக்கள் இல்லாமல்

இருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். திறமையாகத்தான் இந்த முறையைச் செயல்படுத்துகிறார்கள். அதுமட்டுமல்ல. 'லைட்னிங் சர்வீஸ்' பஸ்களும் விடப்பட்டிருக்கின்றன. அதிக நேரம் எங்கும் நிற்காமல், குறைந்த ஸ்டாப்பிங்லோடு துரிதமாகச் சென்று வருகின்ற இந்த ஏற்பாடு நல்லதுதான். அதன்மூலம் நல்ல வருமானமும் கிடைக்கிறது. ஆனால் வருடத்தில் ஒரே ஒரு மாதம்—லீன் மன்த்' என்று சொல்வார்கள்--ஆடி மாதம் பிரயாணிகள் எண்ணிக்கை குறைகிறது. அதோடு இரவு நேரங்களில் இப்போது 'ஆம்னி' பஸ்கள் அதிகமாக ஓடிக் கொண்டிருக்கின்றன. அவைகளோடு நமது பஸ்கள் போட்டி போட முடியாது. அதனால் வருவாய் குறைகிறது. இருந்த போதிலும் லாபத்தில்தான் ஓடிக்கொண்டிருக்கின்றன. பாண்டியன் ரோட்வேஸ் கார்ப்பரேஷன் லாபத்தில்தான் ஓடிக் கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். அதைப்போல தொடர்ந்து லாபத்தில் ஓடக்கூடிய அளவுக்கு ஒரு உத்தரவாதம் கொடுக்கப்பட வேண்டும். அப்படி இருந்தாலும் சிலர் எதிர்ப்புச் சொல்ல வேண்டுமென்று எதையாவது சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நல்லவை நடந்தால் அதற்குப் பாராட்டுத் தெரிவித்து, மேலும் அந்தப் பணி தொடர ஊக்கப்படுத்த வேண்டுமேதவிர, ஊனப் படுத்துவதாக இருக்கக்கூடாது.

பாண்டியன் ரோட்வேஸ் ஓராண்டுக் காலமாக நல்ல முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. டி.வி.எஸ். நிறுவனத்தினரும் சிறப்பாக நிர்வகித்து வந்தார்கள். அதன் அடிப்படையில்தான் இப்போதும் நடைபெறுகிறது. பழைய ஊழியர்கள்தான் இருக்கிறார்கள். அதை சூப்பர்வைஸ் செய்வதற்காக அரசாங்கம் ஒரு அதிகாரியை நியமித்தார்கள். அவர் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி. அதுமட்டுமல்லாமல் அவர் ஒரு எஞ்சினீயருங்கூட. அவர், டி.வி.எஸ்ஸில் எப்படிச் சிறப்பாக இருந்ததோ அதைவிட சிறப்பாகக் கண்காணித்து நடத்தி வந்தார். டவுன் பஸ்கள் லாப நஷ்டத்தில் இல்லாமல் ஓடின. இப்போது டவுன் பஸ்கள்கூட லாபத்தில்தான் ஓடிக் கொண்டிருக்கின்றன. எந்தக் காரணத்தினாலோ அந்த அதிகாரியை மாற்றி விட்டார்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): இந்த மசோதா மெம்பர்களுக்கு பாஸ் கொடுப்பதைப்பற்றியது. அதைப் பற்றித் தங்களுடைய கருத்துக்களைச் சொன்னால் நல்லதாக

இருக்கும். மற்ற விஷயங்களை வேறு சந்தர்ப்பங்களில் தெரிவித்துக் கொள்ளலாம். ஆகவே, இந்த மசோதாவைப்பற்றிமட்டும் சொன்னால் நல்லது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த மசோதா பாஸ் கொடுப்பதுபற்றி என்றிருந்தாலும், அந்தப் பாஸை வாங்கி என்ன பிரயோஜனம்? அதிலே இருக்கிற குறைபாடுகளையும் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : மற்றக் குறைகளைப் பற்றிச் சொல்ல வேறு வாய்ப்புகள் நிறைய இருக்கின்றன. அதனால் இப்போது இந்த மசோதாவைப்பற்றி மட்டும் சொன்னால் நல்லது.

THIRU K. T. K. THANGAMANI : Please go through some of the proceedings of the Lok Sabha. In regard to small Bills like this Bill, certain basic things are raised and that is how opportunities are given to Members to speak. Otherwise, the Hon. Minister will come and read out the Statement of Objects and Reasons appended to the Bill and then the Bill will be taken into consideration and then the clauses will be put to vote and then the House will approve the Bill and the Chair will say that the Bill is passed. Sometimes a majority of the Members do not know what Bill is passed and when it is passed. But there may be certain Members who may have certain things to say and who may also have to say about persons who may be affected by the Bill. So it is only to help the House and help you, I have raised this point and I thought that that was relevant. It is not relevant, I would not pursue that particular point. ஆக, நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி—இந்த மசோதா தவறானது என்றோ மோசமானது என்றோ நான் சொல்லவில்லை—இப்படிப்பட்ட சில குறைபாடுகள் இருக்கின்றன. அவைகளுக்கு ஏற்ற பரிகாரம் காண வேண்டும்.

இன்னொரு முக்கியமான விஷயம். ஸ்டேட் ட்ரான்ஸ்போர்ட்டில் ரிசர்வ் செய்வதற்கு வசதி இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 5-வது, 6-வது சீட்டுகள் ரிசர்வ் செய்யப்பட்டிருக்கின்றன. அந்த இரண்டு சீட்டுகளிலும் வேறு யாரும் இருக்கக்கூடாது

என்று உத்தரவு போட வேண்டும். இல்லாவிட்டால் சில சட்ட மன்ற உறுப்பினர்கள் 5-வது சீட்டுதான் எனக்கு வேண்டுமென்று கேட்க, அதிலே ஏற்கெனவே இருந்தவர் விட்டுக்கொடுக்க மறுக்க, கடைசியில் அதில் பல சிக்கல்கள் ஏற்படும். ஆகவே, 5, 6 சீட்டுகளில் பாஸஞ்சர் யாராவது இருந்தாலும் சட்டமன்ற உறுப்பினர்கள் வந்து கேட்டால், அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்டால் அந்த இடங்களை விட்டுக்கொடுத்துவிட வேண்டும். அதற்குத் தகுந்த உத்தரவு போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு விஷயம். மதுரையிலும் திருச்சியிலும் ரிசர்வேஷன் செய்யப்படுகிறது. அதைப்போன்று இரயிலிலும் ரிசர்வ் செய்யப்படுகிறது. பஸ்களில் ரிசர்வ் செய்யப்படுவதில் சில சிக்கல்கள் இருக்கின்றன. ஒரு உதாரணத்தின்மூலம் அதை விளக்குகிறேன். நாகர்கோவிலிலிருந்து சென்னைக்கு 551 எண் பஸ் வருகிறது. மதுரையிலிருந்து நான்கு பேர்—ஒரு புருஷன், மனைவி, இரண்டு பிள்ளைகள்—ரிசர்வ் செய்கிறார்கள். அப்போது அவர்களுக்குச் சீட்டு நம்பர் கொடுப்பதில்லை. 4 சீட்டுகள் ரிசர்வ் செய்யப்பட்டிருக்கின்றன என்று டிக்கட் கொடுத்து விடுகிறார்கள். நாகர்கோவிலிலிருந்து சீட்டுகள் காலி இல்லாமல் மதுரை வரையில் வந்தாலும், மதுரை வந்தவுடன் சிலர் இறங்குவார்கள். அந்த இடங்களில் மற்றவர்கள் வந்து உட்கார்ந்து கொள்வார்கள்; அல்லது ரிசர்வ் செய்யாதவர்கள் வசதியாக வந்து உட்கார்ந்து கொள்ளலாம். ஒரு வாரத்திற்கு முன்னாலே ரிசர்வ் செய்த இந்த 4 பேரும் வசதி குறைந்த கடைசியாக இருக்கக்கூடிய 4 இடங்களில் போய் உட்கார வேண்டியிருக்கிறது. ஆகவே, எங்கிருந்து ரிசர்வ் செய்தாலும் குறிப்பிட்ட இந்த இந்த சீட்டுகள் என்று முன்னாலேயே தெரிவித்துவிட வேண்டும். அப்படியானால்தான் அது பிரயோஜனமுள்ளதாக இருக்கும். அதற்கு வழி செய்ய வேண்டும். நான் ஏற்கெனவே ஆலோசனைக் குழுவில்கூட இந்த மாதிரியான பல கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறேன்.

இரயில்களில் இந்த வசதி இருக்கிறது. அதனால் அங்கே ரிசர்வேஷன் முறை சிறப்பாக நடக்கிறது. குறிப்பிட்ட சீட்டுகள் என்று ஒதுக்கிவிடுவதால், அந்த இடத்தில் வேறு யாராவது இருந்தாலும், அந்த இடம் வந்தவுடன் அவர்கள் இறங்கி

விடுவார்கள். தகராறுக்கு இடமில்லை. அப்படிச் செய்வது நீண்ட தூரம் பயணம் செய்பவர்களுக்கும், வேறு மாநிலங்களிலிருந்து வருபவர்களுக்கும் மிகவும் உதவிகரமாக இருக்கும். இந்த மசோதாவில் இப்படிப்பட்ட ஊனங்களைச் சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

ஸ்டேட் ட்ரான்ஸ்போர்ட்டின் மூலமோ அல்லது ஸ்டேட் கார்ப்பரேஷன் பஸ்கள் மூலமோ நமது மாநில எல்லையைக் கடந்து செல்வதற்கு இந்த பாஸை பயன்படுத்த முடியாத நிலை இருக்கிறது. இது ஒரு ஊனம். இரண்டாவதாக, பக்கத்து மாநிலங்களிலுள்ள பஸ்களில்—நமது மாநிலத்திற்குள் வருகின்றவை—செல்வதற்கு இந்த மசோதாவில் எதுவும் சொல்லப்படவில்லை. இது ஒரு ஊனம். இந்த இரண்டு ஊனங்களையும் சரிசெய்வதற்கு ஏதாவது 'மியூச்சுவல் அண்டர் ஸ்டான்டிங்' இருக்கிறதா? அதற்கு ஒரு அஷ்ஷூரன்ஸ் கொடுத்தால் உதவியாக இருக்கும் என்ற என்னுடைய கருத்தை தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை வரவேற்கின்ற அதே நேரத்தில் ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் சொல்லி என் பேச்சினை நான் முடித்துக்கொள்ள விரும்புகிறேன். முதலாவதாக மசோதாவின் 2-வது பிரிவில் திரு. தங்கமணி அவர்கள் சுட்டிக்காட்டியது போல in any part of the State of Tamil Nadu என்று இருக்கிறது. இது ஓவர்சைட்டில் வந்ததாக நான் கருதுகிறேன். இல்லையென்றால் பாதிப் பயணம் இலவசமாகவும், மறுபாதிப் பயணம் காசு கொடுத்துப் போகிற முரண்பாடான நிலைமை வந்துவிடக் கூடும். இதனைத் தவிர்த்துவிட வேண்டும் ஆகவே any part of the State of Tamil Nadu என்பதனையே எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்றக் கூட்டத்திற்கு இங்கே வருவதற்கும், இங்கிருந்து ஹாஸ்டலுக்குப் போவதற்கும் பஸ் இருக்கிறது. பல நேரங்களில் சட்டமன்ற அங்கத்தினர்களோடு கூட மற்றவர்களும் வருகிறார்கள். அவர்களை

ஏறக்கூடாது என்று சொல்ல முடியாது. அவர்களும் ஏறுவதனால் சட்டமன்ற அங்கத்தினர்களுக்கு இடம் கிடைக்காமல், அவர்கள் அவதிப்படுகிற நிலை இருக்கிறது. ஆகவே சட்டமன்றம் கூடுகிற நேரத்தில் 'சட்டமன்ற அங்கத்தினர்களுக்கு மட்டும்' என்று போர்டு இருந்து பயன் இல்லை—சட்டமன்ற அங்கத்தினர்களுக்கு என்றே தனியாக பஸ்விட வேண்டும். மற்றவர்களுக்காக தனி பஸ் விடலாம். அது ரெம்யூனரேடிவ் ஆக இருக்கும். 'ஒன்லி பார் மெம்பர்ஸ்' என்கிற பஸ்ஸை சட்டமன்ற அங்கத்தினர்களுக்காக மட்டும் போகிற பஸ்ஸாக மாற்ற வேண்டும்.

அடுத்து, சட்டமன்றம் சில நாட்களில் சீக்கிரம் முடிந்து விடுகிறது. அல்லது 1½ மணிக்கும் மேலாக 2, 2½ மணி வரையில் நடக்கிறது. 1½ மணி ஆகிவிட்டால் அந்த பஸ் போய்விடுகிறது. அவர்களையும் குற்றம் சொல்ல முடியாது. அவர்களுக்கு ட்யூடி நேரம் இருக்கிறது. ஆயினும் அந்த பஸ்ஸை ஏற்பாடு செய்கிற போது சட்டமன்றம் முன்னால் முடிந்தாலும் சரி அல்லது குறிப்பாக குறிப்பிட்ட நேரத்திற்கு அதிகமாகச் சென்றாலும் கூட சட்டமன்றம் முடிந்தவுடன் உறுப்பினர்களுக்கு பஸ் வசதி இருக்கும்படியாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஏற்கனவே சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய ப்ரீ பாஸ் சம்பந்தமாக தமிழ்நாடு அக்கவுண்டெண்ட் ஜெனரல் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஏற்கனவே எனக்கு முன் பேசிய பல மெம்பர்கள் எக்ஸ்பிரஸ் செய்த கருத்துக்களை நான் ஆதரிக்கிறேன். ப்ரீ பாஸ் கொடுப்பதை அண்டை மாநிலத்திற்குள் போகிற பஸ்களுக்கும் செல்லும்படி செய்ய வேண்டும். அதோடு மற்ற இடங்களில் ஆறாயிரம் மைலுக்கு ரெயில்களில் பயணம் செய்வதற்கு இலவசக் கூப்பன் அளித்திருக்கிறார்கள். அதே சலுகையை இந்த மசோதாவில் தமிழக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் கிடைக்கும்படியாகச் சேர்த்து இதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. என். கே. பழனிசாமி] [1973 ஆகஸ்ட் 6

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் மீது நடந்த விவாதத்தில் அரசு போக்குவரத்துத் துறை பற்றி அதிகமான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. அரசுத் துறை போக்குவரத்தை அவர்களே பாராட்டியிருக்கிற காரணத்தினால், அவர்களது கருத்துக்களையும் அந்தத் துறையினர் பரிசிலனை செய்வார்கள் என்று நம்புகிறேன்.

இந்த மசோதாவைப் பொறுத்து தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாட்டு எல்லைக்குள், தமிழக அரசு பஸ் போக்குவரத்தில் இலவசமாக பயணம் செய்வதுதான் வருகிறது. வேறு கார்ப்பரேஷன் பஸ்களில் போகலாமா, வேறு மாநிலங்களில் போகலாமா என்பதற்கும் இந்த மசோதாவுக்கும் சம்பந்தம் இல்லை.

THIRU B. VENKATASWAMY : For example I want to seek one clarification from the Hon. Minister. Many MLAs. from Ooty when they have to come to Madras come via Bangalore. They have to come to Bangalore from Ooty and from Bangalore they have to catch the bus to Madras. When they come to Bangalore, since it is not in our borders, are they eligible for this concession for travel in Mysore State area? Suppose an M.L.A. from Ooty taken this route of coming from Bangalore, is he eligible for the concession for travel in Mysore area? I want to seek a clarification from the Hon. Minister on this point.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது புதிய கோரிக்கை. தனியாகத்தான் பரிசீலிக்க வேண்டும்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : சட்ட அமைச்சர் பதில் சொல்லும் போது இந்த மசோதா சம்பந்தமாக மட்டும் பதில் சொன்னார். போக்குவரத்துத் துறை பற்றியும் கருத்துக்கள் தெரிவிக்கப் பட்டிருக்கின்றன. போக்குவரத்துத் துறை அமைச்சரைக் கலந்து கொண்டாவது அந்த முக்கியமான கருத்துக்களுக்குப் பதில் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : போக்குவரத்துத் துறை பற்றிய விவாதம் வரும்போது அதைப்பற்றிப் பேசவேண்டும்.

1973 ஆகஸ்ட் 6] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

மாண்புமிகு மாற்றுத்தலைவர் (திரு. நா. வீராசாமி) : பேரவை முன்னுள்ள கேள்வி :

" தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) சட்ட முன்முடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு 16/73) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும் "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move—

" That the Tamil Nadu Payment of Salaries (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 16 of 1973) be passed. "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(ஆ) தமிழ்நாடு, 1973-ஆம் ஆண்டு, குடிசைப் பகுதிகள் (மேம்பாடு-மாற்று) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/73)

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே,

" தமிழ்நாடு, 1973-ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்பாடுமாற்று) திருத்த சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/73) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் " என்று முன்மொழிகிறேன்.

தமிழ் நாட்டில் குடிசைப் பகுதிகளைச் சீரமைக்கவும் மாற்றியமைக்கவும் வகை செய்வதற்காக, தமிழ் நாடு 1971-ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (சீரமைத்தல் மாற்றியமைத்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 11/1971) இயற்றப்பட்டது. மேற்படி

* 3—8—1973-ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. க. இராசாராம்]   [1973 ஆகஸ்டு 6

சட்டத்தைச் செயற்படுத்துவதில் சில இடர்ப்பாடுகள் ஏற்பட்டன. தற்போதைய இந்தத் திருத்தச் சட்டவரைவு அத்தகைய இடர்ப்பாடுகளை நீக்க விழைகிறது.

ஒரு குடிசைப் பகுதி தொடர்பான சீரமைப்புப் பணிகளை நிறைவேற்றுவதற்காக அல்லது அத்தகைய பகுதியில் கட்டிடம் கட்டுவதற்காக அல்லது ஏதேனும் ஒரு குடிசை மாற்றுப் பகுதியை மீண்டும் மேம்படுத்துவதற்காக அல்லது குடிசைவாழ் மக்களை வேறிடத்தில் குடியமர்த்துவதற்காக ஏதேனும் ஒரு குடிசைப் பகுதிக்குள் அல்லது அதற்கு அருகில் உள்ள அல்லது குடிசைப் பகுதியினால் அல்லது குடிசை மாற்றுப் பகுதியினால் சூழப்பட்டுள்ள ஏதேனும் ஒரு நிலத்தைக் கையகப்படுத்த மேற்சொன்ன சட்டத்தின் 17-வது பிரிவு அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது. மேற்சொன்ன காரியங்களுக்காக, குடிசைப் பகுதிக்கு அல்லது குடிசை மாற்றுப் பகுதிக்கு அப்பால் உள்ள காலி நிலங்களைக் கையகப்படுத்த மேற்படி சட்டத்தில் விதித் துறை எதுவும் இல்லை. எனவே இத்தகைய பகுதியில் இராத காலி நிலங்களைக் கையகப்படுத்த வியலும் வகையில், அச்சட்டத்தில் பொருத்தமான விதித் துறையை இயற்றக் கருதப்பட்டுள்ளது. அப்பிரிவிற்கிணங்க அரசு கையகப்படுத்த விரும்புகின்ற நிலத்தின் சொந்தக்காரர் அல்லது அதில் பற்றுள்ள வேறு ஒருவர் அத்தகைய செயற்குறிப்பை எதிர்ப்பதாயிருந்தால் அதற்குக் காரணங்காட்டுமாறு அரசு கேட்டுக்கொள்ள வேண்டுமென மேற்படி சட்டத்தின் 17-வது பிரிவில் கண்டுள்ள வரம்பு நிபந்தனை கூறுகின்றது. இது நடைமுறை சார்ந்த ஒரு பொருளேயாதலால், காரணங்காட்டுமாறு கேட்கும் அறிவிப்பு தொடர்பான பணியை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அல்லது அரசினால் அதிகாரம் அளிக்கப்பட்ட பிற அதிகாரியிடம் ஒப்படைக்கக் கருதப்பட்டுள்ளது.

இழப்பீட்டுத் தொகை தொடர்பாக நிர்ணய அதிகாரி வெளியிடும் ஆணைகளை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடுவதற்கு மேற்படி சட்டத்தின் 20-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு வகை செய்கிறது. அவ்வாறு வெளியிடுவது தேவையில்லையெனக் கருதப்படுகிறது.

1973 ஆகஸ்ட் 6]   [திரு. க. இராசாராம்]

குடிசைப் பகுதிகளில் வாடகைக்குக் குடியிருப்பவர்களுக்கு மட்டுமல்லாது குடிசைப் பகுதிகளின் அனுபோகதாரர்கள் அனைவருக்கும் குடிசைகளிலிருந்து வெளியேற்றப்படுவதினின்று பாதுகாப்பு அளிக்கவும் அரசு முடிவு செய்துள்ளது. எனவே, மேற்படி சட்டத்தின் 29, 31, 32, 33 ஆகிய பிரிவுகளை உரியவாறு திருத்தவும் கருதப்பட்டுள்ளது.

62-வது பிரிவில் சில சிறு திருத்தங்களைச் செய்வதற்கு இந்த வாய்ப்பு பயன்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது.

இச்சட்ட வரைவை ஏற்று நிறைவேற்றித் தருமாறு இப் பேரவையை நான் கேட்டுக் கொள்கிறேன்.

*THIRU K. M. SUBRAMANIAMMr. Chairman, Sir, while welcoming the present Bill let me say it is very good for improvement of slums. I have to say at the outset that the first portion of the Bill is extremely necessary because I find that it is always difficult to find alternative accommodation. For that purpose lands have to be acquired and excess population has to be shifted to the alternative accommodation and all possible assistance must be given to the authorities in that process. So, I entirely agree that so far as the occupant is concerned this Bill is very necessary because it has been the experience of those connected with the Slum Clearance Board that directly or indirectly there have been benami occupants. Persons who have never been in the slums previously have somehow been allotted plots. But I think this Bill relates to the private slums.

In private slums it is very necessary that all steps should be taken to see that there is no abuse. A mere statement of the occupant, without specifying other particulars, is not enough. It is vague. How can you find out the read occupant? He may be the occupant of another building and he may try to get in through backdoor. He may give his relation's name as occupant. He may give a statement which may or may not be correct. If the owner wants to demolish or do any repair to the building, the occupant should agree to vacate. There is possibility of misuse. I

think if not in the Bill, at least in the Rules to be framed, it should be laid down that every slum owner and every owner of a building in a slum should compulsorily issue receipts for the rents collected so that the genuine occupant would be identified later. I think the Chairman of the Slum Board is now finding it very difficult to identify occupants. Claims are coming and ration cards or a post card written by somebody are traced to fix the person. These are the various crude methods adopted to find out the real occupant.

I think it is very necessary that the occupants ' register must be maintained by the Slum Board whether it is a private slum or a public slum. Of course photos will be shown, but that is not enough. Photos are coming and going. Slum dwellers vacate their places. I am saying about private slums and there new occupants would be coming. It is very necessary that when a tenant is asked to vacate a building for repair, the owner should intimate the Board that such and such a person is the occupant and he should also have the receipt for the rent to prove this. And after the repair, he must be sure that the building would be given to him back and what the rent he might have to pay. In this Bill it is not at all stated. There is no knowing what the actual rent paid by the tenant was. It is a very bad custom in the slums where somebody taken up a portion of the land, he puts up some five or six huts and lets them out at Rs. 15 or 20 per month. There will be no receipts. And how to judge who the tenants are, God only knows. In order to avoid confusion and avoid benami occupants and claims coming on false grounds, it should be proved. There should be fool-proof method to do this.

Thirdly, this Bill says that wherever the owner takes up the building for repair, the tenant should say that he wants the place back. It is all right. But when should it be done? It is very necessary and before sanctioning the repair or approving the repair, I think the Slum Board or the authority concerned should know whether he is the occupant and he should know it beforehand. It is, therefore, that I have given an amendment to clause 31. It should be accepted and the tenant should know at what rent he would get the repaired house. There must be

reasonable rent, say six per cent of the cost of construction. I think the amendment would be accepted. I think it is necessary that there should be fool-proof method by which the occupant could be identified and the real occupant should be given re-allotment. Further, the occupant must have the right to say beforehand that he wanted the building at proper rent.

Sir, these things should be guaranteed and the Bill should be suitably amended. If it is not amended, at least in the Rules the Government should see that these things are incorporated. Thank you, Sir.

*திருமதி த. ந. அனந்தநாயகி : கனம் மாற்றுத்தலைவர் அவர்களே, இன்று குடிசை மாற்று வாரியச் சட்டத்திலே சில சீர் திருத்தங்களை கொண்டுவரவேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு பல திருத்தங்களை நம் சபை முன்னாலே வைத்திருக்கிறார்கள். ஆனால் இந்தத் திருத்தங்களைப் பொறுத்த வரையில் எப்படி கத்தி, காய்கறி நறுக்கவும் உதவும், கழுத்தை நறுக்கவும் உதவுமோ, அப்படி சில நடவடிக்கைகளை எடுக்க ஆரம்பித்தால், பிரஜைகளுக்கு எந்தவிதப் பாதுகாப்பும் இருக்காது என்ற சூழ்நிலை ஏற்படுகிறது என்பதை சட்டமன்றத்தின் வாயிலாக சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அரசாங்க நிலங்களிலே, கார்ப்பரேஷன் நிலங்களிலே, தனியார் நிலங்களிலே, இருக்கக்கூடிய இடங்களிலே எங்கெங்கே குடிசைப் பகுதிகள் இருக்கின்றனவோ அவற்றையெல்லாம் பாதுகாக்கின்ற அளவிலே வேலைகள் நடந்து கொண்டு வருகின்றன. முதலிலே அரசாங்க நிலம், பின்னர் கார்ப்பரேஷன் நிலம். அதற்குப் பின்னர் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டிய கஷ்டம் இருப்பதாலே தனி நபர் நிலத்தை எடுத்துக்கொள்ளலாம் என்பது பற்றியும் இங்கே பேசப்பட்டது. இன்றைக்குக் கொடுத்திருக்கக் கூடிய சட்ட முன் வடிவிலே இப்பொழுது எடுக்கப்பட்ட நிலங்கள் மாத்திரமல்லாமல், ஸ்லம் ஏரியாஸ் பக்கத்திலேயோ, அருகாமையிலேயோ, இன்னும் சற்று தூரத்திலேயோ நிலம் இருந்தால், அது குடிசைப் பகுதிகளுக்குத் தேவைப்பட்டால், அவற்றை எடுத்துக் கொள்வதற்கு அதிகாரம் தேவை என்றுதான் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதன் காரணமாக என்ன நீங்கு விளையும்

என்பதையும் யோசித்துப் பார்க்கவேண்டும். குடிசைவாழ் மக்களுக்குக் கட்டாயமாக வீடு கட்டிக்கொடுக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். அதே சமயத்திலே, ஒரு குடிசைப் பகுதிக்குப் பக்கத்திலே 1½ கிரவுண்டு நிலம் வைத்துக்கொண்டு ஒருவர் இருந்தால், அந்தக் குடிசைப் பகுதிக்காக அந்த 1½ கிரவுண்டு நிலம் தேவைப்படுகிறது, அதை உடனடியாக ஆர்ஜிதம் செய்ய வேண்டுமென்றால் அந்த நிலத்தை எடுத்துக்கொள்ளக் கூடிய அதிகாரத்தை குடிசை மாற்று வாரியத்திற்கு நாம் கொடுக்கிறோம். அந்த 1½ கிரவுண்டு நிலம் வைத்திருக்கக் கூடியவர் குடிசையில் வாழ்பவர்களைவிட ஒருபடி மேலே இருக்கக் கூடியவர், அவ்வளவு தான். அவர் நிலத்திற்கு நீங்கள் என்ன விலை கொடுக்கப் போகிறீர்கள் என்பதும் எங்களுக்குத் தெரியும். கோயில் நிலமாக இருந்தால் சும்மாவே எடுத்துக்கொள்வீர்கள். யாராவது சண்டை பிடிக்கக் கூடிய முதலாளியாக இருந்தால் மார்க்கெட் விலைக்குக் கொடுப்பீர்கள். அவன் அப்பாவியாக இருந்தால் கலெக்டர் என்ன விலை நிர்ணயித்துக் கொடுப்பாரோ தெரியாது.

ஆகவே, குடிசைப் பகுதிக்குப் பக்கத்தில் 1½ கிரவுண்டு வைத்திருக்கக் கூடிய சென்னை பிரஜைக்கு என்ன பாதுகாப்பு தருகிறீர்கள்? அவர்களுக்கு நீங்கள் வீடுகட்டும் வாரியத்தின் மூலம் அதேவிலையிலே ஒரு எக்ஸேஞ்ச் பிளாட் கொடுக்கவேண்டும். குடிசை மாற்று வாரியத்திற்கு நிலம் தேவையில்லையென்று சொல்லவில்லை. அந்த 1½ கிரவுண்டு நிலம் வைத்திருந்தவனிடம் பணத்தைக் கொடுத்து ஊரைப் பார்க்கப் போ என்று சொன்னால், அந்தப் பணத்திலே மெட்ராசிலே வேறு இடம் பார்க்க முடியாது. ஹவுசிங் போர்டில் பில்டிங் ஸ்கீம்கள் எடுக்கிறீர்கள். இப்படி குடிசை மாற்று வாரியத்திற்கு நிலம் தேவைப்படுகிறது என்று நிலத்தை எடுத்துக்கொண்டீர்கள் என்று சொன்னால், வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக, உடனடியாக 1½ கிரவுண்டு எக்ஸேஞ்ச் பிளாட் கொடுக்கவேண்டும். அவர் எங்கே கேட்கிறாரோ அங்கே 1½ கிரவுண்டு பிளாட் எக்ஸேஞ்சாகக் கொடுக்கவேண்டும். அதை நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும். ரொம்பப் பெரிய பணக்காரர்கள். 2 கிரவுண்டு, 5 கிரவுண்டுக்கு மேலே வைத்துக்கொண்டிருப்பவர்கள், வீணை நிலத்தை வைத்துக்கொண்டு, அப்படிப்பட்ட அந்த

இடத்தை என்ன செய்யவேண்டுமென்று தெரியாமல் இருப்பவர்களது நிலத்தை தாராளமாக எடுத்துக்கொண்டால் யாருக்கும் ஆட்சேபம் இல்லை. அதை விட்டுவிட்டு 1½ கிரவுண்டு பிளாட்டுக்காரன் தலையில் கையை வைப்பீர்களானால் அது பாதுகாப்பற்ற சூழ்நிலையை ஏற்படுத்தும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நிலம் ஆர்ஜிதம் செய்யப்படுகின்றபோது there should not be *mala fides*, பிடிக்காதவன் ஒருவன் நிலம் ஆர்ஜிதம் செய்யப்படுகிறது என்று சொன்னால், அது கொந்தளிப்பிலே கொண்டுபோய் விடும் என்பதைத் கூற விரும்புகிறேன். சாதாரணமாக அரிசனங்களுக்கு நிலம் கொடுக்க ஆர்ஜிதம் செய்யும்போது, இடையிலே ஏதாவது நல்ல இடம் இருக்கும். அந்த நிலத்தை எடுக்க வேண்டுமென்று கர்ணம் சொல்லி விட்டாலே போதும். பிறகு கர்ணம் கேட்டாலும் நம்மாலே மாற்றமுடியாது. புறம்போக்கு இருக்கிறது அதை எடுத்துக் கொள் என்று சொன்னால், அந்தப் புஞ்சைதான் தேவை என்று சொல்வார்கள். அதிலிருந்து விடுதலைபெற நீதிமன்றத்திலே கூட நமக்கு வசதி கிடையாது. Acquisition should be proved—*mala fides* or not—for a public purpose. அதைச் செய்ய முடியாது. அரிசனங்களுக்கு வீடுகள் கட்டிக்
கொடுப்பது பப்ளிக் பர்ப்பஸ். அதை இல்லையென்று சொல்ல முடியாது. அடுத்து மாலபைடிஸ் ப்ரூவ் பண்ணுவது ரொம்பக் கஷ்டம். இந்த அரசாங்கத்தை நான் கேட்பது என்னவென்றால், தயவுசெய்து கட்சிக் கண்ணோட்டத்தோடு அல்லது யார் மேலாவது விரோதமிருந்தால் அந்த உணர்ச்சியோடு நடந்துகொள்ள வேண்டாம். அப்படி நடந்துகொண்டால், அது கடைசியிலே எங்கே கொண்டுபோய்விடும் என்று தெரியாது. அதையும் அரசாங்கம் கவனிக்கவேண்டும். அதற்கு வேண்டிய ரூல்ஸ் போடும்போது, எந்த எந்த வகையிலே இருக்க வேண்டுமென்று ஜாக்கிரதையாகப் பார்த்து, ரூல்ஸ் போடவேண்டும் அரசாங்கம். ஏனென்றால் நீங்கள் எல்லாவற்றையும் போட்டு இருக்கிறீர்கள், ரெளசண்டிங் ஏரியா, அட்ஜாயினிங் ஏரியா, எவே ஃப்ரம் தி ஏரியா, என்று போட்டு இருக்கிறீர்கள். இதன்படி பார்த்தால் மெட்ராஸிலே நீங்கள் எந்த இடத்தை வேண்டுமானாலும் எடுக்கலாம். . . .

திரு. என். கே. பழனிசாமி : அம்மையார் அவர்கள் எந்தக் கட்சியின் சார்பாகப் பேசுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : பழனிசாமிக்குக் குழப்பமாக இருந்தால் அதற்கு நான் என்ன செய்யமுடியும். கட்சி உணர்வோடு செய்யக்கூடாது என்று சொல்கிறேன். அதை திரு. பழனிசாமி அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. மாலபைடி அக்விஸிஷன் இருக்கக்கூடாது. எடுக்கும்பொழுது காங்கிரஸ்காரன் நிலம் இது எடுத்துக்கொள்வேன், எதிர்க்கட்சிக்காரன் நிலம் இது எடுத்துக் கொள்வேன் என்ற அளவிலே உள்நோக்கத்தோடு ஆர்ஜிதம் செய்தால் வேதனைக்குத்தான் கொண்டுபோய்விடும். . . .

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இதுவரையில் ஆர்ஜிதம் செய்யப்பட்ட இடங்களிலே அப்படி ஏதாவது தனிப்பட்டு செய்யப்பட்டிருந்தால் உறுப்பினர் அதை எடுத்துத் தெரிவிக்கலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : குடிசை மாற்று வாரியத்திலே இன்னும் நீங்கள் அதை ஆரம்பிக்கவில்லையே, இப்பொழுதுதானே அதிகாரம் கேட்கிறீர்கள். உள்ளதை நான் சொல்கிறேன், மற்ற துறைகளிலே அப்படி இருக்கிறது. காங்கிரஸ்காரன் நிலமாக இருந்தால் ரோடு போடு என்று சொல்கிறார்கள். தமிழ்நாட்டிலே அவையெல்லாம் நடக்கின்றன. ஆகவே கட்சிக் கண்ணோட்டத்தோடு பார்க்காமல் பொதுமக்களுக்குத் தேவைப்பட்டால் அதை தாராளமாக எடுத்துக்கொள்ளலாம். இதற்காக தெளிவான விதிகளைப் போடவேண்டும். விதிகளைப் போட்டால்தான் அதைப் பற்றி பிரஜைகளுக்கும் தெரியும். அவர்களும் பாதுகாப்பு தேடிக் கொள்வதற்கு முடியும். என்னுடைய தொகுதியிலே ஒரு இடத்திலே நிலத்தை எடுத்து வீடு கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு சாக்கடை வசதி கிடையாது, ரோடு வசதிகள் கிடையாது, சம்பந்த முதலியார் தோட்டத்திலே தான் சொல்கிறேன், அங்கே இருக்கிற நிலைமையைப் பார்த்தால் கண்ணிலே தண்ணீர் வராது, ரத்தம்தான் வரும், முழங்கால் அளவு குப்பையிலே அவர்கள் குடியிருக்கிறார்கள். . . .

திரு. இராம. அரங்கண்ணல் : உடனுக்குடன் பதில் சொல்லி விடுவது நல்லது என்ற முறையிலே இப்பொழுதே சொல்லிவிட விரும்புகிறேன். சம்பந்த முதலியார் தோட்டம்பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். அது தனியாருக்குச் சொந்தமான இடம். அந்த இடம் கோர்ட்டிலே ஒப்படைக்கப்பட்டது. அங்கு குடியிருப்பவர்கள் எங்களுக்குப் பட்டா போட்டுக்கொடுத்துவிடு என்று சொல்கிறார்கள். நான் முன்பு அங்கே எம்.எல்.ஏ.யாக இருந்தபொழுது தீப்பிடித்து அதற்கான நிவாரணங்கள் எல்லாம் செய்திருக்கிறேன், எனக்குத் தெரியும். அங்கே என்ன செய்ய வேண்டுமென்று சகோதரி அவர்கள் சொன்னால் நலமாக இருக்கும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அந்த நிலங்களை நீங்களே ஆர்ஜிதம் செய்துகொண்டு அங்கே இருக்கக்கூடியவர்களுக்கு விற்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அவர்கள் வீடுகளைக் கட்டி விட்டார்கள், அங்கே ரோடு இல்லை, சாக்கடை வசதிகள் இல்லை. குடிசை மாற்று வாரியம் ஏன் நிலங்களை வாங்கி அவர்களுக்குத் தரக்கூடாது? அதைவிட்டுவிட்டு நீயே வாங்கிக்கொள் என்று சொன்னால் அவர்களால் எப்படி முடியும்? குடிசை மாற்று வாரியமே வாங்கி அவர்களுக்குக் கொடுக்கலாம், அவர்களுக்குப் பட்டா போட்டுக் கொடுக்கலாம். அவரும் அந்தத் தொகுதியின் முன்னாள் எம்.எல்.ஏ. தான். அவருக்கும் தெரியும். இப்பொழுது நான் எம்.எல்.ஏ.வாக இருக்கிறேன். குடிசை மாற்று வாரியத்திலே நீங்கள் மெயின்டனன்ஸ் சரியாகச் செய்வதில்லை. மிக மிக மோசமாக இருக்கிறது. என்னுடைய தொகுதியிலே கார்ப்பரேஷன் வாட்டர் சாக்கடையோடு கலந்து வருகிறது. இப்படி இருந்தால் காலரா ஏன் வராது? சாஸ்திரி நகரிலே டேப் உடைந்துபோய் இருக்கிறது. குடிசைகளிலே வாழ்கின்ற மக்கள் தங்களைத் தாங்களே பார்த்துக்கொள்ளமாட்டார்கள் என்பது தெரியும். அங்கே டேப் இருக்கிறதா இல்லையா, தண்ணீர் ஆழத்திலே போய்ச்சேருமாறு வைத்திருக்கிறோமே, சரியாகப் போகிறதா என்றெல்லாம் அவ்வப்பொழுது கண்காணிக்கக்கூடிய முறையிலே ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். பம்பாயிலே ப்ளாட்கள் நல்லமுறையிலே, ஒழுங்கான முறையிலே பாதுகாக்கப்

படுகின்றன, அந்த முறையிலே குடிசை மாற்று வாரியத்திலே உள்ள ப்ளாட்களையும் நல்ல முறையிலே பராமரிப்பு செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

பல இடங்களிலே 3 மாடிக் கட்டடங்கள், 4 மாடிக் கட்டடங்கள் கட்டுகிறார்கள். மூன்றாவது மாடியிலே தண்ணீர் வரவில்லையென்றால் அவ்வளவுதான், தண்ணீர் கஷ்டம் சொல்லிமுடியாது. ஆண்களுக்குத் தெரியாது. பெண்கள்தான் கஷ்டப்படவேண்டும். கீழே இருந்து மேலே தண்ணீர் கொண்டுவர அவர்கள் முட்டி தேயக் கொண்டுவர கஷ்டப்படவேண்டும். கீழேயும் 3, 4 டேப்கள் தான் வைத்திருக்கிறார்கள். தண்ணீர் கொண்டுவரும்பொழுது பெண்கள் வழுக்கி விழுந்துவிட்டால் அவ்வளவுதான். அது வேறு. ஆகவே மூன்றாவது மாடியாக இருந்தாலும் தனியாக ஒவ்வொரு மாடிக்கும் டேப் வைக்கவேண்டும். இனிமேல் கட்டுகிற வீடுகளிலே மட்டுமல்ல, ஏற்கனவே கட்டப்பட்ட வீடுகளிலேகூட டேப்களை வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ரென்ட் கலெக்ஷன். ஒழுங்காக மாதாமாதம் வந்து 3 ரூபாய் வாடகையை வசூல் செய்தால் அவர்களும் கொடுத்துவிடுவார்கள். அவ்வாறு மாதாமாதம் வசூலுக்கு வராமல் 8 மாதம் 10 மாதம் கழித்து வந்தால் அதுவும் கடப்பாரையோடு வீட்டை இடிப்பதற்கு வருகிறார்கள் என்றால் அவர்கள் எப்படிக் கொடுக்கமுடியும்? ஒவ்வொரு மாதமும் 3 ரூபாய் கொடுப்பதாயிருந்தால் அவர்களும் எளிதாகக் கொடுத்துவிடுவார்கள். 24 ரூபாயை எட்டுமாதங்களுக்குப் பிறகு வந்து கேட்டால் இந்தக் கஷ்டகாலத்தில் அவர்களால் எப்படிக் கொடுக்க முடியும்? கூலி கிடைப்பதே பெரிய பாடாக இருக்கிறது? வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது, இந்த அவலநிலையில் 10 மாதம் கேட்காமல் 11வது மாதம் கடப்பாரையோடு வந்து கொடு என்று கேட்டால் எப்படி அவர்களால் கொடுக்கமுடியும்? இதை மாற்றவேண்டும்.

குடிசைகள் எரிந்துவிட்டால் உடன் 50 ரூபாய் கொடுத்து தாற்காலிகமாக, வீடுகள் கட்டித்தருகின்றவரை, ஓலைபோட்டுக் கொள்ளுங்கள் என்று கொடுக்கிறார்கள். எங்கள் தொகுதியிலே

பல்லக்கு மானியத்திலே 50 ரூபாய் கொடுத்து அவர்கள் குடிசைகள் போட்டார்கள். ஆனால் அவர்களுக்கு வீடுகள் இன்னும் கட்டித்தரப்படவில்லை. இதனால் அவர்கள் கூரை பழுதடைந்து, அவர்கள் வானமே கூரை, பூமியே தரை என்ற நிலைமையிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே ஒரு வருஷம் 50 ரூபாய் கொடுத்து ஓலை போடச்சொல்லிவிட்டால் போதும் என்று நினைக்கக்கூடாது—வீடுகள் கட்டிக் கொடுக்க இரண்டு வருஷத்திலே கட்டிக்கொடுக்கலாம் என்று நினைத்துக் கொண்டு இருந்தால், நான்கு வருஷங்கள் ஆகிவிடுகின்றன. சிமிண்ட் கிடைப்பதில்லை. இந்த நிலைமை இருக்கிறது—அடுத்த வருஷத்திற்கும் 50 ரூபாய் கொடுத்து அவர்கள் ஓலை போடக்கூடிய முறையை ஏற்படுத்தவேண்டும். அப்படிச்செய்தால்தான் மழைகாலத்தில் அவர்கள் குடியிருப்பதற்கு வசதியாக இருக்கும்.

திரு. இராம. அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள் விவரங்களைச் சரியாகப் புரிந்துகொண்டிருந்தால் நான் மகிழ்ச்சியடைந்திருப்பேன். இப்படிப்பட்ட காரியங்கள் பல்லக்கு மானியம் போன்ற இடங்களிலே செய்யப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : நேற்று முன்தினம் பல்லக்கு மானியத்திலே உள்ள ஒரு குடிசைவாழ் மகன் என்னிடம் வந்து 50 ரூபாய் கொடுத்தார்கள், இப்பொழுது போட்ட ஓலையெல்லாம் போய்விட்டது, என்னசெய்வது என்று கேட்டார். அதனால் நான் சொல்கிறேன். நேற்றுமுன்தினம்வரை என்னுடைய வேலையை நான் செய்திருக்கிறேன். அதற்கு அப்புறம் ரூபாய் 50 கொடுத்தார்கள் என்று அவர்கள் சொன்னால் அதை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

பினாமி டிரான்ஸாக்ஷன்ஸ் இல்லாமல் இருக்கக்கூடிய முறையிலே இப்பொழுது போட்டோ எடுத்து, போர்ட்டோவில் உள்ளவர்களுக்கு அவற்றைக் கொடுக்கக்கூடிய முறையை வைத்திருக்கிறோம். அதோடு போதாது. மூன்று மாதங்களுக்கு ஒரு முறை போட்டோவில் இருப்பவர்கள்தான் அங்கே குடியிருக்கிறார்களா, அல்லது விற்றுவிட்டுப்போய்விட்டார்களா அல்லது

வேறு யாருக்காவது கொடுத்திருக்கிறார்களா என்ற விவரத்தையெல்லாம் பீரியாடிக்கல் செக் செய்வதன் மூலம் கண்காணிக்க வேண்டும்.

அடுத்தபடியாக இந்த மசோதாவிலே நீங்கள், 'Notice may be given to the owner or any person who is in occupation' என்று போட்டிருக்கிறீர்கள். இது ரொம்ப ஆபத்து. ஓனர் எங்கேயோ இருப்பார். அங்கேயுள்ள ஆக்குப்பையருக்கு எந்த விதமான அக்கறையும் இருக்காது. நீங்கள் நோட்டீசை ஆக்குபையரிடம் கொடுத்துவிட்டால் அவர்கள் எங்கேயாவது தூக்கிப் போட்டுவிட்டால் ஓனர் முழிக்க வேண்டிய நிலைமை ஏற்படும். We must always make it a point to see that the notice is served on the owner himself. ஓனர் எங்கேயிருந்தாலும் அவரைப் பிடித்து நோட்டீசைக் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால் தான் நீங்கள் நியாயம் வழங்கியவர்கள் ஆவீர்கள் என்று சொல்ல விரும்புகிறேன். அப்படியில்லாமல் யாரோ இருப்பவர்களிடம் கொடுத்துவிடுவது நியாயம் அல்ல, அது சட்டத்திற்குப் புறம்பானது என்று கூறி அதை யோசிக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக, அவர்களுக்கு அதிகமான வசதிகளைச் செய்து தருவதற்கு எவ்வளவு விரைவாகச் செய்து தர முடியுமோ அவ்வளவு விரைவாகச் செய்வதற்கு இந்த அரசாங்கம் மேலும் துரிதமான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். அப்படி எடுக்கும்பொழுது சில பகுதிகளில் சிலருக்கு சில சலுகைகளைக் கொடுக்கிறார்கள், சிலருக்கு அச்சலுகைகள் கிடைக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. அம்மாதிரி சலுகைகள் கொடுப்பதிலே பாரபட்சம் இல்லாமல் நடந்து கொள்வதுதான் நியாயம் என்று சொல்லி, குடிசை மாற்று வாரியம் தன்னிடமிருக்கும் சிறு குறைகளை நீக்கி, அதிகமான வீடுகளைக் கட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, இந்தக் குடிசை மாற்று மசோதாவின்மீது சில கருத்துக்களைச் சொல்வதற்கு முற்படுகிறேன். குடிசைமாற்று வாரியத்தின் அடிப்படையில் அமைந்திருக்கின்ற நல்ல முற்போக்கான திட்டத்தை அயல்

நாட்டாரும் பாராட்டும் முறையில் செய்வது வரவேற்கத்தக்கது. ஆனால், அதனுடைய வேகம் துரிதமாக இருந்தாலும் தனியாருக்குச் சொந்தமான நிலங்களை ஆர்ஜிதம் செய்யும்பொழுது ஏனோ தெரியவில்லை மிகவும் தாமதப்படுத்துகிறது. சர்க்காருக்குச் சொந்தமான நிலங்களிலே குடிசைகள் போட்டுக்கொண்டு வாழ்வதைக்காட்டிலும் சென்னையிலே, தனியாருக்குச் சொந்தமான நிலங்களிலேதான் குடிசைப்பகுதிகள் அதிகமாக, நூற்றுக் கணக்கிலே இருக்கிறது என்பதை மரியாதைக்குரிய குடிசை மாற்று வாரியத் தலைவரவர்களும் உணர்வார்கள். ஆனால் அந்தக் குடிசை மாற்று வாரியத்தின்மூலம் தனியாருக்குச் சொந்தமான நிலங்களிலே குடிசை போட்டுக்கொண்டிருப்பவர்கள் எந்த அளவிலே இருக்கிறார்கள் என்பதை வரையறுப்பதில் குடிசை மாற்று வாரியம் ஈடுபட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். சர்க்காரின் சட்டப்படி 5 கிரவுண்டுகளுக்குமேல் வைத்துக்கொள்ளக்கூடாது என்று இருந்தாலும்கூட, 15 கிரவுண்டுகள், 25 கிரவுண்டுகள், 30 கிரவுண்டுகள், 50 கிரவுண்டுகள் என்ற அளவிற்கு சென்னை மாநகரத்திலே நிலத்திற்குச் சொந்தக் காரர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறதே அது எந்தச் சட்டத்தின் அடிப்படையிலே அத்தகைய வரம்புகள் விதிக்கப் படுகிறது என்ற உண்மையை அறிய விரும்புகிறேன்.

இப்படித் தனியாருக்குச் சொந்தமான இடங்களிலே கட்டப்படும் அந்தக் குடிசைகளுக்கு என்ன பரிகாரத்தை, என்ன முடிவை நம்முடைய அரசு செய்யவிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். ஏனென்றால் என்னதான் சர்க்கார் முற்போக்குத் திட்டத்தில் மிகவேகமாக முன்னேறினாலும்கூட சர்க்காருக்குச் சொந்தமான நிலங்களிலேதான் சலுகைகளைச் செய்து கொடுக்க முடியும். ஆனால் தனியாருக்குச் சொந்தமான நிலங்களிலேயிருக்கும் குடிசைவாழ் மக்களுக்கு வசதி செய்து கொடுப்பதற்கு உடனடியாகத் தீவிரமான சட்டத்தை இங்கே நிறைவேற்றியாக வேண்டுமென்பதை இந்த நேரத்தில் வலியுறுத்திக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். நூற்றுக்கணக்கான, 500-க்கும் மேற்பட்ட தனியாருக்குச் சொந்தமான இடங்களில் வாழும் குடிசை வாழ் பகுதிகளை எந்தவகையிலே பராமரிக்கப் போகிறார்கள் என்று எண்ணிப் பார்க்கும்பொழுது அது முடியுமா, முடியாதா என்ற கேள்விக்குறிக்கு இடம் அளிக்கும் வகையில் இருக்கிறது. அப்படிப்

பட்ட தனியாருக்குச் சொந்தமான நிலங்களிலே இருக்கின்ற குடிசைப் பகுதிகளுக்கு கார்ப்பரேஷனோ அல்லது குடிசை மாற்று வாரியமோ எந்த வசதியும், கக்கூஸ் வசதியையோ அல்லது மற்ற எந்தப் பரிகாரத்தையுமோ செய்து கொடுக்க முடியாத இழிவான சூழ்நிலை, அந்தத் தனியார் பகுதிகளில் இருப்பதால், சென்னையை எவ்வளவுதான் அழகான திருநகரமாக மாற்ற வேண்டுமென்று முயற்சி செய்தாலும் அது பொய்ப்பித்துப் போகிறது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே சட்டப்படி, தனியாருக்குச் சொந்தமான நிலங்களை எப்படி கைப்பற்றுவது, எப்படி பரிகாரத்தைத் தேடுவது என்ற முறையை வகுத்துக் கொள்ள வேண்டுமென்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், இந்த வாரியத்தால் அமைக்கப்படும் குடிசைப் பகுதிகளில் இருப்பவர்கள் பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்களாக இருக்கிறார்கள். அங்கு குடியிருப்பவர்களுக்குப் பல சலுகைகளை அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். எம்.பி.எஸ்.சி. போன்ற பரீட்சைக்குப் போகிறவர்கள் 10 ரூபாய் கட்டணம் கட்ட வேண்டுமென்ற ஒரு வரையறை இருந்தாலும் தாழ்த்தப் பட்டவர்களாக, அரிசனங்களாக இருந்தால் அதிலே பாதி கட்டணம் கட்டினால் போதும் என்று சொல்லத்தக்க நிலைமை இருக்கிறது. அதேபோல் இரயில்வே சம்பந்தப்பட்ட நிறுவனங் களாக இருந்தால் அதிலே குடியிருப்பவர்கள் நான்கில் ஒரு பங்கு வாடகை கட்டினால் போதும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பாக நம்முடைய சர்க்கார், அதுவும் தாழ்த்தப்பட்ட மக்களின்மீது அக்கறையுள்ள சர்க்கார், குடிசை மாற்று வாரியத் தின் மூலம் கட்டப்பட்டிருக்கின்ற வீடுகளிலே குடியிருக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முழுச் சலுகை அளிக்கவில்லை என்றாலும், எம்.பி.எஸ்.சி.யில் அளிக்கப்படுகின்ற, இரயில்வேயில் அளிக்கப்படுகின்ற சலுகையைப் போலாவது அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், அன்றாடங்காய்ச்சி களாக இருக்கின்ற தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் 15 ரூபாய், 25 ரூபாய் வாடகை என்றால் அதைக் கட்டுவதற்குச் சிரமப் படுகிறார்கள், சங்கடப்படுகிறார்கள் என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். ஆகவே, இருக்கின்ற மக்களில் தாழ்த்தப்பட்ட

சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் 70 சதவிகிதம், 75 சதவிகிதத்தினர் குடிசை மாற்று வாரியத்தின் இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டி ருக்கிறார்கள் என்பதை ஒத்துக்கொள்கிறேன். அவர்களுக்குச் சலுகைகள் என்ற பெயரால் இப்படிப்பட்ட நிலைமைகளைச் செய்தால்தான் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் நெஞ்சார வாழ்த்துகின்ற சூழ்நிலை பிறக்கும் என்பதை இந்த அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிச் சொல்லும்பொழுது அத்தனை பேருக்கும் முழுச்சலுகை வேண்டுமென்றுகூட நான் வாதாட வரவில்லை. பாதிச் சலுகை வழங்கினாலும் போதும் என்ற என்னுடைய தாழ்மையான வேண்டுகோளைத் தெரிவித்துக்கொள் கிறேன். அதை குடிசை மாற்று வாரியத் தலைவரவர்களும், மாண்புமிகு அமைச்சரவர்களும் பரிசீலிப்பார்கள், நல்லதொரு கருத்தை முடிவாக எடுப்பார்கள் என்ற என்னுடைய நம்பிக்கையைத் தாழ்மையோடு தெரிவித்துகொள்கிறேன்.

அதேநேரத்தில் ஒன்றைக்குறிப்பிட ஆசைப்படுகிறேன். இப்படி குடிசை மாற்றுப் பகுதிகளிலேயெல்லாம் நம்முடைய சர்க்கார் பலவகைகளிலேயும் செலவிட்டு அவர்கள் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. நான் சென்னை மாநகரத்தின் மேயராக இருந்தபொழுது டெல்லியிலே அமைச்சராகயிருந்த மரியாதைக் குரிய திரு. கே. கே. ஷா அவர்களிடத்தில் ஒரு கோரிக்கை விடுத்தேன். கோடிக்கணக்கான ரூபாய் மத்திய அரசில் 'ரிவால்விங் ஃபண்ட்' என்று இருக்கிறது. அதில் கல்கத்தா, பம்பாய், டெல்லி போன்ற நகரங்களிலே நல்லவிதத்திலே குடிசை வாழ் மக்களுக்காகச் செலவிடுவதற்காகக் கோடிக் கணக்கான ரூபாய்களைப் பெறுகிறார்கள். நம்முடைய சர்க்காரும் இந்த ரிவால்விங் ஃபண்டிலிருந்து எதாவது தொகையைப் பெற்றிருக் கிறார்களா என்பதை மரியாதைக்குரிய அமைச்சரவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஃபண்டானது முழுக்க முழுக்க தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் குடிசைப் பகுதிகளில் வசதி செய்து கொடுப்பதற்காகக் கொடுக்கப்பட்ட தொகையாகும். அந்த வகையிலே இது ஒரு பெரிய நகரமாக இருப்பதாலும், எறத்தாழ 30 இலட்சம் மக்கள் தொகையைக் கொண்ட நகரமாக இருப்பதாலும், குறைந்தது 10 கோடி ரூபாயாவது மத்திய அரசிடமிருந்து பெற்று இங்கே

யிருக்கும் குடிசை வாழ் பகுதி மக்களுக்கு நல்ல 'அமெனிட்டீஸ்' செய்து கொடுக்கும் சாத்தியக் கூறுகளை உருவாக்கித் தர வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். ஏனென்றால் நான் மேயராக இருந்தபொழுது இந்தக் கோரிக்கை எழுப்பப்பட்ட பொழுது அன்றைக்கு கவனிக்கப்படும் என்று இப்பொழுது மதிப்பிற்குரிய ஆளுநராக இருக்கும் ஷா அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையிலே இந்த மூன்றாண்டுக் காலத்தில் ரிவால்விங் ஃபண்டிலிருந்து ஏதாவது பணம் பெறப் பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கடைசியாக, நான் முன்னமேயே குறிப்பிட்டபடி தாழ்த்தப் பட்ட சமுதாய மக்கள் ஏராளமாக குடிசை மாற்று வாரியத்தினால் கட்டித்தரப்படும் வீடுகளிலே குடியிருக்கிறார்கள். அவர்களுக்குச் சலுகை தரும் அடிப்படையில், எம்.பி.எஸ்.சி.யில் பாதிச் சலுகை இருப்பதைப்போல, இரயில்வேயில் நான்கில் ஒரு பாகத்தை வாடகையாகப் பெறுகிறார்கள், அந்த அடிப்படையிலே நான்கில் ஒரு பாகம் என்றுகூட வேண்டாம், மூன்றில் ஒரு பாகம் என்ற சலுகையையாவது வழங்குகின்ற தன்மையை நம்முடைய சர்க்கார் உருவாக்கித் தர வேண்டுமென்று தெரிவித்து, இந்தச் சந்தர்ப்பத்தை அளித்தமைக்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன்.

* **திரு. செ. கந்தப்பன் :** தலைவரவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்னை ; சபையிலே ஒரு முக்கியமான விவாதம் நடைபெறும் பொழுது ஒரு எதிர்க்கட்சித் தலைவரைக்கூடக் காணோம். அவர்கள் பகிஷ்கரிக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : பிசினஸ் அட்வைசரி கமிட்டிக்குச் சென்றிருக்கிறார்கள். மேலும் அவர்கள் இருக்கவேண்டுமென்று கடமையே தவிர கட்டாயமில்லை. அவர்கள் பிசினஸ் அட்வைசரி கமிட்டிக்குப் போயிருக்கிறார்கள்.

* **திரு. இராம. அரங்கண்ணல் :** தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியச் சட்டத்தில் சிறு திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்பதற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த மசோதாவின்மீது என்னுடைய நண்பர் திரு. கே. எம். சுப்பிர

மணியம் அவர்கள் பேசிய கருத்துக்கள் என்னை வெகுவாகக் கவர்ந்தன. அவர்கள் பிரச்சினையை நன்றாகப் புரிந்து கொண்டு இந்தத் திருத்தங்கள் வருகின்ற காரணத்தாலே எப்படி குடிசை மாற்று வாரியம் தன்னுடைய கடமைகளைச் சரியாகச் செய்ய முடியும் என்பதை உணர்ந்து வேகமாக செயல்பட வேண்டுமென்ற எண்ணத்தில் அவர்கள் இதை வரவேற்றுப் பேசினார்கள்.

அவர்கள் பேசிய நேரத்திலே குறிப்பிட்ட ஒரு கருத்து—குடியிருக்கின்றவர்கள் அதாவது 'ஆக்குபன்ட்' என்று சொல்லுகின்றவர்களை எப்படி நாம் நிர்ணயம் செய்யப் போகிறோம், நிர்ணயம் செய்ய முடியுமா என்ற கேள்வியை எழுப்பி அவர்கள் இங்கே பேசினார்கள். அதற்கு அவர்களே கூடப் பதில் சொன்னார்கள். புகைப்படம் எடுக்கப்படுகிறது, வோட்டர் லிஸ்ட் வைத்துச் சரி செய்யப்படுகிறது, ரேஷன் கார்டை வைத்துக் கொண்டு சரிபார்க்கப்படுகிறது, தபால் அந்த முகவரிக்கு வந்திருக்கிறதா என்று பார்க்கப்படுகிறது என்ற இவைகளை எல்லாம் வைத்து நிர்ணயம் செய்யப் போகிறோமா என்று கேட்டார்கள்.

அவர்களுக்குத் தெரிந்திருக்கும். சென்னை மாநகரத்தில் 1,203 குடிசைவாழ் பகுதிகள் இருக்கின்றன. அந்தப் பகுதிகளில் இருக்கின்றவர்களைப் பற்றிய எல்லா விவரங்களையும், யார் யார் இருக்கிறார்கள், அவர்களுடைய தொழில் என்ன, வீட்டில் எத்தனை பேர் இருக்கிறார்கள், எந்த ஊரில் இருந்து வந்தவர்கள், எந்த ஆண்டு வந்தவர்கள், எவ்வளவு ஆடுமாடுகள் வைத்திருக்கிறார்கள் என்ற புள்ளிவிவரங்கள் எல்லாம் எடுக்கப் பட்டு சேகரிக்கப்பட்டு விட்டன. அந்தக் காரணத்தாலே யார் ஆக்குபன்ட், யார் டெனன்ட், யார் ஓனர் என்ற விவரங்களைப் பெறுவது சுலபமாக இருக்கும் என்று திரு. சுப்பிரமணியம் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

என்னுடைய சகோதரி திருமதி அனந்தநாயகி அவர்கள் என்ன கருத்தில் பேசினார்கள் என்று எனக்குப் புரியவில்லை. அவர்கள் சார்ந்திருக்கும் கட்சி—இப்போது சார்ந்திருக்கும் கட்சி—சமதர்மக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட கட்சி என்றுதான் கருதுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: நான் பேசியதும் சமதர்மக் கருத்துக்கள்தான். அதற்கிடையில் உங்கள் சந்தர்ப்ப வாதத்தைச் சுட்டிக்காட்டினேனே தவிர வேறல்ல.

திரு. இராம. அரங்கண்ணல்: நாமெல்லாம் கேட்டுக் கொண்டு தான் இருந்தோம். இந்த அருமையான திருத்தம் ஏழை குடிசைவாழ் மக்களுக்கு நல்லது செய்ய வேண்டுமென்பதற்காகக் கொண்டுவரப்பட்ட திருத்தம். ஏதோ காரணங்களைச் சொல்லி எதிர்ப்பதுதான் சமதர்மம், சோஷலிசம் என்று சொன்னால் அந்த சோஷலிசத்தை ஏற்றுக்கொள்ளக் கூடிய அளவில் நாங்கள் இல்லை.

ஒரு சட்டம் கொண்டு வரப்படுகிறது. எந்தக் காரணத்தால் கொண்டு வரப்படுகிறது? ஏழைக் குடிசைவாழ் மக்களுக்கு நல்லது செய்வதற்காகக் கொண்டு வரப்படுகிறது. சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை 1,203 குடிசைவாழ் பகுதிகள் இருக்கின்றன. இதிலே சர்க்காருக்குச் சொந்தமான இடங்களில் இருக்கும் குடிசைவாழ் பகுதிகள் வட சென்னையைப் பொறுத்தவரை 57; தென் சென்னையைப் பொறுத்தவரை 264. கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான நிலத்தில் இருக்கும் குடிசை வாழ் பகுதிகள் வட சென்னையில் 87; தென் சென்னையில் 71. மத்திய சர்க்காருக்குச் சொந்தமான நிலத்தில் இருக்கின்ற குடிசைவாழ் பகுதிகள் வட சென்னையில் 23; தென் சென்னையில் 4. தனியாருக்குச் சொந்தமான நிலத்தில் இருக்கின்ற குடிசைவாழ் பகுதிகள் வட சென்னையைப் பொறுத்த அளவில் 256; தென் சென்னையைப் பொறுத்த அளவில் 329. கோயில், மசூதி, மாதா கோயில் ஆகியவற்றுக்குச் சொந்தமான நிலங்களில் இருக்கும் குடிசைவாழ் பகுதிகள் வட சென்னையைப் பொறுத்த அளவில் 43; தென் சென்னையைப் பொறுத்த அளவில் 68.

இப்படி குடிசைவாழ் பகுதிகள் இருக்கின்றன. இந்தப் புள்ளி விவரத்தைப் பார்க்கின்ற நேரத்திலே தனியாருக்குச் சொந்தமான நிலத்திலேதான் ஏராளமான குடிசைவாழ் பகுதிகள் இருக்கின்றன என்பது நமக்கு நன்றாகத் தெரியும். 'இந்த இடத்தை எல்லாம் எடுக்க வேண்டுமென்பது நம்முடைய நோக்கம். அவற்றை யெல்லாம் எடுத்தால்தான் ஆங்காங்கு வாழ்கின்ற குடிசைவாழ்

மக்களுக்கு நல்ல வீடுகளைக் கட்டிக் கொடுக்க முடியும் என்பது நாம் அத்தனை பேரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய கொள்கையாகும். அந்த நிலங்களை எடுக்கச் சொல்லும் நேரத்தில் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

நான் குடிசை வாரியத்தின் பொறுப்பை ஏற்ற பிறகு சிலரிடம் தனியாகப் பேசி அந்த நிலங்களை வாங்க முடியுமா என்று யோசித்தேன். ஆனால் எனக்குப் பயம் ஏற்பட்டது. நான் ஒரு அரசியல் கட்சியைச் சார்ந்தவன் என்ற காரணத்தால் தனியாரிடத்தில் பேசி தனியார் நிலங்களை வாங்க முயற்சித்தால் நாளைக்குக் குற்றச்சாட்டுகள் ஏற்படுமே என்று கருதினேன். அதனால் குழு ஒன்று போட்டு அந்தக் குழுவினிடத்தில் தனியார் பேசி அவர்கள் அந்த நிலத்தின் விலைகளை நிர்ணயம் செய்து கொள்ளலாம் என்று முடிவெடுத்து அந்த முடிவின்படி சில தனியார்கள் வந்து பேசவும் தொடங்கினார்கள்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் என்னுடைய தங்கையின் தொகுதியிலே நாட்டான் தோட்டம் என்ற பகுதி இருக்கிறது. பதினெட்டு கிரவுண்டு நிலத்திற்குச் சொந்தமானவர் மன்னார்குடியில் இருக்கும் ஒருவர். அவரை அணுகி இந்த இடத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்ட நேரத்தில் அவரிடத்தில் குழு சொன்னது கிரவுண்டுக்கு 3,000 ரூபாய்தான். அதற்கு அவர் சம்மதிக்கிறாரா என்று கேட்டார்கள். மயிலாப்பூரில் கிரவுண்டு மூவாயிரம் ரூபாய்க்கு வாங்குவது என்றால் அது சாதாரணமானது அல்ல என்பது எல்லோருக்கும் தெரியும். இதிலே என்ன சிக்கல் என்றால் அதை வாங்குவதற்கான அதிகாரமும் இல்லை. வாங்குவதாக இருந்தால் நில ஆர்ஜித முறைப்படிதான் வாங்க வேண்டும். நில ஆர்ஜிதம் என்றால் 18,000 ரூபாய் 20,000 ரூபாய் கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

இன்னும் கூட ஒன்றைத் தைரியமாகச் சொல்லுவேன். பல்லக்கு மானியம், கபாலி தோட்டம் தீப்பிடித்து சாம்பலாகி விட்டது. அந்தப் பகுதிகளைத் திருத்த வேண்டுமென்று வாரியம் ஒரு கோடி ரூபாயில் திட்டம் போட்ட நிலையில் அந்த நிலத்தை வாங்க வேண்டிய பிரச்சினை எழுந்தது. அவை கபாலி

[திரு. இராம. அரங்கண்ணல்] [1973 ஆகஸ்ட் 6

கோயிலுக்குச் சொந்தமான இடம், குன்றக்குடி ஆதினத்திற்குச் சொந்தமான இடம். கடந்த 25 ஆண்டு காலமாக அதிலிருந்து கோயிலுக்கு எந்தவிதமான வருமானமும் கிடையாது. நான் எம்.எல்.ஏ. வாக இருந்த நேரத்தில் வாடகை கொடுக்கிறயா அல்லது காலி செய்கிறயா என்று அந்த இடத்தில் குடி இருந்தவர்களுக்கு கபாலி கோயில் டிரஸ்டில் இருந்து நோட்டீஸ் விடப்பட்டபோது நானே தடுத்து நிறுத்தி வாடகை கொடுக்காதீர்கள் என்று சொன்னேன். சொன்னதற்குக் காரணம் நடுவில் இடைத்தரகர்கள் இருந்து வேலை செய்ததுதான். அதை மனதில் வைத்துக் கொண்டு அந்த நிலத்தை வாங்க வேண்டும், கோயிலுக்கும் கொஞ்சம் பணம் கொடுக்க வேண்டுமென்ற நிலையில் கிரவுண்டுக்கு 2,880 ரூபாய் என்று பேசப்பட்டது. அதுவும் முதலில் குன்றக்குடி அடிகளாரிடத்தில் அணுகி ஏழைகள் பிரச்சினை என்று எடுத்துச் சொன்னவுடன் அவர்கள் மனமிரங்கி அந்த விலைக்குச் சம்மதித்தார்கள். உடன் அது வாங்கப்பட்டது. அதே விலைக்குப் பக்கத்தில் இருக்கும் கபாலி கோயில் நிலத்தையும் வாங்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. கிரவுண்டு 2,880 ரூபாய் என்பது குறைந்த விலைதான், ஒத்துக் கொள்கிறேன். ஆனால் முன்பு காங்கிரஸ் அரசாங்கம் இருந்த நேரத்தில் அந்த நிலத்தை அக்வைர் செய்ய வேண்டுமென்று டிக்ளேர் செய்தார்கள். அப்போது என்ன விலை நிர்ணயித்தார்கள்? 1,400 ரூபாய்தான் நிர்ணயிக்கப்பட்டது. அப்போது 1,400 ரூபாய்தான் நிர்ணயித்தார்கள் என்றாலும் இப்போது விலை உயர்ந்திருக்கிறது, கோயிலுக்கும் கொஞ்சம் அதிகமாகப் பணம் போய்ச் சேரட்டும் என்று அதிக ரூபாய் என்று பேசி செட்டில் செய்தோம். இதிலே என்ன தவறு?

திருமதி த. ந. அனந்தநாயகி: கோயில் நிலத்தை 3,000 ரூபாய்க்கு வாங்கியதில் என்ன தவறு என்று கேட்கிறார்கள். செட்டியார் டிரஸ்ட் நிலத்தை கோட்டூர்புரத்தில் 12,000 ரூபாய் கிரவுண்டு என்று வாங்கினீர்களே. அது எப்படி?

திரு. இராம அரங்கண்ணல்: யார் கொடுத்தது? குடிசை மாற்று வாரியம் எங்கே கொடுத்தது? 12,000 ரூபாய்க்கு எந்தச் செட்டியாரிடத்திலிருந்து வாங்கியிருக்கிறது?

1973 ஆகஸ்ட் 6]

திருமதி த. ந. அனந்தநாயகி: சிதம்பரம் செட்டியார் டிரஸ்ட் நிலத்தை கோட்டூரில் ஹவுசிங் போர்டு வாங்கியிருக்கிறது.

திரு. இராம. அரங்கண்ணல்: ஹவுசிங் போர்டு அதை வாங்கியிருக்கிறது. ஹவுசிங் போர்டு நடைபெறுவது எப்படி? ஹவுசிங் போர்டு லாபத்திற்குக் காரியங்களைச் செய்கிறது. 12,000 ரூபாய்க்கு நிலத்தை வாங்கினால் 14,000 ரூபாய், 16,000 ரூபாய்க்கு இம்ப்ரூவ்மென்ட் செய்து விற்கிறது, வீடுகளைக் கட்டி விற்கிறது.

*** திரு. கே. எம். சுப்பிரமணியம்:** லாபம் வருகிறது என்பதற்காக ஜாஸ்தி விலை கொடுக்க வேண்டுமா? குறைந்த விலைக்கு வாங்கக் கூடாதா?

திரு. இராம. அரங்கண்ணல்: அந்த இடங்கள் 12,000 ரூபாய்க்கும் மேல் விலை போகக் கூடிய இடங்கள். இப்போது வாங்கியிருப்பதே குறைந்த விலைக்குத்தான்.

ஆக, குடிசை மாற்று வாரியம் கோயில் நிலத்தை, கோயிலுக்கு இதுவரை எந்தவித வருமானமும் வராமல் இருந்த நிலத்தை கோயிலுக்கு 40,000 ரூபாய், 50,000 ரூபாய் ஆண்டுக்கு வட்டியும் கிடைக்கும் அளவுக்கு நாம் விலை கொடுத்து வாங்கியிருக்கிறோம்.

இதற்கு ஒரு போராட்டம். உண்ணாவிரதப் போராட்டம். யார்? அதே சமதர்மம், சோஷலிஸம் எல்லாம் பேசுகிற சட்டமன்ற உறுப்பினர்கள். ஊரெல்லாம் போஸ்டர்கள் போட்டிருந்தார்கள். என் தங்கை அனந்தநாயகி அவர்களின் பெயர் இருந்தது, ஆனால் அவர்களைக் காணோம். ஹாண்டே போனார். முற்போக்குவாதி!

திருமதி த. ந. அனந்தநாயகி: பயந்துகொண்டு கலந்து கொள்ளாமல் இல்லை. அவசரமாக பெங்களூர் சென்று ஒரு மகாநாட்டில் பிரதமர் அவர்களைச் சந்திக்க வேண்டியிருந்ததால் அதனால் வெளியூர் போனேனே தவிர இன்றும் சொல்கிறேன் நீங்கள் செய்தது தவறு என்பதை என்னைப் பொறுத்தவரையில் ஆணித்தரமாகச் சொல்கிறேன்.

திரு. இராம. அரங்கண்ணல் : பிரதமரிடம் போய் சோஷலிஸம் பற்றி பேசி வந்திருப்பார்கள். ஏழை மக்களுக்கு, வாழ முடியாமல் சங்கடப்படுகிறவர்களுக்கு குறைந்த விலையில் நல்ல வீடுகள் கட்டிக் கொடுத்து அதிலும் மற்றவர்களுக்கு பாதகம் ஏற்படாமல் காரியங்கள் செய்ய வேண்டுமென்று செய்வது சோஷலிஸமா? அல்லது வாய் பேச்சில் பேசி பிரச்னையை திசை திருப்தி கோவிலுக்கு இல்லை, என்பதா? கோவிலுக்கு இல்லை என்றால் கோவிலுக்கு சொத்து இல்லையா? கோவிலுக்கும் சொத்து கொடுத்திருக்கிறோம். சென்னையில் கிட்டத்தட்ட ஒன்பது லட்சம் பேர்கள் இருக்கிறார்கள் குடிசைவாழ் மக்கள். புழுக்கள்போல் இருக்கிறார்கள். கேவலம் தேள் இருக்கிற இடங்களில் இருக்கிறார்கள். அவர்களுக்கு வசதி செய்கிறபோது அதற்கு கை கொடுக்க வேண்டியவர்கள் உண்ணாவிரதம் இருப்பது என்றால் அதற்குப் பெயர் சோஷலிஸம்? அதற்குப் பெயர் சமதர்மம்? நாட்டிலுள்ள ஏழைகளுக்காகப் பாடுபடுகிறோம், கரிபீ ஹடோ, வறுமையை ஒழிப்போம் என்று சொல்பவர்கள் இப்படிச் செய்வது நியாயமா? தனியார் இடங்களில், பல குடிசைப் பகுதிகளை எடுத்துச் செய்ய முடியாத ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது.

மயிலை தொகுதி எம்.எல்.ஏ. அவர்கள் சொன்னார்கள் சம்பந்த முதலியார் தோட்டம் பற்றி, அங்கு இம்ப்ரூவ்மென்ட்ஸ் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கான உத்தரவுகள் எல்லாம் போடப்பட்டுவிட்டன. என்னென்ன செய்ய முடியுமோ அந்த வசதிகளை எல்லாம் செய்து தருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு விட்டன. ஆனால் பக்கத்திலுள்ள நாராயணசாமி தோட்டம் பற்றியும் அக்கறை செலுத்த வேண்டும். சம்பந்த முதலியார் தோட்டத்தை விலை கொடுத்து வாங்கினால் கிட்டத்தட்ட 10,000, அல்லது 12,000 ரூபாய் கொடுத்து வாங்க வேண்டும். அதற்கு மேல் குடிசை வாழ் மக்களிடமிருந்து பணம் வசூலிக்க வேண்டும். எப்படி வசூலிப்பது? இன்றைன்று. அங்கு ஒரு உத்தரவு போட்டுவிட்டால் பக்கத்திலுள்ள நாராயணசாமி தோட்டத்தில் உள்ள குடிசை வாழ் மக்களுக்கு எந்த முடிவை எடுப்பது?

நாராயணசாமி தோட்டத்திற்கும் கபாலி வனபோஜன தோட்டத்திற்கும் என்ன செய்யலாம் என்று முடிவு சொன்னால் காரியங்களைச் செய்யலாம்.

மூன்று அடுக்கு மாடிகளில் ஏறி இறங்கி தாய்மார்கள் கஷ்டப்படுகிறார்கள் என்றார்கள். உருக்கமாகச் சொன்னார்கள். உண்மையாக அந்த உருக்கத்தைப் பாராட்டுகிறேன். சிலயிடங்களில் தண்ணீர் குழாய்கள் பொருத்தப்படவில்லை. புதுக் கட்டடங்களில். பழைய கட்டடங்களில் பொருத்தப் பட்டிருக்கின்றன. எந்தெந்த இடங்களில் அப்படிப்பட்ட குறைகள் இருக்கின்றன என்று சொன்னால் 24 மணி நேரத்தில் அந்த வசதிகளைச் செய்து கொடுக்கத் தயாராக இருக்கிறோம்.

பின்னர், ஓப்பன் டெவலப்ட் ப்ளாட்ஸ். 18 ஆண்டுகளுக்கு முன்பு செய்தார்கள். அது இன்று படுகிற பாடு தாளமுடியாது. வாடகை வசூல் செய்வதில்லை என்று சொன்னார்கள். குடிசை மாற்று வாரியம் ஏற்படுவதற்கு முன்பு மாதம் ஒன்றுக்கு ரூ. 5,000 கூட வாடகை வசூலாவது கிடையாது. ஆனால் இன்றைய தினம், மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்வேன். ரூ. 1,40,000 மாதம் ஒன்றுக்கு இன்றையதினம் வாடகையாக வசூலாகிக் கொண்டிருக்கிறது. எட்டு மாதம், ஒன்பது மாதம் கழித்து போய் கேட்கிறார்கள் என்று சொன்னால் அவர்களுக்கு தகவல் சொன்னவர்கள் அனுதாபத்திற்காகச் சொல்லியிருக்கலாம். ஓ.டி.பி. கொடுக்கப்பட்டவர்கள் கொடுக்கப்பட்டதை வசதியானவர்களுக்கு விற்றுவிட்டுப் போயிருக்கிறார்கள். அதில் அவர்கள் நல்ல கட்டடம் கட்டி தாம் ரூ. 150, ரூ. 200 என்று சம்பாதித்து வருகிறார்கள். யார் யார் அங்கு இருக்கிறார்கள் என்று விசாரிக்கப் போனால் சொல்ல மாட்டேன் என்கிறார்கள். குப்பன் இல்லையா என்றால் உடனே ஒரு கொட்டகை போட்டு ஒரு கொடியை நாட்டி விடுகிறார்கள். முன்னேற்றக் கழகக் கொடி போட்டு தடுக்க முயன்றாலும் முடியாது. இதை ஒரு பொது விவாதமாக ஆக்கி ஒவ்வொரு விஷயத்திற்கும் பதில் சொல்லிக் கொண்டிருக்க நான் ஆசைப்படவில்லை.

இன்று கொண்டு வரப்பட்டுள்ள இந்தத் திருத்தத்தைப் பொறுத்தவரையில் இது மிக மிக வரவேற்கத் தக்க ஒன்றாகும். 1½ கிரவுண்ட் எடுத்துவிடுவார்களே, 2 கிரவுண்ட்ஸ் எடுத்து

விடுவார்களே, நான்கு கிரவுண்ட்ஸ் எடுத்துவிடுவார்களே என்றெல்லாம் பரிதாபப்பட்டு பேசினார்கள். வீட்டு வசதி வாரியம் எடுக்கிற இடங்களுக்கு மாற்று இடம் கிடைக்கிறது. யாராவது பாதிக்கப்பட்டிருந்தால் நிச்சயமாக குடிசை மாற்று வாரியம் அதைக் கவனிக்கும். ஆனால் ஒன்று சொல்வேன். வேறு எங்கேயாவது வீடு வைத்திருந்தால் இந்த 1½ கிரவுண்டை சாக்காக வைத்து தடுக்க முயற்சித்தால் நிச்சயமாக அதை அனுமதிப்பதற்கில்லை. ஏழை மக்களின் பிரச்னையைத் தீர்ப்பதற்கு இடையூறாக யாராவது வருவார்களேயானால் பெரிய திட்டங்களை நிறைவேற்றுவதற்கு இடையூறாக யாராவது வருவார்களேயானால் அதைச் சகித்துக்கொள்கிற எண்ணம் எங்களுக்கு இல்லையென்பதை தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன். யாருக்கும் பாதகம் இல்லாத முறையில் காரியங்களைச் செய்யலாம்.

திரு. கே. எம். எஸ். தொகுதியில் வரிசையாக வீடுகள் கட்டிக் கொண்டு வரும்போது எட்டு கிரவுண்ட்ஸ்—இடங்களைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்பவில்லை, நல்லதல்ல—அந்த இடத்தைப் பெறமுடியாத ஒரு சிக்கல். அப்படிப்பட்ட கஷ்டங்களையெல்லாம் நீக்க, தனியார் நிலங்களை எடுக்கிற வகையில் இந்தத் திருத்தம் வந்திருக்கிறது. இதை எல்லோரும் ஏகமனதாக நிறைவேற்ற ஆதரவு கொடுக்க வேண்டுமென்று, தங்கை அனந்தநாயகி அவர்கள் உட்பட ஆதரவு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I want a small clarification. I have represented that the issue of rent receipts to the tenants by the private landlords will be very useful in identifying the occupant. Suppose a photograph is taken to-day but after nine months or two years . . .

MR. CHAIRMAN (THIRU N. VEERASAMI) : It is not proper to speak now.

THIRU K. M. SUBRAMANIAM : He has not clarified it. Is he going to insist on the issue of rent receipts to the tenants by the landlords?

திருமதி த. ந. அனந்தநாயகி : கோவில் நிலத்தை குறைந்த விலையில் எடுத்ததில் என்ன தவறு, ஏழை மக்களுக்குத்தானே வீடுகள் கட்டித் தருகிறோம் என்று சொன்னார்கள். இது சமதர்மம் இல்லையா என்று கேட்டார்கள். கோவிலுக்குக் கொடுக்கப்பட்ட பணமும் பணக்காரர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. கோவிலில் சேவை செய்கிற ஏழை மக்களுக்குத்தான் அந்தக் காலத்தில் சொத்து கொடுக்கப்பட்டது. மேளம் வாசிக்கிறவர்கள், பூ அலங்காரம் செய்கிறவர்கள், ஊர்வலத்தில் சாமியை தூக்கிக்கொண்டு போகிறவர்கள், இவர்கள் எல்லாம் ஏழைகள்தான். அந்தச் சொத்துக்கள் நன்கு பராமரிக்கப்பட்டால்தான் இவர்களுக்கு ஒழுங்காகச் சம்பளம் கொடுக்க முடியும். ஆகவே இவ்வளவு கோடிக்கணக்கான ரூபாய் வைத்திருக்கும் நீங்கள் தனி நபர்களுக்கு நஷ்டயீடு கொடுக்கும்போது ஏன் கோவில்களுக்கும் நஷ்டயீடு கொடுக்கக் கூடாது என்பதில் என்ன சமதர்மம் குறைந்துவிட்டது?

திரு. இராம. அரங்கண்ணல் : கபாலி கோவிலில் பல்லக்கு தூக்குகிறவர்களுக்கும், பூ தொடுக்கிறவர்களுக்கும் அத்தனை பேர்களுக்கும் இடமிருக்கிறது. அவர்களுக்கும் வாரியம் வீடுகள் கட்டிக்கொடுக்கத்தான் போகிறது. அது வேறு விஷயம்.

திரு. கே. எம். எஸ். சொன்னார்கள்—எப்படி நிர்ணயம் செய்வது என்பது அவர்களுக்கும் தெரியும். இன்றையதினம் வாடகை கொடுத்து குடியிருப்பவர்கள் தொகை குறைந்து கொண்டு வருகிறது. குடியிருப்பவர்கள் பற்றிச் சொன்னார்கள். அதை சுலபத்தில் கண்டுபிடித்து விடலாம். இன்று தனியாரிடமிருந்து திடீர் திடீரென்று வக்கீல் நோட்டீஸ்கள் வருகின்றன. குடிசைவாழ் மக்களைக் கிளப்ப வேண்டும் என்று முயற்சிக்கிறார்கள். அப்படி முயற்சிக்கும் நேரத்தில் நீங்கள் நிறைவேற்றிக் கொடுத்த சட்டத்தின் பாதுகாப்பை வைத்து குடிசை மாற்று வாரியம் இருக்கிற காரணத்தால் வாரியத்திற்குச் சொல்லாமல், தெரிவிக்காமல் ஒருவரையும் வெளியேற்றக்கூடாது என்று வகைசெய்யும்போது அவர்கள் சொல்கிறார்கள் அவர்கள் என்னிடம் டெனன்டா இல்லையா, டெனன்டாயிருந்தால் அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வரலாம், டெனன்டாக

இல்லாததால் பாதுகாப்புக் கொடுக்க முடியாது என்று அவர்கள் திடீர் திடீர் என்று வெளியேற்றப்படுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதிலிருந்து ஏழை மக்களைக் காப்பாற்றுவதற்காகத்தான் இந்தத் திருத்தம் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. மொத்தமாகச் சொன்னால் ஒரு பெரிய காரியம் வேகவேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அது போதுமா என்று கேட்டால் போதாது என்று கருதுகிற காரணத்தால்—குடிசைவாழ் மக்களுக்கு,
ந.ப. 12-00 நடுத்தர மக்களுக்கு மாடி வீடு கட்டிக் கொடுத்தால் மட்டும் போதாது என்று கருதுகிற காரணத்தால்—மெட்ராஸ் மெட்ரோபாலிடன் அதாரிடி மூலம் நல்ல திட்டங்களைத் தீட்டி, சென்னையைச் சுற்றியுள்ள இடங்களைப் பெற்று, தனி வீடு கேட்பவர்களுக்குத் தனி வீடு, வீடு வேண்டுமென்பவர்களுக்கு வீடு கட்டித் தருவது என்ற திட்டத்தின் அடிப்படையில் காரியங்களைச் செய்யத் திட்டமிட்டிருக்கிறோம் என்ற விவரத்தையும் கூறி, மிக முக்கியமான இந்தத் திருத்தத்தை ஆதரிக்கிறேன் என்று குடிசை மாற்று வாரியத் தலைவன் என்ற முறையிலும் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்திற்கும், அங்கத்தினர்களுடைய பல கருத்துக்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னாலும், நம்முடைய குடிசை மாற்று வாரியத் தலைவர் அரங்கண்ணல் அவர்கள் அதற்கான முழு பதிலையும் நல்ல வகையில் தந்து இருக்கிறார்கள். இந்தச் சட்டத் திருத்தத்தின் பேரில் பேசுகிற நேரத்தில் திரு. சுப்பிரமணியம் அவர்கள் ஒரு திருத்தத்தை முன்மொழிந்து இருக்கிறார்கள். அந்தத் திருத்தம் தேவையற்ற ஒன்று என்று நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தனியார் வைத்திருக்கிற குடிசையைப் பற்றிய ஒரு பிரச்னையாகத்தான் அதை நான் கருதுகிறேன். மற்றபடி ஒரு 'ஜெனுயின் டெனன்ட்டாக' இருக்கும் மக்களுக்கு இந்தச் சட்டம் பாதுகாப்பு அளிப்பதற்கு வகை செய்கிறது. அதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிசை மாற்று வாரியத்தைப் பற்றி பேசுகிற நேரத்தில் அம்மையார் அவர்களும், திரு. கே. எம். எஸ். அவர்களும் திரு. எம். சிதம்பரம் அவர்களிடமிருந்து வாங்கிய நிலத்தைப்

பற்றிக் குறை கூறிப் பேசினார்கள். இன்றைக்கு அந்த கோட்டூர் ஸ்கீமில்—அம்மையார் அவர்கள் சிபாரிசு செய்தாலும்—இடம் இல்லை, அந்த அளவுக்கு நல்ல விலைக்கு அதுபோய் இருக்கிறது. அதனால் விலை அதிகமாகக் கொடுத்தோம் என்று சொல்வது சரியல்ல. சென்னையில் அதைவிடக் குறைவாக எங்காவது இடம் இருந்தால் சொல்லுங்கள், வாங்கிக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். வீட்டு வசதி வாரியம் வாங்கிக்கொள்ளத் தயாராக இருக்கிறது. நிலம் அதிகமாகத் தேவைப்படுகிறது. தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்பதற்காகவும், மத்திய தர மக்களுக்கு வீட்டு வசதி ஏற்படுத்தித் தருவதற்காகவும் நிலம் அதிகமாகக் கையகப்படுத்த வேண்டியிருக்கிறது. அதற்காக வீட்டு வசதி வாரியம் நிலத்தைக் கையகப்படுத்தத் துடித்துக்கொண்டு இருக்கிறது. இந்தப் பிரச்னை பற்றிப் பேசுகிறபோது அம்மையார் அவர்கள் சொன்னார்கள். நடுவிலே 1½ கிரவுண்ட் இருக்கிறது, அதை அவர்களுக்கு விட்டு விடவேண்டுமென்று சொன்னார்கள். வாதத்தில் நியாயம் இருப்பதாகத் தோன்றுகிறது. ஆனால் இருக்கிற பிரச்னையைச் சொல்லியாக வேண்டும்.

(திருமதி த. ந. அனந்தநாயகி எழுந்தார்.)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): நீங்கள் தயவு செய்து உட்காருங்கள். அமைச்சர் அவர்கள் பேசி முடித்த பிறகு விளக்கம் கேட்கலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: விட்டு விட வேண்டுமென்று சொல்லவில்லை. அவர்களுக்கு மாற்று இடம் வீட்டுவசதி வாரியத்தில் கொடுங்கள் என்று தான் சொன்னேன். (மணியடிக்கப் பட்டது.)

The Hon. Minister is yielding. He possesses only 1½ grounds. By all equitable considerations the Government must give exchange plot.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: நல்லவேளையாக வீட்டு வசதி வாரியத்தில் கொடுங்கள் என்று சொன்னார்கள், மவுண்ட் ரோடில் கொடுங்கள் என்று சொல்லாமல்; அதை வரவேற்கத் தயாராக இருக்கிறேன். ஒரு இடத்தில் ஒரு விலை நிலவுகிறது

[திரு. க. இராசாராம்] [1973 ஆகஸ்ட் 6

என்று சொன்னால், அதை ஒட்டித்தான் வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம் விலை நிர்ணயம் செய்கிறது. ஒருவரிடமிருந்து ஒரு இடத்தை எடுத்துக்கொண்டால் அதற்கு வேறு வகையில் வசதிகளைச் செய்து தருகிறது. ஒரு நல்ல திட்டம் செயல்படுகிறபோது சில நேரங்களில் சிலர் பாதிக்கப்படுவார்கள். ராஜாக்களை நாம் ஒழித்தோம். பத்து ராஜாக்கள் போகிறார்களே என்று நாம் கவலைப்பட்டு இருந்தால், அம்மையார் இருக்கும் கட்சி இன்று நாட்டில் இருந்து இருக்காது. வாதத்திற்கு வேண்டுமானால் சொல்லலாம். அதனால்தான் நண்பர் பழனிசாமி அவர்களுக்குச் சந்தேகம் வந்தது. அம்மையார் அவர்கள் ஏன் அப்படிப் பேசினார்கள் என்று சந்தேகம் வந்தது. எனக்குச் சந்தேகம் வரவில்லை. அம்மையார் அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அதிலே ஐயப்பாடு இல்லை.

ஒரு காலனியை உருவாக்குகிற நேரத்தில், சில நல்ல காரியங்கள் செய்யப்படுகிற நேரத்தில் இடையில் இருக்கும் சிலபேர் கஷ்டப் படுவார்கள், இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் நாம் செய்கிற காரியங்கள் சரியான முறையில் அமைய வேண்டும். ஆனால் அம்மையார் அவர்கள் இதை ஒரு பெரிய பிரச்னையாக்கி தன்னுடைய வாதத் திறமையினால் அதற்கு வலுவூட்ட விரும்புவது அவ்வளவு நல்லதல்ல என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்தத் திட்டத்தை எல்லோரும் ஆதரித்து இருக்கிறார்கள். அவர்கள் கட்சியைச் சார்ந்த உமா சங்கர் தீட்சத் ஆதரித்து இருக்கிறார்கள். போலா பாஸ்வான் சாஸ்திரி ஆதரித்து இருக்கிறார்கள். ஓம் மேத்தா அவர்கள் ஆதரித்து இருக்கிறார்கள். யாரும் எதிர்க்கவில்லை. இது ஒரு மனிதாபிமானப் பிரச்னை. ஒரு கட்சி எடுத்து இருக்கிற பிரச்னை அல்ல. 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்று அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அந்தக் கொள்கைக்கு ஏற்பத்தான் நாங்கள் இந்தக் காரியங்களைச் செய்து வருகிறோம். அதிலே வேறு எந்தவிதமான வித்தியாசமும் இல்லை என்று நான் இந்த மன்றத்தின் மூலம் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1973 ஆகஸ்ட் 6] [திரு. க. இராசாராம்]

இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில், இது ஒரு நல்ல சட்டம். இந்தச் சட்டத்தை ஏகமனதாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிக் கேட்டுக் கொள்கிற அதே நேரத்தில் நம்முடைய பாலசுந்தரம் அவர்கள் ஒரு கோரிக்கை வைத்தார்கள் இன்னும் சலுகை தர வேண்டுமென்று சொன்னார்கள். இப்போது தரப்பட்டு இருக்கும் சலுகையே அதிகம். அகில இந்திய ரீதியில் இப்படிச் செய்வதற்கு ஒரு மாநிலம் கூட அருகே வரமாட்டேன் என்கிறார்கள். நம்முடைய மாநிலம்தான் இதில் முன்னணியில் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அமைச்சரவைக்கு ஊக்கமும், ஆக்கமும் தருகிற வகையிலும், சென்னையில் இருக்கிற 1,200 குடிசைப் பகுதிகளை மாற்றியமைப்பதற்கு வழிவகுக்கும் வகையிலும் இதற்கு ஆதரவு தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்தத் திருத்தத்தை ஏகமனதாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்தில் நான் ஏதோ இந்தச் சட்டத்தை எதிர்த்த மாதிரிப் பேசினார்கள். நான் இதற்குத் திருத்தம் கூடக் கொடுக்கவில்லை; திருத்தம் கொடுத்தது திரு. கே. எம். சுப்பிரமணியம். நான் சட்டத்தை அமல் நடத்துகிறபோது ஏற்படும் சில சங்கடங்களைச் சொன்னேன். அவர்கள்தான் ஏதோ தீவிர சமதர்ம வாதிகள் போலவும், நாங்கள் எல்லாம் முதலாளிகளுக்கு வால் பிடிக்க வந்தவர்கள் மாதிரிச் சொல்வது பெரும் தவறு. இந்தச் சட்டத்தை எதிர்த்து நான் ஒன்றும் சொல்லவில்லை. இதில் ஏற்படும் நடைமுறைச் சங்கடத்தைப் பற்றித்தான் சொன்னேன். என்னுடைய வாதத்தைத் திசை திருப்புவது சரியல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: எனக்குச் சந்தேகம் வரவில்லை. நண்பர் பழனிசாமி அவர்களுக்குச் சந்தேகம் வந்தது. அதற்குத்தான் பதில் சொன்னேன். அம்மையார் அவர்கள் ஆதரித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் தெரிவித்திருக்கிற கருத்துக்களை நாங்கள் புரிந்து கொண்டிருக்கிறோம். குறைகளை நீக்குவதற்கான நடவடிக்கைகளை

நாங்கள் எடுப்போம் என்பதை நான் தெரிவித்து இந்தச் சட்டத்தை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு நா. வீராசாமி) : பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு-மாற்று) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/73)" ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, 4, 5 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

Clause 6.

MR. CHAIRMAN (THIRU N. VEERASAMI) : The question is—

'That clause 6 do stand part of the Bill.'

'Is the hon. Member Thiru K. M. Subramaniam moving his amendment?

* THIRU K. M. SUBRAMANIAM : Sir, I am moving my amendment. I want to speak a few words on my amtndment. The amendment is as follows :—

'In section 31 (1) of the principal Act, for the words " where an occupant in occupation . . ." substitute the words " before an occupant in occupation . . . .".'

So far as the English language is concerned, my understanding . . .

MR. CHAIRMAN (THIRU N. VEERASAMI) :Who is going to second your amendment?

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I second it.

* THIRU K. M. SUBRAMANIAM : Sir, I think the Hon. Minister will appreciate that there is absolutely no opposition to this Bill. We are all for this Bill. We are only helping in the proper drafting of the Bill. Here what as stated is this " Where an occupant in occupation of a building in a slum area vacates the building ". The time-limit is not mentioned. He should specify whether he wants the reallotment at proper time. He should specify it before he vacates, before the building is taken for repair. I hope the Hon. Minister will understand the usefulness of my amendment. Otherwise what will happen is this. At any time he can come and say anything. That is not enough. He must specify 'I am agreeable to vacate and allow the owner to repair provided these are the conditions'. Those things must be settled. My amendment is simple change of one word. I think the Hon. Minister will appreciate my genuine desire not to have many lacunae in the Bill. That is why I have moved the amendment and I hope it will be accepted. I insist on my amendment.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, செக்ஷன் 31 (1)-ல் இதற்கான விதிகளெல்லாம் இருக்கின்றன. இதிலே நீங்கள் என்ன மாறுதலை விரும்புகிறீர்கள்? The right should be given even before he has vacated என்று சொல்கிறீர்களா?

THIRU K. M. SUBRAMANIAM : That is the second sentence in amendment after (1).

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அதிலே பெரிய விளைவுகள் இல்லையே?

There is no big change in that.

THIRU K. M. SUBRAMANIAM : I am pressing my amendment. I am doing my duty. You may accept it or not.

திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

[திரு. கே. எம். சுப்ரமணியம்] [1973 ஆகஸ்ட் 6

பிரிவு 6 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவுகள் 7, 8, 9, 10 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு-மாற்று) திருந்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/73) நிறை வேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(இ) தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு மோட்டார் எரி எண்ணெய், விற்பனைகளுக்கு வரி விதித்தல், கேளிக்கைகளுக்கு வரி விதித்தல் (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/73)

* **மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு மோட்டார் எரி எண்ணெய் விற்பனைகளுக்கு வரி விதித்தல், கேளிக்கைகளுக்கு வரி விதித்தல் (திருத்த)சட்ட முன்வடிவு* (சட்ட பேரவை சட்ட முன்வடிவு எண். 18/73) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

@ 3—8—1973 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

1973 ஆகஸ்ட் 6] [திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா]

இம்மாநிலத்தின் வருவாயை உடனடியாகப் பெருக்கும் ஒரு நடவடிக்கையாக தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் எண்ணெய் விற்பனைகளுக்கு வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 6/1939) கீழ், பெட்ரோல், விமான எரி எண்ணெய் இவைகளின் மீதான விற்பனை வரியை லிட்டர் ஒன்றுக்கு 12 காசிலிருந்து 15 காசாகவும் டீசல் எண்ணெய் மீதான விற்பனை வரியை லிட்டர் ஒன்றுக்கு 10 காசிலிருந்து 13 காசாகவும் உயர்த்துவதென முடிவு செய்யப்பட்டது.

தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் கீழ் திரைப்படக் காட்சிகளுக்கான நுழைவுக் கட்டணத்தின் மீது விதிக்கப்படும் கூடுதல் மேல் வரியை கீழ்க்கண்டவாறு உயர்த்தவும் முடிவு செய்யப்பட்டது :—

(அ) நுழைவுக் கட்டணம் ஒரு ரூபாய்க்கு மேற்படாதபோது கூடுதல் மேல்வரி பத்து காசு ;

(ஆ) நுழைவுக் கட்டணம் ஒரு ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் மூன்று ரூபாய்க்கு மேற்படாதபோது கூடுதல் மேல்வரி இருபது காசு ;

(இ) நுழைவுக் கட்டணம் மூன்று ரூபாய்க்கு மேற்படும் போது, கூடுதல் மேல் வரி முப்பது காசு.

எனவே, மேற்சொன்னவற்றிற்கேற்றவாறு தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் எரி எண்ணெய் விற்பனைகளுக்கு வரி விதிக்கும் சட்டத்தையும் தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தையும் திருத்துவது அவசியமெனக் கருதப்பட்டது. அவ்வாறே, மேற்சொன்ன நோக்கத்திற்காக, தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு மோட்டார் எரி எண்ணெய் விற்பனைகளுக்கு வரி, கேளிக்கை வரி (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 2/1973) 1973 ஜூன் திங்கள் 26 ஆம் நாளன்று சாற்றுரைக்கப்பட்டது.

மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்குப் பதிலாக சட்ட மன்றத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய சட்டம் ஒன்றைக் கொண்டுவர அவைமுன் தற்போது வைக்கப்பட்டுள்ள சட்ட வரைவு விழைகிறது.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1973 ஆகஸ்ட் 6

இதனை ஏற்று நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி : தலைவர் அவர்களே, இந்த மாதிரி. . .

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : இன்னும் மூன்று சட்ட முன்வடிவுகள் இருக்கின்றன. சுருக்கமாகப் பேசினால் எல்லாவற்றையும் இன்று நிறைவேற்ற முடியும். ஆகவே, உறுப்பினர்கள் அதற்கேற்றவாறு சுருக்கமாகப் பேசுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி : கேளிக்கைகளுக்கு வரியை ஏற்றியும் பெட்ரோல் டீசல் எண்ணெய் வரிகளை ஏற்றியும் பின்னால் வரக்கூடிய மசோதாவில் ஸ்டாம்ப் வரியை ஏற்றியும் சர்க்கார் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். மது விலக்கு அமுல் செய்வதை நிறுத்தி வைத்ததை ரத்து செய்ததன் காரணமாக, அதனால் கள்ளுக் கடைகள் மூடப்பட்டு, அதனுடைய நஷ்டத்தை ஈடு செய்வதற்காக இந்த வரிகள் ஏற்றப்பட்டிருக்கின்றன. ஆகவே, புதிய வரி எந்த வரியாக இருந்தாலும் நாங்கள் எதிர்க்கிறோம். இந்த வரி அவசியம் தானா என்பதைப் பற்றி முதலில் சர்க்கார் பதில் சொல்ல வேண்டும். கள்ளுக் கடைகள் மூடப்பட்டு, இன்றையதினம் சாராயக் கடைகள் எல்லாம் 10 மடங்கு அதிகமான தொகைக்கு ஏலம் விடப்படுகின்றன. உதாரணமாக, கோவை ஜில்லாவில் 1000 ரூபாய்க்கு ஏலம் போன கடைகள் 25,000 ரூபாய்க்கு ஏலம் போயிருக்கின்றன. சேலம் ஜில்லாவில் 5,000 ரூபாய்க்கு ஏலம் போன கடைகள் ரூ. 45,000-க்கு இன்றைக்கு ஏலத்தில் விடப்பட்டிருக்கின்றன. அந்த முறையில் இப்பொழுது நிலைமை வந்துகொண்டிருக்கிறது. மது விலக்கை மீண்டும் அமுலுக்குக் கொண்டு வருவதினால் ஏற்படும் நஷ்டத்தை ஈடுகட்ட, கள்ளுக் கடைகளை மாத்திரம் மூடி சாராயக் கடைகளை ஏலம் விட்டதில் சர்க்காருக்கு மூன்று, நான்கு மடங்கு அதிகப்படியான வருமானம் வருகிறது. ஆகவே, இந்த வரி உயர்வு அவசியம் இல்லை என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

1973 ஆகஸ்ட் 6] [திரு. என். கே. பழனிசாமி]

அது மட்டுமல்ல. கள்ளுக் கடைகள் மூடப்பட்டு, சாராயக் கடைகளை மாத்திரம் திறந்து வைக்கிற திட்டத்தில் எந்த அளவுக்கு மது விலக்கு அமுல் நடத்தப்படுகிறது என்று சொல்ல முடியும்? ஏற்கனவே கள்ளுக் குடித்தவர்கள் கள்ளுக் கடைகள் மூடப்பட்டிருப்பதால் எல்லோரும் போய் சாராயக் கடைகளில் குடிக்கிறார்கள் என்ற முறையில்தான் சர்க்கார் திட்டங்கள் இருக்கின்றன. இதற்குப் பதிலாக சர்க்கார் படிப்படியாக மது விலக்கை அமுல் செய்ய வேண்டுமென்று சொன்னால் கள்ளுக் கடைகளை மாத்திரம் மூடுவதற்குப் பதிலாக, ஜில்லா வாரியாக கள்ளுக் கடை, சாராயக் கடை, பீர், பிராந்திக் கடை எல்லாவற்றையும் மூடிக்கொண்டு வந்தால் மதுவிலக்கை படிப்படியாக அமுல் நடத்தலாம். கள்ளுக்கடைகளை மாத்திரம் மூடிவிட்டால் அது மதுவிலக்கு என்று சொல்வதற்கில்லை. கள்ளுக் கடைகளை மாத்திரம் மூடிவிட்டு சாராயக் கடைகளை மாத்திரம் வைப்பது சரியல்ல. ஏற்கனவே சாராயக் கடைகளில் விற்கக்கூடிய சாராயம் போதாமல் தனிப்பட்டவர்கள் ஓரளவுக்குச் சாராயம் காய்ச்சினார்கள். டெபோக்களிலிருந்து வரக்கூடிய சாராயத்தை ஹோல்ஸேல் கட்டத்திலேயே விற்றுவிடுகிறார்கள். ஏற்கனவே கள்ளச் சாராயம் சாராயக் கடைகளில் விற்பனையாகிக் கொண்டிருந்தது. வேறு தொழில் இல்லாமல் சாராயம் காய்ச்சுவதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். சர்க்கார் லைசென்ஸ் பெற்று காமதேனு டிஸ்டிலரீஸ் இருக்கிறது. ரூ. 20 லட்சம் முதலீடு போட்டு 11 மாதங்களுக்கு முன்புதான் ஏற்படுத்தப்பட்டது. 11 மாதங்களுக்குள் ரூ. 85 லட்சம் அதிக லாபம் பெற்றிருக்கிறது. சர்க்கார் எக்சைஸ் வரி ரூ. 2½. உற்பத்திச் செலவு 70 பைசா. அடக்கம் 20 அல்லது 25 பைசா. அது போக 40 பைசா லாபம் வைக்கலாம். கிட்டத்தட்ட ரூ. 3.20 ஆகிறது. விற்பனை செய்யும்பொழுது ரூ. 4.50-க்கு விற்கலாம். 20,000 லிட்டர் ஒரு நாளைக்கு உற்பத்தி செய்கிறார்கள் என்று சர்க்காருக்கு கணக்குக் கொடுக்கிறார்கள். ஆனால், 40,000 லிட்டர் உற்பத்தி செய்து, 20,000 லிட்டர் கள்ள மார்க்கெட்டில் விற்கிறார்கள். சர்க்காருக்கு லாபம் இல்லாமல் போகிறது. உற்பத்தியாகக் கூடிய இடத்தில் சர்க்கார்

கண்காணிப்பது கிடையாது. இம்மாதிரி முறையில் கள்ளுக் கடைகள் இருந்தபொழுதே சாராயக் கடைகளில் விற்பதற்கு உற்பத்தியாகக்கூடிய சாராயம் போதவில்லை. ஆகவே, முன்பே ஏராளமாகக் கள்ளச் சாராயம் காய்ச்சினார்கள். இப்பொழுது இன்னும் அதிகச் சாராயம் தேவைப்படும். கள்ளச் சாராய உற்பத்தி அதிகமாகும் இந்த முறையில். அதற்கு கள்ளப் பணம் அதிகமாக வேண்டும். ஆகவே, இதில் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. ஆகவே, இன்றையதினம் மதுவிலக்கை மீண்டும் கொண்டுவரும்போது, கள் மட்டும் குடிக்கக் கூடாது என்று சொல்லும்போது, மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டிருந்த காலத்தில் என்ன நிலைமை இருந்ததோ அதே நிலைமைதான் இப்போதும் இருக்கும். எத்தனை சட்டம் வந்தாலும் குடிக்கிறவன் குடித்துக் கொண்டுதான் இருப்பான்; குடிக்காதவன் எப்போதும் குடிக்க மாட்டான்.

இன்றையதினம் அரசாங்கத்தின் கொள்கையினால் ஏற்பட்டிருக்கிற ஒரு பெரிய மாற்றம் என்னவென்றால் கடந்த ஓராண்டுக் காலத்தில் பள்ளிக்கூடத்திற்குச் செல்லும் குழந்தைகள் கூட குடித்துவிட்டு, பள்ளிக்கூடத்தின் ஒரு மூலையிலே படுத்துத் தூங்குகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அந்த அளவுக்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

மதுவிலக்கை முழுமையாக அமுல் நடத்த வேண்டுமென்று சொன்னால் ஜனங்கள் மத்தியிலே மனமாற்றம் ஏற்பட வேண்டும். ஜனங்களிடையே ஒரு ஏகோபித்த முடிவு ஏற்பட வேண்டும். அது இல்லாமல் எவ்வளவு பணத்தைச் செலவு செய்தாலும் மதுவிலக்குக் கொள்கையினால் பலன் கிடைக்காது; சரியாக அமுல்படுத்த முடியாது; பணம்தான் வீணாகும். மதுவிலக்கை ரத்து செய்வதற்கு முன்னால், பணக்காரர்கள் மது அருந்துகிறார்கள். அவர்களைத் தடுப்பார் யாரும் இல்லை. ஆனால் ஏழைகள் மது அருந்தினால் அவர்கள் போலீசாரால் துன்புறுத்தப் படுகிறார்கள். அதனால் மதுவிலக்குத் தேவையில்லை; 'கள் குடித்தால் உடம்புக்கு நல்லது' என்று நாங்கள் சொன்னோம். ஆனால் இன்றையதினம் மீண்டும் மதுவிலக்கைக் கொண்டுவர

வேண்டுமென்று ஜனங்கள் ஏகோபித்த முடிவு செய்திருக்கிறார்கள். அதைச் செயல்படுத்த வேண்டுமென்றால் மொத்தமாக—ஆனால் படிப்படியாக ஜில்லா வாரியாக—மதுவிலக்கை அமுல்படுத்த வேண்டும். அது இல்லாமல் கள் மட்டும் குடிக்கக் கூடாது; மற்ற பானங்களைக் குடிக்கலாம் என்று சொல்வது மதுவிலக்கைக் கொண்டு வருவது என்று பொருளாகாது. சாராயக் கடைகளை வைத்திருந்தால், சாராயம் குடித்தானா கள் குடித்தானா என்று எப்படிக் கண்டுபிடிப்பது? கள்ளோ சாராயமோ குடிக்கக் கூடாது என்று சொன்னால்கூட குடிப்பவர்கள் குடித்துக் கொண்டு தான் இருப்பார்கள். இந்த நிலையில் கள் மட்டும் குடிக்கக்கூடாது என்று சொன்னால் எல்லோருமே வழக்கம்போல் எல்லாம் குடித்துக் கொண்டுதான் இருப்பார்கள். அதைக் கட்டுப்படுத்த முடியாது. ஆகவே, இதற்காக சர்க்கார் புதிய வரியைப் போடுவது என்பதை ஒப்புக்கொள்ள முடியாது.

அதிலும் இன்றைக்குக் கேளிக்கை வரி—ஒரு ரூபாய்க்கு குறைந்த டிக்கட்டுக்கு 10 பைசா என்று போட்டிருக்கிறது. அதனால் மிகவும் பாதிக்கப்படக் கூடியவர்கள் சாதாரண ஏழை மக்கள்தான். ஆகவே, ஒரு ரூபாய் டிக்கட்டுக்கு—தரை டிக்கட்டுக்கு எக்சம்ஷன் கொடுக்க வேண்டும்.

டீசலுக்கு 3 பைசா ஏற்றியிருப்பதால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். ஆகவே இதிலிருந்து விவசாயிகளுக்காவது எக்சம்ஷன் கொடுக்க வேண்டும். பொதுவாகப் பார்த்தால் இந்தப் புது வரி போட வேண்டிய அவசியமே இல்லை. இருந்தாலும் நான் குறிப்பிட்ட இந்த இரண்டு காரியங்களுக்கும் எக்சம்ஷன் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், அவர்களுடைய கட்சியினர் மதுவிலக்குக் கொள்கையை ஆதரிக்கிறார்களா அல்லது எதிர்க்கிறார்களா என்ற ஒரு விளக்கத்தை மட்டும் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி: மதுவகைகளை மிதமாகக் குடிக்கத் தான் வேண்டும் (சிரிப்பு).

திரு. கே. என். குமாரசாமி: கனம் மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த மோட்டார் எரி எண்ணெய் மீது வரி விதிப்பு மசோதாவின் காரணமாக உழைக்கின்ற சாதாரண ஏழை விவசாயிகள்தான் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காரணம் என்ன வென்றால் பெருவாரியான விவசாயிகள் இன்றைய தினம் ஆயில் எஞ்சின் வைத்துத்தான் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் அவர்களுக்கு எல்லாம் பூரணமாக—தமிழ்நாடு முழுவதுமாக—எலக்ட்ரிக் சப்ளை கிடைக்கவில்லை. ஆகவே, ஆயில் எஞ்சின்களுக்குத் தேவையான டீசல் எண்ணெய்மீது அதிக வரி விதிப்பதால் பாதிக்கப் படுபவர்கள் ஏழை விவசாயிகள்தான்.

இன்றையதினம் விவசாயத்திலே நவீன முறைகளைப் புகுத்த வேண்டும் என்று நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். நவீன விவசாய முறையில் டிராக்டர்களை வைத்து விவசாயத் தொழிலைச் செய்ய வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். அதிலும் சிறு சிறு விவசாயிகளாக இருந்தால், பலர் கூட்டுச் சேர்ந்து டிராக்டர் வாங்கிக் கொள்ளலாம் என்று சொல்கிறோம். அந்த டிராக்டர்களுக்குப் பெரிதும் தேவைப்படுவது டீசல் ஆயில். ஆகவே, டீசல் எண்ணெய்க்கு அதிக வரி விதித்தால் விவசாயத்திலே டிராக்டர் கையாளப்படும் முறை குறைந்துவிடும். அதனால் டீசல் எண்ணெய்க்கு மேலும் வரி விதிப்பது எந்த விதத்திலும் நியாயமல்ல. ஏற்கெனவே விவசாயிகள் உரம் போன்ற மற்றப் பொருட்களுக்கு அதிகமான விலை கொடுக்க முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்; அல்லைக்கழித்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் அவர்களுக்கு விவசாயத்தில் போதுமான லாபம் கிடைக்காமல் இருக்கிற இந்தக் கால கட்டத்தில் டீசல் ஆயிலுக்கு மேலும் வரி விதிப்பது முற்றிலும் நியாயமற்றதாகும்.

இரண்டாவதாக பஸ்களுக்கும் டீசல் எண்ணெய் தேவைப் படுகிறது. அவர்களும் அதிக விலை கொடுத்துத்தான் டீசல் எண்ணெய் வாங்க வேண்டும். அப்படி வாங்கும்போது அவர்கள்

டிக்கட் சார்ஜை உயர்த்திவிடுவார்கள். அதனால் பாதிக்கப் படுபவர்கள் அதிலே பிரயாணம் செய்யும் ஏழை மக்கள்தான். பஸ் சொந்தக்காரர்களுக்கு எந்தவிதமான பாதகமும் கிடையாது.

அரசாங்கத்திற்குக் கூடுதல் வருவாய் தேட வேண்டுமென்றால், இப்படிச் சாதாரண ஏழை மக்களை, விவசாய மக்களைப் பாதிக்காத வகையில் இருக்கின்ற பெரிய பெரிய தொழில்கள் மீது வரி போட வேண்டும். அதற்கான துறையை வருவாய்த் துறை அமைச்சரவர்கள் கண்டுபிடிக்க வேண்டும். அதிகமான வருவாய் வரக்கூடியவர்கள் மீது வரி விதிப்பு செய்தால் அதனால் அவர்களுக்கு ஒன்றும் கஷ்டம் வந்துவிடாது. ஆகவே, 10 லட்சம், 20 லட்சம், 30 லட்சம் ரூபாய் வருமானம் வரக்கூடிய பெரிய பெரிய தொழில்கள் எத்தனையோ இருக்கின்றன. அத்தகைய தொழில் வருவாய்க்கு வரி விதித்தால் சாதாரண ஏழை மக்கள் பாதிக்கப்பட மாட்டார்கள்.

அடுத்தபடியாக, சொல்லப்பட்டிருப்பது கேளிக்கை வரி. இந்தக் கேளிக்கை வரியை எடுத்துக் கொண்டாலும், சாதாரண மக்கள் தான் அதிகமாகப் பாதிக்கப்படுவார்கள். கேளிக்கை வரி என்று சொல்லும்போது பெரும்பாலும் சினிமா போன்றவைகளுக்குத் தான் அந்த வரி விதிக்கப்படும். இப்போதே சினிமாவுக்கு விதிக்கப்பட்டிருக்கும் கேளிக்கை வரி அதிகமாகும். மீண்டும் மீண்டும் அந்த வரியை உயர்த்திக் கொண்டு போவதனால் சாதாரண மக்கள்தான் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். ஆகவே, ஏழை மக்களைப் பாதிக்கக்கூடிய இந்த மாதிரியான கேளிக்கை வரி அதிகரிப்பும் தேவையில்லை.

நான் ஏற்கெனவே சொன்னமாதிரி ஏழை மக்களைப் பாதிக்காத வகையில் பெரும் தொழில்கள் மீது வரி விதிக்க வேண்டும். அதை நன்றாக ஆராய்ந்து செய்ய வேண்டும். சினிமா போன்றவை களுக்கான குறைந்த டிக்கட்டுகளுக்கு எக்சம்ஷன் கொடுக்க வேண்டும். குறிப்பாக டீசல் எண்ணெய் வரி விதிப்பிலிருந்து விவசாயிகளுக்கு எக்சம்ஷன் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மசோதாவிலிருந்து டீசல் எண்ணெய்க்கான அதிக வரி விதிப்பையே எடுத்துவிடுவது நல்லது என்று தெரிவித்துக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* THIRU K. M. SUBRAMANIAM : Mr. Chairman, I oppose this sort of imposition of taxes during a time when there is no Budget session. Emergency ordinances are generally promulgated in the case of finance bills when there is an emergency, when there is foreign attack, when there is some economic collapse. But here so far as the Tamil Nadu Government is concerned, when the Budgets are presented they get all the publicity for presentation of such budgets without taxes. This is not happening today, but it has happened before. This Tamil Nadu Government said that 'this is the only Government which presents a budget without taxation'. But within four or five months, new proposals have come up for taxation, for increase of electricity rate. After that some other proposals come for increasing the taxes. This instance of bringing ordinances is I think highly abnormal, because the moment there is a proposal to close down toddy shops, the Finance Department which is waiting to tax the people, immediately comes up saying that there is going to be a fall in revenue and therefore let us increase taxes wherever possible. This is what is happening. Sir, it has not been found out what is the loss of revenue because of closing down of toddy shops.

Now I would like to refer to the auction of arrack shops. We find that the amount derived in the auction of arrack shops is
பி.ப. more than the deficit that is expected in various districts. There-
12-30 fore, I feel the taxation is not at all necessary.

Coming to the other points, I would like to say this. During the year 1966-67, the total revenue of Tamil Nadu was Rs. 191 crores. To-day the total revenue of Tamil Nadu is more than Rs. 465 crores. If I remember correct—I speak subject to correction—out of the total revenue of Rs. 465 crores, 150 crores of rupees is contributed by the Centre as grant or subsidy. In addition to that, now the Government has come forward with this taxation proposal for an additional sum of Rs. 11 crores, to wipe out the imaginary deficit. What has happened now ? The Government has gone to the extent of taxing essential articles. Only a month back, the Central Government increased the tax by 3 paise per litre. After that increase, now the Government have come

with this proposal to make good the imaginary loss. Within a short period, now the Government has come forward with a proposal to levy tax on petrol and diesel oil, perhaps the Government is thinking that petrol is a luxury article. I would like to say that petrol is not a luxury article. Ninety per cent of the cars that are plying in the City are not rich-men's cars. They are used by middle class people for going to office for attending to essential work. You can ask any senior officer in the Government or any Government servant and they will say that 'it is painful for me to pay a tax on my conveyance '. I was having a car in 1942 and then I was paying 13 annas per gallon. Now I pay Rs. 7.75 p. and the petrol has become a costly article for me. I am not maintaining a car for luxury purpose. I am not maintaining a car for going to beach. I am maintaining a car for attending to my essential and important work. I know that 75 per cent of the cars are purchased under hire-purchase basis. One will know how much inconvenience it will cause to them. The Government is taining that petrol is a luxury article and thinking that the tax should be increased every six months.

The Government may think that petrol is a luxury article, but what about diesel? Diesel is a most important and essential article for any industry. Without diesel, no industry will be able to function. It is also very necessary for agricultural operations. It is shameful for the Government to think of levying a tax to compensate for the imaginary loss or the loss which they have not actually incurred. It is shameful for the Government to levy tax on an essential commodity like this.

One more point, I want to illustrate. The Government has very clever advisers in the Finance Department to advice the Hon. Finance Minister to present a no-tax Budget. As soon as the Budget is presented, they advise him to levy tax wherever it is possible and necessary. Apart from these taxes, there are other taxes such as property tax. Everywhere the tax is increasing. The tax levied by the Municipality is increased 3 or 4 times. If these taxes were taken into account, the total revenue may exceed 1,000 crores. The taxes that are levied directly or indirectly should also be taken into consideration.

The Government has also levied tax on the last remaining item, namely, the poorman's entertainment. He has no food. He has no clothing. He has no shelter. In order to forget his tears and sufferings, he has to go to some picture. Now one-fourth of the ticket value is levied as tax. You take for example 30 paise ticket. I am not talking about three rupees ticket or anything. I am talking about the poorman's ticket. One-fourth of the value of the ticket is paid as tax. In addition to that, there are additional surcharge and Bangla Desh tax, etc. Actually what happens is this. Sixty to seventy per cent of the value is collected as tax. Is it proper to charge like this? I think that this legislation has not been brought after mature consideration. I think the Hon. Minister for Finance will give thought to this important matter and, I am sure, in this particular case, he will defer the proposai because it is a very serious matter affecting the poor people.

You might have seen, Sir, the circular issued by Petrol-pump owners Association saying 'No more credit for you'. We are getting circulars like this very often. Already the economy of the country is on the breaking point and is breaking down. The Tamil Nadu Government is also anx'ous to break it at any cost, by levying such taxes whenever and wherever the opportunity comes. In 1967,

'நாங்கள் வரியைக் குறைப்போம்; வசதியைப் பெருக்குவோம்' என்று சொன்னீர்கள். ரூ. 465 கோடிக்கு வரியைக் குறைத்திருக்கிறீர்கள்! வசதியைப் பெருக்கியிருக்கலாம். அதைப்பற்றி பிறகு பேசலாம்,

I think it should be stopped. I think it is time for the Government to think about the poor men. They say they are for the poor and they say they are working for the poor; but actually they are sucking the blood of the poor by levying such taxes. Let us hope and trust that this sort of tax will not be levied. In the case of three rupees tickets, the tax is going to be cent per cent. Is it a tax, Sir? It is not a tax; but it is only a swindle. The Government is going to tax and they say whatever you think, you pay us our money'. That is the policy of the Government. Let us stop this. I oppose this measure, at any cost, very vehemently. That is all I can say on this Bill.

திரு. ஜே. ஜேம்ஸ்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புதிய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில கொண்டு வந்திருக்கிற இந்த மசோதாவை நான் எனது கட்சியின் சார்பில் ஏற்றுக் கொள்ள முடியாத சூழ்நிலையில் இருக்கிறேன்.

தமிழ்நாடு அரசு ஏறத்தாழ 400 கோடி ரூபாய் அளவுக்கு இந்த மாநிலத்தில் வரியைச் சுமத்தி, இனிமேல் இந்த மாநிலத்தில் இருக்கிற மக்கள் வரிச் சுமையைத் தாங்க முடியாத நிலைக்குப் போய்விட்டார்கள், நாம் வரிபோட முடியாது என பழைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இந்த இலாக்கா பொறுப்பை புதிய வருவாய்த் துறை அமைச்சர் கையில் கொடுத்துவிட்டுச் சென்றுவிட்டார் போலிருக்கிறது. புதிய அமைச்சர் அவர்கள் பொறுப்பை ஏற்றவுடன் இந்தப் புதிய வரிகளைக் கொண்டு வந்திருக்கிறார் என்று சொன்னால் அதை ஏற்றுக்கொள்ளக்கூடிய சூழ்நிலையில் நாங்கள் இல்லை. இந்தப் புதிய வரிகளே தேவையில்லை என்பதற்கான காரணங்களை மற்ற மேம்பர்கள் கூறினார்கள். மதுவிலக்கைக் கொண்டு வருகிற காரணத்தினால் ஏற்படுகிற இழப்பைச் சரிக்கட்ட இந்தப் புதிய வரிகளைக் கொண்டு வருகிறோம் என்பதாக ஆளும் கட்சியினர் கூறியிருக்கிறார்கள். மதுவிலக்கைப் பூரணமாக இந்த மாநிலத்தில் முன்பு கொண்டு வந்தபோது அந்த இழப்பை ஈடுகட்டத்தான் சேல்ஸ் டாக்ஸ் கொண்டு வந்தார்கள். கிட்டத்தட்ட இன்றைக்கு நமது மாநிலத்தில் வருவாயில் ¼ பாகம் 100 கோடிக்கு மேல் சேல்ஸ் டாக்ஸ் மூலமாக நமக்கு வருமானம் வந்து கொண்டுதான் இருக்கிறது. ஆகவே இன்றைக்குப் பூரணமாக மதுவிலக்கைக் கொண்டுவந்தாலும் கூட அப்போது கொண்டுவந்த சேல்ஸ் டாக்ஸ் இன்னமும் இருக்கிற காரணத்தினால் புதிய வரிகள் கொண்டுவர வேண்டிய அவசியம் இல்லை.

அது ஒருபுறம் இருக்க--பூரணமான மதுவிலக்கை இவர்கள் கொண்டு வந்திருக்கிறார்களா என்றால் இல்லை. பெயரளவில் கள்ளுக்கு மட்டும் தடை விதிக்கிறோம் என்றால் சாராயம் இருக்கிறது, பிராந்தி போன்ற மதுபானங்கள் இருக்கின்றன. அரிஷ்டம் கூட இந்த நாட்டில் இருக்கும்போது கள்ளுக்கு மட்டும்

தடை விதிப்பதினால் மக்கள் நிச்சயமாகப் பயன் அடைவார்கள் என்று சொல்ல முடியாது. இந்த நாட்டில் பூரண மதுவிலக்கைக் கொண்டுவந்தால்தான் பயனுள்ளதாக இருக்கும், நாட்டு மக்களுக்கு நல்லதாக இருக்கும் என்கிற கொள்கையை நாங்கள் எங்கள் கட்சியின் சார்பில் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். பூரண மதுவிலக்கைக் கொண்டுவர வேண்டுமென்று இந்த அரசாங்கத்திற்கும் எடுத்துக் கூறியிருக்கிறோம். இந்த நிலையில் பார்ஷியல் ப்ரொகிபிஷனை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராய் இல்லை. மதுவிலக்கை பூரணமாகக் கொண்டுவராத வரையில் நாங்கள் போராட்டம் நடத்தத்தான் போகிறோம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இவர்கள் படிப்படியாக மதுவிலக்கை மீண்டும் கொண்டுவர இருக்கிறோம் என்று சொல்வதை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராய் இல்லை. ஒரு மாவட்டம், 2 மாவட்டங்களுக்காவது அவர்கள் உடனடியாக மதுவிலக்கைப் பூரணமாகக் கொண்டு வந்திருக்கலாம். அப்படியின்றி கள்ளை மாத்திரம் தடுக்கிறோம் என்பது எந்த வகையிலும் மக்களுக்கு நன்மை பயக்காது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்ததாக, இதற்குப் பரிகாரம் காண்கின்ற வகையில் கொண்டு வந்திருக்கின்ற வரிகளைப் பார்க்கின்றபொழுது, இவை சாதாரண ஏழைகளைப் பாதிக்கின்ற வரிகளாக இருக்கின்றனவே தவிர, வசதி உள்ளவர்களைப் பாதிக்கின்ற வரிகளாக இல்லை. இவற்றால் சமுதாயத்தில் உள்ள ஏழைகள் பாதிக்கப்படுவார்களா என்று அரசாங்கம் ஆலோசிக்கக் கடமைப்பட்டிருக்கிறது. இன்று நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையில்—நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்படுவதற்கு வரிகள் சுமத்துகின்ற முறை தான் காரணம் என்று பொருளாதார நிபுணர்கள் கூறிக் கொண்டிருப்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆக, நமது நாட்டில் வருகின்ற சில மாதங்களில் பெரிய பொருளாதார நெருக்கடியை நாம் நோக்கி இருக்கும் போது, புதிதாக இங்கு கொண்டு வந்திருக்கிற வரி மேலும் அதிகமான நெருக்கடியை ஏற்படுத்துகின்ற சூழ்நிலையை உருவாக்கியுள்ளது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று டீசல்களுக்கு விதிக்கப்படுகின்ற வரி நிச்சயமாக ஏழை எளியவர்களைப் பாதிக்குமே தவிர, வசதி உள்ளவர்களைப் பாதிக்காது என்று கூறினார்கள். டீசல்களுக்கு வரி என்று சொன்னால் நிச்சயமாக அது பஸ் முதலாளிகளைப் பாதிக்காது. உடனே பஸ் கட்டணத்தை உயர்த்துவார்கள். டீசல் விலை ஏறினால், அது லாரி முதலாளிகளைப் பாதிக்காது. லாரிகளை உபயோகிக்கின்ற ஏழை எளியவர்களைத்தான் பாதிக்கும் என்பதை அரசு அறியும் என்று நினைக்கிறேன். ஆக, வசதி உள்ளவர்களைப் பாதிக்கின்ற வகையில் வரிகளைப் போட்டிருக்கலாம் என்ற கருத்தை நான் கூற விரும்புகிறேன். ஆனால் இங்கு விதிக்கப் படுகின்ற வரிகள் ஏழை எளியவர்களைப் பாதிக்கின்ற வரிகளாகத் தான் இருக்கின்றன.

அடுத்ததாக, கேளிக்கை வரியைப் பார்த்தால், 100-க்கு 85 பேர் ஏழைகள்தான் சினிமா பார்க்கிறார்கள். எனவே, அங்கு வரியை உயர்த்துவதால் ஏழைகள்தான் பாதிக்கப்படுவார்கள் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆக, இந்த நிலையில் புதிதாக கொண்டு வந்திருக்கிற வரிகளை ஏற்பதற்கில்லை என்று கூறிக்கொண்டு, இதற்கு மாற்றுப் பரிகாரம் தேட வேண்டும், குறைந்த பட்சம், அமுல்படுத்தும் போது விவசாயிகளையும் ஏழைகளையும் பாதிக்காத வகையில் நடைமுறையில் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, மதுவிலக்குத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று நம்முடைய அரசு முடிவு செய்கிறது. வருவாயைக் கொஞ்சம் பெருக்கிக்கொள்ளுகின்ற முறையில் இந்த வரிகள் விதிக்கப் பட்டிருக்கின்றன. இந்த வரிகளைப் பொறுத்தவரையில், நம்முடைய நண்பர்கள் இங்கே சொல்லியதுபோல் ஏழைகளைப் பாதிக்கக்கூடிய அளவுக்குப் போடப்பட்டிருக்கின்ற வரிகள் அல்ல.

புதிய வரிகள் அவசியமா என்று மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே கேள்வி கேட்டார்கள். புதிய வரிகள் அவசியம் என்பதை நாம் நல்ல முறையில் உணர்கிறோம். ஏனென்றால், மதுவிலக்கை சஸ்பென்ட் செய்த நேரத்திலே எவ்வளவு வருமானம் வந்தது என்பதையும், மதுவிலக்கை அமுல்படுத்துகிற நேரத்திலே வருகின்ற வருமானத்தையும் நாம் மொத்தமாக பார்க்கும்போது பெரும் தொகையினை ஈடுகட்டியதாகச் சொல்ல முடியாது. எனவே, புதிய வரிகள் தேவை என்பதை உணர்ந்து தான் அரசு புதிய வரிகளை விதிக்கிறது. இந்த புதிய வரிகள் இரண்டு வகை. ஒன்று விற்பனை வரி, இரண்டாவது கேளிக்கை வரி.

விற்பனை வரியைப் பொறுத்தவரையிலும் நண்பர் கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் சொன்னார்கள், கார் வைத்திருப்பவர்கள் ஏழைகள், என்று. ரூ. 25,000-லிருந்து ரூ. 1 இலட்சம் வரையில் மதிப்புள்ள கார் வைத்திருப்பவர்கள் ஏழைகள் என்று ஒப்புக் கொள்வோமானால் அந்தக் காலம் என்று வரும் என்று கேட்கலாமே தவிர, அவர்கள் ஏழைகள் என்பதை நான் ஒத்துக் கொள்ளவில்லை என்று சொல்லிக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

பெட்ரோல் உபயோகிப்பவர்கள் எல்லாம் வசதி படைத்தவர்கள் என்பதை மறுக்க முடியாது. எனவே அவர்களை ஏழைகளாகக் கருத முடியாது. டீசலுக்கு போட்டிருக்கிற வரி, விவசாயியை பாதிக்க வேண்டுமென்றால், அந்த விவசாயி ஒரு டிராக்டராவது வைத்திருக்க வேண்டும். இன்றைக்கு டிராக்டர் வைத்திருக்கின்ற விவசாயியை ஏழை விவசாயி என்றும் என்றால் ஒத்துக்கொள்ள முடியவில்லை என்று நான் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மிகவும் அவசியமான வரிகள் என்ற முறையில்தான் விதிக்கப்பட்டிருக்கின்றன.

திரு. பழனிசாமி அவர்கள் காமதேனு ஆலையைப் பற்றி சொன்னார்கள். அது ஈரோடு வட்டத்திலேதான் இருக்கின்றது. அதைப் போய் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய சர்க்கார் அதிகாரிகள் அந்த ஆலையிலே இருக்கிறார்கள். மாநில சர்க்கார் அதிகாரிகளும் அங்கே இருக்கிறார்கள். சென்ட்ரல் எக்ஸைஸ், ஸ்டேட் எக்ஸைஸ் அதிகாரிகள் அவ்வப்போது கணக்கிட்டுக் கொண்டு வருகிறார்கள். எனவே, கணக்கிலே குறிப்பிட்ட அளவுக்கு விநியோகம் செய்வதுடன், கணக்கில்லாமல் விநியோகம் செய்ய முடியாது. குறிப்பாக குற்றச்சாட்டுகளை அனுப்பினால் நடவடிக்கை எடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கள்ளச் சாராயம்பற்றிப் பேசப்பட்டது. கள்ளச் சாராயம் காய்ச்சுவதைக் கண்டுபிடிப்பதற்காக அதற்கென்று தனியாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, கள்ளச் சாராயம் காய்ச்சுவது போன்ற காரியங்கள் கடுமையான நடவடிக்கைகள் மூலம் கண்காணிக்கப்படுகின்றன. இன்னும் கடுமையான முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, பெட்ரோல் வரி. பெட்ரோல் வரியின் காரணமாக பஸ் கட்டணம் உயர்த்தப்பட்டதாகத் தெரியவில்லை, உயர்த்தப்பட வில்லை என்றுதான் கருதுகிறேன்.

கேளிக்கை வரியினைப் பொறுத்தவரை ஏழைகளுக்கு விதிக்கப் பட்டிருக்கிற வரி என்று சொன்னார்கள். சினிமா பார்ப்பவர்கள் அநேகமாக வசதி படைத்தவர்களாக இருக்கிறார்கள். அதிகக் கட்டணம் கொடுப்பவர்கள் அதிக வரி கொடுக்க வேண்டுமென்ற முறையிலேதான் இருக்கிறது. எனவே, எதிலும் எந்தவிதக் குறைபாடும் இல்லையென்று தெரிவித்துக் கொண்டு, இதை எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* THIRU K. M. SUBRAMANIAM : Sir, the Hon. Minister has stated that the price of a car costs Rs. 1 lakh. Of course, he has no opportunity to buy a car because he is using the Government car after he became the Minister. But I may bring to his kind notice that many of us have to dispense with the services of drivers because we cannot afford to have drivers. The high cost of petrol has created an increase in unemployment. When petrol costs high, how can we. . . . .

THE HON. THIRU S. J. SADIQ PASHA : My question to my hon. Friend is, whether a person who possesses a car worth Rs. 1 lakh, is a poor person?

[1973 ஆகஸ்ட் 6

THIRU K. M. SUBRAMANIAM : I possess a car worth only Rs. 6,000. The Government can tax a person owning a car worth Rs. 25,000.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, இந்த ஆயில் இன்ஜினை விவசாயத்திற்காக உபயோகப்படுத்துகிற விவசாயிகளை டீசல் வரி பெரிதும் பாதிக்கும் என்பது அமைச்சருக்கு நன்றாகத் தெரியும். விவசாயத்திற்கு உபயோகப்படுத்துகிற டீசலுக்கு மட்டுமாவது ஒரு முறை வைத்து, அதற்கு மட்டும் இந்த வரியிலிருந்து விதிவிலக்குக் கொடுக்குமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : விவசாயிகளுக்குப் பல சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. விவசாயிகளைப் பொறுத்தவரையிலே, நம்முடைய அரசின் மூலமாக பல வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த வரி விதிப்பினால் அதிகமான அளவு பாதிப்பு ஏற்படாது என்று அரசு கருதுகிறது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு மோட்டார் எரி எண்ணெய், விற்பனைகளுக்கு வரி விதித்தல், கேளிக்கைகளுக்கு வரி விதித்தல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண். 18/73) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு சட்ட முன்வடிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

பிரிவுகள் 2, 3, 4 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறை வேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, "தமிழ்நாடு, 1973 ஆம் ஆண்டு, மோட்டார் எரிஎண்ணெய் விற்பனைகளுக்கு வரி விதித்தல், கேளிக்கைகளுக்கு வரி விதித்தல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 18/73) நிறைவேற்றப்பட்ட வேண்டும்" என்று முன்மொழி கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(ச) 1973 ஆம் ஆண்டு, இந்திய முத்திரைத் தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 19/73).

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, 1973 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத் தாள் (தமிழ் நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு* (சட்ட பேரவை சட்ட முன்வடிவு எண் 1973) பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

இம்மாநிலத்தின் வருவாயைப் பெருக்க, 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத் தாள் சட்டத்தில் (மத்தியச் சட்டம் 2/1899) 1-வது விவர அட்டவணையைச் சேர்ந்த 23-வது பிரிவில் குறிப்பிடப் பட்டுள்ள சொத்துரிமை மாற்றுப் பத்திரத்தின் மீது விதிக்கப்படும் முத்திரைத் தாள் தீர்வையை உயர்த்த வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. அவ்வாறே, பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் நிலவை மதிப்பின்மீது அரை சதவீதக் கூடுதல் தீர்வை விதிக்கப்பட்டது. தமிழ்நாடு 1962 ஆம் ஆண்டு முத்திரைத் தாள் (தீர்வை உயர்த்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1962) 2-வது பிரிவில் முன்னரே செய்துள்ள தீர்வை அதிகரிப்புக்குக் கூடுதலாக இத்தீர்வை விதிக்கப்பட்டது. எனவே, தமிழ்நாடு 1962 ஆம் ஆண்டு 8-வது சட்டத்தின் 2-வது பிரிவின்படி செய்யப்பட்ட தீர்வை அதிகரிப்பையும், தற்போது செய்யப்பட்ட

*3—8—1973 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

தீர்வை அதிகரிப்பையும் கருத்தில் கொண்டு, மேற்சொன்ன 23-வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள முத்திரைத் தாள் தீர்வை விதம் மாற்றி அமைக்கப்பட்டது. ஒருங்கிணைந்த விதம் 23-வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த விதம், சொத்துரிமை மாற்றப் பத்திரத்திற்கு விதிக்கப்படுவது போன்று, முத்திரைத் தாள் தீர்வை விதிக்கப்படத்தக்க பத்திரங்களுக்கும் பொருந்தும். அதன் விளைவாக, சொத்துரிமை மாற்றப் பத்திரத்திற்கும், சொத்துரிமை மாற்றப் பத்திரத்திற்கு விதிக்கப்படுவது போன்றே முத்திரைத் தாள் தீர்வை விதிக்கப்படத்தக்க ஏனைய பத்திரங்களும் தொடர்புள்ள 23-வது பிரிவு, தமிழ்நாடு 1962 ஆம் ஆண்டு 8-வது சட்டத்தின் 2-வது பிரிவில் விட்டுவிடப்பட்டுள்ளது. விதிக்கப்பட்டுள்ள கூடுதல் தீர்வை காரணமாக, 1—7—1973-க்கு முன்பு எழுதப்பட்ட சொத்துரிமை மாற்றப் பத்திரம் குறித்தும், சொத்துரிமை மாற்றப் பத்திரத்திற்கு விதிக்கப்படுவது போன்றே முத்திரைத் தாள் தீர்வை விதிக்கப்படத்தக்க ஏனைய பத்திரங்கள் குறித்தும் செலுத்தத்தக்க தீர்வை கூடுதலாகாத வகையில் விதித்துறையும் செய்யப்பட்டது.

அவ்வாறே மேற்சொன்ன நோக்கங்களை எய்த, 1973 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத் தாள் (தமிழ்நாடு திருத்த) **அவசரச் சட்டம்** (தமிழ்நாடு அவசரச் சட்டம் 3/1973) சாற்றுரைக்கப்பட்டது. மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்குப் பதிலாக சட்டம் ஒன்றை இயற்ற இச்சட்ட முன்வடிவு விழைகிறது.

இதனை இப்பேரவை ஏற்று நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

Thiru K. M. SUBRAMANIAM: Sir, I have to oppose the Bill for the reasons already given in my previous speech. I think any increase in taxation should not be allowed at this time. I oppose tooth and nail any increase in taxation through ordinance especially at this particular juncture.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை எதிர்த்து ஒன்றிரண்டு கருத்துக்கள் கூறுவதற்கு முற்படுகிறேன். பொதுவாக இன்று முத்திரைத் தாள் கட்டணமானது அமிதமாகக் கூட்டப்பட்டிருக்கிறது. இது

மக்களை வெகுவாக வாட்டி வதைக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. இந்த அட்டவணையிலே மாற்றம் ஏற்படுத்த வேண்டுமென்ற முறையிலே அதிகமாக்கியிருப்பது சிறிய சதவீதமாக இருந்தாலும் கூட, இதைப் பொறுத்தவரையிலே தாங்கும் தலையிலே வரி சுமத்துகின்ற தன்மைக்கு எதிராக இருக்கிறது என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். முத்திரைத் தாள் கட்டணமானது நாளடைவிலே வளர்ந்து கொண்டே இருக்கிறது. இதை எந்த அளவிற்கு விரிவாக்க வேண்டுமென்று அரசாங்கம் விரும்புகிறதோ, அதற்கு ஏற்ப பலரும் ஏய்ப்பதற்கும் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். வரி ஏய்ப்பதைத் தடுப்பதற்கு முயற்சிகள் இருக்கலாம். கிராமங்களிலே ஸ்பெஷல் தாசில்தார்கள் என்று போட்டு அவர்கள் கிரையப் பத்திரங்கள் எழுதப்படும்பொழுது எவ்வளவு ஸ்டாம்ப் டியூட்டி செலுத்த வேண்டுமென்று போடுகிறார்கள். இப்படியெல்லாம் முயற்சிகள் இருந்தாலும்கூட, ஒட்டு மொத்தமாகப் போடுவதால் பல இடங்களிலே மக்களுக்குப் பலவிதமான சங்கடங்கள் ஏற்படுகின்றன. இது பெரிய நிலச்சுவான்தார்களை அதிகமாகப் பாதிக்காது. ஏழை எளிய மக்கள், சாதாரணமானவர்கள், நடுத்தர மக்கள் ஆகியவர்களை இது பாதிக்கும் என்பதால் இதை ஆட்சேபிக்கிறோம். செல்வச் சீமான்களுக்கு எவ்வளவுதான் வரிப் போட்டாலும் அவர்கள் தாங்க முடியும், அவர்களிடமிருந்து வசூலிக்க முடியும். ஏழை எளிய மக்களுக்கு வரியை அதிகமாக்குவது தோஷம் ஆகும்.

மதுவிலக்கு கொண்டுவருவதால் ஏற்பட்ட நஷ்டத்தைச் சரிக்கட்டுவதற்காக புதிய வரிகள் என்ற தலைப்பிலே சட்டங்களைக் கொண்டு வந்து இருக்கிறார்கள். கோடிக்கணக்கான ரூபாய்கள் புதிய வரிகள் மூலம் அரசாங்கம் பெற்றுக் கொண்டிருக்கிறது. அதன் காரணமாக நாட்டிலே இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார நிலைமையை ஆய்வு செய்ய வேண்டும். ரூபாயின் மதிப்பு குறைந்து கொண்டே வருகிறது. கழிந்த வருடம் 7.3 சதவிகித அளவுக்கு ரூபாயின் மதிப்பு குறைந்து இருக்கிறது என்ற ஆய்வு, கணக்கு அண்மையிலே தரப்பட்டது. எனவே இன்றுள்ள நிலைமையிலே அதிக வரிகளைப் போடுவதாலே ஒரு வேளை இன்ப்ளேஷனைத் தடுப்பதற்கு அது ஒரு மார்க்கமாக இருக்கலாம் என்று நினைக்கக்கூடும்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1973 ஆகஸ்ட் 6

செலவுகள் அதிகமாகிக் கொண்டே இருக்கின்றன, குறிப்பாக அன்புராடக்டிவ் எக்ஸ்பென்டிச்சர் என்ற தலைப்பிலே அதிகமாக ஆகியிருக்கிறது. நாட்டிலே பணப் புழக்கத்தைக் குறைப்பதற்குக் கஷ்டமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட வருமானங்களினால் ஏற்படும் நஷ்டத்தை ஈடுசெய்ய முடியாது. மதுவிலக்கு வேண்டும் என்பதிலே எங்களுடைய கட்சி அழுத்தமான கருத்தைக் கொண்டிருக்கிறது. பரிபூரண மதுவிலக்கு வேண்டும். மதுவிலக்கு மற்ற மாநிலங்களிலே இல்லாத நிலைமையையும் மத்திய அரசு உதவி செய்ய முன்வரவில்லையே என்பதையும் எடுத்துக் காட்டுகின்ற கேள்வியும் வரும் என்பதை உணர்கிறேன். அந்தக் கேள்வி வந்தாலும்கூட அது மக்களுக்குப் பயன் தரக்கூடிய நல்ல திட்டம் என்பதை அரசாங்கம் உணர வேண்டும்.

அண்மையிலே நடைபெற்ற திண்டுக்கல் தேர்தலிலே—நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்—மக்கள் குறிப்பாக பெண்கள் மதுவிலக்கு எடுக்கப்பட்டதால் ஏற்பட்ட தீய சக்தியைத் தடுப்பதற்காக ஆதரவைத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள், மதுவிலக்கு தளர்த்தப்பட்டதால் ஏற்பட்ட கொடுமைகளைக் கண்டித்து இருக்கிறார்கள், மதுவிலக்கு எடுக்கப்பட்டதால் ஏற்பட்ட கேடுகளை அறிவதற்கு எனக்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே மதுவிலக்கை பரிபூரணமாகக் கொண்டுவர வேண்டும். இது காந்திஜியின் சித்தாந்தம் என்பதால் மட்டும் அல்ல, சமுதாயத்திற்கு மது தீமை விளைவிக்கக்கூடியது, பல குடும்பங்கள் சுக்குநூறாக, தாறுமாறாகப் போவதற்குக் காரணமாகியிருக்கிறது. எனவே மதுவிலக்கைப் பரிபூரணமாக அமல்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும். அதற்காக, இந்த ஸ்டாம்ப் டியூட்டியை அதிகரித்திருப்பது ஈடுசெய்துவிடும் என்று நம்ப முடியாது. ஊதாரித்தனமான செலவுகளையெல்லாம் குறைக்க வேண்டும். அப்படியிருந்தால் சீராகவும், சிறப்பாகவும் நாட்டின் பொருளாதார நிலையை வழி நடத்திச் செல்வதற்கு சந்தர்ப்பம் ஏற்படும். தாங்கும் தலையிலே வரி என்று முன்னாலே சொன்னேன் முத்திரைத் தாள் வரியைப் பொறுத்தவரையிலே இனிமே அதிகமாக விதிக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிற, பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கும், பஞ்சாயத்துக்களுக்கும் இதி

1973 ஆகஸ்ட் 6] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

ஒரு பகுதி உண்டு என்று சொல்கிறார்கள். ஆனால் அவற்றிற்கு முழுமையாக இந்த வருவாய் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். எவ்வளவு சதவீத விகிதாச்சாரப்படி உயர்த்தப் படுகிறதோ அவர்களுக்கு அந்த அளவிற்குக் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். அது முழு அளவிலே கிடைக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். பரிபூரண மதுவிலக்கு கட்சியினுடைய கொள்கை என்று சொன்னார்கள். பாண்டிச்சேரிக்கும் அது பொருந்துமா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : நான் இந்தியா முழுமையுமே பரிபூரண மதுவிலக்கு வேண்டும் என்று கருதுகிறவன். ஆனால் பாண்டிச்சேரியில் உள்ள நிலைமை வேறு. நம்முடைய மாநிலத்திலே உள்ள நிலைமை வேறு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. நா. வீராசாமி]

THIRU B. VENKATASWAMY : Sir, on behalf of the Swatantra Party, I oppose taxation by ordinances. Taxation by ordinances can be justified only under extraordinary circumstances like an unexpected expenditure suddenly confronting the Government like that of a sudden break-out of war or natural calamities of abnormal magnitude and also when the Legislature is not scheduled to meet in the near future. But in this case it is not like that. Resort to taxation by ordinance is slighting the Legislature, taking its approval for granted and treating it like a rubber-stamp. Also I blame this Government because it is due to heavy taxation, people are suffering a lot and the Ruling Party had told several times that it they came to power definitely they would reduce taxation and other things.

Sir, at the same time we welcome the re-introduction of Prohibition. Rajaji several times told that the Swatantra Party was for total prohibition throughout India. But I am thankful

that this Government are going to close toddy shops as a first step. In this connection, I again repeat that I oppose taxation through ordinance because if any taxation measure is brought forward in the Legislature itself, it would be approved by the Legislature.

Regarding increase in the rate of stamp duty, already ryots are suffering a lot.

Instead of this heavy taxation, they can make economies, in the expenditure. For example they can minimise unnecessary expenditure like publicity offices in the districts. These are unnecessary things. They can minimise expenditure on Government House. Such administrative economies can be resorted to rather than this kind of taxation. It is said that this taxation is resorted to due to closure of toddy shops. But what I say is, the Government had collected twice or thrice the money in the recent auctioning of arrack shops. So, there is no necessity for this taxation measure. Thank you.

*திரு. மணலி சி. கந்தசாமி: பேரவைத் தலைவரவர்களே, பொதுவாகவே புதிய வரி விதிப்பு என்பது மக்களால் கசப்பாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது என்பதை இந்த சர்க்கார் உணரும். குறிப்பாக ஒரு வருஷத்திற்கு முன்புதான் இந்த மதுவிலக்கு ரத்து ஏற்பட்டது. ஒரு வருஷத்திற்குள், மறுபடியும் மதுவிலக்கு ரத்தை நிறுத்திவிட்டு, மதுவை ஒரு பகுதியாகக். கொடுக்கும் அளவிற்கு நடவடிக்கைகள் எடுத்திருப்பதால் பெரிய நஷ்டம் ஏற்பட்டுவிட்டதாகக் கருதி, அதற்காகப் புதிய வரி விதிப்பு செய்ய வேண்டிய அவசியமில்லை என்பது என்னுடைய கருத்து. இன்றைக்கு அந்த நஷ்டத்தை அரசாங்க நடவடிக்கைகளின் மூலமும், சிக்கனச் சீரமைப்பின் மூலமும் சரிக்கட்ட முடியும்.

இந்த மசோதாவைப் பொறுத்தவரையிலும், முத்திரைத் தாள்களுக்கு அதிக வரி என்பதிலேகூட படிப்படியாகச் செய்திருக்க வேண்டும். அதிகமான சொத்துக்களை வாங்குபவர்களுக்கு அதிக வரி விதிப்பும், குறைந்த சொத்துக்கள் வாங்குபவர்களுக்குக் கூடுமான வரையில் குறைந்த வரி விதிப்பும் இருக்கும் விதத்தில், 'கிரேடட்' ஆகச் செய்வது நல்லது என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் காலத்திலே சில பேர் தாங்கள் குடியிருப்பதற்காகச் சிறிய இடம், அல்லது வீடு

வாங்கினால் அவர்களைப் பாதிக்காத அளவிற்குச் செய்ய வேண்டும். ஒரேயடியாக வரி விதிப்பது சரியல்ல என்று தெரிவித்து, 'கிரேடட் டாக்ஸாக', படிப்படியாக உயர்த்தும் விதத்தில் இந்த ஸ்டாம்ப் கட்டணம் அமைய வேண்டுமென்பது தான் சரியாக இருக்கும் என்று தெரிவித்து, பொதுவாக வரி விதிப்பைத் தவிர்க்கக்கூடிய விதத்திலே சிந்தனை போக வேண்டுமென்று இந்த சர்க்காருக்கு வேண்கோள் விடுத்து, முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தலைவர்கள் பேசியதற்குப் பிறகு உறுப்பினர்கள் பேசுவது மரபு அல்ல.

திரு. கே. எ. வகாப்: எங்களுக்கு வாய்ப்பளிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தலைவர்கள் பேசியதற்குப் பிறகு உறுப்பினர்கள் பேசுவதற்கு வாய்ப்பில்லை.

திரு. கே. எ. வகாப்: பேரவைத் தலைவரவர்களே, வரி விதிப்பு என்பது ஒரு கசப்பான உண்மை என்று கூறினார்கள். நிச்சயமாக வரிவிதிப்பை யாரும் வரவேற்க மாட்டார்கள். ஆனால் வரிகளை விதித்தால்தான் நல்ல காரியங்களைச் செய்ய முடியும் என்ற கட்டாயம் ஏற்படுகிறது. முத்திரைத் தாள் திருத்தச் சட்டமும் ஒரு நல்ல காரணத்திற்காகவே வருகிறது என்பதால் கசப்பான உண்மையாக இருந்தாலும், எப்படி உடம்பிற்கு வியாதி, காய்ச்சல் என்று வரும்பொழுது மருந்து கசப்பாக இருந்தாலும் அதைச் சாப்பிடுகிறோமோ, அதேபோன்று இதையும் எடுத்துக் கொள்ள வேண்டிய நிலையிருக்கிறது.

மதுவிலக்கு ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்ற இந்த நேரத்திலே, மறுபடியும் மதுவிலக்கைக் கொண்டு வந்து, கள்ளுக் கடைகளை மூடும் திட்டத்தை அமல் நடத்துவதால் இந்த நாட்டிலேயுள்ள ஏழை எளிய பாட்டாளி மக்கள் நன்மையடைவார்கள். இந்தக் குடியினால் எவ்வளவு பேர் கெட்டுப் போனார்கள் என்பதைச் சில காலத்திற்குள்ளாகக் கண்ணால் கண்டு, அனுபவித்திருக்கிறோம். ஏழைகள் தங்கள் வாழ்க்கையிலே எவ்வளவு பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். ஏழை அரிசன மக்கள், மற்றும் பிற்பட்ட

சமுதாய மக்களெல்லாம் இந்தக் கள்ளுக் கடைகளை திறந்த காரணத்தால் எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அதிகம் சொல்ல வேண்டியதில்லை. இப்பொழுது மறுபடியும் அந்தக் கடைகளையெல்லாம் படிப்படியாக மூடுவது என்று வரும்பொழுது நிச்சயமாக முஸ்லீம் லீக் கட்சியின் சார்பிலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அதைப் பூரணமாக அமல் நடத்த வேண்டுமென்றால் கட்டாயமாக அரசாங்கத்திற்குப் பணம் தேவைப்படுகிறது. அதற்காக இப்படி வரிகளைப் போடுகிறார்கள் என்றாலும் அந்த வரிகள் ஏழை மக்களை அதிகமாகப் பாதிக்காத வகையில் அரசாங்கம் கண்காணிப்போடு இருக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இப்படி முத்திரைத் தாள்கள் மீது வரி விதிக்கப்பட்டாலும், பொதுவாக சமுதாயத்தில் பெரிய நிலச்சுவாந்தார்களிடையே, இப்படிப்பட்ட முத்திரைத் தாள்கள் எப்படி வாங்கப்படுகிறது. யார் யார் எப்படி வாங்குகிறார்கள் என்பது தெரியும். ஓரளவு சிறு விவசாயிகளைப் பாதிக்கிறது என்றாலும் பெரும் நிலக்கிழார்களுடைய பணம்தான் அதிகமாக ஈடுபடும் என்று வைத்துக் கொண்டாலும், வரி விதிப்பு என்பது எல்லாக் கட்சிகளுக்கும் ஆளுங்கட்சிக்கும் வருத்தமளிக்கக்கூடிய விஷயம்தான். ஆனால் இது நல்ல காரியத்திற்காகச் செய்யப்படுவதால், இப்பொழுது கள்ளுக் கடைகளை மூடுவது, அடுத்து சாராயக் கடைகளை மூடுவது, அடுத்து பிராந்தி போன்ற விற்பனையை ரத்து செய்வது என்று வருவதால் இதை நான் வரவேற்று அமர்கிறேன்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, இந்த ஸ்டாம்பு டூட்டி போடுவது பற்றி ஏற்கெனவே இந்த மன்றத்திலே பேசப்பட்டிருக்கிறது. இந்த அரசாங்கம் ஏற்கெனவே போதுமான அளவிற்கு முத்திரைத் தாள்கள் மூலம் ஸ்டாம்ப் டூட்டி போட்டிருக்கிறது. அப்பொழுது, 1969 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன், திரு. மதியழகன் அவர்கள் வருவாய்த் துறை அமைச்சராக இருந்தபொழுது ஸ்டாம்ப் டூட்டி போடப் பட்டிருக்கிறது. அப்பொழுதே கடுமையாக வாதித்திருக்கிறோம். இந்த வரிகளைப் போடுவதால் நிச்சயமாக ஏழைகளைப் பாதிக்கும் என்பது நமக்குத் தெரியும். காரணம், ஆயிரம் ரூபாய்க்கு வீடு

மாற்றம் செய்ய வேண்டுமென்றால் 300 ரூபாய் ஸ்டாம்புக்குக் கட்ட வேண்டிய முறையிருக்கிறது. ஒரு பூமிக்கு 10,000 ரூபாய் மதிப்பு என்றால் அந்த அளவிற்கு ஸ்டாம்ப் பேப்பர் வாங்க வேண்டுமென்ற சூழ்நிலை இருக்கிறது. அதற்கும் குறைவாக எழுதினால் பிறகு சர்க்கார் வசூலிக்கின்ற நிலையிருக்கிறது. போன சட்டத்தில் அப்படி சொல்லப்பட்டிருக்கிறது. அதையே கடுமையான சூழ்நிலை என்று சொல்லும்பொழுது மீண்டும் டூட்டி போடுவது ஏழைகளை மிகவும் பாதிக்கும் சூழ்நிலையாகும். 10,000 ரூபாய் வீட்டை வாங்குபவர்கள் 3,000 ரூபாய்க்கு ஸ்டாம்ப் வாங்க வேண்டும். அநேகம் பேர் பாகப்பிரிவினைகூட செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. குடும்பச் சொத்தைப் பிரிப்பதற்குக் கூட அதிக ஸ்டாம்ப் டூட்டி கட்ட வேண்டி இருக்கிறது. புதிதாக பூமி வாங்க வேண்டுமென்பதில்லை. இருக்கின்ற சொத்தை அண்ணன், தம்பி பாகம் செய்துகொள்ள வேண்டுமென்றாலும் டூட்டி கட்ட வேண்டிய நிலைமை அதிகமாக வருகிறது. முன்பெல்லாம் 3½ ரூபாய் காகிதத்திலே **பாக சாசனம்** செய்து பிரிவினையை ஏற்படுத்திக் கொள்ளலாம், சொத்தைப் பிரித்துக் கொள்ளலாம். ஆனால் இப்பொழுது அப்படி முடியாது. அந்தப் பூமியின் தரம் எவ்வளவோ அந்த அளவில் டூட்டி கட்டி பாகப்பிரிவினை செய்து கொள்ள வேண்டும். ஆகவே, புதிதாக வாங்குவது என்பதுகூட அல்ல, ஏற்கெனவே இருக்கின்ற சொத்தை பிரிவினை செய்து கொள்ளும்போது கூட இந்தக் கட்டணம் வருகிறது என்றால் இது மக்களைப் பாதிக்காதா என்பதை அமைச்சரவர்கள் உணர வேண்டும். புதிதாக வாங்குபவர்கள் பலர் இருக்கலாம். ஆனால் அவர்கள்கூடப் புதிதாக வாங்குகிறார்கள் என்று சொல்லலாம். ஆனால் ஏற்கெனவே சொத்திருப்பவர்கள், வாங்காத ஒரு சொத்துக்கு, அண்ணன் தம்பிகள் பாகப்பிரிவினை செய்து கொள்ளும்பொழுது டூட்டி கட்ட வேண்டுமென்ற மிகவும் கடுமையான நிலைமை நம்முடைய தேசத்திலேதான் இருக்கிறது. இந்த நிலைமையிலே மேலும் டூட்டி என்றால் அது ஏழை மக்களைப் பாதிக்கிறது.

அது தவிர அதை எழுதுபவர்களுக்கு 100 ரூபாய், 200 ரூபாய் என்று அவர்களின் தரத்திற்குத் தகுந்தாற்போல் கொடுத்தால்தான் எழுதிக் கொடுக்கிறார்கள். அதைத் தவிர்த்து, சர்க்காரே ஒரு

[திரு. கே. என். குமாரசாமி] [1973 ஆகஸ்ட் 6

கிளார்க்'கைப் போட்டு ஸ்டாம்ப் டூட்டி வாங்கினல் இந்த 100 ரூபாய், 200 ரூபாயாவது மிச்சப்படும். வெளியிலே கொடுத்து எழுதி, மறுபடியும் டூட்டி கட்ட வேண்டுமென்றால் மிகவும் பாதிக்கும். ஏதாவது ஒரு முறையிலே, ரெஜிஸ்திரார் அலுவலகத்திலேயே ஒரு கிளார்க்கைப் போட்டு, அவர்களே எழுதிக் கொடுத்தால் ஸ்டாம்ப் டூட்டி கொடுப்பவர்களுக்கு ஒரு ரிலீஃப் ஏற்படும்.

எனவே, ஏற்கெனவே கடுமையாக எதிர்க்கட்சித் தலைவர்கள் வாதம் செய்து, அப்பொழுது போடுவதற்கே எதிர்ப்பைத் தெரிவித்து, அதை நிறுத்திவைக்கும்படி கேட்டார்கள்.

மதுவிலக்கை ரத்து செய்து மீண்டும் மதுவிலக்கைக் கொண்டு வரும் பிரச்சினை காரணமாக மறுபடியும் ஸ்டாம்ப் டியூட்டியை அதிகமாக்குவதால் நிச்சயமாக ஏழைகள் பாதிக்கப்படுவார்கள் என்பதைப் பற்றியெல்லாம் சிந்தித்து, இந்த மசோதாவை அமலாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்த மசோதாவின் மூலமாக முத்திரைத் தாள் மீது 0.5 சதவீதந்தான் அதிகக் கட்டணம் விதிக்கப்பட்டிருக்கிறது. ஒரு ரூபாய்க்கு அரைக் காசு, 100 ரூபாய்க்கு அரை ரூபாய் அளவுக்குத்தான் ஆகிறது. ஏற்கெனவே, 9½ ரூபாயாக இருந்தது இப்போது 10 ரூபாய் ஆகிறதே தவிர அதிகமான அளவுக்குப் பாதகம் என்று கருத முடியாது. மாண்புமிகு உறுப்பினர் குமாரசாமி அவர்கள் சொன்னது போல் பத்திரம் எழுத வேண்டுமென்றால் அதற்கு ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு வருகிற நேரத்தில் ஒருவர் மட்டும் வருவதில்லை. ஐந்தாறு பேர்கள் வருகிறார்கள். பத்திரம் எழுதுபவருக்கு 100 ரூபாய்க்கும் அதிகமாகக் கூடக் கொடுக்கிற நிலை இருக்கிறது. விவகாரத்தை முடித்துத் தருகிறவருக்கு—மிடில் மேன்—பணம் கொடுக்கிறார்கள். இப்படி ஏராளமாகச் செலவு செய்யப்படுவதைப் பார்க்கும்போது 0.5 சதவீதம் பத்திரப் பதிவுக்காகக் கொடுப்பதில் எந்தவிதமான கஷ்டமும் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே இந்த மசோதாவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1973 ஆகஸ்ட் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"1973 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத் தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/73) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, 4, 5 ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, "1973 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத் தாள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 19/73) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்" எனக் கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(உ) தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 20/73)

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1973) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

---

* 3–8–1973 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [1973 ஆகஸ்ட் 6

உள்ளாட்சி அதிகார மன்றங்கள் தங்கள் நிதி வசதியைப் பெருக்கிக் கொள்ள ஒல்லும் வகையில், கேளிக்கை வரி மீதும், திரைப்படங்களைக் காட்டுவதற்கான வரி மீதும் மேல் வரியாக வரி விதிப்பதற்கான அதிகாரத்தை, தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 52/1961) அந்த அதிகார மன்றங்களுக்கு வழங்குகிறதென இச்சட்ட வரைவினை முன்மொழிகையில் சொல்லிக் கொள்ள விழைகிறேன். தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழும் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழும் (மத்தியச் சட்டம் 74/1956) கட்டணம், வரி, அபராதம் முதலிய வகையில் அரசுக்குச் சேர வேண்டிய தொகையையும், திருப்பிக் கொடுக்க வேண்டிய வகையில் அரசு கொடுக்க வேண்டிய தொகையையும் அடுத்த முழு ரூபாயாக்கப்படுவதற்காக சட்டப் பூர்வமான விதித் துறைகளை ஏற்படுத்த வேண்டுமெனவும் அப்போதுதான் ஒரு ரூபாய்க்குக் குறைந்த தொகை உள்ள நடவடிக்கைகள் வசதியாக நடைபெறும் எனவும் இந்திய ரிசர்வ் வங்கி இந்த அரசுக்கு ஆலோசனை நல்கியது. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம் உட்பட வணிக வரிகள் குறித்த இம் மாநிலத்தின் ஏனைய சட்டங்கள், இதன் பொருட்டு ஏற்கெனவே திருத்தப்பட்டுள்ளன. எனவே, தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதிச் சட்டத்தையும் (தமிழ்நாடு சட்டம் 52/1961) திருத்துவதென இந்த அரசு முடிவு செய்துள்ளது. அச்சட்டத்தின் விதித் துறைகளின்கீழ் செலுத்தப்படத்தக்க மேல்வரி, கட்டணம், அபராதம், தண்டத் தொகை அல்லது ஏனைய தொகையையும் திருப்பிச் செலுத்தப்படத்தக்க தொகையையும் அடுத்த முழு ரூபாயாக ஆக்கப்பட வேண்டுமெனவும் அந்த ரூபாயின் பகுதி 50 காசு அல்லது அதற்கு மேற்பட்டிருந்தால் ஒரு ரூபாய் என கூட்டிக் கொள்ளப்பட வேண்டும் எனவும் இப்பகுதி 50 காசுக்குக் குறைவாயிருந்தால் அதை விட்டுவிட வேண்டுமெனவும் விதித் துறை இருக்கும் வகையில் புதிய பிரிவு ஒன்று இச்சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இத்திருத்தம், தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 31/1972) 15-வது

1973 ஆகஸ்ட் 6] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

பிரிவினால் தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 1/1959) சேர்த்துக் கொள்ளப்பட்ட 27-ஏ பிரிவின் அடிப்படையில் அமைந்துள்ளது.

இதனை இம்மாமன்றம் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென நான் வேண்டிக்கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : Mr. Speaker, Sir, I am unfortunately driven to the necessity of opposing this measure also. It may sound very very small in respect of the total taxation. It may look harmless if you say that we are collecting to the nearest rupee and that we are paying nearest to the rupee. But you must remember that collection to the 'nearest rupee' is always higher Particularly in this kind of taxation, the demand is very high. Secondly this measure may look like a small taxation measure; after all a taxation of 50 P. for Rs. 100. But we know that the same thing happened in the other cases and in the matter of rationalisation of bus fares, you collected several lakhs of rupees. The Consultant might have recommended Re. 1 for above 50 paise. But what is the total collection? What will be the net result? I do not know what is the harm in doing away with this taxation proposal. What is wanted is to put down expenditure. We are having planned wastage. Let us put an end to wasteful expenditure in administration. That will get us more money rather than having this taxation measure. I oppose this measure. It is not so harmless as it appears to be.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த மசோதாவானது ஏற்கெனவே வந்த மசோதாக்களின் அடிப்படையில் இப்போது நமக்கு நஷ்டம் ஏற்படும் என்ற கருத்தில் அதிகமான வருமானத்திற்காகச் செய்யப்பட்ட மசோதா என்றுதான் நான் கருதுகிறேன். அப்படி வருகிறபோது ஏற்கெனவே இந்த மாதிரியாக இடையிலே புதிய புதிய வரிகளைப் போடுவது என்பது சரியல்ல என்பது எங்களுடைய கட்சியின் நிலையாகும். அதுமாத்திரமல்லாமல் சட்டமன்றம் கூடுகிற காலத்திலாகட்டும், அல்லது அதற்கு முன்னால் முன்னால் சில அவசரச் சட்டங்கள் மூலமாக வரிவிதிப்பைக் கொண்டுவரக்கூடிய இந்தப் போக்கு சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆக்ட் 52/61-ல் செக்ஷன்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 ஆகஸ்ட் 6

4-ஐ இணைப்பதன் மூலம் ஏற்கெனவே இருந்ததில் சில ஃப்ராக்ஷன்கள் தான் சேர்க்கப்படுகின்றன என்று சொல்லப்படுகிறது. நான் அறிய விரும்புவது, இம்மாதிரி செய்வதன் அடிப்படையில் நமக்கு எவ்வளவு லாபம் ஏற்பட்டிருக்கிறது, இதனால் ஏற்படக்கூடிய வசதிகள் என்ன என்று நான் அறிய விரும்புகிறேன். ஏற்கெனவே உள்ள மசோதாக்களின் பேரில் அழுத்தமான என்னுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கலாம். ஆனால் இந்த நிலையைச் சொல்ல வேண்டுமென்பதற்காகத்தான் இந்த மசோதாவின் பேரில் சொல்லுகிறேன். இப்படி இடையிலே சர்சார்ஜ் போடுவது, வரி விதிப்பது என்பதெல்லாம் சரியான போக்கல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேறு சில காரணங்களால் நஷ்டம் ஏற்படுகிறது என்றால் நஷ்டம் ஏற்படுகிறதா இல்லையா என்பது பரிசீலிக்கப்பட வேண்டிய விஷயம். அதை வைத்துக் கொண்டு ஜனங்களைத் தொந்தரவுபடுத்தும் முறையில் அதிக வரி கட்டக்கூடிய அளவிற்கு வருவது சரியல்ல. ஏற்கெனவே இருந்த நிலையில் என்ன கஷ்டம் ஏற்பட்டுவிட்டது என்பதும் தெளிவாகத் தெரியவில்லை. ஆகவே இதற்கு அவசியமில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, இது கணக்கு வைப்பதில் உள்ள கஷ்டத்தைப் போக்குவதற்கே தவிர அதிக லாப நஷ்டம் வந்துவிடுவதாகத் தெரியவில்லை. ப்ராக்ஷனைப் போக்கவே இது வைக்கப்பட்டிருக்கிறது. 51 பைசா என்றால் ஒரு ரூபாயாக ஆக்குகிறோம். இதில் லாப நஷ்ட நோக்கு இல்லை. ஆகவே அவர்கள் எதிர்ப்பைத் தெரிவித்தது ஆச்சரியமாக இருக்கிறது. ஆகவே இதை சட்ட ரூபமாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

" தமிழ்நாடு, 1973 ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/73) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

1973 ஆகஸ்ட் 6]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை. நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே,

" தமிழ்நாடு, 1973 ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/73) நிறைவேற்றப்பட வேண்டும்." எனக் கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு. சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு, 1973 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/73) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கோருவார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. சி. இராமச்சந்திரன் : நாளையதினம் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருகிறது. It is only a small Bill providing for penalty

THIRU K. T. K. THANGAMANI : In the Business Advisory Committee, another day has been allotted for Bills. This Bill may be taken up on the next day, that is, the 11th.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை 1.26-க்கு ஒத்திவைக்கப்பட்டது.

(5) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

93. Notification issued with G.O.R. No. 780, Revenue, dated the 17th April 1973 in regard to exemption from payment of sales tax on the sales of Independence Jayanthi Badges by the Government. (Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

94. Notification issued with G.O. Ms. No. 1349, Revenue, dated the 22nd March 1973, in regard to appointment of Thiru S. Kothandaraman Principal Judge, City Civil Court, Madras to be the Chairman of the Sales Tax Appellate Tribunal, Madras. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

95. Notification issued with G.O. Ms. No. 146, Excise and Prohibition, dated the 23rd April 1973 in regard to an amendment to the Madras Liquor Licence and Permit Rules. 1960. [Laid on the Table of the House under section 34 (5) of the Tamil Nadu Excise Act, 1971 (Tamil Nadu Act 34 of 1971)].

B *Reports, Notifications and Other Papers.*

@ 31. Notification issued with G.O. Ms. No. 595, Rural Development and Local Administration, dated the 29th March 1973 in regard to certain amendments to the Tamil Nadu Cottage Industries Construcion and Establishment (Restrictions, Limitations and Conditions) Rules, 1960.

a Lied on the table of the House on 4th August 1973.

32. Erratum issued with Memo. No. 22741/VI/73-2, Revenue, dated the 7th April 1973 to the Revenue Department Notification II-1 No. 5242 of 1972, dated 19th September 1972, published at page 944 of Part II—Section I of the *Tamil Nadu Government Gazette*, dated the 8th November 1972.

33. Notification issued with G.O. Ms. No. 899, Industries, dated the 14th June 1973, in regard to an amendment to the Tamil Nadu Cement Distribution (Licensing and Regulation) Order, 1973.

£ 34. The Tamil Nadu Payment of Salaries (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 16 of 1973) with Annexure.

£ 35. The Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Amendment Bill, 1973 (L.A. Bill No. 17 of 1973) with Annexure.

£ 36. The Tamil Nadu Sales of Motor Spirit Taxation and Entertainments Tax (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 18 of 1973).

£ 37. The Indian Stamp (Tamil Nadu Amendment) Bill, 1973 (L.A. Bill No. 19 of 1973).

£ 38. The Tamil Nadu Local Authorities Finance (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 20 of 1973) with Annexure.

£ 39. Tamil Nadu Motor Vehicles Taxation (Amendment) Bill 1973 (L.A. Bill No. 21 of 1973).

£ Despatched to Members on 4th August 1973.

இணைப்பு I

[14-ம் பக்கத்திலுள்ள 35-ம் என்னுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்கான விடையைக் காண்க.]

தாம்பரம், அரசு காச நோய் நலன்பேண் மருத்துவமனையில் நோயாளிகளுக்கு பின்வருமாறு உணவு வழங்கப்படுகிறது :—

1 (அ) **சைவ உணவு உட்கொள்ளும் காச நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவின் அளவு :—**

1.	பால்	500 மி. லி.
2.	100 கிராம் எடையுள்ள இட்லி சாம்பாருடன்	2
3.	முட்டைகள்	2
4.	வாழைப்பழம்	2
5.	எலுமிச்சை	½
6.	பழுப்பு சர்க்கரை	30 கிராம்
7.	கைக்குத்தல் அரிசி	340 கிராம்
8.	காய்கறி	170 கிராம்
9.	நெய்	15 கிராம்
10.	கேழ்வரகு மாவு	15 கிராம்
11.	காப்பித்தூள் (200 மிலி)	5 கிராம்
12.	தேங்காய்	15 கிராம்
13.	பருப்பு	110 கிராம்
14.	நல்லெண்ணெய்	20 கிராம்

புலால் உணவு உட்கொள்ளும் காசநோயாளிகளுக்கான உணவின் அளவு.—

			இறைச்சி வழங்கப்படும் நாட்கள்	இறைச்சி வழங்கப்படாத நாட்கள்
1.	பால்	500 மி.லி.	திங்கள்	ஞாயிறு
2.	100 கிராம் எடையுள்ள இட்லி சாம்பாருடன்	2	செவ்வாய்	புதன்
3.	முட்டை	2	வியாழன்	வெள்ளி
4.	வாழைப்பழம்	2	சனி	
5.	எலுமிச்சை	1		
6.	பழுப்பு சர்க்கரை	30 கிராம்	பின்வரும் நாட்களில் இறைச்சி வழங்கப்படாததால் ஒரு முறை இந்த நோயாளிகளுக்கு முட்டைக் கறி வழங்கப்படுகிறது.	
7.	கைக்குத்தல் அரிசி	340 கிராம்		
8.	காய்கறி	170 கிராம்		
9.	நல்லெண்ணெய்	20 கிராம்	1. திங்கள்	
10.	பருப்பு	55 கிராம்	2. செவ்வாய்	
11.	தேங்காய்	15 கிராம்	3. புதன்	
12.	கேழ்வரகு மாவு	15 கிராம்	4. வியாழன்	
13.	காப்பிதூள் (200 மி.லி.)	5 கிராம்	5. சனி	

(இ) காச நோய் நலன்பேண் மருத்துவமனைகளிலும் காச நோய் மருத்துவமனைகளிலும் சிகிச்சைப் பெற்று வருகிற புலால் உணவு காச நோயாளிகளுக்கு வழங்கப்படுகின்ற பால், முட்டை, இறைச்சி ஆகிய உணவு வகைகளின் அளவை மாற்றியமைப்பதற்காக மருத்துவ கல்வி இயக்குநர் தனியான முறையில் செயற்குறிப்புகள் அனுப்பியுள்ளார். இது குறித்து சென்னை மருத்துவ கல்வி இயக்குநருடன் மேற்கொண்டும் கடிதப் போக்குவரத்து நடந்து வருகிறது.

இணைப்பு II

[41-42-ம் பக்கங்களிலுள்ள 41-ம் என்னுள்ள வெள்ளிகுறியிட்ட வினாவிற்கான விடையைக் காண்க]

(a) Yes.

(b) The farmers training courses are being conducted at District Livestock Farm, Hosur. Three batches at the rate of 50 persons for each batch will be trained during a year. Thus 150 farmers will find opportunity to undergo this training every year.

Objectives of the training.—1. To bring the knowledge of the progressive farmers up-to-date in the use of latest techniques in running intensive profitable livestock production enterprise such as dairying, poultry, sheep and piggery.

2. Motivation and influencing the progressive farmers to develop enterpreneurship and to start farm enterprise using sound and commercial procedures.

3. To increase food production of animal origin in milk, meat and eggs manifold through the training programme of farmers and farm youth as a means of promoting economic developments and health of the people in the State.

Eligibility of conditions for admission to the Course.—1. Candidates should have completed 5th Standard with Tamil Medium.

2. Candidates should have completed the age of 20 years on the 1st of the month in which the course is started and should not exceed the age of 45 years.

3. They must be active farmers or actively involved in farming operations. Preference will be given to those who have some previous experience on the livestock farming.

Duration of the course.—The duration of the course is three months of which two months will be training at the District Livestock Farm, Hosur and one month of 'Conducted tour'. The training consists of group discussions, field practicals, demonstrations field trips, etc., and conducted tour and opportunities will be provided for progressive farmers to discuss the subjects with the actual field officers of respective specialities to find solution for their problems.

Fees and stipend.—No tution fee is levied. Each trainee will be paid a stipend of Rs. 65 per mensem. During the training period of 3 months, lodging facilities including water and electricity will be provided free of cost. Trainees will have to make their own arrangements for boarding.

Particulars relating to the number of persons applied for the training and number of candidates admitted are furnished below :

	Number of batch.	*Total number of applications received.*	*Number of candidates selected.*	*Number of candidates trained so fan.*	*Duratioa of the course.*	
					FROM	TO
	(1)	(2)	(3)	(4)	(5)	(6)
I	Batch	130	50	45	20-1-1972	19-4-1972
II	Batch	273	50	48	1-11-1972	31-1-1973
III	Batch	131	50	*	1-3-1973	31-5-1973

(அ) ஆம்.

(இ) ஓசூரிலுள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையில் குடியானவர்களுக்குப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஒரு பிரிவில் 50 பேர் என்ற விதத்தில் 3 பிரிவுகளுக்கு ஓர் ஆண்டில் பயிற்சி அளிக்கப்படும். இதனால் ஆண்டுக்கு 150 குடியானவர்கள் பயிற்சி வாய்ப்புப் பெறுவர்.

***பயிற்சியின் நோக்கங்கள்.**—1. பாற்பண்ணை, கோழிப் பண்ணை, செம்மறி ஆட்டுப் பண்ணை, பன்றி வளர்த்தல் ஆகிய அதிக ஆதாயம் தரத்தக்க நிறுவனங்களை நடத்துவதில் நவீன உத்திகளைப் பயன்படுத்துவதற்கு முற்போக்கு நோக்கங்களைக் கொண்ட குடியானவர்களுக்கு நவீன முறையில் பயிற்சியளித்தல்.*

2. செம்மையான வணிக நடைமுறைகளைப் பயன்படுத்தி தொழில் முனைவர் 'முயற்சி மேற்கொள்ளவும், பண்ணை நிறுவனங்களை ஏற்படுத்தவும், முற்போக்குக் கொள்கைகளைக் கொண்ட உழவர்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்தல்.

3. இம்மாநிலத்திலுள்ள பொது மக்களின் பொருளாதார வளர்ச்சியையும் சுகாதாரத்தையும் மேம்படுத்தும் வாயிலாக குடியானவர்களுக்கும், பண்ணை இளைஞர்களுக்கும் பயிற்சி

* The course is running from 1-3-1973,

அளிப்பதன் மூலம் பால், இறைச்சி, முட்டை ஆகிய உணவுப் பொருள்களைப் பன்மடங்காகப் பெருக்குதல் ;

பயிற்சி வகுப்பில் சேருவோருக்கு இருக்க வேண்டிய தகுதிகள்.—1. விண்ணப்பதாரர், தமிழைப் பாட மொழியாகக் கொண்டு 5-வது வகுப்பு வரை படித்திருக்க வேண்டும்.

2. பயிற்சி வகுப்பு தொடங்கும் மாதத்தின் முதல் நாளன்று விண்ணப்பதாரர் 20 வயதினை அடைந்தவராயும், 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும்.

3. விண்ணப்பதாரர்கள் வேளாண்மையை முனைந்து மேற்கொள்பவர்களாக அல்லது வேளாண்மை நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளவர்களாக இருக்க வேண்டும். கால்நடைப் பண்ணை ஏற்படுத்துவதில் முன் அனுபவம் உள்ளவர்களுக்கு இதில் சேர முன்னுரிமை அளிக்கப்படும்.

பயிற்சி கால அளவு.—இப்பயிற்சிக் கால அளவு மூன்று மாதங்கள் ஆகும். இதில், இரண்டு மாதங்கள் வரை ஓசூரிலுள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணையில் பயிற்சியளிக்கப்படும். பல பண்ணைகளுக்கு ஒரு மாத காலம் சுற்றுப்பயணம் மேற்கொள்ளப் படும். இப்பயிற்சியில், பலரும் கூடிக் கலந்தாலோசித்தல், கள நடவடிக்கைகள், கட்புல விளக்கங்கள், பண்ணைகளைச் சுற்றிப் பார்த்தல் முதலியன அடங்கும். சுற்றுப்பயணங்கள் மேற்கொள்ளவும், முற்போக்குக் கருத்துக்களைக் கொண்ட குடியானவர்கள் தங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகச் சம்பந்தப்பட்ட துறையில் வல்லுநர்களாயுள்ள அதிகாரிகளைச் சந்தித்து அவர்களுடன் தங்கள் பிரச்சினை குறித்து விவாதிக்க வாய்ப்புகள் அளிக்கப்படுகின்றன.

கட்டணம், பயிற்சி, உதவித் தொகை.—பயிற்சிக் கட்டணம் ஏதும் வசூலிக்கப்படுவதில்லை. பயிற்சி பெறுபவர் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 65 பயிற்சி உதவித் தொகை வழங்கப்படும். மூன்று மாத பயிற்சிக் காலத்தில் தண்ணீர் மின் வசதியுடன் தங்கும் வசதிகள் இலவசமாக அளிக்கப்படும். பயிற்சி பெறுபவர்கள் தங்கள் உணவுக்குத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.

பயிற்சி பெறுவதற்கு விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை, பயிற்சிக்கு அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

பிரிவின் எண்ணிக்கை.	பெறப்பட்ட விண்ணப்பங்களின் மொத்த எண்ணிக்கை.	தெரிந்தெடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை.	இதுவரை பயிற்சியளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை.	பயிற்சிக் கால அளவு.
(1)	(2)	(3)	(4)	(5)
I-வது பிரிவு	130	50	45	20—1—1972 லிருந்து 19—4—1972 வரை.
II-வது பிரிவு	273	50	48	1—11—1972 லிருந்து 31—1—1973 வரை.
III-வது பிரிவு	131	50	*	1—3—1973 லிருந்து 31—5—1973 வரை.

* பயிற்சி 1—3—1973-லிருந்து நடத்தப்பட்டு வருகிறது.

HOW TO USE THE INDEX.

The Index is arranged alphabetically. The main headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every main heading including various names, entries pertaining to proceedings other than questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. Any entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading ' Bill(s) '.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., ' Committee(s) ', ' Council(s) ', ' Corporation(s) ', etc.

